



telegram.me/aedahamlibrary

– காலச்சக்கரம் நரசிம்மா

வானதி பதிப்பகம்

https://telegram.me/aedahamlibrary

# அத்திமலைத் தேவன் - பாகம் 1

# Athimalai Devan - Part 1

Author:

காலச்சக்கரம் நரசிம்மா

**Kalachakram Narasimha**

https://telegram.me/aedahamlibrary

பொருளடக்கம்

1. நடுநிசியில் ஒரு ஒளிக்கீற்று

2. தேரை மறித்த அகோரி

3. தந்திரக்காரன்

4. அமரேந்திரியின் அலறல்

5. உதிர்ந்து போன பல்வரிசை

6. அட்டப்பூச்சியின் அனுமானம்

7. தீயினில் கருகிய குடில்

8. விதுரன் விதைத்த வித்து

9. கவுடில்யன் கேட்ட வெகுமதி

10. கழுத்தினில் நாகம்

11. பல்லாங்குழி பலகைவாயன்

12. பிச்சைக்கார மன்னன்

13. அபேயனுக்கு அபயம்

14. சந்திரோதயம்

15. துர்குண துர்தரா

16. தூண்டிலில் சிக்கிய மீன்

17. கண்களைத் திறக்காதே!

18. கவுடில்யனின் கணக்கு

19. காட்டுமிராண்டியின் கைதி

https://telegram.me/aedahamlibrary

20. கண்ணாடி மாளிகையில் ஒரு போட்டி

21. மயில்தோகை மன்மதன்

22. சேடியின் பணிப்பெண்

23. ஜல தாரை ஜாலம்

24. விரிஞ்சி நதியில் ஒரு திட்டு

25. சூறாவளி சம்போகம்

26. கர்ப்ப தானம்

27. காட்டாற்றில் குளித்த காரிகை

28. கனிரசம்... சமரசம்

29. சடலத்துக்குப் பிறந்த சிசு

30. யவன மோகினி

31. கங்கணத்தில் ஒரு ரகசியம்

32. சாணக்கியர் வெளியேற்றம்

33. இளவரசன் செய்த கொலை

34. அசோக வனம்

35. எங்கேயோ கேட்ட குரல்

36. அழகிய நரகம்

37. கலிங்கத்துப் பைங்கிளி

38. அசோகன் இனி சோகன்

39. முற்றுகையிட்ட அரசிகள்

https://telegram.me/aedahamlibrary

40. குணவான் குணாளன்

41. போதியின் நிழலில்

42. மீண்டும் விஷ்ணுகுப்தன்

43. ஜோதியில் கலந்தனர்

44. வன்மத்தால் வர்மம்

45. இரகசியப் படை

46. முக்கூடல் கடிகை

47. உளவு காத்த துறவுக் கிளி

48. இறுதி தந்திரம்

49. பிட்சு மறைத்த சுவடி

50. பிரியா விடை

51. மௌரியம் மறையும்

52. மன்னனைக் கொன்ற தளபதி

53. சமுத்திரம் இனி பொங்கும்

https://telegram.me/aedahamlibrary

# சமர்ப்பணம்

கடந்த 1979 ஆம் வருடம், காஞ்சி வரதராஜர் கோவிலின் "அனந்தசரஸ்" என்னும் குளத்தில் இருந்து வெளிவந்து, ஒரு மண்டலம் மக்களுக்கு தரிசனம் தந்துவிட்டு, மீண்டும் அக்குளத்தின் அடியில் துயில் கொண்டு, நாற்பது வருடங்கள் கழித்து அடுத்த வருடம், ஜூலை 15, 2019- ஆம் ஆண்டு வெளியே வர இருக்கும் அத்திமலை தேவாதி தேவனுக்கு இந்த நாவல் சமர்ப்பணம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# இந்த சரித்திர நாவல் பிறந்த கதை

'அத்திமலைத்தேவன்' என்கிற இந்த சரித்திரப் புதினம் பிறந்ததற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு. ஒரு சிறு வத்திக்குச்சியின் தீப்பொறி, ஒரு பெருங்காட்டினையே அழித்து விடும்! ஒரு சிறு சம்பவம், நமக்கு மாபெரும் சரித்திரத்தின் பின்னணியைப் புலப்படுத்தி விடும். அப்படி ஒரு இரண்டெழுத்து நடிகையின் வாழ்வில் நடைபெற்ற ஒரு சிறு நிகழ்வுதான் இந்த சரித்திர மர்மப் புதினம் தோன்றியதற்கே காரணம் என்றால், உங்களால் நம்ப முடியுமா?

விடியலில் கூவும் பறவையின் பெயர் கொண்ட படத்தில் அறிமுகமானவர் அந்த நடிகை. அவர் கதாநாயகியாக நடித்த அந்தப் படத்தின் பெயரே அவருக்கு அடைமொழியாகிப் போனது. கிடுகிடுவென வளரத் தொடங்கினார், வெற்றியைத் தனது பெயரில் கொண்ட அந்த நடிகை! அவரது குடும்பப்பாங்கான தோற்றமும் அடக்கமான குணமும், அவருக்கு திரைப்படங்களில் நல்ல பெயரைப் பெற்றுத் தந்தன. எல்லாம் அவருக்குச் சாதகமாகவே சென்று கொண்டிருந்தன.

ஒரு படத்தில், கோவில் ஒன்றில் அந்த நடிகை பாடி ஆடுவது போன்ற காட்சியை எடுக்கத் திட்டமிட்டு இருந்தார், படத்தின் இயக்குநர். அதற்காக அவர் தேர்ந்தெடுத்த கோவில், காஞ்சி வரதராஜ சுவாமி கோவில். பாடல் காட்சியில் நடிகை நடனமாடும் காட்சியைப் படம்பிடிக்க, படக்குழுவினர் கோவிலின் உள்ளே இருந்த குளக்கரையில் முகாமிட்டு இருந்தனர் இயக்குநர் நடனக்காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்த போதுதான், திடீரென்று அவருக்கு அந்த எண்ணம் தோன்றியது. அருகே இருந்த "அனந்தசரஸ்" என்னும் குளத்தின் மையத்தில் நீரால் சூழப்பட்டிருந்த, இரு மண்டபங்களைப் பார்த்தார். ஒன்று நீராழி மண்டபம். அதில் நடிகையை நாட்டியம் ஆடுவது போன்று படம் பிடிக்கத் திட்டமிட்டார். அதன் முன்பாக மற்றொரு சிறிய மண்டபம் இருந்தது. அதன் மீது நடிகையை ஒரு சிற்பத்தை போன்று நிற்க வைத்து அபிநயம் பிடிக்கச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது அவருக்கு. அந்த நடிகையை அந்த மண்டபத்தின் கோபுரத்தின் முன்பாக நிற்க வைத்து, அதன் மீது அபிநயம் பிடிக்க வைத்து அதனை கரையிலிருந்து லாங் ஷாட்டில் கேமராவில் படம் பிடிக்க நினைத்தார். தனது யோசனையை ஒளிப்பதிவாளரிடம் சொல்ல, அவரும் அதற்கான ஏற்பாடுகளில் இறங்கினார். நடிகையைக் குளத்தின்

https://telegram.me/aedahamlibrary

மைய மண்டபத்திற்கு அழைத்துச் செல்ல பரிசில் ஒன்று தருவிக்கப்பட்டது.

தற்செயலாக ஷூட்டிங் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கு வந்த ஒரு முதியவர் இதனைக் கண்டு அதிர்ந்து போனார். அவசரமாக ஓடி வந்து படக்குழுவினரைத் தடுத்தார்.

"வேண்டாம்! அந்த மண்டபத்தின் மீது அபிநயம் பிடிப்பது போன்று நடிகையை நிற்க விடாதீர்கள். அதன் அடியில் அத்திவரதர் எழுந்தருளி இருக்கிறார். மிகவும் உக்கிரமான மூர்த்தி. அவர் மீது நடனமாடுவது போன்ற காட்சியை அமைக்காதீர்கள். பிரும்மன் யாகம் செய்த இந்தக் கோவிலில் நீங்கள் படம் எடுப்பதே தவறு குறிப்பாக அத்திவரதர் மீது அந்த நடிகை நடனமாடுவது போன்று எடுக்க வேண்டாம்" என அந்த முதியவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார்.

கோவில்களே திரைப்படத்துறையினரின் அவுட்டோர் லொகேஷன்கள் ஆகி விட்ட பிறகு, அந்த அழுக்கு வேட்டி முதியவரின் எச்சரிக்கைகள் எடுபடுமா என்ன? அந்த முதியவரைப் பணம் பறிக்க வந்த பிச்சைக்காரனாக எண்ணிய படக்குழுவினர், அவரை விரட்டி விட்டனர்.

இயக்குநரின் எண்ணப்படி காட்சியும் மிக அருமையாகப் படமாக்கப்பட்டது. படம் வெளிவந்ததா இல்லையா என்பதே தெரியாதபடி, இயக்குநருக்கும், தயாரிப்பாளருக்கும் பல பிரச்சனைகள். எல்லாரையும் விட மிகவும் பாதிக்கப்பட்டவர், நடனமாடிய அந்த நடிகை. அவரது வாழ்க்கையே தலைகீழாக மாறிப் போனது. பெரிய கதாநாயகியாக வளைய வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட அவரது வாழ்க்கையில் திடீர் தொய்வு ஏற்பட்டது. படங்கள் குவிவது நின்று போனது. குறைந்த பட்ஜெட் படங்களின் கதாநாயகியாக மாறியவர், பிறகு அதுவும் மொத்தமாக நின்று போனது. அவ்வப்போது சினிமா எடுக்கும் நாடகக் கலைஞர்களின் படங்களில் முக்கியத்துவம் இல்லாத நாயகியாக தோன்றி நடித்தார். பிறகு ஒரேயடியாக முடங்கியும் போனார். இது வெறும் தற்செயலா அல்லது அந்த முதியவரின் கூற்றுப்படி அத்திமலையானின் கோபம் தான் காரணமா?

ஒரு நாள் ---

அந்த நடிகையின் வலது காலில் தீராத வலி ஏற்பட்டது. பெரிய டாக்டரைச் சென்று பார்த்ததும், அவர் ஒரு சிறிய அறுவை சிகிச்சை

https://telegram.me/aedahamlibrary

செய்ய வேண்டும் என்று கூற, உள்ளுக்குள் அதிர்ந்து போனார் நடிகை. இருந்தாலும் ஓடியாடி நடிக்க ஒரு நடிகைக்கு கால்கள் மிகவும் அவசியம் என்பதால் அறுவை சிகிச்சைக்கு சம்மதித்தார். நகரின் பெரிய மருத்துவமனையில் சேர்ந்து அறுவை சிகிச்சையை செய்து கொண்டார். ஆனால் காலில் வலி குறைந்தபாடில்லை. அப்புறம்தான் அந்த மிகப்பெரிய மருத்துவமனைக்கு தாங்கள் செய்த தவறு புரிந்தது. வலது காலில் செய்ய வேண்டிய அறுவை சிகிச்சையை அவர்கள் இடதுகாலில் செய்து விட்டிருந்தனர்! நடிகையால் நடமாடவே முடியவில்லை. மருத்துவர்களும் தங்கள் மருத்துவமனையில் இம்மாதிரி தவறு நடந்ததே இல்லை என்று கூறி நஷ்ட ஈடு கொடுத்தனர்.

ஆனால் ---

தேகத்தாலும், மனதாலும் மிகவும் நொந்து போன நடிகைக்கு பெரிய அதிர்ச்சி. அவரது காதலனும் நைசாக ஒதுங்கிக் கொண்டு விட்டார். விரக்தியின் உச்சக் கட்டத்திற்கு போன நடிகை ஒரு கட்டத்தில் தனது வாழ்வையே முடித்துக் கொண்டார். அவரது தற்கொலை நடந்த புதிதில் எனது சொந்த ஊரான காஞ்சிபுரத்திற்குச் சென்றேன். வரதராஜர் கோவிலில் நுழைந்ததும் அனந்தசரஸ் குளம் எனது கண்களில் பட, உடனே எனக்கு அந்த நடிகை அந்தக் குளத்தின் மைய மண்டபத்தில் நடனமாடிய சம்பவம் நினைவில் வந்தது. (ஷூட்டிங் நடந்த அன்று நானும் இருந்தேன்)

கோவில் திருவிழாவுக்காகச் சென்றிருந்த நான், அந்தக் குளக்கரையின் ஓரமாகச் சென்றேன். அன்றொருநாள் படப்பிடிப்பின் போது படக்குழுவினரை எச்சரிக்கை செய்த அந்த முதியவர் குளத்தின் படிகளில்தான் அமர்ந்திருந்தார். அவரது அழுக்கு வேட்டியில் எவ்வித மாற்றமும் இல்லை. எனது பாட்டியை அவருக்குத் தெரியும். அதோடு நான் ஒரு திரைப்பட இயக்குநரின் மகன் என்பதையும் அவர் அறிவார். அந்தத் திரைப்பட நடிகை, அத்திவரதர் மண்டபத்தின் மீது நின்றபோது, படக்குழுவினரை கோபத்துடன் விமர்சித்திருந்தார் அந்த முதியவர். அந்த நடிகை தற்கொலை செய்து கொண்ட செய்தியையும் அறிந்திருந்தார் அந்த முதியவர்.

என்னிடம் எக்காளத்துடன் பேசினார், அவர்: "பார்த்தியா...! நான்தான் அப்பவே சொன்னேன் இல்லே. 'அத்திவரதர் கிட்டே விளையாடாதீங்கன்னு! நான் தடுத்தும் கேட்காம ஷூட்டிங் நடத்தினாங்க. என்ன நடந்தது. தன் காலால் அத்திவரதர் மேலே டான்ஸ்

https://telegram.me/aedahamlibrary

ஆடின அந்த பொண்ணுக்கு ரெண்டு காலும் நடக்க முடியாம போச்சு. தற்கொலையே பண்ணிக்கிட்டா.! அத்திவரதர் ரொம்ப சக்தி வாய்ந்தவர். பல்லவ சாம்ராஜ்யத்தையே புரட்டிப் போட்டவர். சினிமாக்காரங்க நீங்க எம்மாத்திரம்?" - அவர் கேட்க, நான் திகைத்துப் போய் நின்றிருந்தேன்.

இது போதாதா எனக்கு! ---

அத்திவரதர் என்கிற காஞ்சி தேவராஜரைப் பற்றிய ஆய்வுகளில் இறங்கினேன். அனந்தசரஸ் குளத்தில் மறைந்திருக்கும் அத்தியூரானைப் பற்றிய தகவல்களைத் தேடித் திரட்டினேன். புராண காலம் தொடங்கி, நாளை வெளியே வரப்போகும் 2019 வரையிலான கால கட்டத்தில்தான் எத்தனை சரித்திரங்கள் இந்த கோவிலை சுற்றி நிகழ்ந்திருக்கின்றன. எத்தனை மர்மங்களை தன்னுள் தேக்கி வைத்திருக்கிறான், அத்தியூர் தேவராஜன்!

நாவலை எழுதும்போதே எனக்கு விசித்திர அனுபவங்கள். பல்லவ சாம்ராஜ்யம் மட்டுமல்ல! அத்திவரதனோடு அஸ்வத்தாமா, சாணக்கியன் தொடங்கி, நந்த சாம்ராஜ்யம், மௌரியர்கள், குப்தர்கள், சதவாகனர்கள், ஆதி பல்லவர்கள், பல்லவர்கள், களப்பிரர்கள், சோழர்கள், பாண்டியர்கள், கங்கர்கள், விஜயநகர மன்னவர்கள், கடம்பர்கள், கோல்கொண்டா நவாபுகள், பாமினி சுல்தான்கள், முகலாயர்கள், உடையார்கள், ராபர்ட் கிளைவ் உள்ளிட்ட ஆங்கிலேயர்கள் என்று பல சாம்ராஜ்யங்கள் காஞ்சியைக் கைப்பற்றியபோது, தனது கோவிலுக்குக் கைங்கர்யம் செய்தவர்களுக்கு வெகுமதி அளித்து, தனது கோவிலுக்கு தீங்கு இழைத்தவர்களுக்குத் தக்க தண்டனைகளைக் கொடுத்து, எல்லா சாம்ராஜ்யங்களையும் ஆட்டிப் படைத்திருக்கிறான், அத்திமலைத் தேவன். இந்த அத்திமலைத் தேவனைப் பற்றிய கதைதான் இது.

புராண காலம் தொடங்கி இன்றைய நாள் வரையிலான அத்தனை சாம்ராஜ்யங்களின் ஆட்சியிலும், நிகழ்ந்த மர்ம நிகழ்வுகள், போர்கள், சதிகள், கொலைகள், கொடுமைகள் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து உங்களுக்கு அத்திமலைத்தேவனாகத் தந்திருக்கிறேன். இந்த நாவலைத் துவங்கும்போது நான்கு பாகங்கள் என்கிற எண்ணத்துடன்தான் எழுதத் துவங்கியுள்ளேன். இன்னும் நீண்டு விட்டால் அது என் தவறு அல்ல. அத்திவரதன் என் மூலமாக உங்களிடம் எல்லாவற்றையும் தெரிவிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கதை பல்லவ சாம்ராஜ்யத்தை பற்றி மட்டும் பேசப்போவதில்லை. அத்திவரதருடன் உறவாடிய அத்தனை சாம்ராஜ்யங்களைப் பற்றியும் பேசப் போகிறது.

https://telegram.me/aedahamlibrary

ஆக, மகதம், நந்தம், பல்லவம், சோழம், பாண்டியம், கடம்பம், கனகம், சாளுக்கியம், ஹொய்சலம், விஜயநகரம், முகலாயர், பாமினி சுல்தான்கள், மற்றும் கோல்கொண்டா நவாபுகள், உடையார்கள், ஆங்கிலேயர் என்று அனைவரைப் பற்றியும் பேசப்போகும் cocktail நாவல்தான், அத்திமலைத்தேவன்.

'காலச்சக்கரம்' நரசிம்மா.

*****

https://telegram.me/aedahamlibrary

# என்னுரை

என்னை காலச்சக்கரம் நரசிம்மாவாக உங்களுக்குத் தெரியும். நான் நிர்வாக ஆசிரியராகப் பணிபுரியும் The Hindu ஆங்கில நாளேட்டில் என்னுடன் பணிபுரிபவர்கள் என்னை -TAN- என்று அழைப்பர். தொட்டிலில் எனக்கு இடப்பட்ட பெயர் ஸ்ரீவத்சன். இதுவே எனது இயற்பெயர். ஆனால் கடவுள் நம்பிக்கை அறவே இல்லாதிருந்த எனது தாயார் கமலா, திருத்தி பணிகொள்ளப்பட்ட போது, எனது பெயர் ஸ்ரீவத்சன் என்பதில் இருந்து நரசிம்மன் ஆக மாறியது. நரசிம்மாவாகத்தான் இன்று வரை உலவி வருகிறேன்.

ஆனால்---

இவற்றையெல்லாம் கடந்த ஒரு பெயர் எனக்கு உண்டு. காஞ்சிபுரத்தை சேர்ந்த எங்கள் குடும்பத்தின் மரபுப்படி அந்த ஊர் நாயகனான "தேவராஜன்" என்கிற பெயரை எனக்கு வைத்தார் என் பாட்டி. அவர் பெயரும் கமலா! தேவராஜன் என்கிற இந்தப் பெயரை எனக்கு வைத்ததற்கு அவர் கூறிய மூலகாரணம், பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரான காஞ்சிபுரத்தின் மூல விதையே தேவராஜன் என்கிற உடும்பர அத்திமரச்சிலைதான் என்பார். ஒவ்வொரு குடும்பமும் தங்கள் ஊர் ஆலயத்தின் பெருமானிடம் ஈடுபாடு வைத்து, தங்கள் குழந்தைகளுக்கு அப்பெயரை இடுவது இயல்புதானே.

காஞ்சிபுரத்துடன் என் குடும்பத்துக்கு அவ்வளவாக தொடர்பு கிடையாது. ஆனால் பல்லவ சரித்திரத்தைப் பற்றியும் காஞ்சி நகரின் தொன்மையைப் பற்றியும் அறிந்திருந்த என் பாட்டி, என்னுள் அந்நகரைப் பற்றிய ஆர்வத்தினை விதைத்து விட்டார். அவருடைய தந்தை யார் ஸ்ரீநிவாசாச்சாரியார் காஞ்சியில் ஜோதிடத்தையும், சமஸ்க்ருதத்தையும் போதித்து வந்தவர். அவரது மாணாக்கனாக இருந்த அப்போதைய பொப்பிலி மகாராஜாவுக்கு அவர் பாடம் போதிக்க, கல்வி முடிந்ததும் அவரைக் கையோடு அழைத்துச்சென்று தனது ராஜகுருவாக நியமித்துக் கொண்டார். அங்கு வசித்த காரணத்தால் என் பாட்டிக்கு பொப்பிலி கமலா என்றுதான் பெயர்.

கடைசியாக, 1975-இல் காஞ்சிபுரத்தை விட்டு சென்னைக்கு வந்த பாட்டி, மரணப்படுக்கையில் விழுந்தார். இறப்பதற்கு முன்பாக என்னை தன்னருகே அழைத்தார்.

https://telegram.me/aedahamlibrary

“நரசிம்மா! இந்த மார்கழி ஞாயிற்றுக்கிழமை நான் இறந்து விடுவேன். (சரியாக 1975 மார்கழி 28 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அவர் காலமானார்.) உனக்கு ஒரு விஷயம் சொல்லணும். இன்னும் நாலு வருடங்களில், (1979) நாற்பது வருடங்கள் கழித்து அனந்தசரஸ் குளத்தில் இருந்து அத்திவரதனை வெளியே எடுத்து ஆராதிப்பார்கள். அவசியம் நீ சென்று அத்தியூரானை தரிசனம் செய்.

"பிரம்மனால் ஆராதிக்கப்பட்ட மூர்த்தம். காஞ்சி என்கிற பூவரச அத்திமரத்தால் அவர் மேனி உருவாக்கப்பட்டது. பிரும்மன் அஸ்வமேத யாகம் செய்தபோது அக்னிகுண்டத்தில் தோன்றியதால் நீரில் எழுந்தருளச் செய்து அவரை குளிர்வித்து இருக்கின்றனர்," என்றார் பாட்டி.

அவரது மரணத்திற்குப் பிறகு அத்திவரதரைப் பற்றி முற்றிலும் மறந்தே போனேன். 1979-இல் திருவல்லிக்கேணியில் வசித்தபோது, ஸ்ரீதர் என்கிற நண்பன் என்னை அத்திவரதரை தரிசிக்க பைக்கில் போகலாம் வா என்று அழைத்தவுடன், எனது பாட்டி சொன்னது நினைவுக்கு வர, உடனே சரி என்று சொல்லி விட்டேன். ஆனால் விடியற்காலை நல்ல காய்ச்சல் வர, எனது அம்மா காஞ்சிப் பயணத்துக்கு 'நோ' என்று சொல்லி விட்டார். காஞ்சி போகும் திட்டம் கைவிடப்பட்டது. ஆறு மணிக்கு வாசலில் பைக் சத்தம். நான் வரவில்லை என்று சொன்னதும், அவன் ஸ்ரீநிவாசன் என்கிற மற்றொரு நண்பனை அழைத்துக் கொண்டு காஞ்சி அத்திவரதரை தரிசிக்கக் கிளம்பினான். ஸ்ரீபெரும்புதூர் அருகே எதிரே வந்த லாரி மோதி, ஸ்தலத்திலேயே ஸ்ரீதரும், ஸ்ரீனிவாசனும் இறந்து போயினர். உள்ளுக்குள் நடுநடுங்கிப் போனேன். எண்ணமெல்லாம் அத்திவரதனைப் பற்றியே இருந்தது. உக்கிரமான மூர்த்தியாமே! இப்போது அவரைக் காணாவிட்டால், அடுத்த நாற்பது ஆண்டுகளுக்குக் காத்திருக்க வேண்டுமே.

இன்று அத்திவரதரை தரிசிக்கப் போன நண்பனே, வழியில் விபத்தில் மரணம் அடைந்து விட, நாற்பது வருடங்களில் என்னவெல்லாம் நடக்குமோ. எப்படியாவது அத்திவரதரை தரிசிக்க வேண்டும் என்கிற ஆவல் மட்டும் பீறிட்டு எழுந்தது. நண்பன் ஸ்ரீதரின் மரணத்திற்குப் பிறகு, எனது அம்மா, அத்திவரதரைப் பார்க்கப் போவதற்கு தடை விதித்து விட்டார். உறவினர்கள் சிலர் அத்திவரதரை தரிசிக்கச் செல்கின்றனர் என்பதை அறிந்ததும், தாயிடம் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி வாங்கி அவர்களுடன் புறப்பட்டேன். இந்த சமயத்தில் எனது

https://telegram.me/aedahamlibrary

வயது 17.

கண்குளிர அத்தியூரானை தரிசித்தேன். உடும்பரம் என்கிற அத்தி மரத்தால் உருவாக்கப்பட்ட திருமேனி. தமிழில் பூவரச அத்தி என்பார்கள். படையெடுப்பின் போது பின்னமாகி விட்டதால், தண்ணீரின் அடியில் பத்திரப்படுத்தி விட்டார்கள் என்று அர்ச்சகர் சொன்னார். திகைத்தேன்.

கி பி. 1648-இல் கோல்கொண்டா நவாபின் தளபதி மீர்ஜூம்சா என்பவனே காஞ்சி மீது படையெடுத்து வந்து, கோவிலைக் கைப்பற்றி, முன்மண்டபங்கள் சிலவற்றைச் சேதப்படுத்தி இருந்தான். அவுரங்கசிப் பதவிக்கு வந்தவுடன் தென்னிந்தியக் கோவில்களைக் குறி வைத்தபோது, காஞ்சி வரதராஜரின் உற்சவர் விக்கிரகங்கள் திருச்சி அருகே உள்ள உடையார்பாளையக் காடுகளில் பதுக்கி வைக்கப்பட்டன. அங்கேயே தங்கியிருந்த உற்சவ மூர்த்திகள், இருபத்து இரண்டு வருடங்கள் கழித்து 1710-இல் தான் காஞ்சிக்குத் திரும்பின.

உண்மைகள் இப்படி இருக்க, அத்திவரதர் எப்படிப் பின்னமாகி இருக்க முடியும்? அன்றே அத்திவரதரைப் பற்றிய ஆராய்ச்சிகளை மீண்டும் துவக்கினேன். நாற்பது வருடங்களாக நான் செய்த ஆய்வுகளின் முடிவுதான், இதோ உங்கள் கைகளில் அத்திமலைத் தேவனாகத் தவழுகின்றது. காஞ்சியையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் அலைந்து திரிந்து ஆய்வுகளை மேற்கொண்டேன். செய்யாறுக்குப் பக்கத்தில் 'அத்தி' என்கிற கிராமம் இருக்கிறது. இந்த ஊரில் கரியமாணிக்கப் பெருமாள் கோவில் ஒன்று இருக்கிறது. இந்தப் பெருமாள் காஞ்சியின் வரதரைப் போன்றே பிரதானமாக கோவில் கொண்டிருந்தவர். அவர் ஏன் செய்யாறு பக்கம் சென்றார்? -

எவ்வளவு நிகழ்வுகள், பெரிய பெருமைகள், கொடுமைகள், சிறுமைகள், மர்மங்கள் எல்லாவற்றையும் கடந்து இன்று அத்திவரதர் கோவில் குளத்தில் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கிறார். அடுத்த வருடம் 2019-இல் வெளியே வரப்போகும் நிலையில் அவரைப்பற்றிய அத்தனை தகவல்களையும் திரட்டி உள்ளேன்.

பிரும்மன், இந்திரன், குபேரன், அஸ்வத்தாமா, ஆழ்வார்கள் மற்றும் ஆசாரியர்கள் என்று பக்தியுடன் ஆராதனை செய்தவர்கள் ஒருபுறம்! சாணக்கியன் தொடங்கி, நந்தவம்சம், மௌரியர்கள், குப்தர்கள், கரிகாலன், பல்லவ இளந்திரையன், ஆதி பல்லவர்கள், சிம்ம விஷ்ணு,

https://telegram.me/aedahamlibrary

மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், கடம்பர்கள், ஆதித்த கரிகாலன், ராஜேந்திர சோழன் பாண்டியர்கள், விஜயநகர மன்னர்கள், நவாப்கள், சுல்தான்கள், உடையார்கள் என்று எத்தனையோ பேர்களின் அரசியலுக்குப் பயன்பட்டிருக்கிறார் அத்திவரதர்.

அத்தியூரானின் தீவிர பக்தனாக இருந்த சிம்ம விஷ்ணுவின் சகோதரன் ஜெயவர்மன் தான் போதிதர்மாவாக சீன தேசம் சென்றான். போதி என்பது உடும்பர அத்திமரத்தின் பெயர் என்பது மிகவும் வியப்பைத் தரும் ஒரு விஷயம். புத்தர் ஞானம் பெற்ற போதி மரம் உடும்பர அத்திமரம்தான். ஞானத்தை தந்ததால் அதற்கு போதி மரம் என்கிற பெயர் வந்தது.

இந்த நாவலை எழுதும்போதே பிரமிப்புடன்தான் எழுதினேன். எத்தனை மெய்சிலிர்க்க வைக்கும் அனுபவங்கள்! சோழர்களை விட, பல்லவர்கள் மிகப்பெரிய பரம்பரையைச் சார்ந்தவர்கள். தங்களை முன்னிறுத்திக் கொள்ளாமல், கலைகளை வளர்த்தவர்கள். அவர்களது சாதனைகளை நாலு பாகங்களில் எழுத முடியாது. என்னால் முயன்ற அளவு பல்லவ சரித்திரத்தை முழுவதுமாக அத்திமலைத்தேவனில் நிரப்ப விரும்புகிறேன். எத்தனை பாகங்கள் என்பது நிச்சயம் இல்லாமல்தான் இந்த நாவலை துவக்கினேன். தெய்வீக அத்தியாயிற்றே! எவ்வளவு தூரம் வளரும் என்று என்னால் எப்படிக் கூற முடியும்?

'அந்தப்புரம் போகாதே அரிஞ்சயா'-வுக்கு நீங்கள் தந்த வழக்கமான ஆதரவுக்கு நன்றி.

அத்திமலைத்தேவனும், ரங்கராட்டினம், சங்கதாரா, மற்றும் பஞ்ச நாராயண கோட்டம் போன்றே உங்களை மகிழ்விப்பான் என்பதில் சந்தேகம் இல்லை.

காஞ்சியைப் பற்றிய விதையை என்னுள் தூவிய, எனது பாட்டி பொப்பிலி கமலா, எனது தமிழ் ஆர்வத்திற்கு காரணமான என் தாய் கமலா சடகோபன், எனது ஆராய்ச்சிகளுக்கு உதவிய என் மனைவி சுதா மற்றும் குழந்தைகள், எனது பயணத்தில் உடன் வந்த நண்பர்கள், தொல்துறை அதிகாரிகள், கிராமத்தலைவர்கள், கோவில் பட்டர்கள், மற்றும் நலவிரும்பிகள் மற்றும் வாசகர்கள் எல்லோருக்கும் என் நன்றி.

'காலச்சக்கரம்' நரசிம்மா.

https://telegram.me/aedahamlibrary

*****

https://telegram.me/aedahamlibrary

# தல புராணம் கூறுவது என்ன?

காஞ்சியின் தலவரலாற்றை முதலில் ஆராய்ந்தேன். சகல கலைகளுக்கும் தானே தலைவி. தனது அருள் இல்லாவிடில், உலக மக்களுக்கும், பிரபஞ்ச உயிர்களுக்கும் அறிவுச்சுடர் ஏது? - என இறுமாந்திருந்த கலைமகள் சரஸ்வதி, செல்வத்துக்கதிபதியான திருமகள் இலக்குமியை வம்புக்கு இழுக்கிறாள்.

"உன்னைவிட நானே உயர்ந்தவள்." என்கிறாள் சரஸ்வதி. அதற்கு இலக்குமி அவளைப் பார்த்து நகைக்கின்றாள்.

"என் கடைக்கண் பார்வை பெறாத உன்னருள் பெற்ற புலவனே வறுமையில் வாடி, பொருளைப் பெறுவதற்காக நாடாளும் மன்னனிடம் என்ன பாடியிருக்கின்றான் என்பதை நீயே கேள்!"

‘ஆம்பல் பூப்ப, தேம்பல் சூழ,

இல்லிதூர்ந்த பொல்லா மார்பும்,

குழவி தாய் முகம் நோக்க, நான்

உன் முகம் நோக்கி வந்தேன் மன்னா'

என்று, பொருள் தேடி வந்த ஏழைப்புலவன் பாடியதாக இலக்குமி கூறுகிறாள்.

வாதம் வலுக்க, இருவரும் இந்திரனை நாட, அவனோ திருமகளே உயர்ந்தவள் என்று கூறுகிறான்.

அதனால் வெகுண்ட சரஸ்வதி, “உனக்கு உன் பதவியை பெற்றுத்தர இலக்குமி உதவியதால் அதனை தக்க வைத்துக் கொள்ளவே அவளை உயர்த்தி பேசுகிறாய்." - எனக் கடிந்த சரஸ்வதி, இந்திரனை கரியாகக் (யானையாக) கிடப்பாய் என்று சபிக்க, அவன் காஞ்சி பூமியில் யானையாகத் திரிகிறான்.

பின்பு சரஸ்வதி பிரும்மனிடம் கருத்தினைக் கேட்க, அவரும்

https://telegram.me/aedahamlibrary

இலக்குமியே உயர்ந்தவள் என்கிறார். தனது கணவனே தனக்கெதிராக தீர்ப்பு கூறியதைக் கேட்ட சரஸ்வதி, உக்கிரத்துடன் பிரும்மனின் சிருஷ்டி தண்டத்தை பறித்துக்கொண்டு மாயமாகிவிடுகிறாள். சிருஷ்டி தண்டம் இல்லாமல் படைக்கும் தொழில் பாதிக்கப்பட, பிரும்மன் நாராயணனைத் தஞ்சம் அடைகிறான்.

"அத்திவனத்தில் ஒரு அஸ்வமேத யாகத்தை செய்தால், நீ நூறு யாகங்களை செய்ததற்கு ஒப்பாகும். நீ அத்திவனம் என்கிற காஞ்சிக்குச் சென்று அஸ்வமேத யாகம் செய்” -- என்கிறார் நாராயணன். பிரும்மன் காஞ்சி அத்தி வனத்தில் அஸ்வமேத யாகத்தைத் தொடங்குகிறான். மனைவி இல்லாமல் யாகத்தை செய்ய முடியாதே! எனவே சரஸ்வதிக்கு பதிலாக, சாவித்ரியுடன் யாகத்தை செய்கிறான்.

தான் இல்லாமல் பிரும்மன் தும்ப வனத்தில் (இன்றும் தும்ப வனம் என்கிற பகுதி காஞ்சி விளக்கொளி பெருமாள் கோவிலுக்குப் போகும் வழியில் உள்ளது) யாகத்தைச் செய்வதைக் கண்ட சரஸ்வதியின் கோபம் அதிகமாக, மாய அக்னியாகப் புறப்பட்டு, தனது ஜ்வாலையினால் யாகசாலையை மூடி இருளைத் தோற்றுவிக்க, தீபப்பிரகாசனாய் நாராயணன் தோன்றி இருளை நீக்குகின்றான். ருத்ரகாளியாக சரஸ்வதி யாகத்தைத் தடுக்க வர, எட்டுக்கரங்களுடன் அஷ்ட புஜனாய் அவளை அடக்குகின்றான். யாகம் நிறைவு பெறும் நிலையில் அதனைக் குலைக்க எண்ணி வேகவதி ஆறாக சரஸ்வதி பாய்ந்து வர, நாராயணன் அவள் கடந்து வர முடியாதபடி குறுக்காகப் பள்ளி கொண்டு விட, வேறு வழியின்றி, வேகவதி திசை மாறிப் பாய்கிறாள்.

யாகம் முடிந்து ஹோம குண்டத்தின் நடுவில் இருந்து தேவராஜனாக அத்திவரதன் தோன்றுகிறான்.

'சைத்ரே மாசே சிதபக்ஷ சதுர் தசியாம் திதௌ முநே

சோபன ஹஸ்தே நட்சத்திரே ரவிவார சமன்விதே.'

**--- (ஸ்ரீ அத்திகிரி மகாத்மியம் அத்: 7 சர் 6:2)**

தேவராஜன் சிருஷ்டி தண்டத்தை மீண்டும் பிரும்மனிடம் ஒப்படைக்கிறார். உடனே பிரும்மனின் வேண்டுகோளுக்கு இணங்கி அங்கேயே யானையாகத் திரிந்த இந்திரனுக்கு சாப விமோசனம் தந்து,

https://telegram.me/aedahamlibrary

அங்கேயே யானை மலை ஒன்றை உருவாக்கி, அதன் மீது தங்கி இருந்து, கலியுகத்தில் கலியுக வரதனாக மக்களுக்கு அருள் பாலிக்கின்றான் என்று கூறுகிறது தல புராணம். 'அத்தி' என்றால் 'யானை' என்கிற பொருளும் உண்டு. ஆக, காஞ்சியில் உள்ளது யானைமலை. இந்தக் கோவில் இருக்குமிடத்தில் தான் பிரும்மன் யாகம் நடத்தினான். பிரும்மனின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து

அத்திவரதன் அங்கேயே இருக்க சம்மதிக்க, தேவராஜனுக்கு தேகம் ஒன்றை சமைத்துத் தர வேண்டும் என்று பிரும்மன் கூற, விஸ்வகர்மா அந்த அத்திவனத்தில் தேவ உடும்பர அத்தி மரத்தைத் தேடுகிறான்.

(அத்தி என்றால் வலிமை என்ற பொருளும் சேர்கிறது. வலுவான யானை, மரம் போன்றவற்றை அத்தி என்கிறார்கள். வடமொழியில் இதனை அஸ்தி என்கிறார்கள். உடலில் உள்ள எலும்புகளுக்கு அஸ்தி என்றும் வழங்குவார்கள். உடலுக்கு வலிமையைத் தரும். அஸ்தியைக் கரைத்தல் என்று மரணம் நிகழ்ந்ததும் ஒரு சடங்கே உண்டு).

அத்தகைய தெய்வீக சக்தி கொண்ட உடும்பர அத்தி மரம் ஒன்றை விஸ்வகர்மா கண்டெடுத்து, அதில் தேவராஜனைச் செதுக்கி, அதில் அவனை ஆவாகனம் செய்கிறார்கள். அத்திவரதனைச் செதுக்கியதும், மிகுந்துபோன அத்திமரத் துண்டங்களை வேகவதி ஆற்றில் போட, சரஸ்வதி உக்கிரம் தணிந்து பிரும்மனை வந்து அடைகிறாள்.

உடும்பர அத்தி, உக்கிரத்தைப் போக்க வைத்து அமைதியை தவழச் செய்யும் வல்லமையைக் கொண்டது. எனவேதான், சரஸ்வதியின் உக்கிரத்தைத் தணிக்க, தேவராஜனே அந்த உடும்பர அத்தி மரத்துண்டங்களை வேகவதியில் சேர்க்கச் சொன்னான். உடும்பரம் உக்கிரத்தை அடக்கி அமைதியைப் பெருகச் செய்யும் என்பதால்தான் புத்தர் உடும்பர அத்தி மரத்தின் கீழ் தியானம் செய்தார். புத்தர் தவம் செய்ததால் மட்டுமே அதற்கு போதி மரம் என்கிற பெயர் வந்தது.

அழகிய அத்திவரதரை ஆனைமலை என்கிற அஸ்திகிரியின் உச்சியில் பிரதிஷ்டை செய்கிறார் பிரும்மன். யாகத்தில் தோன்றிய மூர்த்தியை உற்சவராக எழுந்தருளச் செய்கின்றனர். குபேரன் அத்திமலைத் தேவனின் மார்பில் தன்னிடம் உள்ள ஸ்ரீதள மணி என்கிற ஒப்பில்லாத இரத்தினத்தைப் பதிக்கிறான்.

இந்த தெய்வீக உடும்பர அத்தி மரத்தினால் உருவாக்கப்பட்ட

https://telegram.me/aedahamlibrary

தேவராஜன் சிலைதான் இன்று அனந்தசரஸ் என்னும் குளத்தின் அடியே எழுந்தருளப்பட்டு இருக்கிறது. நாற்பது வருடங்களுக்கு ஒரு முறை குளத்தின் அடியில் இருந்து வெளியே எடுத்து, ஒரு மண்டலத்திற்கு ஆராதனை செய்துவிட்டு, மீண்டும் நீரின் அடியிலேயே வைத்து விடுகிறார்கள். யாக குண்டத்தில் இருந்து வெளிவந்ததால் உண்டான தகிப்பை நீக்கி குளிர்விக்கவே இப்படிச் செய்கிறார்கள் என்று பக்தர்களும், இல்லை.... இல்லை பின்னமாகிப் போனதால் தண்ணீர் அடியில் வைத்து விட்டார்கள் என்று மற்றவர்களும் கூறி வருகின்றனர்.

ஆனால் இரண்டுமே உண்மை இல்லை. இதற்கு வேறு ஏதோ முக்கிய காரணம் இருக்கக்கூடும். அந்த காரணத்தை அறிந்தே தீர வேண்டும் என்கிற உத்வேகம் என்னுள் தோன்றியது. இப்போது உள்ள வரதராஜரின் மூல சிலை, ஸ்ரீவரம் என்கிற சீவரத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு ஆராதிக்கப்பட்டு வருகிறார். நாற்பது வருடங்களுக்கு ஒரு முறை நீரில் இருந்து வரும் அத்திவரதர், அடுத்த வருடம் 2019-இல் நீரில் இருந்து எடுக்கப்பட உள்ள நிலையில், அவரை ஒரு முறை தரிசிப்பதற்கே பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும். எண்பது வயது வாழ்ந்தால் மட்டுமே இரு முறை தரிசிக்கும் பேறு கிடைக்கும். 120 வயது வாழ்ந்து மூன்று முறை தரிசித்தால் பிறவி அறுக்கலாம் என்பது நம்பிக்கை.

1979-இல் அத்திவரதனை ஒரு முறை தரிசனம் செய்த நான், இந்த முறை 2019-இலும் தரிசித்து விடுவேன் என்று நம்புகிறேன். அடுத்தது 2059-இல் வெளிவரப் போகிறார். அப்போது நான் இருந்தால் எனக்கு வயது 97 ஆக இருக்கும்.

18.06.1854, 13.06.1892, 02.07.1937, 02.07.1979 - ஆகிய தேதிகளில் வெளிவந்துள்ள அத்திவரதர், அடுத்தது ஜூலை15,2019, வெளிவர உள்ளார். (வருடங்களின் இடைவெளி மாறுபடுகின்றன. இவை அத்திவரதர் வெளிவந்த வருடங்கள் என்று கோவில் ஆவணங்களில் உள்ள தேதிகள். ஆனால் அவ்வப்போது நிலவிய அன்றைய சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு, வருட இடைவெளிகள் மாறுபடக்கூடும்.) அவர் வெளி வருவதற்குள் அத்திமலைத்தேவனின் நான்கு பாகங்களையும் வெளியிட்டு, அவரைச் சுற்றியுள்ள அத்தனை மர்மங்களையும் விடுவிக்க விழைகிறேன். அவரைத் தரிசிப்பவர்களுக்கு விண்ணை எட்டுமளவுக்கு பிரமிப்பு ஏற்படும் என்பது திண்ணம்.

இனி அத்திமலைத்தேவன் என்கிற பிரம்மாண்ட பயணத்தைத்

https://telegram.me/aedahamlibrary

தொடங்குவோம், வாருங்கள்.

'காலச்சக்கரம்' நரசிம்மா.

*****

https://telegram.me/aedahamlibrary

# இதிகாசம் கூறுவது என்ன?

குருக்ஷேத்திரப் போர் முடிந்து கண்ணனும் பாண்டவர்களும் தீர்த்த யாத்திரை சென்றிருக்க, அந்த வேளையில் கூடாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் உபப்பாண்டவர்களை (பாண்டவர்களின் பிள்ளைகளை) பாண்டவர்கள் என நினைத்து, அவர்களை கூடாரத்தோடு எரித்து விடுகிறான் அஸ்வத்தாமா. திரும்பி வந்த பாண்டவர்கள், தங்கள் பிள்ளைகள் தீயினில் கருகி மாண்டதை அறிந்து கதறித் துடிக்க, நடந்ததை அறிந்த கண்ணன் வெகுண்டு எழுகிறான்.

"அஸ்வத்தாமா! போரில் ஆயுதம் எடுக்கமாட்டேன் என்று சபதம் செய்திருப்பதனால் நீ இப்போது தப்பினாய். உறங்குபவர்களை கொன்றது அடாத செயல். இதுவரை சாபங்களை வாங்கியே பழகிய நான் யாரையும் சபித்தது கிடையாது. எனது சாபத்தை வாங்கும் பேற்றினை நீ பெற்றிருக்கிறாய்.

“உபபாண்டவர்களின் தேகம் தீயினில் உருகியது போன்று உனது தேகமும் உருகத் துவங்கட்டும். சதைகள் பிய்ந்து குருதியும், சீழுமாக மேனியெங்கும் பரவட்டும். உடல் வலியினால் துடிப்பாய். ஆனால் மரணம் உன்னை அண்டாது. மரணம் அடைய வேண்டும் என்று நீ கதறினாலும், அது உன்னை நெருங்காது. கலியுகம் முடியும்வரையில் நீ துன்பத்துடனே அலைவாய்" - என்று சபித்த கண்ணன், அஸ்வத்தாமாவின் தலையின் உச்சியில் இருந்த மணியைப் பிடுங்கிக் கொள்ள, உடனடியாக அஸ்வத்தாமாவின் தேகம் உருகத் துவங்குகிறது.

தேகம் இரத்தமும் சீழுமாக உருகியோட, அஸ்வத்தாமா வேதனையுடன் தீர்த்தயாத்திரை செல்கிறான். வழியில் பரசுராமரைச் சந்திக்க, அவரிடம் தனது வேதனை நீங்க வழி கேட்கிறான். அவன் மீது பரிதாபம் கொள்கிறார் பரசுராமர். "தெற்கே அத்திவனம் போய் அங்கே தவம் செய். கண்ணனின் சாபத்தை என்னால் நீக்க முடியாது. ஆனால் மரணம் அடைய வேண்டும் என்கிற உனது துடிப்பினை மாற்றி, வாழ வேண்டும் என்கிற எண்ணத்தினை என்னால் உண்டாக்க முடியும். உன் தேகத்தின் அவலநிலையைக் கண்டு அருவருக்காமல் உன்னைத் திருமணம் செய்து கொள்ள ஒரு பெண் வருவாள். அவளால் உனக்கு வாழ வேண்டும் என்கிற எண்ணம் உண்டாகும்"- என்கிறார் பரசுராமர்.

தெற்கே அத்திவனத்தை நாடி வருகிறான் அஸ்வத்தாமா. தேகம்

https://telegram.me/aedahamlibrary

அழுகினாலும், அங்கு தவம் செய்யும்போது மன நிம்மதியை அனுபவிக்கிறான். உடும்பர அத்திவரதனை ஆனைமலையின் மீது கண்குளிர தரிசிக்கிறான்.

ஒரு நாள் ---

தியானம் கலைந்து கண்விழிக்கும்போது, அவன் எதிரே ஒரு அழகிய நாகக்கன்னி நிற்கிறாள்.

"முனிவரே! என் பெயர் நாகசோமா. நான் சாவகத் தீவினை (தற்போதைய ஜாவா) சேர்ந்தவள். நீங்கள் யார் என்று நான் அறியலாமா?" என்று அந்த நாகக்கன்னி கேட்கிறாள்.

"என் பெயர் அஸ்வத்தாமா. துரோணாச்சாரியாரின் மகன் நான். மனநிம்மதி நாடி இங்கே அத்திவனத்திற்கு வந்திருக்கிறேன்" - என்கிறான்.

"முனிவரே! உங்களைப் பார்த்ததும் என் மனம் வேதனை அடைகிறது. நான் தங்களுக்கு பணிவிடை செய்யலாமா?" என்று நாகசோமா கேட்க, அவளது அழகில் லயித்த அஸ்வத்தாமா தலையசைக்கிறான்.

அவனது அழுகிய உடலை பொருட்படுத்தாது, நாகசோமா பணிவிடைகளைச் செய்ய, அவளது அன்பு அஸ்வத்தாமாவை திக்குமுக்காடச் செய்ய, மரணத்தை மறந்து மணத்தினை நாடுகிறான் அஸ்வத்தாமா. அழுகிய உடலும், அழகிய தேகமும் மணவாழ்க்கையில் ஈடுபட, அவர்களுக்கு இரு பிள்ளைகள் பிறக்கின்றனர்.

மரணத்தை நாடியவன் வாழ வேண்டும் என்று எண்ணுகிறான். அந்த வாழ்க்கையும் ஒரு நாள் அலுத்துவிட, தனது தீர்த்த யாத்திரையைத் தொடர நினைக்கிறான் அஸ்வத்தாமா. நாகசோமா ஒரு மகனுடன் தனது நாட்டுக்குக் கிளம்பிப் போக, இன்னொரு மகனை அஸ்வத்தாமா தன்னுடன் இட்டுச்செல்கிறான். அவன் வளர்த்து வரும் குழந்தையை வேமுலபுரியில் விட்டுவிட்டு, மீண்டும் வடக்கே சென்று விடுகிறான் அஸ்வத்தாமா.

வேமுலபுரி (தற்போதைய கடப்பா) யில் விடப்பட்ட மகன், வளர்ந்து அங்கேயே ஒரு சிறு சாம்ராஜ்யத்தை உருவாக்குகிறான். புலிசோமன் என்னும் பெயருடைய அவன், தொண்டைச்செடி மாலையுடன்

https://telegram.me/aedahamlibrary

திரிந்ததால் அவனை 'பல்லவன்' என்கிற அடைமொழியுடன் குறிப்பிடுகின்றனர் வேமுலவாசிகள். பல்லவனாக வேமுல பகுதியின் குறுநிலத்தை ஆளத் துவங்குகிறான், புலிசோமன்.

நாகக்கன்னி நாகசோமா எடுத்துச் சென்ற மகன்தான் சாவகத் தீவின் தலைவனாக பதவியேற்கிறான். அஸ்வதன் என்னும் பெயரைக் கொண்ட அவன் தனது நாட்டுக்கு தருமநகரம் என்று பெயரிடுகிறான்.

நாகசோமாவின் நினைவாக அஸ்வத்தாமா தனது மகனுக்கு சோமன் என்று பெயரிட, அஸ்வத்தாமாவின் நினைவாக, நாகக்கன்னி தனது மகனுக்கு அஸ்வதன் என்று பெயரிடுகிறாள்.

புலிசோமன் வம்சத்தில் உதித்த, புலிவேமு என்கிற பல்லவன், பதவிக்கு வருகிறான். அவன் சிறிது சிறிதாக தனது நாட்டை பெரிதாக்கி கடைசியில் அத்திவனம் என்கிற நமது காஞ்சியைக் கைப்பற்றுகிறான். அவனது பிரதிநிதியாக பரப்பசுவாமி என்பவரை அத்திவனம் என்கிற காஞ்சி கிராமத்தின் தலைவராக நியமிக்கிறான்.

இங்கிருந்துதான் அத்திமலைத்தேவனுக்கான நமது பல்லவ பிரயாணம் துவங்குகிறது.

*****

https://telegram.me/aedahamlibrary

# உடும்பர அத்தி மரத்தின் ரகசியங்கள்

'அத்திமலைத்தேவன்' என்கிற சரித்திர மர்மப் புதினத்தைத் தருகிறேன் என்று கூறிவிட்டு, இவன் என்னடா தலபுராணம், இதிகாசம், அத்தி மரத்தின் ரகசியங்கள் மற்றும் சரித்திரப் பதிவுகளைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறானே, நாவல் எப்போது துவங்கும்? - என்று நீங்கள் முணுமுணுப்பது அடியேனின் செவிகளில் விழாமல் இல்லை. என்ன செய்வது!

பல்லவ சாம்ராஜ்யத்தில் நீண்ட பயணத்தை மேற்கொள்ள உள்ளோம். இந்தக் கதையின் நாயகன் அத்திமலைத்தேவனைப் பற்றி நீங்கள் முற்றிலும் அறிந்து கொண்டால்தான் கதையை நன்கு ரசிக்க முடியும் அல்லவா?

நீண்ட பயணத்திற்கு முன்பாக, பெட்ரோல் டாங்கியை நிரப்பிக் கொள்வது, டயர்களில் காற்றை செக் செய்து கொள்வது, ஆர்.சி. புக், இன்சுரன்ஸ் தஸ்தாவேஜுகள் இருக்கின்றனவா என்று பார்ப்பது, தண்ணீர் பாட்டில்கள், நொறுக்குத்தீனி, தலைவலி மாத்திரைகள் ஆகியவற்றைச் சேகரித்த பின்னர்தானே, நாம் பயணத்தைத் துவக்குகிறோம். அதைப் போலவேதான் நமது பல்லவப் பயணத்திற்கு உங்களை தயார் செய்து கொண்டிருக்கிறேன். அவ்வளவே!

காஞ்சிபுரம் முழுவதுமே ஒரு காலத்தில் அத்திமரங்களால் நிறைந்து அத்திக்காடாக விளங்கியது. ஆங்கிலத்தில் அத்திமரத்தை **Ficus Racemosa** என்றும் சமஸ்கிருதத்தில் உடும்பர வருட்சம் என்றும் அழைத்தனர். இருபத்து நான்கு மணி நேரமும் பிராண வாயுவை **(oxygen)** வெளிப்படுத்தும் உடும்பர அத்திமரம்.

அதனை மனிதர்களால் வளர்க்க முடியாது. இயற்கையாகப் பார்த்து எங்கேயாவது இம்மரத்தை வளர்க்க வேண்டும்.

'அத்திப் பூத்தது போல'- என்னும் வழக்கே, இதனால்தான் வந்தது. பறவைகள் இம்மரத்தின் கனிகளை உண்டு, அவை எச்சமிடும்போது. இயற்கை அன்னையாக பார்த்து இந்த உடும்பர அத்திமரத்தை வளர்த்தால்தான் உண்டு.

சனாதன மதம் என்கிற இந்து மதத்தினில், குறிப்பாக வைதீக மார்கத்தில்

https://telegram.me/aedahamlibrary

உடும்பர அத்திக்கு பெரும் பங்கு உண்டு. உடுக்கை என்கிற பரமசிவனின் டமாரம் தேவ உடும்பர அத்தி மரத்தினால் ஆனது. வடநாட்டினர் இதனை 'உடம்ரூ' என்று அழைப்பர். தற்போது இதனை ‘டம்ரூ' என்று சொல்கின்றனர்.

உடும்பர அத்தி மரம் அஷ்டமா சித்திகளை அளிக்கக் கூடியது. எனவேதான், சித்தர்கள் பலர் காஞ்சியில் வசித்து, உடும்பர அத்திமலைத்தேவனை உபாசித்து, சித்திகளைப் பெற்றார்கள். (குறிப்பாக சிவவாக்கியர் என்னும் திருமழிசை ஆழ்வார்.) தத்தாத்ரேயர் என்கிற இறைவன், உடும்பர அத்திமரத்தின் கீழ் தான் நின்று கொண்டிருப்பார்.

தேவ உடும்பர அத்தி மரத்தின் தீட்சையைப் பெற்றால், பெரிய காரியங்களைக் கூட ஒரு நொடிப்பொழுதில் செய்து முடிக்கலாம். அத்திமரம் உள்ள நாட்டின் மன்னனை எந்த எதிரியாலும் முறியடிக்க முடியாது. மந்திரங்களை தன்னுள் கிரகித்து, தேக்கி வைத்துக் கொள்ளும் ஆற்றலை உடையது இந்த வகை அத்திமரம். காஞ்சிப் பகுதியில் இதனை 'பூவரச அத்தி' என்பார்கள். வடமொழியில் இந்த மரத்துக்கு 'காஞ்சி' என்று பெயர்.

உடும்பர அத்திமரம் இந்துக்களுக்கு எவ்வளவு புனிதமானதோ, அது போலவே, பௌத்தர்களுக்கும் இந்த மரம் புனிதமானது. புத்தர் ஞானம் பெற்ற மரம் உடும்பர அத்திமரம் தான். ஞானத்தை போதித்ததால் அது 'போதி மரம்' என்கிற புதிய பெயர் கொண்டதே தவிர, அந்த மரம் உடும்பர அத்திமரம் என்பதற்கு பௌத்த இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.

தற்போது புத்த கயாவில் இருப்பது உடும்பர அத்தி மரம் அல்ல. அது வெறும் அரச மரம்தான். காரணம், அசோகனின் மனைவி திஸ்ரரக்ஷா, (திஸ்ஸரக்கா என்று பௌத்த இலக்கியங்கள் கூறுகின்றன) தன் கணவனை பௌத்தம் கவர்ந்து விடுமோ என்கிற அச்சத்தில் புத்தர் அமர்ந்திருந்த போதி மரத்தை சிதைத்து விடுகிறாள் அதிலிருந்து ஒரு பகுதியை அரசமரத்தில் வைத்துப் பாதுகாத்து வருகிறார்கள். இந்த முழு சம்பவத்தை நாவலில் காணலாம்.

உடும்பர அத்திமரம் தான் பௌத்தர்களின் அடையாளம் கூட. அத்திப்பழத்தின் உள்ளே அதன் பூ ஒளிந்துள்ளது. மூவாயிரம் வருடங்களுக்கு ஒரு முறைதான் அத்திப்பூ பூக்கும் என்கிறது புத்த மத

https://telegram.me/aedahamlibrary

நூல் ஒன்று (தேராவட பௌத்த நூலான உரக சூத்ரம் (1. 1வ 5 (4).) மகாயான பௌத்த நூலான தாமரை சூத்ரத்திலும் (lotus sutra) இந்தக் குறிப்பு காணப்படுகிறது.

பௌத்தர்கள் இந்த உடும்பர அத்தி மரத்தை காம மரம் என்றும் கூறுகிறார்கள் (மகாருக்க சூத்ரம் SN: 46:39). எப்படி என்றால், உடும்பர அத்தி விதையை மற்றொரு மரத்தில் வைத்து வளர்த்தால், அந்த விதை வளர்ந்து, தனது வேர்களால், எந்த மரத்தில் விதைக்கப்பட்டதோ, அந்த மரத்தை ஊடுருவி, தனது கிளைகளால் அரவணைத்து, மடியவைத்து, பிளந்து விடும் உடும்பர அத்தி மரம்.

ஒரு ஆணும் பெண்ணும் உறவாடுவதைப் போன்று இது நிகழ்வதால், இதற்கு காம மரம் என்கிற பெயரை பௌத்தர்கள் வழங்கினார்கள். கௌதம புத்தர் அமர்ந்திருந்த போதி மரம் சிதைக்கப்பட்ட பிறகு, அதனை இப்படித்தான் அரச மரம் ஒன்றில் விதைத்தார்கள். காமத்தைப் போக்கவே இந்த மரத்தினடியில் அமர்ந்து தவம் செய்தார் புத்தர் என்கின்றனர் புத்தர்கள்.

ஆனால் இந்து மதத்தில் காம மரத்திற்கு வேறு பொருள் வழங்கப்படுகிறது. காமம் என்பது ஆசை. இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்பதையே காமம் என்கின்றனர். அந்த வகையில்தான், கேட்டதை வழங்கும் பசுவுக்கு 'காமதேனு' என்று பெயரிட்டுள்ளனர். அந்த வகையில் தான், கேட்பதைக் கொடுக்கும் கற்பகமான, இந்த உடும்பர அத்தி மரத்திற்கு 'காம மரம்' என்று பெயர் வழங்கப்படுவதாக இந்து நூல்கள் கூறுகின்றன.

அதர்வண வேதத்தில் தைத்ரேய சம்ஹிதையில், ஆத்ரேய பிரமாணத்தில், ஷதபத பிரமாணத்தில், மற்றும் மகாபாரதத்தில் உடும்பர அத்தியைப் பற்றி குறிப்புகள் உள்ளன.

பாலி நூல்களான புத்தவம்சமும், உடும்பர அத்தி மரத்தைப்பற்றி போற்றியுள்ளன. போத் கயா (பீகார்) புத்தர் ஞானம் பெற்ற போதிமரம் அசோகரின் மனைவி திஸ்ரரக்ஷாவினால் சிதைக்கப்பட்டு, கி.பி. 288-இல் மீண்டும் நடப்பட்டது. பழைய போதி மரத்தில் இருந்து விதைகள் எடுக்கப்பட்டு அரசமரத்தில் நடப்பட்டதாம். அத்திவனமான காஞ்சியைக் காண்பதற்கு இலங்கை போகும் வழியில் அசோகரின் மகள் சங்கமித்தா காஞ்சியில் தங்கியதற்கு ஆதாரங்கள் உள்ளன.

https://telegram.me/aedahamlibrary

விஷ்ணுபுராணத்தில் ஒரு ருசிகரமான இடம். உடும்பர அத்தியைக் கொண்டு இலக்குமி நரசிம்மரின் உக்கிரத்தை தணிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது...

இரண்யகசிபுவை தனது மடியின் மீது இருத்தி அவன் வயிற்றினை பிளந்து அவன் குடலையுருவி மாலையாகப் போட்டுக் கொள்ளுகிறார் நரசிம்மர். நரசிம்மரின் நகங்களில் இரணியகசிபுவின் உடலில் இருந்த நஞ்சு தொற்றிக்கொள்ள, இதனால் அவரது உக்கிரம் ஏறிக்கொண்டே போக, இலக்குமி சமயோசிதமாக உடும்பர அத்திக்கனிகளை அவரது நகங்களில் சொருக, அவர் உக்கிரம் தணிந்து சாந்த சொரூபியாகக் காட்சி தருகிறார். இதனால் மகிழ்ந்த திவ்யதம்பதிகள், உடும்பர அத்திமரத்தை வாழ்த்துகின்றனர். “எப்போதும் கனிகளை தாங்கி நிற்கும் உன்னை கற்பகத்தருவாக மக்கள் வழிபடுவார்கள். விஷங்களை முறித்து, உக்கிரங்களை தணிப்பாயாக" என்று ஆசிர்வதிக்கின்றனர்.

இப்போது புரிகிறதா? தீயின் ஜ்வாலையில் இருந்து தோன்றிய அத்திவரதரின் உக்கிரத்தைத் தணித்து சாந்தப்படுத்தவே, அவரை உடும்பர அத்தி மரத்தினில் செதுக்கினான் விஸ்வகர்மா.

உடும்பர அத்தியினால் பல நன்மைகள் உண்டு. அந்த மரத்தின் தோல் மருத்துவ குணங்களைக் கொண்டது. எனவேதான் தோல் வியாதியால் அவஸ்தைப்பட்ட அஸ்வத்தாமன், அத்திவனத்திற்கு வந்தான். தோல் வியாதிகள், மற்றும் குஷ்டத்திற்கு உடும்பர அத்தி நல்ல மருந்து. அத்திமரத்தில் வடியும் பால் வெட்டுக்காயங்களை ஆற்றி, அங்கங்களையும் கூட வைக்கும். அதன் இலைகள் தேகத்தினை மினுமினுக்கச் செய்யும். உடும்பர அத்தியின் வேர்களைக்கொண்டு தயாரிக்கப்படும் கஷாயம் மானிட தேகத்தின் நாடிச்சக்கரங்களை எழுச்சி அடையச் செய்யும்.

வயிற்றுப்புண்களை ஆற்றும். பெண்களின் மாதவிலக்கு பிரச்சனைகளுக்கு நல்ல மருந்து. உடும்பர அத்திமர நிழலில் ஒதுங்கினால் அஷ்டம சனியும் பிடிக்காதாம்.

ஆங்கிலத்தில் உடும்பர அத்தி மரத்தை Cluster Fig Tree என்று கூறுவார்கள். இதன் சமித்துகள் ஹோமத்திற்கு மிக முக்கியம். மிக அடர்த்தியாக வளரும் அத்தியின் கனிகள் வேதம் ஓதுபவர்களுக்கு மிகத் தேவையானது. மந்திர உச்சாடனங்களை மறக்காமல் இருக்க, அக்கனிகளை உட்கொள்ளுவார்கள். மறதியைப் போக்கக் கூடியது

https://telegram.me/aedahamlibrary

இக்கனிகள்.

நீரும், அத்தி மரமும் சேரும்போது அங்கே ஆற்றல் அதிகரிக்கிறது. (கவனிக்கவும். அத்திவரதரை நீரின் அடியில்தான் எழுந்தருளச் செய்திருக்கின்றனர். இதுதான் உண்மையான காரணமும் கூட!)

எல்லாவற்றையும் விட, அத்தி மரத்திற்கு ஒரு பெரிய ஆற்றல் உண்டு. விண்வெளியில் பரவிக்கிடக்கும் அலைகளை நம் எண்ண அலைகளுடன் இணைக்கும். விண்வெளியில் பரவியிருக்கும் அலைகளை நம்மிடம் சேர்ப்பிக்கும் செல்போன் போன்று தெய்வீக அலைகளை பொதுமக்களிடம் சேர்ப்பிக்கின்றது. நாம் செய்யும் ஆராதனைகள்தான் அத்திமரத்திற்குக் கிடைக்கும் Recharge.

அத்திவரதருக்கு வருவோம். அத்திவரதரின் தேகத்திற்கு நாற்பது வருடங்களுக்கு ஒருமுறை வெளியே எடுத்து ரீ சார்ஜ் செய்கிறார்கள், ஆராதனைகள் மூலமாக. உடும்பர அத்திவரதருக்கு உகந்த நிறம் பச்சை. புதன்கிழமைகளில் அத்தி மரத்திற்கு ஆற்றல் அதிகம். அத்தி மரக்கிளைகளில் பச்சை நிறத் துணியினால் முடிச்சு போட்டு எதையாவது வேண்டிக்கொண்டால், அதை நிறைவேற்றிக் கொடுக்கும். சித்தர்கள், அரசர்கள், பெண்கள் என்று அனைவரும் நாடும் மரம், உடும்பர அத்தி மரம்.

இதை உணர்ந்துதான் கவிஞர் 'அத்திக்காய் காய் காய்' என்று பாடினாரோ!

கதைக்குப் போகுமுன் உடும்பர அத்தியைப் பற்றிய பல்வேறு பெயர்கள்:
Botanical Name: Ficus Racemosa Linn (or) Ficus Racemosa Roxb

Family: Moraceae

English Name: Cluster Fig Tree, Redwood Fig, Gular Fig

தமிழ் பெயர்: பூவரசம் அத்தி மரம்

சம்ஸ்கிருதம்: உடும்பர விருட்சம், காஞ்சி

https://telegram.me/aedahamlibrary

இந்தி: கூலர் பேட்

கன்னடம்: அத்தி மரா

தெலுங்கு: உடும்பரமு, அத்தி மரமு

குஜராத்தி ; கூலர்

உருது: துமூர்

பெங்காலி: துமூர்

சிங்களம்: அத்திகா

கடைசியாக

அதர்வண வேதத்தில் (AV XIX. 31) உடும்பர அத்தி மரத்தினைப் பற்றிய பாட்டு, தமிழில் இதோ:

“இரட்சைகளின் நாயகனே! பலம் பொருந்திய

உனது செல்வங்களினால் அரசர்கள் வளம் அடைகின்றனர்.

சொத்துகளும், புதையல்களும் நீதான்!

அத்தி மர இரட்சகனே! சுயநலத்துடன் உன்னை

அடைய நினைப்பவனை அழிப்பாய்

வீர்யமாக என்னுள் தவழ்ந்திருப்பாய்!

https://telegram.me/aedahamlibrary

என்னுள் துணிவையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துவாய்.

என்னை அண்டியிருப்போருக்கு வளம் தருவாய்

வளமே நீதான், உடும்பர அத்தி மரமே.

நான் உன்னை வளர்க்க இயலாது.

நீதான் என்னை வளர்க்க வேண்டும்.

உடும்பரமே... உன்னை வேண்டுகிறேன்!”

மேற்கண்ட பாட்டுதான், அத்திமலைத்தேவன் என்கிற இந்த சரித்திரப் புதினத்தின் மூலக்கரு. அதர்வண வேதத்தின் கூற்றுப்படி, இந்த மரத்தினை சுயநலத்துடன் நாட நினைப்பவர்கள் அழிவார்கள் என்று புரிந்து கொள்ளலாம்.

வாருங்கள்! புராண காலத்தில் தோன்றி இதிகாச காலங்களைக் கடந்து, ஆதி பல்லவர்கள், பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், களப்பிரர்கள், சாளுக்கியர்கள், கடம்பர்கள், கங்கர்கள், விஜயநகர மன்னர்கள், சுல்தான்கள், நவாப்கள், உடையார்கள், ஆங்கிலேயர்கள் என்று அனைவரையும் சமாளித்து, அடுத்த வருடம் 2019-இல் வெளிவரப்போகிற அத்திமலைத்தேவனை தரிசிக்கத் தயாராகுங்கள்.

அத்திமலைத்தேவன் என்கிற இந்த சரித்திர மர்மப் புதினம், புனித அனுபவங்களையும், மர்ம நிகழ்வுகளையும், திடுக்கிடும் திருப்பங்களையும் எனது நாவல்கள் வழக்கமாகக் கொண்டிருப்பதைப் போன்றே தரவுள்ளது.

நிச்சயம் இது உங்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தைத் தரப் போகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

'காலச்சக்கரம்' நரசிம்மா.

*****

https://telegram.me/aedahamlibrary

# காஞ்சியும் ஆட்சியாளர்களும் - ஒரு சிறு குறிப்பு

1.அஸ்வத்தாமாவின் மகன் புலிசோமன் வம்சத்தில் வந்த புலிவேமு வேமுலபுரியில் பல்லவ ஆட்சியை நிறுவுகிறான். அவன் காஞ்சி என்னும் அத்திவனத்தைக் கைப்பற்றி அதனை தலைநகர் ஆக்குகிறான். அவன் பிரதிநிதியாக காஞ்சியை பரப்பசுவாமி ஆளுகிறார்.

2.அவன் வாரிசுகள் ஆதி பல்லவர்கள், சூத பல்லவர்கள் தொடர்ந்து ஆட்சி செய்கின்றனர்.

3.கரிகாலன் சமகாலத்து பல்லவன் தொண்டையூரன் இளந்திரையன் மன்னனாக ஆட்சி புரிகிறான்.

4.கி.மு. 320-இல் மௌரியர்கள், நந்த மன்னர்கள் ஆகியோர் சாணக்கியனின் மூலம் காஞ்சியைப் பற்றி அறிகின்றனர்.

5.கி.பி. 275-இல் பல்லவ மன்னன் சிம்மவர்மன் ஆட்சி.

6.கி.பி. 300 - 330-இல் சிவஸ்கந்தவர்மன் ஆட்சி.

7.கி.பி. 330 - 436 வரை இரண்டாம் சிவஸ்கந்தவர்மன் ஆட்சி, இரண்டாம் சிம்மவர்மன், ஐந்தாம் ஸ்கந்தவர்மன், முதலாம் நந்திவர்மன், விஷ்ணுகோபவர்மன், கண்டதந்தன், ஆகியோரின் ஆட்சி.

8.விஷ்ணுகோபனின் ஆட்சியில்தான் களப்பிரர்கள் உள்ளே நுழைகின்றனர்.

9.கி.பி. 510 - 890 வரையில் பல்லவர்கள் ஆட்சி செய்கின்றனர். சிம்ம விஷ்ணு, மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், ராஜசிம்மன், நந்திவர்மன், அபராஜிதவர்மன் ஆகியோர் குறிப்பிடத்தக்க பல்லவ மன்னர்கள்.

10.அபராஜிதவர்மன் ஆதித்த சோழனால் கொல்லப்பட்டு, காஞ்சியை சோழர்கள் கைப்பற்றுகின்றனர். ஆதித்த கரிகாலன் பொன் மாளிகை ஒன்றை காஞ்சியில் கட்டுகிறான்.

11.ராஜேந்திர சோழன் ஒத்தாடை என்கிற ஏகாம்பரேஸ்வரர் கோவில்

https://telegram.me/aedahamlibrary

அருகே இருந்து வங்க தேசத்து அதிபதி ப்ருத்விபதி மீது படை எடுத்துச் செல்கிறான்.

12.1253-இல் பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் காஞ்சியைக் கைப்பற்றுகிறான். பிறகு காஞ்சியை விட்டு வெளியேறுகிறான்.

13.தொடர்ந்து, கங்கர்கள், சாளுக்கியர்கள், விஜயநகர மன்னர்கள், மொகலாயர்கள், சுல்தான்கள், நவாபுகள், உடையார்கள், ஆங்கிலேயர்கள் என்று காஞ்சி கைமாறி இன்றைய நிலையை அடைந்துள்ளது.

*****

https://telegram.me/aedahamlibrary

# வாசகர் குறிப்பு

அவரவர் தாம்தாம் அறிந்தவாறேத்தி

இவையிவை உண்மை, இவையிவை

கற்பனையென மனமிசை சார்த்திக்

கொள்ளவும். உதிரிப்பூக்களாம் சரித்திர

சம்பவங்களை எனது கற்பனை நாரினால்

சரமாகத் தொடுத்துள்ளேன்.

*****

https://telegram.me/aedahamlibrary

# இனி சத்தியமாக... கதை ஆரம்பம்

குறிப்பு: அத்திமலைத்தேவன் முதல் பாகம். கி.மு. 350 தொடங்கி, கி.பி. 320 வரையில் - இடைப்பட்ட காலங்களில் நடந்தேறிய நிகழ்வுகளைச் சித்தரிக்கிறது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 1. நடுநிசியில் ஒரு ஒளிக்கீற்று

சானேஷ்வரி தனது குடத்தை வேகவதியாற்றினுள் மூழ்கடிக்க, கோபமாக பாய்ந்தோடிக்கொண்டிருந்த அந்த ஆறு அவள் கையிலிருந்த குடத்தினைத் தட்டிப்பறிக்க முயன்றது. குடத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு கை போதாது என்பதை உணர்ந்த சானேஷ்வரி, தனது மற்றொரு கையாலும் குடத்தை பற்றி ஆற்றிலிருந்து வெளியே இழுத்தாள். வெண்ணிற தெய்வம் சரஸ்வதியின் அம்சம் என்பதால் பளிங்கு வெண்மையினை வாரிக்கொட்டிக்கொண்டு பெருகிக் கொண்டிருந்தது வேகவதி. தனது உக்கிரம் இன்னும் தணியவில்லை என்பது போன்று, மிகவும் ஆவேசத்துடனும், வேகத்துடனும் காணப்பட்டாள் வேகவதி.

குடத்தை எடுத்து இடையினில் வைத்துக்கொண்டு திரும்பியபோதுதான் சற்று தொலைவில் நகரத்தலைவர் மாளிகையின் காவலாளி ஒருவன் வேகவதியாற்றங் கரையை நோக்கி வந்துகொண்டிருப்பதைக் கவனித்தாள். அவளது தேகம் சில்லிட்டுப் போனது. இந்தப் பக்கமாக வருகிறான் என்றால் தங்களது குடிலை நோக்கிதான் வந்துகொண்டிருக்கக் கூடும். இல்லை ஒருவேளை ஆற்றில் நீராட வருகின்றானா?

நடையில் சற்று வேகத்தை அதிகரித்து ஆற்றங்கரைக்கு அப்பால் சற்று தொலைவில் ஒரு மாமரத்தடியில் இருந்த தங்களது குடிலை நோக்கி நடந்தாள் சானேஷ்வரி.

திருமகள் கால்பதிக்காத அந்தக் குடிலினில் கலைமகள் களிநடம் புரிந்துகொண்டிருந்தாள். வெறும் மூங்கில்களாலும், ஓலைகளாலும் வேயப்பட்ட மிகச்சாதாரண குடில்தான். ஆனால் அப்பகுதியின் இயற்கை அழகை பங்கம் செய்துவிடாமல் எச்சரிக்கையுடன் அமைக்கப்பட்டிருந்தது. குடிலின் வாயிலில் இருபுறமும் திண்ணைகள். அந்தத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டால், குடிலின் இடப்புறமாக அத்திகிரி என்கிற ஆனைமலை கோவில் குன்றம் தெரியும். பிரும்மனே அந்தப் பகுதியில் நடமாடிக்கொண்டிருந்தான் என்று சானேஷ்வரியும் அவள் கணவரும் அங்கே குருகுலம் நடத்துபவருமான காஞ்சனகுப்தரும் அடிக்கடி கூறுவது வழக்கம். தன்னுள் எண்ணற்ற சக்தியினை கொண்டிருக்கும் தேவராஜ மூர்த்தமே உடும்பர அத்திமரத்தால் ஆனதுதான்.

https://telegram.me/aedahamlibrary

அந்தக் குடிலின் வலப்புறத்தில் அடர்ந்த பூவரச அத்திமரக்காடுகள் பரந்து விரிந்திருக்கும். வடமொழியில் அந்தப் பகுதிக்கு காஞ்சி என்னும் பெயர். அந்த அத்திமர வனத்தில் இருந்து வீசும் காற்று இவர்களது குடிலை அரவணைத்து, அதனை சொர்க்கபுரியாக மாற்றிக் கொண்டிருந்தது. அந்த பசுமையான அத்திமரக் காட்டிலிருந்து வெண்மையாக வெளிப்பட்டு, ஆரவாரத்துடன் வேகவதி ஆறு, குடிலுக்கு அப்பால் எதிரே பாய்ந்து கொண்டிருக்கும். குடிலின் திண்ணையில், அத்திமரங்கள் சாமரம் வீச, வேகவதியின் ஓட்டம் இசையாக ஒலிக்க, தம்பதிகள் அத்திகிரி கோவிலின் பெருமைகளைப் பேசியபடி அமர்ந்திருப்பார்கள். மலை, வனம், ஆறு, என்று இயற்கையன்னையின் ஆபரணங்கள் அந்தக் குடிலை அழகுப்படுத்தி விட்ட பிறகு, அதன் எஜமானி சானேஷ்வரிக்கென்று ஆபரணங்கள் இல்லாவிட்டால் தான் என்ன?

காவலன் தங்கள் குடிலை நோக்கிதான் வருகிறான் என்பதை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு, நடையில் இன்னும் சற்று வேகத்தைக்கூட்டி, குடிலை நோக்கி நடந்தாள்.

அரச மரம் ஒன்றின் கீழ் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பரப்பப்பட்டிருந்த தர்ப்பை பாயில் காஞ்சனகுப்தர் அமர்ந்திருக்க, மாணாக்கர்கள் கீழே அமர்ந்து அவர் கூறும் பாடங்களை கவனித்துக் கொண்டிருந்தனர். மனித தேகத்தின் நாடிச்சக்கரங்களைப் பற்றி போதித்துக் கொண்டிருந்தார் அவர். அந்தச் சக்கரங்களை எழுச்சி கொள்ள வைப்பதற்கும், முடக்கிப் போடுவதற்கும் உரிய மந்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தபோது அங்கே ஓட்டமும் நடையுமாக வந்த சானேஷ்வரிக்கு பகீர் என்றது. காவலாளி வரும்போதா இந்தப் பாடத்தை போதித்துக் கொண்டிருக்கிறார் அவள் கணவர்?

கவலையுடன், மாணாக்கர்களில் ஒருவனாக அமர்ந்து உன்னிப்பாக பாடங்களை கவனித்துக் கொண்டிருந்த தனது மகன் விஷ்ணுகுப்தனைப் [1] பார்த்தாள்.

"எச்சரிக்கை சுவாமி! ஊர்த்தலைவரின் காவலன் நம் குடிலினை நோக்கி வருகிறான். அத்தியூர் பாடங்கள் தற்போது அவசியமில்லை!" சானேஷ்வரி கூறிய பின்புதான், தன்வசம் இழந்து பாடத்தை நடத்திக் கொண்டிருந்த காஞ்சனகுப்தர் தன்னை நோக்கி வரும் காவலனைப் பார்த்தார்.

https://telegram.me/aedahamlibrary

தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக தற்போதுதான் அத்தியூர் இணைக்கப்பட்டிருந்தது. வேமுலத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை ஆண்ட புலிவேமு மன்னனின் படைகள் அப்போதுதான் அத்தியூரைக் கைப்பற்றியிருந்தன. தனது குடும்பத்தைச் சேர்ந்த பரப்பசுவாமியை அத்தியூர் தலைவனாக நியமித்திருந்தான் புலிவேமு. அவரும் ஊர்த்தலைவராகப் பதவியேற்று அத்திகிரி கோவிலருகே தனக்கு பெரிய மாளிகை ஒன்றை கட்டியிருந்தார். மன்னர் புலிவேமு அத்திகிரி வந்தால் அவர் தங்குவதற்கு என்று சகல வசதிகளுடன் அந்த பெரிய மாளிகையை நிர்மாணித்து இருந்தார் பரப்பசுவாமி. ஊருக்குப் புதியவரான பரப்பசுவாமி, காஞ்சனகுப்தரைப் பற்றி அறிந்திருந்தார். அத்திகிரி வரதனின் ஆலயப் பொறுப்பாளராகவும், வேதாகமங்களை அறிந்தவராகவும், அத்தியூர் வேகவதி ஆற்றின் கரையில் குருகுலம் நடத்துபவராகவும் அவரைப் பற்றிச் சொல்லப்பட, பரப்பசுவாமி அந்த ஊரைப் பற்றிய விவரங்களைக் கேட்க காஞ்சனகுப்தரை நாட முடிவு செய்திருந்தார்.

"ஓந்தத் ப்ரும்மா: ஓந்தத் வாயு!" - திடீரென்று காஞ்சனகுப்தர் பாடத்தை மாற்ற, மாணவர்கள் அவர் கூறுவதை பின்தொடரத் துவங்கினர். மிகவும் புத்திகூர்மை வாய்த்த விஷ்ணுகுப்தன் மட்டும், தந்தை பாடத்தை மாற்றுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான். தங்கள் குடிலை நோக்கி நடந்து வரும் காவலனை வியப்புடன் பார்த்தான்.

“குருவுக்கு வந்தனங்கள்!”

“என்ன விஷயம் காவலரே?”

தான் குடத்தில் கொணர்ந்திருந்த நீரை மண்கலயத்தில் வார்த்த சானேஷ்வரி அடுப்பின் மீது அந்தக் கலயத்தை ஏற்றி, தயாராக பறித்து வைத்திருந்த கீரையை சுத்தம் செய்து தன் வெண்டை விரல்களால் ஆய்ந்தபடி காவலன் கூறுவதைக் கவனித்தாள்.

"குருவே! இன்னும் சற்று நேரத்தில் ஊர்த்தலைவரும் அவரது தேவியாரும் உமது குருகுலத்தை நாடி வரப்போகின்றனர். இந்தத் தகவலை தங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்.” - பணிவுடன் கூறிவிட்டு வந்த வழியே நடந்தான் காவலன்.

சானேஷ்வரி கலவரத்துடன் கணவனின் முகத்தைக் காண, அவர் 'பயப்படாதே' என்கிற பதில் பார்வையை அவள் பக்கமாக வீசினாலும்,

https://telegram.me/aedahamlibrary

அவர் முகத்திலும் கவலை ரேகைகள் தென்படுவதை விஷ்ணுகுப்தன் கவனித்தான்.

காவலன் வந்ததுமே பாடத்தை மாற்றிய தந்தையை கூர்ந்து கவனித்த விஷ்ணு, தாயின் கலவரம் படிந்த முகத்தினையும், தந்தையின் கவலை தோய்ந்த முகத்தையும் கண்ட மாத்திரத்திலேயே அவர்களிடம் ஏதோ ரகசியம் உள்ளது. அது அத்தியூரை புதிதாக கைப்பற்றிய வேமுல மன்னன் புலிவேமுவுக்கும், பரப்பசுவாமிக்கும் தெரியக்கூடாது என்று பெற்றோர் எச்சரிக்கையுடன் செயல்படுவதை உணர்ந்தான்.

பிரபஞ்சத்தில் இரகசியங்களுக்கா பஞ்சம்? எல்லாம் அறிந்தவர்கள் யார்? பிறந்தது முதலாக தனது முதுகினையே காணுவதில்லை. ஆனால் தாங்கள் எல்லாம் அறிந்துவிட்டோம் என்கிற இறுமாப்பு மட்டும் எப்படியோ வந்து விடுகிறது.

கால ஓட்டத்திற்கு ஏற்ப பிரபஞ்சமும் சுழல்கிறது. அந்த பிரபஞ்சத்தின் ஓட்டத்திற்கு ஏற்ப இந்த உலகமும் சுழல்கிறது. உலகத்தின் சுழற்சிக்கு ஏற்ப மனித நாடிச் சக்கரங்களும் சுற்றுகின்றன என்பதை அண்மையில்தான் அறிந்திருந்தான் சிறுவன் விஷ்ணுகுப்தன். இயற்கையிலேயே நுண்ணறிவு படைத்திருந்தான் விஷ்ணு. தனிமையில் இருக்கும்போது, தன்னை பல்வேறு மாதிரியாகக் கற்பனை செய்து கொண்டு, இம்மாதிரி இருந்தால், என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று திட்டங்களைத் தீட்டுவான்.

அரசனாக, மந்திரியாக, குருவாக, ஆலய அர்ச்சகனாக, சிற்பியாக, நந்தவனக்காரனாக, போர் தளபதியாக, பெண்ணாக, கள்வனாக, ஏன் மிருகமாகக் கூட தன்னை கற்பனை செய்து பார்த்து அந்த கற்பனைகளுக்கு உரிய தன்மைகளை வளர்த்து வந்திருக்கிறான் விஷ்ணுகுப்தன்.

தந்தையை நாடி ஊர்த்தலைவர் வரப்போகிறார். ஏன்? எதற்காக? விஷ்ணுகுப்தனின் சிந்தனை போர்க்கள வாளைப் போன்று வேகமாகச் சுழன்றது.

கொதிக்கத் துவங்கிய நீரில் கீரையைச் சேர்த்த சானேஷ்வரி, கணவனை நோக்க, அவர், "காயே நவாசா..." என்று துவக்க, மாணாக்கர்கள் மங்கள ஸ்லோகத்தைச் சொல்லி விட்டுக் கலைந்து சென்றனர்.

https://telegram.me/aedahamlibrary

காஞ்சனகுப்தர் அரசமர மேடையிலிருந்து விலகி தமது குடிலினுள் நுழைய, அவர் பின்பாக நடந்த சானேஷ்வரி ஒரு குவளையில் பாலை வார்த்து அவரிடம் நீட்டினாள். அவர் அருந்தி முடிக்கும்வரை அமைதி காத்த சானேஷ்வரி மெல்லிய குரலில் கூறினாள்.

"அத்திமலை ரகசியத்தை உரைக்கும் அதர்வண சாகையை மறந்து விடாதீர்கள் சுவாமி. அத்தியூரை புலிவேமு மன்னர் கைப்பற்றியது எதற்காக? அத்தியூர் வெறும் வனப்பகுதி. இங்கே அத்திகிரி தேவராஜனின் ஆலயத்தைத் தவிர வேறு என்ன உள்ளது? இதை அறிந்தும் புலிவேமு நம் ஊரைக் கைப்பற்றி இருக்கிறான் என்றால், அத்திமலை ரகசியத்தை யாரோ அவனிடம் சொல்லியிருக்கக் கூடும். எனவே நமது அத்திமலையைக் கைப்பற்றி இருக்கிறார்களோ என்று ஐயமாக இருக்கிறது. கேட்டதை கொடுப்பவன் நம் அத்திமலைத்தேவன். பெய்யட்டும் என்றால் மழையை பெய்ய வைக்கிறான். சுபிட்சத்தையும், வளத்தையும் அவன் அனைவருக்கும் தருகிறான். நாடாளும் மன்னர்கள் கையில் அவனைச் சிக்க வைக்கக் கூடாது." சானேஷ்வரியின் குரல் உணர்ச்சியால் நடுங்கியது.

காஞ்சனகுப்தர் மனைவியைப் பெருமையுடன் பார்த்தார். மனைவி அமைவதில் கூட அத்திமலைத் தேவன் இவருக்கு எவ்வித குறையும் வைத்திருக்கவில்லை. இவர் இல்லாதபோது மாணாக்கர்களுக்கு பாடங்கள் போதிக்கும் திறமை கொண்டிருப்பவள், அவரது மனையாள். ஆடை ஆபரணங்கள் அவளை எப்போதும் ஈர்த்ததில்லை. மிக அழகாகப் பாடுவாள். கனிவுடன் பேசுபவள்.

“ஈஸ்வரி! நீ கவலைப்படாதே. அத்திமலை ரகசியங்கள் என்னால் மட்டுமல்ல, அதை அறிந்து கொண்ட எவராலுமே அதனை வெளியிட முடியாது. அவனது ரகசியங்களை அவனே காத்துக் கொள்வான்! அதனை வெளியிட முயல்பவர்களை அவனே தண்டிப்பான்!" காஞ்சனர் கூறினார்.

"உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இருப்பினும் எச்சரிக்க வேண்டியது ஒரு மனைவியின் கடமை. மனைவி கணவனுக்கு எச்சரிக்கைகள் கூறுவது அவர் மீதுள்ள வாஞ்சையால் மட்டுமே தவிர, அவருக்கு சிந்திக்கும் தன்மை இல்லை என்பதால் அல்ல!” - சானேஷ்வரி கூறியபடி, குடிலை விட்டு நீங்கி வெளியே அடுப்பினில் கொதித்துக்கொண்டிருந்த கீரை கலயத்தை நோக்கி நடந்தாள்.

https://telegram.me/aedahamlibrary

தம்பதியரின் உரையாடலை செவிமடுத்தபடி மூங்கில் குடிலின் மாடத்தருகே நின்று கொண்டிருந்த விஷ்ணுகுப்தன் யோசனையுடன் அகன்றான். தாய் தந்தையின் உரையாடலைக் கேட்டதும், அவனுள் ஆர்வம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. அந்த இரகசியத்தை தாய் மூலமாகவோ, தந்தை மூலமாகவோ அறிந்துகொள்ள வேண்டும் என்கிற துடிப்பு அதிகரித்தது.

தொலைவில் கேட்ட டமார ஒலி ஊர்த்தலைவர் பரப்பசுவாமி வருவதை உணர்த்த, காஞ்சனரும், சானேஷ்வரியும் அவர்களை வரவேற்கத் தயாரானார்கள்.

சிவிகை ஒன்றைச் சுமந்தபடி இருவர் வர, அதிலிருந்து ஒரு பெண்ணும், விஷ்ணுகுப்தன் வயதில் ஒரு சிறுவனும் இறங்கினார்கள். பின்பாக வந்த புரவியிலிருந்து இறங்கினார், பரப்பசுவாமி.

"ஊர்த்தலைவருக்கு வந்தனங்கள்! உங்கள் திருவடிகள் எனது குடிலில் பதிவதற்கு நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்!”- வழக்கமாக அலங்காரச் சொற்களை பிரயோகப்படுத்தாதவர்தான் காஞ்சனகுப்தர். ஆனால், புதிய ஊர்த்தலைவரை துவக்கத்திலேயே விரோதித்துக் கொள்ள வேண்டாமே என்கிற எண்ணத்தில் இம்மாதிரியான அலங்காரச் சொற்களுடன் பரப்பசுவாமியை வரவேற்றார்.

"வந்தனங்கள் குருவே! இவள் என் மனைவி சுபர்ணா! இவன் என் மகன் சசாங்கவர்மன். மன்னர் புலிவேமுவின் சிற்றன்னை மகன் நான். தங்களைப் பற்றி நிறைய அறிந்திருக்கிறேன். என் மகன் சசாங்கனை தங்கள் குருகுலத்தில் சேர்ப்பிக்கவே நாங்கள் வந்திருக்கிறோம்!” - பரப்பசுவாமி கூறினார்.

தங்களது பிரும்மாண்ட மாளிகையின் வசதிகளை கடந்த பத்து தினங்களாக அனுபவித்து வந்த சுபர்ணா அந்த எளிமையான குடிலையும், அதில் வசித்தவர்களையும் அருவருப்புடன் நோக்கினாள். 'என் மகனுக்கு கல்வி போதிக்கும் அருகதை இவர்களுக்கு உள்ளதா?' என்பது போன்று கணவனை பார்த்தாள். தன்னை நோக்கி நட்புடன் சிரித்த சானேஷ்வரியை கண்டு கொள்ளாமல் அப்பால் பார்வையைத் திருப்பினாள். இதையும் கவனித்தபடி சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்தான் விஷ்ணுகுப்தன்.

“அவசியம் தலைவரே! இங்குள்ள மாணாக்கர்களுடன் தங்கி, இந்த

https://telegram.me/aedahamlibrary

இயற்கை சூழலில் கல்வி பயின்றால் உமது மகன் பெரிய பண்டிதனாக விளங்குவான்" - காஞ்சனர் சொல்ல, படீரென்று வெடித்தாள் சுபர்ணா.

"கல்வி பயில இங்கே தங்குவானேன்? தாங்கள் எங்கள் மாளிகைக்கு வந்து போதிக்கலாமே!" -

"அது வழக்கமல்ல.! குருகுல கல்வி பயில்வதுதான் குழந்தைக்கு நல்லது. தனியாக போதிக்கப்பட்டால் அனைத்திலும் தனிக்கவனம் தந்தால்தான் முன்னேறுவான்" சானேஷ்வரி கூற, விருட்டென்று அவளை எரித்து விடுபவளைப் போன்று நோக்கினாள் சுபர்ணா.

"சரி! பிரச்சனையில்லை. அன்றாடம் என் மகனை சிவிகையில் குருகுலத்திற்கு அனுப்புகிறேன்" - என்றார் பரப்பசுவாமி. தன் மகனை நோக்கி தலையசைத்தார் ஊர்த்தலைவர்.

"சசாங்கா! குருவிடம் ஆசிபெற்றுக் கொள். அவர் கூறும் பாடங்களை நன்றாகக் கேட்டு அறிந்து கொள்" என்றதும் சசாங்கவர்மன் காஞ்சனகுப்தரை அடிபணிந்தான்.

"நாளை நல்ல முஹூர்த்த நாள்தான். நாளை முதல் உங்கள் மகனை குருகுலம் அனுப்புங்கள்!" காஞ்சனர் சொல்ல, தலையசைத்த ஊர்த்தலைவர் தனது மாளிகைக்குப் புறப்பட்டார். சற்று தொலைவு சென்ற பரப்பசுவாமி திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவராக, மீண்டும் காஞ்சனகுப்தரை நோக்கி வந்தார்.

"இன்னொமொரு விஷயம் சுவாமி! வேமுல மன்னர் புலிவேமு நம் அத்தியூருக்கு விஜயம் செய்ய உள்ளார். நீர்தானே ஆலயத்தின் பொறுப்பாளர். மன்னருக்கு கோவிலின் மகத்துவத்தைப் பற்றி கூறி, தல புராணத்தையும் விவரித்து தரிசனம் செய்து வையுங்கள்!" பரப்பசுவாமி கீழ்க் கண்களால் காஞ்சனரைப் பார்த்தார்.

"உத்தரவு தலைவரே! அப்படியே செய்கிறேன்!" காஞ்சனர் கூறினார். திடீரென்று அவரது செவிபக்கமாக குனிந்த பரப்பசுவாமி அவர் காதில் கிசுகிசுத்தார்.

"அப்படியே, அத்திமலை கோவிலில் ஏதோ ரகசியம் உள்ளதாமே? எங்களது பணிப்பெண் ஐராவதி கூறினாள். அந்த ரகசியம் என்ன என்பது குறித்தும் மன்னரிடம் தெரிவியுங்கள்!" கட்டளையாக ஒலித்தது

https://telegram.me/aedahamlibrary

பரப்பசுவாமியின் குரல்.

காஞ்சனகுப்தரின் முகபாவத்தைக் கொண்டே, ஊர்த்தலைவர் தன் கணவனின் செவியில் கிசுகிசுத்த விஷயத்தை யூகித்து விட்டாள் சானேஷ்வரி.

'புலி! வருகிறது!' என்று இவள் கணவனை எச்சரித்துக் கொண்டிருக்க, புலி, புலிவேமு வடிவில் உண்மையாகவே வந்துவிட்டது போலும்.

அன்றிரவு ---

காஞ்சனரும், சானேஷ்வரியும் குடிலின் உள்ளே படுத்துக்கொண்டிருந்தனர்.

திண்ணையில் கிடந்த விஷ்ணுகுப்தன் உறக்கம் வராமல் இப்படியும், அப்படியும் புரண்டு கொண்டிருந்தான். பெற்றோரிடம் ஏதோ ரகசியம் உள்ளது. அதனை அத்திமலை ரகசியம் என்கிறார்கள். அந்த ரகசியத்தை வேமுல மன்னனிடம் சொல்லாமல் எப்படி தவிர்ப்பது என்று குழம்பித் தவிக்கின்றனர் பெற்றோர்.

'கிசுகிசு' என்று தாய் சானேஷ்வரியின் குரல் மிக மிருதுவாகக் கேட்க, சட்டென்று எழுந்து அமர்ந்தான் விஷ்ணுகுப்தன்.

தாய் தந்தை உறங்காமல் மன்னனை எப்படிச் சமாளிப்பது என்று ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனரோ என்னவோ! தம்பதியின் இரவு நேரப் பேச்சை ஒட்டு கேட்பது அநாகரிகம் என்றாலும், எதிர்காலத்தில் பெரிய சாம்ராஜ்யத்தையே உருவாக்கி சாணக்கிய நீதியை இயற்றப் போகும் விஷ்ணுகுப்தனுக்கு, தாய் தந்தை பகிர்ந்து கொள்ளும் ரகசியத்தைக் கேட்க ஆவல் இருக்காதா என்ன? சட்டென்று எதிர் திண்ணைக்கு தாவி, தவழ்ந்து சென்று மூங்கிலால் அமைந்திருந்த சாளரத்தில் செவியைப் பதித்து, பெற்றோரின் பேச்சைக் கவனிக்கத் தொடங்கினான்.

''என்ன செய்யப் போகின்றீர்கள் சுவாமி? வேமுல மன்னனை மூர்க்கன் என்று சொல்கிறார்களே. தனது ராஜகுருவையே கள்வன் என்று பழி சுமத்தி சிறையில் தள்ளியிருக்கிறான். உங்கள் பாண்டித்யத்தையா மதிக்கப் போகிறான்? உங்களை சிறையில் தள்ளியோ, சித்திரவதை செய்தோ ரகசியத்தை கூறும்படி வற்புறுத்தினால், உங்களால்

https://telegram.me/aedahamlibrary

ரகசியத்தை கூறாமல் இருக்க முடியுமா?" சானேஷ்வரி கேட்டாள்.

"அதைப் பற்றிதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன் ஈஸ்வரி! என்னால் அத்திமலை ரகசியம் வெளிவந்தது என்கிற குற்றச்சாட்டுக்கு நான் ஆளாகக் கூடாது!" காஞ்சனரின் குரலில் கவலை தொனித்தது.

"நாமெல்லாம் இன்னும் சில வருடங்களில் காணாமல் போக இருப்பவர்கள். ஆனால் அத்தியூரான் காலம் காலமாக இருக்கப் போகிறான். அவன் அருள் அனைவருக்கும் உரியது. சிலரின் தனிப்பட்ட விருப்பங்களுக்காக, அவனை தங்கள் வசப்படுத்த அரசியலதிகாரம் நினையக்கூடாது."- சானேஷ்வரி கூறினாள்.

"நீ சொல்லுவது உத்தமமான வார்த்தை! ஆனால் அரசியல், அதிகாரம், ஆளுமை, போர், வீரம் போன்ற சொற்கள் எல்லாம் நம்மை போன்ற உஞ்சவ்ருத்திகளின் வாழ்வில் ஏது ஈஸ்வரி? பிக்ஷை எடுத்து வந்த தானியம், வனங்கள் நமக்கு அளிக்கும் மூலிகை கீரைகளும் கனிகளும் மற்றும் அதோ ஓடுகிறதே, அந்த வேகவதியின் நீர் கிடைத்தாலே போதும் நமக்கு என்கிற நிலைமையில் அத்திமலை ரகசியத்தை காப்பாற்ற அதிகாரவர்க்கத்துடன் போராட முடியுமா என்ன?" காஞ்சனகுப்தரின் வேதனை ததும்பிய குரல் மூங்கில் சாளரம் வழியாக வெளியே அவர்கள் உரையாடலை செவிமடுத்துக் கிடந்த விஷ்ணுகுப்தனின் சிந்தையினுள் புகுந்தது. தந்தையின் ஆதங்கம் அவனது மனதில் பெரும் புயலை வீசச் செய்தது.

பிராமணர்கள் பொருள்களின் மீது பற்று வைத்தல் கூடாது. பொருள் சேர்க்கக்கூடாது. அன்றாடம் வயிறு வளர்க்க, பிக்ஷை செய்து அதில் கிடைக்கும் தானியத்தை மட்டுமே சமைத்து உண்ண வேண்டும். நாளைக்காக சேமித்தல் கூடாது. மோட்ச சாம்ராஜ்யம் ஒன்றை மட்டுமே நாடும் மனிதர்களுக்கு, ஈட்டிய பொருள் மண்ணுலகத்தின் மீது பிணைப்பை ஏற்படுத்தும் என்பதால்தானே, மோட்சத்தை நாடி, பொருள் ஈட்டாமல் இருக்கிறார், இவனது தந்தை. அவரது கல்வியறிவைக் கொண்டு அவரால் பொருள் ஈட்ட முடியாதா என்ன?

தொடர்ந்து பெற்றோரின் பேச்சைக் கவனித்தான் விஷ்ணுகுப்தன்.

சானேஷ்வரி கணவனை சமாதானம் செய்தாள். "புலம்பாமல் அத்திமலை ரகசியத்தை எப்படிக் காப்பாற்றுவது என்று யோசியுங்கள். அத்தியூரான் ஏதாவது நல்வழியைக் காட்டுவான். எதனை மன்னரிடம்

https://telegram.me/aedahamlibrary

கூறலாம், எதனை கூறக்கூடாது... என்று தீர்மானியுங்கள், சுவாமி!" - சானேஷ்வரி கூற,

பெருமூச்சுடன் பாயில் தனது உடலை கிடத்தினார், காஞ்சனர்.

"அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" - காஞ்சனகுப்தர் கூரையைப் பார்த்தபடி கூறினார்.

"எதைப்பற்றி கூறினாலும், பதிமூன்றாம் தாரகை சாங்கியத்தைப் பற்றி மட்டும் மூச்சு விடாதீர்கள். அத்தியூரானின் பாதுகாப்பே அதில் தான் அடங்கியிருக்கிறது." சானேஷ்வரி கூறியதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார் காஞ்சனகுப்தர்.

"ஈஸ்வரி! இன்றைய நாள் என்ன என்பதை கவனித்தாயா?" திகைப்புடன் வினவினார் காஞ்சனர்.

"கவனித்ததால்தான் தங்களை எச்சரித்தேன்!" - சானேஷ்வரி கூறினாள்.

"உறங்கச் செல் ஈஸ்வரி. நாளை காலை ஊர்த்தலைவர் மகன் வேறு கல்வி பயில வருவான்!" காஞ்சனகுப்தர் மீண்டும் கட்டையை கிடத்திவிட்டு கண்களை மூடிக் கொண்டார்.

"கூடியவரையில் அவன் முன்பாகவும் நீங்களோ, விஷ்ணுவோ அத்தியூர் பெருமைகளை பேசாதீர்கள். அவன் தந்தையிடம் எதையாவது கூறிவிடப் போகிறான்!" சானேஷ்வரியும் தலையை மணைப்பலகையில் கிடத்தியபடி கண்களை மூடி அப்படியே உறங்கிப் போனாள்.

தந்தை விடும் குறட்டையொலி கேட்கத் துவங்க, விஷ்ணுகுப்தனுக்கு உறங்க பிடிக்கவில்லை. பெற்றோரின் உரையாடல் அவனது உறக்கத்தை அறவே நீக்கி விட்டது. அத்திமலை ரகசியம் என்னவாக இருக்கக்கூடும்? புலிவேமு மன்னனின் காதில் ரகசியம் விழுந்தால் எவ்வகை அனர்த்தங்கள் நிகழும்? பதிமூன்றாவது தாரகை சாங்கியம் என்றாளே அம்மா! அது என்ன சாங்கியம்? இறுதியாக, 'இன்றைய நாள் என்ன என்பதை கவனித்தாயா' என்று தந்தை கேட்க, 'கவனித்ததால்தான் எச்சரித்தேன்' என்று தாய் பதில் அளித்தாளே! இன்றைய நாளுக்கு என்ன சிறப்பு?

விஷ்ணுகுப்தன் யோசித்தான். அன்று ரவிவாரம் என்கிற

https://telegram.me/aedahamlibrary

ஞாயிற்றுக்கிழமை. வேறு என்ன விசேடம் அன்று?

திதியை யோசித்தான். மறுநாள் பௌர்ணமி என்பதால் அன்று சுக்லபட்ச சதுர்த்தசி. என்ன நட்சத்திரம் அன்று? ஹஸ்தம் அல்லவா?

அன்றைய தினத்தில் வேறு என்ன விசேடம்? அன்றைய நாளை கவனித்தாயா என்று கேட்கும்படியாக என்ன சிறப்பு? வெகு நேரம் யோசித்துக்கொண்டிருந்த விஷ்ணுகுப்தனுக்கு ஒன்றும் புலப்படவில்லை.

யோசித்தபடியே வேகவதி ஆற்றினை நோக்கி நடந்தான். 'என் வேகத்தை யாரால் ஜெயிக்க இயலும்?' என்று கர்வத்துடன் வேகவதி ஓட, 'உன் வேகத்தை எனது எண்ண ஓட்டம் வெற்றி கொள்ளும்' என்று கூறுவது போன்று நதிக்கரையில் நின்று கொண்டிருந்தான் விஷ்ணுகுப்தன். ஆற்றினையே வெறித்துப்பார்த்தபடி தனது பெற்றோரின் உரையாடலை அசைபோட்டுக் கொண்டிருந்தான். பின்னிரவு நேரத்தில் அம்மாதிரி நதிக்கரையில் நிற்பதற்கு ஒரு சிறுவனுக்கு எவ்வளவு துணிவு இருந்திருக்க வேண்டும்?

இருளில் அத்திமரக்காடு ஒரு கரிய அரக்கியை போன்று காணப்பட, இருளிலிருந்து வெண்மையாக அந்த அரக்கியின் துருத்திய நாக்கை போன்று வெளிவந்து சீறிப்பாய்ந்து வந்துகொண்டிருந்தது, வேகவதி.

பகல் நேரங்களிலேயே ஆள் அரவமற்ற அந்தப் பகுதியில் இரவைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? உலகத்திலேயே தான் ஒருவன்தான் இருப்பது போன்ற எண்ணம் விஷ்ணுகுப்தனுக்கு ஏற்பட்டது. திரும்பி தனது குடிலினைப் பார்த்தான். குடில் இருக்கும் இடம் தெரியாமல் இருள் கப்பிக் கிடந்தது. மீண்டும் ஆற்றை நோக்கினான்.

அப்போது ---

ஒரு வெண்மையான ஒளிக்கீற்று அந்த இருள் படர்ந்திருந்த அத்திமரக்காட்டின் மீது பரவி, மரங்களின் பசுமையை பறைசாற்றியபடி சுழன்று கிழக்கு வானில் பயணித்தது. ஒரு கணம், விதிர்விதிர்த்துப் போய், அத்திவனத்தையே வெறித்தான். கானகத்திலிருந்து அந்த ஒளிக்கற்றை புறப்பட்டதா என்ன? மீண்டும் அந்த ஒளிக்கற்றை ஆற்று நீரில் பிரதிபலித்து கிழக்கு வானில் பாய, திடுக்கிட்டுத் திரும்பினான் விஷ்ணுகுப்தன்.

https://telegram.me/aedahamlibrary

அத்திகிரி என்கிற தேவராஜன் எழுந்தருளியிருந்த கஜ மலையிலிருந்துதான் அந்த ஒளி சுழன்று கொண்டிருந்தது. விஷ்ணுகுப்தன் உறைந்து போய் நின்றிருந்தான். ஒருவேளை, அன்று அவனது பெற்றோர்கள் குறிப்பிட்ட அந்த அத்திமலை ரகசியத்திற்கும் இந்த ஒளிக்கும் தொடர்பு இருக்கக்கூடுமா?

உடனேயே விஷ்ணுகுப்தனுக்கு ஒரு விஷயம் உறைத்தது. அன்று ஹஸ்த நட்சத்திரம் அல்லவா? அத்திமலைத்தேவனின் நட்சத்திரமும் ஹஸ்தம் தானே. அத்தியூரான் அத்தனல்லவா?

சட்டென்று அவனது சிந்தையிலும் பளீரென்ற ஒளி தோன்றியது. அவனது தாய் குறிப்பிட்ட பதிமூன்றாம் தாரகை சாங்கியம் என்ன என்பது இப்போது புரிந்து விட்டது. இருபத்து ஏழு நட்சத்திரங்களில் பதிமூன்றாவது நட்சத்திரம் ஹஸ்தம்தானே... நட்சத்திரத்தை தாரகை என்றுதானே குறிப்பிடுவார்கள்....

அத்திமலை ரகசியம் என்ன என்பதை விரைவில் அறிந்துவிடுவோம் என்கிற நம்பிக்கையுடன் விஷ்ணுகுப்தன் தனது குடிலை நோக்கித் திரும்பி நடந்தான். அவனது கண்கள் அத்திமலையையே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அதற்குப்பின் அத்திமலையிலிருந்து அந்த ஒளி தோன்றவில்லை.

அந்த அத்திமலை ரகசியம்தான் தன்னை பரதக் கண்டத்திலேயே ஒரு பெரிய உயரத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறது என்பதை அறியாமல் தனது குடிலின் திண்ணையில் முடங்கினான் விஷ்ணுகுப்தன். இன்று இருப்பது எல்லாம் நாளை இருக்காது என்கிற தத்துவத்தை உணர்த்தியவாறு பெருகிக்கொண்டிருந்தது வேகவதி. ஆம்! அன்று பெருகிப் பாய்ந்த வேகவதி ஆறு இன்று எங்கே இருக்கிறது?

1. விஷ்ணுகுப்தன்தான் பின்னாளில் கௌடில்யன் என்கிற சாணக்கியன். இவன் தான் மவுரிய வம்சத்தை உருவாக்கியவன்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 2. தேரை மறித்த அகோரி

"மன்னரே! அரசியார் பத்மாங்கி ஒரு புதல்வியைப் பெற்றிருக்கிறார்!”

அந்தப்புரத்தின் தலைமைச் சேடி நிவந்தினி தலைபணிந்து அறிவிக்க, ஜிவ்வென்ற உற்சாகத்துடன் தனது ஆசனத்திலிருந்து எழுந்தான் நந்தவம்சத்து மன்னன் தானநந்தா.[1] இதுவரை தந்தை பத்மநந்தாவின் யுவராஜாவாகத் திகழ்ந்த தானநந்தா மன்னனாகப் பதவியேற்று ஒரு மண்டலம் நிறைவாகி விட்டிருந்தது.

கி.மு. 329-இல் பாரத தேசத்தின் பெரும்பகுதியை ஆண்டது நந்த வம்சம். இதன் ஒரு கிளையாக கி.மு. 345-இல் நந்த வம்சத்தின் ஆட்சி மகத தேசத்தில் தொடங்கியது. இப்போதைய பஞ்சாப் துவங்கி வங்காளம் வரையிலும், தெற்கே விந்திய மலை வரையிலும் பரவியிருந்தது. மிகவும் செல்வந்த நாடு. முதல் நந்த அரசன் மகாபத்மபதி. நந்த சாம்ராஜ்யத்தின் தலைநகரம் பாடலிபுத்ரா (பாட்னா). அப்போது அதனை புஷ்பபுரம் என்று அழைத்தனர். மகாபத்மபதி என்கிற பலம் பொருந்திய நந்த அரசனின் ஒன்பது மகன்களில் ஒருவன்தான் தானநந்தா. அலெக்சாண்டர் பாரதத்தின் மீது படையெடுத்து வந்த போது, மகதத்தின் படைபலத்தை உணர்ந்து அதனை எதிர்க்கத் தயங்கினான். அதன் தங்கச் சுரங்கங்களை கைப்பற்ற எண்ணி படையெடுத்து வந்தவன், அந்த நாட்டின் ராணுவ பலத்தை கண்டதும் திகைத்தான் என்று கிரேக்க நூல்கள் தானநந்தாவைப் பற்றி குறிப்பிட்டுள்ளன. கர்டியஸ், தியோதரஸ், ப்ளூடார்க், ஜஸ்டின் ஆகியவர்களின் நூல்களும் இவற்றில் அடங்கும்.

பட்டாபிஷேகத்தன்று நடந்த அந்த சம்பவத்தை உடனடியாக அவன் மனம் நினைத்தது. பட்டாபிஷேகத்திற்கு முன்பாக வீதியுலா சென்ற போது நிகழ்ந்த அந்த சம்பவத்தைப் பற்றி நினைத்ததுமே அவன் ஆனந்த பரவசத்தில் திளைத்தான். இரதத்தினில் மனைவி பத்மாங்கி மற்றும் இளவரசன் பிபத்தநந்தனுடன், தானநந்தா வீதிவலம் வந்துகொண்டிருந்தான். அப்போது அந்த அதிசயம் நிகழ்ந்தது. மகேஸ்வரர் ஆலயத்தின் வாயிலில் திரளாக நின்று இவனது வீதியுலாவைக் கண்டுகொண்டிருந்த மக்களை விலக்கிக்கொண்டு ஒரு நெடிய உருவம் வீதி நடுவே வந்து இரதத்தை வழிமறித்தது.

“தானநந்தா!”- கணீரென்ற குரலில் தன் கையில் ஏந்தியிருந்த சூலத்தை

https://telegram.me/aedahamlibrary

உயர்த்தி, சாரதியை இரதத்தை நிறுத்தும்படி பணித்தது.

ஆஜானுபாகு தோற்றம். தனது அடர்ந்த முடியை நெடிய கொண்டையாக முடிந்திருந்தது. கரிய உருவம். வெண்ணிற சுடலைப் பொடியை தேகமெங்கும் பூசியிருந்தது. தீட்சண்யமான கண்கள். இடுப்பினில் புலித்தோல் அணிந்திருந்த அந்த அகோரி வந்து நின்றது அந்த மகேஸ்வரர் ஆலயத்திலிருந்து மகேஸ்வரனே எழுந்து வந்தது போல் இருந்தது.

“தானநந்தா! உனக்கு விரைவில் ஒரு மகள் பிறக்க இருக்கிறாள். அவள் பிறந்ததும், உனது நாடு இன்னும் செழிப்படையும். மகளால் உயரப்போகிறாய். ஆனால் வேதியர்களுக்கு 'இல்லை' என்று சொல்லாமல் தானம் செய். எந்த வேதியனுக்கு நீ இல்லை என்று சொல்கிறாயோ அவனால் உனது குலம் அழியும்!” என்று கூறிவிட்டு, தானநந்தாவை நோக்கி சுடலைப்பொடியை ஊதி விட்டு, மீண்டும் ஆலயத்தினுள் நுழைந்து மறைந்தான் அந்த அகோரி.

“வந்தது மகேஸ்வரன்தான்!” - மக்கள் கூட்டம் முணுமுணுக்க, தானநந்தா திகைப்புடன் அருகிலிருந்த மனைவி பத்மாங்கியைப் பார்த்தான். அவள் கர்ப்பவதியாகத் திகழ்ந்தது, இன்னும் ராஜரகசியமாகவே இருந்தது. அந்த அகோரிக்கு இந்த விவரம் எப்படித் தெரிய வந்தது என்கிற வியப்புடன் அரண்மனைக்குத் திரும்பினான்.

'தங்களுக்கு புதல்வி பிறந்திருக்கிறாள்!' - என்று நிவந்தினி வந்து கூறியதுமே, முதலில் அந்த அகோரியைத் தான் நினைத்தான்.

"சிவயோகியே! நீங்கள் கூறியது போன்றே எனக்கு பெண் குழந்தை பிறந்து விட்டது. இனி வேதியர்களுக்கு 'இல்லை' என்று கூறாமல் தானமளிக்கிறேன்!" - தனக்குள் கூறிக்கொண்டான், தானநந்தா.

அந்தப்புரத்தை நோக்கி நடக்கும்போதே, எதிரே வந்தார் மிஸ்ரபானு, அவனுடைய அரண்மனை ஜோதிடர்.

"மன்னவா!"

“வாருங்கள் ஜோதிடரே! சேதி அறிந்தீரோ? எனக்கு மகள் பிறந்து விட்டாள்" புளகாங்கிதத்துடன் சொன்னான் தானநந்தா.

https://telegram.me/aedahamlibrary

"அறிந்தது மட்டுமல்ல, மன்னவா! குழந்தையின் ஜாதகத்தையும் கணித்துவிட்டேன். தங்களது மகளின் திருநாமத்தை கூறினால், அதனை ஜாதகத்தில் எழுதி விடுவேன்." - ஜோதிடர் மிஸ்ரபானு கூறினார்.

"ராணி பத்மாங்கி முன்னரே என்னிடம் தெரிவித்து விட்டாள். துர்தரா என்பதுதான் இளவரசியின் பெயர்." மன்னன் கூறினான்.

"ஆஹா! துர்தரா! துர்தரா என்றால் தீவினையை அழிப்பவள் என்கிற பொருள்!" இடுப்பில் சொருகி இருந்த எழுத்தாணியை எடுத்து அப்போதே ஜாதகச் சுவடியில் அந்தப் பெயரைப் பதித்தார் ஜோதிடர்.

"எனது மகளின் ஜாதக அம்சம் எப்படி உள்ளது?" மன்னனின் குரலில் ஆவல் கொப்புளித்தது. ஜாதகச் சுவடியில் இளவரசியின் பெயரை வரைந்து கொண்டிருந்த மிஸ்ரபானுவின் முகம் மாறியது என்றாலும், அதனை மன்னன் காணாத வண்ணம் இன்னும் குனிந்து சுவடியைக் கவனிப்பது போல பாவனை செய்தார் மிஸ்ரபானு. மன்னனுக்கு என்ன பதில் தருவது என்கிற யோசனையுடன் சற்று நேரம் தலை குனிந்து சுவடியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர், பிறகு தனது சிரசை மெதுவாக உயர்த்தினார் மிஸ்ரபானு.

"மன்னவா! ஜாதகத்தில் ஒன்றுமே குறைவில்லை. இளவரசி பெரிய சக்கரவர்த்தினியாகத் திகழப் போகிறாள். மிகச் சிறப்பாக திருமணமும் நடந்து அவர் ஜாதகப்படி ஒரு மகனை ஈன்று எடுப்பார். அந்த மகனும் பெரிய மன்னனாகத் திகழ்வான் என்று கிரகங்கள் கூறுகின்றன. இருப்பினும்..."

மிஸ்ரபானு கூறிய அத்தனை நல்ல தகவல்களாலும் ஏற்பட்ட மகிழ்ச்சியை, அவர் கூறிய 'இருப்பினும்' என்கிற ஒரு சொல் உடனேயே உறிஞ்சி வற்றச் செய்து விட்டது.

மிஸ்ரபானுவின் முகத்தை கவலையுடன் பார்த்தான் மன்னவன். அவர் முகத்தில் தயக்கம் பரவியிருப்பதைக் கண்டதும் அவனது வாய் உலர்ந்தது.

"சொல்லுங்கள் ஜோதிடரே!"

“இளவரசியார் பிறந்த காலத்தை குறித்து ஜாதகம் கணித்தேன். இரண்டு விஷயங்கள் என் அறிவுக்குப் புலப்படாமல் ஜோதிட சாஸ்திரத்திற்கே

https://telegram.me/aedahamlibrary

சவால் விடுகிறது, மன்னவா!” ஜோதிடர் குழப்பத்துடன் கூறினார்.

“எத்தகைய சவால் ஜோதிடரே?”

"மன்னவா! இதுவரை நான் விருப்பு வெறுப்பு இன்றி மனதில் எதையும் மறைத்து வைக்காமல் ஜாதகம் கணித்து எதிர்காலத்தை கூறி வருகிறேன் என்பதை தாங்கள் அறிவீர்கள். எனது கணிப்புகள் உம்மை பலப்படுத்தி வந்திருப்பதையும் தாங்கள் உணர்வீர்கள். இப்போதும் எதையும் ஒளிக்காமல் உண்மைகளையே கூறுகிறேன். தாங்கள் என்னை தவறாக எண்ணக் கூடாது!" - மிஸ்ரபானு கூற, எரிச்சலுடன் அவரை பார்த்தான், தானநந்தா.

"பீடிகை தேவையில்லை சுவாமி. உம்மை கால தேவதையாகவே நாங்கள் கருதி வருகிறோம். உள்ளதை உள்ளபடி சொல்லுங்கள். உமது மீதுள்ள நல்லெண்ணம் கிஞ்சித்தும் குறையாது!” மன்னன் சொல்ல மிஸ்ரபானு மன்னனை நெருங்கி நின்றார்.

"ராஜனே! இளவரசியின் ஜாதகத்தில் இரண்டு விஷயங்கள் முன்னுக்குப் பின் முரணாக உள்ளன. முதலில் விவாகம். இளவரசியின் ஜாதகப்படி அவர் ஒரு பெரிய சக்கரவர்த்தினியாகத் திகழ்வார். ஆனால் அவர் ஒரு காட்டுவாசியைதான் திருமணம் செய்து கொள்வார் என்கிறது, அதே ஜாதகம். இரண்டாவதாக, இளவரசி ஒரு மன்னனைப் பெற்றெடுப்பார் என்கிறது அவரது ஜாதகம். ஆனால், அதே ஜாதகம்தான் அவர் பிள்ளை பெறுவதற்கு முன்பாகவே மரணம் சம்பவிக்கும் என்கிறது. ஒன்றுக்கு மற்றொன்று முரணாக உள்ளது" மிஸ்ரபானு கூறினார்.

“இது என்ன வேடிக்கை! ஒரு சக்கரவர்த்தியின் மனைவியாகத் திகழப் போகிறவள், எதற்காக ஒரு காட்டுவாசியை மணக்கப் போகிறாள்? பிள்ளை பிறப்பதற்கு முன்பே இறந்து போவாள் என் மகள் என்றால், அவள் மகன் எப்படி மன்னனாகப் பதவி ஏற்பான்? நான் நினைக்கிறேன் ஜோதிடரே! நீங்கள் குறித்த நேரத்தில் ஏதோ குளறுபடி உள்ளது. மீண்டும் குழந்தை பிறந்த நேரத்தைக் கொண்டு புதிதாக ஜாதகத்தை கணித்து பாரும்!” மன்னனின் குரலில் சற்றே கேலி இழையோடி இருந்தது.

மிஸ்ரபானு தலைவணங்கியபடி அங்கிருந்து அகல, தானநந்தா அந்தப்புரத்தை நோக்கி நடந்தான். அந்தப்புரம் செல்லும் முற்றத்தில் தலைமை அமைச்சர் ஹரஹரதேவ் இவனுக்காகக் காத்திருந்தார்.

https://telegram.me/aedahamlibrary

"வாழ்த்துகள் மன்னா! அந்த சிவயோகியார் கூறியது போலவே நடந்து விட்டதே! இனி உங்கள் ஆட்சி இன்னும் செழிக்கப் போகிறது!"- ஹரஹரதேவ் புன்னகையுடன் சொன்னார்.

"நன்று பிரதமரே! என்னுடன் வாரும்! இளவரசியை காணலாம்!" தானநந்தா அழைக்க, அவசரமாக அவனுடன் நடந்தார் ஹரஹர தேவ்.

"மன்னரே! பெண் பிறந்தவுடன் என்னை நினைவுபடுத்தச் சொன்னீர்கள்!"

பிரதம அமைச்சர் சொல்ல, தானநந்தா புருவத்தை உயர்த்தினான்.

"எதைப்பற்றி?"

"தங்கள் தந்தையார், மகாபத்மநந்தா இறக்கும் தறுவாயில் தங்களிடம் வேண்டிய வரம்." - ஹரஹர தேவ் சொன்னதும், ஆணியடித்தது போன்று நின்று விட்டான் மன்னன்.

"ஆம் அமைச்சரே! நல்ல காலம்... நினைவு படுத்தினீர். இன்றிரவே அதனைப்பற்றி மந்திராலோசனை நடத்துவோம். எனது புதல்வியை கண்டதும் இது குறித்த அறிவிப்பினை வெளியிடுங்கள்" - என்றபடி

தானநந்தா அந்தப்புரத்தினுள் நுழைய, ஹரஹர தேவும் அவனைப் பின்தொடர்ந்தார்.

***

"துர்தரா என்பதுதான் இளவரசியின் பெயர்!"

மந்திராலோசனை கூட்டம் துவங்கியதும், தானநந்தா அறிவிக்க, மந்திரி பிரதானிகள் பலத்த கரகோஷம் செய்தனர். தலைமை அமைச்சர் ஹரஹர தேவ் எழுந்தார்.

"இளவரசியார் பல்லாண்டு காலம் வாழ்வதற்கு இந்த மந்திரிசபை வாழ்த்து கூறுகிறது!"

அவரது வாழ்த்தை தலையசைத்து வரவேற்ற தானநந்தாவின் செவிகளில் ஜோசியர் மிஸ்ரபானுவின் குரல் ஒலித்தது. 'ஜாதகம் முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது, அரசே!" - மிஸ்ரபானு வேறு

https://telegram.me/aedahamlibrary

ஜாதகத்தை கணித்திருப்பாரா?

ஹரஹர தேவ் பேசத் துவங்கினார்.

"மந்திரி பிரதானிகளே! அதிகாரிகளே! நம் மறைந்த மன்னர் மகாபத்மபதி ஒப்பற்ற சாதனைகளை புரிந்திருந்தார். இருப்பினும், அவரது மனதில் ஒரு குறை இருந்தது. அதை தனது காலத்தில் செய்ய முடியவில்லையே என்கிற ஏக்கத்தில், இறக்கும் தறுவாயில் நம் மன்னரிடம் சத்தியம் ஒன்றை வாங்கிக் கொண்டார். தன்னால் செய்யமுடியாத அஸ்வமேத யாகத்தை நம் மன்னர் செய்ய வேண்டும் என்பதே அந்த சத்தியம். நம் மன்னரும் அவருக்கு வாக்கினை தந்தார். ஆனால் அரண்மனை ஜோதிடர் மன்னருக்கு புதல்வி பிறந்ததும் அந்த யாகத்தை செய்யலாம் என்று சொல்லி இருந்தார். தற்போது, மன்னருக்கு புதல்வி பிறந்துவிட்ட நிலையில், மன்னர் அஸ்வமேத யாகத்தை மிகச் சிறப்பாக செய்வதற்கு முடிவு செய்துள்ளார். நாம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்!”

தலைமையமைச்சர் கூற, இரகசியமாக ஒரு அதிகாரி அருகிலிருந்தவரிடம் முணுமுணுத்தான்.

“இறந்து போன மன்னவர் விதித்த வரிகளே அதிகம். யாகத்தை முன்னிட்டு புதிய மன்னர் எவ்வளவு வசூலிக்கப் போகிறாரோ?” - என்று கிசுகிசுத்தான். மந்திராலோசனை முடிந்து அந்த அதிகாரி அரண்மனை வாயிற்படியைக் கூட கடந்து இருக்கமாட்டான். புதிய வரிகளை விதித்து அரசன் செய்த அறிவிப்பு, ஆங்காங்கே பறைசாற்றப்பட்டு விட்டது.

* மக்கள் தங்கள் ஊதியம் மற்றும் கூலியில் பத்து பங்கை அரசிடம் கட்ட வேண்டும்.

* இறைவழிபாட்டு இடங்களில் செலுத்தப்படும் காணிக்கைகள் அரசர் கஜானாவைச் சேர்ந்து விடும்.

* புரவி, இரதங்கள், இதர வண்டிகளை வைத்திருப்போர் அதற்குரிய வரிகளைச் செலுத்த வேண்டும்.

* ஊருக்குச் செல்பவர்களும், தங்கள் இல்லங்களுக்கு விருந்தாளிகளை வரவேற்பவர்களும் சிறப்பு வரி செலுத்த வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

என்றெல்லாம் முரசொலிக்கப்பட, தானம் செய்யும் நந்தனா இல்லை தானம் பெறும் நந்தனா...? என்று ஆங்காங்கே கோப விமர்சனங்கள் எழுந்தன.

தனது இல்லத்தில், துர்தராவின் ஜாதகத்தை மீண்டும் மீண்டும் கணித்துப் பார்த்தார் மிஸ்ரபானு. முதல் கணிப்பில் தான் கண்ட அத்தனை முரண்பாடுகளுமே அனைத்து ஜாதகங்களிலும் பிரதிபலிக்க, ஜோதிடரின் நெஞ்சை பயம் கவ்வியது.

[1] Dhana Nanda is referred to as Agrammes or Xandrames by Diodorus (Greek historian). [5] The name Agrammes is possibly a distorted form of the Sanskrit Augrasainya (son or descendent of Ugrasena). [5]

*****

https://telegram.me/aedahamlibrary

# 3. தந்திரக்காரன்

வேமுல மன்னன் புலிவேமு மறுநாள் காலை அத்தியூர் வருவதாகப் பறைசாற்றப்பட்டது... மன்னன் ஊர்த்தலைவரின் மாளிகையில் அன்றைய இரவை கழித்துவிட்டு, மறுநாள் வெள்ளிக்கிழமை அத்திமலை ஆலயத்திற்குச் சென்று தேவராஜனை தரிசிப்பான் என்று பரப்பசுவாமி தனது உதவியாளரின் மூலம் காஞ்சனகுப்தருக்கு சேதி அனுப்பி விட்டார். மன்னரிடம் அவசியம் அத்திமலை ரகசியத்தை அவர் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிற கட்டளையும் இடப்பட்டது.

நெஞ்சம் கனக்க காஞ்சனகுப்தர் மாணாக்கர்களுக்கு பாடம் கூட போதிக்காமல், தீவிர யோசனையில் இருந்தார். அவரை எப்படி சமாதானம் செய்வது என்று தெரியாமல், சானேஷ்வரியும் உணவு சமைப்பதும், அவ்வப்போது கணவனை நோட்டம் விடுவதுமாக இருந்தாள்.

எதையாவது பொய்யாகக் கூறி சமாளித்துவிடலாம் என்றாலும், உயிர் பிரிவதாக இருந்தாலும் பொய்யுரைப்பதில்லை என்கிற பிரதிஞ்ஞையை வேறு செய்திருந்தார், காஞ்சனர்.

நண்பன் சசாங்கனுடன் விளையாடியபடி, வேதனையுடன் அமர்ந்திருக்கும் தந்தையையும், பெருமூச்சு சிந்தியபடி கவலையுடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்த தாயையும் கண்டதும் விஷ்ணுகுப்தனின் மனம் துடிதுடித்தது. பெற்றோரின் பிரச்னையை எப்படியாவது தீர்த்து அவர்களது மனபாரத்தை நீக்க வேண்டும் என்று அப்போதே மனதில் உறுதி எழுந்தது. மாளிகைக்குச் சென்று தலைவரின் மனதினை மாற்ற முயன்றால் என்ன? சசாங்கனின் அம்மா சுபர்ணாவின் ஆணவப் பார்வை அவனது கண்கள் முன்பாக நிழலாடியது.

பரவாயில்லை! சென்றுதான் பார்ப்போமே. தந்தையின் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கிடைத்தால் போதும். விஷ்ணுகுப்தனின் சிந்தையில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

"சசாங்கா! நான் காவலன் - கள்வன் என்கிற புது விளையாட்டினை உருவாக்கி உள்ளேன். அதனை ஒரு பெரிய மாளிகையில்தான் விளையாட வேண்டும். இன்று நான் உனது சிவிகையில் உன் மாளிகைக்கு வருகிறேன். அந்த விளையாட்டை விளையாடலாமா?"

https://telegram.me/aedahamlibrary

சசாங்கனின் கண்களில் ஆர்வம் தோன்றியது! “அவசியம் விளையாடலாமே!”

“இன்று சிவிகையில் என்னுடன் நீயும் வா!” சசாங்கன் கூறியதும், விஷ்ணுகுப்தனின் சிந்தை சுழன்றது.

தனது பெயரன் சசாங்கனை சிவிகையிலிருந்து இறக்கி, மாளிகையினுள் அழைத்துச் செல்வதற்காகக் காத்திருந்த, பரப்பசுவாமியின் தாய் ஹைமாதேவி ஆவலுடன் சிவிகையை நோக்கி நகர்ந்தாள். சிவிகை இறக்கப்பட, அதிலிருந்து சசாங்கனுடன் வெளிவந்த விஷ்ணுகுப்தனைக் கண்டதும் அவள் கண்களே தெறித்து விழுந்துவிடுவது போல் பிதுங்கியது.

"அடியே சுபர்ணா! இது என்ன அநியாயம்? அரசகுடும்பத்தைச் சேர்ந்த சசாங்கனின் சிவிகையில் ஒரு அன்றாடங்காய்ச்சி சவாரி செய்வதா? குருகுலத்திற்கு அனுப்ப வேண்டாம் என்று பரப்பனிடம் இதற்குதான் சொன்னேன். பரப்பனது சிவிகையில் ஒரு பார்ப்பன பிள்ளை அமர்வதா?"

என்று அரற்றிய ஹைமாதேவி, விஷ்ணுகுப்தனை நேரடியாகவே தாக்கினாள்.

"அடேய் பரதேசி! எங்கு வந்தாய்? உனது தந்தையின் குருகுலத்தில் சசாங்கன் பாடம் பயிலுவதால், அவனும் நீயும் ஒன்றாகிவிட முடியாது!” என்று அலற, விஷ்ணுகுப்தனுக்கு சினம் தலைக்கேறியது. இருப்பினும், வந்த காரியம் கெடக்கூடாது என்பதால் வாளாயிருந்தான்.

மாமியாரின் கர்ஜனையைக் கேட்டு மாளிகையில் இருந்து வெளிவந்த சுபர்ணாவின் முகம், விஷ்ணுகுப்தனைக் கண்டதும் சுருங்கியது.

"எதற்கப்பா எங்கள் மாளிகைக்கு வந்தாய்? மன்னர் வேறு இங்கே வர இருக்கிறார். பாதுகாப்பினை பலப்படுத்தி உள்ளனர். நாங்களே மாளிகையில் மன்னர் தங்க இருக்கும் பகுதியில் நடமாடக்கூடாது!” குரலில் காட்டத்தைக் காட்டினாள்.

"இல்லையம்மா! நான்தான் அவனை இங்கே வரச்சொன்னேன். புதிய விளையாட்டு ஒன்றை விளையாடப் போகிறோம். சிறிது நேரம் விளையாடிவிட்டு, அனுப்பி விடுகிறேன். எனக்கு பொழுது

https://telegram.me/aedahamlibrary

போகவில்லை." சசாங்கன் விஷ்ணுவுக்குப் பரிந்துகொண்டு வந்தான்.

"சரி சரி! மன்னர் தங்க உள்ள பகுதிக்குச் சென்று விளையாடாதீர்கள்! எனக்கு பணிகள் அதிகம் உள்ளன!" என்றபடி மாமியாருடன் உள்ளே செல்ல, சசாங்கன் விஷ்ணுவை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

"நான் கள்வன். நீ காவலன். நீ என்னைக் கண்டுபிடித்து கைது செய்து தர்பாரில் விசாரணை செய்து தண்டனை வழங்க வேண்டும். என்ன சரியா?"- விஷ்ணுகுப்தன் கேட்டான்.

"மிக எளிதாக உன்னை கைது செய்துவிடுவேன். கடந்த பத்து நாட்களில் இந்த மாளிகையின் மூலை முடுக்கெல்லாம் எனக்கு அத்துப்படி. உன்னால் எங்கேயும் பதுங்க முடியாது" சற்றே அகம்பாவத்துடன் கூறினான் சசாங்கன். அகம்பாவத்துக்கு எவ்வளவு தொலைவு போக வேண்டும். வேமுல மன்னனின் குடும்பத்தைச் சேர்ந்தவன். பாட்டி, தந்தை, தாய் மூவரிடமும் அகம்பாவம் ததும்பி வழிகிறது. விஷ்ணுகுப்தன் நினைத்தான். அகம்பாவம் உள்ளவர்களை வெற்றி கொள்வதில் விறுவிறுப்பு இன்னும் அதிகமாக இருக்கும் அல்லவா?

"அதையும் பார்த்துவிடுவோம்!" - விஷ்ணுகுப்தன் கூறினான்.

சரியாக ஒரு பணிப்பெண் இரண்டு சிறிய சிங்கமுக கற்சிற்பங்களை ஏந்தி வந்தாள்.

"ஐராவதி! என் கண்களை பொத்தி விடு. இந்த விஷ்ணுகுப்தன் கள்வனாகப் பதுங்கப் போகிறான். நான் அவனைத் தேடி கண்டுபிடித்து தண்டனை கொடுக்கப் போகிறேன்!"

விஷ்ணுகுப்தன் சிந்தையினில் ஒரு ஒளிக்கீற்று. ஐராவதி! இந்தப் பெயரை எங்கோ கேட்டிருக்கிறானே! ஆம்! அத்திகிரி ஆலயத்தில் ஏதோ ரகசியம் இருப்பதாக பரப்பசுவாமியிடம் உளறியவள், இந்த ஐராவதிதானே! இவளால் தானே என் தந்தையாருக்கு பிரச்சனை! அவளை எரிச்சலுடன் நோக்கினான், விஷ்ணுகுப்தன்.

ஐராவதி சசாங்கனை புன்சிரிப்புடன் நோக்கினாள்.

"சற்று பொறு சசாங்கா! ஆலோசனை அறையில், வேமுல மன்னர் அமர

https://telegram.me/aedahamlibrary

இருக்கும் சிங்காசனத்தின் இரு புறங்களிலும் இந்த சிங்க முக சிற்பங்களை வைக்க வேண்டும் என்று உனது தாயார் பணித்திருக்கிறார். நான் சென்று அதனை வைத்து விட்டு வருகிறேன்!" -

சந்தர்ப்பம் தனக்கு சாதகமாக ஒரு வாய்ப்பினை நல்கும்போது பேசாமல் இருப்பானா, விஷ்ணுகுப்தன், நமது வருங்கால சாணக்கியன். ஐராவதியை இனிமையான சொற்களால் திக்குமுக்காடச் செய்தான். -

"அடே சசாங்கா! இவள் உங்கள் பணிப்பெண்ணா? நான் யாரோ ராஜகுமாரி என்றல்லவோ நினைத்தேன். ஒரு ராஜகுமாரி எதற்காக பணிப்பெண்ணைப் போன்று காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கிறாள்”- என்று நினைத்தேன்."

விஷ்ணு சொல்ல, சசாங்கன் சிரிக்கத் துவங்கினான்.

“போயும்.... போயும் ஒரு வேலைக்காரியை, ராஜகுமாரி என்று நினைத்து விட்டாயே... முழு மூடா! " என்று கைகொட்டி சிரித்தான்.

இதைத்தானே, விஷ்ணுகுப்தன் எதிர்பார்த்திருந்தான். தன்னை ராஜகுமாரியாக நினைத்த விஷ்ணுவை பூரிப்புடனும், போயும் போயும் ஒரு வேலைக்காரி என்று சொன்ன சசாங்கனை எரிச்சலுடனும் பார்த்த ஐராவதி, தொடர்ந்து நடக்க முயன்றாள். அவளை வழிமறித்து நின்றான் விஷ்ணு.

"ராஜகுமாரிதானே... நீங்கள், தமக்கையாரே?” அப்பாவியை போன்று முகத்தை வைத்துக்கொண்டான், விஷ்ணு.

"நான் இந்த மாளிகையின் பணிப்பெண்தான் சிறுவா!” - ஐராவதியின் உள்ளம் பெருமையில் துள்ளாட்டம் போட்டது.

விஷ்ணுகுப்தன் தனது திட்டத்திற்குதான் ஏற்கனவே அடித்தளத்தை போட்டுவிட்டானே. இனி சுவர் எழுப்ப வேண்டியதுதானே மிகுதி!

"இந்த மாதிரி சாமுத்ரிகா லட்சணங்கள் ஒரு அரசிக்குதான் இருக்கும். நான் குருகுலத்தில் ஜோதிடம் பயின்று இருக்கிறேன். எங்கே உங்கள் கைகளை நீட்டுங்கள்!" விஷ்ணு கோர, தன்னையும் அறியாமல், அந்த சிங்கமுக கற்சிற்பங்களை, தரையில் வைத்துவிட்டு, தனது இடக்கையை அவனிடம் நீட்டினாள்.

https://telegram.me/aedahamlibrary

"சந்தேகமேயில்லை. சுக்கிர மேட்டில் தாமரை ரேகைகள் பளிச்சென்று தென்படுகின்றன. அவை குவிந்தும் கிடக்கின்றன. விரைவிலேயே ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்தவனோ இல்லை மந்திரிகுமாரனோ, உங்களை மணாட்டியாக ஏற்பான்." - விஷ்ணுகுப்தன் சொல்ல, குப்பென்று குங்குமமாகச் சிவந்தது, ஐராவதியின் முகம்.

“நடந்தால் சந்தோஷம்தான், சிறுவா!” கீழே கிடந்த சிற்பங்களை மீண்டும் எடுப்பதற்காகக் குனிந்தாள், ஐராவதி.

"உங்கள் கைகளில் இருக்கும் மென்மையான தாமரை ரேகைகள், இந்த கற்சிற்பங்களின் கடினத்தால் அழிந்து விடப் போகின்றன. அந்த சிற்பங்களை என்னிடம் கொடுங்கள். ஆலோசனை அறையில் வைத்துவிட்டு நான் அப்படியே எங்கேயாவது ஒளிந்து கொள்கிறேன். நீங்கள் சசாங்கனின் கண்களை பொத்தி விடுங்கள்!" - என்று வெண்ணையாகக் குழைந்தபடி கூறினான்.

அவனது முகத்துதியினால் ஈர்க்கப்பட்ட ஐராவதி, உற்சாக வானில் பறக்கத் துவங்கினாள்.

"பார்த்து சிறுவா! இந்த முற்றத்தின் முடிவில்தான் ஆலோசனைக் கூடம் உள்ளது. மன்னரின் அரியாசனத்தின் இரு பக்கலிலும் கற்பீடங்கள் நிற்கின்றன. அந்த பீடங்களின் மீது இந்த சிங்கமுக சிற்பங்களை வைக்க வேண்டும். கவனத்துடன் செயல்படு! மன்னருக்காக அறையை அலங்கரித்து வைத்திருக்கிறார்கள். அவற்றை குலைக்காமல் வெளியே வா. இன்னும் சற்று நேரத்தில் அறையை பாதுகாவலர் வசம் ஒப்புவிக்க வேண்டும்!”

விஷ்ணுகுப்தன் கற்சிற்பங்களோடு ஆலோசனைக் கூடத்தினை நோக்கி நடந்தான். உள்ளே நுழைந்ததும் சற்றே பிரமித்துப் போனான். மிகவும் ஆடம்பரமாகவும், நேர்த்தியாகவும், அறை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அறை முழுவதும் செங்கற்பொடி நிறத்தில் விதானங்களும், தொம்பைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன. ஆங்காங்கே, கற்சிற்பங்களும், ஈட்டிகளும், திரிசூலங்களும், அழகான வரிசையில் வைக்கப்பட்டிருந்தன.

அறையின் மையத்தில் வேமுல மன்னன் புலிவேமு அமருவதற்காக தந்தத்தினால் அமைக்கப்பட்டிருந்த அரியாசனம் காணப்பட்டது. அதன் இருபுறங்களிலும், ஐராவதி கூறியிருந்தபடி இரு கற்பீடங்கள் நின்றன.

https://telegram.me/aedahamlibrary

விஷ்ணுகுப்தனின் பார்வை அந்த அரியாசனத்தின் மேலே படர்ந்தது.

மேலே ஒரு நீண்ட தொம்பை [1] பலவித ஓவியங்களுடன் அழகாக ஊசலாடிக்கொண்டிருந்தது. அதன் முடிவில் மலர்களாலும், இலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அருகே சென்ற விஷ்ணுகுப்தன் அந்த தொம்பையின் கீழ் வழியாக அண்ணாந்து நோக்கினான். உயரே எங்கோ அதன் துவக்கத்தில் தொம்பையின் உறுதிக்காக வைக்கப்பட்டிருந்த மரக்கட்டை தெரிந்தது. மேலே அமைக்கப்பட்டிருந்த மலர்ப்பந்தலின் மையத்தில் தொம்பை பிணைக்கப்பட்டிருந்தது. அந்த இருக்கையின் பின்பாக ஒரு சிவனாரின் சிலை நிறுவப்பட்டிருந்தது. தனது பின்பாக நின்ற பெரிய எருதின் மீது ஒரு கையை ஊன்றி, மறுகையில் சூலத்துடன் நின்றது, சிவனாரின் சிலை. அந்த எருதின் மீது கால் வைத்து மேலே அமைக்கப்பட்டிருந்த மலர்ப்பந்தலின் மீது ஏறிவிடலாம். மலர்ப்பந்தலின் உறுதியினை பரிசோதித்தான், விஷ்ணு. மூங்கில் கட்டைகளாலும், மரச்சட்டங்களினாலும் தட்டி அமைத்து அதனை மலர்களால் மறைத்திருந்தனர். சிறுவனான இவனது எடையை அந்த மரத்தட்டி எளிதாகத் தாங்கும்.

யோசிக்க காலமில்லை. இந்நேரம் சசாங்கனின் கண்களை பொத்தி இருந்த ஐராவதி தனது கைகளை நீக்கிவிட்டிருப்பாள். சுற்றுமுற்றும் பார்த்தான் விஷ்ணு. வரிசையாக நின்ற ஆயுதங்களில் இருந்து ஒரு கட்டாரியை உருவி, தனது இடையினில் சொருகிக் கொண்டான். சிவனாரின் சிலையை ஒரே பாய்ச்சலில் அடைந்தவன், எருது சிலையின் மீது கால் வைத்து நின்று சிவனாரின் கொண்டையை ஆதாரத்துக்கு பற்றிக் கொண்டான்.

நறுமணத்தை பரப்பியபடி சிவனாரின் சிலைக்கு மேலாகத் தொடங்கி, இருக்கையின் முன்புவரை நீண்டிருந்தது, அந்த மலர்ப்பந்தல். சிரமத்துடன் அந்த மலர்ப்பந்தலின் மீது ஒரு காலை வைத்து, மற்றொரு காலை சிவனாரின் மீது படாமல் மேலே உயர்த்த பார்த்தான். இருமுறை பிரயத்தனம் செய்து, அவனால் அந்த மலர்ப் பந்தலின் மீது ஏற இயலவில்லை. ஆனால், மூன்றாவது முயற்சியில் அவனால் அதன் மீது ஏற முடிந்தது. அவனது பாரம் தாளாமல், சற்றே அந்த மலர்ப்பந்தல் குலுங்கியது. சிறிது மலர்களும் உதிர்ந்தன. விஷ்ணுகுப்தன் கால்களை நீட்டியபடி மலர்ப்பந்தலின் மீது அப்படியே படுத்துக்கொண்டான்.

https://telegram.me/aedahamlibrary

அந்த மரத்தட்டியின் மையத்தில், தொம்பையை பிணைத்திருந்த முடிச்சினை காணமுடிந்தது. அவன் அந்த முடிச்சினை நோக்கி நகர்ந்த வேளையில், சரியாக அந்த அறையின் கதவு திறந்தது.

சசாங்கனும், ஐராவதியும் உள்ளே வந்தனர்.

“எங்கே ஒளிந்திருக்கிறான், அந்த விஷ்ணுகுப்தன்?” சசாங்கன் கேட்டான்.

"பீடங்களின் மீது சிங்கபொம்மைகளை வைத்து விட்டுத்தான் ஒளிவதற்குச் சென்றிருக்கிறான்." ஐராவதி கூறியது, விஷ்ணுவின் செவிகளில் விழுந்தது. கீழே இருந்து நோக்கினால் இவன் பந்தலின் மேல் பதுங்கியிருப்பது நிச்சயமாகப் புலப்படாது.

ஐராவதி சசாங்கனை எச்சரித்தாள். "சசாங்கா! இந்த அறையில் அவன் ஒளிந்திருக்க நியாயமில்லை. அவனை தேடுகிறேன் பேர்வழி என்று அலங்காரங்களை குலைத்து விடாதே! போய் நந்தவனத்தில் தேடிப்பார்!” - ஐராவதி சசாங்கனைத் தள்ளிக்கொண்டு வெளியே சென்றாள்.

மீண்டும் அந்த அறையினில் அமைதி தவழ்ந்தது. சற்று நேரம், மலர்ப்பந்தலின் மீது அசையாமல் கிடந்த விஷ்ணுகுப்தன், பிறகு பரபரப்புடன் இயங்கினான். மலர்ப் பந்தலின் மையத்தில் தொங்க விடப்பட்டிருந்த தொம்பையின் முடிச்சினை நெருங்கினான். அந்த முடிச்சினைச் சுற்றிப் பிணைக்கப்பட்டிருந்த மூங்கில் கட்டைகளை, கட்டாரியினால் நெம்பிப் பெயர்த்தான். தொம்பை பிணைக்கப்பட்டிருந்த மூங்கிலினை மட்டும் உடைக்காமல், தொம்பை தோரணத்தை மேலே இழுத்தான். தொம்பையின் உடல் முழுவதும் அமைக்கப்பட்டிருந்த மூங்கில் வளையங்களை ஒவ்வொன்றாக எடுத்து, அதன் நீளத்தினை குறைத்தான். தொம்பையின் துவக்கப்பகுதி வந்ததும், அங்கே பிணைக்கப்பட்டு இருந்த மரக்கட்டையின் நடுவே, கட்டாரியை, அதன் கூர்முனை அரியாசனத்தை நோக்கி

இருக்கும்படி கட்டினான். கட்டாரி விழுந்தால் அரியாசனத்தில் அமருபவரின் மீது விழும்படியாக அதனைப் பிணைத்த விஷ்ணுகுப்தன், பின்னர் திருப்தியுடன் தொம்பையின் உட்புற வளையங்களை மீண்டும் மாட்டத் துவங்கினான். தொம்பை மீண்டும் நீண்டு பழைய உருவினைப்பெற்றது. அதனை அரியாசனத்தின் நேர் மேலாக மீண்டும்

https://telegram.me/aedahamlibrary

ஊசலாடச் செய்தான். தான் நீக்கிவிட்டிருந்த மூங்கில் பத்தைகளை அந்த தும்பை முடிச்சினைச் சுற்றி மீண்டும் சொருகினான். அதன் மீது சிறிது மலர்களைத் தூவி, உடைந்திருந்த மூங்கில் பத்தைகளை மறைத்தான்.

தனது திட்டத்தின் முதல் பகுதியை வெற்றிகரமாகச் செய்து விட்டோம் என்கிற மிதப்பில், அறையை விட்டு வெளியேறி, கதவைச் சாற்றிக்கொண்டு நந்தவனத்தை நோக்கி ஓடினான்.

மறுநாள் வரப்போகும் மன்னரை வரவேற்க ஏற்பாடுகள் எல்லாம் சரியாகச் செய்யப்பட்டனவா என்பதை ஆய்வு செய்யத் துவங்கிய, பரப்பசுவாமி, இரவு உறங்கப் போவதற்கு முன், ஆலோசனை அறையை ஆய்வு செய்ய வந்தார்.

புலிவேமு அமர இருந்த அரியாசனத்தின் மேலே அமைக்கப்பட்டிருந்த மலர்ப்பந்தல், அதன் நடுவே தொங்கும் தொம்பை தோரணம், அரியாசனத்தின் அருகே நிறுத்தப்பட்டிருக்கும் பெரிய அம்சமுக விளக்கு, அரியாசனத்தின் இரு பக்கங்களிலும் நிற்கும் கற்பீடங்களில் சிங்கமுக பொம்மை, அறையில் விரிக்கப்பட்ட இரத்தினக் கம்பளம் என்று அறை மிக ஆடம்பரமாகக் காட்சி அளித்தது. திருப்தியுடன் தலையசைத்த பரப்பசுவாமி, இந்த வரவேற்பை கண்டு மன்னன் மயங்கிப் போவான் என்கிற நிம்மதியுடன் உறங்கப் போனார்.

மறுநாள் குருவாரம் என்கிற வியாழன். பொன்னிற மஞ்சளை தனது கிரணத்தில் வாரி இறைத்தபடி சூரியன் உச்சி வானை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த நேரம். பரப்பசுவாமியின் மாளிகை பரபரப்புடன் காணப்பட்டது. வேத கோஷங்களும், வாத்தியங்களின் இசையும், மாலை போடுவதற்காக நின்ற யானையின் பிளிறலும் கேட்டுக்கொண்டிருக்க, தகதகத்த வெள்ளி குடத்தினில் பூரண கும்பத்தை அமைத்து, புலிவேமுவை வரவேற்கத் தயாராக நின்றனர், பரப்பசுவாமி குடும்பத்தினர்.

ஒத்தாடை [2] கிராமம் வழியாகத்தான் புலிவேமு அத்தியூருக்கு வரப் போகிறான் என்பதை அறிந்திருந்த, விஷ்ணுகுப்தன் காலையே ஒத்தாடைக்கு வந்து விட்டிருந்தான். ஒத்தாடை கிராம மக்கள், கைகளில் மங்கலப் பொருட்களுடன் மன்னன் புலிவேமுவை வரவேற்கக் காத்திருக்க, தோரணங்களையும், கோலமிடப்பட்ட பாதைகளையும் கொண்டு மன்னன் வரப்போகும் பாதையினை யூகித்தான், விஷ்ணு. தனது திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை அரங்கேற்றவே,

https://telegram.me/aedahamlibrary

விஷ்ணுகுப்தன் ஒத்தாடைக்கு வந்திருந்தான். மன்னன் வரும் பாதையில், ஆள் அரவமற்ற ஒரு தோப்பின் அருகே ஒரு கல்லின் மீது அமர்ந்தபடி, மன்னனின் வருகைக்காகக் காத்திருந்தான், விஷ்ணு.

சரியாக கதிரவன் உச்சி வானில் சஞ்சரித்து, இறங்குபாதையில் நுழைந்த வேளை தொலைவில் துந்துபி முழங்குவதும், தொடர்ந்து மத்தள சத்தமும் கேட்டது. புலிவேமு மன்னன் வந்து கொண்டிருக்கிறான்.

விஷ்ணுகுப்தன் பரபரத்தான். முதன்முறையாக தனது மதியின் கூர்மைக்கு ஒரு சோதனையை வைத்திருக்கிறான். தான் பெற்றிருப்பது நிறைமதியா, வளர்மதியா அல்லது குறைமதியா என்பது இவனது திட்டத்தின் வெற்றியினை பொறுத்தே உள்ளது. பட்டத்து யானையின் மீது கம்பீரமாக புலிவேமு பவனிவர, பின்பாக வந்த சிவிகையில் அவன் மனைவி ரத்னாங்கி வந்து கொண்டிருந்தாள். மன்னன் ஒத்தாடை கிராமத்தினுள் நுழைவதற்குள் தனது திட்டத்தினை செயல்படுத்திவிட வேண்டும் என்று விஷ்ணுகுப்தனின் மனக்குரல் கூறிக்கொண்டே இருந்தது. இதோ, யானை மீது அமர்ந்துள்ள புலிவேமு விஷ்ணுவின் கண்களில் பட்டுவிட்டான். இவன் அமர்ந்திருக்கும் கல்லினை நோக்கி ஊர்வலம் ஊர்ந்து கொண்டிருந்தது.

தந்தையின் மனக்கலக்கத்தைத் தீர்க்கவே, இம்மாதிரி விஷபரிட்சையினில் இறங்குகின்றான். மலர்ப்பந்தல் தொம்பையினுள் இவன் பதுக்கியிருந்த கட்டாரியை இவ்வேளையில் யாராவது கண்டிருந்தால், இவனது திட்டம் தவிடு பொடியாவதோடு, குடும்பத்தோடு இவனைச் சிறையில் தள்ளக்கூடும்.

"அத்திமலைத்தேவா! என் திட்டம் நிறைவேற நீதான் அருள வேண்டும். பேரருளாளன் அல்லவா நீ! உனது ரகசியத்தை காப்பதற்குத்தானே என் தந்தை தன்னையே வருத்திக் கொள்கிறார். அவர் துயரை நீக்கத்தானே நான் இத்தனை பிரயத்தனங்களையும் செய்கிறேன். உனக்காக அல்லவோ இதனைச் செய்கிறேன். எனக்கு வெற்றியைத் தா!" என்று தனக்குள் வேண்டியபடி யானை மீது அமர்ந்திருந்த மன்னனைப் பார்த்தான்.

தன்னை நாகக்கன்னி நாகசோமாவிற்கும், அஸ்வத்தாமாவிற்கும் பிறந்த புலிசோமன் வம்சத்தவன் என்று பெருமையுடன் கூறிக்கொண்டிருந்த புலிவேமு, யானையின் மீது கம்பீரமாக வீற்றிருந்தான். அவனது கம்பீரம், விஷ்ணுவை வியப்பில் ஆழ்த்தியது. விஷ்ணுகுப்தனுக்கும்

https://telegram.me/aedahamlibrary

அவனைப் போன்று ஒரு நாள் யானையின் மீது வீற்றிருந்து மக்கள் இருபுறமும் வாழ்த்து கோஷம் எழுப்ப ஊர்வலமாகப் போக வேண்டும் போன்று தோன்றியது. புலிவேமுவின் இடத்தில் தன்னை இருத்திப் பார்த்துக் கொண்டான்.

புலிவேமுவின் ஊர்வலம் விஷ்ணு அமர்ந்திருந்த தோப்பின் அருகே வந்தது. இனியும் தாமதிக்கக்கூடாது என்கிற உணர்வு உந்தித்தள்ள, மன்னனின் யானையை நோக்கிப் பாய்ந்தான், விஷ்ணு.

"மன்னா! ஆபத்து... ஆபத்து... மன்னா ஆபத்து!" என்று வீறிட்டு அலறியபடி இரு கைகளையும் வீசியபடி ஓடினான். திடீரென்று, ஒரு சிறுவன் அலறியபடி ஓடி வருவதைக் கண்டதும், காவலர்களும், அதிகாரிகளும் திகைத்தனர்.

வாத்தியக்காரர்களும் இசைப்பதை நிறுத்தினர்.

“ஆபத்து ஆபத்து... தொடர்ந்து செல்லாதீர்கள்” என கூவியபடி, தன் இரு கைகளையும் வீசிக்கொண்டு ஓடிவரும் அந்தச் சிறுவனை வியப்புடன் பார்த்தான், புலிவேமு. அவன் மனைவி ரத்னாங்கியும் தனது சிவிகையிலிருந்து தலையை மட்டும் வெளியே நீட்டி விஷ்ணுவைப் பார்த்தாள்.

“என்ன விஷயம் சிறுவனே. ஏன் இந்த பதற்றம்?” மன்னன் கேட்டான்.

“நான் தெரிவிக்கவுள்ள விஷயம் மிகவும் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடியது, மன்னா. தாங்கள் தொடர்ந்து பயணிப்பது ஆபத்து." குரலில் குழந்தைத்தனத்தை பிரதிபலிக்கச் செய்தான் விஷ்ணு.

உடனடியாக அதிகாரிகள் விஷ்ணுவை சூழ்ந்து கொண்டனர்.

"ஆபத்தா... என்ன ஆபத்து, சிறுவா?”

“அதனை மன்னரின் திருச்செவியில்தான் சாற்றுவேன்!” விஷ்ணு பிடிவாதமாகக் கூற, அதிகாரிகள் சங்கடத்துடன் மன்னனை பார்த்தனர்.

புலிவேமு விஷ்ணுவை அதிசயத்துடன் நோக்கினான். "அவனை விட்டு விலகுங்கள். அவன் என்னிடமே விஷயத்தை கூறட்டும்…!" சொல் சிறுவா!” புலிவேமு கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

“உங்கள் யானையின் காதுகளில் விஷயத்தை கூறிவிடுகிறேன் மன்னா! நீங்கள் உங்கள் யானையிடம் விஷயத்தை கேட்டுக் கொள்ளுங்கள். காரணம், உமது செவிகள், எனது எட்டாத தூரத்தில் உள்ளன." - சற்றே கேலியாக விஷ்ணு கூற, மன்னன் நகைத்து விட்டான்.

அந்த வேதிய சிறுவனின் அழகும், தீட்சணியமான பார்வையும், தேஜஸ் நிரம்பிய முகமும் மன்னனுக்கு எதையோ உணர்த்த தனது பாகனை நோக்கித் தலையசைத்தான். அந்த யானைப்பாகன் யானையின் பிடரியில் அங்குசத்தைக் கொண்டு திருக, யானை கால்களை மடித்துப் படுக்க, மன்னன் அதன் மீதிருந்து இறங்கினான்.

“இப்போது சொல், சிறுவா! என்ன நடந்தது கூறு?”

"அரசே! ரகசியம் பேச ஒரு காதும், ஒரு வாயும்தான் தேவை. மற்ற செவிகளுக்கும், வாய்களுக்கும் அங்கே வேலை இல்லை!” - விஷ்ணு சொல்ல, மன்னனின் பிரமிப்பு அதிகரித்தது. ஒரு வேதிய குல பாலகன், ஒரு ராஜதந்திரியின் சொற்களைப் பேசுகிறானே!

“சரி வா!” - என்ற புலிவேமு விஷ்ணுகுப்தனின் புஜத்தினை பற்றி அருகில் இருந்த தோப்பினுள் அவனை இட்டுச்சென்றான்.

“இப்போது சொல், சிறுவா! இது ஏகாந்தமான இடம்.! தொடர்ந்து பயணிப்பதால் என்ன ஆபத்து உள்ளது?” - புலிவேமு கேட்டான்.

"பெரும் ஆபத்து உள்ளது அரசே! உமது பட்டத்து யானையின் பெயர் என்ன?”

மன்னன் வியப்படைந்தான். “கஜகிரி என்பது அதன் பெயர்”

“மன்னா! பட்டத்து யானையான உங்கள் கஜகிரி தங்களை தற்போது அரசனாக சுமந்து அத்தியூர் சென்று கொண்டிருக்கிறது. ஆனால், தாங்கள் தொடர்ந்து பயணித்தால், கஜகிரி இதே மார்க்கத்தில் புதிய ஒரு அரசனை சுமந்து கொண்டு வேமுலம் திரும்பும்!”

விஷ்ணுகுப்தன் கீழ்கண்களால் மன்னனின் முகத்தை கூர்ந்து கவனித்தான்.

புலிவேமு அதிர்ந்தான்.

https://telegram.me/aedahamlibrary

“என்ன சொல்கிறாய்? உன் பெயர் என்ன?”

"அடியேனது பெயர் விஷ்ணுகுப்தன். அத்தியூரில் குருகுலம் நடத்தும் காஞ்சனகுப்தரின் மகன். அவரது குருகுலத்தில்தான், அத்தியூர் தலைவர் பரப்பசுவாமியின் மகன் சசாங்கனும் பயின்று வருகிறான். நேற்றைய தினம், அவனது மாளிகையில் நாங்கள் இருவரும் விளையாடிக் கொண்டிருந்தோம். நான் கள்வனாகவும், அவன் காவலனாகவும் நடித்தபடி விளையாடினோம். கள்வனாக நடித்த நான் ஒரு அறையில் பதுங்கியிருக்க, அவன் என்னைத் தேடினான். அப்போது அறையில் பதுங்கியிருந்த எனது செவிகளில், அந்த அறையில் தீட்டப்படும் சதித்திட்டத்தை செவியுற நேர்ந்தது. பரப்பசுவாமி, அவரது தாய் ஹைமாதேவி மற்றும் சிலர் தங்களை கொல்ல திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். தோழி ஐராவதி என்பவள், மன்னன் புலிவேமுவை அத்தியூரானை தரிசிக்க வைத்து, பிறகு அவரை ஆலோசனை அறையில் வைத்து கொல்லுங்கள்! அப்போதுதான் தங்களால் மன்னராக முடியும் என்று பரப்பசுவாமியிடம் கூறுவதைக் கேட்டேன்!"

விஷ்ணுகுப்தன் தனது கற்பனை குதிரையை மிக நேர்த்தியாக செலுத்த, மன்னன் உறைந்து போனான்.

"உண்மையாகவா சொல்கிறாய்! நீ சொல்வதற்கு ஆதாரம்?” புலிவேமுவின் குரலில் சினம் கொப்புளித்தது.

"ஆதாரமின்றி, போர்க்களத்தில் மண்ணைத் தொட்டிராத உங்கள் கஜகிரியின் தேகத்தை, இந்த புழுதி படிந்த சாலையில், அதன் கால்களை மடிய வைத்து, அதன் தேகத்தை மண்ணில் புரள வைத்து, அதன் மீது இருந்து உங்களை இறக்கி, உங்கள் செவியினுள் கொடிய சொற்களைப் பாய்ச்சுவேனா?”

அவர்களுடைய சூழ்ச்சிதான் எனக்கு ஆதாரம், மன்னா! என்னிடம் ஆதாரம் உள்ளது. ஆனால், தாங்களே தங்களது திருக்கண்களால் அதனைக் காண்பேன் என்கிற உத்தரவாதத்தை தந்தால்தான் ஆதாரத்தைக் காட்டுவேன். காரணம், பரப்பசுவாமியின் அதிகாரிகளையோ, தங்களது அதிகாரிகளையோ நான் நம்ப மாட்டேன். பரப்பசுவாமியின் மாளிகையில் தீட்டப்பட்ட சதித்திட்டத்திற்கு வேமுலத்திலும் ஆசி வழங்கப்பட்டு உள்ளதாக நான் அறிகிறேன்...!” துணிவின் மொத்த உருவமாக, விஷ்ணுகுப்தன் புலிவேமுவுக்கு வலை விரித்து நன்றாகவே அவனை குழப்பினான். புலிவேமு தனது

https://telegram.me/aedahamlibrary

அதிகாரிகளை சந்தேகத்துடன் பார்த்தான்.

“சரி விஷ்ணுகுப்தா! நீ ஆதாரத்தை கூறு! நானே அந்த சூழ்ச்சியை கண்டறிகிறேன்.”- புலிவேமு கூற, விஷ்ணு அவனது செவிகளை அண்ணாந்து பார்த்தான்.

"மன்னா! உமது மகுடமும் அதில் பிணைக்கப்பட்டுள்ள கர்ண பத்திரங்களும் [3] உங்கள் செவிகளை மறைக்கின்றன. பெரும்பாலான உண்மைகளை ஒரு மன்னன் அறியாமல் போவதற்கு காரணமே, செவிகளை மறைக்கும் இந்த ஆபரணங்கள் தான். அவற்றை நீக்குங்கள்." - தன்னம்பிக்கையுடன் விஷ்ணுகுப்தன் கூற, மன்னனின் கைகள் தன்னையும் அறியாமல், தனது மகுடத்தையும், கர்ண பத்திரங்களையும் கழற்றின. தனது வாயை மன்னனின் செவியருகே எடுத்துச் சென்றான் விஷ்ணு.

"பரப்பசுவாமியின் மாளிகை ஆலோசனைக் கூடத்தில், மன்னர் அமர இருந்த அரியாசனத்தின் மீதாக அமைக்கப்பட்ட மலர்ப்பந்தலின் மையத்தில் தொங்கும் அலங்கார தொம்பையின் உள்ளே ஒரு கட்டாரி பதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆலோசனையின்போது, மேலே கட்டாரியைப் பிணைக்கும் கயிற்றினை துண்டித்தால், கட்டாரி மன்னனின் தலையில் விழும். அப்படி தாங்கள் தப்பித்தாலும், அங்கே குழுமியுள்ள அதிகாரிகள் தங்களை வெட்டி வீழ்த்தி, பரப்பசுவாமியை மன்னனாக அறிவிப்பார்கள். பிறகு கஜகிரியின் மீது அவர் மன்னனாக வேமுலம் திரும்புவார்!”

தீட்டப்படாத ஒரு சதியினை, தனது கூர்மையான புத்தியால் தீட்டினான், விஷ்ணு. அவனது புத்திக்கூர்மை மன்னனது சிந்தையை கிழித்து கந்தலாக்கியது. விஷ்ணு தனது செவிகளை எட்டுவதற்கு வசதியாக நிலத்தில் முழங்கால்களை ஊன்றி அமர்ந்திருந்த புலிவேமு, முகம் சிவக்க ஆவேசத்துடன் எழுந்ததைப் பார்த்ததுமே, விஷ்ணுவுக்குத் தெரிந்து போனது, தனது திட்டம் பலிதம் ஆகும் என்பது.

“அந்த பரப்பசுவாமியை என்ன செய்கிறேன் பார்!” - புலிவேமு கர்ஜித்தான்.

தீ மூட்டியாகி விட்டது. அதை ஊதி விட வேண்டும் அல்லவா? தீயை ஊதி விடுவது, ஓமம் வளர்க்கும் வேதிய பாலகனுக்கு ஒரு பெரிய காரியமா என்ன?

https://telegram.me/aedahamlibrary

"மன்னா! எப்போதும் ஒரு சூழ்ச்சியை முறியடிக்க சூழ்ச்சிக்காரர்களை துவக்கத்திலேயே தண்டிக்கக்கூடாது. சூழ்ச்சிக்காரர்கள் தண்டிக்கப்பட்டாலும், சூழ்ச்சி அப்படியே இருக்கும். எனவே, அவர்கள் போக்கிலேயே சென்று, ஒன்றும் அறியாதவரைப் போன்று, கடைசித் தருணத்தில் கையும் களவுமாகப் பிடித்து சூழ்ச்சியை அம்பலப்படுத்தி, அதனை முறியடிக்க வேண்டும். அப்படி அவர்கள் எதிர்பார்க்காத தருணத்தில் அவர்களை சிக்க வைத்தால்தான், சரித்திரத்தின் சுவடிகளில், சூழ்ச்சியை முறியடித்த புலிவேமு மன்னன் என்று புகழப்படுவீர்கள். சூழ்ச்சியை முறியடிக்காமல், அப்படியே நீங்கள் பரப்பசுவாமியை தண்டித்தால், எதற்காக மன்னர் ஊர்த் தலைவர் பரப்பனை தண்டித்தார் என்பது தெரியாமல் போகும். அத்தியூரில் செல்வாக்கு பெற்ற தலைவனாக அவன் விளங்குவதால், பொறாமையில் அவனை தாங்கள் தண்டித்துவிட்டதாக மக்கள் பேசுவார்கள். மக்கள் பேசுவதைத்தான் நாளைய சரித்திரம் பேசும். உள்ளே நடந்த சதி தெரியாமல் போகும். தங்களது புகழுக்கு இந்த களங்கம் நேரக்கூடாது."- விஷ்ணு கூறினான்.

ஈட்டியின் கூர்மை, வாளின் வேகம், இலக்கை நோக்கி பாயும் ஒரு அம்பின் குறி அனைத்துமே அந்த வேதியச் சிறுவனின் சிந்தையில் பிரதிபலிப்பதை உணர்ந்த புலிவேமு, அந்தத் தருணத்தில் இந்தக் கூரிய அறிவு படைத்த சிறுவனை தன்னுடனே வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் தோன்றி விட்டது.

"என்னுடனே வந்துவிடு, சிறுவா. எனது அரண்மனையில் வசிக்கலாம். உனது அறிவுத்திறன் எனது நாட்டிற்கு பயன்படட்டும்." - தனது உள்ளக் கிடக்கையை உடனே விஷ்ணுவிடம் சொன்னான் மன்னன்.

"மன்னா! பரப்பசுவாமி எனது நெருங்கிய சிநேகிதன் சசாங்கவர்மனின் தந்தை ஆவார். அவனுடன் விளையாடும் போதுதான் இந்த சதியை நான் கேட்க நேர்ந்தது. ஒருவகையில், அவன் என்னை விளையாட தனது மாளிகைக்கு அழைக்கவில்லை என்றால், இந்த சதியே அம்பலம் ஆகி இருக்காது. அவன் குடும்பத்தை நான்தான் காட்டிக் கொடுத்தேன் என்பது தெரிந்தால், அவனது நட்பினை நான் இழப்பேன். காட்டிக் கொடுத்தவன் என்கிற அபவாதத்திற்கு ஆளாக நான் விரும்பவில்லை. எனவே, நான் இங்கேயே தங்களுக்காகக் காத்திருக்கிறேன். திரும்பி தாங்கள் வேமுலம் செல்லும் போது, தங்களுடன் வருகிறேன்!"

தீயை மூட்டி, அதனை ஊதிவிட்டு, நெய்யும் வார்த்தாகி விட்டது.

https://telegram.me/aedahamlibrary

இப்போது தீ கொழுந்து விட்டு எரியப்போகும் வேளையில் அவன் எதற்கு அங்கே இருக்க வேண்டும்?

புலிவேமு விஷ்ணுவை அன்புடன் பார்த்தான்.

"நட்புக்கு துரோகம் செய்யக்கூடாது என்று ஒருபுறமும், அரசனுக்கு எதிராக சூழ்ச்சி நடந்துவிடக்கூடாது என்கிற துடிப்பு மறுபுறமும், இந்த இருவித உணர்வுகளுக்கிடையே நீ சிக்கித் திணறுவது எனக்குத் தெரிகிறது.

“கவலைபடாதே! நீ இங்கேயே இரு. வேமுலம் செல்லும்போது நான் உன்னை அழைத்துச் செல்கிறேன். உனது வாழ்வை ஒரு உன்னத நிலைக்கு எடுத்துச் செல்கிறேன்" என்று கூறியவன், மகுடத்தை அணிந்தபடி வேகமாக தனது யானையை நோக்கிச் சென்றான். சிறுவனுடன் சென்ற மன்னன், கோபமாக திரும்பி வருவதைக் கண்ட ரதகஜதுரக பதாதிகள், மன்னனிடம் அந்தச் சிறுவன் என்ன சொல்லியிருக்கக் கூடும் என்று யோசிக்கத் துவங்கினர்.

“என்னை உன்னத நிலைக்கு எடுத்துச்செல்ல, எனது அத்திமலைத்தேவன் இருக்கிறான், புலிவேமு! உன்னைப் போன்ற மதிகெட்ட அரசர்கள் இருக்கும்வரை இந்த உலகம் உருப்படாது." தன்னுள் நகைத்தபடி, விஷ்ணு நினைத்தான்.

பரப்பசுவாமியும், அவரது குடும்பமும் படப்போகும் பாட்டினை கற்பனையிலேயே கண்டு ரசித்தான், விஷ்ணு. அவர்களது ஆணவத்திற்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான். அரச குடும்பத்தின் சிவிகையில் அன்றாடம் காய்ச்சி எப்படி வரலாம் என்று கேட்டாள் அல்லவா, அவரது தாய் ஹைமாதேவி. இப்போது அவர்களை அன்றாடம் காய்ச்சிகளாக மாற்றி விட்டான், இவன்.

புத்திக்கூர்மை இருந்தால் போதும். ஒரு அன்றாடம் காய்ச்சியை மன்னன் ஆக ஆக்கலாம். ஒரு மன்னனை அன்றாடம் காய்ச்சியாக மாற்றலாம். இதென்ன பெரிய விஷயம்? ஏன்? எனது அறிவுத்திறனுக்கு நானே கூட ஒரு மன்னன் ஆகலாம். ஒரு அரசன் எப்படி இருக்க வேண்டும் என்பதை, கனவுலகு ராஜ்யம் ஒன்றை நிறுவி, அதில் அன்றாடம் அரசனாக பரிபாலனம் செய்து கொண்டுதானே வருகிறேன். - தனக்குள் யோசித்தபடி நடந்தான், விஷ்ணுகுப்தன்.

https://telegram.me/aedahamlibrary

ஒத்தாடை கிராமத்து மக்கள் கொடுத்த உற்சாக வரவேற்பிலோ, பின்னர் அத்தியூரில் பரப்பசுவாமி அளித்த ஆடம்பர வரவேற்பிலோ புலிவேமுவின் மனம் ஒன்றவில்லை. ஆலோசனை அறையின் தொம்பையினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கட்டாரியைப் பற்றியே அவன் மனம் நினைத்துக்கொண்டு இருந்தது.

கஜகிரி யானையின் மீதிருந்து இறங்கி, மாளிகையின் படிகளில் ஏறியவன் அருகே நின்ற பரப்பசுவாமியை உறுத்துப்பார்த்தான். மன்னனுக்கு அவர் முகத்தைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது. இவனுடைய தாய் நாகலட்சாங்கியின் தங்கை ஹைமாவதியின் புதல்வன் தான் இந்த பரப்பசுவாமி. பாசமுள்ள சிற்றன்னையின் மகனாயிற்றே என்று அத்தியூர் தலைமை பதவியை ஈந்ததற்கு நல்ல கைமாற்றினை செய்கின்றனர்.

"பரப்பசுவாமி! எனது திட்டத்தில் சிறு மாற்றம். ஒரு முக்கிய தகவல் வந்துள்ளது. உன் குடும்பத்தாரும், மற்றவர்களும் மட்டும் என்னுடன் ஆலோசனைக் கூடத்திற்கு வாருங்கள். எங்கே இருக்கிறது உனது ஆலோசனைக் கூடம்?" - என்று கேட்டபடி விறுவிறு என்று புலிவேமு நடக்க, குழப்பத்துடன், பரப்பசுவாமியும், அவர் குடும்பத்தாரும், முக்கிய அதிகாரிகளும் மன்னனைப் பின்தொடர்ந்தனர்.

பரப்பசுவாமி மிகவும் தளர்ந்து போனார். மன்னனுக்கு தான் அளித்த வரவேற்பினில் ஏதாகிலும் குறையோ? புலிவேமுவின் குரலில் ஏனோ பிசிறு தட்டுகின்றதே. என்னிடம் எப்போதும் அன்பாகத்தானே பேசுவார்.

அனைவரும் ஆலோசனை மண்டபத்தில் குழுமினர். அறை முழுவதையும் நோட்டம் விட்டான், புலிவேமு. வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த ஆயுதங்களையும் பார்த்தான். அருகே நின்ற அதிகாரிகளையும் பார்த்தான். ஆக, அந்த விஷ்ணுகுப்தன் கூறியது போலவேதான் உள்ளது. மெதுவாக தலையை உயர்த்தி, அரியாசனத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த மலர்ப்பந்தலையும், அதன் நடுவே ஊசலாடிக்கொண்டிருந்த அந்த நீண்ட தொம்பை தோரணத்தையும் பார்த்தான்.

"அலங்காரம் மிக பிரமாதம்!" எலியை கைப்பற்றிய பூனை அதனை வைத்து விளையாடுவது போல், பரப்பசுவாமியைப் பார்த்து கேலியுடன் சொன்னான், புலிவேமு.

https://telegram.me/aedahamlibrary

"அப்பாடி...! மன்னனது மனம் சகஜ நிலைக்கு வருகிறது போலும்.!" என்று மனதிற்குள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார், பரப்பன்.

அடுத்து மன்னன் கூறியது, பரப்பசுவாமியை திடுக்கிடச் செய்தது.

“பரப்பா! இந்த அரியாசனத்தில் அமரப்பா!”

பதைபதைப்புடன் மன்னனை ஏறிட்டார், பரப்பசுவாமி. “மன்னா... என்ன வார்த்தைகளைக் கூறி விட்டீர். தங்களுக்காக போடப்பட்ட இருக்கை!"

பரப்பசுவாமி ஒருவித கிலியுடன் தனது அண்ணனைப் பார்த்தார்...

"பரவாயில்லை பரப்பா! அமர்ந்து கொள். நீ ஆசைப்பட்டதைத்தானே செய்யச்சொல்கிறேன்!" புலிவேமு காட்டத்துடன் கூற, பரப்பனுக்கு வியர்த்துக் கொட்டியது.

“வேண்டாம் அண்ணா! தங்கள் பிரிய தம்பியாக உமது மனத்து இருக்கையில் அமர்ந்தால் போதும்!" சிரிக்க முயன்றார், பரப்பசுவாமி. அவரது சிரிப்பில் உயிர் இல்லை என்பது அவருக்கே புரிந்தது. தான் அத்தியூருக்கு வரப்போவதாக ஓலை அனுப்பியபோது கூட, மிக அன்பாக மடல் வரைந்திருந்தாரே. இப்போது ஏன் இப்படிப் பேசுகிறார்.

"அப்படி என்கிறாயா? நீ செய்திருக்கும் அலங்காரங்களைப் போலவே உனது அலங்காரச் சொற்களும் மிக நேர்த்தியாக உள்ளன. நானாகவே அரியணையை உனக்குக் கொடுத்து விடலாம் என்று பார்த்தேன். என் உயிர் தப்புமல்லவா?” என்ற புலிவேமு அருகே நின்ற தனது மெய்க்காவலன் வசந்தபாலனை அழைத்தான்.

“வசந்தபாலா! இந்த மலர்ப்பந்தல் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தாயா? அந்த தொம்பையைப் பார். அதனுள் சரித்திரத்தை மாற்றி அமைக்கக்கூடிய எழுத்தாணி ஏதாவது பதுக்கப்பட்டிருகிறதா என்பதை பார்!" - குரலில் வெறுப்பும், துவேஷமும் மண்டிக் கிடக்க, புலிவேமு அண்ணாந்து அந்த தொம்பையினை பார்த்துக்கொண்டே இருந்தான்

வசந்தபாலன் தனது வாளை எடுத்து மலர்ப்பந்தலில் தொம்பை பிணைக்கப்பட்டிருந்த பகுதியை தனது வாளால் உடைக்க, தொம்பை பெரிய சத்தத்துடன் நிலத்தில் விழுந்தது. தொம்பையில்

https://telegram.me/aedahamlibrary

பதுக்கப்பட்டிருந்த கட்டாரியை எடுத்து மன்னனிடம் காட்டினான், வசந்தபாலன்.

“ஆ!” - என்கிற கூக்குரல்கள் அறை முழுவதும் எதிரொலித்தன.

“அண்ணா! இதற்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை!” - அலறினார் பரப்பசுவாமி.

மன்னன் அவர் கூறியதை பொருட்படுத்தாமல் மெய்க்காவலனைப் பார்த்தான்.

"வசந்தபாலா! பரப்பசுவாமியையும், அவனது குடும்பத்தினரையும், சதியில் பங்கேற்ற அதிகாரிகளையும் உடனே கைது செய்!" - என்று சொன்னதுமே, காவலர்கள் பரப்பனின் குடும்பத்தை சூழ்ந்து கொண்டனர்.

“பிறகு இன்னும் ஒரு வேலை. ஐராவதி என்பவள் எவள்?” - மன்னன் ஐராவதியைப் பற்றி கேட்க, சுபர்ணா திடுக்கிட்டாள்.

“எங்களது பணிப்பெண்!” - சுபர்ணா கூறினாள்.

அதிகாரி ஒருவர் சென்று ஐராவதியை அழைத்து வர, அவள் நடுங்கியபடி வந்தாள்.

“நீதான் ஐராவதியா? என்னை அத்தியூர் கோவிலில் தரிசனம் செய்ய வேண்டும் என்கிற யோசனையை கூறியது நீதானே...?" - மன்னன் கோபத்துடன் கேட்டான்.

"ஆம் அரசே!”

"பலே. முதலில் அத்தியூருக்கு அனுப்பி, பிறகு கத்தியூர் வழியாக முக்தியூர் அனுப்ப திட்டம் தந்தவள் நீதானா.! இவளையும் கைது செய்யுங்கள்!" புலிவேமு உத்தரவிட, காவலர்கள் ஐராவதியையும் தள்ளிக்கொண்டு போனார்கள்.

“அரியணை அருகே அன்ன முக விளக்கு. இரு பக்கமும் கற்பீடங்கள். அதன் மீது சிங்கமுகச் சிற்பங்கள். உயரே மலர்ப்பந்தல். நடுவே ஊசலாடும் தொம்பை. அதனுள் உயிர் வாங்கும் கோடரி. பிரமாதம் உங்கள் ஜோடனை." புலிவேமு உக்கிரத்துடன் கூற, சரியாக,

https://telegram.me/aedahamlibrary

ஐராவதியின் செவிகளில் சிங்கமுகச் சிற்பங்கள் என்று மன்னர் கூறியது எதையோ உணர்த்தியது.

'தாமரை ரேகைகள் கொண்ட இந்த பூக்கரங்களால், கற் சிற்பங்களை சுமக்கலாமோ. என்னிடம் தாருங்கள். நான் அவற்றை வைத்துவிட்டு, ஒளிந்து கொள்கிறேன்!' விஷ்ணுகுப்தனின் குரல் அவள் செவிகளில் ஒலித்தது.

ஆனால் அவன் தான் நந்தவனத்தில் பதுங்கி இருந்தானே! சசாங்கவர்மனிடம் சிக்கிக் கொண்டானே. அந்தச் சிறுவனுக்கும், மன்னன் குறிப்பிடும் சதிக்கும் ஏதாகிலும் தொடர்பு உள்ளதா? அந்த சந்தேகமும் மன்னன் அடுத்துக் கூறிய வார்த்தைகளால் தீர்ந்து போனது.

"நல்ல வேளை! அந்த பிராமணச் சிறுவன் விஷ்ணுகுப்தன் கூறவில்லை என்றால் இந்த கிராதகர்கள் என்னைக் கொன்று விட்டிருப்பார்கள்!" புலிவேமு இவ்வாறு சொன்னதும், ஐராவதிக்கு சுவாசமே நின்று விட்டது போன்று ஆகி விட்டது. அந்த விஷ்ணுகுப்தனின் லீலைதான் இது என்பது இப்போது ஊர்ஜிதமாகி விட்டது.

பெண்கள் எல்லோரையும் ஒரே அறையில் போட்டு அடைக்க, தனது சந்தேகத்தை சுபர்ணாவிடம் கூறினாள், ஐராவதி.

"அம்மா. சசாங்கவர்மனின் தோழன் அந்த விஷ்ணுகுப்தன், ஆலோசனை அறையினுள் செல்வதை பார்த்தேன். அவன் ஏதாவது சதியை செய்திருக்கக்கூடும்?"

“அடப்பாவி! நான் அப்போதே சொன்னேனே. கேட்டாயா?" ஹைமாவதி அலறினாள்.

“உடனே மன்னரிடம் உண்மையைக் கூறி, நம்மை வெளிக்கொண்டு வர வழி செய்ய வேண்டும்...!” சுபர்ணா கூறினாள்.

ஆனால் காலம் கடந்துவிட்டது. புலிவேமுவின் மனைவி ரத்னாங்கியின் சகோதரன், சுபாகரனை அத்தியூர் தலைவராக அறிவித்து விட்டான், புலிவேமு. அத்திமலைத்தேவனை தரிசிக்கும் திட்டத்தையும் கைவிட்டான், மன்னன்.

"பரப்பசுவாமியையும் அவன் குடும்பத்தையும் வேமுல சிறைக்கு

https://telegram.me/aedahamlibrary

மாற்றுங்கள்!" - என்கிற உத்தரவையும் செய்துவிட்டான் புலிவேமு.

சுபர்ணா வேமுலத்திற்குக் கிளம்புவதற்கு முன்பாக, தன்னை வந்து சந்தித்த தனது சகோதரன் ஆதர்ஷனிடம் கண்ணீர் உகுத்தாள்.

"அண்ணா! எல்லாம் அந்த குருகுலம் நடத்தும் காஞ்சனகுப்தரின் குடும்பம் செய்த வேலை. தன் மகனைக் கொண்டு ஏதோ மந்திரம் செய்து, எங்களை சதியில் சிக்க வைத்துவிட்டனர். என் மகன் சசாங்கனை பார்த்துக்கொள்."

ஆதர்ஷன் தனது தங்கையை தேற்றினான். “நீ வருத்தப்படாதே. அந்தக் குடும்பத்தை ஒழித்து, நீங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்கிறேன்" என்று சொல்ல, நம்பிக்கையுடன் கூண்டு வண்டியில் ஏறினாள், சுபர்ணா.

புலிவேமு மீண்டும் வேமுலம் திரும்பியபோது, அவன் பரிவாரங்களின் இறுதியில் கூண்டு வண்டியில் அடைக்கப்பட்ட பரப்பசுவாமியும், அவன் குடும்பத்தினரும், முக்கிய அதிகாரிகளும், மன்னனுடன் பயணித்துக்கொண்டிருந்தனர், கைதிகளாக.

சிவிகையினில் ஏறிய குற்றத்திற்காக, தன்னை அவமதித்த ஹைமாவதி கூண்டு வண்டியில் போகும் அழகை பார்த்து ரசிப்பதற்காக, மன்னரை வழியனுப்ப நின்ற மக்கள் கூட்டத்தின் இடையே விஷ்ணுகுப்தனும் நின்றான்.

மன்னனின் மனம் தனக்காக ஒத்தாடை எல்லையில் தோப்பின் அருகே காத்திருக்கும் வேதியச் சிறுவனைச் சுற்றி மிதந்துகொண்டிருக்க, அந்தச் சிறுவன் ஒரு மூலையில் மறைந்தபடி தன்னை உற்றுநோக்கிக் கொண்டிருப்பதை புலிவேமு அறியவில்லை.

விஷ்ணுகுப்தன் நின்றிருந்த பகுதியை, அந்த கூண்டுவண்டி அடைந்தபோது, உள்ளே இருந்த மூன்று பெண்களின் பார்வைகளும் அவன் மீது பதிந்தன.

"அதோ... சதிகாரன்... அவன்தான் சதிகாரன்... பிடியுங்கள் பிடியுங்கள்...”

அந்தப் பெண்களின் கூப்பாடுகளை யாரும் பொருட்படுத்தவில்லை. கூண்டு வண்டி தொடர்ந்து போக, வேறுவழியின்றி அந்தப் பெண்கள்

https://telegram.me/aedahamlibrary

விஷ்ணுவை சபிக்கத் துவங்கினர்.

“என் பிள்ளையை என்னிடம் இருந்து பிரித்தது போன்று, நீயும் உன் பெற்றோர்களைப் பிரிந்து தவிப்பாய். எங்களை பழிதீர்த்த நீ நன்றாக அனுபவிப்பாய்!” ஹைமாவதி அலறினாள்.

விஷ்ணுகுப்தனின் முகத்தினில் எவ்விதச் சலனமும் இல்லை. தனது முதல் சோதனை பெருத்த வெற்றியை தந்து விட்டது. இவ்வளவுதானா அரசியல்! ஒரு அன்றாடம் காய்ச்சியால் இவ்வளவு திறமையுடன் செயல்பட முடியும் என்றால், ஒரு அன்றாடம் காய்ச்சி பெரிய சாம்ராஜ்யத்தையே அமைத்து விடலாமே. ஒரு மன்னனாக இருப்பதைவிட, ஒரு அன்றாடம் காய்ச்சியாக இருப்பதே நலம் போல் இருக்கிறதே.

ஒத்தாடை எல்லையில் இருந்த தோப்பினை அடைந்த புலிவேமு திகைத்தான். தனக்காகக் காத்திருப்பேன் என்று சொன்ன அந்த பிராமணச் சிறுவனை அவன் அமர்ந்திருந்த இடத்தில் காணவில்லை. காவலர்கள் அந்தச் சிறுவனைத் தேடி சலித்துப்போனார்கள். ஒத்தாடை ஈசன்தான் பிராமணச் சிறுவன் வடிவில் வந்து தன் உயிரைக் காப்பாற்றினான், என்கிற நினைப்பினில் புலிவேமு தொடர்ந்து வேமுலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

[1] கோவில்களிலும், தேர்களிலும் அலங்காரத்திற்கு கட்டப்படும் துணியினால் நெய்யப்பட்ட தூண்களின் பெயர் தொம்பை.

[2] ஒத்தாடை கிராமப்பகுதிதான் தற்போதைய பெரிய காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தை சுற்றியுள்ள பகுதி. அம்பரம் என்றால் துணி. திகம்பரம் என்றால் நிர்வாணம். ஏகாம்பரம் என்றால் ஒற்றைத்துணியை தரித்தவன் என்பது பொருள். ஏகாம்பரர் ஆலயம் இருந்த கிராமத்தை அப்போது ஒத்தாடையான் கிராமம் என்று அழைத்தனர். இன்றும் ஆதி காமாட்சி ஆலயத்தின் அருகே ஒத்தாடை தெரு என்று ஒரு தெரு உள்ளது.

[3] கர்ண பத்திரம் என்பது காதுகளை மூடும் ஆபரணம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 4. அமரேந்திரியின் அலறல்

புஷ்பபுர அரண்மனை அடங்கிவிட்டது. ராணி பத்மாங்கி உறங்கப்போவதற்கு முன்பாக தனது குழந்தைகள் தூங்கிவிட்டனவா என்பதைப் பார்த்து விட்டு, பிறகே தங்களது சயன அறைக்குச் செல்லும் வழக்கத்தை கொண்டிருந்தாள். வழக்கம்போல, மகன் பிபத்த நந்தனும், துர்தராவும் உறங்கி விட்டனரா என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்காக, அவர்களது அறையை நோக்கி நடந்தாள். குழந்தைகளின் தாதி அமரேந்திரி பத்மாங்கிக்காகக் காத்திருந்தாள்.

"பிபத்தனும், துர்தராவும், பால் அருந்தினரா?" ராணி கேட்க, அமரேந்திரி தலையசைத்தாள்.

"பால் அருந்தி உடனே படுத்து விட்டார்கள். பிபத்தர் தங்கையை தான் தான் உறங்க வைப்பேன் என்று பிடிவாதம் செய்து அவள் தலையை வருடிக்கொண்டே இருந்தார். அவள் உறங்கியபிறகே தான் உறங்கச் சென்றார்" அமரேந்திரி சிரித்தாள்.

பத்மாங்கி அதைக்கேட்டுப் புன்முறுவலுடன், உறங்கிக்கொண்டிருக்கும் குழந்தைகளின் உச்சந்தலையில் தனது இதழ்களைப் பதித்து விட்டு, அந்த அறையை விட்டு வெளியேறி, மன்னரின் சயன அறையை நோக்கி நடந்தாள்.

நடுநிசி -

தானநந்தாவும், பத்மாங்கியும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். குழந்தைகளின் அறையில் அமரேந்திரி துர்தராவின் தொட்டிலின் அருகாமையில் ஒரு கம்பளத்தை விரித்து, அதில் படுத்துக் கொண்டிருந்தாள். தொட்டிலில் மணிகள் கட்டப்பட்டிருந்தன. குழந்தை விழித்துக்கொண்டு காலை உதைத்துக்கொண்டு அழுதால், மணிகளின் கிண்கிணி ஒலியினில் தாதி விழித்துக் கொள்வதற்காக இந்த ஏற்பாடு.

ஏனோ அன்று அமரேந்திரிக்கு நல்ல உறக்கம் வந்தது. ஆனால் ஆழ்ந்த உறக்கத்திற்குச் செல்லக்கூடாது என்பதற்காக, அவ்வப்போது கண்களை மூடியும், திறப்பதுமாக இருந்தாள். வெளியே இருள் முழுவதுமாக ஆக்கிரமித்து இருக்க, அறையினுள் ஒளிர்ந்து கொண்டிருந்த ஒன்றிரண்டு விளக்குகளும், சாளரத்தின் வழியாக வீசிய

https://telegram.me/aedahamlibrary

ஈரக்காற்றினில் இப்படியும் அப்படியுமாக படபடத்துக்கொண்டு, அறையில் நிழல்களை உருவாக்கி அவற்றை நர்த்தனமாடச் செய்துகொண்டிருந்தன. எப்போதாவது அமரேந்திரி தனது கண்களைத் திறந்தால் அறையில் இருக்கும் பூச்சாடி அல்லது யானை, குதிரை பொம்மைகளின் பிம்பங்களோ புலப்படும்.

அமைதியை பூரணமாகத் தவழ விட்டுக்கொண்டிருந்த அந்த நடுநிசியில், திடீரென்று வெளியே இருந்த மரம் ஒன்றில் அமர்ந்திருந்த இரவு பட்சி ஒன்று கேவுவது போன்று குரல் கொடுக்க, சடாரென்று தனது கண்களைத் திறந்தாள், அமரேந்திரி.

பறவையின் கூவலில் குழந்தைகளின் உறக்கம் கலைந்து விடப்போகிறதே என்கிற கவலையில் தனது தலையை உயர்த்தி அண்ணாந்து தொட்டிலை கவனித்தாள். நல்ல காலம். தொட்டில் மணிகள் ஒலிக்கவில்லை. துர்தரா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்.

மீண்டும் கண்களை மூடி, செவிகளை கூர்மையாக்கியபடி தலையணையின் மீது தலையைப் பதித்தாள்.

க்ளங். ---

மெல்லிய சிலம்பொலி எழ, கண்களைத் திறந்தாள், அமரேந்த்ரி. துர்தரா விழித்துக்கொண்டு விட்டாளா என்ன?

க்ளங்... க்ளங்...

இப்போது, தொடர்ந்து சிலம்பொலிகள் கேட்க, தலையை உயர்த்தாமல் தன்னைச் சுற்றி பார்த்தாள்.

திடீரென்று -

துர்தராவின் தொட்டிலின் அருகே, நெடிய, ஆஜானுபாகுவான உருவம் ஒன்று குனிந்து உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை நோட்டம் விட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு அவளது வாய் உலர்ந்து போனது. கலவரத்துடன் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தவள், வாயைத் திறந்து அலறுவதற்கு முயன்ற போது, அந்த உருவம் தனது சுட்டு விரலை அவள் முகத்திற்கு நேராக நீட்ட, அவளால் குரல் கொடுக்க முடியவில்லை. குரல் தொண்டைக் குழியிலேயே சிக்கிக்கொண்டு விட்டது.

https://telegram.me/aedahamlibrary

சிரசில் பெரிய கொண்டை! பலமான உடல்கட்டு. உடல் முழுவதும் சுடலைப்பொடி பூசப்பட்டிருக்க, மார்பில் அடுக்கடுக்காக ருத்திராட்சங்கள். கால்களில் சிலம்பு, இடையில் புலித்தோல் என்று காணப்பட்ட அந்த உருவத்தை கூர்ந்து கவனித்ததும், அமரேந்திரிக்குப் புரிந்து விட்டது. வந்திருப்பது ஒரு சிவயோகி.

“பெண்ணே! அச்சம் தவிர்! நீ சென்று மன்னனையும், அவன் மனையாளையும் கையுடன் அழைத்து வா. ஆர்ப்பாட்டம் செய்து அனைவரின் உறக்கத்தையும் கலைக்காமல், அரச தம்பதியரை மட்டும் இங்கே அழைத்து வா. அகோரியான நான், நடுசாம பூசையினை செய்துவிட்டு வந்திருக்கிறேன். பூஜையின் தாக்கம் மறைவதற்குள், மன்னனைச் சந்திக்க வேண்டும்!" கணீரென்ற குரலில் கூற, அமரேந்திரி தயங்கினாள்.

அகோரியாயிற்றே! அரச குழந்தைகளை கடத்தி பலி தருபவர்கள் ஆயிற்றே! இவள் அப்பால் அகன்றதும், குழந்தைகளைக் கடத்திச் சென்று விட்டால்?

அமரேந்திரி தயங்க, அவளது மனவோட்டத்தினை அறிந்தவராக, அந்த சிவயோகி சிரித்தார்.

"கவலைப்படாதே! அரசனின் குழந்தைகளைக் காப்பதற்கே வந்திருக்கிறேன். பலி கொடுப்பதற்கல்ல...!” - சிவயோகி கூற, சற்றே நிம்மதியடைந்த அமரேந்திரி மன்னனின் சயன அறையை நோக்கிச் சென்றாள்.

மன்னனின் சயன அறை இருந்த மண்டபத்தில் குறுக்கும் நெடுக்குமாக இரு காவலர்கள் உலாவிக் கொண்டிருக்க, உறக்க விழிகளுடன் அங்கே வந்த அமரேந்திரியை வியப்புடன் பார்த்தார்கள், காவலர்கள்.

"குழந்தைகள் விஷயமாக அரசியிடம் பேச வேண்டும். மிகவும் முக்கியம்!" என்று அவள் கூறியதும் அவர்கள் வழியை விட்டனர்.

"அரசியாரே!" - மிகவும் மெதுவாக அறைக்கதவைத் தட்ட, உள்ளே பத்மாங்கியின் செவிகளில் அந்த ஒலி கேட்டது.

நிதானமாக நடந்து வந்து அறைக்கதவைத் திறந்தாள். வெளியில் நின்ற அமரேந்திரியைக் கண்டதும் அரசியின் புருவங்கள் உயர்ந்தன.

https://telegram.me/aedahamlibrary

"குழந்தைகள் விழித்துக்கொண்டு விட்டனரா என்ன?" - பத்மாங்கி கேட்டாள்.

"இல்லை மகராணி! உறங்கிக்கொண்டுதான் இருக்கின்றனர். திடீரென்று, அந்த அறையினில் ஒரு சிவயோகி பிரசன்னமாகியுள்ளார். உடனடியாக, மன்னரையும், தங்களையும் அழைத்து வரச்சொல்கிறார். அகோராத்திர பூஜையை செய்து விட்டு வந்திருப்பதால், குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி ஏதோ கூற வேண்டுமாம்!" அமரேந்திரியின் குரலில் இருந்த பரபரப்பு, பத்மாங்கியின் நயனங்களில் பரவியிருந்த உறக்கத்தை அடியோடு விரட்டி அடித்தது. உறக்கம் தென்பட்ட நேத்திரங்களில் இப்போது மலைப்பு மிகுதியாகப் பரவியது.

இரவு உறங்கப்போவதற்கு முன்பாகத்தான் மன்னன் தானநந்தன் இவளிடம் கூறியிருந்த வார்த்தைகள் அவளது செவிகளில் மீண்டும் ரீங்கரித்தன.

"பத்மாங்கி! நமது பட்டாபிஷேகத்தன்று சிவனார் ஆலயத்தின் முன்பாக என்னிடம் பேசிய சிவயோகியைக் காண வேண்டும் போல் உள்ளது. அவர் மீண்டும் எனது கண்களில் படுவாரா?" என்று கேட்டிருந்தான்.

அதோ, அவன் முன்னிரவில் கூறிய தன் விருப்பத்தினை நிறைவேற்ற, நடுநிசியில் அந்த யோகியார் வந்து விட்டாரே.

பத்மாங்கி கண்களில் வியப்பு மாறாமல், அமரேந்திரியை நோக்கினாள்!

"நீ சென்று அறையில் காத்திரு! நான் மன்னருடன் வருகிறேன்!" - கூறிவிட்டு, பத்மாங்கி, மன்னனின் மஞ்சத்தை நோக்கி நடந்தாள்.

தானநந்தனை எழுப்பி விவரத்தைக் கூற, முதலில் மலங்க விழித்த அவன், தான் காண விரும்பிய சிவயோகியார் வந்திருப்பதை அறிந்ததும் பரபரப்படைந்தான்.

ஒரு குவளை நீரை எடுத்து சாளரத்தின் அருகே சென்று கண்களை ஈரப்படுத்தி, பிறகு ஒரு வாய் நீரை அருந்தி கொப்புளித்து விட்டு, அந்த நீரை வெளியே உமிழ்ந்தான்.

தனது குழந்தைகள் உறங்கிக்கொண்டிருந்த அறையை நோக்கி விரைய, பத்மாங்கியும், அவனைப் பின் தொடர்ந்தாள்.

https://telegram.me/aedahamlibrary

அந்த அகோரி இன்னும் அங்கேதான் நின்றிருந்தார். மிகவும் கம்பீரமாகக் காணப்பட்ட அவரை அரச தம்பதியர் வணங்கினார்கள்.

"சுவாமி! வர வேண்டும்! தங்களை வரவேற்காமல் உறங்கிக்கொண்டு இருந்து விட்டேன். மன்னிக்க வேண்டுகிறேன்!" தானநந்தன் கூறினான்.

"நீ என்ன செய்வாய் பாவம்! அகோரியின் பகல் உனக்கு இரவு. உனது பகல் அகோரியின் இரவு. எனது பூசனையின் பலனை உனக்குக் கொடுப்பதற்கே நேராக மயான பூமியில் இருந்து உனது அரண்மனைக்கு வந்திருக்கிறேன்!" அகோரி கூறினார்.

"சுவாமி! சிறிது பால் அருந்தலாமா?"- பத்மாங்கி கேட்க, அகோரி தலையசைத்து மறுத்தார்.

"வேண்டாம்!" என்றவர் தனது சிவந்த கண்களால் அமரேந்திரியை நோக்கினார். "பெண்ணே! நீ வெளியேறு!" - என்று கூற, அவள், தலையை பணிவாக அசைத்துவிட்டு, வெளியே நடந்தாள்.

"மன்னா!" என்ற அகோரியை பக்தியுடன் பார்த்தான், தானநந்தன்

"உறங்கும் உனது செல்வங்களைப் பார்த்தேன். சுழுமுனையினை கபாலத்தினில் இணைக்கும் கழுத்துப் பகுதி உறுதியாக இல்லை. சுழுமுனை கபாலத்தில் இருந்து துண்டிக்கப்படும் ஆபத்து நிறையவே உள்ளது. கபால பூஜை செய்ததுமே எனக்கு விவரம் தெரிய வந்ததால்தான் நடுநிசி என்பதையும் பொருட்படுத்தாது உன்னைக் காண வந்தேன்" காபாலிகர் கூற, அரச தம்பதியரின் சப்த நாடியும் ஒடுங்கியது.

"சுவாமி! நீங்கள் அப்படிக் கூறக்கூடாது. எப்படியாவது என் செல்வங்களின் உயிரை தாங்கள் தான் ரட்சிக்க வேண்டும்." தானநந்தனின் குரல் தழுதழுத்தது.

"பைரவரின் சித்தம் எதுவோ, அது நடந்தே தீரும், மன்னா! அவரது அருள் பெற்று விதியை சற்றே மாற்றியமையுங்கள் என்று அவரையே வேண்டுவோம். நான் கூறியபடி செய்தால், ஒரு வேளை உன் செல்வங்களைக் காப்பாற்றலாம்!"

அகோரியின் கண்கள் தொட்டிலில் கிடந்த குழந்தையையும்,

https://telegram.me/aedahamlibrary

பஞ்சணையில் உறங்கிக்கொண்டிருந்த பிபத்தனையும் மாற்றி மாற்றிப் பார்த்தன.

“சொல்லுங்கள் சுவாமி!”- பத்மாங்கி கண்களில் நீர் வழிந்தோட வேண்டினாள்.

"உங்கள் பட்டாபிஷேகத்தன்று நான் சொன்ன வாக்கு பலிதம் ஆகும். உன் செல்வங்கள் அமோகமாக இருந்து உனக்கு செழிப்பினை தருவார்கள். ஆனால் இந்த ஆபத்து அவர்களது கர்ம வினைப்படி அமைந்துள்ளது. யோசித்து கூறு, மன்னா! உன் தந்தை உன்னிடம் ஒரு வரம் வேண்டியுள்ளார் அல்லவா?” காபாலிகர் கேட்க, மன்னனின் கண்களில் வியப்பு!

"ஆம்... பைராகி சுவாமி! எனது தந்தை மகாபத்ம நந்தா தனது காலத்தில் அஸ்வமேத யாகம் ஒன்றைச் செய்வதாக சபதம் செய்திருந்தார். ஆனால், என்ன காரணத்தாலோ, அவரால் அந்த யாகத்தினை செய்ய முடியவில்லை." தானநந்தா கூற, பைராகி சிரித்தார்.

"அஸ்வமேத யாகத்தை யார் வேண்டுமானாலும் செய்துவிட முடியாது. எங்கு தேவ உடும்பரம் உள்ளதோ, அங்கு மட்டுமே அஸ்வமேத யாகத்தை செய்யமுடியும்!" பைராகி கூறினார்.

“தேவ உடும்பரமா?”- தானநந்தா திகைத்தான்.

“ஆம்! தேவ உடும்பரத்தால் ஆசீர்வதிக்கப்படும் மன்னனால் மட்டுமே, அஸ்வமேதத்தை செய்யமுடியும். அந்த தேவ உடும்பர வ்ருட்சத்தின் அடியில் ஆயிரம் முறை அந்த மரத்தினை நோக்கி ஜபித்து, பிறகு அதன் சமித்துகளைச் சேகரித்து நீ அஸ்வமேத யாகத்தை செய்தால், உலகையே ஆளும் சக்ரவர்த்தியாகத் திகழ்வாய். அந்த யாக தீட்சையின் சாம்பலை உன் செல்வங்களின் மேனியில் பூசி நீராட்டு. சுழுமுனை பலப்பட்டு, அவர்களின் ஆயுள் நீளும். அவர்கள் தலைக்கு வந்த தீங்கு விலகும். இருவரும் சக்ரவர்த்தியாகவும், சக்ரவர்த்தினியாகவும் திகழ்வார்கள்!” - அகோரி சொல்ல, அரச தம்பதியரின் முகத்தில் ஒருவித நிம்மதி பரவியது.

அப்போது, மன்னனின் செவியில் ஜோதிடர் மிஸ்ரபானுவின் குரல் ஒலித்தது.

“மன்னா! துர்தராவின் ஜாதகத்தில் முன்னுக்குப் பின் முரணாக பலன்கள்

https://telegram.me/aedahamlibrary

காணப்படுகின்றன.

சக்கரவர்த்தினியாகத் திகழ்வாள். ஆனால் ஒரு காட்டுவாசியை மணப்பாள்!

பிள்ளையை பெறுவதற்கு முன்பே மடிவாள். ஆனால், அழகிய மகன் ஒன்றிற்கு தாய் ஆவாள்..."

மிஸ்ரபானுவின் குரல் மன்னனின் நிம்மதியை விரட்டி, மீண்டும் கலக்கத்தினை தந்தது.

"சுவாமி.... என் மகள் துர்தராவின் ஜாதகத்தில்...!" என்றவனைக் கையமர்த்தினார், அகோரி.

"காட்டுவாசியினை மணந்து சக்கரவர்த்தினியாகத் திகழ்வாள். மடிந்தபின் பிள்ளையை பெறுவாள்.

“இதுதானே நீ கூறும் முரண்பாடுகள். கவலைப்படாதே. இதற்குத்தான், தேவ உடும்பர மரத்தைத் தேடிக் கண்டுபிடிக்கச் சொல்கிறேன். தேவ உடும்பர சமித்துகளில் நீ அஸ்வமேத யாகத்தை செய்யும்போதே உனது செல்வங்களின் ஜாதகங்களில் உள்ள முரண்பாடுகள் அகலும். சுழுமுனையையும், கபாலத்தையும் இணைக்கும் நாடி உறுதிப்படும். உனது செல்வங்களின் ஆயுள் மட்டுமல்ல, அவர்களது ஆட்சியும் உறுதிப்படும்." அகோரி கூறினார்.

“தேவ உடும்பர மரம் எங்கே கிடைக்கும்?” - மன்னன் கேட்டான்.

சிவயோகி சிரித்தார்.

“இங்கேதான் உனக்கு பிரச்சனை துவக்கம். தேவ உடும்பரம் ஆயிற்றே. எளிதில் கிடைத்து விடுமா? மிகவும் அபூர்வமானது தேவ உடும்பர மரம்... விந்தியத்திற்கு வடக்கே ஒன்று மற்றும் அதற்கு தெற்கே ஒன்று என்று இரண்டு தேவ உடும்பர மரங்கள் மட்டுமே இந்த கர்ம பூமியில் உள்ளன என்று அதர்வண தந்திரம் எனக்குக் கூறியுள்ளது. எனது பூஜா பலன்களை பிரயோகித்துப் பார்த்ததில், வடக்கில் உள்ள தேவ உடும்பரம் உனது ராஜ்யத்தில்தான் எங்கோ உள்ளது. அந்த தேவ உடும்பரத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அதனடியில் ஜபித்து, அதன் சமித்துகளைச் சேகரித்து வந்து யாகத்தை உனது அரண்மனையில்

https://telegram.me/aedahamlibrary

நடத்து.

"உனது ராஜ்ஜியம் விரிவடையும். உனது கலக்கங்கள் கதிரவனைக் கண்ட பனி போன்று விலகும்.” சிவயோகியார் கூறினார்.

அப்போதே, தானநந்தாவின் மனதில் உறுதி தோன்றியது.

"சுவாமி! எப்படியாவது அந்த தேவ உடும்பர மரத்தை கண்டுபிடித்து அதனடியில் ஜபம் செய்து, சமித்துகளைச் சேகரித்து எனது தந்தை விரும்பியது போன்று அஸ்வமேத யாகத்தைச் செய்வேன்...”

“முயன்று பார்!” அகோரி கூற, மன்னன் அவரை வணங்கினான்.

"என் செல்வங்களை ஆசீர்வதியுங்கள் சுவாமி!" பத்மாங்கி வேண்டினாள்.

“புழுவாகப் பிறத்தலும், சுழு ஓங்குதலும், மழுவுடையான் சித்தமே!”- என்றபடி, தனது இடையில் அணிந்திருந்த புலித் தோலினில் பிணைக்கப்பட்டிருந்த உடுக்கை ஒன்றை எடுத்து அடித்தார் பைராகி. அந்த நடுநிசி வேளையில், உடுக்கையின் ஒலி பயங்கரமான அதிர்வுகளை ஏற்படுத்த வெளியே நின்றிருந்த அமரேந்திரிக்கும் கூட கேட்க, அதனால் அவளது குலை நடுங்கியது.

“தானநந்தா! சிவனாரின் கையில் இது போன்ற உடுக்கை உண்டு அல்லவா! அது தேவ உடும்பரத்தினால் ஆனது. உடும்பரு என்பதை விந்தியத்திற்கு அப்பால் உடுக்கை என்று கூறுகின்றனர். சிவனை நாடச்சொன்னது அதனால்தான்! அவன் நல்வழியைக் காட்டுவான். நான் முன்பே சொன்னபடி வேதியர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடு. நான் செல்கிறேன்!” என்றவர் சாளரத்தின் வழியாகவே ஏறி, இருளில் கலந்து மறைந்தார்.

தானநந்தாவும், பத்மாங்கியும் தங்கள் அறைக்குத் திரும்ப, அமரேந்திரி மீண்டும் அந்த அறையினுள் நுழைந்தாள். அறைக்கதவினைத் தாளிட்டாள்.

அந்தக் குளிர் இரவிலும் வியர்த்திருந்த தனது முகத்தினை துடைத்தபடி அறை முழுவதையும் நோட்டமிட்டாள். அந்த பைராகி எப்படி வெளியேறி இருப்பார்?

https://telegram.me/aedahamlibrary

திறந்திருந்த சாளரக்கதவு அவளுக்கு விடையைத் தெளிவுபடுத்த, அச்சத்துடன், அந்த சாளரத்தினையே வெறித்தாள்.

'அந்த பைராகியை காண்பதற்கே அச்சமாக இருந்ததே! மீண்டும் அவர் வருவாரோ? சாளரக்கதவினைத் தாளிட்டு விட்டால்?' --- இந்த எண்ணம் தோன்ற, மெதுவாக, சாளரத்தினை நோக்கி நகர்ந்தாள் அமரேந்திரி. இரவுப் பனிக்காற்றில் மெதுவாக அசைந்தபடி இருந்த சாளரக்கதவினை இழுத்து மூடுவதற்காக வெளியே கையை நீட்டும்போது, இதயம் துள்ளி வாய் வழியாக வெளியே விழுந்து விடும் போன்ற உணர்வு. இருளில் நின்றபடி, அந்த பைராகி இவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அமரேந்திரியின் பிடரியில் மயிர்கூச்சம் ஏற்பட, வாயில் ஈரம் உலர்ந்து, செய்வதறியாது நின்றுகொண்டு இருந்தாள்.

"பெண்ணே! உன் பெயர் என்ன?" - அகோரியின் பார்வை அவளது இதயத்தை ஊடுருவியது.

"அமரேந்திரி சுவாமி!" - அவளது குரல் நடுங்கியது.

"உனது மகன் எப்படி இருக்கிறான்?" என்று பைராகி கேட்டதும், 'ஆ' என்கிற அலறல் அவளிடம் பிறந்தது. இவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம், இவளுடன் அழிந்து விடப்போகிறது என்கிற அந்த ரகசியம், இந்த அகோரிக்கு எப்படித் தெரிந்தது?

அமரேந்திரிக்கு அப்போது பிராயங்கள் பதினெட்டு தான் ஆகியிருக்கும். ஐந்து வருடங்களுக்கு முன்பாக அப்போதுதான் அரண்மனைப் பணிக்கு அமர்த்தப் பட்டிருந்தாள். தாய் தந்தையரை இழந்து, அவளுடைய அத்தை வீட்டில் வளர்ந்தாள். அரண்மனை சேடியாக பணியாற்றி ஓய்வு பெற்றிருந்த அவளது அத்தைதான், அரசியிடம் சொல்லி, அமரேந்திரியை அரண்மனைப் பணியினில் அமர்த்தினாள்.

அரண்மனைப் பணிகளை செய்துகொண்டிருந்த போது, அந்தப்புர பாதுகாப்புப் பணிகளின் பொறுப்பாளராகத் திகழ்ந்த, உதயசந்திரன் இவளது அழகில் மயங்கினான். ஒரு கட்டத்தில், இருவரும் எல்லை மீறிப் பழக, அமரேந்திரி கர்ப்பவதி ஆனாள். தனது நிலையை அவள் உதயசந்திரனிடம் சொல்ல, அவளை திருமணம் செய்வதாக வாக்களித்தான். விதி வேறு திட்டத்தினை வைத்திருந்தது. காஷ்மீர மன்னனுக்கும், பத்மநந்தனுக்கும் போர் மூள, உதயசந்திரன் போர்க்களத்திற்கு அனுப்பப்பட, போரில் வீர மரணம் எய்தினான்.

https://telegram.me/aedahamlibrary

தனது வயதான அத்தையிடம் உண்மையைக் கூற பயந்து, அமரேந்திரி தனது உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணியபோது, உடன் பணி புரியும், வைஜயந்தி, அவளை காப்பாற்றி தனது பொறுப்பில் வைத்துக் கொண்டாள்.

மூலிகை மருத்துவனான அவள் கணவன், ராஜீவன் அமரேந்திரி ஈன்ற ஆண்மகனை, மூலிகை பறிக்கச் செல்லும்போது இரகசியமாக காட்டில் போட்டு விட்டு வந்து விட்டான். வைஜயந்தியும், அவள் கணவனும் இறந்த பிறகு, இந்த ரகசியம் அமரேந்திரியின் ஆழ்மனதில் புதைந்து போனது. இனி ஒருவருக்கும் இந்த விஷயம் தெரிய வாய்ப்பில்லை என்று இவள் நினைத்திருந்த போது, இந்த சிவயோகியார் இவளது மகனைப் பற்றி கேட்கின்றாரே.

கண்கள் குளமாக, சிவயோகியாரை நோக்கி கரங்களை குவித்தாள்.

"சுவாமி! யாருக்கும் தெரியாத ரகசியம். உமக்கு எப்படித் தெரியவந்தது?"

"நீ வனத்தில் விதைத்த விதை, மரமாக வளர்ந்து விட்டது. தேவ உடும்பரமாக!" இடிஇடி என்று நகைத்தார், சிவயோகியார்.

திடீரென்று. --

தொட்டில் மணிகள் சப்தித்தன. துர்தரா விழித்துக் கொண்டு கால்களை உதைத்துக்கொள்கிறாள் போலும். மெதுவாக அவளிடமிருந்து அழுகையொலி பிறந்தது.

அகோரி சிரித்தார்.

"உன் மகள் உன்னை அழைக்கிறாள்!

சென்று சமாதானம் செய்.

பரமனின் உடுக்கையொலி கேட்கிறது

எதிர்காலம் என் முன் விரிகிறது!"

என்று பாடியவர், இடிஇடி என்று சிரித்தபடி இருளில் சென்று

https://telegram.me/aedahamlibrary

மறைந்தார்.

அவர் இருளில் மறைந்து சென்றும், அவரது சிரிப்பு சத்தம் மட்டும் நெடுநேரம் அமரேந்திரியின் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 5. உதிர்ந்து போன பல்வரிசை

காஞ்சனகுப்தர் திகைத்துப் போய் அமர்ந்திருந்தார். வேமுல மன்னன் புலிவேமுவிடம் அத்திமலை ரகசியத்தை கூறும்படி நிர்பந்தித்துக்கொண்டிருந்த பரப்பசுவாமி குடும்பத்துடன் கைது செய்யப்பட்டதும், புதிய ஊர்த்தலைவராக, தனது மைத்துனன் சுபாகரனை நியமித்துவிட்டு, அத்தியூரானை தரிசிக்காமலேயே புலிவேமு மீண்டும் வேமுலம் சென்றதையும் அவரால் நம்பவே முடியவில்லை.

"எல்லாமே அத்தியூரானின் செயல்தான்! ஒரு வேதியச் சிறுவனாக ஊர் எல்லையில் மன்னனுக்குக் காட்சி தந்து, அவன் மனதை மாற்றி விட்டான்!”

சானேஷ்வரியிடம் கூறிக்கொண்டிருந்தார், காஞ்சனகுப்தர்.

அதைக்கேட்டு விஷ்ணுகுப்தன் தனக்குள் சிரித்துக் கொண்டான். தந்தையின் முகத்தினில் நிலவிய நிம்மதியையும், மகிழ்ச்சியையும் கண்டு மனம் பூரித்தான், விஷ்ணு.

தனது குடிலின் வெளித்திண்ணையில் அமர்ந்து அன்றைய பாடங்களுக்காக, காஞ்சனகுப்தரின் சுவடிக்கட்டில் இருந்து உருவி வைத்திருந்த சுவடிகளை வரிசைப்படுத்திக்கொண்டு இருந்தான்.

அப்போது ---

குடிலை நோக்கி வந்தார், ஒருவர். செந்தூர வர்ணத்தில் தலைப்பாகை அணிந்து, வெண்பட்டு வேட்டியின் மீது மஞ்சள் நிற சால்வையினைப் போர்த்தியிருந்தார். தோளினில் ஒரு துணிப்பை ஊசலாடிக்கொண்டிருந்தது.

“காஞ்சனகுப்தர் இருக்கிறாரா?” - என்று கேட்டபடி விஷ்ணுகுப்தனின் முன்பாக நின்ற அந்த அதிகாரி, அவனது முகத்தைப் பார்த்ததுமே அயர்ந்து போய் வாய் பிளந்து நின்றார். அவனைக் கண்ட அவரது கண்கள் நிலைகுத்தி நின்றன. அவரது குரலைக்கேட்டு வெளியே வந்தனர், காஞ்சனகுப்தரும், சானேஷ்வரியும்.

அந்த அதிகாரியின் கண்கள் இன்னும் விஷ்ணுகுப்தனின் முகத்தினை

https://telegram.me/aedahamlibrary

வெறித்து நோக்கியபடிதான் இருந்தன.

"ஐயா தாங்கள் யார்?" - காஞ்சனகுப்தர் கேட்ட பிறகே, தன் நிலையுணர்ந்து அவரை நோக்கினார்.

"ஐயா! தாங்கள் தான் காஞ்சனகுப்தர் என நினைக்கிறேன். மன்னர் புலிவேமுவினால் புதிய ஊர்த்தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சுபாகரரின் ஆலோசகர் கங்காதரர் நான். இந்தச் சிறுவன்...?" கேள்வியுடன் விஷ்ணுகுப்தனைச் சுட்டிக்காட்டினார், அந்த அதிகாரி.

"என் மகன் விஷ்ணுகுப்தன். என் மாணாக்கனும் கூட!" - காஞ்சனகுப்தர் கூறியதும், கங்காதரரின் முகம் மலர்ந்தது.

“ஐயா! மன்னர் புலிவேமு இந்த உண்மையை அறிந்தால் பரமானந்தம் அடைவார். தங்கள் குமாரன் தான், மன்னரின் உயிரை வாங்கி, அவரது அரியணையை அபகரிக்க முயன்ற பரப்பசுவாமியின் சதியினை அம்பலப்படுத்தினான். ஒத்தாடை அருகிருந்த தோப்பில் மன்னனைச் சந்தித்த வேதியச் சிறுவன் தங்கள் மகன்தான்!" புளகாங்கிதத்துடன் கூறினார், கங்காதரர்.

“ஆ” - காஞ்சனகுப்தரும், சானேஷ்வரியும் திடுக்கிட்டு போய் விஷ்ணுகுப்தனை பார்த்தார்கள்.

“இருக்க முடியாது, சுவாமி! மன்னர் வந்த அன்று, இவன் அத்தியூர் தேவராஜனுக்கு, ஆலவட்ட கைங்கரியம் செய்து கொண்டிருந்தான்.”

"அப்படியென்றால் அத்திமலைத்தேவன்தான் இவனது உருவில் வந்திருக்க வேண்டும். ஏன் என்றால், நான் மன்னருடன் தான் வேமுலத்தில் இருந்து வந்து கொண்டிருந்தேன். “ஆபத்து மன்னா!” என்று அலறியபடி தனது கைகளை வீசியபடி மன்னரின் யானையை நிறுத்தியது, தங்கள் குமாரன்தான்!”

கங்காதரரின் குரல் பரபரப்புடன் ஒலித்தது.

தங்கள் செவிகளையே நம்ப முடியாமல் மகனைப் பார்த்தனர், பெற்றோர்.

"அத்திமலைத் தேவன்தான் இவனது உருவில் சென்று மன்னரைச்

https://telegram.me/aedahamlibrary

சந்தித்திருக்க வேண்டும். இவரது பிரார்த்தனைகளை ஏற்று அவரைக் காப்பாற்றவே அவன் அப்படிச் செய்திருக்க வேண்டும்” சானேஷ்வரி கூறினாள்.

'இல்லையம்மா! நான் எங்கும் போகவில்லை. தேவராஜனுக்கு ஆலவட்ட கைங்கரியம் செய்து கொண்டிருந்தேன்' - என்று விஷ்ணுகுப்தன் அந்த அதிகாரியின் கூற்றை மறுக்கப் போகிறான்!' திண்ணையில் அமர்ந்திருந்த மகனின் முகத்தை ஆவலுடன் நோக்கினர், பெற்றோர்.

"ஆம் குருவே! நான் தான் ஒத்தாடை சென்று மன்னரைச் சந்தித்து பரப்பசுவாமியின் சதியை அம்பலப்படுத்தினேன். குருவுக்கு ஒரு பிரச்சனை ஏற்படும்போது, அதனை தீர்ப்பவன்தானே உண்மையான சீடன்.”

இன்னும் வகுப்புகளே துவங்கியிருக்கவில்லை. வகுப்புகள் நடைபெறும்போதுதான் அவன் தனது தந்தையை குரு என்று அழைப்பான். ஆனால், கங்காதரர், அவன்தான் சதியை அம்பலப்படுத்தினான் என்று கூறியதும், அதனை மகன் தந்தைக்கு ஆற்றிய கடமையாகக் கூறாமல், ஒரு சீடன் தனது குருவுக்கு ஆற்றிய தொண்டாகக் கூறும் சாதுர்யம், விஷ்ணுகுப்தன் என்கிற வருங்கால சாணக்கியனுக்கு அல்லாமல் வேறு யாருக்கு வரும்?

காஞ்சனகுப்தரும், சானேஷ்வரியும் உறைந்து போய் நிற்க, கங்காதரர் தான் உற்சாகத்துடன் பேசிக்கொண்டிருந்தார்.

“நான் இப்போதே சுபாகரர் மூலமாக மன்னர் புலிவேமுவுக்குத் தகவலைத் தருகிறேன். தன் உயிரைக் காப்பாற்றிய சிறுவனைக் காண அவர் துடிக்கின்றார். ஏற்கனவே, பரப்பசுவாமியின் மீது பல புகார்கள். வேமுல அரச சபையில் தெரிவிக்கப்பட்டதாலேயே, சிற்றன்னையின் மகனால் பிரச்சனைகள் வேண்டாம் என்று அவனை அத்தியூர் தலைவராக நியமித்தார், மன்னர். சற்றும் திருந்தாமல், மன்னருக்கு எதிராக சதி செய்யத்துணிந்து விட்டான். நல்லவேளை, தங்கள் மகன் மன்னரைக் காப்பாற்றி விட்டான்.” - தான் விஷ்ணுகுப்தனைக் கண்டு விட்டதை மன்னரிடம் தெரிவிக்க வேண்டும் என்கிற ஆர்வம் அவரது குரலில் ஒலித்தது.

“தங்கள் மகனின் பெயர்!” - கங்காதரர் கேட்டார்.

https://telegram.me/aedahamlibrary

“விஷ்ணுகுப்தன் என்று அழைக்கிறோம்!” - பெருமையுடன் கூறினாள் சானேஷ்வரி.

"தங்கள் மகனைக் கண்டதில் வந்த காரியத்தை மறந்து விட்டேன், குருவே. புதிய ஊர்த்தலைவர் சுபாகரர் அத்திமலைத்தேவனை தரிசிக்க வேண்டுமாம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி, என்னை அவர் அனுப்பினார். அதைச் சொல்லவே நான் வந்தேன்.” கங்காதரர் கூறினார்.

“அதற்கென்ன அழைத்து வாருங்கள்.” - காஞ்சனகுப்தர் கூறினார்.

“அத்திமலை ரகசியத்தை கேட்காதிருந்தால் போதும்,” மனதிற்குள் நினைத்துக் கொண்டாள், சானேஷ்வரி.

"ஒரு சிறு விண்ணப்பம்! தங்கள் மகனை ஊர்த்தலைவர் மாளிகைக்கு அழைத்துச் செல்ல அனுமதி கோருகிறேன். ஊர்த்தலைவரிடம், இவன்தான் மன்னனைக் காப்பாற்றியவன் என்பதைத் தெரிவிக்க வேண்டும்!”- கங்காதரர் கேட்டார்.

"மன்னிக்க வேண்டும் ஐயா! நான் புகழை விரும்பி மன்னரைக் காப்பாற்றவில்லை. சாதாரண ஒரு பிரஜையின் செவியில் ஒரு சதித் திட்டம் விழும்போது, அதனை மன்னரிடம் தெரிவிப்பது கடமைதான். நான் பெரிதாக எதையும் செய்து விடவில்லை. இதற்கு நன்றிக் கடன் என்ற பெயரில் என்னை என் பெற்றோரிடம் இருந்து பிரித்து விடாதீர்கள். இந்த அமைதியான சூழ்நிலையில், எனது தந்தை, தாய்க்கு கடமையைச் செய்து கொண்டு, அத்திமலையானுக்கு கைங்கர்யம் செய்வதில் கிடைக்கும் ஆனந்தம், அரச சபையில் கிட்டுமா?”

கங்காதரர் வியப்பின் உச்சிக்குச் சென்று விட்டார். இந்த சிறுபாலகன் பெரிய அறிவாளியாகப் பேசுகின்றானே.

“சுவாமி. இன்னும் ஒரு சந்தேகம்.! அடியேன் வ்ருட்ச சாத்திரம் பயின்றவன். ஒரு ஜோதிடனும் கூட. இந்த அத்தியூரில் எங்கோ தேவ உடும்பர மரம் இருந்ததாமே. தற்போதும் இருக்கிறதா?”

கங்காதரர் கேட்டதும், காஞ்சனகுப்தரின் முகம் சுருங்கியது.

“இது என்ன ரோதனை?”- என்பது போன்று மனைவியின் முகத்தை

https://telegram.me/aedahamlibrary

அவர் பார்க்க, அனேகமாக சுபாகரரும், கங்காதரரும் பரப்பசுவாமியின் வழியில்தான் செல்லப்போகிறார்கள் என்று நினைத்தான், விஷ்ணுகுப்தன். தனது மூளைக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டும் என்று நினைத்த மாத்திரத்திலேயே, விஷ்ணுகுப்தனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. கடகடவென்று சிரித்தபடி, தாய் தந்தையரை நோக்கினான்.

அவ்வாறு அவன் சிரித்தபோது முத்துக்களைப் போன்ற தனது பற்களைக்காட்டி வாய் திறந்து சிரிக்க, அந்த அழகை மெய்மறந்து நோக்கினார், கங்காதரர். அவனது பெற்றோர்களும் அந்தச் சிரிப்பைக் காணத் தவறவில்லை.

"ஏகேசோ பயாதத்த ஹ!" என்கிற புருஷ சூக்தத்தின் வாக்குப்படி இறைவன் முதலில் ஒரு பல் வரிசையுடைய ஜீவன்களை படைத்தான்" என்கிற வரி அவரது செவிகளில் ரீங்கரிக்க, இரு பல்வரிசைகளையும் காட்டி கலகலவென்று நகைத்துக்கொண்டிருந்த விஷ்ணுகுப்தனை பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார் கங்காதரர். சாமுத்ரிகா லட்சணங்களை அறிந்திருந்த கங்காதரர், உச்சந்தலையில் உள்ள சுழியில் துவங்கி, கால் கட்டை விரல் ரேகைகள் வரை உள்ள லட்சணங்களுக்கு உரிய பலன்களையும், தகுதிகளையும், கரைத்துக் குடித்திருந்தார். இம்மாதிரியாக நேர்த்தியான பல்வரிசைகளை மேலும் கீழுமாகப் பெற்று, பற்களின் நுனிகள் கூரிய கோரைகளாகத் தோன்றினால், ஒருவன் பெரிய சாம்ராஜ்யத்தை அமைத்து அதனை ஆள்வான்!" என்கிற சாத்திரம் சிந்தையில் உறைக்க, காஞ்சனகுப்தரை பயபக்தியுடன் நோக்கினார், கங்காதரர்.

"ஆஹா! குருவே! தங்கள் திருக்குமாரனது பல்வரிசைகளைப் பார்க்கும்போது இவன் ஒரு பெரிய சக்கரவர்த்தியாகத் திகழ்ந்து, இந்த உலகினையே ஆளப்போவது உறுதி. இவனது புகழ் இந்த உலகமுள்ளளவு நிலைத்திருக்கப் போகிறது என்பதில் இம்மியும் சந்தேகமில்லை!" --- கங்காதரர் கூற, காஞ்சனகுப்தரும், சானேஷ்வரியும் திகைத்துப் போயினர்

விஷ்ணுகுப்தன் மட்டும் சிலிர்ப்புடன் கங்காதரரைப் பார்த்தான்.

"அதிகாரியே! எதனை வைத்து அவ்வாறு கூறுகிறீர்கள்?" - சற்றே ஆர்வத்துடன் கேட்டான், விஷ்ணு.

"விஷ்ணுகுப்தா! உனது பல்வரிசையை வைத்துதான் இதனைக்

https://telegram.me/aedahamlibrary

கூறினேன். சுவடியில் இன்றே பதிவு செய்து கொள். இன்று ஹஸ்த நட்சத்திரம். ஹஸ்தம் என்றால் கை. உனது ஹஸ்தம் செங்கோலை நிச்சயம் ஏந்தும். என்றாவது ஒரு நாள், உனது பெயருக்கு முன்பாக, சக்கரவர்த்தி என்கிற அடைமொழி சேருகிறதா, இல்லையா பாரேன்!”

இவ்வாறு கூறிய கங்காதரர், காஞ்சனகுப்தரை வணங்கிவிட்டு, அவசரமாக அங்கிருந்து திரும்பியபோது, அவரது தலைப்பாகை நழுவியது. அதனை கையால் பிடித்துக்கொண்டு அவர் விரைந்ததை பார்த்துக் கொண்டிருந்தனர், விஷ்ணுகுப்தனும், அவனது பெற்றோரும். சற்று நேரம் கழித்து தந்தையின் குரலைக்கேட்டுத் திரும்பினான், விஷ்ணு.

“விஷ்ணு! என்ன இதெல்லாம்?' புலிவேமுவுக்கு எதிராக பரப்பசுவாமி சதி செய்தார் என்பதை எங்ஙனம் அறிந்தாய்?” தனது மகனை ஆச்சரியத்துடன் நோக்கினார்.

விஷ்ணுகுப்தன் சிரித்தான். "தந்தையே! சதி நடந்தது என்று யார் கூறியது? சதி நடப்பதாக எனது யூகத்தை மட்டுமே கூறினேன். அவ்வளவே. நம்பியது மன்னன் தவறு. அவர் நம்பிக்கையின்மையை சம்பாதித்தது பரப்பசுவாமியின் தவறு. ஒரு தகவல் வரும்போது, அதனை ஆராயவில்லை என்றால் ஊர்த்தலைவனின் விதியே மாறும் என்பதற்கு ஒரு ஆதாரம்தான் இந்த நிகழ்வு.” விஷ்ணுகுப்தன் சொல்ல, அவனது பெற்றோர் அரண்டு போய் அவனை நோக்கினர்.

"என்ன சொல்ல முயல்கின்றாய், விஷ்ணு?” - சானேஷ்வரியின் குரலில் பிரதிபலித்தது, மலைப்பா, இல்லை அச்சமா?

"அம்மா! அரசியல் என்பது அதிகாரத்தை நோக்கி நகரும் ஒரு கலை. நாணயத்திற்கு இரு பக்கங்கள் போன்று, அரசியல் என்கிற உருண்டோடும் நாணயத்தின் இரு பக்கங்களே, அதிகாரமும், மக்கள் நலனும். தலை விழுந்து, தலையாக அதிகாரத்துடன் விளங்கவே அரசியலைச் சார்ந்தவர்கள் விரும்புகின்றனரே தவிர, பூ விழுந்து, தங்களுக்கு அதிகாரத்தினை ஈந்த மக்களுக்கு நன்மையைச் செய்யத் தவறி விடுகின்றனர். மக்களும் தாங்கள் உருவாக்கிய தலைதான் தங்களை ஆள்கிறது என்பதை அறியாமல், அந்தத் தலைவனுக்கு வால் பிடித்து அவனுக்கு பாமாலை சூட்டுகிறார்கள். தலைக்கனம் என்பதே அதிகாரத்தை குறிக்கும் சொல் தான். மகுடத்தின் கனத்தை உணரத் தவறியவனால் நாடு சீரழியும். புலிவேமு, பரப்பசுவாமி இருவருமே இந்த

https://telegram.me/aedahamlibrary

ரகம்தான். அதிகாரம் மட்டுமே அவர்களது குறிக்கோள். அத்திமலை ரகசியத்தைப் பெற்று எப்படியாவது தங்களுக்குக் கிட்டிய அதிகாரத்தை நிரந்தரமாக தக்க வைத்துக்கொள்ளப் பார்க்கின்றனர். அந்த அதிகார வேட்கையினை எனக்கு சாதகமாக மாற்றி, அவர்களுக்குள் சந்தேகத் தீயை மூட்டி, அத்திமலை ரகசியத்தைக் காப்பாற்றினேன். தங்களுக்கு வந்த பிரச்சனையை திசை திருப்பினேன்!" விஷ்ணுகுப்தன் கூறினான்.

காஞ்சனகுப்தரும், சானேஷ்வரியும், கண்களில் நீர் பெருக, அவனது பேச்சை பிரமிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தனர். காஞ்சனகுப்தர் மெல்லிய குரலில் மகனைக் கேட்டார்:

"நான் இதையெல்லாம் உனக்கு போதிக்கவே இல்லையே!"

"அப்பா! உலகில் எல்லா ஞானங்களும் ஏட்டில் பதிவு செய்யப்பட்டு விட்டன என்று நினைப்பவர்கள் அஞ்ஞானிகள். கல்வி என்பது மலர்களைப் போன்று அன்றாடம் புதிதாக மலர்வது. மலர்ந்த புஷ்பங்களை நுகர வேண்டுமே தவிர, யாரோ ஏற்கனவே நுகர்ந்த புஷ்பங்களை நுகர்வதில் என்ன இன்பம் இருக்கப் போகின்றது. ஏட்டில் யாரோ குறித்து வைத்ததை, சொல் தவறாமல் அப்படியே ஒப்புவித்து சாதிப்பவனை கல்வியாளன் என்று நினைப்பது தவறு. அந்த வகையில், சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளை கூட கல்வியாளன் தானே!"

சானேஷ்வரி மெய்மறந்து மகனையே வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா! சொன்னதை சொல்லும் கிளிப்பிள்ளையைக் காட்டிலும், அனைவரும் உறங்கியிருக்கும் போதே கண் விழித்து செயலாற்றும் ஆந்தை அல்லவோ விவேகமான பறவை. எனவேதானே, திருமகளே அதனை தன் வாகனமாகக் கொண்டிருக்கிறாள்... மற்றவர்கள் உறங்கும்போது தானும் உறங்காமல், செயலாற்றும் ஆந்தையாக இருந்தால் ராஜ்யங்களை வெல்லலாம். மாலவனின் வாகனம் என்பதால் கருடனுக்கு பட்சியரசன் என்கிற கௌரவம் கிடைத்ததே அன்றி மதியூகத்தைக் கொண்டு பார்த்தால், ஆந்தையே பட்சிகளின் அரசன். நான் மதியூக ஆந்தையாகவே இருக்க விரும்புகிறேன்." - விஷ்ணுகுப்தன் கூற, தான் ஒரு அசாதாரண பிள்ளையை பெற்றிருக்கிறோம் என்பதை உணர்ந்தனர், அவனது பெற்றோர்கள்.

"விஷ்ணு! மாளிகையில் என்னதான் நடந்தது! சற்று விவரமாகச்

https://telegram.me/aedahamlibrary

சொல்லேன்!” தந்தை கேட்க, அவரைப் பரிவுடன் நோக்கினான், விஷ்ணு.

மன்னன் புலிவேமுவிடம் அத்திமலை ரகசியத்தைக் கூற வேண்டிய கட்டாயத்தில் இருந்த காஞ்சனகுப்தர் தனது மனைவியிடம் அதைப்பற்றி புலம்ப, அதனைச் செவியுற்ற விஷ்ணு, தந்தையின் பிரச்சனையை தீர்த்து வைக்க எண்ணி சசாங்கவர்மனுடன் விளையாடுவதற்கு மாளிகைக்குச் சென்றது, ஹைமாவதி இவனை கடுமையாகப் பேசியது, ஐராவதியை வஞ்சப்புகழ்ச்சி செய்து மன்னனின் ஆலோசனை மண்டபத்தின் உள்ளே புகுந்தது, அவர்கள் கையாலேயே அவர்கள் கண்ணை நசுக்கும் விதமாக, கட்டாரியை தொம்பையினுள் மறைத்தது, பின்னர் ஒத்தாடையில் மன்னர் புலிவேமுவிடம் அவரைக் கொல்ல, தொம்பையினுள் கட்டாரி பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி, அவருக்கும், பரப்பசுவாமிக்கும் இடையே இருந்த நல்லுறவைத் துண்டித்தது, அனைத்தையுமே விஷ்ணு விளக்கிக் கூறினான்.

கண்களை இமைக்கக்கூட மறந்து, மகன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தனர், பெற்றோர்.

"நீ வீர விளையாட்டில் ஈடுபட்டாய், விஷ்ணு. ஆனால் உன் திட்டத்தை மன்னன் ஆராய்ந்து, உனது நோக்கத்தை அறிந்திருந்தால், நாம் அனைவரும் குடும்பமாக காராகிருகத்தில் அடைக்கப்பட்டிருப்போமே.! அதனை நீ உணர்ந்தாயா?" வாயில் ஈரம் உலர்ந்து போக, படபடப்புடன் கேட்டார், காஞ்சனகுப்தர்.

“தந்தையே! என்று பிரும்மன் நமது பிறந்த தினத்தை குறிப்பிட்டு நிலவுலகத்திற்கு அனுப்புகின்றானோ, அன்றே நமது மரண திதியையும் அருகிலேயே குறிப்பிட்டு விடுகிறான். பல்லிடுக்கில் சிக்கிய உணவுத் துகள்கள் நமக்கு எவ்வளவு வேதனையைத் தருகின்றன. அதனை ஒரு குச்சியால் நீக்கும் போது ஒருவித நிம்மதியும், சுகமும் கிட்டுகிறதல்லவா? அங்ஙனம்தான் தேகக் கூட்டினில் சிக்கிய ஆன்மா நமக்கு வேதனையைத் தருகின்றது. அது நீங்கும்போது, கிடைக்கும் சுகமும், நிம்மதியும் உணவுத்துகள்களை பல்லிடுக்கிலிருந்து நீக்கும்போது கிடைக்கும் நிம்மதியைக் காட்டிலும் பன்மடங்கு சுகமானது. ஆன்மா தேகத்தை விட்டு நீங்குவது என்பது ஒரு சுகமான அனுபவம். அப்படியிருக்கும் போது எதற்காக நாம் மரணத்தைக் கண்டு அஞ்ச வேண்டும்?” இந்த அச்சம் ஏற்படாமல் இருந்தாலே, மரணபயம் என்கிற ஒன்று இல்லாமல் இருந்தாலே மனிதன் அரிய சாதனைகளைச்

https://telegram.me/aedahamlibrary

செய்வான். சிந்தனையும் வேகமாகச் செயல்படும். அதைத்தான் நான் செய்தேன்!”

விஷ்ணுகுப்தன் இவ்வாறு கூறியதும்தான் தாமதம். கணவனின் அரவணைப்பில் இருந்த மகனை தனது பக்கலில் இழுத்து, அவனை உச்சி முகர்ந்தாள், சானேஷ்வரி.

"என்ன தவம் செய்தேன், விஷ்ணு, உன்னைப் பெறுவதற்கு! ஞானத்தின் பூரணத்துவம் உனது பேச்சில் பிரதிபலிக்கின்றது. பல்லிடுக்கில் சிக்கிய உணவுத்துகள் போன்று ஆத்மா தேகக்கூட்டினில் சிக்கியுள்ளது என்று மரணத்தை எவ்வளவு எளிதாக மாற்றிவிட்டாய். மகனே! நீ பெரும் கீர்த்தியுடன், இந்த உலகம் உள்ளவரை நீடித்திருப்பாய்!” - பரவசத்துடன் கதறி அழத் துவங்கினாள், சானேஷ்வரி.

தாயின் அன்பில் திக்குமுக்காடிப் போனான், விஷ்ணுகுப்தன். இந்த அன்புக்கு முன்பாக சாம்ராஜ்யங்களும், செல்வங்களும், எம்மாத்திரம்? உலகத்தினை ஒரு தராசு தட்டில் வைத்து தாய் அன்பை மற்றொன்றில் வைத்தால், தாய் அன்பு உள்ள தட்டுதானே தாழும்! - விஷ்ணுகுப்தன் உணர்ச்சியுடன் தாயின் இடையைக் கட்டிக்கொண்டான். அந்த அன்புப் பரிமாற்றத்தை ஆனந்தக் கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்தார், காஞ்சனகுப்தர்.

பரமானந்தத்தில் திளைத்திருந்த சானேஷ்வரி திடீரென்று உணர்ச்சியின் வேகத்தில், பிதற்றத் தொடங்கினாள்.

"ஐயோ... அந்த அதிகாரி கங்காதரர் உனது பல்வரிசையினைப் பார்த்து புகழ்ந்துவிட்டுச் சென்றாரே. நீ பெரிய சக்கரவர்த்தியாகத் திகழ்ந்து நாடாளுவாயாமே.! அப்படியானால், நீ என்னை விட்டுப் பிரிந்து போய் விடுவாயா? நீ மன்னனாகி விட்டால் உன் தலையில் மகுடம் திகழுமே! என்னால் உன்னை எப்படி உச்சி முகர முடியும்! வேண்டாம்! நீ என்னை விட்டுப் போகாதே!” - அரற்றியபடி சானேஷ்வரி அவன் மீதிருந்த தனது பிடியினை இன்னும் இறுக்க, அவள் உகுத்த கண்ணீர் விஷ்ணுவின் முகத்தை நனைத்தது.

தன்னை விட்டுப் பிரிந்து சென்று விடுவானோ மகன் என்கிற ஏக்கத்தில் தன் தாய் கண்ணீர் வடிப்பது, விஷ்ணுவின் நெஞ்சைப் பிளந்தது. அந்த கங்காதரர் கூறியது போன்று, இவன் மன்னனாகப் பதவி ஏற்க உள்ளான் என்றால், தாய் தந்தையரை விட்டுப் பிரியப் போகின்றான்

https://telegram.me/aedahamlibrary

என்றுதானே பொருள். நிச்சயம், அவர்கள் அத்திமலைத்தேவனை விட்டு இவனுடன் வர மாட்டார்கள்.

இந்த எண்ணம் தோன்றியதும், கங்காதரர் அவனது பல்வரிசையின் லட்சணங்களைப் பற்றி கூறியது நினைவுக்கு வர, தன் பல்வரிசையின் மீதே அவனுக்கு துவேஷம் பிறந்து விட்டது. அம்மாவை விடவா பதவி பெரியது? அந்தப் பதவிக்காக தாயை பிரியக் கூடாது என்கிற உத்வேகம் மனதில் அலைமோத, அவளது அணைப்பில் இருந்து திமிறியவன், சுற்று முற்றும் பார்த்தான். திண்ணைக்கு மறுபுறத்தில், ஒரு மூலையில், சானேஷ்வரி ஒரு அம்மிக்கல்லை வைத்திருந்தாள். அதன் மீது குழவிக்கல் ஒன்று கிடந்தது. ஒரே எட்டில் பாய்ந்து அந்தக் குழவிக்கல்லைக் கையில் எடுத்தான்.

"ஏய். அம்மியின் குழவியே. நீ உன் தாய் அம்மியைப் பிரியாதிருப்பது போன்று, நானும் என் தாயைப் பிரியாதிருத்தல் வேண்டும். என் தாய் ஈன்ற ஒரே குழவி நான். எங்களை பிரிக்க எனது பல்வரிசையே சூழ்ச்சி செய்யப்போகிறது என்றால், எனக்கு இந்த அழகிய பல் வரிசையே வேண்டாம்" - என்றவன் அந்த அம்மிக் குழவிக் கல்லை இரு கரங்களால் தொலைவுக்கு எடுத்துச் சென்று, ஓங்கி தனது வாயில் மோதினான். அட்சதைகள் காற்றில் சிதறுவது போன்று, அவனது வெண்முத்துப் பற்கள் உதிர்ந்து சிதற, விஷ்ணுகுப்தனின் வாயில் இருந்து குருதி பொங்கியது.[1]

“என்ன காரியம் செய்தாய், விஷ்ணு! நான் ஒரு பிச்சி.! இப்படியா பேசி மகனின் மனதை குழப்புவேன்?" - தன்னைத்தானே சபித்தபடி மகனை நோக்கி ஓடிச்சென்றாள், சானேஷ்வரி.

பற்களை இழந்த மகனின் வாயினில் பெருகிய குருதியை நிறுத்தவேண்டி மூலிகையைப் பறிக்க ஓடினார், காஞ்சனகுப்தர். ஆனால் இனி விஷ்ணுகுப்தனுக்கு பற்கள் முளைக்கவே போவதில்லை. இறுதி வரை பற்கள் இல்லாமல்தான் இருக்கப்போகிறான்.

"ஐயோ! எவ்வளவோ அழகாகப் பேசினாயே. என் கண்ணே பட்டு விட்டதே. பல் போனால் சொல் போய்விடுமே!" - சானேஷ்வரி கதறினாள்.

அன்றிரவு ---

https://telegram.me/aedahamlibrary

தனது மகன் தன்னைத் தானே தாக்கிக்கொண்டு பற்களை இழந்து விட்டானே என்கிற வேதனையில், காஞ்சனகுப்தரும், சானேஷ்வரியும் வேதனையுடன் உறங்கச் சென்று விட்டனர். இருபுறக் கன்னங்களும் வலி எடுக்க, தூக்கம் வராமல் தவித்த விஷ்ணுகுப்தன், குடிலின் திண்ணையில் அமர்ந்திருந்தான். பிறகு மெதுவாக எழுந்து வேகவதி ஆற்றை நோக்கி நடந்தான். சிலுசிலு என்று வீசிய காற்று அவனது கன்னங்களை வருடிக்கொடுக்க, அவனுக்கு இதமாக இருந்தது. வேகவதி ஆற்றை நெருங்கியவன், அதன் கரையில் அமர்ந்து பெருகி ஓடும் ஆற்றினையே பார்த்துக்கொண்டிருந்தான். நிலவும் தனது பங்கிற்கு அவனது மனதைக் குளிர்வித்துக் கொண்டிருந்தது.

கங்காதரர் கூறியதை மறந்துவிட்டு, இயற்கையின் அழகை அந்த பூரண நிலவில் ரசித்துக்கொண்டிருந்தான், விஷ்ணுகுப்தன். அன்று ஹஸ்த நட்சத்திரம் என்பது உறைக்க, ஒருகால் அன்றும் அத்திமலையில் இருந்து அந்த ஜோதி ஒளிரக்கூடுமோ என்று நினைத்தான்.

ஆர்வத்துடன், அத்திவனத்தையும், வேகவதி ஆற்றையும், அத்திமலையையும் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். முழுநிலவு எங்கும் வெண்மையை வாரிவீசியிருந்தது. ஆனால் சற்று நேரத்தில் ஒரு மேகக்கூட்டத்தின் பின்னால் சென்று நிலவு ஓய்வு எடுக்க, இருள் மீண்டும் அங்கே தாண்டவமாடியது. அதனால் அத்திமலை, அத்திவனம், மற்றும் வேகவதி ஆறு அனைத்துமே அவனது கண்பார்வையில் இருந்து மறைய, எங்கும் இருள் தான் அவனுக்குத் தெரிந்தது. விண்ணில் இறைக்கப்பட்ட தாரகைகள் மட்டும் வானில் மின்னிக் கொண்டிருந்தன. எங்கும் நிசப்தம்.

விஷ்ணுகுப்தன் அந்த அமைதியை உள்வாங்கி, தனது மனத்தினுள் நிரப்பிக்கொண்டிருந்த சமயம் ---

வேகவதி ஆறு பெருகும் ஒலியைக் கொண்டு அவன் திசைகளை அனுமானித்துக் கொண்டிருந்த வேளை ---

அத்திவன மரங்கள் வெண்சாமரமாக வீசி, காற்றினை இவன் புறமாகத் திருப்பிக்கொண்டிருந்த தருணம் ---

திடீரென்று ---

ஆற்றின் நீரும், வனத்தின் மரங்களும், இவன் கண்களில் தென்பட்டன.

https://telegram.me/aedahamlibrary

பின்பிருந்து எழுந்த ஒளிக்கற்றை ஒன்று இவன் கண்ணோரத்தில் வெளிச்சத்தைக் காட்ட, துடிப்புடன் எழுந்தான்.

“ஆஹா! அத்திமலையிலிருந்து இதோ புறப்பட்டு விட்டது, ஜோதி.” தன்னுள் முணுமுணுத்தபடி, ஆர்வத்துடன் திரும்பினான். திரும்பியவனின் முகம் கோரமாக மாறியது.

அந்த ஒளிக்கற்றை அத்திமலையிலிருந்து தோன்றவில்லை. இவனது குடிலில் இருந்துதான் புறப்பட்டிருந்தது.! ஆமாம்! இவனது குடில்தான் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது.

[1] இந்த சம்பவத்திற்குப் பிறகு சாணக்கியன் இறுதி வரை பொக்கை வாயுடன்தான் இருந்தான். அவனது பற்கள் மீண்டும் முளைக்கவில்லை. அழகான அவன் இந்த சம்பவத்திற்குப் பிறகு குரூபனாக மாறினான். சாணக்கிய சரித்திரத்தில் இந்த சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 6. அட்டப்பூச்சியின் அனுமானம்

தானநந்தா யோசனையுடன் தனது கரங்களை பின்பாக கோர்த்துக்கொண்டு ஆலோசனை அறையில் இப்படியும் அப்படியுமாக நடை பயின்றான். தலைமை அமைச்சரின் முகம் ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தது. அரண்மனை ஜோதிடர் மிஸ்ரபானுவோ தனது முகத்தை விருட்ச சாத்திர சுவடிகளில் புதைத்திருந்தார். முந்தைய நடுநிசியில், பைராகி அரண்மனைக்கு வந்து தன்னிடம் கூறிய தகவல்களை தலைமை அமைச்சரிடமும், ஜோதிடர் மிஸ்ரபானுவிடமும் சற்று முன்பாகத்தான் கூறியிருந்தான், தானநந்தா.

"அஸ்வமேத யாகத்தை செய்ய எனக்கு ஒரு தேவ உடும்பர மரம் தேவை" மன்னன் இவ்வாறு கூறியதும், வாயடைத்துப் போயிருந்த தலைமை அமைச்சர், இன்னும் அந்தத் திகைப்பிலிருந்து விடுபட்டிருக்கவில்லை. மிஸ்ரபானுவோ, விருட்ச சாத்திர சுவடிகளைப் புரட்டி, தேவ உடும்பர மரத்தைப் பற்றி ஏதேனும் தகவல்கள் கிடைக்குமோ என்று தேடிக்கொண்டிருந்தார்.

மன்னன் யோசனையுடன், கைகளைப் பின்புறமாக கோர்த்துக்கொண்டு அறையில் இப்படியும் அப்படியுமாக, தொடர்ந்து நடைபயின்று கொண்டிருந்தான்.

சாளரத்தின் அருகே சென்ற தானநந்தா, நந்தவனத்தில், தோழி அமரேந்திரி ஒரு கையால் இளவரசன் பிபத்த நந்தனை பற்றிக்கொண்டும், இடையில் இளவரசி துர்தராவை சுமந்து கொண்டும் உலாவிக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

குழந்தை துர்தராவின் ஜாதகத்தில் காணப்பட்ட முரண்பாடுகள், மன்னனுக்கு நினைவில் தோன்ற, உடனேயே அஸ்வமேத யாகத்தை செய்து அந்த குறைபாடுகளை நீக்கிவிட வேண்டும் என்கிற உத்வேகம் எழுந்தது. இவனுக்கு உத்வேகம் எழுந்து என்ன பலன்? தேவ உடும்பரம் கிடைக்க வேண்டுமே!

எரிச்சலுடன் மிஸ்ரபானுவை நோக்கினான், தானநந்தா! "என்ன துழாவுகின்றீர், ஜோதிடரே?" - மன்னன் பொறுமையை இழந்தான்.

"நடுநிசியில் வந்த அகோரி எனது ராஜ்யத்திலே தேவ உடும்பர மரம்

https://telegram.me/aedahamlibrary

இருப்பதாகக் கூறினாரே. அதை கண்டுபிடிக்க இயலாதா உங்களால்?” - தானநந்தாவின் குரலில் சலிப்பு தோன்ற, மிஸ்ரபானு அவனைப் பணிவுடன் நோக்கினார்.

"மன்னா! சற்று பொறுக்க வேண்டுகிறேன். எப்படியும் தேவ உடும்பர மரத்தைக் கண்டுபிடித்து யாகத்தை அமோகமாக செய்யலாம்!” - ஜோதிடர் கூறினார்.

தானநந்தா சமாதானம் அடையாமல் தொடர்ந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருந்தான்.

மிஸ்ரபானுவுக்கு நன்றாகத் தெரியும், தேவ உடும்பர மரத்தை பற்றிய தகவல்கள் தன்னிடம் உள்ள சுவடிகளில் இல்லை என்பது. இருப்பினும், பொறுமையின்றிக் காணப்படும் மன்னனிடம், கால அவகாசம் பெற வேண்டியே, சுவடிகளில், விவரத்தைத் தேடுவதாக பாவனை செய்து கொண்டிருந்தார்.

மனதினுள், மன்னனை எப்படிச் சமாளிப்பது என்கிற பயம், ஹரஹர தேவ் மற்றும் மிஸ்ரபானு ஆகிய இருவருக்குமே தலைதூக்கியது. மிஸ்ரபானு தொடர்ந்து சுவடிகளை ஆராய்வது போன்று நடித்துக்கொண்டிருந்தார்.

திடீரென்று மிஸ்ரபானுவுக்கு அந்த எண்ணம் பளிச்சிட்டது. கோன காமாவை கேட்டால் என்ன?

கோன காமா புஷ்பபுர எல்லையில் உள்ள காட்டின் நடுவே தனது சாம்ராஜ்யத்தை நடத்தி வந்தவன். பௌத்த மார்க்கத்தைச் சேர்ந்தவன். காட்டின் நடுவே உள்ள கழுகுமலைக் குகையில் வாசம் செய்து வந்தான். அவன் எதிர்காலத்தை கணித்து கூறினால், அது மிகச் சரியாக இருக்கும். பல முறை, தானநந்தா கேட்ட கேள்விகளுக்கு சுவடிகளைப் படித்துச் சொல்கிறேன் என்று சொல்லி விட்டு, மிஸ்ரபானு ரகசியமாக கோன காமாவைச் சந்தித்து அவன் மூலமாக விடைகளைப் பெற்று, மன்னரின் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பது வழக்கம்.

ஆனால் கோன காமா கிறுக்கு பிடித்தவன். அவனிடம் சென்று, “எனக்கு நீண்ட ஆயுள் உண்டா” என்று ஒருவன் கேட்டால், "நீ பித்து பிடித்து ஆடைகளைக் கிழித்துக் கொண்டு ஓடும் விதி உனது அந்திமப் பருவத்தில் இருப்பதால், நிச்சயம் உனக்கு நீண்ட ஆயுள்!” என்று

https://telegram.me/aedahamlibrary

கூறுவான். கேட்டவனுக்கு வாழும் எண்ணமே போய்விடும்.

கோன காமா எதிர்காலத்தை கணிக்க விசித்திரமான முறையை கையாண்டான். அவனிடம் கூடை கூடையாக அட்டப்பூச்சிகள் [1] உண்டு. அந்த அட்டப்பூச்சிகள் இடும் முட்டைகளின் கோல வரிசைகளைக் கொண்டு திரிகாலத்தையும் கூறி விடுவான்.

மிஸ்ரபானு யோசித்தார். கோன காமாவைச் சந்தித்துவிட்டு வருகிறேன் என்று கூறினால், மன்னனிடம் இவருக்குள்ள செல்வாக்கு பாதிக்கப்படும். மன்னனே எல்லாவற்றிற்கும் கோன காமாவை நாடத் துவங்கிவிடுவான். மன்னனுக்குத் தெரியாமல் காமாவைச் சந்தித்துவிட்டு, பிறகு இவராகக் கண்டு அறிந்ததுபோல் கூறினால்தானே, இவருக்குப் பெருமை.

“மன்னா! எனக்கு ஒரு இரவு தாருங்கள். இன்றிரவு முழுவதும் த்யானம் செய்து, தேவ பிரஷ்ணம் போட்டு, தேவ உடும்பரத்தைப் பற்றி தகவலைச் சேகரித்து, நாளை சூரியோதயத்திற்குப் பிறகு தங்களைச் சந்திக்கிறேன்!” மிஸ்ரபானு எழுந்து நின்று மன்னனைப் பணிவுடன் வணங்கினார்.

“எதையோ செய்யுங்கள்! தீர்வுடன் வாருங்கள்!” என்ற தானநந்தா அறையை விட்டு வெளியேற, ஹரஹர மகாதேவ் புன்சிரிப்புடன் அவரை நோக்கி வந்தார்.

“ஜோதிடரே! ஒரு இரவில் தங்களால் தேவ உடும்பரத்தைப் பற்றி தகவலைச் சேகரிக்க முடியுமா என்ன? இன்னும் சற்று அதிகமாகவே கால அவகாசத்தினை வாங்கியிருக்கலாமே?” - என்று கேட்டபடி அரண்மனை வாயிலை நோக்கி நடந்தார். அவருடன் மிஸ்ரபானுவும் நடந்தார்.

"இல்லை தலைமை அமைச்சரே! என்னால் எப்படியும் இன்றிரவுக்குள் தகவலைச் சேகரிக்க முடியும். நாளை முழு விவரத்துடன் அரண்மனைக்கு வருகிறேனா இல்லையா பாருங்கள்!” - மிஸ்ரபானுவின் குரல் சவாலாக ஒலித்தது.

அன்றிரவு ---

ஊரடங்கி விட்டது. புஷ்பபுர எல்லையில் இருந்த காட்டினுள்

https://telegram.me/aedahamlibrary

நுழைந்தார் மிஸ்ரபானு. காட்டின் எல்லையிலேயே தனது மாட்டு வண்டியை நிறுத்தி விட்டு, ஒரு சுளுந்தினை கொளுத்திக்கொண்டு, அந்த அடர்ந்த காட்டின் மையத்தில் இருந்த கழுகுமலையை நோக்கி நடந்தார். கழுகுமலை விரைவிலேயே கண்களில் தென்பட்டது. பெயர்தான் கழுகுமலையே தவிர அது ஒரு சிறு குன்றம்தான். அதிலும் கற்பாறைகள் மட்டுமே காணப்பட்ட சிறு குன்றம். பாறைகளின் நடுவேதான், கோன காமா வாசம் செய்த குகை இருந்தது.

மிஸ்ரபானுவிற்கு அதிக உயரம் ஏற வேண்டிய அவசியம் இருக்கவில்லை. குன்றத்தின் துவக்கத்திலேயே காமாவின் குகை இருந்தது. குகையினுள் தீ ஒளிர்ந்து கொண்டிருக்க, அதன் ஒளி வெளியே நின்ற பாறைகளில் பிரதிபலித்தது. மிஸ்ரபானுவுக்கு உள்ளூர நடுக்கம்தான். கோன காமா எதிர்மறையாக எதையாவது கூறிவிடப் போகிறானே என்கிற அச்சம்.

மிஸ்ரபானு குகையினுள் நுழைந்தபோது கோன காமா கண்களை மூடி தியானம் செய்துகொண்டிருந்தான். கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பில் வெடித்துக்கொண்டிருந்த சுள்ளிகளைத் தவிர வேறு ஒலி இல்லை.

சற்று நேரம் மௌனமாக காமாவையே பார்த்துக் கொண்டிருந்தார் மிஸ்ரபானு. இவர் விடும் சுவாசக் காற்றை இவராலேயே துல்லியமாகக் கேட்க முடிந்தது. ஆனால் கோன காமாவிடம் எவ்வித அசைவும் இல்லை.

அவனை தியானத்தில் இருந்து எழுப்புவதா அல்லது சற்று நிதானிக்கலாமா என்று மிஸ்ரபானு யோசித்துக் கொண்டிருந்தார். பிறகு, அவனை எழுப்பி, தான் வந்திருப்பதை உணர்த்தி விட எண்ணினார்.

"கோன காமா!" என்று அழைப்பதற்காக வாய் திறக்க முயன்றார் மிஸ்ரபானு. சட்டென்று அவனது கணீரென்ற குரல் ஒலித்தது.

"என்ன வேண்டும்! வந்திருப்பது யார்?" - கண்களைத் திறக்காமல் அவன் கேட்க, அரண்டு போன மிஸ்ரபானு, பிறகு சமாளித்தபடி பேசினார்.

"நான் தானநந்தா மன்னரின் அரண்மனை ஜோதிடர் மிஸ்ரபானு! ஒரு முக்கியமான தகவலைப் பெறவேண்டி தங்களை நாடி வந்திருக்கிறேன்!"

https://telegram.me/aedahamlibrary

மிஸ்ரபானு கூறியதும், கோன காமாவிடம் இருந்து ஏளனமான சிரிப்பு ஒன்று எழுந்தது.

“அரண்மனை ஜோதிடர், இந்தக் குளிர் இரவில், என்னை நாடி வந்திருக்கிறார் என்றால், அவர் நாடும் விவரம் மிக முக்கியமானதுதான். நீர் நாடும் விவரம் என்ன என்பதை தெரிவிக்கலாம்!” இன்னும் கோன காமா கண்களைத் திறக்கவில்லை.

“காமா! எங்கள் மன்னர் தானநந்தா அஸ்வமேத யாகத்தைச் செய்ய உத்தேசித்துள்ளார். அவர் செய்யப்போகும் யாகத்திற்கு தேவ உடும்பர மரம் தேவை. “நம் மகத ராஜ்யத்தில் தேவ உடும்பர மரம் எங்கு உள்ளது என்பதை அறியவே நான் இங்கு வந்திருக்கிறேன்!” --- மிஸ்ரபானு இவ்வாறு கூறியதும் தான் தாமதம்.

சடாரென்று கோன காமாவின் கண்கள் திறந்தன. அவனது கண்கள் மிஸ்ரபானுவை துளைப்பது போன்று வெறித்து நோக்கின.

"தேவ உடும்பரமா? ஞானம் உள்ளவர்கள் நாடுவது அது. உமது மன்னன் ஏன் அதனை நாடுகிறான்? அவனுக்கு ஏன் அஸ்வமேத யாகம் செய்யும் ஆசை?”

காமாவின் குரல் நையாண்டியாக ஒலித்தது.

மன்னன் ஞானமில்லாதவன் என்னும் பொருள்பட கோன காமா பேச, அதனை எதிர்க்கத் துணிவின்றி மௌனம் காத்தார், மிஸ்ரபானு. வந்த காரியம் நிறைவேறும் வரை அவனை எதிர்த்துக்கொள்ளக் கூடாது. அவனை எதிர்க்கும் தகுதியும் அவரிடம் இல்லை. இவருக்குப் பல உதவிகளைச் செய்திருக்கிறான்.

“உண்மையாகவே யாகம் செய்வதற்காகத்தான் தேவ உடும்பரத்தை நாடுகிறானா, தானநந்தன் இல்லை அதன் பின்பாக வேறு ஏதாவது திட்டம் இருக்கிறதா?” - காமா சந்தேகத்துடன் கேட்டான்.

"இல்லை காமா! உண்மையாகவே மன்னன் அஸ்வமேத யாகம் செய்வதற்காகத்தான் தேவ உடும்பரத்தைத் தேடுகிறாரே அன்றி, வேறு ஒன்றும் காரணம் இல்லை. மன்னரின் மகள் துர்தராவின் ஜாதகத்தில் இருக்கும் தோஷங்கள் நீங்கவும், மன்னரின் தந்தை மகாபத்ம நந்தாவின் விருப்பத்தை பூர்த்தி செய்யவுமே, இந்த யாகம் பைராகியின்

https://telegram.me/aedahamlibrary

ஆலோசனையின் படி நடைபெற உள்ளது!" மிஸ்ரபானு கூற, சற்றுநேரம் யோசித்தான், கோன காமா.

"பைராகியே கூறி விட்டானா? அப்படியென்றால் கலியின் களியாட்டம் துவங்கி விட்டது!" - மனதினுள் நினைத்த கோன காமா, நிதானமாக எழுந்தான். தன் முன்பாக எரிந்துகொண்டிருந்த தீயை வலம் வருவது போன்று நடந்தவன், ஒரு மூலையில் இருந்த மரக்குடுவை ஒன்றை நோக்கி நகர்ந்தான். மரக்குடுவையைக் கையில் எடுத்துக்கொண்டு மிஸ்ரபானுவை நோக்கி வந்தான். அந்த மரக்குடுவையில் நிறையத் துளைகள் இருந்தன.

குடுவையை சுடர்விடும் தீயின் அருகே வைத்தான்.

"அட்டடப்பூச்சிகள் சூரியோதயத்தின் போதுதான் முட்டையிடும். சூரிய ஒளி பூமியில் பரவும்போது, அட்டடப்பூச்சிகள் தமது கூட்டிலிருந்து வெளியே வந்து வரிசையாகவும், கோலம் போடுவது போன்றும் முட்டையிடும். அந்த முட்டை கோலத்தின் வாயிலாகவே நமக்கு எதிர்காலத்தை கணித்து கூறும். இந்த ஜோதிட பூச்சிகளின் உதவியோடுதான் உமக்கு தேவ உடும்பர மரம் இருக்கும் இடத்தினைக் கண்டு அறியப் போகிறோம்!" காமா கூறினான்.

"இந்த நடுநிசியில் சூரிய ஒளிக்கு எங்கே போவது?" மிஸ்ரபானு கவலையுடன் கேட்டார். நாளை சூர்யோதயத்திற்கு அரண்மனை செல்ல வேண்டும் அல்லவா?

"அதனால்தான் குடுவையினை தீயின் அருகே வைத்திருக்கிறேன். மனிதர்களாகப் பிறந்து விட்டோம்.! இயற்கையை ஏமாற்றிப் பிழைப்பதுதானே நமது பணி. இந்தக் குடுவையை தீயின் அருகே வைத்தால், அந்த கதகதப்பிற்கும், வெளிச்சத்திற்கும், சூரியன் உதித்து விட்டதாக நினைத்து, இந்த அட்டடப்பூச்சிகள், தங்கள் கூட்டை விட்டு வெளிவந்து முட்டைகளை வரிசையாக இடும். நாம் கேட்கும் கேள்விகளுக்கு பதிலினை தரும்!" - காமா சொன்னார்.

"சூரியன் உதித்ததா இல்லையா என்பதைக்கூட அறியாமல் முட்டையிடும் இந்தப் பூச்சிகளால் நமது கேள்விகளுக்கு எப்படி பதில் தர முடியும்?" -- சந்தேகத்துடன் கேட்டார், மிஸ்ரபானு.

"தேவ உடும்பரம் எங்கே இருக்கிறது என்பது கூட அறியாமல் உள்ள,

https://telegram.me/aedahamlibrary

நீயும், நானும், இந்த புஷ்பபுரத்து மக்களிடம் ஜோதிடர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிவதில்லையா? அதுபோல்தான் இதுவும்!" என்ற கோன காமா குடுவையை தீயின் அருகே இன்னும் நகர்த்தி வைத்தான்.

"அட்டகமே! மன்னன் செய்ய உள்ள அஸ்வ மேதத்திற்கு தேவ உடும்பர மரம் தேவைப்படுகிறது. நமது ராஜ்யத்தில் தேவ உடும்பரம் எங்கே உள்ளது?" --- கோன காமா கேட்டான்.

அட்டப்பூச்சி ஒன்று குடுவையின் உள்ளேயிருந்து வந்து சற்று நேரம் அசையாமல் நின்றது. அதன் இருபக்க இறக்கைகளும் யாரோ முடி போட்டது போன்று காணப்பட்டன. திடீரென்று ---

தனது இறக்கைகளை படபடவென்று அடித்துக் கொண்டு, இப்படியும் அப்படியுமாக ஊர்ந்த அந்த அட்டப்பூச்சி பிறகு கிழக்கே திரும்பி சிறிது தூரம் சென்று நின்றது. பின்பு துகள்கள் போன்ற தனது கரிய நிற முட்டைகளை ஏதோ எழுத்து வடிவில் இடத்துவங்கியது. அது முட்டையிட்டு முடிந்த போது ஒரு சொல் உருவாகியிருந்தது.

--- அஸத் ---

மிஸ்ரபானு அதைப் பார்த்ததும் திகைத்தார்...

"காமா! இது பாலி மொழி எழுத்து. "அஸத்" என்று வந்திருக்கிறது.! நான் கூறியதை இந்த அட்டப்பூச்சி நம்பவில்லையா...? தேவ உடும்பரம் எங்கே உள்ளது என்று கேட்டதற்கு அசத்தியம் என்கிறதா?" - குரலில் ஏமாற்றம் கொப்புளிக்க, காமாவைப் பார்த்தார், மிஸ்ரபானு.

கோன காமா கடகடவென்று நகைத்தான்.

"இயற்கையின் சூட்சமங்களைப் புரிந்துகொள்ள நுண்ணறிவு தேவை, ஜோதிடரே! அரண்மனை போகங்கள் தான் உமது ஜோதிட சிந்தனையை மழுங்கச்செய்து விட்டன போலும்!" காமா சொன்னான்.

பிறகு அவனே அந்த அட்டப்பூச்சியின் செயலை விளக்கினான்.

"ஜோதிடரே! அட்டப்பூச்சி கிழக்காக ஊர்ந்து சென்று, முட்டைகளை இட்டதால், நாம் நிற்கும் பகுதிக்கு கிழக்கு திசையில் தேவ உடும்பர மரம் உள்ளது. அஸத் என்னும் சொல் நீர் கூறியது போன்று அசத்தியம்

https://telegram.me/aedahamlibrary

என்கிற பொருள் அல்ல. அசத்வத்தை நீக்கி சத்வத்தை சிந்தையில் பரவச்செய்யும் அசத்து மரம் என்னும் பொருள்."

மிஸ்ரபானு வாய்பிளந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

"வைதீக மதத்தை பின்பற்றும் தங்களுக்கு, பௌத்த தத்துவங்கள் எப்படிப் புரியும்? கூறுகிறேன் கேளுங்கள்!" காமா பேசத்துவங்கினான்.

"சித்தார்த்தன் என்கிற இளவரசன், அவன் மனைவி யசோதரா, அவனது குதிரை கந்தகா, அவனது பட்டத்து யானை குணா, அவனது தேரோட்டி சன்னா, மெய்க்காப்பாளன் வேனானந்தா என்று அனைவருமே ஒரே நாளில் தான் பிறந்தார்கள் என்கிற, தகவல் சித்தார்த்தனுக்கு தற்செயலாகத்தான் தெரிய வந்தது. இது அவனுக்கு பெரிய ஆச்சரியமாகத் தோன்ற, அதனைப் பற்றி ஆராய்வதற்கு தலைப்பட்டான். பின்னர் உலகத்தினைப் பற்றிய ஆராய்ச்சிகளில் இறங்கி, ஞானம் பெற போதி மரத்தடியில் அமர்ந்தான்.

"ஞானம் பெறுவதற்கு ஒருவன் அமரும் மரம், அவனுக்கு ஞானத்தை போதனை செய்த மரமாகும். அது எந்த மரமானாலும் சரி. சித்தார்த்தன் பிறந்த அன்றைக்குத்தான் தேவ உடும்பர மரம் ஒன்று, அவதார புருஷனான புத்தன் பிறந்து விட்டான் என்பதைத் தெரிவிக்கத் திடீரென்று பூத்தது. ஒரு நாள் நள்ளிரவு, ஞானத்தைப் பெறவேண்டி, கயாவிற்கு வந்த சித்தார்த்தன் அந்த தேவ உடும்பர மரத்தின் அடியில் தியானம் செய்ய அமர்ந்து விட்டான். அதனடியில் ஞானம் பெற்றதால் அது அவனுக்கு போதி மரம் ஆனது. இப்போது புரிகிறதா? உமது மன்னன் தானநந்தா தேடும் உடும்பர மரம், பௌத்த கயையில் இருக்கும் புத்தர் அமர்ந்த மரம்தான்" கோன காமா விளக்க, சுவாசத்தினை இழுத்துப் பிடித்தார், மிஸ்ரபானு.

"சித்தார்த்தனின் அசத் - தை நீக்கி சத் - தினை பரவச்செய்த போதி மரத்தினை அஸத்த மரம் என்று நாங்கள் பௌத்தர்கள் கூறுவோம். அந்த மரத்தினைதான் அட்டப்பூச்சி குறிக்கிறது!" - காமா கூறினான்.

தானநந்தா தேடும் தேவ உடும்பர மரம் கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் உடனேயே அரண்மனைக்கு ஓடிச்சென்று மன்னனிடம் விவரத்தைக் கூறி விடத் துடித்தார், மிஸ்ரபானு.

"தன்யோஸ்மி கோன காமா! வந்த காரியத்தை எளிதாக முடித்து

https://telegram.me/aedahamlibrary

விட்டீர்கள்!”- எழுவதற்கு முற்பட்ட மிஸ்ரபானுவைக் கையமர்த்தினான், காமா.

வியப்புடன் அவனது முகத்தை நோக்கினார், ஜோதிடர்.

“அடிமடியில் கையை வைக்கத் துணிந்து விட்டீரே, ஜோதிடரே. மிகவும் அவசரமோ? இதனை சற்று கவனியுங்கள்!” - காமா கூறினான்.

குனிந்து கிழக்கே பயணித்திருந்த அந்த அட்டப்பூச்சியை மீண்டும் கூர்ந்து கவனித்தார், மிஸ்ரபானு.

மீண்டும் முட்டையிட்டபடியே, தான் வெளிவந்திருந்த குடுவையை நோக்கி நகர்ந்தது, அந்த அட்டப்பூச்சி.

“சர்வ நாசம்!” - என்ற சொல்லாக அந்த கரிய முட்டை வரிசைகள் காணப்பட, கோன காமாவின் கண்கள் இரத்தச் சிவப்பினை அடைந்தன

"தேவ உடும்பரத்தை தீய எண்ணங்களுடன் நாடாதே. நாசம் விளையும்!” கோன காமா எச்சரித்தான்.

"யாகத்துக்குதான் காமா, தேவ உடும்பர சமித்துகள் தேவைப்படுகின்றன. அந்தக் குச்சிகளைத்தான் சேகரிக்கப் போகிறோமே தவிர, மரத்திற்கு எந்த கேடும் விளையாமல் பார்த்துக்கொள்கிறோம்!" - மிஸ்ரபானு அவனை சமாதானம் செய்தார்.

"அட்டத்தின் எழுத்து திட்டவட்டமானது. அது பொய் உரைக்காது. உமது மன்னன் தானநந்தனை எச்சரிக்கையுடன் செயலாற்றச் சொல்லுங்கள், ஜோதிடரே!” -

கோன காமாவின் குரலில் தென்பட்டது உக்கிரமா, அல்லது நடுக்கமா?

மிஸ்ரபானுவுக்கு இதயம் சில்லிட்டது.

[1] அட்டப்பூச்சிகள் வேத காலத்தை சேர்ந்தவை. இவற்றை ஆங்கிலத்தில் **lace-winged insects** என்று சொல்லுவார்கள். பூச்சிகளின் இருபுறமும், எண் எட்டு (நம்பர் 8) வடிவில் இறக்கைகள் இருக்கும். எட்டு எண்ணைப் போன்ற இறக்கைகளை உடையதால் இதனை அஷ்ட பூச்சி (தமிழில் அட்டப் பூச்சி) என்பார்கள். இந்தப் பூச்சி, முட்டைகளை வரிசையாக விதம் விதமான டிசைன்களில் இடும். அதனைக்கொண்டு

https://telegram.me/aedahamlibrary

எதிர்காலத்தை கணிப்பார்கள். இந்த முட்டை ஜோசியத்தை ஜப்பானிய மொழியில் டோங்கோ என்று கூறுவார்கள். பௌத்தர்களால் இந்த அட்டப்பூச்சி ஜோசியம் பிரபல்யம் ஆக்கப்பட்டது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 7. தீயினில் கருகிய குடில்

தனது குடில் தீயினில் கருகிக்கொண்டிருப்பதை கண்ட மாத்திரத்தில் விஷ்ணுகுப்தனின் இதயம் பிளந்து, அதில் இருந்து குருதி பொங்கியது.

“ஐயோ! அம்மா... அப்பா!” - அலறியபடி தனது குடிலை நோக்கிப் பாய்ந்தோடினான். குடிலினை நெருங்கும்போது, யாரோ திபுதிபுவென்று ஓடிச்செல்வதை பார்த்தான். கயவர்கள் சிலர் தங்களது குடிலுக்கு தீ வைத்துவிட்டு ஓடுகின்றனர் போலும். தந்தை ஒரு அஜாதசத்ரு. அவருக்கு எதிரிகளே இருக்க முடியாது.! என்றால், அந்தக் கயவர்கள் இவனுக்குதான் தீங்கு நினைத்திருக்க வேண்டும்.

இரும்புக்கூண்டுக்குள் நின்றபடி இவனை சபிப்பது போன்று பார்த்தாளே, ஹைமாவதி. உடனிருந்த சுபர்ணா தனது சகோதரன் ஆதர்ஷனிடம் இவனை பற்றி புகார் கூறினாளே. இது ஆதர்ஷனின் லீலையாகத்தான் இருக்க வேண்டும்.

விஷ்ணுகுப்தன் குடிலை அடைவதற்குள், தீ நன்றாகப் பரவி, உறங்கிக்கொண்டிருந்த தனது பெற்றோரை பலி வாங்கிக் கொண்டது என்பதை அறிந்துகொண்டான். முந்தைய நாள் மாலையில் தன்னை தாயும், தந்தையும் உச்சி முகர்ந்து அரவணைத்ததே, தனக்குக் கிடைத்த இறுதி பாசபரிவர்த்தனை என்பதையும் புரிந்துகொண்டான். அவனது தொண்டைக் குழியினில் பிறந்த துக்கம் பந்தாக அடைத்தது. சற்று நேரம்தான்! அந்த துக்கம் கசப்புணர்வாக மாறி, பிறகு துவேஷமாக உருவெடுத்தது.

“அத்தியூரா! உனக்கு இரவு பகல் பாராமல் கைங்கர்யத்தை செய்து வந்த எனது தந்தைக்கு இதுதானா முடிவு? கல்லான பிரதிமைக்குதான் மனம் இரங்காது. நீ வளங்களை வாரியளித்து எதிரிகளிடமிருந்து மக்களை ரட்சிக்கும் தேவ உடும்பரம் என்னும் பூவரச அத்தியில் உருவான தேகத்தை கொண்டிருந்தும், என் தந்தைக்கு நீ ஏன் கருணை காட்டவில்லை?”

இல்லையே! இரக்கம் காட்டத்தானே செய்திருக்கிறான். இவனை சம்பவ இடத்திலிருந்து நகர்த்திச்சென்று, இவனும் தீயினில் கருகிவிடாதபடி காத்திருக்கிறானே, அத்திமலைத்தேவன்.

https://telegram.me/aedahamlibrary

இவனை எதற்குக் காக்க வேண்டும்? தாயைப் பிரிந்து இவன் அரசனாகத் திகழ்வான் என்று இவனது பல்வரிசையினை புகழ்ந்து கூறியதற்கே, தனது பற்களை உடைத்துக்கொண்டவன், அவளை நிரந்தரமாகப் பிரிந்துவிட்டான் என்பதை அறிந்தபிறகு வாளாயிருப்பானா என்ன?

தீயினுள் குதித்து தன்னையும் பொசுக்கிக் கொண்டு விட தீர்மானித்து எரியும் குடிலினை நோக்கி ஆவேசத்துடன் நடந்தான். இல்லை.! இப்போது இவன் உயிரை மாய்த்துக்கொள்ளக் கூடாது. பெற்றோர் மகனை ஈன்று எடுப்பதே தங்களது அந்திமத்தில் அவன் கரை ஏற்றுவான் என்பதால்தானே!

தாய் - தந்தையருக்கு தனது கடமைகளை முடித்து விட்டு, அவர்களது சமஸ்காரங்களைச் செய்துவிட்டு, பிறகு வேகவதியாற்றில் மூழ்கி விட வேண்டியது தான்.

தனக்குள் முடிவு செய்தான், விஷ்ணுகுப்தன். காலை வரை எரிந்து கொண்டிருந்த அவனது குடிலில் தீ மட்டுப்பட்டு, புகையத்தொடங்கியதும், அம்மா வெளியே வைத்திருந்த இரு மண் கலயங்களை கையிலெடுத்துக் கொண்டு, புகைமூட்டத்தின் நடுவே நுழைந்து தனது பெற்றோர் உறங்கிக்கொண்டிருந்த இடத்தினை நோக்கி நடந்தான். முழுவதுமாகவே அவர்கள் பஸ்பம் ஆகியிருக்க, அவர்களது எலும்புக் கூடுகள் மட்டும் படுத்திருந்த நிலையில் காணப்பட்டன. முதலில் தந்தையின் அஸ்தியை ஒரு கலயத்திலும், மற்றொன்றில் தாயின் அஸ்தியையும் சேகரித்தான்.

ஹஸ்திகிரி அருளாளன் என்று தேவராஜனை போற்றிக்கொண்டிருந்த காஞ்சனகுப்தர், இன்று அஸ்தியாகவே மண் கலயத்தினில் கிடந்தது, விஷ்ணுவின் மனதைச் சுக்குநூறாக வெடிக்கச் செய்தது.

குடிலில் பெரிதாக பொருட்கள் ஒன்றும் கிடையாது. மனைகள், ஓலைப்பாய், தர்ப்பைப் புல் கட்டுகள் என்று எல்லாமே வைதீகப் பொருட்கள் தான். திடீரென்று, சிந்தையில் ஏதோ உறைக்க, விஷ்ணுகுப்தன் பூஜா மாடத்தை நோக்கித் திரும்பினான்.

அவனது தந்தை ஆராதித்த திருமாலின் விக்கிரகம் அங்கே உருக்குலையாமல் இருந்தது. கலயங்களின் அருகே அமர்ந்திருந்தவன், எழுந்து சென்று விக்கிரகத்தை கையில் எடுப்பதற்கு முயன்றான். அந்த

https://telegram.me/aedahamlibrary

பஞ்சலோக விக்கிரகம் இவனால் தொட முடியாதபடி தகித்துக் கொண்டிருந்தது... நடந்ததை எண்ணி மாலவனும் மனம் கொதிக்கின்றான் போலும்!

தனது மேல் துண்டினால் அந்த சிறிய விக்கிரகத்தை எடுத்துக்கொண்டான். மண் கலயங்களையும் சுமந்து கொண்டு, அங்கிருந்து வெளியேறி, வேகவதி ஆற்றை நோக்கி நடந்தான்.

இந்த வேகவதியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக எத்தனை முறை வந்திருப்பாள், இவனது தாய் சானேஷ்வரி! வேகவதி எனது தாய் என்று அடிக்கடி கூறிக்கொண்டே இருப்பாள். இப்போது தாயின் மடியிலேயே நிரந்தரமாக அடைக்கலம் ஆகப்போகிறாள்.

முதன்முறையாக விஷ்ணுகுப்தனுக்கு ஒரு உண்மை உறைத்தது. தாய், தந்தை அநியாயமாகத் தீயினில் பொசுங்கியதை எண்ணி, மனம் கொதித்துக் கொண்டிருக்கிறானே தவிர, இதுவரை ஒரு சொட்டு கண்ணீர் கூட சிந்தவில்லையே! விஷ்ணுவிற்கே காரணம் தெரியவில்லை.

ஆற்றை அடைந்ததும், தான் சுமந்து வந்த மண் கலயங்களை கீழே வைத்தான். ஆற்றினுள் இறங்கி தலை மூழ்கியவன், மீண்டும் எழுந்து கரையை அடைந்தான். விடிவெள்ளி அத்திமலை இருக்கும் திக்கினை உணர்த்த, ஒரு முறை அத்திமலையானை நோக்கி கரங்களை குவித்தான்.

பின்பு மந்திர உச்சாடனங்களை ஜபிக்கத் துவங்கினான். தேகத்தை இழந்த பெற்றோருக்கு, மண்ணில் தேகத்தை வரைந்து பின்பு அந்த தேகங்களுக்கு அந்திம கிரியைகளைச் செய்யத் துவங்கினான். பிறகு கலயங்களை இரு தோள்களிலும் சுமந்தபடி ஆற்று நீரில் இறங்கினான்.

இடை வரை நனைய, நீரில் நின்றான். “தாயே! எனது ஜனனத்தை உண்டாக்குவதற்காக, உனது பிண்டத்திலிருந்து எனக்கு தேகத்தை சமைத்தாய். தந்தையே! நான் உய்வதற்காக எனக்கு ஞானத்தைத் தந்தீர். விஷ்ணுகுப்தன் என எனக்கு பெயரிட்டு அருமையாக என்னை வளர்த்தீர். உம்மையும், அன்னையையும் இதோ கரையேற்றுகிறேன். பித்ரு உலகிற்கும் நிலவுலகிற்கும் இடையேயான, தொலைவினை ஒரே நாளில் கடந்து பித்ரு லோகத்தில் மனவமைதியுடன் காத்திருங்கள். உங்களை நானும் பின்தொடர்ந்து வருகிறேன்!” என்று

https://telegram.me/aedahamlibrary

முணுமுணுத்தபடி, அத்திமலையினை நோக்கி நின்று, தாய் தந்தையின் அஸ்தி நிறைந்த கலயங்களை தனது பின்பாக நழுவ விட்டான். அஸ்தி கலசங்கள் நீரில் மூழ்கின. திரும்பிப் பாராமல் நடக்க வேண்டும். திரும்பி நோக்கினால், இறந்தவர்களின் ஆன்மா பந்தத்தினை அறுக்க இயலாமல் துன்பப்படும் என்கிற சாத்திரம் நினைவுக்கு வர, திரும்பி நோக்காமல் நடந்தான், விஷ்ணுகுப்தன்.

திடீரென ---

சிந்தையில் பளீரென்று ஒரு பொறி தட்டியது.

“ஐயோ! தந்தை ஆராதித்து வந்த மாலவனின் விக்கிரகத்தை ஒரு கலயத்தின் மீது அல்லவா வைத்திருந்தேன்? அதையும் சேர்த்து அல்லவா ஆற்றினில் எறிந்து விட்டேன்!” ----

பதைபதைப்புடன் உடனே திரும்பி ஆற்றை நோக்கி நடந்தான். கலயங்கள் நீரில் மூழ்கி விட, அஸ்தி சாம்பலின் படிமம் மட்டும் நீரில் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டான். எதற்காக நாம் தந்தையின் விக்கிரகத்தை நாட வேண்டும். எப்படியும் இவன் தன் கதையை முடித்துக்கொள்ளத்தானே நினைத்திருந்தான்.

வைதீக குலத்தில் பிறந்து, பிராண ஹத்தி செய்வது மகாபாவம் என்று தந்தையே இவனுக்கு போதித்து உள்ளாரே. தற்கொலை செய்து கொள்வது அவரது போதனையை மீறுவது போல்தானே ஆகும்!

விஷ்ணுகுப்தன் குழம்பினான். தந்தையே போய் விட்டார். இனி இவன் தனது போதனையை கடைப்பிடிக்கின்றானா அல்லது மீறுகின்றானா என்று பார்த்துக்கொண்டு இருக்கப்போகின்றாரா என்ன?

வேகவதி ஆறு சுழித்து நுரை பொங்க வேகமாக ஓடிக் கொண்டிருக்க, ஆற்று நீரையே சற்று நேரம் வெறித்தவன், என்ன செய்யலாம் என்று சிந்தையில் சக்கரம் சுழன்று கொண்டிருக்க, சரியாக சூரியனும் உதிக்கத் துவங்கினான்.

ஆடாமல், அசையாமல் கற்சிலை போன்று நின்று கொண்டிருந்த விஷ்ணுகுப்தன், பிறகு ஒருவித தீர்மானத்துடன் வேகவதியாற்றினுள் பாய்ந்தான். ஆற்றின் அலைகள் அவனை புரட்டிப்போட, அவனோ அவற்றுடன் போராடி நீரில் மூழ்கி நீந்த முயன்றான். உயிரை

https://telegram.me/aedahamlibrary

மாய்த்துக்கொள்ளலாமா, இல்லை பெற்றோரை தீயில் கருக வைத்துக் கொலை செய்த அந்தக் கயவர்களைத் தேடிக் கண்டுபிடித்து பழிவாங்கலாமா? இரு வேறு எண்ண அலைகள் அவனது சிந்தையைச் சிதறடிக்க, வேகவதியின் அலைகளும் அவனை இப்படியும் அப்படியுமாக அலைக்கழித்துக் கொண்டிருந்தன. பெற்றோரை தொடர்ந்து சென்று விடலாம் என்கிற எண்ணம் மேலோங்க, இறுதியாக ஒரு முறை அத்திமலையை தரிசிக்கும் எண்ணத்துடன் மேல்நோக்கிப் பாய்ந்தான்.

மீண்டும் ஆற்றின் மேல்மட்டத்திற்கு வந்து, சுவாசித்தான். கதிரவன், இப்போது முழுவதுமாக உதித்து வானை ஆக்கிரமித்து மண்ணுயிர்களுக்கு புத்துணர்வை அள்ளித்தந்து கொண்டிருந்தான். நீரில் மிதந்து கொண்டிருந்த விஷ்ணுவின் உடலிலும் புதிய உத்வேகத்தைப் பாய்ச்சினான்.

நீரில் நீந்தியபடியே அத்திமலையை ஒரு முறை நோட்டம் விட்டான், விஷ்ணு.

"யாக குண்டத்தில் தோன்றியவனே! எனது பெற்றோரையே அவிர்பாகமாக எடுத்துக்கொண்டாய். எனக்கு ஒரு நல்வழி காட்டு. அவிர்பாகமாக தீயினில் பொசுங்கி உனக்கு உணவாயினர், என் பெற்றோர். உணவு உண்டதும் நீர் பருக வேண்டுமல்லவா? இதோ நீரில்தான் நான் இருக்கிறேன். என்னையும் ஏற்றுக்கொள்!” - என்று நினைத்தபடி மீண்டும் ஆற்றில் மூழ்கினான். இம்முறை நீந்துவதற்கு எவ்வித பிரயத்தனமும் செய்யாமல், ஆற்றின் அடியை நோக்கிப் பயணித்தான். “இந்த வேகவதியிலேயே வேதம் பயின்ற என் கதை முடியட்டும்!” - என்று நினைத்தபடி தொடர்ந்து மூழ்கிக்கொண்டிருந்தான்.

நீர் பார்வையினை மறைக்க, ஒரு முறை கண்களைக் கசக்கிவிட்டு, கண் திறந்து பார்த்தான். மேலே அலையடித்தபடி விரைவாக ஓடிக்கொண்டிருந்த வேகவதி ஆறு, உள்ளே முற்றும் துறந்த முனிவனைப் போன்று நிச்சலனமாக இருந்தது. இப்போது விஷ்ணுகுப்தனால், எளிதாகக் காண முடிந்தது. ஆனால் மீண்டும் சுவாசம் வாங்க, மேலே சென்று மீண்டும் காற்றை சுவாசப்பையினில் நிரப்ப வேண்டும் போன்று தோன்றியது.

ஆனால் ---

https://telegram.me/aedahamlibrary

அது? சூரிய ஒளியில் மங்கலாக ஏதோ ஒளிர்கின்றதே.! ஏதோ என்ன? இவனது தந்தை ஆராதித்த அதே மாலவனின் விக்கிரகம்தான்! "நான் இதோ இருக்கிறேன்!” என்பது போன்று மங்கிய சூரிய ஒளியில் தகதகத்துக் கொண்டிருந்தது. முந்தைய நாள் நீரில் எறிந்து, பிறகு இன்று நீரில் கிடக்கும் அந்த விக்கிரகம் அவனுள் சிலிர்ப்பினைத் தோற்றுவித்தது. அதனைக் கண்டதும், தந்தையின் முகத்தையே காண்பது போன்று ஒரு உணர்வு. தனது சுவாசத் திணறலையும் பொருட்படுத்தாமல், அந்த விக்கிரகத்தை நோக்கி நீந்தினான்.

ஆற்றின் மணற்படுகையை அடைந்ததும், நீரில் நீந்தியும் மண்ணில் ஊர்ந்தும் ஒருவழியாக அந்த விக்கிரகத்தை அடைந்தான். ஆற்றின் மணற்படுகையில் கரிய நிறக் கற்பாறையின் மீது கிடந்தது மாலவனின் விக்கிரகம். அதனை கையில் எடுக்க முயன்றான். அவனால் அதை எடுக்க இயலவில்லை. அந்தப் பாறையின் பிளவினில் விக்கிரகம் சிக்கிக்கொண்டிருந்ததை அறிந்தான். இரு கைகளினால் பற்றி அந்த விக்கிரகத்தை இழுத்தான் விஷ்ணு. பாறை அசைந்து கொடுத்ததே தவிர, விஷ்ணுவினால், அந்த விக்கிரகத்தை கையில் எடுக்க முடியவில்லை. வியப்புடன் அக்கற்பாறையை கூர்ந்து கவனித்தான். தனது கையினால் அதனை தடவிப்பார்க்க, அது கற்பாறை அல்ல என்பதை உணர்ந்தான். எக்காலத்திலோ, ஆற்றில் மூழ்கிய ஒரு விருட்சத்தின் உடைந்த பாகம் போலத் தோன்றியது. மணலில் புதைந்து கிடந்தது. சிறிய துண்டாக இருந்த அந்த மரத்தை கையினால் பற்றி இழுத்தான். கையோடு வந்தது, அந்த மரத்துண்டு. விக்கிரகத்தை அப்படியே மரத்துண்டோடு எடுத்து ஆற்றின் மேல்பகுதியை நோக்கி நீந்தினான். ஆற்றின் மேல்பகுதிக்கு வந்தவன், தனது சுவாசத்தை நிலைப்படுத்திக் கொண்டான். கதிரவன் நன்றாகவே உதித்து விட்டிருந்தான். விஷ்ணுகுப்தனின் தேகத்தில் காணப்பட்ட குளிரை தனது கிரணங்களால் விரட்டி அடித்தான், சூரியன்.

கரையை நோக்கி நீந்தியவன், மெதுவாகக் கரையேறினான். தனது கையில் ஆற்றில் கண்டெடுத்த மரத்துண்டுடன், தனது தந்தை வழக்கமாக போதித்த அந்த பூவரச மரத்தின் கீழ் இருந்த மேடையில் சென்று அமர்ந்தான். அவனது குடில் இருந்த இடத்தில் இப்போது குவியலாகச் சாம்பலும், கருகிய மண்பாண்டங்களும் மட்டுமே கிடந்தன. அவனது தந்தை அன்றாடம் தனது முன்னால் வைத்து சுவடிகளை வாசிக்கும் சரஸ்வதி பீடமும் கருகிக் கிடந்தது. தனது தந்தை ஆராதித்து வந்த மாலவனின் மூர்த்தத்தை கூர்ந்து கவனித்தான். அந்த மரத்துண்டின் பிளவில் சிக்கிக்கொண்டிருந்தது, அந்த விக்கிரகம். அதனை

https://telegram.me/aedahamlibrary

எச்சரிக்கையுடன் அந்தப் பிளவிலிருந்து நீக்கி, கையில் எடுத்தான். அந்த மூர்த்தத்தின் முகம் இவனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தது. விக்கிரகத்தை எடுத்துக் கொண்ட நிம்மதியில் அந்த மரக்கட்டையை தூக்கி எறிவதற்காக எத்தனித்தவன் சற்றே நிதானித்தான். அந்த மரத்துண்டினை வியப்புடன் நோக்கினான்.

செந்நிறத்தில் காணப்பட்ட அந்த மரத்துண்டு, சூரியனின் கிரணங்களால் பொன்னிறமாகக் காணப்பட்டது. ஒரு பெரிய முயலின் அளவில் காணப்பட்ட அந்த மரத்துண்டினை கூர்ந்து கவனித்தான், விஷ்ணுகுப்தன்.

"அத்திமலைத்தேவனை தேவ உடும்பர மரத்தில் வடித்த விஸ்வகர்மா, பிரம்மனின் ஆணைப்படி, வேகவதியாக ஆவேசத்துடன் ஓடிக்கொண்டிருந்த கலைமகளின் உக்கிரத்தைத் தணிக்க எண்ணி, மிகுதியாக இருந்த தேவ உடும்பர மரத்துண்டுகளை வேகவதியில் சேர்த்தான்! இந்த மரத்துண்டுகள் இன்னும் வேகவதியின் அடியில் புதைந்திருக்கக் கூடும்." - தந்தை காஞ்சனகுப்தரின் குரல் விஷ்ணுகுப்தனின் செவிகளில் ஒலித்தது.

ஒரு வேளை, இது தேவ உடும்பரமாக இருக்கக் கூடுமோ? எளியேனையும் மன்னனாக அமர்த்தும் தேவ உடும்பரம் இதுதானோ? வளத்தினை வாரியளித்து, மும்மாரியைப் பொழிய வைக்கும் தேவ அத்தி மரம் இது தானோ?

விஷ்ணுவின் இதயத்தை ஆர்வம் பற்றியது. தந்தை குறிப்பிட்டிருந்தது போல் இதுவே தேவ உடும்பர அத்தி மரமாக இருந்துவிட்டால்? அந்த மரத்துண்டினை மீண்டும் கூர்ந்து நோக்கினான். பின்பு கண்களை மூடி, அத்திமலைத்தேவனை ஒருகணம் உருவகப்படுத்திக் கொண்டான்.

ஆமாம்! இதே நிறத்தில்தான் அத்திமலைத்தேவனும் காட்சி தருகின்றான். அன்றாடம் செய்யப்பட்ட ஆராதனைகள் மற்றும் பூசனைகளால் அவனது தேகம் சான்னித்யத்துடன் ஜொலிக்கின்றது. அந்த தகதகப்பு வெகுகாலம் நீரின் அடியில் கிடந்த இந்த தேவ உடும்பர மரத்துண்டிற்கு இல்லை போலும்.

இருப்பினும், விஷ்ணுகுப்தனின் மனம் திருப்தியடையவில்லை. அது தேவ உடும்பர அத்தி மரம்தான் என்பதை எப்படி ஊர்ஜிதப்படுத்திக்கொள்வது?

https://telegram.me/aedahamlibrary

திடீரென, அவனுக்கு அவன் தந்தை கூறியது உறைத்தது. மா, வேப்பம் மற்றும் அரச மரங்களின் சமித்துகளை எரித்தால் அவை பொன்னிறத் தீ நாக்குகளை வெளிப்படுத்தும். ஆனால் தேவ உடும்பரத்தின் சமித்துகள் மட்டும் பசுமை நிறத்தில்தான் எரியும் என தந்தை குறிப்பிட்டிருந்தாரே.!

உடனேயே அதை சோதித்துப்பார்த்து விட முடிவு செய்தான். அருகிலிருந்த மாமரம், வேப்ப மரம் மற்றும் அரச மரம் ஆகியவற்றிலிருந்து குச்சிகளை உருவியவன், தனது வசமிருந்த தேவ உடும்பரத்தில் இருந்தும் ஒரு குச்சியை உடைத்துக்கொண்டான்.

அக்னிக்காக அவன் அலைய வேண்டியிருக்கவில்லை. அவனது குடிலினை விழுங்கிய அக்னி இன்னும் இங்கும் அங்குமாக கனன்று கொண்டுதான் இருந்தது. அதிலிருந்து அக்னியை எடுத்து காய்ந்த சருகுகளைக் கொளுத்த, அவை பற்றி எரியத்தொடங்கின. தனது கையில் வைத்திருந்த குச்சிகளை ஒன்றன் பின் ஒன்றாக, தீயினில் இட, மா, வேம்பு மற்றும் அரச குச்சிகள் பொன்னிறமாக எரியத் தொடங்கின. இறுதியில், தனது உள்ளங்கையினில் பத்திரப்படுத்தி இருந்த தேவ உடும்பர அத்தி மரக் குச்சியை அக்னியில் சேர்த்தான்.

விஷ்ணுகுப்தனின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. தேவ உடும்பர அத்தி மரத்தின் சமித்து பசுமை வண்ணத்தை வாரி இறைத்தபடி எரியத்தொடங்கியது. ஆக, இவன் கையில் கிடைத்திருப்பது, மிகவும் அரிதான தேவ உடும்பர அத்தி மரம். அத்திமலைத்தேவனான, பேரருளாளன் வடிக்கப்பட்ட அதே அத்திமரத்தின் ஒரு பகுதி இவன் கையில் உள்ளது. பிரம்மன் மற்றும் விச்வகர்மாவினால் வேகவதியின் கோபத்தினை அடக்க வேண்டி ஆற்றில் எறிந்த உடும்பர அத்திமரத்தின் விறகு இவன் கையில் கிட்டியுள்ளது. தந்தை ஆராதித்த மாலவனின் விக்கிரகம்தான் ஆற்றினுள் நழுவிச்சென்று, இவனுக்கு இந்த அரிய பொக்கிஷத்தைத் தேடிக் கொடுத்துள்ளது.

தேவ உடும்பரத்தை வைத்திருப்பவன், தேவ லோகத்தையே ஆள்வான்!

தனக்குள் முணுமுணுத்தான், விஷ்ணு. இவனது பல்வரிசையின் நேர்த்தியைக் காணும்போது இவன் நிச்சயம் ஒரு மன்னனாகத் திகழ்வான் - ஜோதிடர் கங்காதரர் தனது தாயிடம் கூறியது விஷ்ணுவின் செவிகளில் மீண்டும் ஒலித்தது. தாயைப் பிரியக்கூடாது என்று தனது பல்வரிசையினைப் பெயர்த்திருந்தான், விஷ்ணு. இபோது தாயே ஒரேடியாகப் பிரிந்துசென்று விட்ட நிலையில், இவன் விதிப்படி

https://telegram.me/aedahamlibrary

மன்னன் ஆகப் போகின்றான் என்றால், அவனுக்கு அதில் எவ்வித ஆட்சேபமும் இல்லை. ஆனால் நேர்த்தியான அந்தப் பல்வரிசை போய்விட்டதே!

அவனது வாயே கோரமாக ஒரு ஒட்டகத்தின் முகம் போன்று மடிப்புடன் காணப்படுகின்றதே! இருக்கட்டும்! பல்வரிசை போனால் என்ன? தேவ உடும்பரமே இவன் கையில் இப்போது இருக்கின்றதே. தேவ உடும்பர அத்தி மரம் கையில் இருந்தால், அந்த அத்தியூரானே இவனுடன் இருப்பது போல்தானே?

இனி அவனுக்கு அத்தியூரில் என்ன இருக்கிறது? வடபுலம் சென்று ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை நிறுவி அதனை ஆளப்போகிறான். தாய் தந்தையின் நினைவாக அவனிடம் உள்ளது, மாலவனின் விக்கிரகமும், தேவ உடும்பர அத்தி மரத்தின் பாகமும்தான். '

பெரிய சாம்ராஜ்யத்தை நிறுவ வேண்டும். தாய் தந்தையரைக் கொன்றவனை பழிதீர்க்க வேண்டும் என்கிற வஞ்சத்தை தனது இதயத்தில் நிரப்பிக் கொண்டான். தனது மேல்துண்டை இரண்டாகக் கிழித்து, ஒன்றில் தேவ உடும்பரத் துண்டையும், மாலவன் விக்கிரகத்தையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டான். மற்றொரு துண்டில், தனது குடிலின் சாம்பலை மூட்டையாகக் கட்டினான். பழிதீர்க்க வேண்டும் என்கிற எண்ணத்தை அந்த சாம்பல் மூட்டை அவ்வப்போது நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும்.

அத்திமலைத்தேவனை நோக்கி நின்று மனதார வேண்டினான்.

"என் தாய் என்னை வாஞ்சையுடன் விஷ்ணுகுப்தன் என்று அழைப்பது வழக்கம். அவள் அவ்வாறு என்னை அழைக்கும் இனிமையான குரல் எனது ஆயுளுக்கும் எனது செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்க வேண்டும். அவள் அழைத்த அந்தப் பெயரை இனி வேறு எவரும் அழைக்கக்கூடாது. இனி என் பெயர் கவுடில்யன்.

"அத்திமலைத்தேவராஜா! உனது எல்லையை விட்டுப் போகிறேன். இனி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகத்தான் உன்னை தரிசிப்பேன். உன் அத்தியூரை எனது சாம்ராஜ்யத்தில் இணைப்பேன். அதற்கு நீதான் அருள் புரிய வேண்டும்!" என்று பிரார்த்தனை செய்தவன், பின்பு வடக்கு திசையில் நடக்கத் தொடங்கினான்.

https://telegram.me/aedahamlibrary

விஷ்ணுகுப்தனாகத் திகழ்ந்து, கவுடில்யனாக நடந்து கொண்டிருக்கும் அவன் எதிர்காலத்தில் சாணக்கியனாகத் திகழப்போகிறான்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 8. விதுரன் விதைத்த வித்து

புத்த கயை ---

போதி மரத்தின் அடியில் புத்த சங்கத்தின் தலைமை குரு அமரநந்தா கண்மூடி தியானத்தில் இருந்தார். தொண்ணூறு பிராயங்களைக் கடந்திருந்தும், அவரது தவவலிமை தேகத்தில் சுருக்கங்களை மட்டுப்படுத்தி இருந்தது. அவரது முகம் மஞ்சள் நிறத்தில் தகதகத்துக் கொண்டு இருக்க, அவர் அணிந்திருந்த செம்மையான ஆடை அவரது கம்பீரத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தது.

கண்மூடி, சிந்தையில் புத்தரை இருத்தி த்யானம் செய்து கொண்டிருந்த அமரநந்தாவின் ஞானப் பார்வையில் ஒரு சிறு ஒளிவட்டம் அசைவினை ஏற்படுத்தி தன்னருகே யாரோ வந்து நிற்பதை உணர்த்த, மெதுவாக கண்களைத் திறந்தார், அமரநந்தா. அவரது தலைமைச்சீடன் போதிமந்தா தான் அவர் முன்பாக பணிவுடன் நின்றுகொண்டிருந்தான்.

“என்ன விஷயம், போதிமந்தா? இவ்வளவு விடியற்காலையில் நீ என்னை நாடி வந்த காரணம்?” அமரநந்தா கேட்டார்.

போதிமந்தாவின் அமைதியான முகத்தில் நிறையவே சலனங்கள் காணப்பட்டன.

"குருவே! நமது சங்கத்தின் அமைதியைக் குலைக்கும் படியான சேதி ஒன்று நள்ளிரவு எனக்குத் தெரிவிக்கப்பட்டது. தாங்கள் அதை செவிமடுப்பதற்கு தற்போது சித்தமாக இருந்தால், சொல்கிறேன். இல்லை, இன்னும் சிறிது காலம் தியானத்தில் நிலைக்கப் போகிறீர்கள் என்றால் பின்னர் தெரிவிக்கிறேன்...!” போதிமந்தா கூறினான்.

தியானத்தின் நடுவில் அச்சுறுத்தும் அந்தச் சேதியைத் தெரிவிக்க வேண்டாம் என்றுதான் இதுவரை காத்திருந்தான், போதிமந்தா. ஆனால், காலம் கடந்து விடுவதற்குள், அவருக்குச் சேதியைத் தெரிவித்தே ஆக வேண்டிய நிர்பந்தமும் இருந்தது. சங்கத்தை நோக்கி ஆபத்து விரைந்து வந்து கொண்டிருக்கையில் இனியும் தாமதம் செய்யக் கூடாது என்பதாலேயே அதிகாலையிலேயே அமரநந்தாவைக் காண போதி மரத்தடிக்கு வந்திருந்தான், போதிமந்தா

https://telegram.me/aedahamlibrary

“என்ன தகவல் வந்துள்ளது, மந்தா?” - தனது சீடனின் முகத்தில் பரவியிருந்த பதட்டத்தைக் கவனித்தார், அமரநந்தா.

"குருவே! மகத மன்னன் தானநந்தா தனது படைகளுடன் நமது புத்த கயை விஹாரத்திற்கு வந்து கொண்டிருக்கிறான்!” போதிமந்தா கூற, அமரநந்தா திகைத்தார்.

“எதற்காக?” ---

"தானநந்தா புஷ்பபுர அரண்மனையில் அஸ்வமேத யாகம் ஒன்றைச் செய்ய இருக்கிறான். யாகத்திற்கு, தேவ உடும்பர மரத்தின் சமித்துகள் தேவை. தேவ உடும்பர மரத்தில் யாகத்தினை செய்தால்தான் பலன் கிடைக்கும். மேலும், இந்த மரத்தின் சமித்துகளைக் கொண்டு யாகத்தினை செய்தால், அவன் மகளின் ஜாதகத்தில் உள்ள தோஷங்கள் நிவர்த்தி ஆகும் என்று அவனுக்கு ஆருடம் சொல்லப்பட்டிருக்கிறது. எனவேதான், தேவ உடும்பர மரமான நமது போதியைக் கைப்பற்ற வருகிறான் என்று கூறப்படுகிறது!” போதிமந்தாவின் குரல் கவலையுடன் ஒலித்தது.

அமரநந்தாவின் முகம் இருளடைந்தது.

“இது என்ன அநியாயம்? கௌதம புத்தனுக்கு ஞானம் வழங்கிய மரத்தை வெட்ட வருகிறானா, தானநந்தா? அக்ஞானத்தைப் பெற, ஞான விருட்சத்தை அழிக்க முற்படுவதா?” - அவரது குரலில் கோபம் கொப்புளித்தது.

“இப்போது என்ன செய்வது, குருவே?” போதிமந்தா கேட்டான்.

போதி மரம் தேவ உடும்பர மரம் [1] என்பதில் சந்தேகம் இல்லை. ஒவ்வொரு புத்தருக்கும் ஒரு மரம் ஞானம் வழங்கியது. கௌதம புத்தனுக்கு தேவ உடும்பர மரம் சிக்கி புத்தர் ஞானம் பெற்றது புண்டரீக மரத்தடியில். காகுசுந்தா புத்தர் ஞானம் பெற்றது பாக்கு மரத்தடியில். விபாசி புத்தர் ஞானம் பெற்றது, மகிழமரத்தடியில். கசாப புத்தர் ஞானம் பெற்றது ஆலமரத்தடியில்... அனைத்து புத்தர்களும் தாங்கள் ஞானம் பெறுவதற்கு பல்வேறு மரங்களை தேர்ந்தெடுத்து அதனை தங்கள் போதிமரமாக அறிவித்தனர்.

ஞானபுத்தியை வழங்கியதால் அனைத்துமே போதி மரங்கள்தான்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் போதி என்று தனியாக மரம் கிடையாது. புத்த கயையில் கௌதம புத்தருக்கு ஞானத்தை வழங்கியது தேவ உடும்பர மரம். இதனை காஞ்சி மரம் என்றும் கூறுவார்கள். மிகவும் அரிதானது இம்மரம். உலகிலேயே கர்மபூமியான பாரத பூமியில் மட்டுமே தோன்றியுள்ளன தேவ உடும்பரம். உலகிலேயே இரண்டு தேவ உடும்பர மரங்கள் உள்ளதாக புத்த மத நூலான தாமரை சூத்ரம் சொல்லுகிறது. அத்தகைய அரிய மரத்தை தானநந்தா வெட்ட வருகிறான், என்கிற தகவலை அமரநந்தாவால் ஜீரணிக்க முடியவில்லை.

மன்னனது அடாத செயலை எப்படித் தடுப்பது?

நீண்ட யோசனைக்குப் பிறகு, தனது இடுங்கிய கண்களால், சீடன் போதிமந்தாவை நோக்கினார், குரு.

"போதிமந்தா! நம்மால் படைகளை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், அமைதி வழியில் புரட்சியை தோற்றுவிக்க முடியும். நமது சீடர்களையும், நமது சங்கத்தைச் சேர்ந்தவர்களையும், சுற்றியுள்ள கிராமத்து மக்களையும் திரட்டி இந்த போதிமரத்தினைச் சுற்றி அமர வைத்துவிடு. அவர்களைக் கடந்துதான் படைகள் மரத்தை அணுக முடியும்! பார்ப்போம்! மரத்தை வெட்டுவதற்கு முன் மக்களையும் வெட்டி வீழ்த்தத் துணிகின்றானா என்று! தேவ உடும்பரமாகிய இந்த புத்தனின் போதிக்கு மகத்துவம் இருந்தால் மன்னனின் மனநிலையை மாற்றட்டும்!" அமரநந்தா கூறினார்.

பணிவுடன் அவரை நோக்கித் தலைகுனிந்த போதிமந்தா, அவசரமாக அங்கிருந்து வெளியேறினான். அமரநந்தா அண்ணாந்து அந்த போதி மரத்தைப் பார்த்தார். மிகவும் மகிமை வாய்ந்தது. அதற்கு ஜோடியான மற்றொரு மரம், பாரத பூமியில் எங்கே உள்ளதோ?

"கௌதமனின் போதியே! உன்னை நீயே ரட்சித்துக் கொள்!” - குருவின் வாய் முணுமுணுத்தது

மறுநாளே, தானநந்தாவின் படைகள் புத்த கயையை முற்றுகையிட்டு, போதிமரத்தினை சூழ்ந்தன. ஆனால் அதற்குள், கிராமங்களைச் சேர்ந்த ஜனங்களும், சங்கத்தின் சீடர்களும், இன்னும் பலரும், போதிமரத்தைச் சுற்றி அமர்ந்து விட்டனர்.

https://telegram.me/aedahamlibrary

“நாங்கள் படையெடுத்து வரவில்லை. அஸ்வமேத யாகத்திற்கு, சமித்துகளைச் சேகரிக்கவே வந்துள்ளோம்…!” படைத்தலைவன் கூறினான்.

"மன்னன் மட்டும், குருவைப் பணிந்து யாகத்திற்கு சமித்துகளைக் கேட்டிருந்தால் நாங்களே கொடுத்திருப்போமே. படை திரட்டி வர வேண்டிய அவசியம் என்ன?” - போதிமந்தா கேட்டான்.

படைத்தலைவனால் பதில் கூற இயலவில்லை. கயைக்கு வெளியே முகாமிட்டிருந்த தானநந்தாவிடம் விவரத்தைக் கூறச்சென்றான். தனது கூடாரத்தில் தலைமை அமைச்சர் ஹரஹரதேவ் மற்றும் ஜோதிடர் மிஸ்ரபானுவுடன் அளவளாவிக்கொண்டிருந்தான், தானநந்தா.

"மன்னா! எங்களால் அந்த போதி மரத்தை அணுக முடியவில்லை. மன்னரே வந்து கேட்டிருந்தால், நாங்கள் சமித்துகளை தந்திருப்போம். படை எடுத்து வர அவசியம் என்ன என்று கேட்கிறார்கள்!” - படைத்தலைவன் கூறினான்.

தானநந்தா ஹரஹரதேவ்வைக் குழப்பத்துடன் நோக்கினான். சமித்துகளை பறிக்கவா அவன் இவ்வளவு தொலைவு படையுடன் வந்திருக்கிறான்? முடிந்தால் மரத்தையே வேரோடு பெயர்த்தெடுத்து, புஷ்பபுர அரண்மனைக்கு எடுத்துச்சென்று, அஸ்வமேத யாகத்தை நடத்தி, தனது சாம்ராஜ்யத்தை பாரத கண்டம் முழுவதும் நிலை நாட்டும் திட்டத்துடன் தானே வந்திருக்கின்றான்.

"மன்னா! அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கத் தேவையில்லை! படைகளை முன்னேறிச்சென்று மரத்தை வெட்டி வரச் சொல்லுங்கள்!” - ஹரஹரதேவ் கூறினார்.

“இல்லை பிரதம அமைச்சரே! வைதீக தர்மம் புத்தன் மார்க்கத்தை சித்திரவதை செய்தது என்கிற அவப்பெயர் ஏற்படுவதற்கு நான் காரணமாகி விடக்கூடாது.! நானே சென்று சங்கத்தலைவர் அமரநந்தாவைச் சந்தித்து, யாகத்திற்கு மரம் மிகவும் அவசியம் என்பதை புரிய வைக்கிறேன்!” தானநந்தா கூறியபடி எழுந்தான்.

போதிமந்தாவின் தோளினில் கையை ஊன்றியபடி மெதுவாக நடந்து வந்தார், அமரநந்தா. பணிவுடன் எழுந்து நின்று அவரைப் பணிந்தான், தானநந்தா.

https://telegram.me/aedahamlibrary

"சுவாமி! நாட்டின் சுபிட்சத்திற்காகவே நான் அஸ்வமேத யாகத்தைச் செய்கிறேன். அந்த சுபிட்சம் கயையில் வசிக்கும் மக்களுக்கும் சேர்த்துதான் கிடைக்கப்போகிறது. எனவே, அஸ்வமேத யாகத்திற்கு தேவ உடும்பரத்தை அளித்து என்னை கௌரவிக்க வேண்டுகிறேன்!" - தானநந்தா இறைஞ்சினான்.

அமரநந்தா அவனை உறுத்துப்பார்த்து விட்டு, மெல்லிய குரலில் சொன்னார்.

"தானநந்தா! இந்த தேவ உடும்பர மரத்தின் அடியில் புத்தர் ஞானம் பெற்றதால், அதனை வெட்டி சாய்ப்பதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாக நீ நினைக்கலாம். புத்தன் ஞானம் பெற்ற போதி மரம் என்பதால் மட்டும் இதனை வீழ்த்துவதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இந்த மரம் உண்மையில் உனது வைதீக மார்க்கத்தின் பெருமைகளையும் பறை சாற்றி நிற்கின்றது. நீ கொண்டாடும் அதர்வண வேதத்தின் ஒரு சாகை இந்த மரத்தின் சிறப்புகளைப் பற்றி போற்றுகிறது. இந்த மரத்தினை நீ வெட்டி வீழ்த்தினால், பகவான் கண்ணனே உன் மீது கோபம் கொள்வான்!

“காரணம், மகாபாரத காலத்திலேயே இந்த மரம் பெரும் புகழைப் பெற்று விளங்கியது. கேள்! இந்த மரத்தின் கதையை.

"மகாபாரதப் போர் முடிந்ததும், பெருகியோடிய இரத்த ஆறினால் மனவேதனை அடைந்த விதுரன் கண்ணனை சரணம் பற்றினான். அவர் விதுரனை தீர்த்த யாத்திரை மேற்கொள்ளச் சொன்னார். விதுரனும் தீர்த்த யாத்திரை போகும்போது, மைத்ரேய மகரிஷியின் ஆஸ்ரமத்திற்கு வந்தான். இந்த இடத்தில் உள்ள நதிக்கரையில்தான் அவரது ஆஸ்ரமம் இருந்தது. விதுரன் தியானம் செய்துகொண்டிருந்த போது, அவனது மடியில் ஒரு விதை விழுந்தது. அது தேவ உடும்பர மரத்தின் விதை. அதை கதிர்கடவுள் சூரியனாருக்கு விதுரன் அர்ப்பணிக்க முயல, மைத்ரேயர், விதுரனை தடுத்து, அந்த விதையை இங்கே நடச்செய்தார். அதுதான் நீ இப்போது வெட்ட முயலும் தேவ உடும்பரம். எங்களுக்கு போதி மரம். வைதீகர்களுக்கு தேவ உடுமபரம்.

புராண காலத்தில் இந்த மரத்திற்கு அஸ்வத மரம் என்று பெயர். கேட்டதை கொடுக்கும் கற்பகத்தரு, இந்த அஸ்வத மரம். இந்த தேவ உடும்பரத்தின் கீழ் கௌதம புத்தர் ஞானம் பெற்றார். அதனால் நாங்கள் இதைக் கொண்டாடி வருகிறோம். எங்களுக்காக மட்டுமல்ல. புராண

https://telegram.me/aedahamlibrary

காலத்தைச் சேர்ந்த, விதுரனால் வளர்க்கப்பட்ட இந்த மரத்தைக் காக்க நாங்கள் போராடுகிறோம். விதுரன் வளர்த்த மரத்தை நீ வெட்ட முயலுகிறாய்!" - அவனது கண்களுள் தனது தீட்சண்யம் மிக்க கண்களால் உறுத்துப் பார்த்து அவனை பணிய வைத்தார், அமரநந்தா.

அதன் பின் தானநந்தாவால் ஒன்றும் பேச இயலவில்லை. விதுரன் வளர்த்த மரத்தை அவனே வெட்டி சாய்ப்பதா? தோல்வியுடன் தனது கூடாரத்திற்குத் திரும்பினான், மன்னன்.

அமரநந்தா கத்தியின்றி, ரத்தமின்றி, அவர்களது புராணத்தை வைத்தே மன்னனை திருப்பி அனுப்பியதைக் கண்டதும், பௌத்தர்களுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. மகாபாரதத்தில் உள்ள குறிப்புகளை வைத்தே மன்னனின் சதித்திட்டத்தை முறியடித்த அமரநந்தாவின் சாதுர்யத்தை எண்ணி மலைத்துப் போயினர்.

தானநந்தா குழப்பத்துடன் தனது புஷ்பபுர அரண்மனையில் நடைபோட்டுக் கொண்டிருந்தான். அஸ்வமேத யாகத்தை பூர்த்தி செய்வதற்கு தேவ உடும்பரம் வேண்டுமே! அதற்கு எங்கே போவது?

தேவ உடும்பர மரம் கிடைக்கும் வரையில் அஸ்வமேத யாகம் செய்யும் முடிவினைத் தள்ளி வைக்கத் தீர்மானித்தான், தானநந்தா...

[1] ஆதாரம்: Treasury of the Eye of True Dharma

*****

https://telegram.me/aedahamlibrary

# 9. கவுடில்யன் கேட்ட வெகுமதி

வேமுல மன்னன் புலிவேமு தனது இரதத்தினில் இருந்து இறங்கி மருத்யுஞ்ஜய ஈஸ்வர ஆலயத்தினுள் நுழைந்தான். புலிவேமு ஏகாந்தத்தில் தரிசனம் செய்வதற்கு வசதியாக பொதுமக்களை ஆலயத்தினுள் பிரவேசிக்க விடாமல் காவலர்கள் தடுத்துக் கொண்டிருந்தனர். மனைவி ரத்னாங்கி சற்று பின்பாக வந்து கொண்டிருக்க மன்னன் வாட்டமுற்ற முகத்துடன் மூல சந்நிதியை நோக்கி நடந்து கொண்டிருந்தான். மன்னனின் பாதுகாப்புக்காகத்தான் யாருமே ஆலயத்தினுள் அனுமதிக்கப்படவில்லை என்று பொதுமக்கள் அனைவருமே நினைத்திருந்தனர். ஏன்? பல அதிகாரிகளும் அப்படித்தான் நினைத்திருந்தனர். ஆனால் மன்னனின் நெருங்கிய வட்டத்தில் உள்ள வெகு சிலர் மட்டுமே மன்னன் பொதுமக்களை தவிர்ப்பதற்கான காரணத்தை அறிந்திருந்தனர்.

கடந்த சில நாட்களாகவே, மன்னனின் தேகத்தில் தோல் உரிந்து வருகிறது. தேகத்திலும், முகத்திலும் ஆங்காங்கே இரத்தக்கட்டிகள் தோன்றி வருகின்றன. அரண்மனை வைத்தியர்கள் செய்யாத சிகிச்சை இல்லை. ஆனால் அந்த நோய் மேன்மேலும் பரவி வர, பொது மக்களின் முன்பாக தோன்றுவதையே தவிர்த்திருந்தான், புலிவேமு.

ம்ருத்யுஞ்ஜய ஈசனைப் பணிந்தால், மரணத்திலிருந்து தப்பிக்கலாம் என்பதற்காகவே புலிவேமு அந்த ஆலயத்திற்கு வந்திருந்தான். ஆலயத்தினுள் பிரவேசிப்பதற்கு முன்பாக குளத்தில் கைகால்களை சுத்தம் செய்து கொள்ள எண்ணி குளத்தினுள் இறங்கினான். இரண்டு காவலர்கள் மட்டுமே, குளக்கரையில் நிற்க, மன்னன் குனிந்து தனது கைகளை சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

குளத்தின் எதிர்க்கரையில் அமர்ந்திருந்தான், கவுடில்யன். புலிவேமுவைக் கண்ட மாத்திரத்தில் அவனது தேகத்தைப் பீடித்துள்ள நோயைப் பற்றி புரிந்துகொண்டான். தாய் தந்தையரை எரித்துக்கொன்ற ஆதர்ஷன் மீது புதைந்து கிடந்த வன்மம் மன்னனைக் கண்ட மாத்திரத்தில் பீறிட்டு எழுந்தது. உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. சட்டென்று ஆற்றினுள் குதித்து எதிர்ப்புறம் நின்றுகொண்டிருந்த மன்னனை நோக்கி நீந்தினான், விஷ்ணுகுப்தன் என்கிற கவுடில்யன்.

https://telegram.me/aedahamlibrary

தனது கைகால்களை சுத்தம் செய்துகொண்டு திரும்பி படி ஏறுவதற்காக யத்தனித்தான், புலிவேமு.

“அரசே!”----

திடீரென்று குரல் கேட்க, திகைப்புடன் திரும்பினான், புலிவேமு! சடாரென்று நீரினுள் இருந்து எழுந்தான், கவுடில்யன்.

"என்னைத் தெரிகிறதா மன்னா! ஒத்தாடையில் உம்மை சந்தித்து, பரப்பசுவாமியின் சதியில் இருந்து உம்மை காப்பாற்றியவன் நான்தான்!”

புலிவேமுவின் முகம் மலர்ந்தது.

“வேதியச் சிறுவனே! உன்னைத் தேடாத இடமில்லை. எனக்காகக் காத்திருக்கிறேன் என்று எங்கே சென்று விட்டாய்?” - மன்னன் பரவசத்துடன் அவனைப் பார்த்தான்.

"மன்னா! எனது பணி ராஜபோகங்களை அனுபவிப்பது அல்ல. மன்னர்களின் உயிரைக் காப்பாற்றுவது மட்டுமே. அன்று நான் உங்கள் முன் தோன்றியது தங்கள் உயிரைக் காப்பாற்ற! இப்போது வந்திருப்பது தங்கள் பிணியை நீக்க.”

கவுடில்யன் இவ்வாறு கூறியதும், மன்னனின் முகம் ஆச்சரியத்தால் விரிந்தது.

“உண்மையாகவா? எனது மருத்துவர்கள் அனைவரும் எல்லா முயற்சிகளையும் செய்து விட்டனர். பலனில்லை! எனது மனவேதனையை ஈசனிடம் கூறவே, இந்த ஆலயத்திற்கு வந்தேன். வந்த இடத்தில் உன்னைச் சந்தித்தேன். உனது வார்த்தைகள் நொந்து போயிருக்கும் எனது இதயத்திற்கு ஆறுதல் தருகின்றது!” புலிவேமுவின் குரல் தழுதழுத்தது.

"நான் உங்கள் தேகத்தை குணப்படுத்துகிறேன். நீர் பதிலுக்கு நான் கேட்பதைத் தர வேண்டும்!” - கட்டளையாக ஒலித்தது கவுடில்யனின் குரல்.

“நீ கேட்கவும் வேண்டுமோ, சிறுவா! நீ என்ன கேட்டாலும், அதைக்

https://telegram.me/aedahamlibrary

கொடுக்கிறேன்! உனது பெயர் எனக்கு மறந்துவிட்டது!”

“மன்னா! நாடோடிக்கு நிரந்தர பெயர் கிடையாது மன்னா! தற்போது, எனது பெயர் கவுடில்யன். தாங்கள் உடனே எதிர்புறம் உள்ள மண்டபத்திற்கு வாருங்கள். நோயிலிருந்து உடனடி தீர்வு கிடைக்கச் செய்கிறேன். உமது மனைவியையும், காவலர்களையும் அப்பால் போகச் சொல்லுங்கள்!” கவுடில்யன் கூறிவிட்டு, மீண்டும் எதிர்மண்டபத்தை நோக்கி நீந்தத்தொடங்கினான். மன்னனும், ரத்னாங்கியை அப்பால் போகச் சொல்லிவிட்டு, எதிர்ப்புற மண்டபத்தை நோக்கி நடந்தான். மன்னன் எதிர்ப்புற மண்டபத்திற்கு வருவதற்குள், மீண்டும் நீரில் நீந்தியபடி எதிர்கரைக்கு வந்தவன், தனது மூட்டையிலிருந்த தேவ உடும்பரக் கட்டையிலிருந்து ஒரு சிறு துண்டை உடைத்து, குளத்தின் நீரில் கரைத்து, படியினில் உரசினான். தேவ உடும்பரத்தின் குழைவை கை நிறைய திரட்டி ஒரு தேங்காய் மட்டையில் நிரப்பிக்கொண்டான். மீண்டும் மண்டபத்திற்குச் சென்றான்.

அவனுக்காகக் காத்திருந்த மன்னனைக் கருங்கல்லில் படுக்கச்சொல்ல, மன்னனும் அவன் சொன்னபடி செய்தான். படுத்திருந்த மன்னனின் தேகமெங்கும் அந்தக் குழைவினைப் பூசினான், கவுடில்யன். மண்டபத்தின் மேடையில் கண்களை மூடிப் படுத்திருந்த புலிவேமு, அந்த உடும்பரக்குழைவினை தேகத்தில் தடவியதுமே, உடலின் எரிச்சல் குறைவது போல உணர்ந்தான்...

“மன்னா! இன்றிரவுக்குள். உமது தேகத்தில் காணப்படும் அழுகிய புண்கள் ஆறிவிடும். முகம் முன்பு போலவே மாறி விடும்.”

புலிவேமுக்கு தனது கண்களையே நம்ப முடியவில்லை அவனது வலக்கரத்தினில் சற்று ஆழமாகவே புரையோடியிருந்த புண், மிகவும் வேதனையை அளித்துக் கொண்டிருந்தது. இப்போது இந்த பிராமணச் சிறுவன். களிம்பினைத் தடவியதும், வலி குறைந்து போனது. தேகமெங்கும் ஒருவித குளிர்ச்சியினை உணர்ந்தான் புலிவேமு.

"கவுடில்யா! சென்ற முறை எனது உயிரைக் காப்பாற்றினாய். சிறிது காலம் சிறையில் இருந்த பரப்பசுவாமி குடும்பத்தை எனது சிற்றன்னையின் வேண்டுகோளுக்கு இணங்கி மன்னித்து விடுவித்தேன். ஆனால் அவன் மீண்டும் எனக்கு எதிராக புரட்சியை உண்டாக்க முயல, அவனை குடும்பத்துடன் நாடு கடத்தி விட்டேன்! இந்த முறை, கொடிய நோயில் சிக்கிய என்னை நீ காப்பாற்றினாய். ஆலயத்திற்கு வரும்போது

https://telegram.me/aedahamlibrary

இருந்த வேதனை, தற்போது எனது தேகத்தில் இல்லை. உன்னை இந்த முறை விடப்போவதில்லை. நீ என்னுடன் எனது அரண்மனைக்கு வரப்போகிறாய்!” புலிவேமு உணர்ச்சியுடன் கூறினான்.

"மன்னிக்க வேண்டும், மன்னா! நான் கல்வியைத் தேடி பயணித்துக்கொண்டு இருக்கிறேன். உலகத்தில் உள்ள எல்லா கலைகளையும் நான் கற்க வேண்டும். எல்லா கல்விகளையும் கற்றால்தான் உம்மைப்போன்ற மன்னர்களுக்கு என்னால் உதவ முடியும். எனவே... என்னால் உங்கள் அரண்மனைக்கு வர முடியாது. நீங்கள் பூரண நலம் பெற்று நீண்ட காலம் ஆட்சி செய்வீர்கள். எனக்கு விடை கொடுங்கள்!” கவுடில்யன் கூறினான்.

"சரி! நீ ஏதோ கேட்கப்போகிறேன் என்றாயே! அதையாவது கேட்டுப் பெற்றுக்கொள்!” மன்னன் வலியுறுத்தினான்.

"மன்னா! பரப்பசுவாமியின் மைத்துனன் ஆதர்ஷன் எங்கே இருக்கிறான்?”

கவுடில்யன் இவ்வாறு கேட்டதும் புலிவேமுவின் முகத்தில் வியப்பு. “ஏன்! அவன்தான் தற்போது எனது குதிரைப் படையின் தலைவனாக இருக்கிறான்.” புலிவேமு கூறினான்.

"மன்னா! நான் உங்கள் ஊர் எல்லையில் அமர்ந்திருப்பேன். எனக்கு ஆதர்ஷனின் தலை வேண்டும். உமக்கு நான் வைத்தியம் செய்ததற்கு நீர் எனக்கு பதிலுக்கு தரும் சன்மானம் அவன் தலைதான். அவசரமில்லை. தங்கள் தேகத்தில் புண்கள் ஆறியதும், அவன் தலையை எனக்கு அனுப்பினால் போதும்!” - கவுடில்யன் கூறினான்.

மன்னனின் முகத்தில் வியப்பு அதிகரித்தது. தலையை, மட்டும் அசைத்துவிட்டு அங்கிருந்து கிளம்பினான். மறுநாள் காலை, வேமுல எல்லையின் ஆலமரத்தடியில் அமர்ந்த நிலையில் உறங்கியபடி இருந்த கவுடில்யனை நோக்கி ஒருவன் வந்துகொண்டிருந்தான். தற்செயலாகக் கண்விழித்த கவுடில்யன் அந்த மனிதனைப் பார்த்ததுமே புரிந்துகொண்டான், அவன் கையில் இருந்த மூங்கில் கூடையினில் உள்ளே இருப்பது கொய்யப்பட்ட ஆதர்ஷனின் தலை என்பதை.

*****

https://telegram.me/aedahamlibrary

# 10. கழுத்தினில் நாகம்

தந்தை மகாபத்ம நந்தா இறந்து ஆறு வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. அவரது மரணப்படுக்கையில் தான் அவரிடம் அஸ்வமேத யாகத்தைச் செய்கிறேன் என்று செய்திருந்த சத்தியத்தை இன்னும் மன்னன் தானநந்தா நிறைவேற்றியிருக்கவில்லை. இது அவனது இதயத்தை உறுத்திக்கொண்டே இருந்தது.

ஜோதிடர் மிஸ்ரபானுவை அவ்வப்போது தனது ஏச்சுகளாலும், பேச்சுகளாலும், சித்திரவதை செய்து கொண்டிருந்தான். தேவ உடும்பர மரத்தை எப்படியாவது புத்த பிட்சுகளிடம் இருந்து கைப்பற்றியே ஆக வேண்டும் என்று கூறியபடி இருந்தான். அவனால் வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை. பௌத்தர்கள் பிடிவாதமாக போதி மரத்தில் இருந்து ஒரு குச்சியைக் கூட தர மறுக்கின்றனர். பலவந்தத்தை பிரயோகித்தால், மக்களைச் சேர்த்துக்கொண்டு போராடத் துவங்குகின்றனரே!

ஒரு நாள் இரவு ---

அமரேந்திரி இளவரசன் பிபத்த தேவனையும், இளவரசி துர்தராவையும் மஞ்சத்தில் படுக்க வைத்து, தனது இனிய குரலில் பாட்டொன்றை பாடிக் கொண்டிருந்தாள். பாட்டைக் கேட்டபடியே இருவரும் உறங்கிப்போனார்கள். அமரேந்திரி அவர்கள் இருவரையும் கம்பளத்தால் போர்த்தினாள். பிறகு அறையை விட்டு வெளியேறி, வாயிலில் ஈட்டியுடன் நின்றிருந்த காவலர்களை நோக்கினாள்.

"நான் அடுக்களைக்குச் சென்று குழந்தைகளுக்கு பாலாகாரம் கொண்டு வருகிறேன். அரச குழந்தைகள் உறங்கிக்கொண்டிருக்கின்றன. பார்த்துக் கொள்ளுங்கள். இதோ வந்து விடுகிறேன்!" என்றபடி அரண்மனையின் உணவகத்திற்குச் சென்றாள்.

நடு இரவில் உறக்கம் கலைந்து துர்தரா எழுந்து கொள்வது வழக்கம். அவள் பசி பொறுக்க மாட்டாள். எனவே, அமரேந்திரி அவளுக்காக முன்னிரவே, பாலாகாரத்தை தயாராக வைத்துக்கொள்வாள். ஏலம், கற்கண்டு, குங்குமப்பூ போன்றவற்றை பொடித்து பாலில் கரைத்து வெதுவெதுப்பான சூட்டினில் வைத்திருப்பாள். துர்தரா எழுந்து அமரேந்திரி என்று அழைக்கும்போது, பால்குவளை அவளிடம் நீட்டப்பட வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

ஆறு பிராயங்களைக் கடந்து விட்டாள், துர்தரா. ஆனால் ஒரு அரசகுமாரிக்கு உரிய அத்தனை குணங்களையும் அப்போதே கொண்டவளாகத் திகழ்கிறாள்.

பேரழகியாக அவள் திகழப்போவதை அவளது உடற்கூறுகள் இப்போதே உணர்த்திக் காட்டின. ஆங்காங்கே, பேரழகு திரளத் துவங்கியிருந்தது. ஆனால் அழகு மட்டும் திரண்டால் பரவாயில்லையே. துர்தரா என்கிற பெயருக்கு ஏற்ற துர்புத்தியும், துர்குணங்களும் உடன் திரண்டு கொண்டிருந்தன.

பிபத்த நந்தன் பத்து வயதுச் சிறுவன். அரசனாகப் போகிறவன். இருந்துங்கூட பொறுமையும், தயை குணமும் கொண்டிருக்கிறான். சேடியான இவளிடம் கூட அன்பைப் பொழிகிறான். ஆனால் துர்தராவோ, பெண்ணிற்குத் தேவையான பொறுமை என்னும் பூஷணத்தை அணிய மறுக்கின்றாள்.

அரண்மனை உணவகத்தினுள் நுழைந்தபோது, ஒரு வெள்ளிச் செம்பில் பாலாகாரத்தை தயாராக வைத்திருந்தனர். அதை எடுத்துக்கொண்டு, மன்னனின் குழந்தைகள் உறங்கிக்கொண்டிருந்த அறையை நோக்கி நடந்தாள்.

சாளரத்தின் வழியாகக் குளிர்காற்று அரண்மனை தாழ்வரையில் பரவி, நடந்து சென்ற அமரேந்திரியின் மேனியை நடுங்க வைக்க, தனது மேலாடையை இடதுகையினால் இறுகப் பற்றியபடி அறையை அடைந்தாள்.

காவலர்களைக் கடந்து அறையினுள் நுழைந்தபோது இளவரசனும், இளவரசியும் உறங்கிக்கொண்டிருந்த மஞ்சத்தினை தற்செயலாக நோக்க, அதிர்ச்சியில் "ஆ" என்கிற குரல் அவளிடமிருந்து புறப்பட்டு, நெஞ்சுக் குழியிலேயே சிக்கிக்கொண்டது. நல்லவேளையாக, அவள் கையிலிருந்து நழுவிய பால்சொம்பு எழுப்பிய ஒலி, உறங்கிக்கொண்டிருந்த குழந்தைகளை எழுப்பவில்லை. ஆனால் ---

வெளியே காவல் நின்ற வீரர்கள் உள்ளே ஓடி வருவதற்கு அந்த ஒலியே காரணமாக இருந்தது. அவர்கள் உள்ளே விரைய, தனது வாயை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு திகிலினால் உறைந்த பார்வையோடு அமரேந்திரி நிற்பதைக் கண்டதும், அவர்களும் தங்கள் பார்வைகளை மஞ்சத்தின் பக்கமாகத் திருப்பினர்.

https://telegram.me/aedahamlibrary

ஒரு கரிய நாகம், துர்தராவின் தலைக்கு மேலாக படம் எடுத்தபடி காணப்பட்டது. இவர்கள் கையில் இருந்த ஈட்டியினை அந்த நாகத்தை நோக்கி நீட்ட, அது தனது இரட்டை நாக்கை இருமுறை வெளியே நீட்டி, அவர்களை எச்சரிப்பது போன்று பார்த்தது. காவலர்களும், அமரேந்திரியும் அசையாமல் நிற்க, அந்த நாகமும் சற்று நேரம் அசையாமல் நின்றுவிட்டு, பிறகு மெதுவாக இடப்புறமாக நகர்ந்து, உறங்கிக்கொண்டிருந்த துர்தராவின் கழுத்தினில் ஏறி மறுபுறமாக இறங்கி, மஞ்சத்தில் அடுத்து உறங்கிக்கொண்டிருந்த பிபத்த நந்தனின் கழுத்தினில் ஏறி இறங்கி, மஞ்சத்தில் இருந்து விழுந்து சாளரத்தின் வழியாக வெளியே சென்றது.

குழந்தைகளை ஒன்றும் செய்யாமல் நாகம் நீங்கிவிட்டதைக் கண்டு காவலர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டாலும், அமரேந்திரியின் உள்மனது நிம்மதியடையவில்லை. தகவலை அரசியிடம் சொல்ல வேண்டும் என்று சிந்தை பரபரத்தது. ஆனால், நடுநிசியில் பத்மாங்கியை எழுப்பி விவரத்தை சொல்லவும் தயக்கமாக இருந்தது. எப்போது விடியும் என்று கவலையுடன் காத்திருந்தாள்.

பத்மாங்கி எழுந்ததும், ஓடோடிச்சென்று அவளது செவிகளில் விவரத்தை பாய்ச்சினாள். அவளது முகம் இருளடைந்தது. உடனே அரசனிடம் ஓடோடிச் சென்று விவரத்தைக் கூறினாள்.

"அரசே! இந்த சம்பவம் எனக்கு பீதியை உண்டு பண்ணுகிறது. துர்தராவின் ஜாதகத்தில் உள்ள தோஷங்களும் எனது மனதை அச்சுறுத்துகின்றன. உங்கள் தந்தையாருக்கு தந்திருக்கும் வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றுங்கள். அஸ்வமேத யாகத்தைச் செய்தாவது, நமது செல்வங்களின் தோஷங்களை நீக்குங்கள்!” - பத்மாங்கி இறைஞ்சினாள்.

ஜோதிடர் மிஸ்ரபானுவையும் தலைமை அமைச்சர் ஹரஹரதேவ்வையும் உடனடியாக வரவழைத்தான், தானநந்தா.

“ஒரு கரிய நாகம், பிபத்த நந்தன் மற்றும் துர்தராவின் கழுத்தினில் ஏறி இறங்கிச் சென்றதை அமரேந்திரி பார்த்திருக்கிறாள். இது எதனைக் குறிக்கின்றது?” கவலையுடன் கேட்டான், மன்னன்.

மிஸ்ரபானு திகைத்தார். 'கழுத்தினில் நாகம் ஏறி இறங்கினால் தலை துண்டுபடும் என்று சர்ப்ப சாத்திரம் சொல்லுகின்றதே! அதனை

https://telegram.me/aedahamlibrary

மன்னனிடம் எப்படிச் சொல்லுவது?'

“மன்னா! நாகம் தேகத்தில் ஏறி இறங்கிச்சென்றாலே, தோஷம் ஏற்பட்டு நீங்கிவிட்டதாகப் பொருள். சூரிய, சந்திரர்களை, சர்ப்பங்கள் ஆகிய ராகுவும், கேதுவும் பீடித்து விடுவதைத்தானே கிரகணம் என்று சொல்லுகிறோம். குழந்தைகளுக்கு ஏற்பட்ட தோஷம் நீங்கி விடும் என்பதைத்தான் இந்த சம்பவம் உணர்த்துகிறது,” என்று வார்த்தை ஜாலங்களை பிரயோகித்தார்.

பத்மாங்கிக்கு அவர் கூறியது ஆறுதலாகத் தோன்றினாலும், எதற்கும் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம் என்று நினைத்தாள்.

"அரசே! எது எப்படி இருந்தாலும், தாங்கள் அஸ்வமேத யாகத்தைச் செய்துவிடுங்கள்!” பத்மாங்கி கூறினாள்.

"தேவ உடும்பரம் இல்லாமல் எப்படி யாகத்தைச் செய்வது?” - தானநந்தா கேட்டான்.

சற்றே யோசித்தார், மிஸ்ரபானு.

"முடியும் மன்னா! தேவ உடும்பரத்திற்குப் பதிலாக அட்சய வடம் [1] சமித்துகளைச் சேகரித்து தேவ உடும்பர மந்திரத்தை ஜபிக்கலாம்!” மிஸ்ரபானு கூறினார்.

"அபோது அட்சய சமித்துகளைக் கொண்டே அஸ்வமேத யாகத்தை பூர்த்தி செய்யலாம். ஏற்பாடுகளை செய்துவிடுங்கள், தலைமை அமைச்சரே!” தானநந்தா கூற, அவனை யோசனையுடன் நோக்கினார், ஹரஹரதேவ்.

"மன்னா! அந்தக் குறையைத்தான் வைப்பானேன்! மன்னர் அஸ்வமேத யாகம் செய்ய உள்ளார். யாகத்திற்கு யார் தேவ உடும்பர சமித்துகளைக் கொண்டு வந்து தருகின்றனரோ, அவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும் - என்று பறைசாற்றினால் யாராவது கொண்டு வரலாம் அல்லவா? தேவ உடும்பரம் கிடைத்தால் இன்னும் சோபிதம் தானே!” - தலைமை அமைச்சர் கூற, தானநந்தாவுக்கு அது சரியான யோசனையாகப்பட்டது.

"அப்படியே செய்யுங்கள், தலைமை அமைச்சரே!” மன்னர் கூறியதும்,

https://telegram.me/aedahamlibrary

அஸ்வமேத யாகம் குறித்த அறிவிப்பிற்கு ஏற்பாடுகளைச் செய்வதற்காக அகன்றார், ஹரஹரதேவ்....

[1] அட்சய வடம் என்பது அரச மரம்தான். அக்காலத்தில் அரச மரத்தின் அடியில்தான் வேதம் பயில்விப்பார்கள். நாளடைவில் வேதம் கற்பதற்கு ஒரு அடையாளமாக மாறி விட்டது அரச மரம். அந்த மரத்தின் அடியில் வேதங்கள் கற்பிக்கப்பட்டதால் வேதங்கள், "அட்சய வட மொழி (அரச மரத்து மொழி) என்று மாறி, பின்னர் வட மொழியாக மாறிவிட்டது. சம்ஸ்கிருதமும், தேவனாகரியும் வடமொழிகள் அல்ல. அட்சய வடத்தின் கீழ் பயில்விக்கப்பட்ட மொழி. அவை வடநாட்டு மொழியல்ல. அரச மரத்து மொழி.

*****

https://telegram.me/aedahamlibrary

# 11. பல்லாங்குழி பலகைவாயன்

டம்.... டம்.... டம்... டம்!

முரசொலிக்கும் இரைச்சல் கவுடில்யனின் உறக்கத்தைக் கலைக்க கண்களைக் கைகளால் கசக்கியபடி விழித்தான் அந்த மாமரத்தின் அடியில் அமைக்கப்பட்ட உயர்ந்த மேடையில்தான் இரவைக் கழித்திருந்தான். வேமுல மன்னனின் பிணியை குணப்படுத்திவிட்டுப் புறப்பட்ட கவுடில்யன் கால்போன போக்கில் நடந்து பல தேசங்களுக்குச் சென்று, முந்தைய தினம்தான் மகத சாம்ராஜ்யத்தினுள் நுழைந்திருந்தான்.

மூதாட்டி ஒருத்தி அளித்த கோதுமை கஞ்சியை அருந்திவிட்டு, அந்த மாமரத்தினடியில் இரவைக் கழித்திருந்தான். களைப்பினால் உடனே உறங்கிப் போனவன், இதோ... தண்டோராவின் முழக்கத்தைக் கேட்டுதான் கண்விழிக்கிறான்.

டம்.... டம்.... டம்... டம்...

மீண்டும் தண்டோராவின் இரைச்சல். மஞ்சள் தலைப்பாகை அணிந்து கையில் ஒரு பட்டோலையைச் சுமந்தபடி நடந்து வந்த அந்த அதிகாரியைக் கண்டதும் மரத்தைச் சுற்றிக் குழுமி இருந்த மக்களிடையே பரபரப்பு அதிகமானது.

அவரவர்கள் தண்டோராச்செய்தி என்னவாக இருக்கக்கூடும் என்று தங்களுக்குத் தோன்றியதை ஹேஷ்யமாகக் கூறிக்கொண்டிருந்தனர். மஞ்சள் பாகையணிந்த அந்த அதிகாரி தனது கையில் இருந்த பட்டோலைச் சுருளை விரித்து, தன் தொண்டையை ஒரு முறை செருமினான். பிறகு ஓலையை வாசிக்கத் துவங்கினான்.

"இதனால் சகலமானவர்களுக்குத் தெரிவிப்பதென்னவென்றால், மாமன்னர் தானநந்தா ராஜ்யத்தின் நன்மையைக் கருதி அஸ்வமேத யாகத்தைச் செய்ய உள்ளார். மறைந்த மன்னர் மகாபத்ம நந்தாவின் ஆணைப்படி யாகத்திற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

“யாகத்திற்கு, தேவ உடும்பர சமித்துகள் தேவைப்படுவதால், மிகவும் அரிதான தேவ உடும்பர மரத்தின் சமித்துகளை யாகத்திற்கு

https://telegram.me/aedahamlibrary

அளிப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும். யாகத்தை முன்னிட்டு அவரவர்களின் தகுதிகளுக்கு ஏற்ப தான தர்மங்களும் செய்யப்படும். இது அரச கட்டளை!”

மஞ்சள் தலைப்பாகையை அணிந்திருந்த அந்த அதிகாரி பட்டோலையை மீண்டும் சுருட்ட, மக்களிடையே பரபரப்பான கூக்குரல்கள் எழுந்தன.

அந்த மாமரத்தின் பின்பாக மேடையில் அமர்ந்தபடி தண்டோரா அறிக்கையை செவியுற்ற கவுடில்யனின் கைகள் தன்னையும் அறியாமல் அருகிலிருந்த துணிமூட்டையை இறுகப் பற்றின.

மன்னன் தானநந்தா அஸ்வமேத யாகம் செய்ய இருக்கிறான். அவனுக்கு தேவ உடும்பர சமித்துகள் யாகத்துக்குத் தேவைப்படுகின்றன. இவனிடம் அத்தியூர் வேகவதியாற்றின் அடியில் கிடைத்த தேவ உடும்பர மரத்தின் பாகம் இருக்கிறது. அதனை மன்னனிடம் கொடுத்து வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

அருகிலிருந்த துணி மூட்டையை எச்சரிக்கை உணர்வுடன் தனது மடியின் மீது இருத்திக்கொண்டான். இவனுக்கு இப்போதைய தேவை வெறும் வெகுமதிகள் மட்டுமேயா? வெகுமதிகள் தனமாக இருந்தால், அவை சில நாட்கள் மட்டுமே நிலைத்திருக்கும். மீண்டும் தனத்தைத் தேடி அலைய நேரிடும். இவன் வசம் உள்ள தேவ உடும்பரத்தையும் இழந்து விடுவான்.

அத்தியூரான் தேவராஜனின் இன்னருளால் கற்பகத்தருவினைப் போன்ற தேவ உடும்பர மரத்தின் பாகம் இவனுக்குக் கிட்டியுள்ளது. அதனை வைத்துக்கொண்டு இவனே ஒரு சாம்ராஜ்யத்தினை நிறுவலாமே.

ஆனால் ---

இப்போது பரதேசியாக அலைந்து கொண்டிருக்கும் நிலையில், இவனால் ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவ முடியுமா? இப்போதைக்கு இவனால் தனது கனவுகளை நிறைவேற்ற முடியாது. போராடிப் பார்த்தாலும் வெற்றி பெற முடியாது. ஆனால் வெற்றி பெறுபவர்களின் பக்கமாக நின்றால் நினைத்ததை சாதித்து விடலாம். ஜெயிப்பவர்களை வசப்படுத்தி விட்டால், பிறகு வெற்றிதானே.

https://telegram.me/aedahamlibrary

கவுடில்யனின் சிந்தை சீறிப்பாயும் வாளைப் போன்று மின்னல் வேகத்தில் இப்படியும் அப்படியுமாகப் பாய்ந்து கொண்டிருந்தது.

“தானநந்தாவை நம் வசப்படுத்தி விட்டால்? ஆம்! அதுதான் சரி. முதலில் மகத மன்னனின் நட்பைப் பெற வேண்டும். பிறகு அவனது நம்பிக்கையைப் பெற்று, மதியூக மந்திரியாக உயர்ந்து, பிறகு மன்னராகவே மாற வேண்டும்!”

இந்தத் தீர்மானம் தோன்றியதும், மரத்தடி மேடையை விட்டு எழுந்து அங்கிருந்த தாமரைப் பொய்கையில் இறங்கி, முகத்தை சுத்தம் செய்து, தனது பொக்கை வாயை துலக்கினான். பற்கள் தான் உடைந்து போனதே. பற்களை துலக்கும் வேலை இனி இல்லை. தாமரை இலைகளை விலக்கி நீரில் தனது பிம்பத்தைப் பார்த்தான்.

அழகான அவனது முகத்தில் யௌவனம் இன்னும் கம்பீரத்தையும், மினுமினுப்பையும் கூட்டியிருந்தன. ஆனால், உறுதியான பற்கள் இல்லாததால், அவனது வாய்ப்புறம் தளர்ந்து. அந்தப் பேரழகைக் கெடுத்து அவனது முகத்தில் ஒருவித கொடூரத்தைப் பரவச் செய்திருந்தது. தனது வேட்டியையும், மேல்துண்டையும் களைந்து அவற்றினை நீரில் நனைத்து கசக்கிப் பிழிந்து மரக்கிளையில் முடிந்து உலர்த்தினான். பிறகு மூட்டையில் இருந்து மற்றொரு வேட்டியை எடுத்து அணிந்து கொண்டான்.

அத்தியூரில் இருந்த வரை, இவனது தாய் சானேஷ்வரி இவனது வேட்டியை காய வைத்து அன்றாடம் மடியாக எடுத்து வைத்திருப்பாள். அம்மாவின் கரம் பட்ட வேட்டி ஒன்றை மிகவும் பத்திரமாக வைத்திருந்தான். பெற்றோர் இறந்து ஐந்து வருடங்கள் கழிந்துவிட்டிருந்தன. சிறுவன் என்கிற நிலையிலிருந்து குமரன் என்கிற பருவத்தினுள் காலடி வைத்திருந்தான், கவுடில்யன்.

தானநந்தாவை கவரும் வகையில் தன்னை அவையில் முன்னிறுத்திக் கொள்ள நினைத்தான். அம்மாவின் கைப்பட்ட அந்த வேட்டியை அவைக்கு உடுத்திச் சென்றால், அம்மாவே ஆசி கூறியபடி இவனுடன் அவைக்கு வருவதற்கு சமானம் அல்லவா? வருடங்கள் கழிந்திருந்ததால், அந்த வேட்டி ஆங்காங்கே நைந்து கிடந்தது.

நீராடி முடித்தவன், அந்த வேட்டியை அணிந்து கொண்டான். சந்தியா தேவதைக்கு உரிய அனுஷ்டானங்களைச் செய்து விட்டு, அந்த

https://telegram.me/aedahamlibrary

மாமரத்தின் அடியில் மீண்டும் அமர்ந்து, அத்திமலைத்தேவனை சற்று நேரம் தியானித்தான். பிறகு, கண்களைத் திறக்காமல், தனது சிந்தனைக் குதிரையை அவிழ்த்து விட, அது விரைந்து ஓடத்துவங்கியது.

மன்னன் தானநந்தாவிடம் எப்படிப் பேச்சைத் துவக்குவது?

ஆலய மணி ஒன்று “நங் நங்” என்று ஒலித்து அரண்மனைக்குச் செல் என்று இவனை துரிதப்படுத்த, எச்சரிக்கை உணர்வுடன் தனது மூட்டையில் இருந்த தேவ உடும்பர மரத்திலிருந்து ஒரு பகுதியை உடைத்துக் கொண்டான். அந்த மரச் சிதிலை தனது வேட்டியினில் முடிந்துகொண்டான். மிகுதியுள்ள உடும்பர மரத்துண்டினைத் துணி மூட்டையினுள் வைத்து மீண்டும் உறுதியான முடிச்சைப் போட்டான்.

சுற்றுமுற்றும் பார்த்தவன், அருகில் யாரும் இல்லை என்பதை உறுதி செய்துகொண்டு, தான் அமர்ந்திருந்த மேடையின் அருகிலேயே குழி ஒன்றைத் தோண்டி, தனது துணி மூட்டையை பதுக்கினான். அடையாளமாக தான் மூட்டையை பதுக்கிய இடத்திற்கு நேராக, மேடையின் அடிசுவற்றில், செம்மண் குழைவினால் 'ஓம்' என்று எழுதிவிட்டு, அரண்மனையை நோக்கி நடந்தான்.

புஷ்பபுர அரண்மனையின் பிரம்மாண்டம் கவுடில்யனை பிரமிக்க வைத்தது. இவ்வளவு பெரிய அரண்மனையிலா தானநந்தா வாழ்கிறான்? அத்தியூரில் சிறுகுடிலில் வசித்த அவன், பரப்பசுவாமியின் பெரிய மாளிகையைக் கண்டே அசந்து நின்றவனுக்கு புஷ்பபுர அரண்மனை முற்றிலுமாக அவனை மெய்மறக்கச் செய்துவிட்டது.

இப்படியும் கூட சுவர்க்கபுரிகள் பூமியில் உள்ளனவா என்ன? அனலோம்பும் பார்ப்பனச் சிறுவனாக இல்லாமல் ஒரு அரசகுமாரனாகப் பிறந்திருந்தால், இம்மாதிரி அரண்மனையில்தானே வசித்திருப்பான்.!

ஆனால் ஒரு அரசனின் வாழ்க்கை சுகபோகத்தை அனுபவிப்பதுடன் நிறைந்து விடுகிறதா என்ன? போர்க்களத்தில் எதிரிகளுடன் போரிட்டு மடிய வேண்டிய ஒரு நிச்சயமற்ற வாழ்வுதானே? ஆற்றங்கரை குடில்களில் நிலவும் மனவமைதி இத்தகைய அரண்மனைகளில் கிட்டுமா?

பற்றற்ற வாழ்க்கைக்கு மனவமைதி போதும். ஆனால் சோற்றுப்பற்றுடன் உலக விஷயங்களின் மீதான பற்றுதல்களையும்

https://telegram.me/aedahamlibrary

அல்லவா உட்கொள்ளுகிறோம். மண்ணுலகத்தின் மீதுள்ள பற்றுதலை அதிகரிக்கச் செய்வதுதானே சோற்றுப்பற்று. உணவினை தொடர்ந்து உட்கொள்ள, தேகத்தில் கொழுப்பும், திமிரும் அதிகரித்து மேலும் சுகங்களை அல்லவா எதிர்பார்க்கின்றது. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகினையும், ஆடவர்க்கு செயல்திறனையும் அல்லவா அளிக்கின்றது. ஒட்டுதல்களை தவிர்க்கத்தானே, ஞானியர் சோற்றைத் தவிர்த்து உபவாசம் இருக்கின்றனர்.

ஒரு முறை, கவுடில்யனே தனது தந்தையைக் கேட்டிருக்கின்றான்!

"அரிசிச்சோறு உண்ணக்கூடாது!" என்று உபவாச நாட்களில் அரிசியை உடைத்து நொய்யில் பொங்கலைச் செய்து பலகாரமாக உண்கிறோமே. அரிசியை உடைத்து தின்றால் கூட, சோறு சாப்பிடுவது போல்தானே?" என்று கேட்டிருக்கிறான்.

தந்தை காஞ்சனகுப்தர் கூறிய விளக்கம், அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"அரிசி என்பது முழு வடிவினில் இருக்கும்போது பிரபஞ்ச சக்தியின் ஒரு அம்சமாக இருக்கிறது. பித்ருக்களின் ஆசிகள் அரிசி சாதத்தின் வழியாகத்தான் மனித குலத்தை வந்தடைகிறது. சாதத்தில் உள்ள வீரியம்தான் ஒரு மனித உடலில் இந்திரிய சக்தியாக மாறுகிறது. இந்த சக்திதான் மனித குலத்தைத் தழைக்கச் செய்கிறது. பிள்ளையின் மீது பற்று, செல்வத்தின் மீது பற்று, பதவியின் மீது பற்று, அதிகாரத்தின் மீது பற்று, என்று உலக விவகாரங்களில் பற்றினை உருவாக்குவதால், சோற்று பற்றிருக்கை [1]

உலகத்தில் இருக்கைக்கு பற்றுதல் அவசியம். பற்றுதலை ஏற்படுத்தும் அரிசிமணியை உடைக்கும்போது பற்றுதல் நீங்கி, ஒட்டுதல் அகன்று, தெய்வசிந்தனை மட்டுமே மேலோங்கும். எனவேதான் உபவாச நாட்களில், அரிசிமணியை உடைத்து, அதன் நொய்யில் பொங்கலை சமைத்து உண்கிறோம்!" காஞ்சனகுப்தர் கூறினார்.

அழகிய நீண்ட தடவாவிகள். அவற்றில் மிதக்கும் அன்னபட்சிகள். எங்கும் ஆலவட்டம் வீசும், பசுமையான மரங்கள். கூந்தல் அலங்காரம் செய்து கொண்டிருக்கும் மங்கையரைப் போன்று பூத்துக்குலுங்கும் வண்ண மலர்களுடன் கூடிய செடிகள். மரங்களில் அமர்ந்து கீதமிசைக்கும் பல்வேறு பறவைகள். மான், மயில் என்று அரச

https://telegram.me/aedahamlibrary

நந்தவனத்திற்கு அழகு சேர்க்கும் ஜந்துகள். பளிங்கு கற்களில் சிலைகள் என்று புஷ்பபுர அரண்மனையைச் சுற்றி அழகும் ரம்மியமும் கைகோர்த்து நடமாடிக் கொண்டிருந்தன. தனது பொக்கையாகிவிட்ட வாயினால் காற்றை வெளிப்படுத்தி தனது பிரமிப்பினை வெளிப்படுத்தினான், கவுடில்யன்.

சேடிகளும், காவலர்களும், இதர பணியாளர்களும், கூட கம்பீரமாக ஆடை அணிகளுடன் சுற்றித்திரிய, அந்த அரண்மனை வளாகத்தில் பழுப்பேறிய வேட்டியுடனும், மேல்துண்டுடனும் நடந்த கவுடில்யனை அனைவரும் விசித்திரமாகப் பார்த்தனர்.

"யாரப்பா நீ?" வயது முதிர்ந்த பணியாளன் ஒருவன் அரண்மனையை நோக்கி நடந்த கவுடில்யனைத் தடுத்து நிறுத்தினான்.

“மன்னனைச் சந்திக்க வந்திருக்கிறேன்!” - அலட்சியத்துடன் கூறினான், கவுடில்யன்.

“முன் அனுமதியின்றி, மன்னனைச் சந்திக்க இயலும் என்று எந்த குருகுலத்தில் உனக்கு போதிக்கப்பட்டது?” குதர்க்கமாகக் கேட்டான், அந்தப் பணியாளன்.

“தெருவில் நின்று கொண்டிருந்த என்னை தண்டோராவை ஒலித்து அழைத்ததே மன்னன்தானே! அழைத்தவரை பெருமைப்படுத்த வேண்டும் என்கிற பாடத்தை போதித்த குருகுலத்தில் கல்வி பயின்றதால் தான், உனது கேள்விகளுக்கு நின்று பதில் கூறிக் கொண்டிருக்கிறேன்!" அதே குதர்க்கத்துடன் பதில் தந்தான், கவுடில்யன்.

பணியாளன் ஒருகணம் அதிர்ந்து போனான். கவுடில்யனுக்கு என்ன பதில் கூறுவது என்று யோசிக்கத் துவங்கினான்.

அப்போது ---

கலகலவென்று சிரித்தபடி பதிமூன்று வயது குமரி ஒருத்தி, சலங்... சலங் என்று சதங்கைகள் ஒலிக்க ஓடி வந்தாள். அவளை விரட்டியபடியே ஓடி வந்தான் பதினாறு பிராயங்களைக் கடந்த குமரன்.

ஓடி வந்த குமரியின் பார்வை கவுடில்யனின் மீது பதிந்ததும் சடாரென்று நின்றாள். பிறகு தனது சுட்டு விரலை அவனை நோக்கி நீட்டியவள்,

https://telegram.me/aedahamlibrary

குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கத் துவங்கி விட்டாள். அவளை விரட்டிக் கொண்டு வந்த குமரனும், கவுடில்யனைக் கண்டதும் வியப்புடன் நின்றான். ஆனால் அவனைக் கண்டு நகைக்காமல் புருவங்களை உயர்த்தியபடி நின்றான்.

"அண்ணா! இந்த வாலிபனைப் பாரேன். இப்போதே கிழவர்களைப் போன்று பொக்கை வாயினைக் கொண்டிருக்கிறானே! இந்த மனிதனுக்கு பற்களே முளைக்கவில்லையா என்ன?" - கேலி செய்தபடி ஒருமுறை கைகளைக் கொட்டியபடி கவுடில்யனைச் சுற்றி வந்தாள்.

"பேசாமல் இரு துர்தரா! பார்த்தால் யாரோ பிராமணோத்தமனாகத் தெரிகிறார். எதையாவது கூறி சபித்துவிடப் போகிறார்!" என்று கவுடில்யனை உறுத்துப் பார்த்தான் பிபத்தன்.

துர்தரா தன்னைச் சுற்றி வந்து நையாண்டி செய்து கைகொட்டி சிரித்ததால், உண்மையிலேயே கவுடில்யனின் முகத்தில் சினம் பொங்கிக் கொண்டிருந்தது

அறியா சிறுமிதானே என்று தனக்குள் சமாதானம் செய்துகொண்டு, பிபத்த நந்தனை நோக்கினான், கவுடில்யன். ஆனால் துர்தரா அவனை அவ்வளவு எளிதில் விடுவதாக இல்லை.

"பல்லாங்குழி பலகை வாயனே. சோழி பற்களை எந்த நங்கை களவாடிச் சென்றாளோ?" - என்று நகைத்தபடி மீண்டும் கைகொட்டி ஆர்ப்பரித்த துர்தராவை உக்கிரத்துடன் நோக்கினான், கவுடில்யன்.

“ஏய் பெண்ணே! எனது தோற்றத்தினை எள்ளி நகையாடும் உனது வாழ்க்கையை சோழிகள் சிதறுவது போன்று சிதறடிக்கிறேன்! உனது பேரழகு முகத்தை, உனது பற்களை பெயர்ந்து விழச் செய்கிறேன் பார்! நிச்சயம் அதற்கான காலம் கனியும்!" - என்று மனதினுள் துர்தராவை சபித்துக்கொண்டு அவளை வெறித்து நோக்கியபடி நின்றான்.

நிலைமை எல்லை மீறிப் போவதை உணர்ந்த துர்தராவின் அண்ணன் பிபத்த நந்தன் கவுடில்யனை சமாதானம் செய்யும் நோக்கத்துடன் பேசினான்.

“பிராமண இளைஞரே! இவ்வளவு விடியற்காலையில் தாங்கள் அரண்மனையை நாடி வந்த நோக்கம் என்ன? மன்னர் ஏகாந்தத்தில்

https://telegram.me/aedahamlibrary

குடும்பத்தினருடன் பொழுதை கழிக்கும் சமயமல்லவா? அரசு அலுவல்களும், பிகைஷ அளித்தலும் இப்போது நடைபெறாது. மன்னர் அரண்மனை கொலு மண்டபத்திற்கு பிற்பகல் வாருங்கள்!” பிபத்த நந்தன் கூற, ஏற்கனவே "பல்லாங்குழி பலகை வாயன்” என்று துர்தராவினால் அவமதிக்கப்பட்டிருந்த கவுடில்யனது கோபம் அதிகமானது.

"தங்கை உருவத்தை கேலி செய்கிறாள். தமையனோ பிச்சை பெற்றுக்கொள்ள மதியம் வா என்கிறான்! என்ன ஆணவம் இந்த அரச குடும்பத்தர்களுக்கு! நான் யாரென்பதை இவர்களுக்கு உணர்த்த வேண்டும்!" - மனதினுள் உறுதி பூண்டான் கவுடில்யன்.

“குமரனே! நான் பிட்சை கேட்டு வரவில்லை. உனது தந்தை மன்னன் தானநந்தா தான் என்னிடம் பிட்சை கேட்டுள்ளான். பிட்சையளிக்கவே நான் இந்த விடியற்காலையில் உங்கள் அரண்மனைக்கு வந்திருக்கிறேன்!" சற்றே காட்டமாகக் கூறினான்.

இதனைக் கேட்டதும் - யுவராஜா பிபத்த நந்தன் மட்டுமல்ல. யுவராணி துர்தராவும் கவுடில்யனை கோபத்துடனும், ஆக்ரோஷத்துடனும் பார்த்தாள். பணியாளக் கிழவனும் பேய் அறைந்தவனைப்போன்று அவனைப்பார்த்தான்.

‘மன்னனையே பிச்சைக்காரன் என்று கூறிய அந்த வேதியக் குமரனை ஒன்றுமே செய்யாமல், அவன் பேசுவதை கேட்டுக்கொண்டிருந்தான் என்று மன்னனிடம் போட்டுக் கொடுத்துவிட்டால், இவன் கதி. இவ்வாறு நினைத்ததும் அந்தப் பணியாளனின் சப்த நாடியும் ஒடுங்கியது.

இளவரசன் மற்றும் இளவரசியிடம் நற்பெயரைப் பெற்றே தீரவேண்டும் என்கிற எண்ணத்தில், அவர்களை முந்திக்கொண்டு கவுடில்யனின் பிடரியில் தனது கையை வைத்தான், அந்தப் பணியாளன்.

“எவ்வளவு துணிவு இருந்தால், எங்கள் மன்னனை அவமதிப்பாய்? காவலர்களை அழைத்து உனது நாவை துண்டிப்பதற்குள், இங்கிருந்து ஓடி விடு!” என்று கவுடில்யனைப் பிடித்துத் தள்ள, அவன் பின்பாக வந்து நின்ற அமரேந்திரியின் மீது மோதினான். பிபத்தனுக்கும், துர்தராவிற்கும் தங்கத்தட்டினில் பழரசக் கோப்பைகளை ஏந்தி வந்திருந்தாள், அமரேந்திரி. கவுடில்யன் அவள் மீது மோதியதால்,

https://telegram.me/aedahamlibrary

தட்டை நழுவ விட, கோப்பைகள் சிதறின.

“ஐயோ! என்னை பழரசம் குடிக்க விடாமல் செய்து விட்டான்! காவலர்களை அழைத்து உடனே இவனை கைது செய், அண்ணா!" வீறிட்டாள், துர்தரா.

துர்தராவைப் பழரசம் குடிக்க வைப்பது பெரிய போராட்டம். அப்படிப்பட்டவள் பழரசம் சிதறியதற்காக அந்த வேதியக் குமரனை கைது செய்யச் சொல்லி அவள் கேட்பதைக் கண்டு திகைத்த அமரேந்திரி, துர்தராவை சமாதானம் செய்யும் எண்ணத்துடன் அவளது தோளினில் தனது கையை வைத்தாள்.

“போனால் போகட்டும், இளவரசி! விட்டுத் தள்ளுங்கள்! ஏழை பிராமணச் சிறுவன். யார் பெற்ற மகனோ? அவனை தண்டிக்க வேண்டாம். பிழைத்துப் போகட்டும். நான் தங்களுக்கு வேறு பழரசம் கொண்டு வருகிறேன்!” அமரேந்திரி கூறியதும், முகம் சிவந்தாள், துர்தரா.

அமரேந்திரியின் கையை வெடுக்கென்று தனது தோளினில் இருந்து உதறித் தள்ளியவள், தனது மென்மையான கரத்தால், அமரேந்திரியின் கன்னத்தில் பளீரென்று ஒரு அறையினை வைத்தாள்.

“என்ன பேசுகின்றாய், மூட தாதிப்பெண்ணே! எனது தந்தையை அவன் பிச்சைக்காரன் என்று கூறியிருக்கிறான். அவனை நீ பரிகின்றாயே!”

அமரேந்திரி தனது கன்னத்தை வலது கரத்தினால் பற்றியவள், மறுமொழி கூறாமல், கீழே சிதறிக்கிடந்த கோப்பைகளையும், தங்கத் தட்டினையும் எடுப்பதில் முனைந்தாள்.

“யார் பெற்ற மகனோ?” என்று அமரேந்திரி வாஞ்சையுடன் கூறியது, கொதித்துக் கொண்டிருந்த கவுடில்யனின் மனதை இறகினால் தடவிக்கொடுத்தது போன்று இருந்தது. உடனே, தாய் சானேஷ்வரியின் நினைவு வந்தது. தனது தாயே அமரேந்திரியின் உருவத்தில் தனக்கு ஆறுதல் கூறியதாக நினைத்துக் கொண்டான். கவுடில்யன்.

ஆனால் ---

துர்தரா அவளை கன்னத்தில் அறைந்ததைக் கண்டதும், தனது தாயே

https://telegram.me/aedahamlibrary

அறைபட்டது போன்று உணர்ந்தான். தான் அவளுக்கு சாதகமாகப் பேசினால், அவள் மிகவும் பாதிக்கப்படுவாள் என்பதை உணர்ந்து, அமைதியாக கோப்பைகளை எடுத்துக் கொண்டிருந்த அமரேந்திரியை நோக்கினான்.

"வருந்தாதீர்கள் தாயே! இந்த ஆணவப் பிசாசை உங்களுக்கு சேடிப்பெண்ணாக மாற்றுகிறேன்!" - என்று மற்றொரு சபதத்தை செய்தான்.

எப்படி நிறைவேற்றுவோம் என்கிற கவலையெல்லாம் கவுடில்யன் கொள்வதில்லை. சபதங்களைச் செய்து விட்டு, பிறகு அவற்றை எப்படி நிறைவேற்றுவது என்று நினைப்பானே தவிர, சபதங்களைச் செய்வதற்கு முன்பாக இதை நிறைவேற்றுவது சாத்தியம்தானா என்று அவன் யோசிப்பது கிடையாது.

ஒரு சேடிப்பெண்ணிற்கு நாட்டின் இளவரசியை பணிப்பெண்ணாக மாற்றுவேன் என்று சபதம் செய்து விட்டான். அதை எப்படி நிறைவேற்றப் போகிறான் என்பது குறித்து பின்னர்தான் சிந்திப்பான்.

யோசிக்காமல் சபதங்களைச் செய்துவிட்டு பின்னர் அவற்றை நிறைவேற்ற வழிதோன்றாமல் அவதியுறும் வழக்கம் எல்லாம் அவனிடம் கிடையாது. அவதி என்கிற சொல்லே கவுடில்யனின் வாழ்வில் இல்லை. அவதிகளை தனது படிக்கற்களாக மாற்றிக்கொண்டுதான் வாழ்வில் உயரப்போகிறான்.

மனதினுள் ஒரு சிறைச்சாலையை அமைத்திருந்தான், கவுடில்யன். ஏற்கனவே, பரப்பசுவாமியின் குடும்பத்தையும், இவனது பெற்றோர்களைக் கொன்ற ஆதர்ஷனையும் அந்தச் சிறைச்சாலையில் தான் அடைத்து வைத்திருந்தான். அவர்களை தண்டித்து தனது பழியினை தீர்த்தபிறகு, இதுவரை அந்த மனச் சிறைச்சாலை வெறுமையாகவே இருந்திருந்தது. இப்போது இளவரசி துர்தராவையும், இளவரசன் பிபத்த நந்தனையும் அந்தச் சிறைச்சாலையினுள் தள்ளினான், கவுடில்யன். கண்கள் சிவக்க, இருவரையும் நோக்கினான்.

"நீங்கள் என்னைச் சிறைப்படுத்துவதற்கு முன்பாகவே, உங்கள் இருவரையும் எனது மனச்சிறையில் பூட்டி விட்டேன். உங்கள் வாழ்க்கையை நரகமாக்குவதுதான் இனி என் பணி!" - கவுடில்யன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

"என்ன ஆணவம்! இந்த பல்லாங்குழி பலகை வாயனை சிறையில் தள்ளுங்கள்!” தனது மென்மையான குரலில் துர்தரா ஆணையிட, காவலர்கள் ஈட்டியுடன் வந்து கவுடில்யனை சூழ்ந்து கொண்டார்கள்.

தன்னைக் கைது செய்ய நின்ற காவலர்களை ஏறிட்ட கவுடில்யன் குரோதத்துடன் துர்தராவையும், பிபத்த நந்தனையும் பார்த்தான்.

ஏளனச்சிரிப்புடன் கைகளைக் கட்டி, இறுமாப்புடன் நின்றிருந்த துர்தராவை வெறுப்புடன் நோக்கினான். "இதற்கெல்லாம் நீ பதில் சொல்லியே தீர வேண்டும்” என்கிற பொருள் அந்த பார்வையினில் பொதிந்திருந்தது.

"ம்ம்... என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள். இந்தக் கயவனை சிறையில் தள்ளுங்கள்!” என்று துர்தரா கூற, தன்னைச் சுற்றிப்பார்த்தான், கவுடில்யன். இத்தனை காவலர்கள் சூழ்ந்து இருக்க, அவனால் பரந்து விரிந்திருந்த இந்த அரண்மனை வளாகத்தை விட்டு தப்பி செல்ல முடியாது என்பதைப் புரிந்துகொண்டான். என்ன செய்யலாம்?

இராவணப் படையிடம் கட்டுண்ட அனுமனைப் போன்று தனது சக்தியை இந்த அரக்கி துர்தராவுக்குக் காட்ட வேண்டும் என்று மனதினுள் நினைத்தான். சட்டென்று ஒரு எண்ணம் பிறந்தது.

கவுடில்யன் தனது கண்களை மூடினான். மனதினுள் அத்திமலைத்தேவனை இருத்தினான்.

“அத்தியூர் தேவராஜனே! உக்கிரம் நிறைந்த மாலவனே. யாகத்தீயினில் பொலிந்து நிற்பவனே! எனது தந்தை உனக்காக செய்த தியாகங்களை மறந்தாயோ? உயிர் போகும் நேரத்திலும் உன்னைப்பற்றிய ரகசியங்களை புலிவேமு மன்னனிடம் சொல்லாமல் சென்றாரே. அவர் மகனாகிய எனக்கு தீங்கு செய்கிறார்களே. உனது உடும்பர தேகத்திற்கு உண்மையிலேயே நினைத்ததை அளிக்கும் ஆற்றல் இருந்தால், இதோ என்னை இந்த இக்கட்டான நிலைமையில் இருந்து காப்பாற்று. எனது ஆற்றலை இவர்களுக்கு நிரூபிக்க ஒரு வாய்ப்பு கொடு!” - மனதினுள் வேண்டியபடி தனது வேட்டியில் முடிந்திருந்த தேவ உடும்பரத் துண்டை வலதுகையினால் வருடினான்.

அடுத்த கணம் ---

https://telegram.me/aedahamlibrary

தற்செயல் என்று சொல்லுவதா, தேவபிரானின் லீலை என்று சொல்லுவதா?

அரண்மனை லாயத்தில் கட்டப்பட்டிருந்த குதிரை ஒன்று தனது பிணைப்பை அறுத்துக்கொண்டு பாய்ந்தோடி வரத் துவங்கியது. மிகவும் உக்கிரமான, கட்டுக்கடங்காத குதிரை அது. அனைவரும் கூட்டமாக நிற்பதைக் கண்டதும் இவர்களை நோக்கி குறி வைத்து வரத்தொடங்கியது.

அரண்டு போன காவலர்கள், பாய்ந்து வரும் குதிரை பிபத்த நந்தனையும் துர்தராவையும் தாக்கிவிடக் கூடாது என்று பயந்து, அவர்களைச் சுற்றி அரணாக நின்று, அவர்களை அரண்மனையை நோக்கி நகர்த்திச் செல்ல, இன்னும் சில வீரர்கள் ஈட்டியை குறிவைத்தபடி, வெறியுடன் ஓடி வரும் குதிரையை எதிர்கொள்ளத் தயாராக நின்றனர்.

வேகமாக வந்த குதிரை தனது முன்னங்கால்களை உயர்த்தி, காவலர்களின் மீது பாய, அவர்கள் சிதறியோடினார்கள். இந்தக் களேபரத்தில் எந்தப்பக்கம் செல்வது என்று புரியாமல் அங்குமிங்கும் அல்லாடிக் கொண்டிருந்த முதிய பணியாளனை தனது கால்களால் பலங்கொண்ட மட்டும் குதிரை உதைத்தது. முகம் பெயர்ந்து, பற்கள் சிதற, இரத்தத்தை பெருக்கியபடி பிணமாக விழுந்தான் அந்தப் பணியாளன்.

காவலர்களின் பின்பாக ஒளிந்துகொண்டிருந்த துர்தராவும், பிபத்த நந்தனும் இந்தக் காட்சியைக் கண்டனர். கவுடில்யன் பிரார்த்தித்துக் கொண்டதை கண்ணுற்ற பிபத்தன் அவன் மந்திர ஜாலங்களைக் கற்றிருக்க வேண்டும் என்று நினைத்தான். துர்தராவுக்கு அவன் மீது இன்னும் வெறுப்பு அதிகரித்தது.

“இவன் ஆபத்தானவன். இவனை உயிருடன் விடக்கூடாது!” - என்று தனக்குள் முணுமுணுத்தாள், துர்தரா.

பிபத்தனின் முகம் இருண்டு போனது. பணியாளன் பிணத்தையும், கவுடில்யனின் முகத்தையும் மாற்றி மாற்றிப் பார்த்தவன், அச்சத்துடன் அரண்மனையை நோக்கி ஓடினான்.

கண்களைத் திறந்து பார்த்த கவுடில்யன் கீழே பணியாளன் பிணமாகக் கிடப்பதையும், தொலைவில் குதிரை ஒன்று ஓடிக்கொண்டிருப்பதையும்,

https://telegram.me/aedahamlibrary

பிபத்தனும், துர்தராவும் அரண்மனைக்குள் சென்று கொண்டிருப்பதையும் கவனித்தான்.

அப்போது குதிரையின் மெய்காப்பாளன், அதன் பெயரைக் கூவியபடி பின்னால் ஓடிச்செல்வதை பார்த்தான், கவுடில்யன். அவன் அழைத்த குதிரையின் பெயர் கவுடில்யனுக்கு சிலிர்ப்பினை தந்தது. மெய்காப்பாளன் அந்தக் குதிரையை அழைத்த பெயர், - தேவரட்சா.

தானநந்தா செய்வதாக இருந்த அஸ்வமேத யாகத்திற்கு பயன்பட இருந்த தேவரட்சா குதிரைக்கு வெறி பிடித்து விட்டது என்பதனை அறிந்த அரண்மனை ஜோதிடர், மிஸ்ரபானு மிகவும் கலங்கிப் போனார்.

[1] தற்போது சோற்று பருக்கை என்கிறோம். சோற்று பற்றிருக்கை என்பது இவ்வாறாக மருவி விட்டது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 12. பிச்சைக்கார மன்னன்

அரண்மனை நந்தவனத்தில் நிகழ்ந்த சம்பவத்தை அமரேந்திரி, அரசி பத்மாங்கியின் காதில் கிசுகிசுத்தாள்.

"அரசியாரே! ஒரு பிராமணக் குமரன் யாசகம் பெறுவதற்காக மன்னரைக் காண வந்திருக்கிறான். அவரை நம் இளவரசியும், இளவரசரும் அவமதித்துப் பேச, இதனால் வெகுண்ட அவன், தனது மந்திர மகிமையினால் பட்டத்து குதிரை தேவரட்சாவை அதன் பிணைப்பில் இருந்து விடுபடச் செய்து, அரச குழந்தைகளை நோக்கி வரச்செய்தான். நல்ல வேளை! பிபத்த நந்தரும், துர்தரா தேவியும் தப்பி விட்டனர். மூத்த பணியாளர், ஸ்கந்தன் குதிரையினால் தாக்கப்பட்டு, மாண்டு போனான்." - அமரேந்திரி இவ்வாறு கூறியதும், பத்மாங்கி உறைந்து போனாள். 'பிராம்மணர்களுக்கு இல்லை என்று சொல்லாதே! எந்த பிராமணனுக்கு நீ இல்லை என்று சொல்கிறாயோ, அவனால் உன் குலம் அழியும்...! - தானநந்தாவின் பட்டாபிஷேகம் அன்று மகா பைரவர் ஆலயத்தில் இருந்து வெளிப்பட்ட அந்த பைராகி விடுத்த எச்சரிக்கை அவளது செவியில் ஒலித்தது.

ஏற்கனவே, துர்தரா மற்றும் பிபத்த நந்தனின் தலையையும் உடலையும் பிணைக்கும் சுழுமுனை பலவீனமாக இருப்பதாகக் கூறியுள்ளாரே அந்த பைராகி.

பத்மாங்கி பதைபதைத்துப் போனாள்.

துர்தரா ஒரு காட்டுவாசியைத்தான் மணந்து கொள்வாள்.

இறந்த பிறகே அவளுக்கு மகன் பிறப்பான் என்று மிஸ்ரபானு வேறு அவர் பங்குக்கு அரச தம்பதிகளை குழப்பியிருந்தார். அன்றாடம் இறைவனை பூஜித்து தனது செல்வங்களைக் காக்கும்படி பத்மாங்கி வேண்டிக் கொண்டுதான் இருக்கிறாள். இந்நிலையில், இப்படியா ஒரு பிராமணச் சிறுவனின் சாபத்தைப் பெற்றுக் கொள்வார்கள், அண்ணனும், தங்கையும்.

உடனடியாக மன்னன் தான நந்தாவைத் தேடிச் சென்றாள். இவள் போன சமயமாக, அரண்மனை பாதுகாவல் தலைவன் மன்னனிடம் அரண்மனை நந்தவனத்தில் நிகழ்ந்த சம்பவங்களைத் தெரிவித்துக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தான்.

மன்னன் திகைப்புடன் அவனைப் பார்த்தான்.

“எங்கே அந்த பிராமணக் குமரன்?”

"அவனை நந்தவனக் கண்ணாடி மண்டபத்தில் அமர வைத்திருக்கிறோம் மன்னா! தங்கள் உத்தரவுப்படி அவன் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று காத்திருக்கிறோம்!” - பாதுகாவல் தலைவன் கூறினான்.

"அவரை எதற்கு கைது செய்ய வேண்டும், அரசே! யாசகத்திற்காக வந்திருக்கும் அந்தணரை வீணே வம்பு வளர்த்து அவமதித்தது நம் செல்வங்களின் தவறு. அவரை வரவழைத்துக் கேட்கும் யாசகத்தை கொடுத்து அனுப்புங்கள்!” - என்றபடி பத்மாங்கி உள்ளே வர, தானநந்தன் பாதுகாவல் தலைவனை நோக்கி தலையசைத்தான். அவனும் கவுடில்யனை அழைத்து வரச் சென்றான்.

"மன்னரே! அந்த பைராகி சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். எப்போது நாம் ஒரு பிராமணனுக்கு இல்லை என்று சொல்கிறோமோ அப்போது அவனால் நம் குலம் அழியும் என்றாரே!” - பத்மாங்கி கணவனை எச்சரித்தாள்.

"அதற்காக ராஜ்யத்தையே கேட்டால் என்ன செய்வது?” - தானநந்தா கேட்க, பதில் கூற இயலாமல், பத்மாங்கி திணறினாள்.

மன்னன் அவளைக் கவலையுடன் பார்த்தான். “பத்மாங்கி! அந்த பைராகி கூறியதை மறந்தால்தானே, நினைவில் கொள்வதற்கு.! அஸ்வமேத யாகம் செய்வதாக நிச்சயித்து, வேதியர்களுக்கு தான தர்மத்தைச் செய்து கொண்டுதான் இருக்கிறேன். ஆனால், நான் செய்யும் தான தர்மங்களைப் பெறுவதற்கு வேண்டிய தகுதிகளையும் அவர்கள் கொண்டிருக்க வேண்டும் அல்லவா? எனது பெயரே தானநந்தன். தானங்களைச் செய்வது பற்றி எனக்கு யாரும் போதிக்க வேண்டியது இல்லை. இந்த பிராமணச் சிறுவனின் கோபம் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. மறையவர்களின் தவவலிமை அவர்களுக்குப் பொறுமையையும், அடக்கத்தையும் தந்துள்ளது. அவர்களுக்கு எத்துணை அநீதிகள் இழைக்கப்பட்டாலும், அவர்கள் கோபம் கொள்வதில்லை. ஆனால், நம் அரண்மனைக்குள் பிரவேசித்து, ஆர்ப்பாட்டம் செய்துள்ள இந்தக் குமரனின் செயல் விந்தையாக

https://telegram.me/aedahamlibrary

உள்ளது. இவனை நாம் எச்சரிக்கையுடன் கையாள வேண்டும். வேதியர்களின் மந்திர உச்சாடனம் உலகை வாழ வைக்கவே அன்றி, மற்றவர்களை துன்புறுத்துவதற்கோ, பழி தீர்ப்பதற்கோ அல்ல. நம் செல்வங்கள் அவனை அவமதித்திருந்தாலும், அவன் நம்மிடம்தானே முறையிட்டு இருக்க வேண்டும்? தேவரட்சா குதிரையை நம் செல்வங்களின் மீது ஏவுகின்றான் என்றால், அவன் மனதில் எவ்வளவு வஞ்சக எண்ணம் இருந்திருக்க வேண்டும்? அவனது நோக்கத்தை நான் சந்தேகப்படுகிறேன்!” - தானநந்தா கூறினான்.

"உடன் பிரதம அமைச்சர் ஹரஹரதேவ்வையும் ஜோதிடர் மிஸ்ரபானுவையும் வைத்துக்கொண்டு அவருடன் பேசுங்கள். அந்த அந்தணக் குமரன் கேட்பது தானதர்ம நியதிகளுக்கு உட்பட்டதாக இருந்தால், உடனே தந்துவிடுங்கள். அப்படி அவன் கேட்பது நியதிகளுக்கு உட்படவில்லை என்றால், அதனை அவருக்கு விளக்கி, வேறு ஏதாவது கேட்கச் சொல்லுங்கள்!” - பத்மாங்கி கூற, தானநந்தனுக்கு அது மிகவும் நல்ல யோசனையாகப்பட்டது.

உடனே பிரதம அமைச்சரையும், ஜோதிடரையும் அரசவைக்குத் தருவித்தான்.

பாதுகாவலர்கள் சூழ, கவுடில்யன் அரசன் வீற்றிருந்த மண்டபத்தினுள் அழைத்துச் செல்லப்பட்டான். ஒவ்வொரு அடியினையும், தனது எதிர்கால இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக எடுத்து வைக்கிறேன் என்பது போன்று, நிதானமாக அதே சமயம் உறுதியுடன் அந்த சபையினுள் தனது காலடியைப் பதித்தான், கவுடில்யன்.

மண்டபத்தினுள் நுழைந்தபோது, அரசன் தானநந்தன், பத்மாங்கி, ஹரஹரர், மிஸ்ரபானு, ஆகியோர் அமர்ந்திருக்க, அரசனின் இருபுறமும் கவரி வீசும் பெண்கள் நின்றிருந்தனர்.

பாதுகாவலர் ஒதுங்கி நிற்க, கவுடில்யன் மட்டும் துணிவுடன் மன்னரின் முன்பாக விறைப்பாக நின்றான். மன்னனை உறுத்துப் பார்த்தான்.

ஒத்தாடை கிராமத்தில் தான் சந்தித்திருந்த புலிவேமுவுக்கு மாறாக மிகவும் ஆடம்பரத்துடன் காணப்பட்டான், தானநந்தா. அவனது மகுடத்தில் குஞ்சலமாக ஊசலாடிக் கொண்டிருந்த வைரமணிகளே பல இலட்ச வராகன்களை பெறும். மிகவும் கம்பீரத்துடன் இருந்தான், தானநந்தா… உயரமான ஆகிருதி. கட்டுமஸ்த்தான தேகம். கோதுமை

https://telegram.me/aedahamlibrary

நிறம்! உச்சி முதல் பாதம் வரை ஆபரணங்கள் காணப்பட்டன. வெண்பட்டாடையை அணிந்து நீல வண்ணத்தில் உத்திரியத்தை போர்த்தியிருந்தான். அவனது வீரவாளிலும், குத்துவாளிலும் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தன. அவனுக்கேற்ற அழகியாகத் திகழ்ந்தாள், பத்மாங்கி.

பிபத்த நந்தன் பத்மாங்கியின் முகவெட்டினைக் கொண்டிருக்க, துர்தரா தானநந்தாவின் பிம்பமாகத் திகழ்ந்தாள் என்பதை உணர்ந்தான், கவுடில்யன்.

"வேதியக் குமரனே! உன்னை மன்னனிடம் அறிமுகம் செய்துகொள்!” தலைமை அமைச்சர் ஹரஹரர் கூறினார்.

மன்னனை நோக்கி தலை வணங்கினான், கவுடில்யன்.

"அரசே! தட்சிண பிரதேசத்தில் காஞ்சி மரங்கள் அடர்ந்த அழகிய காடு ஒன்று உள்ளது. அதனை தமிழ் மொழியில் அத்திவனம் என்று அழைப்பர். அதன் மையத்தில் அத்தியூர் என்கிற கிராமம் ஒன்று உள்ளது. பிரம்மன் அங்கே அஸ்வமேத யாகத்தைச் செய்தான். அதனால் மகிழ்ந்த விஷ்ணு பகவான் அவனுக்குக் காட்சி தந்து அங்கே அத்திமலையில் தேவராஜனாக அருள் பாலிக்கின்றான். அந்த ஆலயத்தின் பொறுப்பாளராகவும், அங்கே பாய்ந்து செல்லும் வேகவதி நதிக்கரையில் குருகுலம் நடத்துபவராகவும் திகழ்ந்த காஞ்சனகுப்தர் என்கிற குருவின் மகனும் சீடனுமாகிய என்னை விஷ்ணுகுப்தன் என்று அழைப்பார்கள். எனது பெற்றோர் மறைந்த பிறகு, அவர்கள் அழைத்த எனது பெயரை வேறு எவரும் அழைக்கக் கூடாது என்பதற்காக, எனது பெயரை கவுடில்யன் என்று மாற்றிக் கொண்டேன். கவுண்டன்ய கோத்திரத்தைச் சேர்ந்தவன் ஆகையால் இப்பெயர்!” - தானநந்தாவின் புருவங்கள் சுருங்கின. கவுடில்யனின் குரலில் தொனித்த உறுதியும், அச்சமின்மையும் அவனுக்கு மலைப்பினை தந்தன. அவனது பற்கள் இல்லா வாயை விசித்திரமாக நோக்கினான், மன்னன்.

"குமரனே! இந்தச் சிறு வயதில் உனக்கு ஏன் பற்கள் இல்லை? பிறவியில் இருந்தே பற்கள் முளைக்கவில்லையா?”

தனது வித்வத்தைப் பற்றி கேட்காமல் தனது பற்களைப் பற்றி மன்னன் கேட்பதைக் கண்டு, கவுடில்யன் மனம் நொந்தான்,

https://telegram.me/aedahamlibrary

"இல்லை மன்னா! ஜோதிடர் ஒருவர் எனது பல்வரிசை மிகவும் நேர்த்தியாக இருப்பதாகவும், அம் மாதிரி நேர்த்தியான பல்வரிசையைக் கொண்டவர்கள், எதிர்காலத்தில் மன்னர்களாகத் திகழ்வார்கள் என்றும் ஆருடம் கூறினார். எங்கே நான் மன்னனாகி தன்னை விட்டுப் பிரிந்து சென்றுவிடுவேனோ, என்று என் தாய் பரிதவித்தாள். அவளை விட்டுப் பிரிந்து சென்று விடக் கூடாது என்றே எனது பற்களை உடைத்துக் கொண்டேன்."

கவுடில்யன் இவ்வாறு கூறியதும்தான் தாமதம். அங்கிருந்தவர்களிடையே, குபீர் என்கிற சிரிப்பொலி எழுந்தது... மண்டபமே நகையொலியால் அதிர, காவலர்களும், கவரி வீசிக்கொண்டிருந்த தாதியரும் கூட, சிரிக்க முடியாமல் சிரித்துக்கொண்டிருந்தனர்.

ஹரஹரர் குலுங்கிச் சிரித்தார். தேகம் அதிர, கவுடில்யனை நோக்கினார்.

"மன்னராகாமல் இருப்பதற்காக பற்களை உடைத்துக் கொண்டாயா? நல்ல வேடிக்கை! மன்னரே! இனி நம் எதிரி நாட்டு மன்னர்களின் பற்களை உடைத்துவிட்டால் போதும், அவர்கள் மன்னர் பதவியை இழந்து விடுவார்கள்!" - நையாண்டி செய்தார், தலைமை அமைச்சர். அவரது கூற்றினை செவியுற்ற மன்னனின் நகைப்பு இன்னும் அதிகமானது.

மிஸ்ரபானுவுக்குள் ஒருவித உணர்வு! கவுடில்யனைக் கண்டதுமே அவன் ஆபத்தானவன் என்கிற எண்ணம் தோன்றி விட்டது, அவருக்கு. கனவில் மிதக்கும் தீர்க்கமான கண்கள். வெண்மை நிறம். தலையின் உச்சியில் ஓணான் ஒன்று அமர்ந்திருப்பது போன்று சிகையமைப்பினைக் கொண்டிருந்தான். அதன் நுனி முடிச்சு கழுத்தினைக் கடந்து முதுகில் ஊசலாடிக் கொண்டிருந்தது. மெல்லிய எலும்பும் தோலுமான சதைப்பற்று இல்லாத தேகம். ஒரு மர தாயத்தினை கழுத்தினில் அணிந்திருந்தான்.

இடையில் பழுப்பேறிய வேட்டியைக் கச்சமாக தரித்திருந்தான். அவனது வெண்புரி நூலின் ப்ரும்ம முடிச்சு மார்பில் ஊசலாடிக்கொண்டிருந்த அந்த தாயத்துடன் உறவாடிக்கொண்டிருந்தது.

அந்தக் குமரனைப் பார்த்ததுமே மிஸ்ரபானுவின் அடிவயிற்றினில் கலக்கம் தோன்றியது. கவுடில்யன் அந்த மண்டபத்தினுள் அடியெடுத்து

https://telegram.me/aedahamlibrary

வைத்த அதே சமயம், மிஸ்ரபானு அருகே இருந்த சுவற்றினில் கவுளியொன்று மூன்று முறை சப்தித்தபடி விடுவிடுவென்று ஏறியது. கவுளி ஏறினால் துன்பம் நேரும், இறங்கினால் சுகம் கிடைக்கும் என்று சகுன சாத்திரம் சொல்கிறதே. மனதினுள் அதிர்ந்து போனார், மிஸ்ரபானு.

பிரதம அமைச்சர் அதே கேலிப்பார்வையோடு கவுடில்யனை நோக்கினார்.

“குமரனே! உனக்கு மன்னனாகி விடப்போகிறோமே என்கிற பயம் இருக்கத்தானே செய்யும். ஒரு உஞ்சவிருத்தி பிராமணன் அரியணையில் அமர்ந்தால், திக்விஜயம் செய்து மற்ற மன்னர்களுடன் போரிடவா தோன்றும்? நாடு நாடாகச் சென்று உஞ்சவிருத்தி செய்யத்தான் தோன்றும்? நல்லவேளை, நீ உனது பற்களை உடைத்துக் கொண்டாய். மன்னர் குலப் பெருமை தப்பியது! அதற்கு நன்றி!” - நையாண்டி புரிந்தார், ஹரஹரர்.

கவுடில்யனின் முகம் சிறுத்தது. இளவரசனும், இளவரசியும் தான் இறுமாப்பு கொண்டவர்கள் என்று இதுவரை நினைத்திருந்தான். அரண்மனையில் இருப்பவர் அனைவருமே அப்படித்தான் போலும்!” மனதினுள் வெகுண்டான், கவுடில்யன்.

"உஞ்சவிருத்தி பிராமணனாக இருக்கவேதான் எனது பற்களை உடைத்துக்கொண்டேன். ஒருகால் மன்னர் குலத்தைச் சேர்ந்தவனாக இருந்தால், எனது தாயின் தலையைக் கொய்து விட்டு, எனது பற்களை பாதுகாத்து, மன்னர் பதவியை ஏற்றுக்கொண்டிருப்பேனோ என்னவோ!" - கவுடில்யன் சினத்துடன் கூற, மன்னனும், அரசியும் அதிர்ந்தனர்.

மிஸ்ரபானு முதன்முறையாக வாய் திறந்து பேசினார். "குமரனே! பரசுராமன் தனது தாயின் தலையைக் கொய்த புராணத்தை அறிவாயோ. இதுவரை மன்னர் குலத்தவர் தங்களது தாயின் சிரத்தினை வெட்டி வீழ்த்தியதாக சரித்திரம் இல்லையே!” - மிஸ்ரபானு கூறினார்.

"எனது பற்களை பற்றிய கதையை நீங்கள் கேட்டதால் இவ்வாறு பதில் கூறவேண்டி இருக்கிறது. பல் போனால் சொல் போகும் என்று நீர் அறிய மாட்டீரோ. எனது அறிவையும், வந்த நோக்கத்தையும் பற்றி தாங்கள் கேட்டிருந்தால், அறிவுபூர்வமான பதிலை தந்திருப்பேன்!” -

https://telegram.me/aedahamlibrary

கவுடில்யன் குரலினை மிருதுவாக ஒலிக்கச் செய்தான்.

“தவறுதான், குமரனே!” - தானநந்தா கூறினான். “சரி! நீ வந்த நோக்கத்தை கூறு!”

"தங்களுக்கு நந்தவனத்தில் நேர்ந்த அவமதிப்பை எண்ணி வருந்துகிறோம். தங்களுக்கு தேவையான அளவு பிட்சை அளிக்கிறோம்! மனதிருப்தியுடன் சென்று வாருங்கள்!” - பத்மாங்கி அவனைக் கனிவுடன் பார்த்தாள்.

அவளை அலட்சியத்துடன் நோக்கினான், கவுடில்யன். "அரசியே! பிட்சை பெற நான் வந்திருக்கிறேன் என்று தங்களிடம் யார் கூறினார்கள்? மன்னன் பிட்சை கேட்டதால், அவருக்கு பிட்சை அளிக்க வந்திருக்கிறேன்..!” கவுடில்யன் குரலில் சற்றே சினம் மிகுந்து காணப்பட்டது.

“ஹா!” அறையில் இருந்த அனைவருமே திடுக்கிட்டனர். இந்த அந்தணக் குமரனுக்கு எவ்வளவு ஆணவம் இருக்க வேண்டும்! மன்னருக்கே பிட்சை அளிக்க வந்திருப்பதாகக் கூறுகிறானே.

“என்ன உளறுகின்றாய் குமரனே!” - ஹரஹரர் படபடத்தார்.

“மன்னர் தான் செய்யப்போகும் அஸ்வமேத யாகத்திற்கு தேவ உடும்பர சமித்துகள் தேவை என்று முரசொலிக்கச் செய்தாரே! ஊரெங்கும் தண்டோரா அடித்து நீங்கள் தானே அறிவித்தீர்கள். அதைச் செவியுற்றுதான், மன்னருக்குத் தேவையான பொருளை அவருக்கு அளிக்க வந்திருக்கிறேன். கொடுப்பவர்தானே பிட்சை தருபவர். பெற்றுக்கொள்பவர் பிட்சையை வாங்குபவர்தானே?” கவுடில்யன் கூறினான். அனைவரும் அதிர்ந்தனர்.

“குமரனே! என்ன கூறுகிறாய்? தேவ உடும்பரம் உன்னிடம் இருக்கிறதா?”

தானநந்தாவின் குரலில் நம்பிக்கையின்மை பிரதிபலித்தது.

“ஆம் மன்னா! தேவ உடும்பர மரத்தின் துண்டோடு நான் வந்திருக்கிறேன். ஆனால் அதற்கு முன்பாக, நான் யாகத்திற்கு அளிக்கும் தேவ உடும்பரத்திற்கு ஈடாக எனக்கு தாங்கள் அளிக்க உள்ள வெகுமதி

https://telegram.me/aedahamlibrary

என்ன?” - கவுடில்யன் எச்சரிக்கையுடன் சொற்களை பிரயோகித்தான்.

“உன்னிடம் தேவ உடும்பரம் இருப்பது உண்மையானால், நீ கேட்பதைத் தருகிறேன்!” - மன்னன் கூறினான்.

அஸ்வமேத யாகத்திற்கு தேவ உடும்பரம் கிடைத்து விட்டது என்கிற மகிழ்ச்சியில், பைராகி விடுத்திருந்த எச்சரிக்கையை மறந்து விட்டான், தானநந்தா.

“நான் கேட்டதைத் தருவேன் என்று சொல்லிவிட்டு, பிறகு வாக்குத் தவறமாட்டீர்களே!” கவுடில்யன் கேட்டான்.

“முதலில் உன்னிடம் உள்ளது தேவ உடும்பர மரத்தின் பகுதியா என்பதை நிரூபித்து விட்டு, பிறகு மன்னர் சொன்ன சொல் தவறுவாரா இல்லை மாட்டாரா என்பது குறித்த விவாதங்களை தொடருவோம்!” - ஹரஹரர் காட்டத்துடன் சொன்னார்.

தனது மேல்துண்டில் முடிந்திருந்த முடிச்சினை அவிழ்த்து, தேவ உடும்பர சிதிலினை கையில் எடுத்தான். அதில் இருந்து ஒரு சமித்தினை பெயர்த்து எடுத்தான்.

“எனக்கு மூன்று சமித்துகள் தேவைப்படுகிறது. ஆலங்குச்சி, வேப்பங்குச்சி மற்றும் மாமரக் குச்சி, மற்றும் சுளுந்து ஒன்றும் கொண்டு வாருங்கள்!” என்று கவுடில்யன் கேட்டதும், ஹரஹரர் அதிகாரி ஒருவரை நோக்கித் தலையசைத்தார்.

அந்த அதிகாரி மீண்டும் அறையினுள் நுழைந்தபோது, அவர் கையில் தட்டு ஒன்றை ஏந்தியிருந்தார். அதில் ஆலங்குச்சி, வேப்பங்குச்சி மற்றும் மாமரக் குச்சி ஆகியவை வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அவரது மற்றொரு கையில் ஒரு சுளுந்து ஒளிர்ந்து கொண்டிருந்தது…

கவுடில்யன் தனது முன்பாக நீட்டப்பட்ட தட்டிலிருந்து மூன்று குச்சிகளையும் எடுத்தான். அந்த அதிகாரியிடமிருந்து எரியும் சுளுந்தினையும் பெற்றுக் கொண்டான்.

"மன்னா! பொதுவாக எல்லா சமித்துகளும் பொன்னிறத்தில் ஒளிர்விடும். ஆனால் தேவ உடும்பர சமித்து மட்டும், பசுமை வண்ணத்தில் ஒளிர்விடும். அதை வைத்துதான், என்னிடம் உள்ளது தேவ உடும்பரம்

https://telegram.me/aedahamlibrary

என்பதனை நிரூபிக்கப் போகிறேன்!” - கவுடில்யன் தன்னிடம் இருந்த சுளுந்தில் ஒவ்வொரு குச்சியாக காட்டினான். தட்டில் வைக்கப்பட்டிருந்த சமித்துகள் மூன்றுமே பொன்னிறமாகத்தான் ஒளிர்விட்டன.

“இப்போது என்னிடம் உள்ள தேவ உடும்பர சமித்தினை தீயில் எரிக்கிறேன்!” - என்று கூறிய கவுடில்யன், தேவ உடும்பர சமித்தினை தீயில் காட்டினான். அனைவரது கண்களும் ஆச்சரியத்தில் விரிந்தன. தேவ உடும்பரம் பிரதிபலித்த பசுமை அந்த அறை முழுவதும் பரவியது. படபடவென்று வெடித்தபடி ஒளிர்ந்த அந்த சமித்து உண்மையிலேயே தேவ உடும்பரம் தான் என்பதை மிஸ்ரபானு உடனடியாகப் புரிந்து கொண்டார்.

அனைவருமே பசுமை வண்ணத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த அந்த தேவ உடும்பர சமித்தினை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். கவுடில்யன் உண்மையைத்தான் பேசுகிறான் என்பதை மன்னன் புரிந்துகொண்டான்.

'இனி நான் செய்யும் அஸ்வமேத யாகம் பூரணத்துவம் பெறும்!' - மன்னன் மனதினுள் நினைக்க, 'துர்தராவை பீடித்திருந்த தோஷங்கள் விலகப்போகின்றன' - என்று பத்மாங்கியும் உற்சாகம் அடைந்தாள்.

“கவுடில்யா!” - தானநந்தாவின் குரலில் களிப்பும், உற்சாகமும் ஒருங்கே தென்பட்டன.''

“மிகவும் அரிதான தேவ உடும்பரத்தைக் கொண்டு வந்த உனக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

உனக்கு என்ன வேண்டுமோ, கேள் தருகிறேன்!” - தானநந்தா கூற, பத்மாங்கியும் ஆவலுடன் அவனது முகத்தையே பார்த்தாள்…

கவுடில்யன் தன்னைச் சுற்றி ஒருமுறை நோக்கினான். ‘விஷ்ணுகுப்தா! வாய்ப்பு இதோ உனது கதவினைத் தட்டுகிறது. மிகவும் அரிய தேவ உடும்பரத்தை வேகவதி ஆற்றின் அடியில் கிட்டுமாறு அத்திமலைத்தேவனே உனக்கு அருள் செய்திருக்கிறான். கலைமகளின் உக்கிரத்தைத் தணிக்க பிரம்மனே விஸ்வகர்மாவைக் கொண்டு ஆற்றில் எறிந்த தேவ உடும்பரத்தின் ஒரு பகுதியைக் கண்டு எடுத்திருக்கிறாய். இந்த அரிய கற்பகத்தரு உன்னை விட்டு மன்னனின் வசமாகப் போகிறது. அதற்கு விலையாக உன்னை பெரிய அளவில் முன்னிறுத்திக்

https://telegram.me/aedahamlibrary

கொள். ஒரு ஏழை பிராமணச் சிறுவன் என்றுதானே பரப்பசுவாமியின் தாய் ஹைமாவதி, சுபர்ணை தொடங்கி, துர்தரா வரை உன்னை ஏளனம் செய்தனர். தேவ உடும்பரத்தின் விலையாக, உனது நிலையை மேம்படுத்திக் கொள்!' - தனக்குள் பேசிக்கொண்டான், கவுடில்யன்.

"சொல் குமரனே! உனக்கு என்ன தேவையோ. கேள்!" - பத்மாங்கி புன்சிரிப்புடன் அவனைப் பார்த்தாள்.

“நான் கேட்பதை தருவீரா மன்னா?” - கவுடில்யன் கேட்டான்.

"நிச்சயம் தருவேன்!" என்று சொன்ன தானநந்தாவின் கண் முன்பாக பைராகியின் உருவம் திடீரென்று நிழலாடியது.

இந்தச் சிறு குமாரனால் என்ன ஆபத்து நேர்ந்துவிடப் போகின்றது, என்று அடுத்த கணம், தனது மனத்தில் எழுந்த அச்சத்தை உதறித்தள்ளினான், மன்னன்.

சற்று நேரம் மௌனமாக மன்னனையே வெறித்துப் பார்த்த கவுடில்யன், பிறகு மெதுவாகப் பேசினான்.

“என்னை உங்கள் நாட்டின் ராஜதந்திரியாக நியமிக்க வேண்டும்!” - கவுடில்யன் கேட்டான்.

மன்னன் அவனை திகைப்புடன் வெறித்தான். அந்த அறை முழுவதும் நிசப்தம் நிலவியது. திடீரென்று ---

அங்கே பெருத்த சிரிப்பொலி எழுந்தது. மன்னன் தானநந்தா குரல் விட்டுச் சிரிக்கத்தொடங்கினான்.

"கவுடில்யா! உனது விளையாட்டுத்தனத்தை நிறுத்திக்கொண்டு உனக்கு வேண்டுவதைக் கேள்!" சிரித்தபடி அவனை நோக்கினான், மன்னன்.

கவுடில்யன் மன்னனை அர்த்தத்துடன் பார்த்தான். "நான் விளையாடவில்லை மன்னா! உண்மையாகத் தான் கேட்கிறேன். எனக்கு ராஜதந்திரி பதவியை தாருங்கள். நான் உமக்கு அளிக்கும் தேவ உடும்பரம் பல வளங்களைத் தர வல்லது. அதற்கு பிரதிபலனாக நான் சிறு வெகுமதியைத் தான் கேட்கிறேன்!" உறுதியுடன் கூறினான், கவுடில்யன்.

https://telegram.me/aedahamlibrary

அவன் இவ்வாறு கூறியதும், அந்த அறையில் எழுந்த சிரிப்பொலி சட்டென்று அடங்கியது. அனைவரும் திகைத்துப் போய் மன்னனைப் பார்த்தனர்.

ஹரஹரரின் முகம் சினத்தினால் சிவந்தது.

"அதிகப்ரசங்கி! ஏதோ மன்னருக்கு உதவுவதற்காக வந்திருக்கிறாயே என்று மதிப்பளித்து உன்னுடன் பேசினால், எல்லை மீறுகின்றாயே! அரண்மனையினுள் கால் வைக்கக்கூட தகுதியில்லாத உனக்கு பதவி வேண்டுமா?" தலைமை அமைச்சர் கர்ஜித்தார்.

தானநந்தா அவனை எரிச்சலுடன் நோக்கினான்.

"கவுடில்யா! நீ எனக்கு தேவ உடும்பரத்தை அளிக்க முன்வருவதால், உனக்கு ஆயிரம் வராகன்கள் தருகிறேன்! பெற்றுக்கொண்டு புறப்படு!"

கவுடில்யன் சிவந்த கண்களால் மன்னரை நோக்கினான். “நான் எதைக் கேட்டாலும் தருவதாக வாக்குத் தந்தீர்களே, மன்னா!”

மன்னனின் குரலில் கோபம் கொப்பளித்தது.

“வரைமுறை மற்றும் தகுதிக்குள்ளாக நீ கேட்கும்வரை என்னால் எதையும் அளிக்க முடியும். ராஜதந்திரி பதவி என்பது ராஜாங்கத்தை நடத்தும் ஒரு பதவி.

"மக்கள் அங்கீகாரம் பெற்றவனானாலும், மன்னனுக்கு விசுவாசம் உள்ளவனாக இருப்பவனை மட்டுமே ராஜ தந்திரியாக நியமிக்க முடியும். எங்கிருந்தோ வந்த தேசாந்திரிக்கு பதவியை தர முடியாது. தேவ உடும்பரம் தேவை என்பதால் மட்டுமே உன்னுடன் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். இல்லையேல், உன்னை இப்போதே அப்புறப்படுத்தி இருப்பேன்!” தானநந்தா கர்ஜித்தான்.

கவுடில்யன் மன்னனை யோசனையுடன் பார்த்தான்.

"ராஜதந்திரி பதவி சிரமம் என்றால், உமது ராஜ குருவாக நியமித்துக் கொள்ளுங்கள். எனது திறமையை நீங்கள் உபயோகப்படுத்திக்கொண்டால் உங்களுக்குத் தான் நல்லது. ராஜகுருவை மக்கள் தீர்மானம் செய்ய வேண்டாமே. நீங்கள் திரு

https://telegram.me/aedahamlibrary

உள்ளம் பற்றினால் போதுமல்லவா?" --- விடாக்கொண்டனாக, கவுடில்யன் கேட்டான்.

மீண்டும் சபையில் அதிர்ச்சி நிலவியது. மிஸ்ரபானுவுக்கு உடல் தூக்கிவாரிப்போட்டது.

"இந்த சித்த சுவாதீனம் அற்ற குமரனை அரண்மனையை விட்டு அடித்து விரட்டுங்கள்!" மீசை துடிக்க ஹரஹரர் கட்டளையிட்டார்.

பத்மாங்கியின் நெஞ்சை பயம் கவ்வியது. பைராகி விடுத்த எச்சரிக்கை அவளது செவிகளில் ரீங்கரித்துக் கொண்டுதான் இருந்தது.

"பதட்டம் தேவையில்லை, ஹரஹரரே.! குமரன் உலக அனுபவமின்றிப் பேசுகிறான்.... உடும்பரத்திற்கு ஈடாக என்ன கேட்க வேண்டும் என்று அவனுக்குத் தெரியவில்லை போலும். நாம் நயமாக எடுத்துரைத்தால் அவன் புரிந்துகொள்வான்!" பத்மாங்கி கூறினாள்.

"வேதியனே! உனக்கென்று நிலம் ஒதுக்குகிறோம். அதில் குடில் அமைத்து உனது வைதீக கடமைகளை அற்றுவாயாக. நூறு பசுமாடுகளை தானம் தருகிறோம்! அவற்றை போஷித்து உனது தருமங்களை கடைபிடி!" பத்மாங்கி நயமாகக் கூற, அவளை எரிச்சலுடன் நோக்கினான், கவுடில்யன்.

"அரசி! எனக்குத் தேவையானவற்றைத் தேடிக் கொள்ள என்னால் முடியும். நான் வாழ்வதற்காக எதையும் வேண்டி இங்கே வரவில்லை. இந்த உலகம் வாழ்வதற்காக, மக்கள் பயனுறுவதற்காக, கேட்கிறேன். என்னை ராஜகுருவாக நியமித்துக்கொள்ளுங்கள். அதற்காக தாங்கள் வருத்தப்பட மாட்டீர்கள். உங்கள் கணவரை இந்த உலகத்திற்கே சக்கரவர்த்தியாக மாற்றுகிறேன்!" கவுடில்யன் கேட்டான்.

தானநந்தாவின் பொறுமை தளர்ந்தது. "என்னை நீ உலகத்திற்கே சக்கரவர்த்தியாக நியமிப்பாயா? யாசகம் பெற வந்த அற்ப வேதியன் நீ. ஏற்கனவே போர்களில் வென்று மன்னனாக அமர்ந்திருக்கிறேன் நான். மகத ராஜ்யத்தின் படைபலத்தைக் கண்டு யவனர்களும் நடுங்குகின்றனர். நீ என்னை சக்கரவர்த்தியாக மாற்றுவாயா? பத்மாங்கி! இந்தக் குமரனுடன் உரையாடத் தேவையில்லை. இவனுக்கு புத்தி பேதலித்து விட்டது. யாரங்கே! இந்த அற்பனை அரண்மனையை விட்டு விரட்டுங்கள்!" - தானநந்தா கட்டளையிட்டான்.

https://telegram.me/aedahamlibrary

கவுடில்யன் மன்னனை கோபத்துடன் வெறித்தான்.

"கேட்டதைத் தருகிறேன் என்று சொல்லிவிட்டு, வாக்கினை தவறுகின்றாய், தானநந்தா!" கவுடில்யன் மன்னனை ஒருமையில் அழைத்ததும், அங்கிருந்த அனைவரும் திடுக்கிட்டுப் போயினர்.

“ஹா! மன்னரை பெயர் சொல்லி அழைக்கிறாயா? அவனுக்கு பதினாறு கசையடி கொடுங்கள்!" ஹரஹரதேவர் கூறினார்.

"வேண்டாம்! யாசகம் கேட்டு வந்தவனை அடிக்க வேண்டாம்!" - பத்மாங்கி இறைஞ்சினாள்.

மிஸ்ரபானு அவசரமாக எழுந்தார்.

"மன்னரே! அந்தக் குமரனை தண்டிக்க வேண்டாம். அதிகப்ரசங்கம் செய்த அவனை நாட்டை விட்டு விரட்டி விடுங்கள்!" - மிஸ்ரபானு கூறினார்.

"ஜோதிடர் கூறுவது போன்று, அவனை நாட்டின் எல்லையில் கொண்டு சென்று நிறுத்துங்கள். இனி இவன் இந்த நாட்டினுள் காலடி வைக்கக் கூடாது!" தானநந்தா கூறியதும், காவலர்கள் கவுடில்யனை சூழ்ந்து கொண்டனர்.

அவனைத் தரதரவென்று இழுத்துச் செல்ல, அவர்களிடம் இருந்து திமிறி விடுபட்ட, கவுடில்யன் மன்னனின் முன்பாக விடுவிடுவென்று வந்து நின்றான்.

தனது பூணூலின் ப்ரும்ம முடிச்சை தனது கட்டை விரலினால் பற்றினான்.

“தானநந்தா! வாக்குத் தவறி விட்டாய்! எனது அறிவையும், சக்தியையும் அவமதித்து விட்டாய். இன்று என்னை உன் நாட்டை விட்டு விரட்டி அடிக்கிறாய். விரைவில், நான் உன் இடத்தில் இருந்து உன்னை நாட்டை விட்டு விரட்டுகிறேன்! இது எனது அறிவின் மீது ஆணை!" - என்றபடி கவுடில்யன் தனது பூணூலை அறுத்துவிட்டு, ஆவேசமாக வெளியேறினான்.

அரசனே ஒருகணம் ஸ்தம்பித்து போனான். பிறகு ஹரஹரதேவ்வை

https://telegram.me/aedahamlibrary

தனது அருகே வரும்படி சமிக்ஞை செய்தான்.

“அந்தக் குமரனை பின்தொடர்ந்து சென்று, அவனிடம் உள்ள தேவ உடும்பரத்தை பறிமுதல் செய்யுங்கள்.! நமது யாகத்தை உடனடியாக தொடங்க வேண்டும்!”

தானநந்தா கூற, தலைமை அமைச்சர் மன்னனை பணிந்துவிட்டு, விரைவாக வெளியே சென்றார்.

பத்மாங்கியின் செவிகளில் இன்னும் அந்த பைராகியின் குரல் ஒலித்துக்கொண்டுதான் இருந்தது. அவள் மன்னனைக் கிலியுடன் நோக்கினாள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 13. அபேயனுக்கு அபயம்

காவலர்கள் புடை சூழ அரண்மனையை விட்டு வெளியே வந்தான், கவுடில்யன்.

இவனை நாட்டின் எல்லையில் கொண்டு விடுவதற்காக, அவர்கள் அவன் தப்பிச் செல்ல முடியாதபடி மூன்று பக்கமும் நடந்து வர சற்றே முன்பாக, ஒரு காவலன் கையில் வாளுடன் நடந்து கொண்டிருந்தான். அரண்மனையை விட்டுச்செல்லும் போது, இவன் முந்தைய இரவுப் பொழுதைக் கழித்திருந்த அந்த மாமரத்தினைக் கடக்க வேண்டியிருந்தது.

எச்சரிக்கையுடன், தான் மேடையில் ஓம் என்று குறியிட்டு வைத்திருந்த அடையாளத்தை நோக்கிய கவுடில்யன், பின்னர் தான் தேவ உடும்பரத்தைப் புதைத்து வைத்திருந்த பகுதியை கவனித்தான்... இவனிடம் கேட்டதை தரும் தேவ உடும்பர மரம் இருப்பதை தானநந்தா அறிந்துகொண்டு விட்டான். இனி அதனை இவனிடமிருந்து பறிப்பதற்கு அவன் சதிகளை அரங்கேற்றலாம். இவனிடம் இருப்பதை விட, தேவ உடும்பரம் அங்கேயே புதைந்து கிடக்கட்டும். நேரம் வரும்போது அதனை எடுத்துக் கொள்ளலாம்.

தனக்குள் தீர்மானித்தபடி காவலர்களுடன் நடந்தான் கவுடில்யன். தானநந்தாவும், அவன் குடும்பத்தினரும், இவனை அவமதித்து தீராத வல்லடியைத் தேடிக் கொண்டனர். இவன் யார் என்பதை அவர்களுக்குக் காட்டப் போகிறான். இவனை நாட்டின் எல்லையை விட்டு அவன் வீசி எறிவதுபோல், அவனை அவன் நாட்டின் எல்லையில் இருந்து வீசி ஏறிய வேண்டும். இதனை அவன் எப்படியும் செய்து காட்டப் போகிறான். தேவ உடும்பரத்தின் ஆசியோடு கவுடில்யன் மகத நாட்டின் மன்னனாகப் பதவி ஏற்கும் விதி இருந்தால், அது நடைபெறட்டும்.

யோசித்துக்கொண்டே நடந்த கவுடில்யன், திடீரென்று தனக்கு முன்பாக நடந்து சென்ற காவலனின் தேகம் விறைப்படைவதைக் கண்டான்.

சடாரென்று நின்ற அந்தக் காவலன், தொலைவில் ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டிருந்த ஒரு வாலிபனை வெறித்து நோக்கினான். அவனை அடையாளம் கண்டு கொண்டதும், அவனது தேகத்தில் பதற்றம் தோன்றியது.

https://telegram.me/aedahamlibrary

“அங்கே பாருங்கள்! அந்த வீட்டின் திண்ணையில் அபேயன் உட்கார்ந்து உணவு அருந்திக்கொண்டிருக்கிறான். நீங்கள் இந்தக் குமாரனை பார்த்துக் கொள்ளுங்கள். நான் ஓடிச்சென்று அபேயனை கைது செய்து கொண்டு வருகிறேன்!" அந்தக் காவலன் கூற, மற்ற காவலர்கள் தலையசைத்தனர்.

அந்த காவலன் அந்த வீட்டுத் திண்ணையை நோக்கி ஓட, அவனால் அபேயன் என்று அழைக்கப்பட்ட அந்த வாலிபன், இவன் தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டதும், கையை உதறிக்கொண்டு திண்ணையை விட்டு இறங்கி ஓடத்துவங்கினான். அபேயனுக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்த ஒரு மூதாட்டி, இந்தக் காட்சியைக் கண்டு திகைத்தாள்.

தன்னை நெருங்கிய காவலனை உரத்த குரலில் அதட்டினாள், அந்த மூதாட்டி. "கள்வனோ... கொலையாளியோ, உணவு உண்ணும்போது ஒருவனை எழுப்பி விரட்டிக் கொண்டு செல்வது நியாயமில்லை!” - காவலனிடம் கடிந்தாள் கிழவி.

“உனது திருவாயை மூடிக்கொண்டு போ, கிழவி. இல்லையேல் ராஜாங்க குற்றவாளிக்கு உணவளித்த உன்னையும் சிறையில் தள்ளுவோம்!" எச்சரிக்கை விடுத்தபடி, அந்தக் காவலாளி அபேயனின் பின்னால் ஓடினான்.

அவர்கள் இருவரும் கண்பார்வையில் இருந்து மறைந்து விட, கவுடில்யன் நிதானமாக ஒரு காவலனைப் பார்த்து கேட்டான்,

"யார் இந்த அபேயன்?”

"உன்னைப் போன்ற ஒரு ஆணவக்காரன். மன்னரிடம் நீ அதிகப்ரசங்கித்தனமாக உரையாற்றியது போன்று அவனும் அரச குடும்பத்தை அவமதித்தவன்! அவன் கதிதான் உனக்கும். அவனைப் போன்றுதான் நீ பதுங்கி வாழப் போகின்றாய்!” - இன்னொரு காவலன் கூறினான்.

இன்னும் சிறிது தொலைவு சென்றதும், அபேயனை விரட்டிச் சென்ற காவலன் தோல்வியுடன் திரும்பி வந்தான். "எங்கோ மறைந்து விட்டான். அவனை நாம் பார்த்ததாக தலைமை காவலாளியிடம் சொல்லாதே. அவனை பிடிக்கவில்லை என்று நம்மை விரட்டுவார்.!"

https://telegram.me/aedahamlibrary

என்றபடி கவுடில்யனை ஆத்திரத்துடன் பார்த்தான். “இதோ பார்! உன்னை நாட்டின் எல்லையை விட்டு விரட்டி அடிக்கிறோம். மீண்டும் மீண்டும், இங்கே வந்து அபேயனைப் போன்று எங்களுக்கு பிரச்சனை உண்டாக்காதே. வேறு எந்த நாட்டிற்காவது சென்று புத்தியுடன் பிழைத்துக் கொள்!”

அந்தக் காவலனை கேலியுடன் பார்த்தான், கவுடில்யன்.

“அப்படிப் போக மறுத்தால் என்ன செய்வாய்?”

"மீண்டும் உன்னை இந்த நாட்டின் எல்லையில் பார்த்தேன் என்றால், உனக்கு பரலோக பிராப்தி நிச்சயம்!”- காவலன் சொன்னான்.

"காவலனே! பெரிய படையுடன் நான் உன் நாட்டிற்கு வரப் போகிறேன். அப்போது பரலோகத்திற்கு போவோர் வரிசையில் நீயே முதலாக நிற்பாய்!" - கவுடில்யன் சொல்ல, அந்தக் காவலனுக்கு கோபத்திற்குப் பதிலாக சிரிப்புதான் வந்தது.

"படையுடன் வரப் போகிறாயா? வானரப்படையா...? கோவேறு கழுதை படையா? இல்லை சிலந்தியின் நூலாம்படையா?" - காவலன் கேட்க மற்றவர்கள் சிரித்தனர். பின்னால் நின்ற காவலன், தனது ஈட்டியின் நுனியில் கவுடில்யனின் சிகையின் நுனியைப் பிணைத்து விட்டு, ஈட்டியை உயர்த்த, அதனால் கவுடில்யனுக்கு பின்னங்கழுத்தில் வலி ஏற்பட, தன்னையும் மறந்து "ஆ" என்று கத்தினான்.

“வலிக்கிறதா? நீ பேசிய பேச்சுக்களால் மன்னர் பெருமானின் மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும். உன்னைத் துன்புறுத்தாமல் நாட்டை விட்டு விரட்டுகிறாரே என்று மகிழ்ச்சி கொள். இனியும் இந்த நாட்டினுள் காலை வைக்காதே!" என்ற காவலர்கள், மகதத்தின் எல்லையில் இருந்த விரிஞ்சி காட்டினை அடைந்தார்கள்.

கவுடில்யனின் பிடரியில் கைவைத்த ஒரு காவலன், அவனை புல்தரையின் மீது தள்ளினான். “ஒழிந்து போ பார்ப்பன பதரே!” -

காவலர்கள் மீண்டும் வந்த வழியே திரும்பிப் பாராமல் நடக்க, அவர்களையே குரோதத்துடன் பார்த்தபடி அமர்ந்திருந்தான், கவுடில்யன்.

https://telegram.me/aedahamlibrary

“அத்திமலைத்தேவனே! உன்னருள் பெற்ற எனக்கு நிகழ்ந்த அபவாதங்களைப் பார்த்துக்கொண்டு நீ வாளாயிருத்தல் வசமா? பெற்றோரை இழந்து நிர்கதியாக இன்று இந்த விரிஞ்சி காட்டில் கிடக்கிறேன்! எனக்கு என்ன விதித்திருக்கின்றாயோ அது நடக்கட்டும்!" - தனக்குள் முணுமுணுத்தபடி அந்த விரிஞ்சி காட்டின் மரம் ஒன்றின் கீழ் அமர்ந்திருந்தான்.

யாரும் எதிர்பாராத நேரத்தில் புஷ்பபுரம் சென்று, மாமரத்தின் அடியில் புதைக்கப்பட்டுள்ள தேவ உடும்பர அத்திமரத்தை எடுத்துக் கொண்டு வந்துவிட வேண்டும். தேவ உடும்பரம் இவனிடம் உள்ள வரை இவனை எந்த சக்தியாலும் அசைக்க முடியாது. மனதினுள் யோசித்தபடியே, அமர்ந்திருந்த கவுடில்யனின் செவிகள் ஒரு ஒலியினை உள் வாங்க, அவனது சிந்தனை தடைபட்டது. செவிகளைத் தீட்டிக் கொண்டான். காய்ந்த சருகுகள் மிதிபடும் ஒலி துல்லியமாகக் கேட்டது. விழியை கண்ணோரமாகக் கொண்டு நிறுத்தி பின்பாகப் பார்க்க முயன்றான், கவுடில்யன்.

மறையும் கதிரவனின் கிரணங்கள் காய்ந்த சருகுகளில் பிரதிபலிக்க, அந்தச் சருகுகளின் மீது ஒரு கரிய நிழல், ஒடிந்த மரக்கிளை ஒன்றை ஏந்தியபடி தன்னை நோக்கி நகர்ந்து வருவதைக் கண்டான்.

சரியாக இவனது சிரசை அந்த மரக்கிளையினால் அந்த உருவம் தாக்க முற்பட்டபோது சடாரென்று வலப்புறமாகச் சரிந்து நிலத்தில் புரண்டான், கவுடில்யன்.

தாக்க வந்த உருவம் நிலைதடுமாறி சரிய, கவுடில்யன் அவனது பின்புறமாக ஓடிச்சென்று அவனது முதுகில் தாவி ஏறி, அவனது கழுத்தினை தனது இருகைகளால் இறுகப் பிணைத்தான். அந்த உருவத்தின் முகம் அவனுக்கு புலப்படவில்லையே தவிர, அவனது திரண்ட தோள்களும், புஜபலமும் அவன் ஒரு போர்வீரன் என்பதனை அவனுக்கு உணர்த்தின.

கவுடில்யனை உதறிவிட முயன்று முடியாமல் போக, அவனை மரம் ஒன்றின் மீது மோதி, அவனது பிடியைத் தளர்த்த நினைத்து, அந்த உருவம் பின்பாகவே நகர, அதன் எண்ணத்தை யூகித்த அவன், அவனது இடையின் இருபுறமும் பரவியிருந்த தனது கைகால்களை எடுத்து அவனது கால்களுடன் தனது கால்களை பிணைக்க, அந்த உருவம் மீண்டும் தடுமாறி, அதன் தலை பின்னோக்கிச் சரிய, கவுடில்யன்

https://telegram.me/aedahamlibrary

சமயோசிதமாக தனது சிரசை அவனது முதுகில் புதைக்க, அந்த உருவத்தின் தலை மரத்தில் மோத, அந்த அதிர்ச்சியில் அந்த உருவம் அப்படியே நிலத்தில் விழுந்தது. விரைவாக அவனிடம் இருந்து நகர்ந்த கவுடில்யன், மூர்ச்சித்திருந்த அவனது முகத்தை நோக்கினான்.

அன்று மாலை காவலர்கள் புடை சூழ இவன் மகதத்தின் எல்லையை நோக்கி நடக்கையில், முதியவள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்து, காவலன் ஒருவனால் விரட்டப்பட்ட அந்த அபேயன் தான் அங்கே மயங்கிக் கிடந்தான்.

காட்டிலிருந்து புஷ்பபுரத்தை நோக்கி ஓடும் விரிஞ்சி நதி சப்தித்துக்கொண்டு ஓட, அருகில் கிடந்த தென்னம் மட்டை ஒன்றை எடுத்துக்கொண்டு அதனை நோக்கி விரைந்தான் கவுடில்யன். நுரைத்து, சுழித்து ஓடிக்கொண்டிருந்த விரிஞ்சி ஆற்றிலிருந்து தென்னம் மட்டையில் நீரை நிரப்பிக்கொண்டு அபேயனை நோக்கி விரைந்தான். மூர்ச்சித்துக் கிடந்த அவனது முகத்தில் நீரை அடிக்க, அவனது முகத்தில் அசைவு. பிறகு மெதுவாகக் கண்களைத் திறந்து கவுடில்யனை வெறித்தான்.

“வீரனே! எதற்காக என்னைத் தாக்க வந்தாய்?" கவுடில்யன் கேட்டான்.

"காவலாளிகளுடன் உன்னைப் பார்த்தேன். நீ அவர்களுக்கு தகவல் தெரிவிப்பவன் என்கிற எண்ணத்தில் உன்னைத் தாக்க முற்பட்டேன்!" -

“ஒரு குற்றவாளி மற்றொரு குற்றவாளியைக் காட்டிக் கொடுப்பானா என்ன? என்னை நாட்டை விட்டு விரட்டவே, அந்தக் காவலாளிகள் என்னை அழைத்து வந்தார்கள்!” - கவுடில்யன் கூறினான்.

“நீ குற்றவாளியா?” - அபேயன் வியந்தான்.

"உன் மீது என்ன குற்றம் சுமத்தப்பட்டது?" கவுடில்யன் கேட்க, அபேயன் வேதனையுடன் சிரித்தான்.

“நான் நந்தவனக் காவலனாக அரண்மனையில் பணிபுரிந்தேன். எனது தாய் கீர்த்திமதி அந்தப்புரத்தில் பணி புரிந்துகொண்டிருந்தார். இளவரசி துர்தரா நந்தவனத்தில் ஊஞ்சல் ஆடியபிறகு பழரசம் குடிப்பது வழக்கம். எனது தாய் பழரசக் கோப்பையை துர்தராவிடம் நீட்ட, அவள் ஊஞ்சலை திடீரென்று வேகமாக ஆட்ட எனது தாய் நிலைதடுமாறி கீழே

https://telegram.me/aedahamlibrary

சாய்ந்தாள். அவளது முகத்தில் தனது பாதணிகளை வைத்துச் சிரித்த துர்தராவைப் பார்த்து எனது கோபத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. பாய்ந்து சென்று அவளைப் பிடித்து அப்பால் தள்ளி விட்டேன். ஊஞ்சலில் இருந்து விழுந்தவளுக்கு உடலில் சிராய்ப்புகள் ஏற்பட்டனவாம். மன்னனும் அரசியும் துடித்துப் போயினர். எனது தாயின் முகத்தில் குருதி பொங்கிக்கொண்டிருந்தது. அந்த அநீதியை கேட்பார் இல்லை.” - என்னை கைது செய்ய உத்தரவு பிறப்பித்தான் மன்னன். அதன் பிறகு நாடோடியாகத் திரிகிறேன். வயிற்றை நிரப்புவதற்காக நாட்டிற்குள் மானம் கெட்டு வரவில்லை. எனது தாயைப் பார்க்கவே நான் வருகிறேன். அந்த மூதாட்டிக்கு என்னைத் தெரியும். அவளேதான் என்னை அழைத்து உணவு படைத்தாள்!" அபேயன் கூறினான்.

"ஏறக்குறைய உன் அனுபவத்தை ஒத்திருக்கிறது, எனது கதையும். உன்னைப் போன்றே துர்தரா, பிபத்தன், மன்னன், அமைச்சர் எல்லோராலும் அவமதிப்புக்கு உள்ளானேன்! மன்னனை அவமதித்ததால் என்னை நாட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள். எனது தலைவிதியை நொந்து இந்த விரிஞ்சி காட்டினில் அமர்ந்திருக்கிறேன்!” - கவுடில்யன் கூறினான்.

“அகம்பாவம் பிடித்த இந்த மன்னன் குடும்பத்தை மக்கள் எங்ஙனம் சகிக்கின்றனர்?" - கவுடில்யன் கேட்டான்.

"யார் கூறினார் மக்கள் சகிக்கின்றனர் என்று! குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட என்னை அழைத்து ஒரு மூதாட்டி உணவு படைக்கிறாள் என்றால், மக்களின் மனநிலையை யூகித்துக் கொள்ளுங்கள். வரி மேல் வரி! தானநந்தனைப் போன்று மக்கள் செல்வாக்கில்லாத மன்னனை இந்த உலகம் கண்டிராது. மாற்று மன்னர் கிடைத்தால் அவனை தூக்கி எறிய மக்கள் சித்தமாக இருக்கின்றனர்!” - அபேயன் கூறினான்.

கவுடில்யனுக்கு உடனேயே தான் மாமரத்தின் அருகே புதைத்து வைத்திருந்த தேவ உடும்பர மரத்தின் பாகம் நினைவினில் வந்தது.

“அபேயா! இனி நாம் இருவரும் ஒன்றாகச் செயல்படுவோம். உன்னை இந்த மகதத்தின் தளபதியாக மாற்றிக் காட்டுகிறேன். அதற்கு முன்பாக நான் கோரும் உதவியை செய்ய வேண்டும்!” - என்று கூறிய கவுடில்யனை வியப்புடன் பார்த்தான், அபேயன்.

https://telegram.me/aedahamlibrary

எலும்பும் தோலுமாகத் திகழும் இந்த வேதியக் குமரன், போர் வீரனாக, திரண்ட உடற்கட்டுடன் திகழும் இவனை நாட்டின் தளபதியாக மாற்றிக்காட்டுவானாமே. இவனை நையாண்டி செய்கிறானோ, இந்தக் குமரன்? ஆனால் அவன் முகத்தில் ஏளனம் தெரியவில்லையே. தன்னம்பிக்கையையும், உறுதியையும்தானே அவன் கண்கள் பிரதிபலிக்கின்றன.

அபேயன் அவனை வெறித்துப் பார்த்தான்.

"அந்தணக் குமரனே! உனது பெயர் எனக்குத் தெரியாது. நீ யார், எங்கிருந்து வருகிறாய் என்றும் எனக்குத் தெரியாது. என் தாய் கீர்த்திமதியைத் தவிர எனக்கு சொந்தம் பந்தம் என்று யாரும் கிடையாது. நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டும் என்கிற துடிப்பு என்னிடம் நிறையவே உண்டு. அதற்கான போராட்டத்தை எப்படித் துவக்குவது என்று தெரியாமல் அலைந்து கொண்டிருக்கிறேன். எந்த போராட்டத்திற்கும், சரியான வரைமுறை இருக்க வேண்டும். கல்வி அறிவு இல்லாத எனக்கு தேக பலம் மட்டுமே உண்டு. எனது தேக பலத்தை வழி நடத்த ஒரு சிந்தனையாளன் தேவை. அந்த சிந்தனையாளனாக நீ இருக்க சித்தமாக இருந்தால், எந்த போராட்டத்திற்கும் நான் தயார்!" - அபேயன் கூறியதும், கவுடில்யன் முகமலர்ச்சியுடன் அவனை நோக்கினான்.

“தட்சிணத்தில் இருக்கும் காஞ்சி என்கிற அத்தியூரில் இருந்து வருகிறேன். எனது பெயர் கவுடில்யன். நீ வாள் ஏந்துகிறாய். எனது ஆயுதம் யாககுண்டம். நீ வில் அம்பு ஏந்துகிறாய். எனது ஆயுதம் தர்ப்பை கட்டு. நீ புஜபல பராக்கிரமத்தால் எதிரிகளை சாய்ப்பாய். நான் எனது மதியூகத்தால் எதிரிகளின் சதிகளை முறியடிப்பேன்!" - கவுடில்யன் கூறினான்.

"கவுடில்யா.! உன்னைப் பார்க்கும் போது, மாபெரும் கல்வியாளனாகத் தெரிகிறது. இந்த நாட்டுக்கு விடிவு பிறக்குமா? மன்னன் தானநந்தா வீழ்வானா? உனது ஜோதிட சாத்திரம் என்ன கூறுகிறது?" - அபேயன் ஆவலுடன் கேட்டான்.

“இதற்கு ஏன் ஜோதிடத்தை நாட வேண்டும், அபேயா? உனது பலமும், எனது அறிவும் போதும், தானநந்தனின் குடும்பத்தை ஒழித்துக் கட்டலாம். அகம்பாவம் கொண்ட மன்னர் குடும்பம் அழிய வேண்டும் என்று நானும் நினைத்தேன். நீயும் நினைத்தாய். இன்று இருவரின்

https://telegram.me/aedahamlibrary

எண்ணமும் ஒன்றாக இணைந்தது. இரண்டு மனங்கள் நாளை நான்காகக் கூடும்! நாளை மறுநாள் நான்கு எட்டாக மாறும். இப்படியாக பட்டுப்பூச்சி முட்டையிடுவது போல் எண்ணங்கள் கூடிக்கொண்டே போகும். புதிய எண்ணங்கள் தோன்றும். சிக்கி முக்கி கற்கள் உராய்வதால் எழும் தீப்பொறி ஒரு பெரிய அடவியினையே அழிப்பது போன்று, ஒரு சிறு எண்ணம் வேள்வித்தீயாக பரவி நாட்டில் பெருமாற்றத்தை உண்டு பண்ணும்!” - கவுடில்யனின் சொற்களால் புதிய உத்வேகமும், எண்ண எழுச்சியும் உண்டாக, அபேயன் தனது இடையிலிருந்த வீர வாளை உருவி, தலையின் மீதாக உயர்த்தினான்.

“உனது புனித வேள்வியில் ஈடுபட நான் தயார்!” - அபேயன் கூறினான்.

"இடையில் இருக்கும் ஆயுதத்தை உடனடியாக நீ உயர்த்திவிட்டாய். எனது ஆயுதம், புஷ்பபுர நகரின் மையத்தில் உள்ள தாமரை தடாகத்தின் கரையில் உள்ள மாமரத்தின் அருகே உள்ளது. உனது ஆயுதம் வில் அம்பு எனது ஆயுதம் கூரிய அறிவு. உனது புஜபல பராக்கிரமத்தால் எதிரிகளை வீழ்த்துவாய். எனது தந்திரத்தாலும், மந்திரத்தாலும், எதிரிகளின் சதிகளை முறியடிப்பேன்,

நாம் இருவரும் சேர்ந்து தானநந்தனுக்கு மாற்றாக ஒரு மன்னனைக் கண்டு பிடிப்போம்!” - கவுடில்யன் சொன்னான்.

"அப்படி ஒரு மன்னனை இனம் கண்டுகொள்ள முடியவில்லை என்றால் என்ன செய்வது?” - அபேயன் கேட்டான்.

"அப்படி இயலவில்லை என்றால், நானே மன்னன். நீதான் தளபதி!” - கவுடில்யன் கூறினான்.

“கவுடில்யா! புதிய ராஜ்யத்தை அமைக்க, மதி பலம், தேக பலம் இருந்தால் மட்டும் போதாது. ராஜ்யலக்ஷ்மியை வசப்படுத்த கலைமகள் மற்றும் மலைமகளின் அருள் இருந்தால் மட்டும் போதுமா? திருமகளின் அருள் வேண்டுமே. படையைப் பெருக்கவும், மக்களைத் திரட்டவும், பொன் தேவையல்லவா?” அபேயன் தனது ஐயத்தை வெளிப்படுத்தினான்.

"நீ ஏன் கவலைப்படுகிறாய். புஷ்பபுரத்தின் மையத்தில் உள்ள தாமரை தடாகத்தின் கரையில் உள்ள மாமர மேடைக்குப் போ. மேடை சுவற்றில் செம்மண் குழைவினால் ஓம் என்று எழுதப்பட்டிருக்கும். அதன் நேர்

https://telegram.me/aedahamlibrary

எதிரே பூமியில் ஒரு துணிமூட்டையினை புதைத்திருக்கிறேன். அதைக் கொண்டு வா! பின்பு நமது திட்டத்தினை செயலாக்குவோம்!” - கவுடில்யன் கூறினான்.

அன்றிரவு ---

அபேயன் புஷ்பபுரம் சென்று நடுநிசிக்குள்ளாக அந்த துணி மூட்டையுடன் திரும்பி வந்து கவுடில்யன் வசம் ஒப்படைத்தான்.

மூட்டையைப் பிரித்து உள்ளே இருந்த மாலவன் விக்கிரகத்தையும், தேவ உடும்பரம் மரத் துண்டையும் மரத்தின் கீழே வைத்தான்.

“இதுவா உனது ஆயுதம்?” அபேயனின் குரல் கேலியாக ஒலித்தது.

"நீ போர் புரிய தேகத்தை வளர்க்கிறாய். நான் சிந்தையை வளர்க்கிறேன். எனது செயல்கள் உனக்கு விந்தையாகதான் இருக்கும். சற்று பொறு!” - என்றான் கவுடில்யன்

தனது தந்தை காஞ்சனகுப்தர் ரசவாத சூத்ரத்தை போதித்தது நினைவுக்கு வந்தது. ஓமகுண்டத்தில் ரசவாதத்தை வரவழைத்து அதனை விழுங்கினால், புதையல்கள் இருக்கும் இடத்தை உணரலாமே. தானநந்தாவின் மீது போர் தொடுக்கப் புதையல்கள் தேவைப்படுகிறதே!

தந்தை சொன்ன சூத்திரத்தை நினைவு கூர்ந்தான்.

சுகாதிபதி இராசியோன் பத்திலிருக்க,

சூழ்ந்து மதி சேர்ந்தாலும் பார்த்திட்டாலும்,

ஜகமீது ஆகரண, கோகரண வித்தை கற்பான்

சுகமிரண்டுக்குடையோன் நட்பாட்சியாய் இருக்க

மகிழுடனே புத வைரோடிருக்கபார்க்க

https://telegram.me/aedahamlibrary

மாந்த்ரீகம் ரசவாத வித்தை கற்பான்

உகந்து ரவி அவர்களுடன் சேர்ந்திட்டாலே

உத்தம தெய்வத்தை பூஜித்திருப்பானே

தந்தையார் தமிழ்ச் சுவடியில் போதித்திருந்த ரசவாத சூத்திரத்தை ஒருகணம் உச்சரித்துப் பார்த்துக் கொண்டான், கவுடில்யன்.

கற்களைத் தேடி எடுத்து குண்டம் அமைத்து, அத்திமலைத்தேவனை அன்வஹித்து, ஓமகுண்டத்தில் வேள்வித்தீயை வளர்த்து ரசவாதம் சித்தியாகும் மந்திரங்களை ஜபிக்கத் தொடங்கினான், கவுடில்யன். அபேயனுக்கு இது புது அனுபவம். அந்த குளிருக்கு கவுடில்யன் மூட்டிய யாககுண்ட தீ அவன் தேகத்திற்கு இதத்தினை தந்ததே தவிர அவனால் அந்த யாகத்தின் தத்துவத்தைப் புரிந்து கொள்ள இயலவில்லை. எங்கேயாவது யாகம் செய்தால் புதையல் கிடைக்குமா? இந்த பிராமணச் சிறுவன் ஒரு வேளை பித்தனா. தான் மன்னனாவான் என்கிறானே. என்னைத் தளபதி ஆக்குவதாகச் சொல்கிறானே.

பொழுது விடிவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. பறவைகள் தங்கள் கூட்டிலிருந்து வெளிவந்து இறக்கைகளை படபடத்துக்கொண்டு கூவத்துவங்கிய வேளை திடீரென்று, கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த அக்னி ஜ்வாலையில் மஞ்சள் நிறத்தில் பந்து போன்று ஒரு பொருள் திரளத் துவங்க, அது பொன்னிறத்தில் தகதகத்துக் கொண்டிருந்தது.

"அபேயா! என்னை நம்ப மறுத்தாயே. பார்! ரசமணி திரண்டு விட்டது. இதை நான் விழுங்கினேன் என்றால் பிறகு உலகில் உள்ள புதையல்களை என்னால் உணர முடியும்!" - என்றபடி அக்னியில் திரண்ட ரசமணியை மட்டையொன்றினால் எடுத்து அப்படியே வாயில் போட்டு விழுங்கினான், கவுடில்யன். கொதித்துக் கொண்டிருந்த ரசமணி அவனது தொண்டைக் குழியில் இறங்க அவனது நெஞ்சுக் குழி வெந்து போவதை அபேயனால் காண முடிந்தது.

மறுநாள் ---

சூரியன் தனது இரதசாரதியான அருணனுடன் கிழக்கு வானில்

https://telegram.me/aedahamlibrary

புறப்பட்ட அதே நேரம், கவுடில்யனும், அபேயனுடன் புறப்பட்டான். புதையல்கள் உள்ள இடத்தை அவனால் இப்போது உணர முடியும்.

"கரிச்சான் குஞ்சுகள் கூடுமிடம் தோண்டி பார்! புதையல் கிட்டும்.”

குறி சொல்வது போன்று கவுடில்யன் சொல்ல, அபேயன் வியப்புடன் இருபுறமும் பார்க்க, ஒரு வேங்கை மரத்தினடியில் இரு கரிச்சான் குஞ்சுகள் கூடிக் கொண்டிருப்பதை கவனித்ததும் அவன் கண்கள் வியப்பினால் விரிந்தன.

கவுடில்யன் அவனைத் திரும்பி நோக்கி கண்களை அசைக்க, அபேயன் ஒரு கூரிய மரக்கிளையினால் அந்த வேங்கைமரத்தின் கீழே தோண்டத் துவங்கினான்.

அபேயனை மிகவும் சிரமப்படுத்தாமல் உடனடியாக நான்கைந்து மண்பானைகள் தென்பட அவற்றை ஒவ்வொன்றாக வெளியே எடுத்தான். அவற்றின் மூடிகளைத் திறந்து பார்க்க, எல்லாவற்றிலும் பொற்காசுகள் நிறைந்து கிடந்தன. பிரமிப்புடன் கவுடில்யனை திரும்பிப் பார்த்த அபேயனின் கண்கள் முழுவதும் மதிப்பு நிரம்பிக் காணப்பட்டது.

“தாமரை பொய்கையில் ஒரே தண்டில் இரு தாமரை மலர்கள் காணப்பட்டால் அந்தப் பொய்கையின் அடியில் புதையல் கிடைக்கும்.”

அவ்வாறே, இவர்கள் செல்லும் பாதையில் ஒரு தாமரை பொய்கை தென்பட, அதில் உள்ள மலர்களை ஆராய்ந்தான், கவுடில்யன்... ஒரே தண்டில் இருமலர்கள் பூத்திருப்பதை கண்டதுமே அவனது கண்கள் அபேயனை நோக்கி சமிக்ஞை செய்ய, அவன் நீரினுள் பாய்ந்தான். வெளியே வந்தபோது அவனது கரத்தில் துணி மூட்டைகள். பிரித்துப் பார்த்ததுமே, வைர, வைடூரியக் குவியல்களைக் கண்டார்கள்.

அவர்களது பயணம் தொடர்ந்தது.

"முள் உள்ள வாழைமரத்தைத் தேடு. அதன் அடியில் புதையல் கிட்டும்!" - கவுடில்யன் சொல்ல, உடனேயே அபேயனின் கண்களில் முள் உள்ள வாழைமரம் ஒன்று கிட்டியது. அதன் கீழே உடனடியாக அபேயன் தோண்டினான். தங்கப் பிரதிமைகள் ஒரு பாக்குமரப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன.

https://telegram.me/aedahamlibrary

ம்ம்... என்று கவுடில்யன் சிரமத்துடன் பிரதிமை பெட்டியை வெளியே எடுக்க, அபேயன் அனாயாசமாக அதனைத் தூக்கி தனது தோளினில் வைத்துக்கொண்டான்.

"கவுடில்யா! இன்றே நாம் தானநந்தாவை பதவி இறக்கிவிடுவோம் போல் இருக்கிறதே!" - அபேயன் கூற, கவுடில்யன் சிரித்தான்.

உச்சி வெய்யில் மரங்களின் ஊடே நுழைந்து இவர்களின் தலையை பதம் பார்க்க, வயிற்றில் பசி உண்டாக, புதையல்களைத் தேடும் படலத்தை நிறுத்திக்கொண்டு உண்பதற்கு கனிகள் கிடைக்குமா என்று இருவரும் தேடத் துவங்கினர்.

"கவுடில்யா! புதையல்களுடன் இங்கேயே அமர்ந்திரு. நான் சென்று கனிகளைப் பறித்து வருகிறேன்!" - அபேயன் புறப்பட்டுச் செல்ல, கவுடில்யன் ஆயாசத்துடன் மரத்தின் மீது சாய்ந்தபடி, கண்களை மூடிக்கொண்டான். அப்போதுதான் ---

அந்தக் குரல் கேட்டது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 14. சந்திரோதயம்

"களவாடிய இந்தக் கயவனின் கைகளை வெட்டுங்கள்!”

கம்பீரமான அந்தக் குரலைக் கேட்டு தனது கண்களைத் திறந்தான் கவுடில்யன். குரலா அது! வீர கர்ஜனையாக அல்லவா திகழ்ந்தது. அந்த விரிஞ்சி காட்டின் சிங்கம் ஏதாவது மனித மொழியைப் பேசக் கற்றுக்கொண்டு விட்டதா என்ன?

வியப்புடன் கண்களைச் சுழல விட்டவன், இரவெல்லாம் ஹோமம் வளர்த்ததால் கண்கள் சிவந்து, உறக்கத்தால் சுருங்கியிருந்த தனது நேத்திரங்களை அகல விரித்து, தான் சாய்ந்திருந்த மரத்திற்குப் பின்பாக நோக்கினான், கவுடில்யன்.

சற்று தொலைவில் விரிஞ்சி ஆற்றின் கரையில் பரந்து விரிந்திருந்த ஆலமரத்தின் அடியில், ஒரு பாறையின் மேல் கம்பீரமாக அமர்ந்திருந்தான் ஒரு அழகிய குமரன். இவனை விட நான்கைந்து பிராயங்கள் சிறியவனாக இருக்கலாம். பதினெட்டு வயது இருக்கலாம்.

"மகத மன்னனாகிய சந்தா கூறுகிறேன். இந்தக் கள்வனின் கையை வெட்டுங்கள்!” - என்று உணர்ச்சியுடன் கூறினான், அந்தக் குமரன். அவனைச் சுற்றி நான்கைந்து காட்டுவாசிகள் நின்றிருந்தனர். காட்டுவாசி சிறுவர்கள் மன்னன், கள்வன் விளையாட்டினை ஆடுகின்றனர் போலும். கவுடில்யன் தன்னை மறந்து அந்தக் குமரனைக் கவனிக்கத் துவங்கினான்.

மிகவும் அழகாக இருந்தான் அந்த இளைஞன். கம்பீரமான முகம். அகன்ற விழிகள், அடர்த்தியான முடி. அதனை மேல்நோக்கிக் குவித்து வாழை நாரினால் முடிந்திருந்தான். கருத்த தேகம். பதினெட்டு வயதில், அகன்று விரிந்திருந்த தேகம். புஜங்கள் புடைத்து அவனை வலிமை மிக்கவன் என்பதனை பறைசாற்றின. அவனையே உறுத்து நோக்கினான் கவுடில்யன்.

திடீரென்று ---

அந்த வாலிபன், ஆவேசத்துடன் எழுந்தான்.

"இந்தக் கள்வனின் கரத்தை நானே வெட்டுகிறேன்!” என்று தனது

https://telegram.me/aedahamlibrary

இடையில் இருந்த வாளை உருவி கள்வனாக நடித்த அந்த வாலிபனின் கையை சற்றும் எதிர்பார்த்திராத வகையில், வாளினால் தாக்க, அந்த சிறுவனின் கரம் பிளவுண்டு குருதி பொங்கிப் பாயத் துவங்கியது.

"ஐயோ சந்தா! உண்மையிலேயே எனது கையை வெட்டி விட்டாயே!" - அந்தச் சிறுவன் அலறியதும்தான் சந்தா தன் நிலையினை உணர்ந்தான்.

பதைபதைத்துப் போனான், சந்தா! [1]

“என்னை மன்னித்துவிடு பலபீமா! மன்னன் வேடம் தரித்துவிட்டேன் என்கிற மிதப்பில் சற்றே உணர்ச்சி வயப்பட்டு விட்டேன்! இப்போது என்ன செய்வேன். குருதி அதிகமாக வெளியாகிறதே. சிந்தா! நீ ஓடிச்சென்று மூலிகைகளைப் பறித்து வா!” சந்தா கூற, சிந்தா என்கிற அந்தச் சிறுவன் ஓடிச்சென்றான்.

கவுடில்யனின் கை துணிமூட்டையைப் பற்றியது. அதிலிருந்து தேவ உடும்பர மரத்துண்டினை எடுத்துக் கொண்டு எழுந்த கவுடில்யன், சந்தாவை நோக்கி நடந்தான்.

"கவலைப்படாதே குமரனே! என்னால் அந்தச் சிறுவனின் வெட்டுக்காயத்தை குணம் செய்ய முடியும். சற்றே விலகி இரு. எனக்கு சிறிது நீர் தேவைப்படுகிறது!” என்று கவுடில்யன் கூறினான்.

திடீரென்று அங்கே பிரசன்னமான கவுடில்யனை அனைவருமே வியப்புடன் பார்க்க, அவன் நீர் கேட்பதை உணர்ந்து சந்தா, உடனே தன்னிடம் வைத்திருந்த ஒரு மரக்குடுவை நீரை கவுடில்யனிடம் நீட்டினான். கவுடில்யன் பலபீமா என்கிற அந்த காட்டுவாசி சிறுவனின் வெட்டுக்காயத்தை நீரால் சுத்தம் செய்து, பிறகு நீரில் தேவ உடும்பரத்தை குழைத்தான். செந்நிறத்தில் குழைவு உண்டாக, அந்தக் குழைவினை அந்த வெட்டுக்காயத்தின் மீது பற்றாக அப்பினான், கவுடில்யன்.

அந்தச் சிறுவன் தனது கரத்தின் வலி உடனடியாகக் குறைந்து குளிர்ச்சியாக உணரத் துவங்கினான். அவனது முகத்தில் தோன்றிய மலர்ச்சியைக் கண்டு சந்தா வியப்புடன் கவுடில்யனைப் பார்க்க, அரை நாழிகை கழித்து, பலபீமாவின் கரத்தில் அப்பப்பட்டிருந்த செந்நிற குழைவை துடைத்தான், கவுடில்யன். என்ன ஆச்சரியம்! சந்தா அவனது கரத்தினை வெட்டி இருந்த அடையாளமே காணப்படவில்லை.

https://telegram.me/aedahamlibrary

“வேதியரே! சமயசஞ்சீவியாக வந்து எங்கள் பலபீமாவை காப்பாற்றித் தந்தீர். ‘மன்னன் - கள்வன்’ விளையாட்டில் ஈடுபட்டிருந்தோம் நாங்கள். சற்றே உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். அதனால் அவனது கையை வெட்டி விட்டேன்!” சந்தா கூறினான்.

"வனவாசியே! மன்னர் பதவியில் அமர்பவன் உணர்ச்சி வசப்படலாமோ! பெற்ற மகனே குற்றம் செய்திருந்தாலும், நீதி தவறாமல் தீர்ப்புக் கூற வேண்டாமோ?" - கவுடில்யன் கேட்டான்.

"மன்னன் என்பான் மக்கள் ஊழியன். காட்டுவாசியான நாங்கள் மரம்வெட்டியும், மிருகங்களை வேட்டையாடியும், மூலிகைகளைப் பறித்தும் வாழ்க்கை நடத்துகிறோம். காய் கனி, கீரை மூலிகைகளை புஷ்பபுரம் போன்ற பகுதிகளில் விற்க நாங்கள் பணியாட்களை அனுப்புகிறோம். அவர்களுக்கு நாங்கள் அஞ்சுகிறோமா என்ன? அதேபோல் மன்னனும் நீதிதர்மத்தை நிலைநாட்ட வேண்டிய பணியாள் தானே?" சந்தா கேட்டான்.

"நீ காட்டுவாசியாதலால் இங்ஙனம் பேசுகிறாய்! அரண்மனையில் இருந்தால் இம்மாதிரி பேசுவாயா?” - கவுடில்யன் சந்தாவை ஆழமாகப் பார்த்தான்.

"வேதியரே! நீங்கள் சொல்வது விந்தையாக உள்ளது. அரண்மனை என்கிற சொல்லுக்குப் பொருள் தெரியாதவரா நீங்கள்! அரண் என்றாலே பாதுகாப்பு என்பதுதானே பொருள். மக்களுக்கு துன்பம் நேர்கையில் அவர்களது துயரைத் துடைத்து விடிவை ஏற்படுத்தும் மன்னன் வசிக்கும் இடமாதலால்தானே அதற்கு அரண்மனை என்று பெயரிடப்பட்டது. அரண் தரும் இடம் அரண்மனை.”

சந்தா சொல்ல, கவுடில்யனின் இதயம் துள்ளியது.

அகம்பாவம் பிடித்த தானநந்தாவின் குடும்பம் மட்டும் இந்தக் காட்டுவாசியின் பேச்சைக் கேட்டிருந்தால் என்ன ஆகும்?

“சந்தா! அதுதான் உன் பெயரா? உனது பூர்வீகம் என்ன?”

“வேதியரே! எனது பிறப்பில் மர்மம் பொதிந்திருக்கிறது. எனது தாய் என்னை ஈன்றதும் என்னை வேண்டாம் என்று தீர்மானித்து விட்டாள் போலும். யாரோ ஒருவர் என்னைக் கொண்டு வந்து காட்டில் போட்டு

https://telegram.me/aedahamlibrary

விட, ஒரு காட்டுவாசி தம்பதிகளால் வளர்க்கப்பட்டேன். என்னை காட்டில் வந்து வீசி எறிந்த புண்ணியன் அந்தக் காட்டுவாசி தம்பதியிடம் ஒரே ஒரு தகவலை மட்டுமே கூறிவிட்டுச் சென்றாராம். எனது தாயின் பெயர் அமரா! அது மட்டும்தான் எனக்குத் தெரியும். காட்டுவாசிகளின் தலைவரான எனது தந்தை என்னை அன்பாக வளர்த்து என்னை வாலிபனாக்கி விட்டார். எனது மக்களும், என்னை அடுத்த தலைவராக அங்கீகரித்து விட்டனர்!” சந்தா கூற, அவனையே உறுத்துப் பார்த்தான், கவுடில்யன். அவனையும் அறியாமல் அவனது கரம் தேவ உடும்பரத்தை இறுகப் பற்றியது.

முதலில் தேவ உடும்பரம் கிடைத்தது. பிறகு தானநந்தாவின் அவமதிப்புக்கு உள்ளானான். உடனேயே அபேயன் என்கிற தளபதி கிடைத்தான். தொடர்ந்து புதையல்களும் கிடைத்தன. இறுதியில், இவனது புதிய சாம்ராஜ்யத்தை நடத்திச் செல்ல ஒரு மன்னனும் கிடைத்து விட்டான் போல் உள்ளதே. தான் மன்னனாக பதவி ஏற்பதைவிட, இந்த சந்தாவை அரசனாக்கி அவனைத் தனது கட்டுப்பாட்டில் வைக்கலாமே!

சந்தாவின் பெயரோடு, விஷ்ணுகுப்தன் என்கிற தனது பெயரில் இருந்து குப்தனைச் சேர்த்து சந்திரகுப்தனாக அவனை அரியணையில் அமர்த்தலாமே.

யோசனையுடன் அவன் நின்றபோதே, தொலைவில் அபேயனின் குரல் கேட்டது.

"கவுடில்யா! புதையல்களை அம்போ என்று விட்டு விட்டு எங்கே சென்றாய்? நீ பசியாற கனிகளைக் கொண்டு வந்திருக்கிறேன்!”

"தளபதி அபேயரே! நமது மன்னன் சந்திரகுப்தன் இங்கு இருக்கிறான்! இங்கே வந்து மன்னருக்கு வணக்கங்களைச் செலுத்துங்கள்!” - கவுடில்யன் அழைக்க,

திகைப்புடன் இவர்களை நோக்கி வந்தான், அபேயன்.

தன்னையும் அறியாமல் சந்தாவின் முன்பு தலைகுனிந்து பணிவாக நின்றான்.

“தளபதியாரே! ராஜதந்திரி கவுடில்யன் இதோ இருக்கிறேன். தளபதி நீர்

https://telegram.me/aedahamlibrary

இதோ இருக்கிறீர்.! வருங்கால மன்னன் சந்திரகுப்தன் இங்கே இருக்கிறான். படை திரட்ட பொருளும் தயார். இன்னும் என்ன! திரட்டுங்கள் நம் படையை!” - கவுடில்யன் சொல்ல, கவுடில்யனை நோக்கித் தலை குனிந்தான் அபேயன்.

“உத்தரவு ராஜதந்திரியாரே!” என்றான், அபேயன்.

சந்தாவுக்கு அவர்களது பேச்சு விசித்திரமாக இருந்தது. அவனுக்கு ஒன்று மட்டும் புரிந்து போனது. அவனது வாழ்க்கை ஒரு பிராமணனால் மாறிப் போகும் என்று காட்டுதேவதை ஆலயத்தில் குறி சொல்லப்பட்டது. அந்த பிராமணனைத் தான் ஏற்கனவே சந்தித்து விட்டான் என்பது மட்டும் புரிந்தது.

“தானநந்தா! உன்னை விரிஞ்சி காட்டிற்கு விரட்ட இதோ நான் வருகிறேன். துர்தரா! தயாராக இரு! அகம்பாவம் பிடித்த உன்னை, இந்த வனவாசி சந்திரனுக்கு மணமுடித்து, உன்னை ஒரு பணிப் பெண்ணிற்கு தாசியாக மாற்றி விடுகிறேன்!" தனக்குள் சூளுரைத்துக் கொண்டான், கவுடில்யன்.

எங்கோ சகோர பறவை ஒன்று ஓலமிட்டு அழத்தொடங்கியது. சகோர பறவை தானநந்தாவின் ராஜ இலச்சினையில் குறியிடப்படும் பறவையல்லவா?

கவுடில்யன் சந்தாவை நோக்கினான்.

“புறப்படு சந்தா!” கவுடில்யன் கூறியதும் திகைத்தான்.

“எங்கே?” - வியப்புடன் கேட்டான், சந்தா.

"இப்போதுதானே மன்னனாக நீதியை வழங்கினாய். இனி உண்மையான மன்னனாக மகத சிம்மாசனத்தில் அமர்ந்து நீதி வழங்குவாய்! புறப்படு!”

கவுடில்யன் கூற, கடகடவென்று சிரித்தான், சந்தா.

“எனது விளையாட்டு முடிந்து போனது, வேதியனே.! இனி உம்முடன் விளையாட எனக்கு நேரமில்லை. எனது தந்தை - தாயார் எனக்காகக் காத்திருப்பர். காட்டுவாசிகளை விட்டு வர நான் தயாரில்லை. எனக்கு

https://telegram.me/aedahamlibrary

மகத சிம்மாசனமும் தேவையில்லை!" - சந்தா கூற, கவுடில்யன் அவனை ஆழமாகப் பார்த்தான்.

"சந்திரனே! உனக்கு பாரத கண்டத்தில் பெரிய இடம் கிடைக்க உள்ளது. இந்த விரிஞ்சி காட்டில் புதையுண்டு நீ சாதிக்கப் போவது ஒன்றுமில்லை. என்னுடன் வா! உன்னை மாபெரும் சக்கரவர்த்தியாகத் திகழச் செய்கிறேன்!" கவுடில்யன் கூற, இம்முறை அவனது உறுதியான பேச்சு, சந்திரனின் வலிமை வாய்ந்த தேகத்தைத் துளைத்துக்கொண்டு அவனது இதயத்தினைப் பதம் பார்த்தது.

"பிராமணரே! என்னால் எந்த முடிவும் எடுக்க முடியாது. எனது தந்தை மோதாமாவும், தாய் மந்தாவும் தான் எனக்காக முடிவு எடுப்பது வழக்கம்!" - சந்தா கூற, கவுடில்யன் யோசித்தான்.

"அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?" - கவுடில்யன் கேட்க, சந்திரன் உடனே தனது குடில் இருக்கும் திக்கினைக் காட்டினான்.

"என்னை அவர்களிடம் அழைத்துச் செல்!" - கவுடில்யன் கூற, சந்தா தனது தோழர்களைத் திரட்டிக் கொண்டு தனது குடிலினை நோக்கி நடைபோடத் துவங்கினான். அபேயன் பின்தொடர, கவுடில்யன் சந்தாவின் பின்னால் நடந்தான்.

நீண்ட நடைப்பயணத்திற்குப் பிறகு, மூங்கிலால் வேயப்பட்ட சந்தாவின் குடில் கவுடில்யனின் கண்களில் பட்டது. வாசலிலே அமர்ந்திருந்த சந்தாவின் வளர்ப்பு தாய் மந்தா இவர்களைப் பார்த்ததுமே உள்ளே சென்று கணவன் மோதாமாவை அழைத்து வந்தாள்.

கவுடில்யனைப் பார்த்ததுமே, மோதாமாவும் மந்தாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். காட்டு தேவதை ஆலயத்தில் குறி சொல்லும் பூசாரி, ஒரு பிராமணன் சந்தாவைத் தேடி வருவான். அன்று அவனது வாழ்க்கையில் பெரிய திருப்பம் உண்டாகும் என்றாரே.

கவுடில்யன் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான்.

"எனது பெயர் கவுடில்யன்! தட்சிண பிரதேசத்தில் இருந்து வருகிறேன். மகத மக்களின் துயர் தீர்த்து, தற்போதைய மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை நீக்கி, நல்லாட்சியை வழங்க உத்தேசித்து இருக்கிறேன். தற்போதைய மன்னனை பதவியில் இருந்து நீக்கி ஒரு நல்ல மன்னனை

https://telegram.me/aedahamlibrary

அந்த அரியாசனத்தில் அமரவைக்க திட்டமிட்டு இருக்கிறேன். ஒரு நல்ல மன்னனை தேடியபடி விரிஞ்சி காட்டின் வழியாக வரும்போதுதான், உங்கள் மகனைக் காண நேர்ந்தது. மன்னனாக அமர்ந்து நல்லாட்சியை வழங்கும் தகுதிகளைக் கொண்டிருக்கிறான் உங்கள் மகன். தயை கூர்ந்து உங்கள் மகனை எங்களுடன் அனுப்ப வேண்டுகிறேன். அவனை மகத மன்னனாக பதவியில் அமர்த்துவதற்கு உங்கள் உதவியை நான் எதிர்பார்க்கிறேன்!" - கவுடில்யன் கூறியதுமே, மந்தா விசித்து அழத் தொடங்கினாள்.

“பிராமணரே! எனக்குப் பிறகு இந்த விரிஞ்சி காட்டினை என் மகன் தான் ஆளப்போகிறான். அவனுக்கு இங்கேயே சிம்மாசனம் காத்திருக்க மகத சிம்மாசனம் எதற்கு?" - மோதாமா கேட்டான்.

“விரிஞ்சி தலைவரே! உமக்கு ஒரு கதையைக் கூறுகிறேன். ஒரு ஏழை மனிதனுக்கு கண் தெரியாத ஒரு தாய் இருந்தாள். ஏழை என்பதால் அவனுக்கு யாரும் பெண் தர முன்வரவில்லை. மேலும் அவனுக்கு புத்திர சந்தானம் உண்டாகாது என்று ஜாதகத்தில் இருந்தது. இந்நிலையில் அவன் ஒரு முறை காட்டின் வழி செல்ல ஒரு தேவதை அவன் முன் தோன்றி அவனுக்கு ஒரே ஒரு வரத்தைத் தருவதாகக் கூறியது. இவனுக்கு எதைக் கேட்பது என்றே தெரியவில்லை. தாய்க்கு கண் பார்வை கிடைப்பது முக்கியமா, தனக்கு திருமணம் நடைபெறுவது முக்கியமா, செல்வத்தை கேட்பது முக்கியமா, அல்லது தனது ஜாதக தோஷத்தை நிவர்த்தி செய்து புத்திர பாக்கியத்தை கேட்பதா என்று அவனுள் குழப்பம். தேவதையிடம் ஒரு தினத்திற்கு பிறகு வரம் கேட்பதாகக் கூறிவிட்டு, தாயிடம் வந்தான் அந்த மனிதன். தாயிடம் தனது பிரச்னையைக் கூற, அவள் அவன் காதில் எதையோ கூறி, அதன்படி தேவதையிடம் வரத்தைக் கேட்கும்படி கூறினாள்!

"மறுநாள் அந்த தேவதையை அழைத்த அந்த மனிதன் கேட்ட வரம் என்ன தெரியுமா? எனது அழகிய மனைவி, தங்கத் தொட்டிலில் என் மகனை ஊஞ்சல் ஆட்டுவதை, என் தாய் கண்குளிரக் கண்டு மகிழ வேண்டும் என்பதுதான் அவன் கேட்ட வரம். ஒரே வரத்தில் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டு விட்டாள், அந்த மனிதனின் தாய். நீங்கள் உங்கள் மகன் விரிஞ்சி காட்டின் தலைவன் ஆகப் போகிறான் என்று நினைக்கின்றீர். அவன் மகத சாம்ராஜ்யத்தின் மன்னனாக அமர்ந்து அட்ட திக்குகளையும் ஆளப் போகிறான். உங்கள் மகனை என்னிடம் தாருங்கள். உலகத்தை ஆளும் சக்கரவர்த்தியாக அவனை

https://telegram.me/aedahamlibrary

உங்களுக்குத் திருப்பித் தருகிறேன்!” கவுடில்யன் இவ்வாறு கூறியதும் சந்தாவின் வளர்ப்பு பெற்றோர் பிரமித்துப் போனார்கள்.

"வேதியரே! என் மகனுக்கு அப்படி ஒரு பாக்கியம் இருந்தால் அதைத் தடுக்க நான் யார்? சந்தா! உனக்கு போக விருப்பம்தானே?” - மோதாமா கேட்டான்.

“தந்தையே! நான் மகதத்தின் மன்னனாக அமர்ந்து விரிஞ்சி காட்டினையும் சேர்த்து ஆளுவேன் என்கிறார், இவர். நான் இவருடன் செல்வது தங்களுக்கு பெருமை சேர்க்கும் என்றால் நான் இவருடன் செல்லத் தயாராக இருக்கிறேன்!” - சந்தா சொல்ல, அவனைக் கட்டி உச்சி முகர்ந்தனர், மோதாமாவும் மந்தாவும்.

"சென்று வா சந்தா! வென்று வா!" - சந்தா அவர்களைப் பணிந்துவிட்டு, கவுடில்யனோடு நடக்கத் தொடங்கினான். சிறிது தொலைவு வரை, சந்தாவின் காட்டுவாசி சிநேகிதர்கள் வந்து அவனுக்கு பிரியா விடை கொடுக்க, அவன் அவர்களை விட்டுப் பிரியமனமில்லாதுதான் கவுடில்யனுடன் நடந்தான்.

அன்றிரவு ---

அபேயன் தீ மூட்ட, பிற்பகல் தான் பறித்து வந்திருந்த கனிகளை கவுடில்யனுக்கும், சந்தாவுக்கும் அளித்தான். கனிகளை புசிக்கும்வரை மூவருமே அமைதி காத்தனர்.

அடர்ந்த அந்த அடவியில், இருள் போர்வை போர்த்தப்பட்டு விட்டது. அபேயன் மூட்டிய தீ மட்டும் கொழுந்து விட்டு எரிந்து குளிரினை விரட்ட, சுள்ளிகள் வெடிக்கும் ஒலி மட்டுமே அங்கே கேட்டுக் கொண்டிருந்தது.

திடீரென்று -

அபேயனைப் பார்த்தான் கவுடில்யன்.

"அபேயா! நீ இதற்கு முன் காதலித்தது உண்டா?”

கவுடில்யனின் திடீர்க் கேள்வி அபேயனைத் திடுக்கிட வைத்தது. தான் கடித்துக்கொண்டிருந்த கொய்யா கனியை மென்றுவிட்டு பிறகு பதில்

https://telegram.me/aedahamlibrary

தந்தான்.

"எனது மாமன் மகள் விமலினியை நான் காதலித்தேன். அவளும் என்னை விரும்பினாள். ஆனால்... இப்போது நான் குற்றவாளியாக இருக்கும் சூழ்நிலையில் எனது மாமன் எங்கள் மணத்திற்கு சம்மதம் தர மாட்டான் என்றே நினைக்கிறேன்...!" அபேயன் கூறினான்.

"உனது விஷயம் எப்படி சந்தா! காதல் புரிந்திருக்கின்றாயா?" - கவுடில்யன் கேட்டான். சந்தாவின் முகம் வெட்கத்தினால் சிவந்தது.

“எனக்கு அனுபவம் இல்லை, கவுடில்யரே! நான் சிறுவனாக இருக்கும் போதினில் இருந்தே வேட்டையாடுவது, மற்போர், மான்கொம்பு சுழற்சி, விற்போர் என்று வீர விளையாட்டுகளில் தான் கவனம் செலுத்தி வந்துள்ளேன். எங்கள் காட்டுவாசிகளில் பெண்கள் மிகக் குறைவு. எனது தாய், நண்பர்களின் சகோதரிகள் என்று சிலருடன் பேசியிருக்கின்றேனே தவிர, காதல் அனுபவம் கிட்டியதில்லை. எனது மனம் கவரும் பெண்ணை நான் இதுகாறும் சந்தித்ததில்லை!" சந்தா வேடிக்கையாகச் கூறினான்.

ஆனால் கவுடில்யனின் முகம் கடுமையாக மாறியது.

"காதலிக்கக் கற்றுக்கொள் சந்தா. சாம்ராஜ்யதைத் தோற்றுவிக்க வீரம் மட்டும் போதாது. விவேகமும், சூழ்ச்சியும் தேவை. ஒரு மன்னனை வீழ்த்த அவனது மகளை முதலில் வீழ்த்த வேண்டும். நீ தான நந்தாவின் மகள் துர்தராவை காதலிக்க வேண்டும். காதல் கவிதைகளை பொழிந்து அவளை நீ அடிமை கொள்ள வேண்டும்!” - கவுடில்யன் கூறினான்.

சந்தா தயங்கினான். "குருவே! காதல் விளையாட்டு வேண்டாமே. எனக்கு விருப்பம் இல்லை. எனது வீரத்தைக் கொண்டு தானநந்தாவை வீழ்த்துகிறேன்!” சந்தா கூறினான்.

“நான் உன்னில் பாதி மன்னன். நீ சந்திரன். நான் குப்தன். நாம் இருவரும் சந்திரகுப்தனாக ஆளப் போகின்றோம். உனது சிரசு மகுடம் தரித்திருக்கும். ஆனால், மகுடம் தரித்த அந்த சிரசில் சிந்தையாக நான் இருப்பேன். உனது தேகமும், எனது மதியும்தான் வருங்கால மன்னராக விளங்கப் போகின்றது. உனது மதி கூறுகிறது. நீ காதலிக்க வேண்டும் என்று. குரு சொல்வதைத் தட்டாதே!” - காட்டத்துடன் கூறினான், கவுடில்யன்.

https://telegram.me/aedahamlibrary

“உத்தரவு குருவே! நான் எப்போது துர்தராவை சந்திக்க வேண்டும்?” - சந்தா கேட்டான்.

"அகம்பாவம் பிடித்த துர்தராவை நீ விரைவிலேயே சந்திப்பாய். அவளை உனது காலடியில் விழுந்து கிடக்க வை!” - கவுடில்யன் கூற, தலையசைத்தான் சந்தா.

துர்தரா எப்படி இருப்பாள். பேரழகியா? அகம்பாவம் பிடித்தவள் என்கிறாரே குரு. எப்படியிருந்தால் என்ன! அவளைக் காதலிக்க வேண்டும் என்பது குருவின் உத்தரவு. அதை நிறைவேற்ற வேண்டியதுதான்.

எப்படிக் காதல் செய்வது? குழப்பத்துடன் கவுடில்யனைப் பார்த்தான், சந்தா.

"அபேயா! உனக்குத் தெரிந்த காதல் அனுபவத்தை சந்தாவிடம் கூறி, ஒரு பெண்ணிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதை எடுத்துக் கூறு!” - கவுடில்யன் கூற, அபேயன் அவனை விசித்திரமாகப் பார்த்தான்.

"கவுடில்யரே! உங்களுக்குக் காதல் அனுபவம் உண்டா?” - வேடிக்கையாகத்தான் கேட்டான், அபேயன்.

ஆனால் ---

கவுடில்யனின் முகம் கோரமாக மாறியது. இதுவரை நான் நினைத்துப் பார்க்காத ஒரு விஷயம், பெண்தான். காதலும், காமமும்தான் வருங்கால மன்னர்களை ஆட்டிவைக்கப் போகின்றன. எனது அரசியலில் பெண்களுக்கு இடமில்லை!” என்றபடி தனது மேல் துண்டை விரித்துப் போட்டுக்கொண்டு உறங்கத் துவங்கினான், கவுடில்யன்.

சந்தா அபேயனைப் பார்த்தான்.

"துர்தரா எப்படி இருப்பாள்?”

“அவள் பேரழகி! ஆனால் கர்வம் பிடித்தவள்! அவளை ஆளுமை செய்வது மிகவும் கடினம்!” அபேயன் கூறினான்.

சந்தா தனது வலிமையான தேகத்தை ஒருமுறை நோட்டம் விட்டான். எத்தனை கர்வம் பிடித்த பெண்களின் மனதையும் கரைய வைக்கும்

https://telegram.me/aedahamlibrary

விஷயம் ஏதாவது ஒன்று இருக்குமே! யோசித்தான் சந்தா!

"துர்தராவுக்குப் பிடித்த விஷயம் எது?" - சந்தா கேட்டான்.

"அவளுக்குப் பிடித்த விஷயம் ஒரு கொடுமையான விளையாட்டு, சந்தா! அனேக வெண்புறாக்களை பறக்க விடுவாள். ஒரே ஒரு புறாவின் கழுத்தினில் வளையம் ஒன்று பூட்டப்பட்டிருக்கும். போர்வீரன் ஒருவனை அழைத்து அந்த வளையம் பூட்டியுள்ள வெண்புறாவை குறி பார்த்து அம்பினால் வீழ்த்தச் சொல்லுவாள். தவறிய வீரனுக்கு பதினாறு கசையடி.! இதுவே அவளுக்குப் பிடித்த விளையாட்டு!" அபேயன் கூறினான்.

“அதென்ன கணக்கு... பதினாறு கசையடி!” ---

அவளது வயதை குறிக்கும் எண்ணிக்கை. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒருமுறை நான் பதினான்கு கசையடி வாங்கியுள்ளேன்!" - அபேயன் சிரித்தான்.

சந்தாவுக்கு அப்போதே துர்தராவைக் காண வேண்டும் போன்ற ஒரு உணர்வு. அபேயனும் உறங்கச்செல்ல, சந்தா மட்டும், உறங்காமல் தான் இதுவரை சந்தித்திராத துர்தராவையே நினைத்துக் கொண்டிருந்தான்.

**[1]** கி.மு. 340இல் பிறந்த சந்திரகுப்தனின் இயற்பெயர் சந்தா. தனது பெயரான விஷ்ணுகுப்தனில் குப்தனை சந்திரனோடு இணைத்து சந்திரகுப்தனாக சந்தாவை பதவி ஏற்கச் செய்தான். கௌடில்யன் தனது 21-வது வயதில் மகத மன்னன் ஆக பதவி ஏற்றான். கி.மு. 321 இல் பதவி ஏற்றான். கி.மு. 297இல் கர்நாடகாவின் சிரவணபெலகோலாவில் மரணம் அடைந்தான். கிரேக்க மற்றும் இலத்தின் நூல்களில், சந்திரகுப்தனை **Sandrokottos** மற்றும் **Androcottus** என்று அழைத்தனர்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 15. துர்குண துர்தரா

துர்தரா ஆரப்பாட்டத்துடன் தனது பள்ளியறையில் இருந்து வெளி வந்தாள்! அமரேந்திரி ஒரு கூடையில், வாசனைத் திரவியங்கள், மற்றும் குடுவையில் பழரச பானம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு அவள் பின்பாக நடக்க, இளவரசி நந்தவனத்தை நோக்கி நடந்தாள். நந்தவனத்தை அடைந்தவள், தனக்காக விதானம் ஒன்றின் கீழ் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து திண்டினில் சாய்ந்து கொண்டாள்.

காலைக் கதிரவனில் அவள் அணிந்திருந்த வெண்பட்டாடை தகதகத்தது. காதிலும், கழுத்திலும் வெண்பட்டுக்கு ஏற்ற முத்துமணி மாலைகளை அணிந்திருந்தாள். வழக்கமாக உயர்ந்த கோபுரமாக கொண்டையை அணிபவள், இன்று கூந்தலை விரித்து, அதன் மீது வளையம் ஒன்றை அணிந்திருந்தாள். பேரழகிதான். கழுத்தில் மகிழம் பூ மாலையை அணிந்திருந்தாள். அதன் வாசம் அவளைச் சுற்றி பரவியிருந்தது. ஆனால், சர்ப்பத்தின் அழகினை எட்ட இருந்துதானே ரசிக்க முடியும்.!

சற்று தள்ளி, கையில் வில் அம்புகளை ஏந்தி சில படைவீரர்கள் நின்றிருந்தனர். அவர்களது கட்டுமஸ்தான தேகங்களை முத்தமிட வேண்டும் என்கிற ஆவலுடன் அவர்களுக்காகக் காத்திருந்தது கரிய வண்ணத்தில் ஒரு சாட்டை. மற்றொரு பக்கம், நிறைய கூண்டுகள் வரிசையாக வைக்கப்பட்டிருக்க, அவற்றில் வெண்புறாக்கள் தங்கள் இறக்கைகளை படபடத்துக்கொண்டு வெளியே பறப்பதற்காகக் காத்திருந்தன.

வளையம் மாட்டப்பட்ட ஒரு புறா மட்டும் அமைதியாக சற்று அப்பால் நின்று கொண்டிருந்த வீரர்களையே நோக்கிக்கொண்டிருந்தது. இவர்களில் எவனுக்காவது, என்னை குறி வைத்து அம்பை ஏவி கொல்லும் வல்லமை இருக்கிறதா என்று பார்ப்பது போல இருந்தது, அதன் பார்வை. இளவரசி வந்து அமர்ந்ததும், குடுவையில் இருந்த பழரசத்தை கோப்பையில் ஊற்றி அவளிடம் நீட்டினாள், அமரேந்திரி! துர்தரா ரசத்தைக் குடித்து முடிக்கும் வரை அங்கே பூரண அமைதி நிலவியது. அவள் பட்டுத் துணியால் தனது வாயை நாசுக்காக ஒற்றியபடி தலைமைக் காவலனைப் பார்த்ததும், அவன் தனது கையை உயர்த்தினான். உடனே எல்லா புறாக் கூண்டுகளும் திறக்கப்பட்டன.

https://telegram.me/aedahamlibrary

புறாக்கள் வரிசையாகப் பறந்து மேல் எழும்பி அந்த நந்தவனம் முழுவதும் பந்தல் விரித்தது போன்று கூட்டமாகப் பறந்தன.

தனது கழுத்தில் வளையத்தை அணிந்துகொண்டிருந்த புறா, புத்தி பூர்வமாக கூட்டத்துடனேயே பறந்து கொண்டிருந்தது. சுற்றம் சூழ ஆளும் தலைவனுக்குப் பாதுகாப்பு அதிகம். சுற்றமும், குடும்பமும் இல்லாத தலைவனுக்கு எளிதாகக் குறி வைத்து வீழ்த்தி விடுவார்கள் அல்லவா?

வளையம் மாட்டப்பட்ட அந்தப் புறாவை நோக்கி அம்பை ஏவுவதற்கு தயங்கினார்கள், வீரர்கள். ஒருவன் எய்த அம்பு அந்தப் புறாவினை உரசுவது போன்று செல்ல, புறா மட்டும் அங்கே தப்பவில்லை. அம்பு எய்திருந்த அந்த வீரனும் மயிரிழையில் தப்பியிருந்தான். அந்த புறாவை அவனது அம்பு வீழ்த்தியிருந்தால், அந்த வீரனின் கதை அங்கேயே முடிந்திருக்கும். அதற்கு பதினாறு கசையடிகளை வாங்கிக்கொண்டு நிம்மதியாக வீடு போய்ச் சேரலாம்.

காலம் கடந்து போக, அந்தப் போர் வீரர்கள் கசையடியைப் பெறுவதற்காக வரிசையில் சென்று நிற்க, கட்டுமஸ்தான அந்த வாலிபர்களின் தேகத்தை ஒட்டகத் தோலினால் செய்யப்பட்டிருந்த அந்த சாட்டை, பிளக்க, துர்தரா குதூகலத்துடன் அந்தக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தாள். உப்பரிகையில் இருந்து தங்கையின் பொழுது போக்கு விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்த பிபத்த நந்தன், கீழே இறங்கி வந்து அவளை நோக்கி நடந்தான்.

"துர்தரா! முடிந்து விட்டதா உன் விளையாட்டு?” - பிபத்தன் கேட்டான்.

"என்ன செய்வது அண்ணா! நாட்டில் குறி வைத்து அம்பினை ஏவ ஆண்மகன் எவனும் இல்லை. உன்னையும் சேர்த்துதான் சொல்கிறேன்.! இப்படி துவக்கத்திலேயே தோல்வியை ஒப்புக்கொண்டு விடுகிறார்கள். விளையாட்டும் விரைவிலேயே முடிந்து விடுகிறது!"

"விளையாட்டு போதுமா?” என்பது போன்று காவல் தலைவன் இளவரசியை பணிவுடன், பார்க்க, துர்தரா அவனை ஏளனமாகப் பார்த்தாள்.

"புறாக்களைப் பிடித்து கூண்டில் அடைத்துவிடு காவலா!” - துர்தரா கூறியதும், புறாவை பழக்கி வந்த சிலர் ஓடி வந்து வாயில் ஒலி எழுப்பி,

https://telegram.me/aedahamlibrary

பறந்து கொண்டிருந்த புறாக்களைச் சேகரிக்கத் துவங்கினர்.

அப்போது மேக்னா என்கிற தோழி அங்கே தயக்கத்துடன் வந்து நின்றாள். துர்தராவை சற்றே அச்சத்துடன் நோக்கினாள்.

"இளவரசி! ஒரு வாலிபன் வந்திருக்கிறான். வளையம் மாட்டப்பட்ட புறாவை தன்னால் வெட்டி வீழ்த்த முடியும் என்று சவால் விடுகிறான். அரண்மனைக் காவலர் அவனை என்னிடம் அனுப்பியுள்ளார். அவனை அழைத்து வருவதா, இல்லை திருப்பி அனுப்புவதா தெரியவில்லை. தங்கள் உத்தரவுக்காகக் காத்திருக்கிறேன்!" பணிவுடன் மேக்னா கூற, துர்தராவின் இடப் புருவம் உயர, வலப் புருவம் சர்ப்பம் ஒன்று ஊர்வதுபோன்று நெளிந்தது.

"விளயாட்டு முடிந்து விட்டது என்று கூறிவிடு!" -- பிபத்த நந்தன் கூற, மேக்னா திரும்புவதற்கு யத்தனித்தாள்.

“சற்று பொறு, மேக்னா! நான் ஒருவள் மகதத்தில் இருக்கும்போது, சவால் விடவும் ஒரு வாலிபனுக்குக் குரல் எழும்புகிறதா? யார் அந்த வாலிபன்? அவனை அவசியம் காண வேண்டும். அழைத்து வா அவனை?" - துர்தரா கட்டளையிட மேக்னா அகன்றாள்.

புறாக்களைச் சேகரிக்கத் துவங்கிய பணியாளர்கள், தயக்கத்துடன் எடுக்கவோ, அடைக்கவோ என்பது போன்று காவல் தலைவனைப் பார்க்க, அவன் துர்தராவை நோக்க, அவனது பார்வையில் தொக்கியிருந்த கேள்வியினை உணர்ந்தவளாக, விலகி நில்லுங்கள் என்பது போன்று கையை உதற, அனைவரும் தலை பணிந்தபடி பின்வாங்கினார்கள்.

துர்தராவின் பார்வை சுழன்று கொண்டிருந்தாலும், மனம் வியப்பின் உச்சத்தில் ஆழ்ந்திருந்தது. இவளைப் பற்றி தெரிந்தவன், நிச்சயமாக சவாலை விடுத்திருக்க மாட்டான். கொடூரத்திற்குப் பெயர் போனவள் என்று இவளைப்பற்றி ஆங்காங்கே பேச்சுகள் உலவி வருவதை இவள் அறியமாட்டாளா என்ன? அந்தப் பேச்சு இந்த வாலிபனின் செவிகளில் விழாமல் போனதுதான் விந்தை? ஒருவேளை, இவன் வேறு தேசத்தைச் சேர்ந்தவனாக இருந்து, இவளைப் பற்றிய தகவல்களை அறியாமல் போயிருக்கலாம்.

பிபத்தன் தங்கையைப் பார்த்தான். "பாவம்! தானே வலிய வந்து

https://telegram.me/aedahamlibrary

உன்னிடத்தில் சிக்கிக் கொள்கிறான்!" பிபத்தன் சிரித்தான்.

"என்ன செய்வது! கையால் ஆகாதவர்கள் ஆண்கள்! ஆனால் வாய் சவடாலுக்குக் குறைவில்லை. உதாரணத்திற்கு நம் தந்தையை எடுத்துக் கொள், அண்ணா! நம் பாட்டனார் இறந்து பதினாறு ஆண்டுகள் ஆகி விட்டன. பாட்டனார் இறந்த வருடம் நான் பிறந்தேன். அப்போது முதல், அஸ்வமேத யாகம் செய்யப் போவதாகச் சொல்லி வருகிறார். அது வெறும் அறிவிப்பாகவே உள்ளது. கேட்டால், தேவ உடும்பரம் கிடைக்கவில்லை. யாக குதிரைக்கு உடல் நிலை சரியில்லை" என்று காரணங்களைக் கற்பித்து வருகிறார். வாய்ச் சொல்லில் வீரர்கள்தான் ஆண்கள். இதுவரை உண்மையான வீரனை நான் கண்டதில்லை!" என்று துர்தரா கூறிக்கொண்டிருக்கும் போதே நந்தவனத்தினுள் பிரவேசித்துக் கொண்டிருந்தான், சந்தா.

பொம்மை போன்ற தாதி மேக்னா அவனது இடைப்பகுதியின் உயரம் வரைதான் காணப்பட்டாள்! காட்டுவாசியான சந்தாவின் தேகத்தில் எவ்வித ஆபரணமும் இல்லை. கச்சமாக இறுகக் கட்டியிருந்த வேட்டி. மேல்துண்டை மறையவர்களின் வெண்புரிநூல் போன்று இடவலமாக குறுக்காகக் கட்டியிருந்தான். ஆனால் மன்னர்கள் அணிந்த ஆபரணங்களை விட, அவனது தேகத்திற்கு கம்பீரத்தைத் தந்தது, அவனது வலிமை.

மன்னர்களின் முக கவசத்தைக் காட்டிலும், உறுதியாகத் திகழ்ந்தது அவனது முகம். கூர்மையான நாசி. சிரசோடு அடங்கி தாமரை மலர்களாக விரிந்திருந்த செவிகள். அகன்ற கண்கள். அவற்றில் அலட்சியம். மேடான நெற்றி. அதில் மூன்றாம் பிறையாகத் திகழ்ந்த சந்தனம். வனவாசிகளுக்கு உரிய அடர்த்தியான மீசை. சிவலிங்கத்தைத் தாங்கிய பீடத்தைப் போன்று, அவனது சிரசு, அகன்ற தேகத்தில் புதைந்திருந்தது. கழுத்தில் புடைத்திருக்கும் நெல்லிக்கனியைப் போன்ற குரல்வளை. கைலாச கிரியைப் போன்று ஆஜானுபாகுவான தோற்றம். பதினெட்டு பிராயங்களை அதிகரித்துக் காட்டும் புடைத்த புஜபலம். பாரத பூமியில் ஆங்காங்கே ஓடிக்கொண்டிருக்கும் ஜீவநதிகளைப் போன்று, அவனது தேகத்தில் ஆங்காங்கே முறுக்கேறியிருந்த தசைகள் என்று தனது ஆண்மையின் கம்பீரத்தால், நந்தவனத்தில் குழுமியிருந்தவர்களை அசரச் செய்தான், சந்தா.

சந்தாவை முன்னால் போக விட்டு, மேக்னா ஒதுங்கிக் கொள்ள, கம்பீர காட்டு சிம்மமாக வந்து நின்றான், சந்தா. மன்னர்கள் செயற்கையாகக்

https://telegram.me/aedahamlibrary

காண்பிக்கும் ராஜ நடையல்ல அவன் நடை. நான் காட்டுக்கு அரசன்; எதற்கும் கலங்காதவன் என்பது போன்ற அவனது நடை துர்தராவினுள் எரிச்சலைக் கிளப்பியது.

இந்தக் குமரன் தனது கம்பீரத்தை காட்டி, கூட்டத்தினரை மயக்க முயல்கிறான். இவனை கேவலப்படுத்தி ஹிம்சிக்க வேண்டும் என்கிற எண்ணம்தான் முதலில் துர்தராவினுள் தோன்றியது.

அவனுடன் பேசுவது கூட இழுக்கு என்பது போன்று தனது அண்ணனை அவள் பார்க்க, பிபத்தன் தான் அவனை நோக்கிப் பேசினான்.

"வளையம் பூட்டிய புறாவினை வீழ்த்துவேன் என்று சவடால் பேசியவன் நீதானா?" - இளவரசன் கேட்டான்.

"தவறு! வீரர்களின் வாயில் உச்சரிக்கப்படும் சொற்கள் வீறாப்பு. சவலைகளின் வாயில் வரும் சொற்களே சவடால்! நான் வீறாப்புதான் பேசினேன். வளையம் பூட்டப்பட்ட புறா மட்டும் அல்ல, வளையம் போடாத, நீங்கள் சுட்டிக்காட்டும் எந்தப் புறாவையும் என்னால் வீழ்த்த முடியும்!" துர்தராவின் முகத்தை நோக்கியபடி பேசினான், சந்தா.

காட்டுவாசியான சந்தா உள்ளுக்குள் மலைத்துப் போயிருந்தான். முதன் முறையாக பேரழகு கொண்ட ஒரு பெண்ணைப் பார்க்கிறான். காட்டுவாசி பெண்கள் அழகாக இருந்தாலும், இயற்கையின் சூழ்நிலையிலே வாழக் கற்றுக் கொண்டு விட்டதால், அலங்காரக் கலையைப் பற்றி சிறிதும் அறியாதவர்கள். ஆனால் தொடர்ந்து பயிற்சி செய்து பெற்ற சக்தியைப் போல், தொடர்ந்து தீட்டப்பட்டு கூர்மையுறும் வாளைப் போல், தொடர்ந்து மனனம் செய்து பிரகாசிக்கும் வேத அத்யயனத்தினைப் போன்று, துர்தராவின் பேரழகு சுடர்விட்டுப் பிரகாசித்தது. ஆனால், அவளது மனதினுள் நுழைவது என்பது, பத்ம வியூகத்தை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று வெளியே வர இயலாத அபிமன்யுவின் கதையைப் போன்று முடிந்து விடும் என்பதை உடனேயே புரிந்து கொண்டான்.

“அப்படி உன்னால் வீழ்த்த முடியவில்லை என்றால்?” - முதன்முறையாக தனது பவளச் செவ்வாயை திறந்து துர்தரா பேச, விரிஞ்சி நதி பாறையில் மோதும்போது எழும் ஒலியைப் போன்று துர்தராவின் குரல் தோன்ற, அதனால் கிறங்கிப் போய் அவளைப் பார்த்தான்.

https://telegram.me/aedahamlibrary

"அவ்வாறு நான் புறாவை வீழ்த்தத் தவறிவிட்டேன் என்றால், எனக்கு பதினாறு கசையடிகள் போதாது. எனக்கு நூறு கசையடிகள் வேண்டும்!" --

பிபத்தன் திகைத்தான்! "எதற்கு நூறு கசையடிகளைக் கேட்கிறாய்?"

"இளவரசியார் நூறு ஆண்டுகள் வாழ வேண்டும் என விரும்புகிறேன். எனவே நூறு அடிகளைக் கேட்கிறேன்!" - சந்தா கூற, துர்தரா வாயடைத்துப் போனாள். சொற்களையே அம்பாக எய்து இவளை திணற அடிப்பவன், ஒரு வேளை சொன்னதைச் செய்து காட்டிவிடுவானோ?

"ம்ம்! புறாக்கள் பறக்கட்டும்!" - அவன் கூறியது தன்னை பாதிக்கவில்லை என்பது போன்று தலைமைக் காவலாளியைப் பார்த்து துர்தரா கட்டளை இட்டாள்,

வெண்புறாக்கள் பறக்கத் துவங்கின.

பறக்கும் புறாக் கூட்டத்தை நோக்கியபடி, தன்னிடம் நீட்டப்பட்ட வில்லினையும் அம்பையும் சந்தா பெற்றுக்கொண்டான்.

அவன் கேட்டுக்கொண்டதாலோ என்னவோ, வளையம் பூட்டியிருந்த புறாவைக் காணவில்லை. கூண்டினில் அடைத்து விட்டனரோ.

"எந்தப் புறாவினை அம்பெய்து வீழ்த்துவது?" என்பது போன்று துர்தராவைப் பார்த்தான். அவனது கம்பீரத்திற்கு முன்பாக தான் சிறுத்துப் போய்விடுவோமோ என்கிற அச்சம் முதன்முறையாகத் தோன்ற, தனது அண்ணனைப் பார்த்தாள், துர்தரா.

"அண்ணா! இத்தனை புறாக்கள் கூட்டமாகப் பறந்தாலும், எனது அந்தப்புரத்தில் இன்று காலை ஒரு புறாவுடன் நான் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தேன். நான் காலையில் கொஞ்சிய புறாவை அம்பெய்தி வீழ்த்தச் சொல்லுங்கள்!" - குதர்க்கத்துடன் கூறினாள், துர்தரா.

பிபத்த நந்தன் உட்பட அனைவருமே திகைத்துப் போயினர். துர்தரா அந்தப்புரத்தில் விளையாடிய புறாவை யாரால் அறிய முடியும்? அதனை வீழ்த்து என்கிறாளே. இந்த வாலிபன் நன்றாகச் சிக்கிக் கொண்டான்.

https://telegram.me/aedahamlibrary

துர்தராவின் குணத்தை அறிந்தும் இந்த விஷப்பரீட்சைக்கு தன்னையே ஆட்படுத்திக் கொண்டானே! சந்தாவின் மீது பரிதாபம் கொண்டனர், பலர்.

சந்தா கவுடில்யனை நினைத்துக்கொண்டான். “உன்னை நம்பித்தான் இங்கே வந்திருக்கிறேன் கவுடில்யா! உனது அத்திமலைத்தேவனை எனக்கு அருள் புரியச் சொல்!” என்றபடி கண்களை மூடி பிரார்த்தனை செய்தவன் மீண்டும் கண்களைத் திறந்தான்.

சந்தா அம்பினை வில்லில் பொருத்தியவன் திடீரென்று துர்தராவைக் கேள்வியுடன் நோக்கினான்.

"நான் அந்தப் புறாவை வீழ்த்தாவிட்டால், நூறு கசையடிகள் கிடைக்கும். சரி. அப்படி நான் வீழ்த்திவிட்டால், எனக்கு என்ன கிடைக்கும்!” - சந்தா கேட்க, பிபத்தன் துர்தராவைப் பார்த்தான்.

சட்டென்று விழித்துக் கொண்டாள் துர்தரா. இந்த மாதிரி இக்கட்டான நிலை தோன்றும்போதுதான் சாதாரண வீரர்களுக்கு பணயமாகி விடுகின்றனர், மாபெரும் இளவரசிகள்! வெறும் வீரத்தைக் காட்டி பொக்கிஷமாகப் போற்றப்படும் இளவரசிகளை அடிமைகளாக எடுத்துச் சென்று விடும் சாதாரண வீரர்களைப் பற்றி இவள் கேட்டிருக்கிறாள். அம்மாதிரி இவளது வாழ்க்கை பணயம் ஆகக்கூடாது.

நல்ல வேளை! இந்த வாலிபன் முன்பாகவே இந்தக் கேள்வியை எழுப்பினான். ஒரு வேளை புறாவை அடித்து, இவளையே பரிசாகக் கேட்டிருந்தால், பல அனர்த்தங்கள் நிகழ்ந்திருக்குமே.

“அம்பை எய்வதற்கு முன்பு உன்னை யார் என்று அறிமுகப்படுத்திக் கொள்!” -

துர்தரா கேட்டாள்.

“என்னைப் பற்றி கூறிக்கொள்ள எதுவும் இல்லை. நான் ஒரு காட்டுவாசி. என் பெயர் சந்தா. எனது தாயின் பெயர் அமரா!”

சந்தா இப்படிக் கூறியதும்தான் தாமதம். துர்தராவின் பின்பாக நின்றுகொண்டிருந்த அமரேந்திரியின் தேகம் நடுங்கத் துவங்கியது. சந்தாவின் கம்பீரமான தேகத்தில் தனது காதலன் உதயச்சந்திரனைக்

https://telegram.me/aedahamlibrary

காணத் துவங்கினாள். தன்னால் விரிஞ்சி காட்டில், குந்தியினைப் போன்று தூக்கி எறிந்த மகன்தான் கம்பீர கர்ணனைப் போன்று அங்கே நிற்கிறான் என்பதை உணர்ந்ததும் அவள் பதட்டம் அதிகரித்தது. இந்த ஆணவக்காரி அவனை என்ன பாடுபடுத்த போகின்றாளோ! காதலன் உதயச்சந்திரன் இவளை வாய் நிறைய அமரா என்றுதானே அழைப்பான்.

"காட்டுவாசியா! காட்டுவாசிக்கு பறவை பிடிப்பது என்ன பெரிய வேலையா. சரி முயன்று பார்! மறக்காதே. இன்று காலையில் நான் கொஞ்சிய புறாவினைத்தான் நீ வீழ்த்த வேண்டும்!" - துர்தராவின் குரலில் மிரட்டல் தொனித்தது.

"நான் வென்றால் கேட்பதைத் தர வேண்டும்!" - கவுடில்யன் கற்றுத்தந்த பாடத்தை ஒப்புவித்தான், சந்தா.

"கேட்பது தரப்படும்!" தான் அந்தப்புரத்தில் கொஞ்சிய புறாவினை இவனால் எப்படி அறிந்துகொள்ள முடியும் என்கிற துணிவில் கூறினாள், துர்தரா.

அடுத்த கணம், ---

சந்தாவின் வில்லினில் இருந்து புறப்பட்ட அம்பு ஒன்று, பறந்துகொண்டிருந்த புறாக்கள் கூட்டத்தினை ஊடுருவி, குறிப்பிட்ட புறா ஒன்றின் உடலைத் துளைக்க அந்தப் புறா சுழன்று தலைகீழாக நிலத்தில் வந்து விழுந்தது.

துர்தரா உறைந்து போனாள். அந்தப் புறாவினைத்தான் காலையில் தருவித்து அதனைக் கொஞ்சி விளையாடி, தனது கழுத்தில் தான் சூடியிருந்ததைப் போலவே, அதற்கு ஒரு சிறிய மகிழம் மாலையை அணிவித்து இருந்தாள். சரியாக அந்தப் புறாவினைத்தான் வீழ்த்தியிருந்தான், அந்தக் காட்டுவாசி.

துர்தரா வாயடைத்துப் போய் அமர்ந்திருப்பதைப் பார்த்து பிபத்தன் காவல் தலைவனைப் பார்க்க, இளவரசி தோல்வி அடைந்து விட்டாள் என்பதைக் கண்களால் அவளது அண்ணனுக்குத் தெரியப்படுத்தினான், அவன்.

"அதுதான் இளவரசி அந்தப்புரத்தில் விளையாடிக் கொண்டிருந்த புறா

https://telegram.me/aedahamlibrary

என்று எங்ஙனம் அறிந்தாய்?” - பிபத்தன் வியப்புடன் கேட்டான்.

“தங்கள் சகோதரியைப் போலவே, அந்த வெண்புறாவும் மகிழம் ஹாரத்தை அணிந்திருந்தது. வேறு எந்தப் புறாவுக்கும் அங்ஙனம் அணிவிக்கப்படவில்லை. அதனை வைத்தே யூகித்தேன்!” சந்தா துர்தராவை வெற்றி கொண்ட களிப்பில் அவளை ஆழமாகப் பார்த்தபடி கூற, துர்தராவுக்கு பிடரி சில்லிட்டது.

கேட்டதைக் கொடுப்பேன் என்று கூறி விட்டாளே! இவளையே பரிசாகக் கேட்டுவிட்டால்? ஒரு வனவாசியுடன் காடு மேடுகளில் இவள் திரிய வேண்டியதுதானா?

“வாலிபனே! நீ வேண்டுவதைக் கேள்!” - பிபத்தன் கேட்டான்.

சந்தா துர்தராவை உறுத்துப் பார்த்தான், உன்னைத் தான் கேட்கப்போகிறேன் என்பது போல. துர்தராவுக்கு வாய் உலர்ந்து போனது. அப்படி இவளைக் கேட்டு விட்டால், காவலர்களை அழைத்து இவனை சிறையில் தள்ள வேண்டியதுதான். கொடூரம் நிறைந்தவள் என்கிற பெயரோடு சொன்ன சொல் தவறியவள் என்கிற அபவாதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அபவாதத்தை சுமந்து கொண்டு வாழலாம், இந்தக் காட்டுவாசியுடன் போவதைக் காட்டிலும்!

அனைவரின் கவனமும் சந்தாவின் மீதே இருக்க, அவனது கவனம் முழுவதும் துர்தராவின் மீதே இருந்தது.

“எனக்கு இளவரசிதான் வேண்டும்!” என்கிற சொல்லைக் கேட்பதற்குத் தயாரான நிலையில் துர்தரா இருந்தாள்.

சந்தா நிதானமாக அவளை நோக்கி விட்டுப் பிபத்தன் பக்கம் திரும்பினான்.

“இளவரசே! எனக்கு உங்கள் நட்பு வேண்டும். உங்களது மெய்க்காப்பாளனாக நான் திகழ வேண்டும்!" சந்தா கூற, அனைவருக்குமே வியப்பு.

அவன் தன்னைக் கேட்காமல் அண்ணனின் நட்பை கேட்கிறான் என்றதும், நிம்மதி பெருமூச்சு ஒன்றைத்தான் விட நினைத்தாள் துர்தரா. ஆனால், "உன்னை அலட்சியம் செய்து விட்டேன் பார்த்தாயா?” என்பது

https://telegram.me/aedahamlibrary

போன்று அவள் புறம் நையாண்டி பார்வை ஒன்றை சந்தா வீச, அதனால் அவளது உள்ளத்தில் ஆத்திரத்தீ பரவியது.

"எங்கே நீ இளவரசியின் கரத்தை கேட்டு விடுவாயோ என்று நான் நினைத்தேன்!" பிபத்தன் கூற, சந்தா சிரித்தான்.

"மதிப்பான பொருளைத்தான் நான் எப்போதும் கேட்பேன் இளவரசே. உங்களது நட்புக்கு சமமாக நான் வேறு எதையும் கருதவில்லை!" சந்தா கூற, அவனை நோக்கிச் சென்ற பிபத்தன் சந்தாவை அணைத்துக் கொண்டான். அண்ணனை அணைத்தபடி தங்கையை நோக்கி ஏளனப் புன்னகை ஒன்றை வீசினான், சந்தா.

கவுடில்யனின் முதல் பாடத்தை அங்கே அரங்கேற்றி விட்டான் சந்தா. தானநந்தாவின் செல்வங்களிடையே ஒரு விரிசலை உண்டாக்கி விட்டான். முகம் சிவக்க உக்கிரத்துடன் அவனையே வெறித்துக்கொண்டிருந்தாள் துர்தரா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 16. தூண்டிலில் சிக்கிய மீன்

புஷ்பபுர மாளிகையின் வாயுமூலை பகுதியில்தான் பிபத்த நந்தனின் அறையும் அதனைச் சார்ந்த மண்டபமும் இருந்தது. அறையின் உள்ளே. பிபத்தன் வெளியே புறப்படுவதற்கு ஆயத்தங்களை செய்துகொண்டிருந்தான்.

“விரிஞ்சி காட்டினில் எனது குரு இருக்கிறார். உன்னை உலகம் போற்றும் சக்கரவர்த்தியாகத் திகழ வைப்பதற்கு ஆவன செய்வார். நீ ஒரு முறை அவரை தரிசிக்க வேண்டும்!” - மிகத் தந்திரமாக வலையை விரித்தான், சந்தா.

“அப்படியா? அவரை நான் நிச்சயம் தரிசிக்க வேண்டும்! எனது தங்கை ஆண்களை, குறிப்பாக என்னை ஆற்றலற்றவன் என்று கேலி செய்கிறாள். அது மட்டுமா? இந்த நாட்டின் மன்னனாக இருக்க நான் தகுதியற்றவன். தானே இந்த நாட்டினை ஆளப்போவதாகக் கூறுகிறாள்! எனது ஆற்றலை அவள் புரிந்துகொள்ள வேண்டும்! அண்ணனாகிய எனக்கு அவள் உரிய மரியாதையை செலுத்த வேண்டும். உனது குருவால் இதனைச் செய்ய முடியுமா?” - பிபத்தன் கேட்டான்.

“இது என்ன பிரம்ம வித்தை? இதைவிட பெரிய காரியங்களை எல்லாம் ஆற்றுவார். அவரிடம் நீ தீட்சை பெற்றுவிட்டால், துர்தரா என்ன, உனது தந்தையாலேயே உன்னை எதிர்க்க முடியாது!” சந்தா கூறினான்.

'எப்படியாவது, பிபத்த தேவனை விரிஞ்சி காட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து விடு!' என்று கவுடில்யன் இவனுக்குக் கட்டளையிட்டிருந்தான். எனவேதான் மானுக்கு வலை விரிப்பது போன்று, பிபத்தனை வசப்படுத்த சொல்வலை பின்னிக்கொண்டிருந்தான், சந்தா.

“இதோ நான் நொடியில் தயாராகி விடுகிறேன்!” என்று தனது ஆடைகளை மாற்றுவதற்கு அவன் முற்பட, சந்தா அந்த அறையை விட்டு வெளியே வந்து, அதன் வாயிலில், பிபத்தனுகாகக் காத்திருந்தான். சரியாக, அவனது காதில் நூபுர மணிகளின் கிண்கிணி ஒலி கேட்டது. துர்தரா தான் தனது அண்ணனின் அறையை நாடி வந்து கொண்டிருந்தாள்.

https://telegram.me/aedahamlibrary

சந்தா தனது தேக்கு மரத்தைப் போன்ற கரத்தை அறை நுழைவாயிலின் குறுக்காக வைத்தான். அறையை நெருங்கிய துர்தரா, சந்தா வழியை மறித்துக்கொண்டு நிற்பதைக் கண்டதும் சினம் கொண்டாள். அவள் முகத்தில் செம்மை ஏறுவதை வியப்புடன் பார்த்து ரசிக்கத் துவங்கினான் சந்தா. அவனுக்கு இது ஒரு புதிய அனுபவம். பெண்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிட்டாதவன். அதுவும் பேரழகி ஒருவளை இவ்வளவு நெருக்கத்தில் பார்த்ததும், அவனது இதயத்தில் ஒருவித தடுமாற்றம்.

“வழியை விடு! எனது அண்ணனுடன் நான் முக்கியமாகப் பேச வேண்டும். எனது பாதையை மறிப்பதற்கு நீ யார்?” - ஆணவம் அவளது குரலில் பெருகி ஓடியதை சந்தா இலட்சியம் செய்யவில்லை.

"உங்களது புறாவைக் கொன்று தானே, உங்கள் அண்ணனின் நட்பைப் பெற்றேன். அவனது மெய்க்காவலன் நான். என்னைக் கடந்து யாரும் உள்ளே போகக்கூடாது!” - சந்தா குரலில் கடுமையைக் காட்டினான்.

“மூடனே! ஒரு இளவரசியிடம் பேசுவது எப்படி என்று கற்றுக்கொள்!” - துர்தரா கூப்பாடு போட்டாள்.

“இளவரசிக்கும் இங்கிதம் தேவை. ஒரு ஆண் அவன் கூட பிறந்த சகோதரனே ஆனாலும் கூட, அவரது ஏகாந்தத்திற்கு பங்கம் விளைவிக்கக் கூடாது. இளவரசர் தனது ஆடைகளை மாற்றிக்கொண்டு இருக்கிறார். இந்நேரத்தில் உங்களை உள்ளே அனுமதிக்க மாட்டேன்!” - பிடிவாதமாகக் கூறினான், சந்தா.

சினம் கொள்ளும்போது ஒரு பெண்ணுக்கு இன்னும் அழகு கூடுமா என்ன! துர்தராவினுள் உக்கிரம் அதிகரிக்கத் துவங்க, அவளது கண்கள் இன்னும் அதிகமாக விரிந்தன. செவி நுனிகள் துடிதுடித்தன. கோபத்தில் அவளது செவ்விதழ்கள் கோணியபோது, முதல் தடவையாக அவனுள் ஒரு கிறக்கம். துர்தரா மட்டும் இனிமையாக உரையாடினால் அவளுடன் பேசிக்கொண்டே இருக்கலாமே. இந்தப் பேரழகியுடன் எதற்காக குரு கவுடில்யன் பகைமை பாராட்டுகிறார்? சற்றே இவளுக்கு அறிவுப்பாடம் புகட்டிவிட்டால் போதுமே. பணிவுடன் நடந்து கொள்வாளே.

சந்தா தன்னையே வெறித்துப் பார்ப்பதைக் கண்டதும், மேலும் ஆவேசம் அடைந்தாள், துர்தரா.

“ஒரு இளவரசியை அப்படி வெறித்துப் பார்க்காதே. காட்டுவாசியான நீ

https://telegram.me/aedahamlibrary

எப்போது அரண்மனை வாழ்க்கையின் நாகரீகங்களை அறியப் போகிறாய்? காட்டில் மரம் விட்டு மரம் தாவிக்கொண்டிருக்க வேண்டிய ஜந்துக்கள் எல்லாம் அரண்மனையில் நடமாடினால் இப்படித்தான் நடந்து கொள்ளும்!” - துர்தராவின் கூரிய நாக்கு அவனை விளாசித் தள்ளியது.

அதுவரை அவளது பேரழகால் ஈர்க்கப்பட்டு, தனது குரலில் மென்மையைக் காட்டிக் கொண்டிருந்த சந்தா, அவள் தன்னைக் கேவலமாகப் பேசுவதைக் கேட்டதும் தனது பொறுமையை இழந்தான். ஒரு காட்டுவாசிக்குரிய வீரம் அவன் உடலில் திமிறிக்கொண்டு எழ, கோபத்துடன் அவளை நோக்கி இரு அடிகளை முன் வைத்தான். "காட்டில் ஒரு முறை நான் உறங்கிக் கொண்டிருந்த போது நச்சுப் பாம்பு ஒன்று என்னைச் சுற்றி வளைத்தது. ஒரே கரத்தினால், அதன் வாயை நசுக்கினேன். அதன் விஷப்பல் தானாகவே உதிர்ந்து விழும்வரை அதன் வாய் பகுதியை நசுக்கிக் கொண்டிருந்தேன். மீண்டும் இன்று ஒரு நாகம் நஞ்சைக் கக்குகின்றது.” - சந்தா இவ்வாறு கூறியதும், துர்தராவினால் தனது கோபத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

அருகிலிருந்த மலர்க்கொத்துகளை ஏந்தி நின்ற பூச்சாடி ஒன்றை கையில் எடுத்து அவனது சிரசின் மீது மோத முயன்றாள். ஆனால் அவளது கை உயர்வதற்குள்ளாகவே தனது இரும்புக்கரத்தினால் அவளது கரத்தைப் பற்ற, அந்த வலிமையான பிடியால் ஏற்பட்ட வலியை பொறுக்க மாட்டாமல் அவள் கதறியபடி ஜாடியை நழுவ விட்டாள். வெள்ளியினால் செய்யப்பட்டிருந்த ஜாடி உருண்டோடியது.

அவர்களிடையே ஏற்பட்ட அந்த ஸ்பரிசம், இருவரின் உடலிலும் புதிய உணர்வுகளைத் தோற்றுவித்திருந்தது. ஒரு வலிமையான ஆணின் உறுதியான கரத்தால் முதன்முறையாக தீண்டப்படுகிறாள், துர்தரா. அவளுக்கு இது ஒரு புது அனுபவத்தைத் தந்தது. சந்தாவும் முதன்முறையாக ஒரு இளங்குமரியின் ஸ்பரிசத்தை உணர்கிறான். அவனுக்கும் இது புதிய அனுபவமே.

ஆனால்---

அந்தப் புதிய அனுபவத்தை சிலாகிக்க முடியாமல், இருவரது மனங்களும் கோபத்தில் திளைத்திருந்தன.

“ஒரு ஆண் எப்போதும் ஒரு பெண்ணிடம் முழு வலிமையைக்

https://telegram.me/aedahamlibrary

காட்டுவதில்லை. இது எனது முழு வலிமையல்ல. உன்னைத் துன்புறுத்தக்கூடாது என்று எச்சரிக்கையுடன் நான் பிடிக்கும் பிடி. இதற்கே... நீ பூச்சாடியை தவற விட்டாய். எனது முழு வலிமையைக் காட்டியிருந்தால், உனது தேகம் இந்த ஜாடியைப் போன்று உருண்டிருக்கும். மலர்க்கொத்துகள் சிதறியது போல், உனது அழகிய முகமும் சிதறுண்டு போயிருக்கும். ஒரு ஆடவன், அதுவும் காட்டுவாசியின் கோபத்தைத் தூண்டாதே!" - என்றபடி தனது பிடியைத் தளர்த்தினான் சந்தா.

அந்த ஒரு க்ஷணத்தில் வலி பொறுக்க மாட்டாமல் கையை உதறினாள், துர்தரா.

சந்தா பற்றியிருந்த கையை மற்றொரு கையால் வருடியபடி, அவனைப் பார்க்க, அவளையும் அறியாமல், அவள் கண்களில் மருட்சி தோன்றியது.

கொடூரமான பெண்களை இளக வைப்பது ஒரு ஆணின் கண்களில் தென்படும் துயரம். வலிமையான ஆண்களை இளக வைப்பது ஒரு பெண்ணின் கண்களில் தோன்றும் மருட்சி. பேரழகியான துர்தராவின் கண்களில் முதன்முறையாக பிரதிபலித்த மருட்சி சந்தாவை உலுக்கி விட்டது. தனது உறுதியான கை அவளது கையை நோகடித்துவிட்டது என்று அவனது உள்ளத்தில் தோன்றி விட, கவுடில்யனின் வார்த்தைகளை மறந்தான்.

"சந்தா! அவள் பெண்ணல்ல. நாலு வகை பெண்களில் நாலாவது வகையான மதன பயங்கரி! கூடிவிட்டு, கூடிய ஆணையே தாக்கிக் கொல்லும் தேள் வகையைச் சேர்ந்தவள். கூடிய ஆணையே கடித்து விழுங்கும் கரும்சிலந்தி வகையைச் சேர்ந்தவள். அவளை காதலிப்பது போல் நீ நடிக்கவேண்டுமே தவிர, அவளை உண்மையாகவே காதலித்து விடாதே. அவளது காதல் வலையில் நீ சிக்கிக்கொண்டால், நமது சாம்ராஜ்யக் கனவுகள் நாசமாகி விடும்!" மீண்டும் மீண்டும் பாடம் போதித்து சந்தாவின் சிந்தையை தன் வசப்படுத்தி இருந்தான், கவுடில்யன். ஆனால்---

துர்தராவின் மருண்ட விழிகள் கவுடில்யனின் போதனைகளை ஒரு கணத்தில் மறக்கடிக்கச் செய்துவிட்டன.

அறையின் கதவு திறக்க, சந்தா மீண்டும் இரண்டடி பின்பாக நடந்து, ஒன்றுமே நடவாதது போன்று முகத்தில் பணிவினைத் தேக்கி

https://telegram.me/aedahamlibrary

வைத்தான்.

"அண்ணா! முழுமூடனா நீ? ஒரு காட்டுவாசியை மெய்க்காப்பாளனாக வைத்திருக்கிறாயே. அரண்மனை நாகரீகம் தெரியவில்லையே! இங்கே என்ன நடந்தது... என்பதை பார்!" சிதறிக் கிடந்த மலர்க்கொத்துகளையும், பூச்சாடியையும் சுட்டிக் காட்டினாள், துர்தரா.

பிபத்தன் அவனைக் கேள்வியுடன் பார்க்க, சந்தா அவனை பணிவுடன் நோக்கினான்.

"இளவரசே! வருங்கால மன்னர் நீங்கள். நான் உங்கள் மெய்க்காவலன். இளவரசியார் பூஜாடியை கையில் எடுத்து உயர்த்திப் பிடித்தபடி நிற்க, நான் அவர் தங்களை தாக்கக்கூடுமோ என்கிற அச்சத்தில் அவர் கையிலிருந்த ஜாடியைத் தட்டி விட்டேன். அவர் உங்களுக்கு சகோதரியாக இருக்கலாம். ஆனால் நான் வருங்கால மன்னரின் மெய்க்காவலன். தாங்களே, உங்கள் சகோதரியிடம் மலர் ஜாடியைத் தந்து தங்கள் தலையை தாக்கச் சொன்னாலும், நான் அதற்கு அனுமதிக்க மாட்டேன்!" - சந்தா ஓரக்கண்ணால் துர்தராவின் முகபாவத்தை நோட்டம் விட்டபடி சொல்ல, அவளுக்கு கொதிப்பு உண்டானது.

“மூடனே! உன்னை அந்தக் காட்டுவாசி வாய்ஜாலம் செய்து ஏமாற்றுகிறான். அதனை ரசித்துக்கொண்டு இருக்கிறாயே. இவனை அரண்மனையை விட்டு விரட்டு!" துர்தரா அலறினாள்.

"துர்தரா! உன் அண்ணனாக நான் இருந்தாலும், வருங்கால மன்னன். சந்தா கூறுவது ஒருவிதத்தில் நியாயமே. தங்கையிடம் பாசத்தைக் காட்டுவதில் கூட, ஒரு மன்னன் எச்சரிக்கையை கையாள வேண்டும் என்று சந்தா சற்று முன்தான் கூறினான். அதுவும் உன்னைப் போன்ற ஆற்றலும், துணிவும், புத்திக்கூர்மை மிக்க தங்கையுடன் பழகும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சந்தா கூறினான். இனி நான் அவன் சொற்படிதான் நடக்கப் போகிறேன்.! நீ வா சந்தா! நாம் சென்று உனது குருவை தரிசிப்போம்!" - பிபத்தன் நடக்க, சந்தா துர்தராவை குறும்புப் பார்வை பார்த்தான்.

“உன் சகோதரனை என் வசப்படுத்தி விட்டேன். அடுத்தது நீதான்! உன்னையும் அடிமைப்படுத்துவேன்!" -- என்கிற செய்தியை தன் பார்வையின் மூலம் அவளுக்கு உணர்த்த, கண்களின் உரையாடலைப் புரிந்து கொள்ளும் திறனைக் கொண்டிருந்த துர்தரா, அவனது அந்தப்

https://telegram.me/aedahamlibrary

பார்வையைக் கண்டதும், முதன்முறையாக தன்னிடமே அச்சம் கொண்டாள். இந்த வனவாசியின் வலிமைக்கும், ஆர்ப்பாட்டத்துக்கும் இவள் வசப்பட்டு அவனிடம் சரணாகதி அடைந்து விடுவாளோ. இல்லை. நிச்சயம் மாட்டாள். இவனைக் கொன்றாவது இவள் தனது சுயகவுரவத்தை நிலைநாட்டிக் கொள்வாள்.

கோபத்துடன் உப்பரிக்கைக்கு ஓடிச் சென்றாள். அதற்குள்ளாக அவர்கள் இருவரும், படியிறங்கி மைதானத்திற்குச் சென்று, தயாராக நின்றிருந்த புரவிகளை நெருங்கி விட்டனர்.

"மதி கெட்டவனே! சற்றேனும் யோசித்தாயா? உடன் பிறந்த எனது பேச்சை கேட்காமல், நேற்று வரை அறிமுகமில்லாத ஒரு காட்டுவாசி கூறுவதை கேட்கின்றாயே. வருங்காலத்தில் மன்னன் ஆகும் ஆசை வேறா உனக்கு? இந்தக் காட்டுவாசியுடன் காட்டுக்கே போ. நான் நாட்டை ஆளுகிறேன்!" என்று உப்பரிகையில் இருந்து புரவிகளில் ஏறிக்கொண்டிருந்த அவர்களை நோக்கி அலறினாள்.

“இளவரசே! புறப்படுங்கள்!” - கட்டளையாக சந்தா கூற, பிபத்த நந்தன் மௌனமாக அங்கிருந்து புறப்பட்டான். துர்தரா செய்வதறியாது அவர்கள் சென்ற திக்கில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இளவரசே! பெண்களிடம் யோசனை கேட்கக் கூடாது. அப்படிக் கேட்டாலும் அந்த யோசனைகளை பின்பற்றக் கூடாது. ஏன் தெரியுமா? ஆணின் மூளை தேங்காயின் மட்டையைப் போன்று உறுதியானது. பெண்களின் மூளை பலாப்பழத்தின் உள்பகுதியைப் போன்று பிசினுடன் கூடியது. தாங்கள் கூறும் யோசனையை பின்பு தாங்களே மறுத்துக் கூறுவார்கள்! ஒரு நாழிகையில் நாற்பது யோசனைகளைக் கூறிவிட்டு, பிறகு மீண்டும் முதல் யோசனையே சிறந்தது என்பார்கள். இதற்குக் காரணம் சகதியைப் போன்று அவர்களின் மூளை தளர்வு கொண்டது. எல்லாவற்றையும் கிரகித்துக்கொண்டு ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கும்!” சந்தா கூறினான். அவர்கள் விரிஞ்சி காட்டினை அடைந்தார்கள்.

"நீ இதுவரை உனது தங்கையின் யோசனைகளைக் கேட்டு நடந்து வந்தாய் என்பதே வருங்கால மன்னனான உனக்கு இழுக்கு. தாய், தந்தை, தங்கை பாசம் எல்லாம் சாமானியர்களுக்கு மட்டுமே. மன்னனுக்கு அல்ல. பெற்ற மகனை தசரதன் காட்டுக்கு அனுப்பவில்லையா? அங்கே பாசம் எங்கே போனது. மனைவி மீது

https://telegram.me/aedahamlibrary

உள்ள நேசம்தானே நிலைத்தது. பாசம் என்று கூறிக்கொண்டு உனது தங்கையின் சேலை முந்தானையில் உன்னை நீயே முடிப்போட்டுக் கொள்ளதே. நாளை அவள் அரியணையில் ஏறி அமர்ந்தால், உனது பாசம் உன்னை கட்டிப்போட்டு விடும்." கவுடில்யன் நீண்ட உரையாடல் மூலம் பிபத்தன் துர்தராவின் மீது கொண்டிருந்த பாசத்தை வற்றச் செய்து கொண்டிருந்தான்.

கவுடில்யனைக் கண்டதுமே, பிபத்தன் அவனை இனம் கண்டு கொண்டான். தங்களால் அவமதிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்ட வேதியக் குமரன் அவன் என்பதை உணர்ந்தான். சந்தாவின் போதனையால் அவன் மீது கொண்டிருந்த கோபம் மறைந்து போய், நேசம் பிறந்திருந்தது.

துர்தராவின் அழகிய வதனம், சந்தாவின் முன்பாக நிழலாடியது. எவ்வளவு அழகான பெண்! அவளது கரத்தைப் பற்றிய போது, பூங்கொத்தைத் தொடுவது போன்று எவ்வளவு சுகமாக இருந்தது. நகத்தால் கிள்ளி எறிய வேண்டிய இளவரசியின் அகம்பாவத்தை எதற்காக கோடாலியினால் பிளக்க நினைக்கிறார், குரு கவுடில்யர். தனது கண்கள் துர்தராவின் மீது தான் காட்டும் ஆர்வத்தினை பிரதிபலித்து, கவுடில்யனிடம் தன்னை காட்டிக் கொடுத்து விடப்போகிறதே என்கிற கவலையில், முகத்தில் பொய்யாகக் கடுமையை வரவழைத்தான்.

"நீங்கள் சொல்வது சரியே, குரு! இப்போது நான் புறப்பட்டு வரும்போது கூட, தான் அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்யப்போவதாகக் கூறினாள் துர்தரா!"

"யார் கண்டார்கள்? உனது தந்தைக்கே அப்படி ஒரு எண்ணம் இருக்கிறதோ என்னவோ. நீ மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், பிபத்தா. நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். நீ இன்று முதல் உன்னை மன்னனாக நினைத்துக்கொள். நான் எனது ஆட்களுடன் அரண்மனையை முற்றுகை இடுகிறேன். நீ கடைசி தருணத்தில் உன்னை மன்னனாக அறிவித்துக்கொண்டு உனது தந்தையை சிறையில் அடைத்துவிடு. நான் ராஜதந்திரியாகவும், சந்தா பிரதம அமைச்சராகவும், அபேயன் தளபதியாகவும், உன்னைச் சுற்றி இருப்போம். நீ மகத ராஜ்யத்தை பரிபாலனம் செய்து, மக்களை சுகமாக வாழ வைக்கலாம்!"

https://telegram.me/aedahamlibrary

கவுடில்யன் தூண்டிலைப் போட, உடனே சிக்கிய மீனாக மாறினான், பிபத்தன்.

"குருவே! எனக்கு இன்னும் இருபது பிராயங்களே பூர்த்தியாகவில்லை. என்னால் மன்னன் ஆக முடியுமா?" - பிபத்தன் கேட்டான்.

"பத்து வயதிலே, வேமுல மன்னனையே, எனது விருப்பப்படி ஆட்டி வைத்திருக்கிறேன். அறிவுத்திறனுக்கு பிராயக் கணக்கு கிடையாது, பிபத்தா. தேகத்திற்குத் தான் அந்தக் கணக்கு!" -

"மன்னனை பதவியிறக்க, ஆள் பலம் வேண்டாமா?" அபேயன் கேட்டான்.

"எனது அறிவுபலம் போதும், அபேயா! ஆள் பலம் எதற்கு? நீ என்ன செய்கிறாய், பிபத்தா! நாளை இரவு, ஊர் அடங்கியதும் மன்னர் அறைக்குப் போ. உறங்கிக் கொண்டிருக்கும் உனது தந்தையின் நெஞ்சுக்குழியில் வாளை வைத்து, உன்னை மன்னராக அறிவிக்கும் சாசனத்தில் கையொப்பம் இடச்சொல். உனது பெற்றோர் மற்றும் சகோதரியை அரண்மனைக் காவலில் வைத்துவிட்டு, அந்த சாசனத்தை என்னிடம் கொடு. மிகுதியை நான் பார்த்துக் கொள்கிறேன்! நீ செய்ய வேண்டியது அவ்வளவே!" - கவுடில்யன் கீழ்க் கண்ணால் அவனைப் பார்த்தான்.

"அவ்வளவுதானா! நான் இதைச் செய்தால் மட்டும் போதுமா?" - பிபத்தன் வியப்புடன் கேட்டான்.

"இதுவே அதிகம். என்னைப் பொறுத்தவரைக்கும், உனது தந்தை, உங்கள் நாட்டு பிரதம அமைச்சர் மற்றும் ஜோதிடர் எவருக்குமே சிந்திக்கும் திறன் இல்லை. அரசரவையில் தலை அறிவாளியாக இருந்தால் போதும், மற்றவர்கள் அறிவிலிகளாக இருக்கலாம். உங்கள் நாட்டு அமைச்சரவையில் எல்லோருமே மதிகெட்டவர்கள்!" - கவுடில்யனின் குரலில் கோபம் கொப்பளித்தது.

"இது நல்ல யோசனை, இளவரசே! உடனே செயலில் இறங்குங்கள்!" - சந்தா கூறினான். கூடியவரையில் கத்தியின்றி, இரத்தமின்றி தானநந்தாவையும் அவன் குடும்பத்தையும் பதவி இறக்கினால் நன்றாக இருக்கும். குறிப்பாக பேரழகி துர்தராவின் எழில்மேனியில் ஒரு கீறல் கூட விழக்கூடாது. அவளது கையை பற்றிய தனது கையை ஒருமுறை

https://telegram.me/aedahamlibrary

நோட்டம் விட்டான். எவ்வளவு மென்மையாக இருந்தாள். மீண்டும் அவளை தீண்டும் பாக்கியம் கிட்டுமா? இவன் இப்படி நினைப்பது தெரிந்தால், கவுடில்யன் கடிந்து கொள்வான். இருப்பினும், துர்தராவை மறக்க முடியாமல், தவித்தான் சந்தா.

“நான் சொல்வதை கவனமாகக் கேள் பிபத்தா! நீ உனது தந்தையின் அறைக்குள் நுழைந்து எங்களை உள்ளே அனுமதித்தால் போதும். நாங்கள் சாசனத்துடன் வருகிறோம். அவனிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டு அவனை அவனது அறையிலேயே சிறை வைப்போம். அந்த சாசனத்தை பிரகடனப்படுத்தி உடனே உனது பட்டாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்வோம். எப்படியும் மக்கள் தந்தையின் மீது அதிருப்தி கொண்டிருக்கிறார்கள்; எனவே, உனது பட்டாபிஷேகத்திற்கு பெரிதாக எதிர்ப்பு கிளம்பாது.” - கவுடில்யன் கூறினான்.

அவனது திட்டத்தை ஏற்றுக்கொண்டு விட்டதற்கு அடையாளமாக, பிபத்தநந்தன் தலையசைத்தான்.

“சரி சந்தா! நீயும் இளவரசனும் அரண்மனைக்குத் திரும்புங்கள்!” என்று கவுடில்யன் கூறி முடித்திருக்க மாட்டான்...

“அச்சக்கு! அச்சக்கு!” ---

தொடர்ந்து இரு தும்மல்கள் எழ, அனைவருமே திடுக்கிட்டனர்.

"அபேயா! யார் என்று பார்?” - கவுடில்யன் உத்தரவிட, சந்தாவும், அபேயனும் சுற்றி வர, நரி ஒன்று செடி ஒன்றை முகர்ந்தபடி நின்றுகொண்டிருந்தது. சற்றே நிம்மதியுடன் வந்த வழியே திரும்பினர், இருவரும்.

“ஒன்றும் இல்லை, குருவே! ஒரு குள்ள நரிதான் மோப்பம் பிடித்தபடி சென்றுகொண்டிருக்கிறது.”

மறுநாள் இரவு ---

இடையில் சொருகிய வாளோடு தனது தந்தையின் அறையை நோக்கி நடந்தான் பிபத்த நந்தன். தந்தையின் ஆட்சியின் மீது பரவலான அதிருப்தி இருப்பதை அவன் அறிந்திருந்தான். ஒரு முறை மகா பைரவர் கோவிலுக்குச் சென்ற போது, சிலர் ஆலயத்தின் வாயிலில் கூடி,

https://telegram.me/aedahamlibrary

“இளவரசே! மன்னரின் கொடுங்கோல் ஆட்சியால் அவதிப்படுகிறோம். அவரை நல்லாட்சி வழங்கச் சொல்லுங்கள். இல்லையேல் தாங்கள் மன்னராக பதவி ஏற்றுக்கொள்ளுங்கள்!” - என்ற கூக்குரல்கள் இன்னும் அவனது செவிகளில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றன. "பாசம், அன்பு, நேசம், எல்லாம் மன்னர் குடும்பத்திற்கு தேவை இல்லாத குணங்கள்!" என்றெல்லாம் கவுடில்யனால் மூளைச்சலவை செய்யப்பட்டதில், தனது நிலை மறந்து வாளுடன் தந்தையின் அறையை நோக்கி நடக்கத் துவங்கினான்.

மன்னரின் பள்ளியறை வாயிலில் இரு காவலர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். இவன் வருவதைக் கண்டதும், பணிவுடன் ஒதுங்கி நிற்க, பிபத்தன் அவர்களை பரிதாபமாகப் பார்த்தான்.

“இன்னும் சில வினாடிகளில் இவர்கள் உயிரை இழக்கப் போகின்றனர். இவர்களை இப்போது உயிருடன் பார்க்கும் நான், அறையை விட்டு வெளியே வரும்போது இவர்கள் பிணமாகக் கிடப்பார்கள். ஆட்களுடன் வரும் சந்தாவும், அபேயனும், இவர்களைக் கொன்று விடுவார்கள்!” - என்று நினைத்தபடி அறையினுள் நுழைந்தான், பிபத்தன்.

அறையினுள் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தனர், தானநந்தாவும் பத்மாங்கியும். அறையின் கதவை உட்புறமாகத் தாளிட்ட பிபத்தன், தனது வாளை உருவியபடி மன்னனை நோக்கி நடந்தான். அதன் கூர் பகுதியை மன்னனின் நெஞ்சுக் குழியில் பதித்து அவனை எழுப்பும் எண்ணத்துடன் மஞ்சத்தை நெருங்கினான், பிபத்தன்.

மன்னனை நோக்கி குனிந்தபோது, சரியாக அவனது பிடரியில் ஒரு அழுத்தம். திகைப்புடன் பிபத்தன் திரும்ப, துர்தராதான் கையில் வாளுடன் அவனை இகழ்ச்சியாகப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

“எழுந்திருங்கள் தந்தையே! நான் கூறியபோது நம்பினீர்களா? பாருங்கள்! உங்களைக் கொல்லத் துணிந்து விட்டான்!” - துர்தரா கூறினாள்.

தந்தையும், தாயும், உடனே மஞ்சத்தில் எழுந்து அமருவதைக் கண்டு நடுங்கிப் போனான் பிபத்தன்.

"பொய்! தந்தையைக் கொல்ல வரவில்லை. என்னை மன்னனாக அறிவிக்கும் சாசனத்தில் கையொப்பம் வாங்கவே வந்தேன். உங்களை

https://telegram.me/aedahamlibrary

சிறையில் தள்ள மட்டுமே திட்டமிட்டோம்!” - பிபத்தன் நடுக்கத்துடன் கூறினான்.

இதைத்தானே எதிர்பார்த்திருந்தாள் துர்தரா. அண்ணனை அச்சுறுத்தினால், அவன் திட்டத்தைப் போட்டு உடைத்து விடுவான். இவள் அதை கூறுவதை விட, அவன் வாயாலேயே அவர்களது சதியை நிரூபிக்க வேண்டும் என்றுதானே அவன் மீது கொலைப் பழியை சுமத்தினாள்.

தானநந்தா கடுமையுடன் அவனைப் பார்த்தான். "பெற்ற தந்தைக்கு எதிராகவே சதி செய்யத் துணிந்தாயா?” -

“எல்லாம் அந்தக் காட்டுவாசியின் சகவாசம். விரிஞ்சி காட்டில் அந்த கபட வேதியன் நீ, மற்றும் அந்த வனவாசி தீட்டிய சதித்திட்டம் எங்களுக்கு எப்படித் தெரியும் என்று நீ கேட்கவேயில்லையே, அண்ணா?” - துர்தரா சிரித்தாள்.

பிபத்தன் அவளை திகைப்புடன் நோக்கினான்.

“காட்டில் இரு தும்மல் ஒலி கேட்டிருக்குமே! எனது ஒற்றன் தும்மல் துஷ்யகிரிதான் உங்களைத் தொடர்ந்து வந்தான்.” துர்தரா கூற, அவளது சாதுர்யம் அவனை மலைக்க வைத்தது.

பத்மாங்கியின் கண்களின் முன்பாக கவுடில்யனின் உருவம் நிழலாடியது. எந்த பிராமணனுக்கும் இல்லை என்று சொல்லாதே. உன் குலம் அழியும் என்ற பைராகியின் குரலும் செவிகளில் ஒலிக்க, கணவனை திகிலுடன் பார்த்தாள்.

“இப்போது என்ன செய்வது துர்தரா?” - தானநந்தா மகளைக் கேட்க, பிபத்தன் பதைபதைப்புடன் தந்தையை பார்த்தான். தான் தந்தையின் மனதில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டோம், இனி துர்தராதான் எல்லாம் என்பது அவனுக்குப் புலப்பட்டு விட்டது.

புலியின் வாலைப் பிடித்து விட்டோம். இனி புலியின் பின்பாகத்தான் செல்ல வேண்டும். இனி அவனுக்கு தந்தையின் பாசம் கிடைக்காது. பாசத்தோடு அரியணையும் கிடைக்கப் போவதில்லை.

"சற்று பொறுங்கள். இன்னும் சில வினாடிகளில், அந்தக் காட்டுவாசி,

https://telegram.me/aedahamlibrary

திட்டம் போட்ட அந்த வேதியன் மற்றும் தாதி கீர்த்திமதியின் மகன் அபேயன் ஆகியோர் இங்கே வர உள்ளனர். சதிகாரர்களை கூண்டோடு பிடிப்போம். நமது ஆட்களை தயாராக நிற்க வைத்திருக்கிறேன்!”

துர்தரா கூறிக்கொண்டிருக்கும்போதே, அறைக்கதவு பிளந்து விழ, ஆக்ரோஷத்துடனும், ஆவேசத்துடனும் நின்றிருந்தனர், சந்தாவும், கவுடில்யனும்.

சந்தா உள்ளே ஆர்ப்பாட்டத்துடன் வந்து பிபத்தனை தனது பக்கம் இழுத்தான்.

"எங்களை வரவேற்பதற்காக நீ நிறுத்தி வைத்திருந்த ஆட்கள் சிலரைக் கொன்று விட்டேன். மற்றவர்கள் என்னுடன் சேர்ந்து விட்டனர். தானநந்தா! விரைவில் உனது மகன் மகத சிம்மாசனத்தை அலங்கரிப்பான்!” கவுடில்யன் கூற, தானநந்தா உறைந்து போனான்.

“சந்தா! பிபத்தனை அழைத்து வா!” - என்று சொல்லியபடி கவுடில்யன் வெளியேற, சந்தா அலட்சியமாக ஒரு கையினால் அவனைத் தூக்கிக் கொண்டு தனது தோளினில் சரித்துக்கொண்டு, துர்தரா பக்கமாகப் பார்த்தான். அதே பார்வை.

"உன் அண்ணனைத் தூக்கிச் செல்கிறேன். அடுத்தது நீதான்!” என்கிற பொருள் தொனிக்கும் அதே பார்வை.

தனது கையில் ஏந்தியிருந்த வாளை உயர்த்தக்கூட தோன்றாமல் ஸ்தம்பித்து நின்றிருந்தாள் துர்தரா. கணவன் தானநந்தாவின் தோளினை பற்றிய அரசி பத்மாங்கியின் தேகம் நடுங்கிக்கொண்டிருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 17. கண்களைத் திறக்காதே!

"மன்னா! விரிஞ்சி காட்டில்தான் அந்த கவுடில்யன் தனது முகாமை அமைத்திருக்கிறான்.! நமது இளவரசர் பிபத்த நந்தரும் அவனது கட்டுப்பாட்டில்தான் இருக்கிறார். படைகளைத் திரட்டிக் கொண்டிருக்கும் அவர்கள், நமது ஆட்சியைக் கைப்பற்றி பிபத்த நந்தரை மன்னராக அறிவிக்க திட்டம் தீட்டியுள்ளனர்." - ஒற்றன் சேகரித்து வந்த தகவல்களை மன்னன் தானநந்தாவிடம் ஒப்புவித்துக் கொண்டிருந்தார், தலைமை அமைச்சர், ஹரஹரதேவ்.

“இப்போது என்ன செய்யலாம்?” - மன்னன் கேட்டார்.

"நீங்கள் செய்கிறேன் என்று உமது தந்தையாரிடம் வாக்களித்து இன்னும் நிறைவேற்றாத அஸ்வமேத யாகம் செய்யாததால்தான், தங்களுக்கு எதிராகவே இளவரசர் புரட்சி செய்கிறாரோ என்னவோ. எதற்கும் யாகத்தை பூர்த்தி செய்து விடுங்கள்!” மிஸ்ரபானு தனது ஜோதிட பணியைச் செய்தார்.

“ராணி பத்மாங்கியோ, அந்த பைராகி சொன்னதை எண்ணி இரவு, பகலாக உறக்கம் இன்றித் தவிக்கிறாள். எந்த பிராமணனுக்கு நான் இல்லை என்று சொல்கிறேனோ அவனால் எனது குலம் அழியும் என்றாரே, அந்த பைராகி. கவுடில்யனுக்கு இல்லை என்று சொன்னேன். அவன் ராஜதந்திரி பதவியை அல்லவா கேட்டான். தகுதிக்கு மீறிய ஆசையல்லவா?” - மன்னன் தனது செய்கைக்கு நியாயம் கற்பித்தான்.

"ஆனால் அவனது நடவடிக்கைகள் ஒரு சிறந்த ராஜதந்திரியின் தன்மைகளைத்தான் கொண்டிருக்கின்றன. மகனையே தந்தைக்கு எதிராகத் திருப்பி விட்டானே!” - மனதினுள் நினைத்தார், மிஸ்ரபானு. மன்னனிடம் கூற முடியுமா? உமிழ்நீரை விழுங்கியபடி, மன்னரின் அடுத்த கட்டளைக்காகக் காத்திருந்தார்.

"ஜோதிடரே! இப்போது உடனே அஸ்வமேத யாகத்தைச் செய்ய முடியும் அல்லவா?” - மன்னன் கேட்டான்.

“செய்து விடலாம், அரசே. நான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்!"

https://telegram.me/aedahamlibrary

ஆனால் - மிஸ்ரபானு தயங்கினார்.

"அஸ்வமேத யாகம் செய்யும் மன்னன் காப்பு கட்டிக்கொள்ள வேண்டும். யாகம் செய்வதற்கு முன்பாக அங்குரார்ப்பணம் செய்து தேவர்களை திருப்தி செய்து யாகத்துக்கு அவர்களை அழைக்க வேண்டும். அட்ட திக்கு பாலகர்களையும் பந்தனம் செய்ய வேண்டும். அதற்கு தாங்கள்; ஓரிரவு ஆலயத்தில் தங்கி அக்னி வளர்க்க வேண்டும்!" - மிஸ்ரபானு கூறினார்.

"அவ்வளவுதானே. நாளை குறித்து விடுங்கள். நான் காப்பு கட்டிக் கொள்கிறேன். தலைமை அமைச்சரே! உடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விடுங்கள். மக்களுக்கு அறிவிப்பினையும் செய்து விடுங்கள்!”

“ஹரஹரரே! அஸ்வமேத அறிவிப்போடு இன்னொமொரு அறிவிப்பினையும் செய்யுங்கள்! என்னை இருமுறை சந்தித்த பைராகியை மீண்டும் நான் சந்திக்க விரும்புவதாக பட்டி தொட்டியெங்கும் அறிவிப்பினை செய்யுங்கள். அவரது நல்லாசியை இந்த தருணத்தில் நான் பெற வேண்டியது, மிகவும் அவசியம்!” - தானநந்தா கூற, தலைமை அமைச்சர் தலையசைத்தார்.

தானநந்தனுக்கு அஸ்வமேத யாகத்தை பூர்த்தி செய்தால், தான் பலம் பொருந்தியவனாகி விடுவோம் என்கிற எண்ணம் தோன்றி விட்டது. அதற்கு முன்பாக, அந்த பைராகியின் ஆசியைப் பெற வேண்டும் என்று நினைத்தான். அறிவிப்புகளை உடனே தண்டோரா அடித்து மூலைமுடுக்குகளில் எல்லாம் பரவச்செய்தான்.

மறுநாளே அஸ்வமேத யாகத்தைத் துவக்கி, ஹோமம் வளர்த்து காப்பினை கட்டிக்கொண்டான். மிகவும் சிரத்தையுடன் நியமங்களை கடைப்பிடித்து முதல் நாள் அங்குரார்ப்பணம் செய்து தேவ, திக் பாலகர்களையும், நவக்கிரகங்களையும் வழிபட்டான்.

முதல் நாளது நியமங்கள் முடிந்து, மகாதேவர் ஆலயத்தில் மன்னரை மட்டும் விட்டுவிட்டு, அனைவரும் வெளியேறத் தொடங்கினர்.

மிஸ்ரபானு மன்னனிடம் கிசுகிசுத்த குரலில் கூறினார்.

"மன்னா! இன்றிரவு முழுவதும் தாங்கள் கண்ணுறங்கக் கூடாது.

https://telegram.me/aedahamlibrary

ராஜ்யலட்சுமியின் அருள் பெற, நான் தங்களுக்கு போதித்த லட்சுமி தந்திரம் என்னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே இருக்க வேண்டும். முதல் தடையாக தங்களை உச்சரிக்க விடாமல் தேவதைகள் சோதிப்பார்கள். என்ன சத்தம் கேட்டாலும் தாங்கள் உச்சாடனத்தை நிறுத்தக்கூடாது. எனது குரலிலோ, அரசியாரின் குரலிலோ அல்லது இளவரசியின் குரலிலோ கூட தேவதைகள் தங்களது உச்சாடனத்தைத் தடுக்கப் பார்க்கும்! தாங்கள் கண்களைத் திறக்காமல் உச்சாடனம் செய்துகொண்டே இருங்கள்! நாளை உதயத்தில் நான் தங்களது தர்ப்பை புல்லினால் செய்யப்பட்ட காப்பினை அவிழ்த்து ஸ்வர்ண காப்பினை மாற்றுவேன். அப்போது தாங்கள் உச்சாடனத்தை நிறுத்தி கண்களைத் திறக்கலாம்!" - மிஸ்ரபானு கூற, மன்னன் தலையசைத்தான்.

"உச்சாடனம் தடைபட்டால், யாகமே தடைபட்டது போல்தானே! நான் அறிவேன்! எச்சரிக்கையை கடைப்பிடிக்கிறேன்!" தானநந்தா கூறினான்.

பத்மாங்கியும், துர்தராவும், மன்னனை வணங்கிவிட்டுப் புறப்பட, அனைவரும் ஆலயத்தை விட்டு வெளியேறினர். தலைமை அமைச்சரும் மன்னனைப் பணிவுடன் வணங்கிவிட்டுப் புறப்பட எத்தனித்தபோது, ஒருவன் ஓடி வந்து அவரது காதில் கிசுகிசுக்க, ஹரஹரதேவ்வின் முகம் மலர்ந்தது.

புஷ்பகாரா என்கிற புத்த கயையின் பிக்கு ஒருவர், இரகசியமாக மன்னனது அஸ்வமேத யாகத்திற்கு தேவ உடும்பர சமித்துகளை அனுப்புவதாகக் கூறியிருக்கிறாராம். பூர்ணாஹுதிக்குள் அந்த சமித்துகளைச் சேகரித்து அனுப்புவதாக அவர் கூறியிருப்பதால், தானநந்தாவின் அஸ்வமேத யாகம் எவ்விதக் குறையுமின்றி நடக்கும் என்று ஹரஹரதேவ் கூற, மன்னனின் மனம் உற்சாகம் அடைந்தது.

"யாகம் முடிந்ததும், படை திரட்டும் அந்த பார்ப்பனக் குமரனை தண்டித்து, தனது மகனை மீட்டு, இதர நாடுகளுக்கு திக் விஜயம் செய்து, மன்னர்களைப் பணிய வைத்து, மகத தேசத்தை காஷ்மீரம் வரையில் பரவச்செய்து, தந்தை மகாபத்ம நந்தாவை விட புகழ் பெற வேண்டும்!" என்கிற தீர்மானத்துடன், ராஜ்ய லக்ஷ்மி தேவியை உபாசிக்கத் துவங்கினான்.

பிரதம அமைச்சர் ஆலயத்தை விட்டு வெளியேறியதும், மகாதேவர் ஆலயக் கதவுகள் மூடப்பட்டன. -

https://telegram.me/aedahamlibrary

நடுநிசி... ---

ஆலயத்தின் எண்ணெய் தீபங்கள் அணைந்துவிட, எங்கும் இருள் பரவியிருந்தது. மன்னன் அமர்ந்திருந்த யாகசாலையில் மட்டும் தீப்பந்தம் ஒன்று ஒளிர்ந்து கொண்டிருந்தது. கடுங்குளிர் அந்த ஆலயத்தின் உறுதியான சுவர்களை துளைத்துக்கொண்டு ஆலயம் முழுவதும் பரவ, யாகசாலையில் முந்தைய நாள் வளர்க்கப்பட்ட அக்னியின் தீட்சை மன்னனை குளிர் தாக்கி விடாதபடி வெம்மையை யாகசாலையில் நிலவச் செய்தது.

ராஜ்யலட்சுமி தந்திரத்தை முதலில் குரல் விட்டு உச்சரித்தவன், பிறகு உச்சாடனத்தில் ஆழ்ந்து போய், மனதிற்குள் உருபோடத் துவங்கினான். ஒரு நிலையில், தேகம் லேசாகிப் போக, அவனது உணர்வுகள் அனைத்தும் மந்திர உச்சாடனம் செய்யும் சிந்தையுள் ஒடுங்க, தான் ஒரு மன்னன் என்பதையோ, தான் மகாதேவரின் ஆலயத்தில் இருப்பதையோ உணராமல், ராஜ்ய லக்ஷ்மியின் திருவடிகளை மட்டுமே உபாசித்துக் கொண்டிருந்தான்.

அப்போது ---

க்ளங்... க்ளங் என்று தண்டையின் ஒலி துல்லியமாகக் கேட்டது. அந்த தண்டைகளை அணிந்திருந்த கால்கள் மெதுவாக யாகசாலையை நோக்கி நகரத்தொடங்கின.

மன்னன் தன்னையே மறந்த நிலையில் உச்சாடனத்தில் ஆழ்ந்திருந்தான். தண்டைகளின் ஒலி யாகசாலையை நெருங்கி நின்றது.

“தானநந்தா! நான்தான் பைராகி வந்திருக்கிறேன். என்னை எதற்காக அழைத்தாய்?” - அகோரியின் குரல் ஒலித்தது. அந்த குரல் பூரண அமைதி நிலவிக் கொண்டிருந்த அந்த யாகசாலையில் அதிர்வுகளை ஏற்படுத்தி, அந்த அதிர்வுகளை மன்னனின் செவிக்குள் புகுத்தின. செவி, வாய், கண் மூக்கு, உடல் என்கிற ஐம்புலன்களையும் பந்தனம் செய்து, கருத்தினில் பிணைத்து அந்தக் கருத்தை ராஜ்யலக்ஷ்மி வசம் தந்திருந்தான்.

உச்சாடனத்தின் போது எந்தக் குரல் கேட்டாலும், உச்சாடனத்தை நிறுத்தாதே. கண்களையும் திறக்காதே! ---

என்கிற பெரிய தாரக மந்திரத்தைக் கொண்டு மனதைக் கட்டி, உள்ளே

https://telegram.me/aedahamlibrary

ராஜ்யலக்ஷ்மிக்கான மந்திரங்களை உலவ விட்டிருந்தான், தானநந்தன்.

"தானநந்தா! பைராகி வந்திருக்கிறேன். தண்டோரா போட்டு என்னை அழைத்தாயே... என்ன காரணம்?" மீண்டும் அந்தக் குரல் கேட்டது. முதல் முறை விடுத்த குரல் கணை மன்னனின் செவிகளுக்குள் பிரவேசிக்க முடியாமல் நழுவிப்போனது என்பதை உணர்ந்து மீண்டும் அவனிடம் கேட்டது அந்தக் குரல்.

இம்முறை மன்னனின் சிந்தையினுள் சிறு சலனம். தேகத்தின் ஒன்பது வாயிற்கதவுகளில், செவிப்புறக் கதவை யாரோ தட்டுகிறார்கள் என்று சிந்தை எச்சரித்தது. ராஜ்யலக்ஷ்மியின் திருவடிகளில் கிடந்த அவனது சிந்தை சற்றே திரும்பி நோக்கியது. பிறகு எழுந்து செவிப்புற வாயிலை நோக்கி நகர்ந்தது.

"பைராகி வந்திருக்கிறேன்... பைராகி வந்திருக்கிறேன். நீ தண்டோரா போட்டதால் வந்திருக்கிறேன்!" - என்று மீண்டும் மீண்டும் குரல் கேட்க, அவனது சிந்தை தன்னிடம் பிணைக்கப்பட்டிருந்த ஐம்புலன்களையும் விடுவித்தது. அவ்வளவுதான்! அந்த ஐம்புலன்களும் இலாயத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட புரவிகளாகப் பாய்ந்து தத்தம் இடங்களுக்குப் பெயர்ந்தன.

செவிகளின் தாள் திறக்க, பைராகியின் குரல் தற்போது உள்ளே புகுந்து மன்னனின் உணர்வுகளைத் தன் வசப்படுத்தின. உச்சாடனம் செய்யும் வாய், அதனை நிறுத்திவிட்டு அந்தக் குரலுக்கு பதில் பேசத் தயாரானது. கண்கள் திறந்து குரலுக்குரியவனைக் காண விழைந்தது. நாசி அந்த பைராகியின் சுடலைப்பொடி சுகந்தத்தை நுகர எத்தனித்தது. உடல் அந்தக் குரலுக்குரிய பைராகியை வணங்க சித்தமானது.

பைராகி வந்துவிட்டார் என்கிற உணர்வு, அவனுள் பரபரப்பை தோற்றுவிக்க, கண்களைத் திறந்து, அவரை நோக்குவதற்காகத் திரும்பினான்.

அந்தச் சிறிய யாககாலையில் நிழலாக நின்றிருந்தார், பைராகி. இல்லை.... இல்லை! சுளுந்தின் ஒளியில், இவனது நிழல்தான் அந்த யாகசாலை முழுவதும் வியாபித்து இருந்தது. இவனது நிழல் தவிர வேறு நிழல் அங்கே தென்படவில்லை.

துணுக்குற்ற மன்னன், யாகசாலையின் வாயிலை நோக்கினான். களங்

https://telegram.me/aedahamlibrary

களங் என்று தொடர்ந்து சதங்கை சத்தம் ஒலிக்க, யாரோ ஓடிச்செல்லும் ஒலி.

பைராகிதான் வந்து விட்டார். குதூகலத்துடன் அவசரமாக யாகசாலையை விட்டு நீங்கி சதங்கையொலி கேட்ட, ஆலயத்தின் பின்புறம் நடந்தான். ஆனால் அதன் பிறகு சதங்கை ஒலியும் கேட்கவில்லை. அந்த பைராகியையும் பார்க்கவில்லை. ஆலயத்தை பலமுறை சுற்றி வந்துவிட்டான், மன்னன்.

எங்குமே பைராகியைக் காணவில்லை.

மிஸ்ரபானு விடுத்திருந்த எச்சரிக்கை நினைவுக்கு வர, மன்னனுக்கு வியர்த்துக்கொட்டியது. தேவதைகள், யார் குரலில் வேண்டுமானாலும் பேசும். அஸ்வமேத யாகத்தைச் செய்பவரின் மனவுறுதியை சோதிக்க இங்ஙனம் பல குரல்களில் பேசித் தடைகளை உருவாக்கும். யாகம் செய்பவர் அசந்து விடாமல், மந்திர உச்சாடனத்திலேயே ஆழ்ந்திருக்க வேண்டும்... இது அஸ்வமேத யாகம் செய்பவர்களுக்குண்டான விதி. தேவர்களுக்கே சவால் விடும்படி மானிடர்கள் யாகங்களைச் செய்யும்போது, இம்மாதிரி தடைகளை ஏற்படுத்துவார்கள் தேவர்கள். தங்கள் நிலைக்கு ஒருவன் வரும்போது, அவனுக்கு சோதனைகளைச் செய்து தங்களுடன் அமர்வதற்கு தகுதி உடையவன்தான் என்று சோதிக்க மாட்டார்களா என்ன?

முதல் சோதனையிலேயே தான் தோல்வியுற்றோம் என்பதனை தானநந்தாவால் ஜீரணிக்க முடியவில்லை. தொடர்ந்து நடைபெற்ற யாக வேள்விகளின் போது மன்னன் தானநந்தா உற்சாகம் வற்றி சிரத்தை இன்றி கடமைகளைச் செய்வதைக் கண்டு, பத்மாங்கி, ஹரஹரர் மற்றும் மிஸ்ரபானு மூவருமே திகைத்தனர்.

பைராகியின் கூற்றுப்படி கவுடில்யன் கேட்டதை இல்லை என்று கூறியதால் தன் குலம் நசித்து விடுமோ... என்கிற கேள்வி மன்னன் தானநந்தாவின் இதயத்தில் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 18. கவுடில்யனின் கணக்கு

விரிஞ்சி காடு ---

இளவரசன் பிபத்த நந்தன், காட்டுவாசி சந்தா, மற்றும் போர்வீரன் அபேயன் மூவருமே கவுடில்யனையே வெறித்து நோக்கிக்கொண்டிருந்தனர். அவர்களது பார்வைகளை இலட்சியம் செய்யாமல், தனது துணி மூட்டையில் இருந்த தேவ உடும்பர அத்தி மரத்தின் பாகத்தில் இருந்து ஒரு சிதிலை உடைத்து தாயத்து ஒன்றைச் செய்துகொண்டிருந்தான், கவுடில்யன்.

“என்ன செய்கிறாய், கவுடில்யா?” - சந்தாதான் கேட்டான்.

கவுடில்யன் மௌனம் சாதித்தான். தனது காரியத்திலேயே கண்ணாக இருந்தான்.

பிபத்தன் கவுடில்யனை வியப்புடன் நோக்கினான். சாதாரண பிராமணச் சிறுவன். அழுக்கு படிந்த பூணூல் மற்றும் வேட்டியை தவிர அவனது தேகத்தில் ஒன்றுமே இல்லை. இருப்பினும் அவனது முகத்தில் தேஜஸ் ஒளிர் விடுகிறதே. இதற்கு என்ன காரணம். தனது தேகத்தை அலங்கரித்துக் கொள்வதிலோ, சுத்தம் செய்வதிலோ கவுடில்யன் அதிக கவனம் செலுத்துவதில்லை என்பதை கவனித்திருந்தான் அவன். தனக்கு தேகமே இல்லை, வெறும் சிந்தை மட்டுமே உள்ளது என்பது போல்தான் அவன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான்.

திடீரென்று ---

முந்தைய இரவு, தான் அணிந்திருந்த தண்டைகளை கவுடில்யன் வாங்கி அணிந்து கொண்டது நினைவுக்கு வந்தது. காரணத்தை கேட்டபோது, பிறகு கூறுவதாக தெரிவித்திருந்தான். தண்டைகள் ஒலிக்க, அவன் முந்தைய இரவு எங்கோ கிளம்பிச் சென்றதையும் பிபத்தன் அறிந்திருந்தான்.

"கவுடில்யா! நேற்றிரவு எனது தண்டைகளை அணிந்து கொண்டு எங்கே சென்றாய்?” - பிபத்தன் கேட்டதும், மீண்டும் நீண்ட மௌனம்தான் கவுடில்யனிடம் இருந்து புறப்பட்டது.

"கவுடில்யா! தானநந்தா... மும்முரமாக அஸ்வமேத யாகத்தைச்

https://telegram.me/aedahamlibrary

செய்துகொண்டிருக்கிறான். ஒரு வேளை, அவனது அஸ்வம் விரிஞ்சி காட்டினுள் நுழைந்தால், அதனைப் பிடித்து வைத்து, அவனுடன் போர் புரியலாமா?"

அபேயன் கேட்டான்.

அவனது கேள்விக்கும் கவுடில்யன் பதில் கூறவில்லை.

ஏனைய மூவரும் ஒருவரையொருவர் பார்க்க, கவுடில்யன் மட்டும் அந்த மரத் துண்டினில் தாயத்து செய்யும்வரை பேசவில்லை. பின்பு திருப்தி கலந்த புன்னகை ஒன்றை உதிர்த்தான்.

பிறகு, தன்னைச் சுற்றி அமர்ந்திருந்த மூவரையும் ஏறிட்டுப் பார்த்தான்.

"நான் உங்கள் கேள்விகளுக்கு பதில் கூறாத காரணமே, ஒருவரின் கேள்விக்கு மற்றவர் பதில் கூறி விட்டீர்கள். எனது காரியத்தை குலைத்துக்கொண்டு நானும் உரையாடுவானேன்... என்று வாளாயிருந்து விட்டேன்!" - அலட்சியமாகக் கூறினான், கவுடில்யன்.

மற்ற மூவரும் குழப்பத்துடன் அவனை நோக்கினர்.

"புரியவில்லை, கவுடில்யா!" - சந்தா கூறினான்.

"முதலில் சந்தா நீ தான் என்னை கேள்வி கேட்டாய். என்ன கேள்வி கேட்டாய்?" ---

கவுடில்யன் கேட்டான்.

"நீ என்ன செய்கிறாய் என்று கேட்டேன்?"

கவுடில்யன் சிரித்தபடி தனது கையில் இருந்த தேவ உடும்பர அத்தி மரத்தினால் தான் செய்திருந்த தாயத்தைக் காட்டினான்.

"இது சக்தி வாய்ந்த தேவ உடும்பர தாயத்து. இதை அணியும் மன்னன் உலகையே ஆள்வான். நான் நியமிக்க இருக்கும் மகத மன்னன் அணிந்து கொள்வதற்காக இதனைத் தயாரித்தேன்!" - கவுடில்யன் கூறியதும் பிபத்த நந்தனின் முகம் மலர்ந்தது.

உனது கேள்விதான் அபேயன் கேள்விக்கு பதில். அபேயா! என்னிடம் நீ

https://telegram.me/aedahamlibrary

என்ன வினாவை எழுப்பினாய்? - கவுடில்யன் கேட்டான்.

"மன்னன் தானநந்தா அஸ்வமேத யாகத்தைத் துவக்கி விட்டான். அவனது அஸ்வம் நமது விரிஞ்சி காட்டு வழியே செல்லும்போது அதனை கைப்பற்றி அவனுடன் போருக்குப் போகலாமா என்று கேட்டேன்." - அபேயன் கூறினான்.

“நல்ல கேள்வி, அபேயா! ஆனால் அதற்கு தேவை இருக்காது. ஏன் என்றால் தானநந்தா செய்யும் அஸ்வமேத யாகத்திற்கு பலன் இல்லை. முதல் நாளே யாகத்திற்கு தடை உண்டாகிவிட்டது. அஸ்வம் வரும் வரை நாம் காத்திருக்கப் போவதில்லை. அதற்கு முன்பாகவே, நாம் திரட்டியுள்ள படைகள் புஷ்பபுரத்தின் மீது படை எடுத்துச் செல்லப்போகின்றன!" -- கவுடில்யன் பிறகு பிபத்த நந்தனின் பக்கம் திரும்பினான்.

“பிபத்தா! உனது கேள்விதான் அபேயனின் கேள்விக்கு பதில். நீ என்ன கேட்டாய்?” - கவுடில்யன் அவனது முகத்தை கூர்ந்து நோக்கினான்.

"எனது தண்டைகளை இரவல் வாங்கிக்கொண்டு நடுநிசியில் எங்கே சென்றாய்?” என்பதுதான் எனது கேள்வி!” - பிபத்தன் கேட்டான்.

"அனைவரும் கவனியுங்கள். உங்கள் கேள்விகளுக்கான பதில்தான் நமது எதிர்காலத் திட்டம்! தானநந்தா அஸ்வமேத யாகத்தைச் செய்யத் தொடங்கிவிட்டான். அஸ்வமேத யாகத்தைச் செய்பவன் சகல வளங்களையும், சர்வ வல்லமையையும் படைத்து உலகத்தை ஆள்வான். தேவ உடும்பர சமித்துகள் இந்த யாகத்திற்கு அவசியம் தேவை. அதனை புஷ்பகாரா என்கிற புத்த பிட்சு எடுத்து வருவதாக அபேயன் ஒற்றர்கள் மூலம் அறிந்து என்னிடம் வந்து சொன்னான். உடனேயே மன்னன் செய்யும் யாகத்தை குலைக்க முடிவு செய்தேன். புஷ்பகாரா விரிஞ்சி காட்டின் வழியே வரும்போது, அவரது துணி கட்டில் இருந்து தேவ உடும்பரங்களை அபகரித்து ஆல குச்சிகளை மாற்றி வைத்தேன். அதோடு, யாகத்திற்காக மன்னன் ஆலயத்தில் இரவினை கழித்து ராஜ்யலக்ஷ்மி தந்திரம் என்கிற மந்திரத்தை இரவெல்லாம் உச்சரிக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். தானநந்தா, மகாதேவர் ஆலயத்தினுள் மந்திர உச்சாடனம் செய்யப் போவதை அறிந்தேன். சரியாக, மன்னன் பைராகியை தான் சந்திக்க விரும்புவதாக தண்டோரா போட்டான். எனவேதான், பிபத்த நந்தனின் தண்டைகளை இரவல் வாங்கி அணிந்துகொண்டு நடுநிசியில் மகாதேவர் ஆலயத்தின் மதில்

https://telegram.me/aedahamlibrary

ஏறிக் குதித்து, பைராகியைப் போன்று குரல் கொடுத்து, மன்னனின் தியானத்தை குலைத்தேன். இனி அஸ்வமேத யாகம் செய்து பயனில்லை. நாம் படை எடுத்துச் செல்ல சரியான தருணம். வரும் வெள்ளிக் கிழமை யாகத்தின் பூர்ணாஹூதி நடைபெற உள்ளது. அன்றுதான் நாம் படைகளுடன் புஷ்பபுரத்தினுள் நுழைகிறோம்." - கவுடில்யன் கூற அதிர்ந்து போன நிலையினில் இருந்தனர், மற்ற மூவரும்.

வாளின் கூர்மையைவிட, கவுடில்யனின் சிந்தை இன்னும் கூராக உள்ளதே. அவனது மூளை எவ்வளவு வேகமாகச் சுழல்கின்றது. நடந்தது, நடக்கின்றது மற்றும் நடக்கப் போவது மூன்றையுமே யூகித்து திட்டம் தீட்டுகிறான். மிக நுண்ணிய தகவல்களையும் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளும் அவனது சாதுர்யம் சந்தாவை வியப்பினில் ஆழ்த்தி விட்டது.

இவனுடன் இருந்தால் நிச்சயம் நானே அடுத்த மகத மன்னன். தந்தை காலத்திற்குப் பின் மகன் என்கிற முறையில் பதவிக்கு வருவதால் என்ன சிறப்பு? தந்தையையே வென்று வீழ்த்தி பதவிக்கு வந்தவன் என்று நாளைய சரித்திரம் இவனைப் போற்றும். - என்று பிபத்தன் எண்ணத் துவங்கினான்.

நானே அடுத்த தளபதி. யார் கண்டார்கள்? மூவரில் இவனைக்கூட கவுடில்யன் மன்னனாகத் தேர்ந்தெடுக்கலாம். அவனது அபிமானத்தைப் பெற்று, மற்ற இருவரைவிட தானே அவனுக்குப் பிரியமானவன் என்கிற நிலையை உண்டாக்க வேண்டும். - இவ்வாறு கணக்கு போட்டான், அபேயன்.

ஆனால் ---

கவுடில்யனின் கணக்கு வேறு விதமாக இருந்தது. இந்த மூவரில் தனக்கு அடிமையாக, தனது திட்டங்களுக்கு தலையாட்டும் பொம்மையாக யார் இருக்கப் போகிறார்கள் என்பதை யோசித்தபடி அவர்களை நோட்டம் விட்டான்.

"நீங்கள் மூவரும் என்னிடம் கேள்வி கேட்டீர்கள். ஆனால், நான் யாருக்கும் பதிலை தராமல், அமைதியாக எனது பணியைச் செய்துகொண்டிருந்தேன். தியானத்தில் இருந்த தானநந்தா தனது ஆழ்நிலை தியானத்தில் இருந்து மீளாமல் இருந்திருந்தால், நடக்கும்

https://telegram.me/aedahamlibrary

கதையே வேறு. அவனது யாகம் பலன் தந்திருக்கும். நமது திட்டங்களும் தவிடு பொடியாகி விட்டிருக்கும்.

சிரத்தை இல்லாத காரியம் பயனளிக்காது. பேசாமல் நடக்கும் காரியம் பலன் தரும். எனவேதான், உங்கள் கேள்விகளுக்கு பதில் கூறாமல் அமைதியாக இருந்தேன். கவனம் என்பது ஐம்புலன்களையும் ஒன்றாகப் பிணைத்து ஒரு குறிப்பிட்ட திசையில் பயணிப்பது. கவனம் இல்லாமல் ஒரு காரியத்தை ஆற்றும் போது, புலன்களை அலையவிட்டால், அவை ஒவ்வொன்றும் ஒரு திசையில் பாயும். சூரியனின் ஏழு குதிரைகளும் ஒவ்வொரு திசையில் பாய்ந்தால், அவனால் எப்படி செயலாற்ற முடியும்" - கவுடில்யன் கேட்க,

மற்றவர்கள் அவனது ஒவ்வொரு சொல்லையும் வேதவாக்காக எண்ணி சிலாகித்தனர்.

இவன் ராஜதந்திரியாக இருக்கும் பட்சத்தில், எந்தப் போரையும் ஜெயிக்கலாம் என்று பிபத்தன் நினைக்க, தனது வீரத்திற்கும், கவுடில்யனின் ராஜதந்திரத்திற்கும் அங்கேயே திருமணம் செய்து வைத்துவிட்டான். நாங்கள் இருவரும் சரியான ஜோடி என்று அவன் மனம் எண்ணியது. -

"அபேயா! வருங்கால மகதத் தளபதியே! நமது படைபலத்தைப் பற்றி சற்று உனது வருங்கால ராஜதந்திரிக்கு விளக்கு. வருங்கால மகத மன்னரும் கேட்கட்டும்!"

கவுடில்யன் கூறினான்.

இதனைக் கூறியபோது, கவுடில்யன் மற்ற இருவரையும் பார்ப்பதைத் தவிர்த்து, அபேயனை மட்டுமே நோக்கினான். இதனால் தான் மன்னன் பட்டியலில் இல்லை என்பதை அபேயன் உணர்ந்து கொண்டான். சரி! தளபதி என்று அழைக்கப்பட்டு விட்டோம். அந்த பதவியைக் காப்பாற்றிக் கொள்வோம் என்று நினைத்தான், அபேயன்.

மகதத்தின் வருங்கால மன்னரும் கேட்கட்டும் என்று கவுடில்யன் கூறியதும், அவன் தன்னைக் குறிப்பிடுவதாக பிபத்தன் நினைத்தான். அவன் யாரைக் குறிப்பிடுகிறான் என்பது தெரியாமல், குழம்பினான், சந்தா.

https://telegram.me/aedahamlibrary

அபேயன் விளக்கினான். “தானநந்தாவை எதிர்க்கும் படைவீர்கள், அணி மாறி நம்மிடம் வந்து விட்டனர். பலர் அங்கேயே இருந்து கடைசி நிமிடத்தில் நம்முடன் கைசேரக் காத்திருக்கிறார்கள். சந்தாவின் விரிஞ்சி காட்டுப் படை பெரிய அளவில் சேர்ந்து விட்டது. அவருடைய காட்டுவாசி நண்பர்கள் அந்தப் படையின் தலைமையை ஏற்றுள்ளனர். புத்த கயையைச் சுற்றி இருக்கும் நகரத்தார்கள் நமக்கு நிதியும், தளவாடங்களும் அளித்துள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக, நமக்கு பெரிய பலம், மகத மக்கள் தானநந்தாவிடம் கொண்டுள்ள அதிருப்தி. பிபத்த நந்தரை மன்னராக அறிவித்து ஏற்கனவே ஆங்காங்கே கொண்டாட்டங்கள் நடைபெறுவதாகக் கேள்வி. பெண்கள் இளவரசருக்கு மங்கல ஹாரத்தி எடுப்பதற்கு இப்போதே தட்டுகளில் மங்கல நீருடன் காத்திருப்பதாகக் கேள்வி!”

"பிறகு என்ன! தளபதி அபேயா! வரும் வெள்ளிக்கிழமை புஷ்பபுரம் புறப்படுகிறோம். இந்த முறை தானநந்தனை பதவி இறக்கி, நமது மன்னரை பதவியில் அமர்த்துகிறோம். அவன் என்னை நாட்டின் எல்லையில் இருந்து வீசி எறிந்தது போன்று நான் அவனை வீசி எறியப் போகிறேன்.

"அபேயா! படைகளின் முழுக் கட்டுப்பாட்டை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நீ படைகளை நடத்திச் செல். சந்தா! சுத்த வீரன் நீ. வனவாசி வேறு. தயை, தாட்சண்யம், கருணை, ஈவு, இரக்கம், போன்ற மனிதநேய குணங்கள் இல்லாமல் வளர்ந்தவன். அரண்மனையை கைப்பற்றி மன்னர் குடும்பத்தை சரணடையச் செய்வது உனது பணி!

“பிபத்தா! போர் புரிவது உனது தந்தையோடு. அஸ்வத்தாமனைப் போன்று தந்தையுடன் நீ போர் புரியவில்லை. தந்தை இராமனை எதிர்த்து களம் கண்ட லவ குசர்களாக நிற்கப் போகிறாய். தந்தை, தாய் சகோதரியைப் பார்க்கும் போது, பாசம் தலையெடுத்து காரியத்தை சிதைக்கும். எனவே, நீ அரண்மனைக்குள் செல்லாமல், பொதுமக்களைச் சந்தித்து அவர்களது ஆதரவை திரட்டு. கத்தியின்றி, இரத்தமின்றி மகதத்தைக் கைப்பற்றுவோம். மக்கள் ஆதரவு நம் பக்கம் இருப்பதால், அதனை சிந்தாமல், சிதறாமல் குடத்தில் சேகரித்து அந்த குடத்தினால் உனக்கு மகுடாபிஷேகம் செய்வோம்!” --- என்றதும் பிபத்தனுக்கு உற்சாகம் பிறந்தது.

சந்தாவுக்கு சற்றே மனம் குழம்பியது. உன்னை மன்னன் ஆக்குகிறேன் என்று விரிஞ்சி காட்டில் இருந்து வரவழைத்து விட்டு, இப்போது,

https://telegram.me/aedahamlibrary

பிபத்தனுக்கு மகுடாபிஷேகம் செய்கிறேன் என்கிறானே, கவுடில்யன். பிறகு இவன் எதற்காகப் போர் புரிய வேண்டும்? இப்போதே அவன் தனது ஆட்களுடன் விரிஞ்சி காட்டிற்குத் திரும்பி விடலாமா?

அவன் மன ஓட்டத்தைப் புரிந்துகொண்டவன் போல, சந்தாவை உறுத்துப்பார்த்தான் கவுடில்யன்.

"சந்தா! அபேயனுக்குப் படைகளைத் தந்தேன். பிபத்தனுக்கு மகுடத்தைத் தந்தேன். உனக்கு அவற்றை விட வலிமையானதும், விலைமதிக்க முடியாததும், உங்கள் மூவரில் உன்னால் மட்டுமே அடையக் கூடிய தகுதியும் கொண்ட ஒன்றை உன் வசம் விடுகிறேன். அதை நீ உன் வசம் கொண்டுவா. ஆனால் அதன் மாய்மாலங்களில் சிக்கிக் கொள்ளாதே...!" --- கவுடில்யன் இவ்வாறு கூறியதும், ஒருகணம் திகைத்தான், சந்தா. மற்ற இருவரும் ஒன்றும் புரியாமல் சந்தாவை வெறித்து நோக்க, உடனேயே சந்தா கவுடில்யன் கூறுவதன் பொருளைப் புரிந்து கொண்டான்.

துர்தரா ---

துர்தராவின் பேரழகு மிக்க உருவம் அவனது கண்களில் நிழலாடியது. கவுடில்யன் கூறுவது உண்மை. அபேயனின் படைகளைவிட, வலிமை வாய்ந்தவள், துர்தரா. தனது தந்தை மற்றும் தமையனைவிட, அரசியல் சாதுர்யம் மிக்கவள். மகத மகுடத்தைவிட, விலை மதிப்பில்லாதவள்.

அவளை என் வசப்படுத்த முடியுமா?

மீண்டும் அவனது மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டவனைப் போல கவுடில்யன் பேசினான்.

"அபேயன், பிபத்தனைவிட மிகவும் கடினமான காரியத்தை உனக்குத் தந்திருக்கிறேன். அதற்குத்தான், அரண்மனையைக் கைப்பற்றும் பணியை உன்னிடம் தந்திருக்கிறேன், சந்தா. பிபத்தனை பாசத்தாலும், அபேயனை அரசியல் சாதுரியத்தாலும் எளிதாக வெல்லக் கூடிய சக்தி ஒன்று அரண்மனையில் உள்ளது. உன்னால் மட்டுமே அவற்றை எதிர்கொள்ள முடியும். உனது வலிமை, கம்பீரம், பௌருஷம், இரும்பு மனது, உறுதி மற்றும் கண்டிப்பு ஆகியவற்றை பிரயோகப்படுத்தி எதிர்ப்படும் துர்குணத்தை வீழ்த்துவாயாக!" - கவுடில்யன் சங்கேதத்துடன் பேச, புரிந்துகொண்டு தலையசைத்தான், சந்தா.

https://telegram.me/aedahamlibrary

வெள்ளிக்கிழமை ---

ஆயில்யம் நட்சத்திரம் கூடிய கன்யா லக்னத்தில், குரு ஹோரையில் அஸ்வமேத யாகத்தின் பூர்ணாஹூதியை நடத்தத் திட்டமிட்டிருந்தார், மிஸ்ரபானு. செம்மை வண்ணத்தில் சால்வை அணிந்து, ஈரமாக இருந்த தனது சிகையை விரித்துப் போட்டு, நுனியை முடிந்து அரண்மனையை நோக்கி நடந்து கொண்டிருந்த போது, புரவி ஒன்றில் வேகமாக ஒரு வீரன் பரபரப்புடன் வர, புரவித் தெருவில் தேங்கியிருந்த சகதியில் காலை வைத்துப் பாய, அதனால் சகதி மிஸ்ரபானுவின் வெண்மையான வேட்டியில் தெறிக்க, அந்த அதிர்ச்சியில் அவரது கையில் இருந்த ஆலயத்தில் வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்ட ராஜ சக்கரம் கை நழுவி சகதியில் விழ, செய்வதறியாது நின்றார், மிஸ்ரபானு.

தனது செய்கைக்கு நியாயம் கற்பிக்கும் விதமாக, அவரைத் திரும்பிப் பார்த்த வீரன், “புரட்சிப் படைகள் பிபத்த நந்தரின் தலைமையில் படையெடுத்து வருகின்றன...!” - என்கிற தகவலை அலறியபடி கூற, அதனைச் செவியுற்ற பொதுமக்கள் சிலர் திகைத்தனர். சிலர் உற்சாகத்தையும், சிலர் பயத்தையும் வெளிக்காட்ட, மிஸ்ரபானு கீழே கிடந்த ராஜ சக்கரத்தை எடுத்துக்கொண்டு வேகமாக அரண்மனையை அடைந்தார்.

விவரம் மன்னனை அடைந்து அவன் பிரதம அமைச்சரை அழைத்து கட்டளைகளை இடுவதற்குள், கவுடில்யனின் படைகள் புஷ்பபுரத்தினுள் நுழைந்து விட்டன. பிபத்தன் இரதத்தினில் மன்னனைப் போன்று அமர்ந்திருந்தான். அபேயன் தலைமையில் படைகள் முன்னேறி வர, அதனைத்தான் மூல புரட்சிப் படை என்று நினைத்து, தலைமை அமைச்சர் தனது படைகளை அதனை எதிர்கொள்ள அனுப்பினார். எல்லா படைகளையும் திரட்டி அபேயனை எதிர்ப்பதற்கு அனுப்பினார். இதைத்தானே கவுடில்யன் எதிர்பார்த்தான். சந்தாவின் தலைமையில் காட்டுவாசிப் படைகளை மகாதேவர் ஆலயத்தின் வழியாக அரண்மனையை நோக்கி ஏவி விட்டிருந்தான். அரண்மனை கோட்டைக்கு ஒரு வாசல்தான். அதன் வழியாகத்தான், அபேயன் படைகளை எதிர்க்க, நந்தாவின் படைகள் சென்று கொண்டிருந்தன. ஆனால் காட்டுவாசியான சந்தாவின் படைகள் விறுவிறுவென்று அரண்மனையைச் சுற்றியுள்ள மரங்களில் ஏறி மதிலைத் தாண்டின.

மதில் ஏறிய காட்டுவாசிகள் பல்வேறு பகுதிகளாகப் பிரிந்தனர். ஒரு பகுதி அபேயன் படைகளை எதிர்கொள்ளச் சென்ற, மகதப் படைகளை

https://telegram.me/aedahamlibrary

பின்னால் விரட்டிச் சென்று தாக்க, இருபுறமும் ஏற்பட்ட தாக்குதலில் மகதப் படைகள் நிலைகுலைந்தன.

காட்டுவாசிகளின் இன்னொரு பிரிவு, அரண்மனையில் எஞ்சியுள்ள படைகளை எதிர்கொள்ளத் துவங்க, அவர்களில் பலர் ஏற்கனவே அணிமாற சித்தமாக இருந்ததால், காட்டுவாசிகளுடன் சேர்ந்து கொண்டு, நந்தாவின் ஆதரவாளர்களைத் தாக்கத்துவங்கினர்.

எதிர்ப்பே இன்றி, சாம்பல் உதிர்வது போன்று, உதிர்ந்தது தானநந்தாவின் ஆட்சி. எதிர்த்து வந்த சிலரையும், சந்தா வலக்கையில் இருந்த வாளினால் வெட்டி வீழ்த்தினான். அப்படி வாள்வீச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், இவன் மீது பாயும் வீரர்களை, தனது வலுவான இடக்கரத்தினால், ஒரு மதயானை தனது துதிக்கையால் வளைப்பது போன்று வளைத்து, அந்த வீரனின் குரல்வளையை சிறைப்படுத்தி சுவாசத்திற்குத் திணற வைத்து, பிறகு குரல்வளையை உடைத்து சடலமாக விழ வைத்தான். காட்டுவாசியான அவனது இயக்கம், அரண்மனைவாசிகளைத் திணறடித்தது.

பலத்த மழை துவங்கி பிறகு தூவானமாக முடிவது போன்று, பொங்கி எழுந்த மகதப் படைகள், கவுடில்யனின் சாதுர்யத்திற்கும், சந்தாவின் வீரத்திற்கும், அபேயனின் செயல்படுத்தும் திறமைக்கும், பிபத்தனின் பேராசைக்கும் ஈடு கொடுக்க முடியாமல் நொறுங்கி விழுந்தன. எஞ்சி நின்ற தானநந்தாவின் ஆதரவாளர்களும், காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதைப் புரிந்துகொண்டு "பிபத்த நந்தர் வாழ்க" என்கிற கோஷத்துடன் அவனைத் தேடிச் சென்றனர்.

சந்தா தனது படையுடன் அரண்மனையை ஆக்ரமித்தான். பிறகு கவுடில்யனின் முக்கியக் கட்டளையை நிறைவேற்றும் விதமாக மன்னர் குடும்பத்தை அடிபணியச் செய்வதற்காகச் சென்றான்.

தனது மகனே புரட்சியாளர்களுடன் சேர்ந்து தன்னை வீழ்த்தி விட்டான், என்பதை ஜீரணிக்க முடியாமல் அமைதியாக தனது இருக்கையில் அமர்ந்திருந்தான், தானநந்தன். அவனைச் சுற்றி பத்மாங்கி, பிரதம அமைச்சர், மிஸ்ரபானு அனைவருமே அமர்ந்திருந்தனர்.

அந்த கவுடில்யனுக்கு அவன் கேட்டதைக் கொடுத்திருந்தால் இப்படி நடந்திருக்குமா என்பது போன்று தன் கணவனை வெறித்தபடி அமர்ந்திருந்தாள், பத்மாங்கி.

https://telegram.me/aedahamlibrary

சந்தா விறைப்புடனும், கடுமையான பார்வையுடனும், மன்னனின் முன்பாக வாளை உயர்த்தியபடி வந்தான்.

பொதுவாக, ஒரு நாடு போரில் தோல்வியடையும் போது, கைப்பற்றும் படையின் தளபதி மன்னனைக் காண வருவான். அதுவரை உயர்த்தி வந்த தனது வாளினை உறையினில் சொருகிய பிறகு, மன்னனைப் பணிந்து விட்டு, உங்கள் நாடு கைப்பற்றப்பட்டது என்பதை அறிவிக்க வேண்டும். சந்தா என்ன எதிரி நாட்டு தளபதியா என்ன? வெறும் வனவாசிதானே! அந்த நியமங்களைக் கடைப்பிடிக்கத் தெரியாமல், காட்டில் தான் வேட்டையாடி கைப்பற்றிய முயலையும், மானையும் பார்ப்பது போன்று பார்த்தான், சந்தா.

“தானநந்தா! நீ எங்கள் அடிமை!” - கூக்குரலிட்டான் சந்தா.

ஹரஹரருக்கு கோபம் வந்தது. "அவை அடக்கம் தேவை. நீ யாராக இருந்தாலும், மன்னரைப் பணிந்து பிறகு பேசக் கற்றுக்கொள்!” - கரகரத்த குரலில் தலைமை அமைச்சர் கூறினார்.

"வாயை மூடு! நான் உங்களை ஜெயித்திருக்கிறேன். உங்களுக்கு பேசும் அருகதை கிடையாது. உங்கள் நாட்டு சட்டதிட்டங்கள் என்னைக் கட்டுப்படுத்தாது. காரணம் நான் ஒரு காட்டுவாசி!” கர்ஜனை செய்தான், சந்தா.

"துர்தரா ஒரு காட்டுவாசியைத்தான் மணப்பாள்!" அவளது ஜாதக தோஷம் உடனே, அங்கே இருந்த பத்மாங்கிக்கும், மிஸ்ரபானுவுக்கும் உறைக்க, பத்மாங்கி சந்தாவை அச்சத்துடன் பார்த்தாள்.

“பலபீமா! இந்த அறையில் இருப்பவர்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைத்து விடு. நாளை நமது ராஜதந்திரி வசம் இவர்களை ஒப்படைக்க வேண்டும்” என்றான்.

"எங்கே உனது அகம்பாவம் பிடித்த மகள் துர்தரா?" - சந்தா கேட்டான். ஆனால் உள்ளத்தில் ஒருவிதத் துடிப்பு. அந்தப் பேரழகு பெட்டகத்தை தனது வசம் கொண்டு வந்து அருகாமையில் பார்க்கப் போகிறோம் என்று ஒரு மூலையில் பரமானந்தம். ஆனால், அதே சமயம், அரச குடும்பத்திடம், குறிப்பாக துர்தராவிடம் ஈவு, இரக்கம் காட்டாதே என்கிற கவுடில்யனின் கட்டளையை ஏற்று முகத்தை உக்கிரமாக வைத்திருந்தான். முகத்தில் கொடூரத்தையும், இதயத்தில் ஆர்வத்தையும்

https://telegram.me/aedahamlibrary

தேக்கி வைத்தபடிதான், அந்தக் கேள்வியைக் கேட்டான்.

“முடிந்தால் தேடிப் பிடியுங்கள். எங்களுக்கே இளவரசியார் எங்கிருக்கிறார் என்று தெரியாது!" ஹரஹரர் கூறியபடி கீழ்க்கண்ணால் பத்மாங்கியைப் பார்த்தார்.

“இந்தக் காட்டுவாசியிடம் எனது பெண் சிக்காமல் பார்த்துக் கொள்" என்று பிரார்த்தனை செய்தபடி அமர்ந்திருந்தாள், பத்மாங்கி.

“பலபீமா! இவர்களை கைது செய்! நான் அந்த ஆணவம் பிடித்தவளை எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து, இழுத்து வருகிறேன்!” என்றபடி துர்தராவைத் தேடிக் கிளம்பினான், சந்தா.

காட்டுவாசிகளின் கட்டுப்பாட்டில் தானநந்தா, பத்மாங்கி, ஹரஹரர், மிஸ்ரபானு அனைவரும் சிறைச்சாலையை நோக்கி நடக்க, தனது பாதுகைகள் அணியாத தேக்குமர கால்கள் சப்திக்க, சிங்கத்தைப் போன்று நடைபோட்டபடி, உயர்த்திய வாளுடனும், பொய்யாக கண்களில் நிரப்பியிருந்த கொடூரத்துடனும், இப்படியும் அப்படியும் நோக்கியவாறு நடந்து கொண்டிருந்தான், சந்தா.

"துர்தரா! வன அரசனின் இணை வேங்கையே! எங்கே இருக்கிறாய்?” - என்று அரண்மனை முழுவதும் சுற்றி வந்ததுதான் மிச்சம். துர்தரா எங்குமே காணப்படவில்லை.

*****

https://telegram.me/aedahamlibrary

# 19. காட்டுமிராண்டியின் கைதி

“துர்தரா எங்கே இருக்கிறாய்? நான் உன்னைத் தாக்க மாட்டேன். உனக்கு எந்தத் கெடுதலையும் செய்ய மாட்டேன். உள்ளுக்குள் உனது அழகை கண்குளிரப் பருக வேண்டும் என்கிற ஆசையினால் உந்தப்பட்டுதான் உன்னைத் தேடுகிறேன். எனது கண்களின் முன்பாக வந்து நில்...” என்று மனதினுள் கூறியபடியே, துர்தராவை சல்லடை போட்டு தேடினான், சந்தா. ஆனால் அவள் எங்கேயோ மறைந்து கொண்டிருக்கிறாள்.

அபேயன் தனது படைகளுடன் அரண்மனையில் புகுந்து விட்டான். படை வீரர்களின் ஆர்ப்பாட்டமும், சங்கநாதமும், சந்தாவின் செவிகளில் விழுந்தன. அபேயன் தனக்கு கவுடில்யன் விதித்திருந்த கடமையை நிறைவேற்றி விட்டான்.

மதில்களின் அப்பால், பொதுமக்களின் கூக்குரல்களும் பிபத்தனை வாழ்த்தி அவர்கள் எழுப்பும் கோஷங்களும், அவனது செவிகளில் ரீங்கரிக்க, பிபத்த நந்தனும், கவுடில்யன் தனக்கு விதித்திருந்த கட்டளையை நிறைவேற்றி விட்டான் என்பதைப் பறைசாற்றின.

ஆனால் இவன்தான் இன்னும் கவுடில்யன் தனக்கு விதித்திருந்த கட்டளையை நிறைவேற்ற இயலாமல் அல்லாடிக்கொண்டிருக்கிறான். தனது வீரம், பௌருஷம், வலிமை எல்லாவற்றிற்கும் பெரிய சவாலை விடுத்திருக்கிறாள், துர்தரா.

அவளைக் கைப்பற்றினால்தான், கவுடில்யனின் முன்பாக இவனால் நடமாட இயலும். மன்னன் பதவிக்கு பிபத்தனுக்கு சவால் விடுவது, இவனது வீரமும், வலிமையும்தான். இளவரசன் என்கிற ஒரே காரணத்திற்காகத்தானே அவனை வருங்கால மன்னன் என்று கொண்டாடுகிறார்கள். வலிமையை மன்னர் பதவிக்குத் தகுதியாகக் கருதினால், இவன்தானே வரிசையில் முன் நிற்பான்.

மற்ற இருவரும், தங்களுக்கு இடப்பட்ட கடமைகளை ஆற்றி விட, சந்தா தான் இன்னும் தனக்கு விதிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றவில்லை என்று தன்னையே நொந்தபடி தனது அகன்ற கண்களை இருபுறமும் பம்பரமாகச் சுழலவிட்டபடி வாளுடன் நடந்தான்.

https://telegram.me/aedahamlibrary

வாலிபப் பருவத்தில் நுழைவதற்கு முன்பாகவே, இவனுக்குத் தோன்றிவிட்ட அடர்த்தியான முடியும், மீசையும், தாடியும் இவனை சற்று கொடூரமாகக் காட்டும். கவுடில்யனின் அறிமுகம் கிடைத்ததும், அவனது முடியை திருத்திக்கொண்டு இருந்தான், சந்தா. இப்போது சந்தாவின் முகத்தில் கம்பீரமாகக் காணப்பட்ட கம்பீர மீசையின் நுனியை நத்தையின் கூடு போன்று சுருட்டிக் கொண்டிருந்தான். அவன் அம்மாதிரிச் செய்தால், முகத்தில் உக்கிரம் குறைவாகத் தென்படுவதாக அபேயன் கூறியிருந்தான். எனவே, துர்தராவை பார்க்கும் போது அவன் உக்கிரமாகத் தெரியக்கூடாது என்பதற்காக மீசையின் நுனிகளை இன்னும் சுருட்டிக்கொண்டிருந்தான். ஆனால், இப்போது அவளைக் காணவில்லை என்றதும் அவனுள் அவளை நினைத்து பரவியிருந்த மென்மை மறையத்துவங்கியது. அவளால் கவுடில்யனின் முன்பாக தான் சிறுமைபடப் போகிறோம் என்கிற நினைப்பில் அவள் மீது கொண்டிருந்த ஆர்வம் சிறிது சிறிதாக கோபமாக மாறியது.

இவனது காட்டுவாசி குடியிருப்பில் ஒரு முறை இவனது வளர்ப்புத் தாய் மந்தா உரலில் தினையை இடித்துக்கொண்டிருந்தபோது, கரடி ஒன்று அவளை தாக்கி காயப்படுத்தி விட்டு ஓடிவிட்டது. அதனால் அவனது தாய் சற்றே விந்தி விந்திதான் நடந்து கொண்டிருந்தாள். ஆனால் ஒரு நாழிகையில் அந்தக் கரடியைத் தேடிக் கண்டுபிடித்து அதனைக் கொன்று விட்டான், சந்தா.

ஆனால், துர்தராவைத் தேடிக் கண்டுபிடிப்பது பெரும் சவாலாகி விட்டதே. ஒரு வேளை அவள், சிக்காமலேயே போய் விட்டால்? கவுடில்யனிடம் இருந்து அழைப்பு வருவதற்குள்ளாக இவன் துர்தராவைத் தேடிக் கண்டு பிடித்து, அவளை இழுத்துச் சென்று கவுடில்யன் முன்பாக மண்டியிட வைக்க வேண்டும். பற்கள் இல்லாத பல்லாங்குழி வாயன் என்று கேலி செய்த அவள் கையால் வெற்றிலையை மடித்து கவுடில்யனிடம் கொடுத்து அவனை மென்று தின்ன வைக்க வேண்டும், என்று மனதினுள் மீண்டும் தீர்மானம் ஒன்றைச் செய்தவன், புதிய உத்வேகத்துடன் துர்தராவைத் தேடினான்.

அவகாசங்கள் கழிய, அவனுக்கு துர்தராவின் மீது துவேஷம் உண்டானது.

நீ மட்டும் என்னிடம் கிடைத்தால் உன்னை அணு அணுவாக சித்ரவதை செய்து கொல்கிறேன் என்கிற தீர்மானத்திற்கே வந்து விட்டான். அரண்மனை, அந்தப்புரம், உப்பரிகை, நந்தவனம் என்று எல்லா

https://telegram.me/aedahamlibrary

இடங்களிலும் தேடியவன், கடைசியாக அரண்மனையில் சுரங்க வழி எதாவது புலப்படுகிறதா என்று பார்த்தான். அதற்கான அறிகுறியும் தென்படவில்லை. சுரங்கப் பாதை ஏதேனும் இருந்திருந்தால், தானநந்தாவின் குடும்பமே தப்பி இருக்குமே.

ஒரு முறை தான் தேடிய இடங்களிலேயே மீண்டும் தேடிவிட்டு, நந்தவனத்திற்குச் சென்றான். தடவாவிகளைக் கடந்து அரண்மனை மதில்களைச் சுற்றி ஓடிக்கொண்டிருந்த நந்தவனத்தில் நடந்தான். வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கி அவனது கண்களுக்கு விருந்தை அளிக்க, நந்தவனத்தின் அழகில் சற்றே சொக்கிப் போனான். இந்த நந்தவனத்தில்தான் அன்றாடம் துர்தரா பொழுதைக் கழிப்பாள் என்று பிபத்தன் மூலமாக அறிந்திருந்த சந்தாவின் கண்கள் இருபுறமும் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தன. நந்தவனத்தின் திருப்பத்தில், அரண்மனையின் பின்பாக சந்தா திரும்பியதும், தொலைவில் சற்று ஒதுங்கிய இடத்தில், அடர்த்தியான மரங்களின் இடையே இருந்த ஒரு கட்டடத்தைக் கண்டான், சந்தா. அது அரண்மனை குதிரை லாயம் என்பதை உடனே புரிந்துகொண்டான். போருக்குச் சென்ற குதிரைகள் எதுவுமே திரும்பவில்லை போலும். லாயம், வெறுமையாகக் கிடந்தது. அருகே சென்றதும், சற்றே அண்ணாந்து நோக்கினான். லாயத்தின் மேலே, வரிசையாக சில அறைகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஒருகால் --- அந்த அறைகளில் ஒன்றில் துர்தரா இருக்கலாமோ? ஒரு இளவரசி எதற்கு குதிரை லாயத்தின் மீது தங்கப் போகிறாள். எதற்கும் போய் பார்த்தால் என்ன?

குதிரை லாயத்தின் பின்பாக இருந்த படிகளில் ஏறி, மேலே இருந்த அறைகளை அடைந்தான். தனது வாளை நீட்டிக்கொண்டு, ஒவ்வொரு அறையின் கதவினையும், தனது காலால் உதைத்தான். அறைகள் அனைத்துமே காலியாக இருந்தன.

அநேகமாக நம்பிக்கையின்மையோடுதான் கடைசி அறையின் கதவை தனது வலக்காலினால் எட்டி உதைத்தான். கதவு உடைந்து விழ, "வீல்” என்று பல குரல்கள் எழுந்து சந்தாவை பதட்டப்பட வைத்தன.

“யார் நீங்கள்?” - சந்தா அதட்டினான்.

“இது சேடிப்பெண்கள் தங்கும் ஜாகை. நாங்கள் ஒரு குற்றமும் செய்யாதவர்கள். அடுத்த மன்னனுக்கு ஊழியம் செய்வதற்காகக்

https://telegram.me/aedahamlibrary

காத்திருக்கிறோம்!" ஒரு பெண் நடுங்கிய குரலில் பேசினாள்.

சந்தாவின் மனம் துவண்டது. குதிரை லாயத்தின் மீது, பணிப்பெண்கள் விடுதிதான் இருக்கும். இளவரசியின் அந்தப்புரமா இருக்கும். இந்தத் தோழிகளைக் கேட்டுப் பார்ப்போமா?

"பணிப்பெண்களே! உங்கள் இளவரசி துர்தரா எங்கே?" - சந்தா கேட்டான்.

பணிப்பெண்களின் கூட்டத்தின் பின்பாக நின்றிருந்த ஒரு பெண் பதில் தந்தாள்.

"புரட்சிப் படைகள் வருகிறது என்றதுமே, குதிரை ஒன்றில் ஏறி கிழக்கே தப்பிச் சென்று விட்டார். அநேகமாக, புத்த கயைக்குச் சென்று தலைமுடியை மழித்து வெள்ளையாடை அணிந்து புத்த பிக்குனி ஆகியிருப்பார், அந்த ஆணவம் பிடித்த இளவரசி!" என்று அந்தப் பெண் கூறியதும், கலீர் என்று எல்லா பெண்களும் நகைக்க, சந்தா திடுக்கிட்டான்.

பேரழகி துர்தராவை, கூந்தல் இல்லாமல் ஒரு புத்த துறவியாக அவனால் கற்பனையில் கூட எண்ணிப் பார்க்க இயலவில்லை. நகைக்கும் பெண்களை கோபத்துடன் பார்த்துவிட்டு, மீண்டும் படியிறங்கி வெளியே போனான்.

அவனது மனம் கனத்தது. துர்தரா புரவியில் தப்பிச் சென்று விட்டாள். அவள் எங்கிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து விட்டுதான் மறு வேலை. கவுடில்யனிடம் அவகாசம் கேட்க வேண்டியதுதான்.

ஏமாற்றத்துடன் வந்த வழியே நடந்தான், சந்தா. துர்தரா என்னும் ஒரு பெண், இவனது வல்லமையை ஒன்றும் இல்லாமல் செய்து விடுவாளோ. அவளைத் தேடிக் கண்டுபிடிக்கும் வரையில், இவன் மனதை இவனாலே சமாதானம் செய்ய முடியாது. வெறுப்புடன் நடந்த சந்தாவின் கண்களை மரத்தின் பின்பாக நிகழ்ந்த அசைவு ஒன்று ஈர்த்தது.

தனது ஓரக்கண்ணால், அந்த அசைவினை கவனித்தபடி சந்தா நடந்தான். அவன் கடந்து செல்வதற்காக மரத்தின் பின்பாகக் காத்திருந்த ஒரு உருவம், அவன் அப்பால் சென்றதும் குதிரை லாயம் இருந்த பகுதியை நோக்கி நகர்ந்தது.

https://telegram.me/aedahamlibrary

அமரேந்திரி, தான் ஒரு வெள்ளித் தட்டில் பழரசக் கோப்பையை சுமந்து கொண்டு சேடிப்பெண்கள் பதுங்கியிருந்த பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தாள். அமரா என்கிற அமரேந்திரிதான் தனது தாய் என்பது தெரியாமல் சந்தா அவளைப் பின்தொடர்ந்தான். இருவரையும் பிணைத்திருந்த தொப்புள் கொடி அறுபட்டதுமே, தாயும், மகனும் பிரிய நேர்ந்தது. ஆனால் காலக்கொடி அவர்களையும் அறியாமல் அவர்களை ஒன்று சேர்த்துக்கொண்டிருந்தது போலும்.

சந்தாவின் சிந்தை வேகமாகச் சுழன்றது. தானநந்தாவின் குடும்பத்தையே சிறையில் அடைத்துவிட்டாகி விட்டது. துர்தராவும் தப்பிச் சென்று விட்டாள். பின் யாருக்காக இந்த முதிய சேடி பணிவுடன் பழரசக் கோப்பையை எடுத்துச் செல்கிறாள்?

அமரேந்திரி நிதானமாகப் படிகளில் ஏறிச்சென்று கடைசி அறைக்குச் சென்றாள். கதவைத் தட்ட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஒரே உதையில் அதனை உடைத்துப் பிளந்திருந்தான் சந்தா. வயிற்றில் சந்தா இருந்தபோது, எப்படித்தான், அமரேந்திரி அவனது உதைகளைத் தாங்கினாளோ?

உள்ளே சென்ற அமரேந்திரி கிசுகிசுத்த குரலில் அழைத்தாள்.

“யுவராணி! உங்களுக்காகப் பழரசம் கொண்டு வந்திருக்கிறேன்!” -

பாற்கடல் கடையப்பட்டபோது அலைகள் ஒதுங்கி உள்ளிருந்து சந்திரன் வெளிப்பட்டதைப் போன்று, தோழியர் கூட்டம் இருபுறமும் விலக, எழில் பேரரசி துர்தரா வெளிப்பட்டாள். முகம் இன்னும் பொலிவுடன் திகழ்ந்தது. தனது அரண்மனை எதிரிகளின் வசம் சிக்கி விட்டது என்கிற அச்சம் இன்றி இன்னும் தானே இளவரசி என்பது போன்றுதான் ஒய்யார நடை போட்டபடி வந்து அலட்சியமாக பழரசக் கோப்பையை எடுத்தாள். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டுவதற்குள் விதி எட்டு பக்க ஏடுகளைத் திருப்பி விடும் அல்லவா?

சிவந்த தனது உதடுகளை குவித்து பழரசக் கோப்பையை குவிந்த இதழ்களில் அவள் பதிய வைக்க முயன்ற நேரம், மலைப்பாம்பு ஒன்று முயலைச் சுற்றி வளைப்பது போன்று தசைகள் முறுக்கேறிய ஒரு கடினமான கரம் அவளது கையைச் சுற்றி வளைத்து, தன்னுள் சிறை வைத்தது.

https://telegram.me/aedahamlibrary

"ஆணவ அலங்காரி, அடங்கா ஒய்யாரி! சிக்கினாய் என்னிடம்!" ---

தனது கனத்த குரலினால் அவன் கூற, சுற்றி நின்ற சேடிகளும், அமரேந்திரியும் திகைத்தனர். சற்றும் கலங்கவில்லை, துர்தரா. தனது கையில் இருந்த கோப்பை ரசத்தை அப்படியே உதற, பழரசம் சந்தாவின் மார்பில் கொட்டி அவனது வயிற்றில் வழிந்து, அவனது அரையில் கட்டியிருந்த ஆடையை நனைத்தது.

இருபுறமும் திரண்டிருந்த அவன் மார்பினில் இருந்து வழிந்த பழரசம், இரு குன்றுகளின் நடுவே பாயும் அருவியைப் போன்று தோன்றியது.

"என்ன துணிச்சல்?" - கோபத்துடன் அவளை உலுக்கி தன்புறமாக இழுக்க, அவளது பிடிபட்ட கை அவளது முதுகுப்புறமாக சிக்க, இப்போது அவளது இருகைகளையும் தனது இடக்கரத்தில் சிறை வைத்து, வலக்கையினால் அவளை வெட்டுவது போன்று வாளை உயர்த்தினான்.

துர்தராவா கலங்குவாள்?

"வெற்றி பெற்றவர்களுக்கு பழரச அபிஷேகம் நடைபெற்றதாக நினைத்துக் கொள்ளலாமே! கடவுளர்களுக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்வதில்லையா என்ன?" - கூவும் கோகிலமாக துர்தரா பேச, அவளது கூந்தலின் உச்சியில் மின்னிய இராக்கொடி அவனது மார்பில் உரசியது.

ஒரு நங்கையின் ஒவ்வொரு ஆபரணத்திற்கும் பொருள் உண்டு. உச்சியில் இருக்கும் இராக்கொடியின் தாத்பர்யம் என்ன? ஒரு பெண்ணின் தலை நிமிராதபோது அவள் தலையின் உச்சியில் சூடியிருக்கும் இராக்கொடி எதிரே வரும் பெரியோர்களுக்கு புலப்பட வேண்டும். தலை குனியாமல் நிமிரும்போது எதிரே வருபவர்களுக்கு இராக்கொடி தெரியாது. இராக்கொடி பில்லை கண்களில் முழுவதுமாகத் தெரிந்தால், அந்தப் பெண் முழுநிலவின் குளிர்ச்சியை உடையவள் என்பதை சான்றோர்கள் அறிவார்கள். (நிமிராக்கொடி என்பதே இராக்கொடியாக மாறியது.)

கனத்த வைரங்களைச் செவியில் அணியும்போது அதன் கனத்தால் காது மடல்கள் கிழியாமல் இருக்க, மாட்டலுடன் கூடிய எடையை சீரமைத்து சமநிலைப் படுத்தும் சீரமைக்கி என்கிற ஆபரணத்தை அணிவார்கள். (அதைத்தான் ஜிமிக்கி என்கின்றனர்).

https://telegram.me/aedahamlibrary

போர்த்திய சேலைத்தலைப்பு நழுவாமல் இருக்க, வங்கி அணிவார்கள். அங்கி நழுவாமல் காக்கும் ஆபரணம் வங்கி. உடலோடு ஆடையை ஒட்டச்செய்வது ஒட்டியாணம். குளிர்ச்சி மிக்க நவரத்தினங்களை சூடாமணியாக அணிவார்கள்.

பெண்களின் சிந்தனை ஆண்களைப் போன்று அல்லாமல் பல திசைகளில் பாயும். வேகமாகவும் சிந்திப்பதால், மூளைப்பகுதி அதிக சூடு அடைந்துவிடும். சூட்டினைத் தவிர்க்கும் மணிகளை அணிவதால் அது சூடாமணி, என்று பெண்கள் அணியும் ஆபரணங்களுக்கு பொருள் உண்டு.

கோட்டையின் உச்சியில் கொடி பறப்பது போன்று, ஒரு பெண்ணின் உச்சந்தலையில் இராக்கொடி திகழ வேண்டும். துர்தராவின் இராக்கொடி சந்தாவின் இடப்புற மார்பை உரச, அது அவனுள் ஒருவித சங்கடத்தை தோற்றுவித்தது. துர்தரா தலை நிமிராமல் இருந்திருந்தால் அந்த ஆபரணம் அவனது மார்பில் சங்கடத்தை தோற்றுவித்திருக்காது. ஆனால்... அவள்தான் தலைகுனிந்து பழக்கம் இல்லையே?

“எங்கள் இளவரசி மென்மையானவர். அலங்காரம் செய்யும்போது நாங்களே எச்சரிக்கையுடன்தான் அவரது தேகத்தை கையாளுவோம். நீங்கள் ஒரு வனவிலங்கை பிடிப்பது போன்று அவரை பற்றியிருக்கின்றீரே?” சற்றே துடுக்குகாரியான குணசுந்தரி என்கிற தோழி சந்தாவிடம் கூறினாள்.

"அடியே... குணா! உனக்கு சிந்திக்கும் திறமையே இல்லை! காட்டுமிராண்டி இவன். அப்படித்தானே பிடிப்பான்? இவன் என்ன குருகுலம் பயின்ற, நவநாகரீகத்தை அறிந்த, பெண்மையைப் போற்றத் தெரிந்த மன்னர் மகனா என்ன? மரத்துக்கு மரம் தாவும் வானரத்திடம் பூமாலை சிக்கினால், அதை பிய்த்துத் தானே எறியும்?” - துர்தரா கூற, சந்தாவின் பொறுமை தகர்ந்தது.

கவுடில்யன் கூறுவது சரிதான். ஆணவத்தின் மொத்த உருவம் இந்த துர்தரா. இவளிடம் மென்மையைக் காட்டினால், இவனை நபும்சகன் என்பாள். கடுமையைக் காட்டினால், காட்டுவாசி என்பாள். இவளை வசப்படுத்துவது மிகவும் சிரமம். பொன்னை தீயில் புடம் போடுவது போன்று, இவளை தண்டனைகள் என்கிற சோதனைகளை அளித்து, மென்மையடையச் செய்ய வேண்டும். பலாக்கனியின் இனிமையைச் சுவைக்க, வெளியில் இருக்கும் கடினமான முட்களுடன் கூடிய தோல்

https://telegram.me/aedahamlibrary

பகுதியைச் சீவித் தள்ள வேண்டுமே.

"மகனே!" - முதன்முறையாக தனது மகனை அந்த உறவுமுறையைக் கூறியே அழைத்தாள், அமரேந்திரி. அவ்வாறு அவள் அழைக்கும்போதே, அவளது உதிரத்தில் இனிய அதிர்வு.

துர்தராவின் கரங்களை விடுவிக்காமல், அமரேந்திரியை நோக்கினான், சந்தா.

"மகனே! வீரத்தின் மொத்த உருவமாகத் திகழும் நீ, ஒரு பெண்ணை இப்படி முரட்டுத்தனமாகக் கையாளலாமா? என்ன இருந்தாலும் அவரும் ஒரு இளவரசி! நங்கையை அவள் விருப்பமின்றி தீண்டுவது முறை அல்ல! அவரை விடுவித்து அவரது பெற்றோர் வசம் அனுப்பி விடு!"

அமரேந்திரியின் கருணை மிக்க சொற்கள், அவனை நெகிழ வைத்தன.

"அமரா! அவனிடம் கெஞ்சாதே.! அதற்கு தகுதியான மனிதன் அல்ல அவன்!" - துர்தரா கூற, அவள் அமரா என்று அமரேந்திரியை அழைத்தது, சந்தாவினுள் ஒருவித பரவசத்தை ஏற்படுத்த, அவளை பிரமிப்புடன் பார்த்தான். அதைப் புரிந்துகொண்ட அமரா, அவனது எண்ணத்தை ஆமோதிப்பவள் போன்று மேலும் கீழும் தலையை அசைக்க, பரமானந்தத்தில் ஆழ்ந்தான், சந்தா.

துர்தராவின் கைகளை விடுவித்து விட்டு, அமராவை நோக்கி பாசத்துடன பாய நினைத்த அவனைக் கண்களால் உடனேயே எச்சரித்தாள், அமரா.

"நீ எனது மகன் என்று தெரிந்தால், உன்னை இன்னும் கேவலப்படுத்துவாள், இந்த அடங்காபிடாரி! இப்போது உனது வீரமாவது உன் புகழ் பேசும். நீ சேடிமகன் என்பது தெரிந்தால் இவளது ஆணவத்தின் முன்பாக உனது வீரம், சூரியன் முன் பிரகாசிக்கும் தகளியின் ஒளியாகிவிடும்!" - என்று கண்களால் அவள் சூசகமாகப் பேச, துர்தராவின் கரங்களை இன்னும் இறுகப் பற்றினான் சந்தா.

முதன் முறையாக, தனது கரங்களில் வலியினை உணர்ந்தாள் துர்தரா. தனது ஆணவப் பேச்சினால் அதுவரையில் வலியை மறைத்துக் கொண்டிருந்தவளுக்கு, அவன் தனது பிடியினை இன்னும் இறுக்கியதும், தோளின் வரை ஒரு வேதனை அலை பாய்ந்தது. தனது

https://telegram.me/aedahamlibrary

முகம் வேதனையில் சூம்பிப் போவதை அவன் பார்த்துவிடக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தாள், துர்தரா. ஆனால், அவள் வலியால் துடிக்கிறாள் என்பதை, சிவந்த அவள் கரங்களும் கன்னிப் போகும் அறிகுறிகளும் சந்தாவுக்கு உணர்த்த, சற்றே பிடியைத் தளர்த்தினான்.

“ராஜதந்திரி கவுடில்யரின் முன்பாக மண்டியிட்டு, தான் செய்த அவமதிப்புக்கு உங்கள் இளவரசியார் மன்னிப்புக் கோரியவுடன், முழு மரியாதையுடன் இளவரசியாக நடமாடலாம்!” - சந்தா கண்களை மூடி இருந்த துர்தராவின் முகத்தை கவனித்தபடி கூறினான்.

"ஒ... அந்த பல்லாங்குழி பலகை வாயனும், இங்கே வந்திருக்கிறானா? அவனை இங்கே அனுப்பு வனவாசியே! நானும் என் தோழிகளும் பொழுது போகாமல் தவிக்கிறோம். சோழிகளை அவன் வாயில் உருட்டி பல்லாங்குழி ஆடுகிறோம்!” - துர்தரா இவ்வாறு கூறியதும், தனது ஆருயிர் குருவை அவள் அவமதிப்பதை கண்டு சினம் எரிமலையாகப் பொங்கியது. அவளது கைகளை விடுவித்து, அவளது கூந்தலைப் பற்றி, துச்சாதனனைப் போன்று இழுத்துக்கொண்டு சென்றான், சந்தா.

ஆனால் - அவள் பாஞ்சாலியைப் போன்று துடித்து, பதறி, போராடவில்லை. ஒன்றுமே நடவாதது போன்று அவனுடன் நடந்தாள்.

“வனவாசி! இப்போதுதான் தெரிகிறது, புத்த பிக்குணிகள் ஏன் தங்கள் கூந்தலை மழித்துக் கொள்கிறார்கள் என்று. உன்னைப் போன்ற காட்டுவாசிகள் கையில் சிக்கினால், அவர்களால் இப்படி இழுத்துச் செல்லப்படுவதைத் தவிர்ப்பதற்குத்தான் என்று தோன்றுகிறது!" - துர்தரா நையாண்டி செய்ய, முதன்முறையாக சந்தாவின் முகத்தில் சிரிப்புக்கு சினம் இடமளித்தது.

துர்தரா எதிரே தான் சிரித்துவிடக்கூடாது என்று மிகவும் சிரமப்பட்டதில் அவன் முகம் கனிவாக மாறியது. ஜாடையாக துர்தராவின் முகத்தைக் கவனித்தான்.

தன்னை ஒருவன் கூந்தலை பற்றி இழுத்துச் செல்கிறான் என்பதையே பொருட்படுத்தாமல் நடந்து வந்தாள்.

எதிரே வந்த தோழி ஒருத்தி, தங்கள் இளவரசி சந்தாவினால் இழுத்துச் செல்லப்படுவதைக் கண்டதும் வாயடைத்துப் போய் நின்றாள்.

https://telegram.me/aedahamlibrary

“அடடே மதுரிமாவா? இன்றைக்கு தந்தைக்கு கவரி வீசும் பணி இல்லையா? ஓஹோ... தந்தையார் சிறைக்குச் சென்றுவிட்டாரா... உன் கை பிழைத்தது. என்ன அப்படிப் பார்க்கிறாய்? இந்த வனவாசியுடன் போகிறேனே என்றா? அவனது வலிமையான கையை எனது கூந்தலினால் கட்டி சிறைக்கு இழுத்துப் போகிறேன். இப்போது ஒப்புக் கொள்கிறாயா? நமது மகத நாட்டு வீரர்களை விட, எனது கூந்தல் முடி வலுவானது என்று?” - என்று பேசியபடி நடக்க,

சந்தா பிரமித்துப் போய் நின்று விட்டான். துர்தராவின் வாக்கு சாதுர்யம், மனம் கலங்காமை, துணிவு, ஆர்ப்பாட்டம் போன்ற குணங்கள் அவனுக்குள் மலைப்பினை உண்டாக்கி விட்டது. ஒரு பெண்ணால் எதிரியின் கரத்தில் சிக்குண்டு கிடக்கும்போது, இம்மாதிரியெல்லாம் உரையாட முடியுமா? மலைப்பாம்பிடம் சிக்கிய கோழி இறகுகளை உதறுவதைப் போன்று துடிப்பாள் துர்தரா என்று நினைத்திருந்தான். ஆனால் - அவளோ நேர்மாறாக அல்லவா நடந்து கொள்கிறாள்.

சட்டென்று துர்தராவை சுவர் பக்கமாகத் தள்ளி, தனது வாளை அவளது கழுத்திற்கு நேராக வைத்தான்.

"உன்னை சித்திரவதை செய்து சாகடிக்க வேண்டும் என்பது எனக்கிடப்பட்ட கட்டளை. பெண்ணாயிற்றே என்கிற ஒரே காரணத்திற்காக நானாக உனக்கு ஒரு வாய்ப்பு தந்து, கவுடில்யரிடம் மன்னிப்பு கேட்க வைத்து, உனக்கு உயிர்ப் பிச்சை அளிக்க நினைக்கிறேன். உனது ஆர்ப்பாட்டங்களை நிறுத்திக்கொண்டு, பணிவுடன மன்னிப்புக் கோரி, உன்னைக் காப்பாற்றிக் கொள்!” என்று அவளது கண்களினுள் தனது உக்கிரமான பார்வையைச் செலுத்தினான்.

துர்தராவின் நீல விழிகள் சுழன்றன. இவனைப் போய் முழு கண்களால் பார்க்க வேண்டுமா என்ன என்பது போன்று, தனது இமைகளை சற்றே மூடி, அதன் பிளவின் வழியாக அவனது பரந்த மார்பினை வெறித்து நோக்கினாள்.

"பிச்சை எடுக்கும் அந்த பலகை வாய் பரதேசியிடம் நான் மன்னிப்புக் கோருவதா? உயிர் ஜனிக்க இரு வினாடிகள். உயிர் பிரிய இரு வினாடிகள். இரண்டிற்கான காலத்தையும் இறைவன் நிர்ணயித்து விட்டான். அவனே எனது உயிரை நிர்ணயித்த காலத்திற்கு முன்பாக வாங்க முடியாது. எனது மரணத்தை அவனே என்னிடம் யாசகம் பெற்றுதான் வாங்க வேண்டும். நான் எனக்கு நீண்ட ஆயுளைக் கொடு

https://telegram.me/aedahamlibrary

என்று இறைவனிடம் பிச்சை கேட்க மாட்டேன். காட்டுவாசியே! உங்கள் வனவாசி பெண்களைப் போன்று, மான் தோல் போர்த்திக்கொண்டு, கண்களில் மருட்சியுடன் ஆண்களுக்கு அடிமையாக இருப்பவள் என்று என்னை எண்ணாதே! என் கையில் ஒரு வாளை கொடுத்துப் பார். உனது கடினமான மார்பினை துளைத்து உனது இதயத்தைத் துளைத்துக்கொண்டு மறுபுறம் அதனை எடுத்து வருவேன்!" - சினம் அவளது சிந்தையை மறைக்க, அவனைப் புண்படுத்தும் எண்ணத்துடன் சொற்களை உதிர்த்தாள்.

ஆனால் ---

சந்தாவை அவளது வார்த்தைகள் திணறடித்தன.

தனது வாளை அவளது கழுத்தில் இன்னும் நெருக்கி வைத்தான். இவளிடம் தற்காப்பினை பிரயோகப்படுத்துவதைவிட, தாக்குதல் செய்துதான் இவளை வசப்படுத்த முடியும் என்பதை உணர்ந்து கொண்டான். ஆணவத்தை ஆணவத்தினால் முறியடிக்க வேண்டும். காட்டுமிராண்டி என்று இவனை அழைக்கும் அவளை, இந்தக் காட்டுவாசியின் அடிமை என்று கூறி அவளை இம்சிக்க வேண்டும்.

சந்தா துர்தராவை அலட்சியமாக நோக்கினான்.

"மயிலிறகு பார்க்க அழகாக இருக்கும். அதனை வைத்துக்கொள்ள அனைவருக்குமே ஆசை வரும். ஆனால் மயிலின் தோகையில் இருக்கும் வரைதான் இறகுக்கு மதிப்பு. இறகு உதிர்ந்து விட்டால், அதனை சீந்துவதற்கு யாரும் இல்லை. நீ மகத மயிலின் தோகையில் இருந்து உதிர்ந்து விட்ட இறகு. உனக்கு இனி மதிப்பில்லை!" - கர்ஜித்தான், சந்தா.

கலகலவென்று நகைத்தாள், துர்தரா...

"உன் குலதெய்வம் யார், வனவாசியே?" - துர்தரா கேட்டாள்

"வனசூலினி! விரிஞ்சிக் காட்டின் நடுவே அமைந்திருக்கும் குகையில் இருக்கிறாள்!" ---

"குகையில் இருக்கும் குலதெய்வமா? அதுதான் உனது சிந்தையும் இருட்டு குகையில் சிறைப்பட்டிருக்கிறது. கண்ணன் என்னும் அமுத

https://telegram.me/aedahamlibrary

தெய்வத்தைப் பற்றி அறிவாயோ? அவனது மகுடத்தின் உச்சியில் ஒரே ஒரு மயிற்பீலியை சூடியிருப்பான். நான் மகத மயிலின் உதிர்ந்து போன இறகு அல்ல. கண்ணன் என்னும் தெய்வத்தின் மகுடத்தில் உள்ள மயிற்பீலி நான். இதெல்லாம் உனக்குப் புரியாது. சதிகார கவுடில்யன் ஆட்டிவைக்கும் மதிகெட்ட வானரம் நீ. துணிவிருந்தால் நீ எனது கழுத்தில் வைத்திருக்கும் கத்தியை ஆழமாக இறக்கு. அந்த பல்லாங்குழி பலகை வாயனை சந்திப்பதை விட, எமதர்மனைக் காணுவதை பாக்கியமாகக் கருதுகிறேன்." - துர்தரா கூறினாள்.

அவளது மதிகூர்மையின் முன்பாக தனது வாளின் கூர்மை எடுபடவில்லை என்பதைப் புரிந்துகொண்ட சந்தா, இனியும் இவளுடன் இருப்பது ஆபத்து. தனது வாய் பேச்சால், இவனது கோபத்தைக் கிளறி, இவனை வெறியனாக்கி அவளைக் கொல்ல வைத்துவிடுவாள். அவளை உயிருடன் பிடித்துவரும்படி, குருநாதரின் கட்டளை.

அப்போதைக்கு மிகவும் சூடான பால் கலயத்தை கையில் வைத்துக்கொள்ள முடியாமல் கீழே வைப்பது போன்று, துர்தராவை கழற்றி விட்டால் போதும் என்று தோன்றி விட்டது சந்தாவுக்கு. ஆனால் இறுதி வெற்றி தனக்கே கிட்ட வேண்டும் என்கிற ஒரு ஆண்மகனது பிடிவாதமும் அவனுள் தோன்றி விட்டது. இந்தச் சிறு பெண்ணிடம் கடைசி வார்த்தையை பேசாமல் சென்றால், அவளின் இறுமாப்பு இரட்டிப்பாகிவிடும்.

அவனது கண்கள் சுழல அந்த நீண்ட முற்றத்தின் முடிவில் ஒரு அறை இருப்பதைக் கண்டான். துர்தராவை தரதரவென்று அந்த அறைக்கு இழுத்துச் சென்றான். அந்த அறையினுள் அவளை தள்ளுவதற்கு முன்பாக, அவளது கையை சற்றே முறுக்க, அதனால் ஏற்பட்ட வலியினால் அவளது முகம் அண்ணாந்து போக, சரியாக தனது முகத்தை அவளது முகத்திற்கு நேராக நிறுத்தி அவளது கண்களுள் ஆழமாக உறுத்துப் பார்த்தான் சந்தா.

"உன் தெய்வம் கண்ணன் சூடும் மயிலிறகா நீ? கண்ணன் தான் ஏற்கனவே ஒன்றை அணிந்திருக்கிறானே. நானே கண்ணனாக உன்னை எனது மகுடத்தில் சூடிக் கொள்கிறேன். அதுவரை... இந்த அறையில் கிட! உனது ஆணவம், அகந்தை, இறுமாப்பு ஆகியவற்றை, சர்ப்பம் தோல் உரிப்பது போன்று உரித்து எடுத்து விடு. பெண்மையின் அடக்கமாக வெளியே வந்து, குருநாதரிடம் மன்னிப்புக் கோரிவிட்டு, என்னிடம் வா. உன்னைச் சூடிக்கொள்கிறேன். இந்தக் காட்டு

https://telegram.me/aedahamlibrary

மிராண்டியின், காட்டு ராணியாகத் திகழ்வதற்கு தயாராகு!” - என்றபடி அவளை அறையினுள் தள்ளியவன் கதவை வெளிப்புறம் தாளிட்டு விட்டு, வெற்றிக் களிப்புடன், கவுடில்யனைத் தேடிச் சென்றான்.

அபேயன், பிபத்தன் ஆகியவர்களை விட மிகவும் சிரமமான கடமையை எனக்கு அளித்திருந்தார் குரு. அதனை நல்ல முறையில் நிறைவேற்றி விட்டேன், என்கிற திருப்தி சந்தாவின் முகத்தில் பரவியிருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 20. கண்ணாடி மாளிகையில் ஒரு போட்டி

தானநந்தனும். பத்மாங்கியும், சிறையில் இருக்க, துர்தரா அந்தப்புர அறை ஒன்றில் சந்தாவினால் அடைக்கப்பட்டிருந்தாள். தானநந்தாவின் அரியாசனத்தில் அவனிடமிருந்து கைப்பற்றப்பட்ட மகுடமும், செங்கோலும் வைக்கப்பட்டிருந்தன.

மகதம் இப்போது கவுடில்யனின் வசம். தானநந்தாவின் சிங்காசனத்தின் முன்பாக ஒரு இருக்கையை வைத்து அதன் மீது ஒரு மன்னனைப் போன்று கம்பீரமாக அமர்ந்திருந்தான், கவுடில்யன். காஞ்சியில் ஏழை காஞ்சனகுப்தரின் மகனாக வாழ்க்கையைத் துவக்கிய அவன், இன்று அத்திமலைத்தேவனது அருளால் மகத ராஜதந்திரியாகத் திகழ்கிறான். தன்னிடம் இருந்த எஞ்சிய தேவ உடும்பர அத்திமரத்துண்டினில், ஒரு தாயத்தினையும், தனக்கு ஒரு கைத்தடியினையும் செய்து கொண்டு விட்டான். ராமனுக்கு வில் போன்று, கண்ணனுக்கு குழல் போன்று, கவுடில்யனுக்கு தேவ உடும்பர கைத்தடி என்று வருங்காலம் கூற வேண்டும் என்று நினைத்தான். மன்னர் பதவியைக் காட்டிலும் ராஜதந்திரியின் பதவி இன்னும் உயர்ந்தது என்பதைப் புரிந்து கொண்டான். மன்னர் பதவிக்கு சிந்தை தேவையில்லை. மகுடம் தாங்க சிரசு இருந்தால் போதும். ஆனால் மகுடம் தாங்கிய மன்னனின் சிந்தையாக இருப்பவன் ராஜதந்திரி அல்லவா. இனி நான்தான் மகதத்தின் நிரந்தர ராஜதந்திரி. மன்னனாக எவர் வேண்டுமானாலும் திகழலாம்.

பிபத்த தேவன் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான். அவனுடைய ஆதரவாளர்கள் அவனது பட்டாபிஷேகம் எப்போது என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஹரஹரதேவரின் மகன் உத்தாலன் பிபத்த தேவனின் ஆதரவாளனாக மாறியிருந்தான். ஒரே குடும்பத்தில் இப்படிப் பல்வேறு குழாம்களுக்கு ஆதரவாளர்கள் இருந்து விட்டால், குடும்ப ரதம், யார் ஆட்சிக்கு வந்தாலும் ஓடும் அல்லவா?

தந்தைக்கு மிஞ்சியதல்ல, உத்தாலனின் பதவி வெறி. "பிபத்தா! மன்னர் பதவி உனது குடும்பச் சொத்து. அதை கவுடில்யன் என்ன உனக்கு அளிப்பது? பட்டாபிஷேகம் முடிந்ததும், அந்த வனவாசியையும், அந்த அகோர பார்ப்பனனையும் விரட்டி தள்ளு. உனது தாய் தந்தை மற்றும் சகோதரியை சிறையில் இருந்து மீட்டு அந்தப்புரத்தில் காவலில் வை.

https://telegram.me/aedahamlibrary

எனது தந்தை வகித்த தலைமை அமைச்சர் பதவியை நான் பார்த்துக் கொள்கிறேன்!” - பிபத்த நந்தனிடம் கூற, பிபத்தன் பதில் கூறவில்லை. கவுடில்யன் இவனுக்கு எப்போது பட்டாபிஷேகம் செய்யப் போகிறான்? என்று அவனிடமே கேட்டுவிடுவது என்கிற தீர்மானத்திற்கு வந்திருந்தான், பிபத்தன்.

தானநந்தாவின் கொலு மண்டபத்தில் ஆலோசனை துவங்கியது. கவுடில்யன் தானநந்தாவின் அரியணை முன்பாக மற்றொரு இருக்கையில் அமர்ந்திருக்க, அவனது வலப்புறம் பிபத்த நந்தனும், இடப்புறம் சந்தாவும் அமர்ந்திருந்தனர்.

சந்தாவின் ஆதரவாளர்கள் பலபீமா தலைமையில் அவையின் இடப்புறமும், பிபத்தனின் ஆதரவாளர்கள் உத்தாலன் தலைமையில் அவையின் வலப்புறமும் அமர்ந்திருந்தனர்.

கவுடில்யன் யோசனையுடன் அமர்ந்திருந்தவன், அவையோரைப் பார்த்தான்.

“அவையோரே! இந்த அரசவைக்கு முன்பு ஒரு முறை நான் வந்தபோது, தானநந்தாவின் குடும்பத்தால் அவமதிக்கப்பட்டேன். ஆனால் இங்கிருக்கும் பிபத்தன் மட்டுமே சற்றே பணிவுடன் என்னுடன் பேசினான். அவனது தாய் பத்மாங்கி என்னை ஆதரித்துப் பேசியதால் அவளை விடுதலை செய்வதாகக் கூறினேன். ஆனால் அவளோ, கணவருடன் இருக்கவே தான் விரும்புவதாகக் கூறி விட்டாள். உலகத்தில் உள்ள எல்லா ஆணவத்தையும், இறுமாப்பையும் கொண்ட, துர்தரா இப்போது அடைபட்டுக் கிடக்கிறாள். மீண்டும் அவள் வெளியுலகைக் காண வரும்போது அடக்கத்துடன் நடந்து கொள்வாள் என்று நினைக்கிறேன். இல்லையேல், அவளது வாழ்க்கை கடுமையாக மாறும்!” என்ற கவுடில்யன், சந்தாவைப் பரிவுடன் பார்த்தான்.

“எனது படைகளின் வெற்றிக்கும், நான் மகத ராஜதந்திரியாக உட்காருவதற்கும் முக்கியக் காரணமாகத் திகழ்வது சந்தாவின் வீரம். அதற்காக அவனுக்கு முக்கியப் பரிசு ஒன்றைத் தருகிறேன்!” என்று அறிவித்த கவுடில்யன், வாயிலில் நின்ற காவலனைப் பார்த்து தலையசைக்க, அமரேந்திரி உள்ளே நுழைந்தாள்.

“உனது தாய் அமரா இவள் தான், சந்தா! அவையோரே! நமது சந்தா வனவாசி இல்லை! மகதத்தின் குதிரைப்படைத் தலைவராகத் திகழ்ந்து,

https://telegram.me/aedahamlibrary

போரில் வீர மரணம் எய்திய உதயச்சந்திரனின் மகன். அவனுக்கும், அமரா என்கிற இந்த அமரேந்திரிக்கும் காந்தர்வ விவாகத்தில் உதித்த செல்வன் இவன். உதயன் போரில் மரணம் அடைந்ததால், அமரா மயங்கிய நிலையில் இருக்கும் போது அவளுக்குப் பிறந்த மகனை காட்டில் வீசி எறிந்து விட்டாள், அவளது அத்தை. அமரேந்திரியின் அத்தை வேறு யாருமல்ல. அபேயனின் தாய் வழி பாட்டியார். இந்தத் தகவலை அவளே என்னிடம் கூறினாள்! ஆக, இனி சந்தாவை வனவாசி என்று யாரும் அழைக்கக் கூடாது. மாபெரும் போர்த்தியாகி ஈன்ற சுத்த வீரன் அவன்!" - கவுடில்யன் கூறியதும் அவையில் கரகோஷம் எழுந்தது. சந்தா தனது இருக்கையில் இருந்து எழுந்து, ஓடிச்சென்று தனது தாயை அணைத்துக் கொள்ள, அவள் கண்ணீர் விட்டு கதறத் துவங்கினாள். அவர்களது பாச பரிவர்த்தனையைக் கண்டதும், அவையோர் கரகோஷம் எழுப்ப, அமரா அவையை வணங்கிவிட்டு வந்த வழியே நடந்தாள். தனது தாயையே தனக்குப் பரிசாகக் கொடுத்த கவுடில்யனை உணர்ச்சியுடன் நோக்கிய சந்தா, தான் போர்த் தியாகிக்குப் பிறந்தவன் என்கிற பெருமை கிடைத்துவிட, கம்பீரமாக தனது இருக்கைக்குத் திரும்பினான். ஆனால் பிபத்தனின் ஆதரவாளனான உத்தாலன் இதனை வரவேற்கவில்லை என்பது அவனது முகபாவமே காட்டித் தந்தது.

கவுடில்யனின் மனத் தராசில், ஒரு தட்டில் பிபத்தனும், மற்றொரு தட்டினில் சந்தாவும் அமர்ந்திருப்பதை அவர்கள் அறிவார்கள். தானநந்தாவின் மகன் என்பதாலும், சந்தா வனவாசி என்பதாலும் நாடாளும் அருகதையை பிபத்தனே கொண்டிருந்தான். எனவே பிபத்த நந்தனுக்கே நாடாளும் உரிமையை அளிக்க வேண்டும் என்று வாதிடுவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்த உத்தாலன், சந்தா, அமரா - உதயனின் காதலில் உதித்தவன் என்பதைக் கேட்டதும் திடுக்கிட்டான். கவுடில்யனின் தராசு சந்தாவின் பக்கம் சரிகிறதோ என்கிற சந்தேகம் அவனுள் எழுந்தது.

உடனே தனது இருக்கையிலிருந்து எழுந்து நின்றான்.

"கவுடில்யரே! இப்போது அமரா - உதயனின் காதல் கதை எதற்கு? தானநந்தா சிறைக்குள் அடைக்கப்பட்ட பிறகு, மகத அரியணை மன்னன் இன்றி உள்ளது. சற்றே திரும்பிப் பாருங்கள்! தானநந்தாவின் சிரசை அலங்கரித்த மகுடம் ராஜ ரத்தம் பாயும் சிரசினை நாடிக் காத்திருக்கிறது. காதல் உணர்வு மிகுதியாகக் கொண்ட ரத்தம் பாயும்

https://telegram.me/aedahamlibrary

சிரசைக் காட்டிலும், வீர உணர்வு அதிகமாகக் கொண்ட ரத்தம் பாயும் சிரசை நாட்டின் மன்னனாகத் தேர்ந்து எடுங்கள்! பிபத்த நந்தரின் பட்டாபிஷேகத்திற்கு நாள் குறிக்க வேண்டுகிறேன்!" - உத்தாலன் சொன்னான்.

"நான் ராஜதந்திரி. எப்போது, எதைச் செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும். புதிய மன்னர் யார் என்பது குறித்து நான் எந்த முடிவினையும் எடுக்கவில்லை. நான் ராஜதந்திரி. இப்போதைக்கு எல்லா அதிகாரமும் எனக்கே! பிபத்தன், சந்தன், ஏன் நான் கூடத்தான் மன்னர் பதவிக்கான போட்டியில் இருக்கிறேன். ஆனால் மன்னனை விட சர்வ வல்லமை பொருந்திய ராஜதந்திரி பதவிக்கு என்னை விட்டால் வேறு தகுதியான மனிதர் கிடைக்க மாட்டார்கள் என்பதால் நான் அந்தப் பதவியிலேயே தொடர தீர்மானித்து விட்டேன். மன்னர் பதவிக்கு பிபத்த நந்தன், சந்தா இவர்களில் ஒருவனை மன்னனாக விரைவில் அறிவிப்பேன்.! புதிய மன்னன் தானநந்தாவிற்கும், துர்தராவிற்கும் விதிக்கப்பட உள்ள தண்டனையை அறிவிப்பான்," என்று கவுடில்யன் கூறினான்.

"எது எப்படி இருந்தாலும், பிபத்தனே மன்னன்!" -- என்று கூறியபடி தனது ஆதரவாளர்களுடன் கலைந்து சென்றான், உத்தாலன். -

பலபீமாவுடன் புஷ்பபுர அரண்மனையில் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஜாகைக்குச் சென்ற சந்தாவின் பார்வை, நந்தவனத்தைக் கடந்து எதிர்ப்புறம் இருந்த அரண்மனையின் அந்தப்புர சாளரங்களை கவனித்தது. தற்போது துர்தரா என்ன செய்து கொண்டிருப்பாள். சென்று பார்க்கலாமா? அவளது மனம் சிறிதேனும் மாறுதலை அடைந்திருக்குமா?

அமரா அவனுக்காக தானே தயாரித்த உணவைக் கொண்டு வந்து பாசத்துடன பரிமாறினாள். அவளது பாச மழையில் நனைந்து திக்குமுக்காடிப் போனான், சந்தா.

"மகனே! உன்னிடம் ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன்!" - அமரா கேட்க, அவளை அன்புடன் நோக்கினான், சந்தா.

"அரச குடும்பத்திற்கு உன்னால் எந்த ஆபத்தும் நேரக்கூடாது. எனக்கு சத்தியம் செய்து கொடு!" என்று அமரா கை நீட்டினாள்.

https://telegram.me/aedahamlibrary

தாயை சங்கடத்துடன் நோக்கினான், சந்தா.

"அம்மா! நான் ஒரு அம்புதான். எனது வில் கவுடில்யன். நான் சிரசென்றால் அவன் என்னுள் இருக்கும் சிந்தை. சத்தியம் செய்வதோ, வாக்கு மீறுவதோ, கொலை செய்வதோ, இரட்சிப்பதோ எதுவுமே எனது கையில் இல்லை. கவுடில்யன் சொல்கிறான்; சந்தா செய்கிறான். நானாக அரச குடும்பத்துக்கு ஆபத்து விளைவிக்க மாட்டேன். ஆனால் கவுடில்யன் அங்ஙனம் விரும்பினால், என்னால்தான் அவர்கள் மடிவார்கள்.! இது தொடர்பாக வேறு எந்த வாக்கினையும் என்னால் அளிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்!" சந்தா கூறினான்.

"ஒரு தாயின் விருப்பத்தை விடவா, அந்த வேதியனின் வாக்கினை பெரிதாக நினைக்கின்றாய், சந்தா?" - அமரா கேட்டாள்.

"உன்னையே எனக்குக் காட்டியவன் அவன்தான். ஆக, அவன் கட்டளையினை அடிபணிவதே எனது தலையாய கடமை!" - சந்தா கூற, அறையின் சாளரத்தருகே நின்றபடி அவர்களின் உரையாடலைச் செவிமடுத்துக் கொண்டிருந்தான், கவுடில்யன். ஒரு மன்னனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், அந்தரங்கத்தில் தனித்திருக்கும் வேளைகளில் அவனது செயல்பாடுகளை கவனிக்க வேண்டும். பலர் தனிமையில் இருக்கும்போது, அருவருக்கத்தக்க செயல்களையும், கோணங்கி சேட்டைகளையும் செய்ய முற்படுவார்கள். அவர்களுள் இருக்கும் தாமசம் அவர்களை அங்ஙனம் செய்ய வைக்கும். அப்போது அவர்களின் நடவடிக்கைகளை நோட்டம் விட்டால், அவரவரது தகுதிகள் அனைத்தும் தெரிய வரும்.

சற்று முன்தான், பிபத்தனின் அறைக்குச் சென்று அவனை நோட்டம் விட்டிருந்தான் கவுடில்யன். உத்தாலனுடன் சேர்ந்து பட்டாபிஷேகத்திற்கு ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான்.

"மன்னனாகப் பதவியேற்றபின் அந்த வேதியனையும், காட்டுவாசியையும் விரட்டி அடித்து விடு!" என்று உத்தாலன் மீண்டும் கூற, மௌனமாக அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தான், பிபத்தன்.

உத்தாலன் கூறியதற்கு மறுத்துப் பேசாமல் மௌனத்தைக் கடைப்பிடித்ததால் பிபத்தனை மன்னர் பதவிக்கு ஏற்றவன் அல்ல என்று புறக்கணிக்க முடியாது. அதே போன்று, சந்தா தாயைவிட தன்மீது அதிக

https://telegram.me/aedahamlibrary

பாசம் கொண்டிருப்பதால் அவனுக்கு மகுடத்தை எடுத்து அணிவித்து விடவும் முடியாது? இருவரில் நாட்டுக்கு எவன் பிரயோஜனப்படுவான் என்பதையே பார்க்க வேண்டும். இதுவரை அரச பதவியோ, அதிகாரமோ, அரண்மனை போகங்களோ, பெண் சுகமோ, எதையுமே அனுபவித்திராதவன் சந்தா. காட்டில் வசித்தவன். இந்த சுகங்கள் கிடைத்ததுமே மனது மாறலாம்.

அரச குடியில் பிறப்பு, மக்கள் ஆதரவு, அனுபவம் எல்லாம் பிபத்தனுக்கு சாதகமான அம்சங்கள். வீரம், வலிமை, பணிவு, துடிப்பு, ஆற்றல், பக்தி இவை அனைத்தும் சந்தாவிடம் உள்ளது.

ஆனால் ---

ஒரு மன்னனுக்கு மிகவும் இன்றியமையாத ஒரு குணம் இருவரில் யாரிடம் உள்ளது? தன்னிடம்தான் அந்த குணம் நிறையவே உள்ளது. ஆனால் அவன் தான் போட்டியில் இல்லையே! ஒரு மன்னனுக்கு இன்றியமையாத அந்த குணம், சமயோசிதம்! பிபத்தன், சந்தா, இருவரில் சமயோசித புத்தி யாருக்கு இருக்கிறதோ அவனுக்குத்தான் மன்னர் பதவி.

தீர்மானத்திற்கு வந்த கவுடில்யன் அன்று மாலையே நாட்டு மக்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பினை செய்தான்.

திங்கட்கிழமை அன்று இரவு நந்தவன கண்ணாடி மாளிகையில் பிபத்தன், சந்தா இருவரிடையே ஒரு போட்டி நடைபெறும். போட்டியில் வெற்றி பெறுபவரே மன்னன் என்று கவுடில்யன் அறிவித்ததும், மகத நாடெங்கும் பரபரப்பு. பிபத்தன் வெற்றி பெறுவான் என்று சிலரும், சந்தாவே வெற்றி பெறுவான் என்று இன்னும் சிலரும் கூறிக்கொண்டு ஆங்காங்கே கூடிப் பேசிக்கொண்டிருந்தனர்.

சோமவாரம் என்கிற திங்கட்கிழமை இரவு நேரம். நந்தவனத்தின் மையத்தில் இருந்த கண்ணாடி மாளிகை தட்டிகளால் மறைக்கப்பட்டிருந்தது. கண்ணாடி மாளிகையைச் சுற்றி ஆங்காங்கே தீப்பந்தங்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. கண்ணாடி மாளிகைக்கு சற்று அப்பால் ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடையின் கீழாக நான்கு இருக்கைகள் வைக்கப்பட்டிருந்தன. சற்று தள்ளி அதிகாரிகளுக்கு தனியாகவும், பொது மக்களுக்கு தனியாகவும், பந்தல்கள் அமைக்கப்பட்டு அதனுள் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. அந்த

https://telegram.me/aedahamlibrary

சூழ்நிலையை ரம்மியமாக மாற்றின, பாணர்களின் இசைப்பொழிவு. அரண்மனை உச்சியில் இருந்த உப்பரிகை மாடத்தில் பெரிய முரசு ஒன்றை ஒலித்துக்கொண்டிருந்தான் ஒருவன். அரண்மனை நந்தவனத்தில் அதிகாரிகளும், பிரமுகர்களும், மக்களும் கூடி விட்டனர். சரியாக வானில் நிலா ஒளிர்ந்ததும், கவுடில்யன், அரண்மனை படிகளில் இருந்து இறங்கி வந்தான். இரு காதுகளிலும் தங்க வளையங்கள். நெற்றியில் தீர்மையான கஸ்தூரி திலகம், கழுத்தினில் நவரத்தின மணிகள் மாலையாக ஊசலாட, ஒவ்வொரு படியாக இறங்கி வந்தான். வெண்பட்டு வேட்டியை அணிந்து, செம்மை வண்ணத்தில் சால்வை ஒன்றை போர்த்தியிருந்தான். கையில் ஸ்வர்ண கடாவும், வலது காலில் மட்டும் ஸ்வர்ண தண்டையும் அணிந்திருந்தான்…

அவன் ஐந்தாறு படிகள் இறங்கியவுடன், அரண்மனையிலிருந்து பிபத்தனும், சந்தாவும் இறங்கி வந்தனர். ஒலிக்கும் முரசின் இசைக்கேற்ப காலடி வைத்து அவர்கள் இறங்கி வந்தனர். இருவருமே, மிகவும் கம்பீரமாக தங்களை அலங்கரித்துக் கொண்டிருந்தனர். மகத நாட்டின் நீல வண்ணத்தில் பீதாம்பரத்தைத் தரித்திருந்து, மஞ்சள் உத்திரியத்தை அணிந்திருந்தான் பிபத்தன். உடலெங்கும், ஸ்வர்ண, வைர, வைடூரிய ஆபரணங்கள் மின்னின. கம்பீரமாக நடை பயின்றபடி படிகளில் இறங்கத் துவங்கினான், பிபத்தன்.

சந்தாவும் அதே வேகத்திலேதான் படியிறங்கினான்… இருவரின் காலடிகளும் ஒரே சீராக படிகளைக் கடந்து கொண்டிருந்தன. பிபத்தனின் அளவு ஆடம்பரமாக தன்னை அலங்கரித்துக் கொள்ளவில்லை என்றாலும், சந்தாவின் தேகத்தில் இயற்கையிலேயே மிளிர்ந்த பொலிவு அவனை அழகனாகக் காட்டியது. செவிகளில் இரும்பு வளையங்கள். கையில் முறுக்கேறிய அவனது தசைகள் தெறித்து விடாமல் பிடித்து வைத்திருப்பது போன்று அவனது கையில் உறவாடிய வெள்ளி கங்கணம், கதாயுதத்தைப் போன்ற அவனது கால்கள், மிகவும் கம்பீரமாகக் காட்சி தந்தான் சந்தா. பிபத்தனை விட உயரமாகக் காட்சியளித்தான் சந்தா.

இருவரைக் கண்டதும் அவரவர் ஆதரவாளர்கள் கோஷங்களை எழுப்பினர். வருங்கால மன்னர் பிபத்தன் என்று சிலரும், வருங்கால மன்னர் சந்தா என்று சிலரும் ஆரவாரம் செய்ய, இருவரும் கவுடில்யன் ஏறி நின்ற மேடையில் ஏறி அவனது பின்பாக நின்றார்கள்.

இருவருக்குமிடையே நடக்கப்போவது வாட்போரா, மல்யுத்தமா என்று

https://telegram.me/aedahamlibrary

மக்கள் கிசுகிசு என்று கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தனர்.

கவுடில்யன் தனது குரலை உயர்த்தினான்.

"மகாஜனங்களே. ஆணவம் பிடித்த தானநந்தாவின் ஆட்சி ஒழிந்தது. இனி புதிய நல்லாட்சி மலரப் போகின்றது. இனி மகத அரியாசனத்தில் மக்கள் நலனை கருதும் மன்னன் அமர்ந்து கோலோச்சுவான். அந்த தர்ம சிந்தனை உள்ள புதிய மன்னர் யார் என்கிற கேள்வி உங்கள் மனதினில் எதிரொலித்துக்கொண்டு இருப்பதை நான் அறிவேன். இங்கே பிபத்த நந்தனும், சந்தாவும் நிற்கின்றனர். இவர்கள் இருவரில் ஒருவனே மகத மன்னனாக அமரப்போகிறான். அந்த ஒருவன் யார்?

“அதை அறியவே இங்கே போட்டி ஒன்று நடத்தப்படுகிறது. அந்தப் போட்டி என்ன என்பதை இப்போது கூறுகிறேன். அது வாட்சண்டையோ, மல்யுத்தமோ, வில் அம்பு எறிவதில் போட்டியோ அல்லது விவாத தர்க்கமோ அல்ல. சிறு பரீட்சை ஒன்றை உங்களை சாட்சியாக வைத்துக் கொண்டு வைக்கப் போகிறேன். சமயோசித புத்தி இருவரில் யாருக்கு இருக்கிறது என்பதைக் காணவே இந்தப் பரீட்சை. இதில் வெல்பவனே, நம் மகத மன்னன். நான் விருப்பு வெறுப்பின்றி, எவ்வித பாரபட்சமும் இன்றி, உங்கள் கண் முன்பாக வைக்கும் சிறு பரீட்சை. இந்தப் பரீட்சையை நான் நடத்தினாலும், நீதிபதிகளாக நீங்கள் தான் இருக்கப் போகின்றீர். நீதிபதி குழாமை இப்போது அறிவிக்கிறேன்.

“பிபத்த நந்தனின் தோழன் உத்தாலன், சந்தாவின் தோழன் பலபீமா, அதிகாரிகளின் சார்பாக, அரண்மனை விவகார அதிகாரி ராஜஹம்சர் மற்றும் பொதுமக்கள் சார்பாக யாரேனும் ஒருவர் வந்து நீதிபதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆசனங்களில் அமரலாம்!” - என்று கவுடில்யன் கூறியதும், உத்தாலன், பலபீமா, மற்றும் ராஜஹம்சர் ஆகியோர் இருக்கைகளில் அமர்ந்தனர். காவலன் ஒருவன் பொதுமக்கள் பகுதியிலிருந்து முதியவரான ஒருவரை கைபிடித்து அழைத்து வந்து, நான்காவது ஆசனத்தில் அமர வைத்தான்.

நீதிபதிகள் வந்து அமர்ந்ததும், கவுடில்யன் தனது வலக்கையினில் ஏந்தியிருந்த, நீல வண்ண சுருக்கு பையை அனைவரும் பார்க்கும் விதமாக தனது தலையின் மீதாக உயர்த்தினான்.

"அனைவரும் கவனியுங்கள். இந்த நீல வண்ணப் பையில் இருந்து நான்

https://telegram.me/aedahamlibrary

உடும்பர மரத்தினால் செய்யப்பட்ட ஒரு தாயத்தினை எடுத்திருக்கிறேன். இதனை இவர்களில் ஒருவரின் கழுத்தில் நான் கட்டுவேன். தாயத்து கட்டப்பட்டவர் அதோ அந்த கண்ணாடி மாளிகையில் சென்று உறங்க வேண்டும். அவர் உறங்கியதும், மற்றவர் சென்று முன்னவரின் உறக்கம் கலையாமல் அவரது கழுத்தில் அணிந்திருக்கும் மரத் தாயத்தைக் கழற்றி வர வேண்டும்.

போட்டியின் நிபந்தனைகள் இதுதான்.

* தாயத்தை அறுத்து வரக் கூடாது.

* தாயத்து நூல் அறுபடாமல் கழற்றி எடுத்து வர வேண்டும்.

* தூங்குபவரின் உறக்கம் கலையக்கூடாது.

* முதலில் தாயத்தை அவிழ்க்க முயல்பவர், இரவு சுக்கிர ஹோரையில் தொடங்கி, புதன், சந்திரன், சனி, குரு மற்றும் அங்காரக ஹோரை வரை ஆறு ஹோரைகள் அவகாசம் எடுத்துக் கொள்ளலாம். அங்காரக ஹோரை முடிவதற்குள் தாயத்தைக் கழற்றவில்லை என்றால் அவர் தோல்வி அடைவார்.

* அடுத்து தாயத்தினைக் கழற்ற முயல்பவர், சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி மற்றும் குரு என்கிற ஆறு ஹோரைகளில் அவகாசம் எடுத்துக்கொண்டு, குரு ஹோரை முடிவதற்குள் தாயத்தினைக் கழற்ற வேண்டும். போட்டியாளர் இருவருக்கும் ஆளுக்கு ஆறு ஹோரைகள். இவையே போட்டியின் நிபந்தனைகள்.

விடியற்காலை சூரியன் உதிப்பதற்குள் யார் மன்னன் என்பது அறிவிக்கப்படும்!” என்று கவுடில்யன் அறிவித்ததும், கூட்டத்தினரின் இடையே ஒரு ஏளனச் சிரிப்பு எழுந்தது. “இது என்ன போட்டி? சிறுபிள்ளைத் தனமாக இருக்கிறதே.! வீர விளையாட்டுகளை நடத்தி இருவரில் சிறந்த வீரரைத் தேர்ந்தெடுத்து அவனை மன்னனாக அறிவிப்பார்கள் என்று வந்தால், ஏதோ தாயத்து கட்டி விளையாடுகிறானே, இந்த கவுடில்யன்… இது எந்த வகை ராஜதந்திரம் தெரியவில்லை!” என்று ஏளனப் பேச்சுகள் அங்கே ஒலித்தன.

சந்தாவும், பிபத்தனும் கூட குழப்பத்துடன் கவுடில்யனை பார்த்தனர். இது எந்த வகை போட்டி.? கழுத்தில் கட்டியுள்ள தாயத்தை உறக்கம்

https://telegram.me/aedahamlibrary

கலையாமல் கழற்றுவது சிரமமான காரியமா என்ன? இதனை ஏன் கவுடில்யன் பெரிய போட்டியாக அறிவிக்கிறான்?

“இந்தப் போட்டியில் வெல்பவனே, மகத மன்னன்!” - என்ற கவுடில்யன், மேடையில் இருந்தபடியே நீதிபதிகளை நோக்கினான்.

“நீதிபதிகளே.! நீங்கள் கூறுங்கள்.! முதலில் யாருக்கு நான் தாயத்தை கட்ட வேண்டும்?” - கவுடில்யன் மேடையில் இருந்தபடியே கேள்வி எழுப்பினான்.

"இந்த பிராமணனுக்கு பித்து பிடித்து விட்டதா என்ன? தாயத்தை கட்டுவதும் அவிழ்ப்பதும் ராஜ பதவிக்கு ஒரு போட்டியாகக் கூடுமா? தர்ப்பை ஏந்துபவனை ராஜதந்திரியாக அமர வைத்தால் தாயத்தை வைத்து சித்து விளையாட்டுகளில் தான் ஈடுபடுவான்.!" - கேலியாகக் கூறிய உத்தாலன், ராஜஹம்சரைப் பார்த்தான்.

"நீங்களே, அந்த பிராமணனின் கேள்விக்குப் பதில் கூறுங்கள்!” -- என்று அலட்சியமாகக் கூற, ராஜஹம்சர் மற்ற நீதிபதிகளை ஒருமுறை பார்த்துவிட்டு, கவுடில்யனைப் பார்த்தான்.

“இராஜதந்திரியே! தானநந்தாவின் மகன், இதுவரை யுவராஜனாக இருந்தவன் என்பதால் பிபத்த நந்தனுக்குத்தான் முதல் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். சந்தாவின் கழுத்தினில் தாயத்தை கட்டி விடுங்கள். அவர் சென்று கண்ணாடி மாளிகையில் உறங்கட்டும். பிபத்த நந்தன் அந்த தாயத்தினைக் கழற்றி வரட்டும்!” என்றதும், கவுடில்யன் சந்தாவின் கழுத்தினில் தனது வசம் இருந்த தேவ உடும்பர அத்தி மரத் தாயத்தினை கட்டி, அவனது பின்னங்கழுத்தினில் நன்றாக முடிப் போட்டான்.

"சந்தா! சென்று நன்றாக உறங்கு! அத்திமலைத்தேவனின் மீது பாரத்தை போட்டு விட்டு செல்!” - கவுடில்யன் கூற, சந்தா அவனைப் பணிந்து விட்டு, நீதிபதிகளையும், கூட்டத்தினரையும் வணங்கி விட்டு, கண்ணாடி மாளிகையை நோக்கி நடந்தான். இருபுறமும் தீப்பந்தங்கள் ஒளிர்விட, சந்தாவின் கம்பீரமான தோற்றமும், நடையும், அங்கே குழுமியிருந்த பெண்களைச் சொக்கிப் போகச் செய்தன.

பாணர்கள் குழாம் ஒன்று மேடையேறிக் கூட்டத்தினரை தங்களது பாடல்களால் மகிழ்விக்க, கவுடில்யன் மட்டும் அதில் லயிக்காமல்

https://telegram.me/aedahamlibrary

நடக்கப் போவதையே நினைத்துக்கொண்டிருந்தான். சந்தா, பிபத்தன் இருவரில் யார் மன்னனாகப் போகிறார்கள் என்பது அவனுக்குப் புலப்படாத விஷயம். இவன் பரீட்சையை அறிவித்து விட்டான். புத்தியுள்ளவன் பதவியை அடையட்டும். தனக்குள் கூறிக்கொண்டு, பாடல் இசைத்துக்கொண்டிருந்த பாணர்களையே பாரத்துகொண்டிருந்தான் கவுடிலயன்.

சிறிது நேரம் கழித்து, பாணர்களைக் கையசைத்து அப்பால் போகச் சொன்னான்.

பணியாளன் ஒருவனை சமிக்ஞை செய்து அழைத்தான் கவுடில்யன்.

"அப்பனே! நீ சென்று கண்ணாடி மாளிகையில் சந்தா நித்திரை செய்கிறானா என்று சொன்னதும், அந்த பணியாள் கண்ணாடி மாளிகையை நோக்கி நடந்தான். போன வேகத்திலேயே திரும்பி வந்தான், பணியாளன்.

"சுவாமி! அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார். மெல்லிய குறட்டையொலியும் கேட்கின்றது!" என்றதுமே, பிபத்த நந்தனை திரும்பி நோக்கினான், கவுடில்யன்

“பிபத்தா! இதோ இப்போது. சுக்கிர ஹோரை தொடங்கப் போகிறது. (ஒரு ஹோரை இன்றைய கணக்குப்படி ஒரு மணி நேரம்) மொத்தம் உனக்கு ஆறு ஹோரைகள் அவகாசம். அங்காரக ஹோரை முடிந்ததும் உனது அவகாசமும் முடிந்து விடும். அதற்குள் நீ சந்தாவின் கழுத்தில் இருந்து தாயத்தினை எடுக்க வேண்டும். நினைவில் கொள்! அவனது உறக்கம் கலையாமல், தாயத்து நூலினை அறுக்காமல், அதனைக் கழற்றி வர வேண்டும்! ம்ம்ம் புறப்படு!”

பிபத்த தேவன் புறப்பட, உத்தாலன் அவனைப் பார்த்து கட்டை விரலை உயர்த்தினான். அவனது ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்ய, பிபத்தன் கண்ணாடி மாளிகையை நோக்கி நடந்தான்.

நந்தவன போட்டியில் நிகழ்ந்த ஆரவாரங்களும், கூச்சல்களும், சிறைச்சாலை கதவுகளைத் தாண்டிச் சென்று தானநந்தாவின் செவிகளில் மோதின.

"அந்த வேதியக் குமரனை மகதத்திற்குள் அனுமதித்திருக்கவே கூடாது!”

https://telegram.me/aedahamlibrary

மனைவி பத்மாங்கியிடம் புலம்பினான், தானநந்தா.

"அவனை நம் பெண் அவமதிக்காமல் இருந்திருந்தால், இந்நிலை ஏற்பட்டிருக்காது!" - தன் பங்கிற்கு பத்மாங்கியும் புலம்பினாள்.

அந்தப்புர அறை ஒன்றில் அடைக்கப்பட்டிருந்த துர்தரா அறை சாளரம் வழியாக வெளியே நடப்பதை கவனிக்க முயன்றாள். கண்ணாடி மாளிகையும், அங்கே குழுமியிருந்த கூட்டமும் அவள் கண்களில் புலப்படவில்லை என்றாலும் நந்தவன பாதை அலங்கரிக்கப்பட்டு, பட்டத்து யானை மகத்தீபா அங்கே அடுத்த மகத மன்னனைச் சுமந்து செல்வதற்காகத் தயாராக இருப்பதை கவனித்தாள். ஆக, நாளை விடியலில், அவள் சகோதரன் பிபத்தன் மன்னனாக மகத தீபாவின் மீது பவனி வரப்போகிறான் போலும்.

பிபத்த நந்தன் கண்ணாடி மாளிகையை நெருங்கியதும் அவனது ஆதரவாளர்கள், மகத மன்னர், பிபத்தர் வாழ்க என்று கூக்குரலிட, கவுடில்யன் அவர்களைக் கையமர்த்தினான்.

"உங்கள் ஆர்ப்பாட்டத்தால், சந்தாவின் உறக்கம் கலைந்து விட்டால், பிறகு பிபத்தன் மன்னன் ஆகும் தகுதியை இழந்து விடுவான்!" - என்று அவன் எச்சரிக்கை விடுக்க, கூட்டம் அமைதி அடைந்தது.

மீண்டும் பாணர்கள் மேடையேறி பாடத்துவங்க, கவுடில்யன் அமைதியாக அவர்களது பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தான். சுக்ர ஹோரை முடிந்து, புதன் ஹோரை துவங்க, பிபத்தன் வெளியே வரும் அறிகுறியே தென்படவில்லை. புதன் ஹோரை முடிந்து, சந்திரன், சனி, குரு என்று மூன்று ஹோரைகளும் முடிந்து, இறுதியாக அங்காரக ஹோரையும் நிறைவேறும் தருணம் வந்து விட்டது. - அங்காரக ஹோரை கழிந்ததும்தான், பிபத்த நந்தன் வெளியே வந்தான். அவனைப் பார்த்ததுமே அவனது ஆதரவாளர்கள் கூக்குரலை எழுப்பினர். ஆனால் தளர்ந்த நடையுடனும், சோர்ந்த முகத்துடனும், தலைகுனிந்து வந்த மாதிரியிலேயே கவுடில்யன் யூகித்து விட்டான். அவனால் அந்த தாயத்து நூலின் முடியைப் பிரித்தெடுத்து தாயத்தினை அவிழ்த்து வர முடியவில்லை என்பதை.

அவன் முன்பாக வந்து நின்ற, பிபத்த நந்தனை நோக்கி புருவங்களை உயர்த்தினான், கவுடில்யன்.

https://telegram.me/aedahamlibrary

"கவுடில்யரே! என்னால் அந்த தாயத்தை அவனது உறக்கம் கலைக்காமல் எடுக்க இயலவில்லை. இரு முறை முயன்றும், அவன் உறக்கத்தில் புரண்டான். எனவே என்னால் ஒன்றும் செய்ய இயலவில்லை! வேறு ஏதாவது போட்டியை அறிவியுங்கள். நான் ஜெயித்துக் காட்டுகிறேன்!" - தனது இயலாமையை சவடால் பேச்சினால் மறைக்க முயன்றான், பிபத்தன்.

கவுடில்யன் பதில் கூறவில்லை. பணியாளை மீண்டும் அருகே அழைத்தான்.

"நீ சென்று, சந்தாவை எழுப்பி வா!" - கவுடில்யன் கூறியதும் அவன் கண்ணாடி மாளிகையை நோக்கி நடந்தான். அவன் திரும்பியபோது அவன் பின்பாக கம்பீர மதயானையைப் போன்று நடந்து வந்தான், சந்தா

"பிபத்தனாலேயே இயலாத காரியத்தை இந்தத் தடியன் செய்துவிடப் போகிறானா?" - உத்தாலன் தனது ஏமாற்றத்தை மறைக்க கடுமையான சொற்களை பிரயோகித்தான். தன்னை ஆதரித்து எழும் கோஷங்களையும், எதிராக எழுப்பப்படும் ஓலங்களையும் லட்சியம் செய்யாமல், கவுடில்யனின் முகத்தை மட்டுமே நோக்கியபடி நடந்து வந்தான், சந்தா.

கவுடில்யன் அவன் கழுத்தில் இருந்த தாயத்தினை அறுத்து மற்றொரு நூலில் பிணைத்து பிபத்த நந்தனை தன்னருகே அழைத்தான். தான் தோல்வியடைந்து விட்டோம் என்பதை விட, சந்தாவை எப்படியாவது தோல்வியடையச் செய்ய வேண்டும் என்கிற உத்வேகத்தில், கவுடில்யனை நோக்கினான்.

"அவனுக்குக் கட்டியதை விட, எனக்கு இன்னும் வலுவாகக் கட்டுங்கள். ஒன்றிரண்டு முடிகளை அதிகமாகப் போடுங்கள். அவனாலும் தாயத்தை கழற்ற முடியாமல் போக வேண்டும்!" - பிபத்தன் கூறினான்.

"அவனுக்கு எவ்வளவு முடிச்சுகள் போடப்பட்டதோ, அதே அளவு முடிச்சுகள் தான் போடப்படும்!" - கவுடில்யன் கூறினான்.

"ம்ம் போ --- பிபத்தா! சென்று நித்திரை செய்!" பிபத்தன் வேண்டாவிருப்பாக கண்ணாடி மாளிகையை நோக்கி நடந்தான்.

https://telegram.me/aedahamlibrary

மீண்டும் பணியாளனை அழைத்தான், கவுடில்யன்.

“அப்பனே! இப்போது சென்று பிபத்த நந்தன் உறங்கி விட்டானா என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு வா?" - கவுடில்யன் கூறினான்.

பணியாளன் சென்று நீண்ட இடைவெளிக்குப் பிறகு திரும்பி வந்தான்.

“ஏன் இவ்வளவு தாமதம்?” - கவுடில்யன் கேட்டான்.

"பிபத்த நந்தர் திராட்சை கனிகளை சுவைத்து விட்டு, இப்போதுதான் உறங்கத் துவங்கினார். அவரது குறட்டையொலி பலமாகக் கேட்கின்றது!"

பணியாளன் இவ்வாறு கூறியதும், கவுடில்யன் சந்தாவை நோக்கினான்.

"சந்தா! முயன்று பார்!” - கவுடில்யன் கூறியதும், சந்தா அவனை பணிந்துவிட்டு, கண்ணாடி மாளிகையை நோக்கி நடந்தான். அவன் மாளிகையினுள் நுழைந்ததும், பாணர்கள் மீண்டும் மேடையேறிப் பாடல்களைப் பாடத்துவங்கினர்.

சந்தாவுக்கான ஹோரை அவகாசங்கள் துவங்கி விட்டன. சூரிய ஹோரையில் துவங்கி, மெதுவாக, சுக்ரன், புதன், சந்திர, சனி ஹோரைகளும் பூர்த்தி ஆகிவிட்டன. அன்றைய தினத்தின் கடைசி ஹோரையான குரு ஹோரையும் துவங்கி விட்டது. ஆனால், சந்தாவும் இதுவரை வெளியே வந்த பாடில்லை.

"இது ஒரு பித்துகுளித்தனமான போட்டி. தாயத்தை கழுத்தில் கட்டுவதாம். பிறகு கட்டப்பட்டவன் உறங்குவானாம். அதைக் கழற்றி வந்தால் மன்னர் பதவியாம்!” - உத்தாலன் கூற, பொதுமக்களும் பொறுமை இழந்து கண்ணாடி மாளிகையின் வாயிலையே வெறித்துக்கொண்டிருந்தனர்.

இன்னும் சில வினாடிகளில் குரு ஹோரை முடிந்து விடும். எங்கும் பரிபூரண அமைதி. திடீரென்று போர்த்திய சால்வையுடன், தொங்கிய தலையுடனும், நிதானமாக நடந்து வந்தான், சந்தா. அவன் நடையை வைத்தே அவனால் தாயத்தினைக் கழற்ற முடியவில்லை என்பதனை யூகித்த உத்தாலன், கோபத்துடன் கவுடில்யனைப் பார்த்தான்.

https://telegram.me/aedahamlibrary

"இந்த வீணான போட்டிகள் எல்லாம் தேவையில்லை. பிபத்த நந்தனை மன்னனாக அறிவியுங்கள். அவனது பட்டாபிஷேகத்திற்கு நாள் குறியுங்கள்!" கவுடில்யனைப் பார்த்துக் கூச்சலிட்டான், உத்தாலன்.

அவனை அலட்சியம் செய்த கவுடில்யன், சந்தாவையே வெறித்துப் பார்த்தான். அவனாலும் தாயத்தை எடுக்க முடியவில்லை போலும்.

அனைவரது பார்வையும் சந்தாவின் மீதே இருந்தது. கவுடில்யன் இறுக்கமான முகத்துடன் அவனை நோக்கினான்.

“சந்தா! தாயத்தை எடுத்து வந்தாயா?” - கவுடில்யன் கேட்டான்.

சந்தா பதில் கூறவில்லை. மெதுவாகத் தனது வலக்கையை கவுடில்யனின் முகத்திற்கு நேராக நீட்டினான். மூடியிருந்த தனது உள்ளங்கையினை விரித்தான். அவனது கை விரல்களில் தேவ உடும்பர மரத்தினால் செய்யப்பட்ட அந்த தாயத்து ஊசலாடிக்கொண்டிருந்தது.

"பலே!" - கவுடில்யன் கூறியதும், பலபீமாவின் தலைமையிலான காட்டுவாசிகள் ஆனந்தக் கூக்குரலிட்டனர். மகத மன்னர் சந்தா வாழ்க!" என்கிற கோஷம் விண்ணைப் பிளந்தது.

"பிபத்தனின் உறக்கத்தை கலைக்காமல், எப்படி அவன் கழுத்தில் இருந்து தாயத்தை கழற்றினாய்?" - கவுடில்யன் ஆச்சரியத்துடன் வினவினான்.

“இப்படித்தான்!” - சந்தாவின் தோளினை மூடியிருந்த சால்வை நழுவி விழ, தனது இடக்கையில் ஏந்தி இருந்த பிபத்த நந்தனின் கொய்யப்பட்ட தலையை கவுடில்யனின் முன்பாக நீட்டினான்.

ஹா! என்கிற அலறல் எங்கும் ஒலித்தது.

"குருவே! பிபத்த நந்தனின் உறக்கத்தையும் கலைக்கவில்லை. அவன் கழுத்திலிருந்த தாயத்து நூலினையும் அறுக்கவில்லை. நீங்கள் கொடுத்த அவகாசத்தில், நீங்கள் விதித்திருந்த நிபந்தனைகளை மீறாமல், அவன் கழுத்தை உடலில் இருந்து துண்டித்தேன். தன்னால் அவன் கழுத்திலிருந்த தாயத்து நழுவி விழ, நான் அதனைப் பிடித்துக் கொண்டேன்!" - என்று சந்தா கூறியதும்தான் தாமதம்.

https://telegram.me/aedahamlibrary

அவன் கையைப் பிடித்து தரதர என்று இழுத்தபடி, அங்கிருந்த மேடையின் மீது ஏறினான், கவுடில்யன்.

“ஒரு அரசனுக்கு தேவை சமயோசித புத்தி. பிபத்தனுக்குத்தான் முதல் வாய்ப்பினை நல்கினோம். சந்தாவின் தலையைத் துண்டித்து அவனால் தாயத்தை எடுத்துக் கொண்டு வந்திருக்க முடியும்... அவனுக்கு அந்த யோசனை இல்லை. சந்தாவிற்கு இருந்தது.! ஆக, இனி சந்தாவே மன்னன்!” -

கவுடில்யன் கூறியதும், எங்கும் ஒரே உற்சாக அலை பாய்ந்தது. மக்கள், சந்தாவுக்கு ஆதரவாக கோஷங்களை எழுப்ப, ஒரு மூலையில் நின்று அங்கே நடந்த சம்பவங்களை கவனித்துக்கொண்டிருந்த அமரா உறைந்து போய் நின்றிருந்தாள்.

தான் காட்டில் வீசி எறிந்த மகன் இப்போது மகதத்திற்கே மன்னன் ஆகிவிட்டான். தான் சீராட்டி வளர்த்த பிபத்த நந்தன் தனது மகனாலேயே தலை கொய்யப்பட்டு மாண்டு போனான். இவள் அழக்கூடிய தருணமா அல்லது சிரிக்க வேண்டிய தருணமா என்பது புரியாமல் சிலையாக நின்றிருந்தாள்.

"அநீதி! இளவரசரை சூழ்ச்சி செய்து கொலை செய்து விட்டனர்!” - உத்தாலன் கூச்சலிட்டு, மக்களைத் தன் பக்கம் ஈர்க்கப் பார்த்தான். -

"கவுடில்யரே! உத்தாலன் கழுத்தில் தாயத்தை கட்டுங்கள். நான் எடுக்கிறேன்!” --- உத்தாலன் செவியில் விழுமாறு, சந்தா சொல்ல, உத்தாலன் அச்சத்தில் வாயடைத்துப் போனான்.

கவுடில்யன் பேருவகையுடன் சந்தாவைப் பார்த்தான். "சந்தா! மக்களிடம் ஒன்றிரண்டு வார்த்தைகளைப் பேசு!”

கவுடில்யன் கூறியதும், சந்தா கம்பீரமாக மேடையின் மீது ஏறி நின்றான். பதவி கிடைத்ததும் கம்பீரம் தானாக கூடி விடுமோ?

மக்கள் கூட்டத்தை பணிவுடன் பார்த்தபடி, சந்தா உரையாற்றத் துவங்கினான்.

"மகத நாட்டு மக்களே! நான் உங்களது புதிய மன்னனாகப் பதவி ஏற்க உள்ளேன். தானநந்தாவின் கொடுங்கோல் ஆட்சியை நீக்கி உங்களுக்கு

https://telegram.me/aedahamlibrary

நல்லாட்சி வழங்கும்படி எனது ஆசான் கவுடில்யர் என்னைப் பணித்திருக்கிறார். எனது ஆசான் நிரந்தர ராஜதந்திரியாக அமர்ந்து என்னை வழிநடத்திச் செல்ல வேண்டும். நான் தலைமை அமைச்சர் என்று யாரையுமே நியமனம் செய்யப் போவதில்லை. எனது குருவே தலைமை அமைச்சராகவும், ராஜதந்திரியாகவும் இந்த நாட்டை வழிநடத்துவார். எனது ஆசானுக்கு பதிலாக நான் மகுடத்தை எனது சிரசில் சுமப்பேன். ஆனால் எனது சிந்தையாக அவரே செயல்படுவார். எனது பெயரான சந்தாவுடன், எனது ஆசானின் பெயரைத் தாங்கி இருவருமே மன்னர் என்கிற நிலையை உண்டாக்க விரும்புகிறேன். எனது கோரிக்கையினை ஏற்று எனது பெயரையும், அவரது பெயரையும் இணைத்து எனக்கு ஒரு புதிய பெயரினை அளிக்குமாறு வேண்டுகிறேன்!” சந்தா இவ்வாறு கூறியதும், உணர்வுகளை பிரதிபலிக்கத் தெரியாத கவுடில்யனின் கண்களில் முதன்முறையாக ஒரு ஈரக் கசிவு ஏற்பட்டது.

"சந்தா! என்னை மட்டுமல்ல. என் தாய், தந்தையரையும் பெருமைப்படுத்திவிட்டாய். நல்லது. உனது பெயரான சந்திர-வுடன் எனது பெயரான விஷ்ணுகுப்தனின் பின்பாதியான குப்தன் என்கிற பெயரை இணைத்து, இன்று முதல் உனது பெயரை சந்திரகுப்தன் என்று அழைக்கிறேன்!"

கவுடில்யன் கூறியதும், கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

"மகத மன்னர் சந்திரகுப்தர் வாழ்க!"

“ராஜதந்திரி கவுடில்யர் வாழ்க!”

உற்சாக கோஷங்கள் கிளம்ப, கவுடில்யன் பட்டத்து யானையை வரவழைத்தான். மகத்தீபா சந்திரகுப்தனின் முன்பாகப் பிளிறி மரியாதை செலுத்தி பின்பு தனது கால்களை மடித்து அமர, சந்திரகுப்தன் அதன் மீது ஏறினான்.

காட்டு யானைகளின் முதுகினில் ஏறியிருக்கிறான், சந்தா. ஆனால் பட்டத்து யானையின் மீது ஏறி சந்திரகுப்தனாக பவனி வருவது இதுதானே முதன் முறை.

கவுடில்யன் சமிக்ஞை செய்ய, பணியாளர்கள் பிபத்த நந்தனின் தலையை எடுத்துக்கொண்டு கண்ணாடி மாளிகையை நோக்கி

https://telegram.me/aedahamlibrary

நடந்தனர்.

துர்தரா பலத்த ஆரவாரங்களும், கோஷங்களும் கேட்க, மீண்டும் சாளரத்தினை நோக்கி நடந்து, அதன் வழியே நந்தவன பாதையை நோக்கினாள். இருபுறமும் மக்கள் கூட்டம் மலர்மாரி பொழிய பட்டத்து யானை மகததீபா நந்தவனத்தில் இருந்து அந்த பாதையில் திரும்பியது.

பிபத்தன் மன்னனாகி விட்டான் போல் இருக்கிறதே.!

நெஞ்சம் படபடக்க, அந்தப் பாதையில் வந்த ஊர்வலத்தையே நோக்கிய துர்தரா யானை மேல் இருந்த உருவத்தையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

"பெற்ற தாய் தந்தைக்கே துரோகம் இழைத்துவிட்டு, அவர்களது இரத்தத்தில் உனது கையை நனைத்து, இரத்தக்கறையுடன் அல்லவா செங்கோலை ஏந்தப் போகிறாய்?" என்று மனதிற்குள் பொறுமியவள், யானை அருகே முன்னேறி வர, இப்போது யானையின் மீது இருந்த உருவம் தெளிவாகவே புலப்பட்டது.

பட்டத்து யானை மகததீபாவின் மீது அமர்ந்திருந்தது பிபத்த நந்தன் அல்ல. இவன் அந்தக் காட்டுமிராண்டி சந்தா! யானையின் பின்பாக வரும் சிவிகையையும் அவளது கண்கள் கவனிக்கத் தவறவில்லை. அந்த பல்லாங்குழி பலகை வாயன் சதிகார கவுடில்யன்தான் அதில் வந்து கொண்டிருந்தான்.

அவன் பின்னால் ---

அதிர்ந்து போனாள், துர்தரா!

பிபத்தனின் உயிரற்ற உடலை ஒரு மஞ்சத்தில் எடுத்துச் சென்று கொண்டிருந்தனர், பணியாளர்கள். அவன் கழுத்தில் காணப்பட்ட குருதிக்கோடு அவனது தலை துண்டிக்கப்பட்டிருந்ததை அவளுக்கு உணர்த்தியது.

"அந்தக் காட்டுமிராண்டியையும், சூழ்ச்சிக்கார அந்தணனையும் நம்பாதே என்று கூறினேனே. கேட்டாயா. உன்னைப் பிடித்து தங்களது சூழ்ச்சியை அரங்கேற்றிவிட்டனர்!" - ஆவேசத்துடன் சற்று உரக்கவே கூறினாள் துர்தரா.

https://telegram.me/aedahamlibrary

வேதனை, ஆவேசம், சோகம், ஏமாற்றம், அழுகை என்று பலவித உணர்வுகள் அவளைத் தாக்க, அவளது இதயத்தில் எரிமலை வெடித்தது.

"விட மாட்டேன். எனது குடும்பத்தை அழித்து மன்னனாகப் பதவி ஏற்கும் அந்தக் காட்டு மிராண்டியையும், அவனை வழிநடத்தும் அந்த பாதக

கவுடில்யனையும், எனது கைகளால் கொல்வேன். பிபத்த நந்தா! இது உன் மீது ஆணை!

துவேஷத்துடன் சாளரம் வழியாக சந்திரகுப்தனை வெறித்தபடி அவள் முணுமுணுக்க, அவளது பார்வை தன்னை துளைப்பதை உணர்ந்தவன் போன்று சரியாக சந்திரகுப்தனும், அந்த சிறிய சாளரத்தின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினான்.

சட்டென்று அவனது பார்வையில் இருந்து தப்பி, சுவற்றில் சாய்ந்து கண்களை மூடி மகாதேவரை வேண்டத் துவங்கினாள்.

இந்தக் காட்டுமிராண்டியையும், அந்த சதிகார மறையவனையும் ஒழிக்கும் வல்லமையை எனக்குத் தா! என்று கண்களை மூடி வேண்டியபடி நின்றாள்.

மகத்தீபா யானை சந்திரகுப்தனை சுமந்து கொண்டு அரண்மனையின் பிரதான வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 21. மயில்தோகை மன்மதன்

மகாதேவரின் ஆலயத்தில் சந்திரகுப்தனும், கவுடில்யனும் வழிபாடு செய்ததும், பட்டாபிஷேக வைபவத்திற்காக அரண்மனைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பட்டத்து யானை மகத்தீபாவின் மீது அலங்கார சுந்தரனாக வீற்றிருந்தான், சந்திரகுப்தன். அவனது புஜபல பராக்கிரமத்தை இரும்புக் கவசங்கள் மறைத்திருந்தாலும், பட்டத்து யானையின் மீது இரு இறக்கைகளைப் போன்று விரிந்திருந்த அவனது கால்கள் அந்தரத்தில் ஊசலாடும் இரு இரும்புத் தூண்களைப் போன்று காணப்பட்டன.

சரியாக அரண்மனையின் முன்பாக விரிந்திருந்த ராஜ பாதையில் ஊர்வலம் திரும்பியது. இருபுறமும் ஆரவாரம் செய்து கொண்டிருந்த ஜனங்களை நோக்கி, கையசைத்தபடி பவனி வந்துகொண்டிருந்த சந்திரகுப்தன் சற்றும் எதிர்பார்த்திராத நிலையில் அந்த சம்பவம் நிகழ்ந்தது.

மகாபத்ம நந்தாவிற்கு பிறகு தானநந்தாவும் பதவியை விட்டு இறக்கப்பட்டு, பிபத்த நந்தனும் மாண்டு விட்ட நிலையில் இனி நந்தர் குலம் அழிந்தது என்று நினைத்தபடி மகததீப யானையின் பின்பாக சிவிகையில் வந்துகொண்டிருந்தான், கவுடில்யன்.

அப்போது ---

துர்தரா ஆசையுடன் வளர்த்து வந்த தாரகி என்கிற தோகை மயில், மரக்கிளை ஒன்றில் அமர்ந்தபடி ஊர்வலத்தையே நோட்டம் விட்டுக்கொண்டிருந்தது. தனது பிரிய துர்தராவை சிறையில் அடைத்த புதிய மன்னன் இவன்தான் என்று அது யூகித்து விட்டதோ என்னவோ, தான் அமர்ந்திருந்த மரக்கிளையில் இருந்து உயரே கிளம்பிய அந்த மயில், யானையின் மீது அமர்ந்திருந்த சந்திரகுப்தனை தாக்குவதற்காக தனது கூரிய நகங்களை அவனது மகுடமற்ற சிரசின் மீது வைக்க முயல, தற்செயலாக அதனை கவனித்து விட்ட சந்திரகுப்தன் தனது தலையை குனிந்து அதன் முயற்சியை முறியடித்தான். மீண்டும் அந்த கலாப மயில் அவனை நோக்கிப் பாய்வதற்கு முயல, இம்முறை மீண்டும் குனிந்த சந்திரன், தாரகி மயில் சற்றும் எதிர்பார்த்திராத வகையில், அதன் இரு கால்களையும் தனது இரும்புக் கரத்தால் சேர்த்துப் பிடித்தான்.

https://telegram.me/aedahamlibrary

“துர்தராவின் மயில்... சந்திரகுப்தா!” - கவுடில்யன் கீழிருந்து குரல் கொடுக்க,

அதன் கால்களைப் பற்றியிருந்த சந்தாவிடமிருந்து விடுபட எண்ணி அந்த மயில் போராட, போராட்டத்தில் மயிலின் தோகையிலிருந்து மயிற்பீலிகள் உதிர்ந்து சந்திரகுப்தனின் தலையில் மழையெனப் பொழிந்தன.

சந்திரகுப்தன் அந்த மயிலின் ஆக்ரோஷம் அடங்கி விட்டதை உணர்ந்து அதனை வீசி எறிய, அது பரிதாபமாகக் கூவியபடி பறந்து சென்றது. தன் மீது விழுந்திருந்த மயில் இறகுகளை அவன் உதறித் தள்ளவில்லை.

"மகுடத்தினில் மயிற்பீலி வைத்திருக்கும் கண்ணன் என் குலதெய்வம்” என்று துர்தரா கூறியபோது, "அவன்தான் ஏற்கனவே ஒன்றைச் சூடியிருக்கின்றானே. நானே கண்ணனாக வந்து உன்னையே என் மகுடத்தில் சூடிக்கொள்கிறேன்!” - தனக்கும் துர்தராவுக்கும் இடையே நடந்த உரையாடல் அவன் செவிகளில் ஒலிக்க, துர்தரா அவனது நினைவுகளை ஆக்கிரமித்தாள். பூமியினுள் புதையுண்ட வைரங்களைத் தோண்டி எடுக்கும்போது, அதன் மீது உள்ள கரிப்படிமங்களை நீக்க வேண்டி செம்மண் நீரில் அதனை ஊற வைப்பது போன்று, துர்தரா என்னும் ஜொலிக்கும் வைரத்தை அறையில் அடைத்து வைத்திருக்கிறான். துர்தராவின் துர்குணங்கள் உதிர்ந்து தன்னை தருவதற்கு சித்தமாக, "நான் இனி துர்தரா அல்ல. வெறும் தரா! என்னையே நான் தருகிறேன்” என்று கூறினால், உடனே அவளை ஏற்றுக் கொள்வான். ஆனால் அவள் மீது கடும் வஞ்சத்தை கொண்டிருக்கும், குரு கவுடில்யர் இவனது ஆழ்மனதினுள் துர்தராவின் மீது கொண்டிருக்கும் மென்மையை அறிந்தால் சினம் கொள்வாரோ. மென்மை என்றே தனது உணர்வை சந்திரகுப்தன் கருதிக் கொண்டிருந்தான். காதல் என்று கூறினால் உடனேயே ஆசானின் நன்மதிப்பினை இழந்து விடுவான். மன்னராக அமர்த்திய ஆசானுக்கு துரோகம் செய்தவனாக மாறிவிடுவான். துர்தராவை மனம் நாடுகிறது. ஆனால் அதற்கு அவளது சம்மதமும் வேண்டும். குருவின் ஆசியும் வேண்டும். நடக்கக்கூடிய காரியமா? -

துர்தராவின் பிரிய மயில் தன்னை தாக்க வந்து, தன் மீது இறகுகளை உதிர்த்துவிட்டுச் சென்றதே, அவனுக்கு மகிழ்வினைத் தந்தது. அவளே வந்து இவன் மீது மயிற்பீலிகளை உதிர்த்துவிட்டது போன்ற ஆனந்தம்.

https://telegram.me/aedahamlibrary

அந்த ஆனந்தம் கவுடில்யனின் கண்களிலும் காணப்பட்டது. அந்த மோகினிபிசாசு துர்தராவின் மயிலை தனது இடக்கையினால் பற்றி அதன் கால்களை முறித்து வீசி எறிந்த சந்திரகுப்தனின் செயலைப் பார்த்ததுமே அவனுள் நிலவிய பழியுணர்ச்சிக்குத் தீனி கிடைத்தது.

"அடியே துர்தரா! உன் பிரிய மயிலின் கதியை பார். அடுத்தது சந்திரகுப்தனின் இரும்புக் கரத்தால், கரம்... எதற்கு, அவனது இடது சுட்டு விரலால், உனது குரல்வளை நசுக்கப்படும். உனது மயில் தனது இறகுகளை சந்தாவின் மீது வர்ஷித்து அவனுக்கு பட்டாபிஷேகம் நிகழ்த்தி விட்டது. உனக்கும், உனது மதிகெட்ட தந்தைக்கும் மற்றொரு தோல்வி." - தனக்குள் கூறிக்கொண்ட கவுடில்யனுக்கு திடீரென்று ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

சிவிகையில் இருந்து யானை மீது சென்று கொண்டிருந்த சந்தாவைக் கவனித்தான்.

நந்த வம்சத்திற்குப் பிறகு தான் அமைத்திருக்கும் வம்சத்திற்கு என்ன பெயர் வைப்பது என்கிற வினா முந்தைய இரவிலிருந்து அவனது இதயத்தில் எதிரொலித்துக் கொண்டுதான் இருந்தது. அதற்கான விடையை, சற்று முன்பாக வழிபட்டிருந்த மகாதேவரே, துர்தராவின் மயிலைக் கொண்டு புதிய பெயரை அளித்து விட்டார்.

நந்தா வம்சத்தின் மயிற் சின்னத்தை, உடும்பர மரத்தால் யாகம் செய்து முறியடித்ததன் அடையாளமாக, மயூரத்தின் முதற் பகுதியான, மயூ-வையும் உடும்பரா வின் கடைப் பகுதியான ராவையும் இணைத்து 'மயூரா' என்கிற புதிய வம்சம் உருவாகும். (மயூரா வம்சமே மவுரிய வம்சமாக மாறியது)

தனது சிவிகையிலிருந்து எட்டிப் பார்த்து சந்திரனை அழைத்தான், கவுடில்யன்.

"சந்திரகுப்தா. உனது தலையில் அணிந்திருக்கும் வளையத்தில் மயிற்பீலி ஒன்றைச் சொருகிக்கொள். இனி. நாம் அமைக்கும் புதிய வம்சத்திற்கு சந்திரகுப்த மயூரா என்கிற பட்டப்பெயரே நிலைத்து நிற்கும்!"

சந்திரகுப்தன் தனது குரு சொன்னது போலவே செய்தான். மனம் மட்டும் துர்தராவிடம் பேசியது. சிரசினில் மயிற்பீலியை சூடிய கிருஷ்ண

https://telegram.me/aedahamlibrary

மயூரன்! இதோ வந்துகொண்டு இருக்கிறேன், துர்தரா....

சந்திரகுப்த மயூராவை சுமந்துகொண்டு மகத்தீபா அரண்மனை வளாகத்தினுள் நுழைந்தது. சந்திரன், குப்தன், மயூரா, என்கிற மூன்று பெயர்களுடன் அரண்மனைக்குள் நுழைந்தான், சந்தா. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகியவை திருவேணி சங்கமமாக இணைவது போன்று மகுடம் அவன் தலையில் ஏறியதும், சந்திரகுப்த மவுரியன் என்று எல்லா பெயர்களின் கலவையாக மன்னன் ஆவான், நிற்க.

சந்திரகுப்த மவுரியனுக்கு மகுடாபிஷேகம் நிகழ்ந்து ஒரு திங்கள் பூர்த்தி ஆகிவிட்ட நிலையில், பவும (செவ்வாய்) கிழமை அன்று இரவு உணவிற்குப் பிறகு தனது சயன அறையை நோக்கிச் சென்றபோது, பலபீமா கையில் தட்டுடன் அவனை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தான். அவனது நடையில் காணப்பட்ட பரபரப்பு, சந்திரகுப்தனை வியக்கச் செய்தது. அகன்ற கம்பங்களுடன் கூடிய நீண்ட முற்றத்தின் இருபுறமும் ஆங்காங்கே தீப்பந்தங்கள் சுடர்விட்டு எரிந்தன. தொலைவில் செம்மை வண்ணத்தில் வேட்டியும், அதன் மீது வெண்ணிற மேலாடையும் அணிந்து அவன் வருவதைக் கண்டு ஆணியடித்தது போன்று அங்கேயே நின்றான். அருகில் வந்த பலபீமா, அவனை சற்று நேரம் உற்றுப்பார்த்தான்.

"மன்னா! இராஜதந்திரியிடமிருந்து ஓலை வந்திருக்கிறது!" - பலபீமா நீட்டிய பட்டோலையை இயந்திரகதியில் வாங்கிய சந்திரகுப்தன், அதனை பிரித்துப் பார்த்தான்.

மவுரிய வம்சத்து மாணிக்கம், சந்திரகுப்த மன்னரே! நாளைய தினம் துர்தராவின் வழக்கினை விசாரித்து அவளுக்கு தக்க தண்டனையை சபை வழங்க தீர்மானித்துள்ளது. எனவே மன்னன் என்கிற முறையில் அவளை இரும்புச் சங்கிலியால் பிணைத்து அவைக்கு இழுத்து வரும்படி கட்டளையிட வேண்டுகிறேன். -- ராஜதந்திரி கவுடில்யர்.

சந்திரகுப்தன் நீண்ட யோசனையில் ஆழ்ந்தான். துர்தராவை, அந்தப்புர அறைக்குள் தள்ளி தாளிட்ட பிறகு இன்னும் அவன் அவளைக் காணச் செல்லவில்லை. அவளது நம்பிக்கைக்கு உரிய தோழி ஒருத்திதான், அவ்வப்போது அவளது அறைக்குச் சென்று, அவளுக்குத் தேவையானவற்றை அளித்து வந்தாள். துர்தரா மிகவும் பண்பட்டு விட்டதாகவும், தன்னிடம் மிகவும் அன்பு செலுத்தி வருவதாகவும், அமரா இவனிடம் தெரிவிக்க, அவனது உள்ளத்தில் அவள் மீது கொண்டிருந்த

https://telegram.me/aedahamlibrary

மென்மை, இப்போது பிரேமையாக வடிவெடுக்கத் துவங்கி இருந்தது. அதனை கண்டவன் அவனுடைய ஆருயிர் நண்பன் பலபீமாதான்.

வனவாசியான பலபீமாவுக்கு அரண்மனை பெண்களின் ஆடம்பர அலங்காரங்கள் கண்களுக்கு குளிர்ச்சியையும், இதத்தையும் தந்தன. அரண்மனை பெண்களை ஆர்வத்துடன் நோட்டம் விடுவான். அவர்களது செயற்கை பூச்சுகளும், குழைவுகளும், நறுமண மலர்களும், ஜொலித்த ஆடை ஆபரணங்களும் அவனுள் கிறக்கத்தைத் தோற்றுவித்தன. குறிப்பாக, சந்திரகுப்தன் பதவி ஏற்றதை குறிக்க, கவுடில்யன் ஏற்பாடு செய்திருந்த விருந்தினில், பானங்களை பரிமாறிய ப்ரவாளமுகி என்கிற பெண்ணின் மீது காதலே கொண்டு விட்டான். “எனது காதலியை காட்டுகிறேன் வா!” என்று விருந்துக்கு மறுநாள், சந்திரகுப்தனை அழைத்துக்கொண்டு, குதிரை லாயத்தின் மீது இருந்த சேடிப்பெண்களின் ஜாகைக்கு அருகாமையிலேயே திரிந்து கொண்டிருந்தான், ப்ரவாளமுகியும் படியிறங்கி வந்தாள்.

"அதோ... எனது காதலி!” என்று ஆர்வத்துடன் சந்திரகுப்தனுக்குச் சுட்டிக் காட்டிய பலபீமா திகைத்து நின்றான். முந்தைய இரவு நிலவிய அழகு எங்கே போனது. தேனைப் பிழிந்தெடுத்த பின் சக்கையாக கிடக்கும் தேனடையைப் போன்ற அவளது முகம், அவனது இதயத்தை நொறுங்கச் செய்தது.

"சந்தா! உனது அரண்மனையில் எல்லாமே போலி! உனது அரண்மனை பெண்கள் அனைவருமே செயற்கை அழகு உடையவர்கள். இரவில் பூக்கும் அல்லி கதிரவனின் கதிர்கள் தோன்றியதும், சூம்பி விடுவதைப் போன்று, இரவில் மட்டுமே அழகாக விளங்குகின்றனர். நமது விரிஞ்சி வனத்து பெண்களின் அழகுக்கு நிகராக, இந்த அரண்மனையில் யாரும் கிடையாது!” - பலபீமா கூறியவுடன், சட்டென்று, தன்னையும் அறியாமல், சந்திரகுப்தன் பதில் கூறினான்.

"யார் சொன்னது? இந்த அரண்மனையில்தான், வையகத்திலேயே தலை சிறந்த அழகி ஒருத்தி இருக்கிறாள். அவளது அழகிற்கு முன்பாக அந்த இந்திரலோகத்து சுந்தரிகள் கூட நிற்க முடியாது?” - சந்திரன் கூறியதும், அவனை பிரமிப்புடன் நோக்கினான், பலபீமா.

"யார் அவள்?” -

"துர்தரா!”

https://telegram.me/aedahamlibrary

"அந்த ஆணவப் பிசாசினையா பேரழகி என்று கூறுகிறாய்?" - என்று பலபீமா கூறியதும், சந்திரனின் முரட்டு கரம் அவனது புஜத்தைப் பற்றியது. அவனது நகங்கள் பலபீமாவின் தேகத்தில் கீறல்களை உண்டாக்கின.

"இன்னுமொரு முறை, உனது ஆருயிர் நண்பனின் மனதுக்கு இனியவளை பிசாசு என்று கூறி என்னைக் காயப்படுத்தாதே!" என்றதும் துடித்துப் போனான், பலபீமா.

"சரி... சரி! அதற்காக என்னைக் காயப்படுத்தாதே.! நீயே பல தருணங்களில் அவளை அழகிய பைசாசம் என்று கூறியிருக்கிறாய்!" - சந்தனுக்கு நினைவுபடுத்தினான், பலபீமா.

"அவள் எனக்குரியவள். அதனால் நான் அவளை என்ன வேண்டுமானாலும் கூறலாம். உனது நண்பனின் எதிர்கால மனையாளை நீ கேவலமாகப் பேசக்கூடாது!" - சந்திரகுப்தனின் குரலில் எரிச்சல் தொனித்தது.

பலபீமா உறைந்து போனான்! "உனக்கு உரியவளா? அவளை எமனுக்கு உரியவளாக மாற்றுவதற்கு உனது ஆசான் கவுடில்யர் பிரயத்தனப்பட்டுக் கொண்டு இருப்பது உனக்குத் தெரியாதா?" - பலபீமா கேட்டபோது அவனுக்கு பதில் அளிக்காமல், விருட்டென்று அந்த இடத்திலிருந்து விரைவாக நடந்து சென்று விட்டான்.

இப்போது சந்திரனிடம் அந்த பட்டோலையை நீட்டியபோதே, பலபீமாவின் புருவங்கள் இரண்டும் கேள்விக்குறிகளாக வளைந்திருந்தன. அந்த பட்டோலையில் உள்ள விவரத்தை அவன் ஏற்கனவே யூகித்து விட்டிருந்தான். புஷ்ப்புர அரண்மனை முழுவதும் அரசல் புரசலாகப் பேசிக்கொண்டுதான் இருந்தனர். துர்தராவுக்கு கவுடில்யன் மரண தண்டனையை வழங்குவான். அவனது பல்லில்லா பொக்கை வாயினை, பல்லாங்குழி பலகை வாயன் என்று கூறியிருந்ததால், அவளது அழகை சிதைத்து, பற்களை பிடுங்கி, அவளையும் பல்லாங்குழி வாயினை கொண்டவளாக மாற்றுவான் என்றே கிசுகிசுத்துக் கொண்டிருந்தனர்.

“இப்போது என்ன செய்யப்போகிறாய்? உனது மனதுக்கு இனியவளை இரும்புச் சங்கிலியால் பிணைத்து நாளை கொலுமண்டபத்திற்கு அழைத்து வரப் போகின்றனர். நீ என்ன செய்யப்போகிறாய்? உனது

https://telegram.me/aedahamlibrary

மனதுக்கு இனியவளின் பக்கம் நிற்கப் போகிறாயா அல்லது உனது மனதில் ஆலயம் கொண்டிருக்கும், ஆசானின் பக்கம் நிற்கப் போகிறாயா?" பலபீமா கேட்டான்.

என்ன செய்யப்போகிறான் இவன்? தன்னையே கேட்டுக்கொண்டான், சந்திரகுப்தன். மன்னர் பதவி ஏற்றதுமே, ஓடிச்சென்று துர்தராவை தனது அந்தப்புரத்திற்கு அழைத்து வந்து அவளை தனது மனையாளாக அறிவிக்க வேண்டும் என்றே நினைத்திருந்தான். அவளது குணத்தில் சற்றே மாற்றம் வரவேண்டும் என்றே அவளை அறையினுள் அடைத்து வைத்திருந்தான். ஆனால், குருநாதர் அவளுக்கு நாளையே தண்டனை வழங்க வேண்டும் என்கிறாரே.

யோசனையுடன் தனது சயன அறையினுள் முடங்கினான். மீண்டும் மீண்டும் தனது கரத்தில் இருந்த பட்டோலையை வாசித்தான். துர்தராவின் மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த காதலுக்கு அணைபோட்டு இதயத்தின் ஆழத்தில் புதைத்திருந்தான், சந்திரகுப்தன். ஆசான் கவுடில்யனின் வெறுப்புக்கு முழுவதுமாக இலக்காகியிருந்த துர்தராவை, தனது இதயம் நேசிக்கத் துவங்கி இருப்பதை ஆசான் யூகிக்கக்கூடாது என்பதற்காக அவளைப் பற்றிய கடுமையான விமர்சனங்களைச் செய்துகொண்டிருந்தான், சந்திரகுப்தன்.

"குருவே! என்னை அவள் காட்டுமிராண்டி என்று அழைத்ததைக் கூட பொறுத்துக்கொண்டேன். தங்களை இழிவுபடுத்தியதை என்னால் மன்னிக்கவே முடியாது தாங்கள் எனக்கு உத்தரவு தந்த அடுத்த கணம், அவளது மயில் தாருகியின் கால்களை முறித்து வீசியது போன்று, அவளது குரல்வளையை முறித்து, அவளது பிணத்தை விரிஞ்சி ஆற்றில் வீசி எறிவேன்!" என்று சூளுரைத்திருந்தான். ஆனால் இந்த வீர வசனம் பேசப்பட்டது, துர்தராவின் மீது அவன் கொண்டிருந்த மென்மை காதலாக மாறுவதற்கு முன்பாக! இதயத்தில் அவள் மீது கொண்டிருந்த நேசத்திற்கு அவன் அணை ஒன்றை எழுப்பி இருந்தான். ஆனால் அவனது மனம் என்கிற வானரம், அந்த அணையின் ஒவ்வொரு கல்லாகப் பெயர்த்து எடுத்து, அவனது காதலை பிரவாகமாகப் பெருகச் செய்து விட்டது.

எனவே ---

ஒரு நாள் கவுடில்யனிடம் பேசிக்கொண்டிருந்த போது, "குருவே! தங்களை இழிவுபடுத்திய துர்தராவின் கையால் தங்களுக்கு வெற்றிலை

https://telegram.me/aedahamlibrary

மடித்துக் கொடுக்கச் செய்வேன். எனது தாய் ராஜமாதா அமரேந்திரியின் அந்தப்புர சேடியாக அவளை மாற்றுவேன்.!” என்று புதிய சூளுரை ஒன்றைச் செய்ய, கவுடில்யனின் புருவங்கள் நெரிந்தன. ராஜ்யத்திற்கு மட்டும் தந்திரி இல்லை அவன். மதியூக மந்திரியும் அல்லவா? மிருகமாக, மன்னனாக, வேதியனாக, சுந்தரியாக, மதிகெட்ட கிறுக்கனாக, என்று தான் எதுவாக இருந்தாலும் அச்சமயங்களில் தனது உணர்வுகள் எப்படி இருக்கும் என்று அந்த உணர்வுகளைக் அனுபவித்து ஆண்டவனாயிற்றே! சொற்களில் தொனிக்கும் உணர்வுகளைக் கொண்டே ஒருவனின் மனநிலையை அறிபவனாயிற்றே. சந்திரகுப்தன் முன்பு செய்த சூளுரையில் காணப்பட்ட சினம் இப்போது செய்த சூளுரையில் பிரதிபலிக்கவில்லை என்பதை புரிந்து கொண்டான். தேனில் ஊறிய பலாச்சுளை போன்று துர்தராவின் பெயரை உச்சரிக்கும் போதெல்லாம், சந்திரகுப்தனின் செவிகள் சிவந்து, அவை புல்லரித்துப் போவதற்கு அடையாளமாக பரவசக் கொப்புளங்கள் வெடிப்பதைக் காணத் தவறவில்லை.

சந்திரகுப்தன் முழுவதுமாக துர்தரா வசம் தன்னை இழப்பதற்குள் அவளுக்கு தண்டனையை நிறைவேற்றி விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டான், கவுடில்யன். எனவேதான், மன்னனிடம் பட்டோலையைச் சேர்த்து விடும்படி அவனது அந்தரங்கத் தோழன் பலபீமாவிடம் தந்திருந்தான்....

மஞ்சத்தில் சரிந்த சந்திரகுப்தன் பட்டோலையை மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டு, சற்றே குழப்பத்துடன் சாளரத்தின் வழியாக, விண்ணில் சிதறியிருந்த தாரகைகளை நோட்டம் விட்டான். இவனது மனம் துர்தராவை நாடத்துவங்கி விட்டது. ஒரு வேளை, குரு உனக்கு அரியாசனம் வேண்டுமா, துர்தரா வேண்டுமா என்கிற கேள்வியைக் கேட்டிருந்தால், "பிபத்த நந்தனுக்கு அரியணையைக் கொடுத்து விடுங்கள், ஆசானே. எனக்கு துர்தராவைத் தாருங்கள்" என்றுதான் கேட்டிருப்பான். ஆனால், ஆசான்தான் அவனுக்கு அந்த வாய்ப்பினையே நல்கவில்லையே. துர்தராவையும், தானநந்தனையும் பழி வாங்கத்தானே நந்த ஆட்சியையே வீழ்த்தினார்கள், இவர்கள்.

"எனக்கு துர்தராவைத் தந்துவிடு!” - சந்திராவின் காதல் இதயம் அவனிடம் இறைஞ்சத் துவங்கியது.

"சற்று பொறு!" - அவனது பெயரில் பின்பாதியான குப்தன் என்னும் சிந்தனை அவனை எச்சரிக்கத் தொடங்கியது. காட்டுவாசியான

https://telegram.me/aedahamlibrary

உனக்கு, உனது தாயையும் அடையாளம் காட்டி, அரியணையையும் அளித்து, கீர்த்தியையும் பெருமையையும் அளித்திருக்கும் ஆசான் கவுடில்யனின் சொற்களை மீறி, அந்த ஆணவக்காரியை நேசிக்கிறாயே! நாளை கலவியாடும் மஞ்சத்திலே உன் கதையை முடிக்கக் கூடிய குணமுடையவள் அவள். அவளை நேசித்து, ஆசானை வஞ்சிக்கப் போகிறாயா?"

சிந்தையின் எச்சரிக்கை மற்றும் இதயத்தின் இறைஞ்சல் இரண்டிற்கும் நடுவே சிக்கிய சந்திரகுப்தனின் மனம் துலாக்கோலின் முள்ளினைப் போன்று இப்படியும் அப்படியும் துடிதுடிக்க, பிறகு, இயலாமை ஏற்படுத்திய சினத்தினால், தனது கையில் இருந்த பட்டோலையைச் சுருட்டி சாளரத்தினை நோக்கி வீசி ஏறிய, அது திரைச் சீலை ஒன்றில் மோதி அங்கிருந்த பூச்சாடியின் மீது விழுந்து அந்தச் சிறிய பூச்சாடியும் கவிழ்ந்து மலர்கள் சிதறின. பழங்களை நறுக்குவதற்காக பூஜாடி அருகே வைக்கப்பட்டிருந்த கத்தி வரிசைகளும் சிதறி விழுந்தன. கீழே விழுந்த பட்டோலையின் முனை ஒரு கத்தியின் முனையில் சிக்கிக் கிழிய, மற்றொரு முனை சூரியகாந்தி மலர் ஒன்றின் மீது பரவி மலரின் இதழை நசுக்க, அவனது மனநிலையை பிரதிபலிப்பது போன்று தோன்றியது.

"துர்தராவைக் காப்பாற்றி உனது அரியணையின் பக்கத்தில் அமர்த்திக் கொள். அப்படி நீ செய்யவில்லை என்றால், இதயமற்றவன் என்கிற பெயருடன் இரு. நான் உன்னை விட்டுப் போகிறேன்!" சந்திரகுப்தனின் இதயம் அறிவித்து விட்டது.

"உன்னையும், உன் தாயையும், உனது ஆசானையும் இழிவுபடுத்திய ஒரு அகம்பாவம் பிடித்தவளை, உனது மனைவியாக மாற்றத் துடிக்கிறது உன் இதயம்.! வெறும் அழகுக்கும், சதைப் பிண்டத்திற்கும், பெண் சுகத்திற்கும் அடிமையாகி, உனது சுயகௌரவத்தை இழந்து அவளது தலையாட்டும் பொம்மையாக இருக்கப் போகிறாயா?" அவனது சிந்தை கேட்டது.

சிந்தைக்கும், இதயத்திற்கும் இடையே நடைபெற்ற மல்யுத்தத்தில் சிக்கி இவன் திணறத் துவங்கினான். ஆசானா, துர்தராவா என்று யோசித்துக்கொண்டிருந்த வேளையில் அவனது அறைக்கதவு திடீரென திறந்தது. உடம்பெல்லாம் எண்ணெய் வழிந்திருக்க, ஒரு பணியாளன், எண்ணெய்க் குடத்தை தனது இடத் தோளினில் சுமந்து கொண்டு, அறையின் விளக்குகளுக்குத் தனது கையிலிருந்த கிண்டியினால் எண்ணெய் வார்க்கத் தொடங்கினான். அந்தப் பணியாளனின் முகம்

https://telegram.me/aedahamlibrary

தோளினில் சுமந்திருந்த எண்ணெய்க் குடத்தின் பின்பாக மறைந்திருந்தது. இவனால், அந்தப் பணியாளனின் புஜத்தில் இருந்து கால் வரையில் மட்டுமே காண முடிந்தது.

“துர்தரா. இதயத்துக்கு இனியவளே! விரைவில் உன்னை எனது சிந்தனைக்கும் இனியவளாக்குவேன்.” - துர்தரா பற்றிய சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தவன், தன்னையும் அறியாமல் முணுமுணுக்க, உடனே, அந்த எண்ணெய்க் குடத்தை ஏந்தி இருந்த அந்தப் பணியாளனின் தேகம் விறைத்துப்போவதைக் கண்ணுற்றான் சந்திரகுப்தன்.

அப்போதுதான், அந்தப் பணியாளனின் தேகத்தினில் மறைவாக மிளிர்ந்த வெண்புரி நூலைக் கண்டான். நூலின் ப்ரும்ம முடிச்சின் கீழ் பிணைக்கப்பட்டிருந்த மான்தோலின் துண்டையும் கண்டான். சந்திரகுப்தனுக்கு வியர்த்துப் போனது. அவனுடைய ஆசானே, பணியாளனாக அங்கே வந்திருக்கிறார். தான் அனுப்பிய ஓலை இவனை எங்ஙனம் பாதித்திருக்கிறது என்பதை நோட்டம் விட வந்திருக்கிறார். ஐயோ! அவர் முன் இதயத்துக்கு இனியவளை சிந்தனைக்கு இனியவளாக மாற்றுகிறேன் என்று கூறிவிட்டோமே. ஆசானுக்குச் செய்த அபசாரமாக இதனைக் கொள்வாரா, கவுடில்யர்?

ஆசானை புண்படுத்தி விட்டோமோ என்கிற ஐயத்தில் துர்தராவின் மீது ஓங்கியிருந்த காதல் உணர்வுகள், கதிரைக் கண்ட மார்கழிப் பனியாக விலகின.

“துர்தரா! உன்னை சித்திரவதை செய்து கொன்று, உனது அங்கங்களைக் கழுகுகளுக்கு வீசுகிறேன்!” - கோபத்துடன் கர்ஜித்தான் சந்திரன்.

இடத் தோளினில் எண்ணெய்க்குடத்தை ஏந்தி இருந்ததால், அந்தப் பணியாளனின் முகம் மஞ்சத்தில் அமர்ந்திருந்த சந்திரகுப்தனுக்குத் தெரியவில்லை. அறையின் உட்புறத்தை நோக்கி நின்ற அவன், திரும்பி அறையை விட்டு வெளியேறும்போது, அந்தக் குடம் அவனது முகத்தை மறைக்காது. அப்போது இவனுக்குத் தெரிந்து விடும், வந்தது அவனுடைய ஆசானா அல்லது உண்மையிலேயே ஒரு பணியாளனா என்பது? அந்தப் பணியாளன் திரும்பிச் செல்வதற்காகக் காத்திருந்தான், சந்திரன்.

இரண்டடி பின்னால் நகர்ந்து ஒரு தூண் பின்பாக நின்றபடி ஒரு

https://telegram.me/aedahamlibrary

தீபத்திற்கு எண்ணெயை வார்த்த அந்தப் பணியாளன், தூணைக் கடந்து வெளியே வந்த போது, அவனது இடத் தோளினில் இருந்த குடம், இப்போது வலது தோளினிற்கு மாறி இருந்தது. இறுதிவரை, தனது முகத்தை சந்திரகுப்தனுக்குக் காட்டாமலேயே அறையை விட்டு வெளியேறினான், அந்த தீபமேற்றிய பணியாளன். சந்திரகுப்தன் அவனது முகத்தை காணவில்லையே தவிர, அந்தப் பணியாளனது கண்கள் கீழே விழுந்து கிடந்த பட்டோலையையும், அதன் அருகே சிதறிக் கிடந்த மலர்களையும், கத்திகளையும், பூச்சாடியையும் கவனித்துவிட்டன.

"சிந்தனை கூர் வாளில் காதல் துரு பிடிக்கத் துவங்கி விட்டது. கடமை எண்ணெயை வார்த்து தீபத்தைத் தூண்டி, சிந்தையினை ஒளிர வைக்க வேண்டும்...!"

தனக்குள் கூறியபடி சென்று கொண்டிருந்தான், அந்தப் பணியாளன்.

“அரியணையில் அமர்ந்திருக்கும் மன்னனை முதலில் பணிந்து நில். ஒரு பெண்ணுக்குப் பணிவு மிகவும் அவசியம். ஆணின் சுழுமுனை பலமானது. அவன் தலைநிமிர்த்தி இறுமாப்புடன் நின்றால், அவனது சுழுமுனைக்கு பாதகம் நிகழாது. ஆனால் பெண்களின் சுழுமுனை மிகவும் மென்மையானது. தலை குனிந்து இருந்தால், கழுமுனைக்கு பாரம் இல்லை. என்னை மிஞ்சுபவள் யாரும் இல்லை என்று அகம்பாவத்துடன் நின்றிருந்தால், உனது சுழுமுனை முறிந்து விடும்!” - சங்கிலியால் பிணைக்கப்பட்டு புஷ்பபுர அரண்மனையின் கொலு மண்டபத்தில் நின்றிருந்த துர்தராவை வெறுப்புடன் நோக்கினான், கவுடில்யன்.

சந்திரகுப்தன் இன்னும் துர்தராவை நிமிர்ந்து பார்க்கவில்லை. தனது செங்கோலின் உச்சியில் செதுக்கப்பட்டிருந்த ஸ்வர்ண தோகை மயிலின் உருவத்தையே வெறித்துக்கொண்டிருந்தான். நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட அதன் மயில் உருவின் தோகையினையே பார்த்துக்கொண்டிருந்தானே தவிர, எப்போது திரும்பி துர்தராவின் பேரழகு முகத்தைக் காணப்போகிறோம் என்று உண்மையில் தவித்துக் கொண்டிருந்தான். ஆனால் ஆசானின் வெறுப்புப் படிந்திருந்த குரல், அவனுக்கு அவள் பக்கம் நோக்கும் துணிவைத் தர மறுத்தது.

"கொண்டு வாருங்கள் அந்த அடங்காப் பிடாரியை!” - என்று கவுடில்யன் கட்டளையிட்டதுமே, அவனது கண்கள் செயலற்றுப் போய் விட்டன.

https://telegram.me/aedahamlibrary

தனது மனதுக்குப் பிடித்தவளை சங்கிலியால் பிணைப்பதா? அவனுக்கு மனம் துடித்தாலும், சந்திரகுப்தனில், குப்தனுக்குத்தானே செல்வாக்கு. மகுடம் இவனுக்கே தவிர, அதிகாரம் ஆசானுக்குத்தானே!

துர்தராவின் இரு பாதங்களிலும் சங்கிலிகள் பிணைக்கப்பட்டிருந்தன. ஏற்கனவே, அன்ன நடைமடவாள் அவள். இப்போது சங்கிலிகள் காலைத் தழுவியிருந்ததால், இன்னும் மெதுவாக நடக்க, அவளது நடையழகை இன்னும் அதிகப்படுத்தியது... ஆனால் கால்கள் மட்டுமே நளினமாக நடந்தன. இடைக்கு மேலே எரிமலையாகப் பொங்கிக்கொண்டிருந்தாள்.

உக்கிரத்தால் அவளது மார்புகள் விம்மிப் புடைக்க, கோபத்தின் உச்சியில் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். நல்லவேளை! அவள் தனது வாயை இறுக மூடியிருந்தாள். இல்லையேல் அக்னிப்பிழம்புகள் சந்திரனையும், கவுடில்யனையும் சுட்டுப் பொசுக்கியிருக்கும். கால் விலங்குகளை மீறி, அவளது சதங்கைகளின் நாதம் கேட்டது. இரும்புச் சங்கிலி என, மன்னன் அவளைக் கட்டுப்படுத்தினாலும், 'நான் காற்சதங்கைகளை ஒலித்துக்கொண்டுதான் இருப்பேன்!' - என்கிற சேதியைக் கூறியபடி வந்து நின்றாள், துர்தரா.

சந்திரகுப்தன் அவளது கண்களைத் தவிர்த்தான். அவனது இயலாமையையும், மென்மையான உணர்வுகளையும் புரிந்து கொண்டு விட்டவரைப் போன்று, அவனையே வெறித்தான், கவுடில்யர்.

"நான் செய்த உடும்பர அத்திமர சாங்கியம்தான் உன்னை மன்னனாக அமர்த்தியிருக்கிறது. காட்டில் எங்கோ கிடந்த உன்னை நான் மகதத்தின் மன்னனாக மாற்றி, மவுரிய வம்சத்தை நிறுவியிருக்கிறேன். பெண் பித்து எல்லா ஆண்களுக்கும் ஏற்படக்கூடியதே. ஆனால் உனக்கு ஏற்ற பெண் இவளல்ல. இவள் களையெடுக்கப் பட வேண்டியவள். உறுதியை காட்டுகிறாயா, அல்லது நான் இவளைக் கையாளுகிறேன். நீ அமைதியாக இரு!" - என்கிற பொருள் பொதிந்த ஆசானின் பார்வையை உணர்ந்தான், சந்திரகுப்தன்.

"குருவே! நீங்களே இவளைக் கையாளுங்கள்!" என்று கூறிவிட்டு தனது செங்கோல் மயிலை நோக்க ஆரம்பித்தான்.

அப்போதுதான், - அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் மன்னனை முதலில் பணிந்துவிட்டு பிறகு நில்! - என்கிற உத்தரவினை அளித்தான்,

https://telegram.me/aedahamlibrary

கவுடில்யன்.

துர்தரா கலகல என்று நகைக்கத் தொடங்கினாள். நகைப்பா அது? விரிஞ்சி காட்டின் அருவி, கற்பாறைகளில் மோதி சப்தித்து பாய்வதை அந்தக் கொலு மண்டபத்தில் கேட்டான், சந்திரகுப்தன். இவளிடம் எல்லாமே நேர்த்தியாக இருக்கிறதே. பெண்களிடம் இவ்வளவு வசீகரங்கள் உள்ளதா? காட்டுவாசிப் பெண்கள் ஆண்களைப் பார்த்தாலே தாங்கள் ஏதோ அடிமைகள் என்று தாங்களாகவே சரணடைவார்கள். ஒரு முறை, தனது தாயைத் தாக்கிய கரடியைத் தேடிக்கொண்டு இவன் போகையில் ஒரு குகையினைப் பார்த்தான். வழக்கமாக குகைகளில் தானே கரடிகள் வாசம் செய்யும் என்று இவன் நினைத்தபடி அந்தக் குகையினுள் நுழைந்தான்... உள்ளே ஒரு காட்டுவாசிப் பெண், மான் தோலினை ஆடையாக அணிந்திருந்தாள். தனது சேய்க்கு பாலுட்டிக் கொண்டிருந்தவள், இவன் தீய எண்ணத்துடன் வருகிறான், என்பதாக நினைத்து பால் அருந்திக் கொண்டிருந்த சேயை அப்பால் வைத்து விட்டு, தனது மேலாடையை நீக்கி விட்டு, இவனை நோக்கி இருகைகளை விரித்து, “ஏற்றுக் கொள்ள வா!” என்பது போன்று நின்றாள். ஆனால் சந்தா வந்த வேகத்திலேயே குகையை விட்டு வெளியேறினான். ஆண்களால் தாங்கள் அடக்கி ஆளப்படவே பிறந்திருக்கிறோம் என்கிற காட்டுவாசிப் பெண்களின் மனப்பான்மையையே கண்டிருந்த சந்திரகுப்தனுக்கு, துர்தராவின் மனோதைரியம் வியப்பினைத் தந்தது. அதனால் இன்னும் அதிகமாக அவள் மீது மையல் கொண்டான்...

"அரியணையில் அமர்ந்திருக்கும் மன்னனைப் பணிவதா? அரியணையில் மன்னனா அமர்ந்திருக்கிறான்? எனது தந்தை தானநந்தா இந்த அரியணையில் அமர்ந்திருந்த வரையில் ஒரு சீரிய சிங்கம் அமர்ந்திருந்தது என்பதை ஒப்புக் கொள்கிறேன். இப்போது அமர்ந்திருப்பது ஒரு காட்டுமிராண்டி. ஈட்டியுடன் கரடியின் பின்னால் ஓடியவனை நான் பணிவதா? தேனீக்கள் சேகரித்த தேனடையைத் திருடி சுவைக்கும் கரடி கோலோச்ச, குள்ள நரியான நீ அவனுக்கு மதியூக மந்திரி. கேவலம்! இவனை நான் பணிய வேண்டுமா? அதோ பார்! என்னை நோக்கக் கூட துணிவின்றி, பெண்ணைப் போன்று தலை குனிந்து அமர்ந்திருக்கும் இவனா மன்னன்?” கூரிய தனது நாவினால், இருவரையும் விளாசித் தள்ளினாள், துர்தரா.

பெண்ணை உந்தித் தள்ளுவது ஆணின் அன்பு! ஆணை உந்தித்

https://telegram.me/aedahamlibrary

தள்ளுவது பெண்ணின் அவமதிப்பு அல்லவா! தன் மீது பிரிய காதலன் கொண்டிருக்கும் நேசத்தை தங்களது பேச்சினாலும், அலட்சியத்தாலும், உடைத்து அவர்களை இன்னொருத்தியிடம் தள்ளுவதே பெண்களின் இயல்புதானே! தன் மீது சந்திரகுப்தன் கொண்டிருந்த நேசத்தை உணராமல், துர்தரா அவனை கடுமையாகத் தாக்க, சந்திரகுப்தனின் கனிந்திருந்த நெஞ்சம் அந்தக் கணத்தில் கற்பாறையானது. தனிமையில் ஒரு வாளை எடுத்து இவனது நெஞ்சினைப் பிளந்திருந்தால் கூட, "எனது மனதுக்கு இனியவள்தானே செய்கிறாள்" என்று வாளாயிருந்திருப்பான். ஆனால் அவையோரின் முன்பாக தன்னைக் காட்டுமிராண்டி, பெண்ணைப் போன்றவன் என்றெல்லாம் வசை பாடியதும், அவனது கட்டுப்பாடு தளர்ந்து அவளை சினத்துடன் நோக்கினான், சந்திரகுப்தன்.

“குருவே! விசாரணையே தேவையில்லை. இவளை உடனே தண்டித்து விடுங்கள். பெண் ஆயிற்றே என்று மதிப்புடன் நடத்தினால், அதனை ஏற்கக்கூடிய தகுதி தனக்கில்லை என்று தனது வாய்ப்பேச்சினால் நிரூபித்து விட்டாள். - தான் ஒரு இளவரசி. அனைவரும் தனக்கு அடிமை - என்கிற மனப்பான்மைதானே இவளது மமதையை அதிகரிக்கச் செய்கிறது. அந்த மமதையை வேரோடு களையும் வண்ணம் இவளுக்கு தண்டனை தாருங்கள்!” - என்று சந்திரகுப்தன் கூறியதும், கவுடில்யன் உற்சாகத்துடன் அவனைப் பார்த்தான்.

"பலே! சந்திரகுப்தா!” என்று இரு சொற்களை மட்டும் உதிர்த்தான் கவுடில்யன். துர்தராவின் மீது சந்திரகுப்தன் கொண்டிருந்த இளகிய மனப்பான்மையை அவன் அறிவான். தனது கடுமையான மொழியினாலேயே துர்தரா அந்த இளகிய மனதைக் கற்பாறையாக மாற்றி விட்டாள் என்பதனைப் புரிந்து கொண்டதாலேயே, 'பலே, சந்திரகுப்தா!' என்று கூறியிருந்தான்.

கவுடில்யன் மீண்டும் துர்தராவை நோக்கியபோது, அவன் செவிகளில் அவள் அவனை நையாண்டி செய்த சொற்கள் ரீங்கரித்தன.

"பல்லாங்குழி பலகை வாயனே! எந்தப் பெண் உன் பற்களை உடைத்துக் கொண்டு போனாளோ!” -

ஒருகணம், அவளது பற்களை உடைத்து அந்த பேரழகு முகத்தைச் சிதைத்து விடலாம் என்றுகூட நினைத்தான். ஆனால், அது அவளது மமதையை போக்காது என்று உணர்ந்து கொண்டான். முகத்தை கோரமாக்கிவிட்டு, அவளை அமரேந்திரியின் பணிப்பெண்ணாக

https://telegram.me/aedahamlibrary

நியமித்தால், அதனால் அவளுக்குக் குறைவொன்றும் தோன்றாது. அவளை இளவரசியாகவே தோற்றத்தில் திகழ வைத்து, எந்த அமராவினால் அவள் சீராட்டப்பட்டாளோ அவளது பாதங்களை நீராட்ட வைக்க வேண்டும். அரண்மனை தரைகளை விளக்குமாற்றைத் தந்து சுத்தம் செய்யச் சொல்லவேண்டும். அடுக்களை கலயங்களை நீரில் கழுவ வைக்க வேண்டும். அப்போது தான் அவளது மமதை குறையும்! தனக்குள் யோசித்தான், கவுடில்யன்.

அரண்மனை அதிகாரி, வியாமனை அழைத்தான், கவுடில்யன்.

"வியாமரே! இந்த அகம்பாவம் பிடித்த பிசாசை ராஜமாதா அமராதேவியின் சேடியாகப் பணிபுரிய வையுங்கள். சொன்னதைச் செய்ய மறுத்தால், அவ்வப்போது கசையடி கொடுத்துப் பணிகளைச் செய்யச் சொல்லுங்கள். அவள் மீது கருணை காட்டுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கும் ஐந்து கசையடிகளைக் கொடுக்க வேண்டும். இது மன்னனின் அனுமதியோடு ராஜதந்திரியான நான் வெளியிடும் கட்டளை!" -

துர்தராவின் சினம் அதிகரித்தது.

"ம்ம்! அமராவை ராஜமாதா என்று கூறாதே! எனது கால்களை கழுவிய தாசி அவள். ரகசியமாக பிள்ளை பெற்று அதனை காட்டில் வீசி எறிந்துவிட்டு, அவள் வீசி எறிந்த பிள்ளையைப் பொறுக்கி வந்து, அவனை அரியணையில் அமர்த்தி, ஒரு இளவரசியை அவன் தாய்க்கு பணிவிடை செய்யச் சொல்லுவதுதான் உனது ராஜநீதியா, குள்ளநரியே" - கவுடில்யனை அனல் கக்கும் விழிகளால் வெறித்தாள்.

“அவளை மேலே பேச அனுமதிக்காதீர்கள். இழுத்துச் செல்லுங்கள் அவளை!" - பதைபதைப்புடன் கூறினான், சந்திரகுப்தன். தனது ஆசானை அவள் அவமதித்ததால் அங்ஙனம் கூறினானா, இல்லை அவள் மீது மீண்டும் மென்மை தோன்றி விட்டதா?

காவலர்கள் துர்தராவை இழுத்துக்கொண்டு செல்ல, கடைசி வரை சந்திரகுப்தனை திரும்பி வெறித்து நோக்கியபடிதான் சென்றாள் துர்தரா. அந்தப் பார்வையின் பொருள் என்ன? சந்திரகுப்தனுக்குப் புரியவில்லை. ஆனால் சாதுர்ய சாணக்கியனாக மாறப் போகும் கவுடில்யனுக்கு நிச்சயம் அந்தப் பார்வையின் பொருள் புரிந்திருக்கும். ஆனால் அவன் அந்தப் பார்வையை கவனித்தானோ இல்லையோ? காரணம், அவனது

https://telegram.me/aedahamlibrary

பார்வை சந்திரகுப்தனின் மீதே பதிந்திருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 22. சேடியின் பணிப்பெண்

துர்தரா தனது சேடிப்பெண்ணாக நியமிக்கப்பட்டிருக்கிறாள். அவளது ஊழியத்தை ஏற்று, அவளைக் கடுமையாக நடத்த வேண்டும். அவள் பணிகளைச் செய்ய மறுத்தால் அவளுக்கு ஐந்து கசையடிகளைத் தந்து, அவளை காரியம் ஆற்றச் செய்ய வேண்டும்.

அரண்மனை அதிகாரி வியாமன் வந்து கூறியதும் திகிலில் உறைந்து போனாள், அமரா. தனது மகன் மன்னனாகி விட்டான் என்கிற உற்சாகம் எல்லாம் வடிந்து மேனி நடுங்க நின்றாள்.

துர்தரா இளவரசியாகவும், இவள் பணிப் பெண்ணாகவும் இருந்தபோது, அவளிடம் அறை வாங்குவதில் தவறில்லை. ஆனால், இப்போது தான் இவளது பணிப்பெண் என்கிற எண்ணத்தை துர்தராவினால் பொறுக்க முடியுமா? அவளது தாக்குதல்கள் அதிகமானால், இவளால் அதனை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? தனக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தால் கூட, அமரா கலங்கியிருக்க மாட்டாள். ஆனால் இவளுக்கு ஊழியம் செய்ய துர்தரா வந்துகொண்டு இருக்கிறாள் என்பதனை செவியுற்றதும், உச்சந்தலையில் துவங்கி பாதம் வரையில் ஒரு நடுக்க அலை பாய்ந்து அவளை நிலைகுலையச்செய்தது.

துர்தரா வருவதை இரும்புச் சங்கிலிகளின் சப்தம் உரைக்க, இருக்கையில் அமர்ந்திருந்த அமரா எழுந்து நின்றாள்.

"அமருங்கள் ராஜமாதா! நீங்கள் உங்கள் அடிமைக்கு எழுந்து நிற்க வேண்டிய அவசியமில்லை!” - வியாமன் கூறினான்.

"நான் சீராட்டி வளர்த்த என் அருமை வளர்ப்பு மகள் வருகிறாள். தாயுள்ளத்தோடு நான் நிற்பதில் தவறென்ன?" - புன்சிரிப்போடு கூற முயன்று தோற்றாள் அமரா. வெளிறிய அவள் முகம், அவளுள் பொங்கிக் கொண்டிருக்கும் அச்சத்தை உணர்த்தியது.

"வாருங்கள் இளவரசி என்று அழைப்பதா, அல்லது துர்தரா என்று பெயர். சொல்லி அழைப்பதா?” - யோசித்தவளுக்கு ஒரு யுக்தி தோன்றியது.

குரோதம் நிறைந்த பார்வையுடன் துர்தரா அவள் கண்களுக்கு முன்பாக

https://telegram.me/aedahamlibrary

பிரசன்னமாகியதும், அவளை குளிர்விக்கும் சொற்களை உதிர்த்தபடி அவளை நோக்கி பாய்ந்தாள், அமரா!

"எனது பேரழகு பெட்டகமே.! உலகின் அழகையெல்லாம் உனது தேகத்தில் திரட்டி வைத்திருக்கும் திருமகளே... வருக!" - என்றபடி துர்தராவை அணைத்துக் கொள்வதற்காகப் பாய்ந்து முன்னேறினாள் அமரா.

சகிப்பாளா துர்தரா?

"ராணி பத்மாங்கியின் பிரிய மகள் நான்! என்னை தாசி உனது மகள் என்று கூறுகிறாயா?" - சங்கிலி பிணைத்திருந்த தனது காலை உயர்த்தி, பாய்ந்து வந்த அமராவின் இடையினில் பதித்துத் தள்ளினாள் துர்தரா. தான் அதுவரை அமர்ந்திருந்த இருக்கையின் காலடியில் சென்று விழுந்தாள், அமரா.

வியாமன் உறைந்து போனான். இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட அந்தக் காலை உயர்த்துவதற்கு எவ்வளவு வலிமை இருக்க வேண்டும், துர்தராவிடம்.

மன்னனுக்கு உடனே விவரத்தைத் தெரியப்படுத்த வேண்டும் என்று அவனது கண்களில் தோன்றிய துடிப்பினைக் கவனித்து விட்டாள், அமரா.

"அரண்மனைத் தலைவரே. இந்த நிகழ்வை சந்திரனிடம் தெரிவிக்க வேண்டாம்!" என்று அவள் கூறிக் கொண்டிருந்த போதே, ஒரு நெடிய உருவம் தூண் ஒன்றின் பின்பாக இருந்து பாய்ந்து வந்து துர்தராவின் சிகையைப் பிடித்தது. அவளது இரு கன்னங்களிலும் மாற்றி மாற்றி அறைந்தது. வேறு யார்? தனது தாய் உதைக்கப்பட்டதைக் கண்டு மனம் பொங்கிய சந்திரகுப்தன்தான் துர்தராவை அறைந்து கொண்டிருந்தான்.

தண்டனையை அறிவித்துவிட்டு, கவுடில்யன் தனது மாளிகைக்குச் சென்றதும், துர்தராவின் அழகை ரசித்தபடி அவளைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தான். தனது தாய் அமராவிடம், துர்தராவுக்கு எவ்விதக் குறையும் ஏற்படாமல் பார்த்துக்கொள் என்று சொல்வதற்காக, மலர்ந்த இதயத்துடன் அவளது நடை அழகை ரசித்தபடி வந்திருந்தான். ஆனால் இங்கே நடப்பது என்ன?

https://telegram.me/aedahamlibrary

“மகனே. விட்டுவிடு. அறியாப்பெண்?” - அமரா இறைஞ்சினாள்.

"அறியாப் பெண்ணா? அறையாமல் வளர்த்ததனால் வந்த வினை. இவள் இன்னும் இளவரசியாகவே இருந்தாலும், இந்தச் செயலை செய்திருக்கக் கூடாது. அம்மா! இவள் இங்கிருப்பது ஆபத்து! இவள் உன்னைக் கொன்றாலும் கொன்று விடுவாள். இவள் இருக்க வேண்டிய இடம், எனது அந்தப்புரம்! இவளை என்னால்தான் வழிக்குக் கொண்டு வர முடியும்!” -- என்றவன் அவளது கூந்தலை விடாமல் பற்றி தரதரவென்று இழுத்துச் சென்றான்.

"காட்டுமிராண்டியே! இரண்டாவது முறையாக எனது முடியைப் பற்றி விட்டாய். இதற்கெல்லாம் நீ பதில் கூறப் போகிறாய்!” என்று கூறியதும், சந்திரகுப்தன் திகைத்தான்.

இவனது விரிஞ்சி காட்டுவாசியினரின் திருமண முறை உடனே அவனது நினைவில் தோன்றியது. காட்டுவாசிப் பெண்கள் குழாமாக அமர்ந்திருப்பார்கள். மனையாளைத் தேடும் வாலிபன், அந்தக் குழாமில் இருந்து தனக்குப் பிடித்த பெண்ணின் கூந்தலை பற்றி இழுத்து வர வேண்டும். மூன்று முறை வாய்ப்பு அளிக்கப்படும். அதற்குள் வேறு ஏதாவது பெண் அழகாகத் தோன்றினால், அவள் கூந்தலைப் பிடித்து இழுத்து வரலாம். ஆனால் மூன்றாவது முறை எந்தப் பெண்ணின் கூந்தலை பற்றி இழுத்து வருகிறானோ, அவளே அந்த வாலிபனின் மனைவி. மூன்று முறையும் ஒரே பெண்ணின் கூந்தலை இழுப்பவன் அவள் மீது காதல் கொண்டிருக்கிறான் என்பது பொருள்.

இவன் இரண்டு முறை துர்தராவின் கூந்தலைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் சென்று விட்டான். விரிஞ்சி காட்டின் வழக்கப்படி மூன்றாவது முறையும் அவள் கூந்தலை பற்றி இழுத்தால், துர்தரா அவன் மனைவி.

தனது எண்ணம் முகத்தில் பிரதிபலிக்காத வண்ணம், சினத்தை அதிகரித்தபடி அவளை தனது அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றான். பணிப்பெண் ஒருத்தியை அழைத்தான்.

“நான் வருவதற்குள் இவளுக்கு பணிப்பெண்ணின் ஆடைகளை அணிவித்து, எனது மஞ்சத்தை சுத்தம் செய்து, தூப தீபம் ஏற்றி தயாராக வைக்கச் சொல். இன்றிரவு நான் உறங்கும் போதினில் இவள் எனக்கு ஆலவட்டம் வீச வேண்டும்!” - சந்திரகுப்தன் உத்தரவிட, மங்கலி என்கிற அந்தப் பெண் கலங்கி நின்றாள். துர்தராவிற்கு இவளால்

https://telegram.me/aedahamlibrary

பணிப்பெண் ஆடையை அணிவிக்க முடியுமா? இமயத்தை பெயர்த்து எடுத்து வா என்று கூறியிருந்தாலும் யோசிக்காமல் சென்றிருப்பாளே.

“நான் கவரி வீச வேண்டுமா! வாளை கொண்டு வா. அவன் தலையை வெட்டி வீசுகிறேன்!” கர்ஜித்தாள், துர்தரா.

மங்கலி உறைந்து போய் நின்றாள். இதுகாறும் பணிப்பெண் வேலை மிகவும் எளிதானது என்று எண்ணியிருந்தாள். சொன்னதை செய்ய வேண்டும். மன்னர் குடும்பத்திடம் பணிவாக நடக்க வேண்டும். இதுவே அவள் பணியில் சேருவதற்கு முன்பாகக் கூறப்பட்ட தாரக மந்திரம்.

ஆனால் இப்படி விரிஞ்சிக் காட்டு சிங்கமும், மகத நாட்டு பெண் சிங்கமும் ஒரே கூண்டில் கிடக்க அவர்களுக்கு ஊழியம் செய்யும் நிலை வரும் என்று மங்கலி சிறிதும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை. அவளது மேனி நடுங்கிக் கொண்டிருந்தது.

“உன் பெயர் என்ன?” ---

"மங்கலி!” --- நடுங்கியது அவளது குரல்.

"நீ என்னிடம் நடக்கும் முறையை வைத்துதான் நீ சுமங்கலியாக இருக்கப் போகிறாயா அல்லது அமங்கலியாகத் திகழப்போகிறாயா என்பது தெரியும்!” மங்கலியின் மங்கல சூத்திரத்தைப் பார்த்தபடி கூறினாள், துர்தரா.

துடிதுடித்துப் போனாள், மங்கலி. சந்திரகுப்தனின் மகுடாபிஷேகத்தன்றுதான் இவளுக்கு கழுத்தில் மங்கல சூத்ரம் பூட்டப்பட்டிருந்தது. அவளது கணவன் நிருருதன் ஒரு மற்போர் வீரன். இவளது தந்தையும் மற்போர் வீரன்தான். இருவருக்கும் நிகழ்ந்த மற்போரில் தான் தோற்றுவிட்டால், தனது மகளை நிருருதனுக்குத் தருவதாக தந்தை வாக்களித்து விட, இவளது வாழ்க்கை அந்த மூர்க்கனுக்கு பணயமாகிவிட்டது. மற்போரில் வெற்றி பெற்றவுடன், வீறு நடை போட்டுக்கொண்டு வந்து, இவளைத் தூக்கி எடுத்து தனது ஜாகைக்குப் போய்க் கொண்டே இருந்தான். அவனிடம் மன்றாடி ஒரு மங்கல சூத்திரத்தை கட்டும்படி போராடி, பிறகே வாழ்வினை தொடங்கியிருந்தாள். பிறகு நிருருதனை பிரியமுடன் நேசிக்க, அவளது அன்பு பணிவிடைகளால், அவனும் சிறிது சிறிதாக அவளை நேசிக்கத் தொடங்கி இருந்தான்.

https://telegram.me/aedahamlibrary

“இளவரசி! நீங்கள் என்னை எதிரியாக நினைக்காமல் உங்கள் ஆதரவாளராகவே எண்ணுங்கள். காரணம், உங்களைப் போலவே எனது கதையும் மிகவும் சோகம் நிறைந்ததே! என்னைக் கடத்திய மூர்க்கனிடம் இருந்து போராடி அவன் கையால் பெற்ற மங்கல சூத்திரம் இது! இதற்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது. இப்போதுதான், அந்த துஷ்டன், கணவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளத் துவங்கி இருக்கிறான். மன்னர் உங்களை எப்படி இங்கே இழுத்து வந்தாரோ அப்படித்தான், அந்த துஷ்டனால் நானும் இழுத்துச் செல்லப்பட்டேன்!" மங்கலி கதறினாள்.

"அவனை நஞ்சு கலந்தோ, வாளால் வெட்டியோ, கொலை செய்ய வேண்டியது தானே!” துர்தரா திகைப்புடன் கேட்டாள்.

"இளவரசி! சூழ்ச்சியின் ஊற்றுக்கண் எனது கணவன் இல்லை. அவனது மற்போர் ஆசான்தான் இதற்கு காரணம். அவனது ஆசான், சிகாமணி என்பானுக்கு எனது தந்தையின் மீது வன்மம் ஏற்பட்டது. காரணம் எனது தந்தை தனியாக மற்போர் களரி ஒன்றை நிறுவினார். அவருக்கு மாணாக்கர்கள் அதிகம் பேர் சேர, சிகாமணிக்கு பொறாமை. எனது கணவன் நிருருதனை எனது தந்தைக்கு எதிராக கொம்பு சீவி விட்டான். மற்போர் யுத்தத்திற்கு அழைத்து எனது வாழ்க்கையை பணயமாக்கி விட்டான்!” கண்ணீரோடு கூறினாள், மங்கலி.

"அடி முட்டாளே. அந்த சிகாமணியையும், உனது கணவன் இருவரையும் நீ சேர்த்துக் கொன்றிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் கண்ணீர் விட்டு கதறிக்கொண்டு இருக்கிறாயே. பார்த்துக்கொண்டே இரு.! என் கூந்தலை பற்றி இழுத்து வந்த காட்டுமிராண்டியையும், அந்த பல்லாங்குழி பலகை வாயனையும், துவம்சம் செய்கிறேன்!” - சூளுரைத்தாள், துர்தரா.

“அம்மா! நீங்கள் இளவரசியார். எதையும் துணிவுடன் செய்ய முடியும். நான் ஒரு சேடி. என்னால் அப்படிச் செய்ய முடியாது!” - மங்கலி கூறினாள்.

“இப்போது நான் சேடிதான். சேடியால் சந்திரகுப்தன் அழிந்தான் என்று சரித்திரத்தில் அவன் பெயரை இடம் பெற வைக்கிறேன்!” - அகம்பாவத்துடன் கூறினாள், துர்தரா.

திடீரென்று சுற்றுமுற்றும் பார்த்தாள், மங்கலி.

https://telegram.me/aedahamlibrary

"அம்மா! தாங்கள் இளவரசியாக, பட்டத்து ராணியாகத் தான் திகழப் போகிறீர்கள். தங்களை இழுத்து வந்த மன்னரின் முகத்தில் நான் வெறுப்பைக் காணவில்லை. தங்களை பற்றி அழைத்து வருகிறோம் என்கிற உற்சாகத்தைத்தான் கண்டேன். அவரது மனதில் தங்கள் மீது பிரேமை இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.

"ஆண்கள் வலுவானவர்கள். ஆனால் எடுப்பார் கைப்பிள்ளைகள். சிறுவயதில் தாய், குமார பர்வத்தில் சகோதரி, மணந்த பின் மனைவி, முதிர்ந்த வயதில் பெயர்த்திகள் என்று பெண்களைச் சார்ந்துதான் வாழ்வார்கள். ஒரு ஆண் இன்னொரு ஆணைச் சார்ந்து வாழவே முடியாது. அதுதான் பெண்களாகிய நமக்கு பலமான ஆயுதம். ஒரு ஆணை அழிக்க, ஒரு பெண்ணே செயலாற்றக் கூடாது. மற்றொரு ஆணைத்தான் பிரயோகம் செய்ய வேண்டும். யாரிடமும் கூறாதீர்கள். எனது கணவனின் ஆசான் சிகாமணியை நான் ஏற்கனவே தீர்த்துக் கட்டிவிட்டேன் தெரியுமா?" - மங்கலி சொன்னாள்.

"எனது தந்தையை பழிவாங்க, நிருருதனைக் கொண்டு என்னைக் கடத்தி வரச்செய்து பலவந்தமாக அவனுக்கு மனைவி ஆக்கினான். என்னைப் பார்க்கும் போதெல்லாம் தன்னால்தான் எனது வாழ்வு சிதைந்தது என்று கதறி அழுதார், என் தந்தை. அவர் படும் வேதனையை என்னால் சகிக்க முடியவில்லை. அதன்பின் ஜாலத்தில் இறங்கினேன்!" - மங்கலி சொன்னாள்.

“ஆம் இளவரசி ஜாலம்! என் கணவனுக்கு தனது ஆசானிடம் அபார பக்தி. அந்த பக்தியை என்னால் உடைக்க முடியவில்லை. என் கணவன் தனது நிலத்தில் களையெடுக்கச் சென்றிருந்தபோது, நான் எனது ஜாலத்தை துவக்கினேன். சிகாமணியையும் களை எடுப்பது என்று தீர்மானித்து, அவனை உணவருந்த நிருருதன் அழைப்பதாகக் கூறினேன். அதை நம்பி அவனும் வந்தான். நிருருதனுக்காகக் காத்திருந்தோம். சாளரம் வழியாக என் கணவன் வருவதைக் கண்டதும், சற்றும் தாமதிக்கவில்லை நான்... எனது ஆடையைக் கிழித்துக்கொண்டு, உறங்கிக்கொண்டிருந்த சிகாமணியின் மீது விழுந்து புரண்டு “ஐயோ.... பாவி... என்னை விடு... எனது கணவர் உன் மீது அபார பக்தி செலுத்தி வருகிறார். அவர் மனைவியை நீ இப்படி அனுபவிக்க நினைக்கிறாயே!" என்று அலறினேன். சிகாமணி மலங்க மலங்க விழித்தான். உள்ளே வந்த கணவன் நடப்பதைப் பார்த்து, சிகாமணியை தனது ஆசான் என்று கூட பாராமல், கூரையில் சொருகியிருந்த அரிவாளை எடுத்து அவனது

https://telegram.me/aedahamlibrary

தலையை வெட்டிச் சீவினான். இப்போது அவன் எனது ஆருயிர் கணவன். அதனால்தான், நீங்கள் என்னை அமங்கலி என்றதும் துடித்துப் போனேன்." மங்கலி கூறினாள்.

“ஒருவனிடம் ஒரு ஆடவனுக்கு பக்தி இருக்குமேயானால், அவன் நமக்கு எதிரியாக இருந்தால், அந்த ஆடவனை முதலில் கைக்குள் போட்டுக்கொண்டு அவன் கையாலேயே அவனது ஆசானை ஒழித்துக் கட்ட வேண்டும்...!" --- மங்கலி முடிவுரையாகக் கூறியது, பசுமரத்தாணியாக, துர்தராவின் நெஞ்சில் இறங்கியது.

“சபாஷ் மங்கலி! நீ எனது மதியூக மந்திரியாகி விட்டாய். எனக்கும் ஒரு கணக்கு பாக்கி இருக்கிறது. உனது கணவனின் ஆசான் போன்று இந்தக் காட்டு மிராண்டிக்கும் ஒரு ஆசான் இருக்கிறான். அவனை இவன் கையாலேயே ஒழிக்கிறேன். ஆனால் இவனும் ஒழிய வேண்டியவன்தான்!” - துர்தரா கூறினாள்.

"இளவரசி! உங்களுக்கு முதலில் யார் ஒழிய வேண்டும்! வேண்டுமானால், காட்டுமிராண்டியை ஒழிக்க அந்த கவுடில்யனுக்கு சிம்மாசனம் தருவதாகக் கூறி அவனுடன் கூட்டணி வையுங்கள்! இந்தக் காட்டுமிராண்டியை முதலில் கொல்லுங்கள்!" மங்கலி கூறினாள்.

“இல்லை. அந்த பல்லாங்குழி பலகை வாயன் மிகவும் சக்தி கொண்டவன். அவனது சக்திகளுக்குக் காரணமே அவனிடம் உள்ள தேவ உடும்பர மரம் என்பதனை அறிந்தேன். எனக்கு அந்த தேவ உடும்பரம் கிடைத்தால் போதும். இந்த நாட்டின் சிம்மாசனத்தை எனது தந்தைக்கு மீட்டுக் கொடுப்பேன். உன்னால் இதனைச் செய்ய முடியுமா?" துர்தரா கேட்டாள்.

“என் கணவர் மூலமாக முயல்கிறேன், இளவரசி. எனது கணவர் நிருருதன் மிகவும் பலசாலி. அவரால் செய்ய முடியாத காரியங்களே இல்லை. சிந்திக்கும் ஆற்றல் இல்லையே தவிர, நாம் அவரிடம் திட்டமிட்டுச் செயலாற்றச் சொன்னால் அதை அப்படியே நிறைவேற்றும் சாதுர்யம் உண்டு. உங்கள் சகோதரர் பிபத்த நந்தர், அவரது தோழர் உத்தாலன் மற்றும் எனது கணவர் நிருருத்தரும் ஒன்றாக சிகாமணியிடம் மல்யுத்தம் பயின்றவர்கள். உங்கள் சகோதரரின் கொலை அவரையும் மிகவும் பாதித்து விட்டது. நீங்கள் கட்டளையிட்டால் எதையும் செய்வார்!” - மங்கலி கூறினாள்.

https://telegram.me/aedahamlibrary

“உடனே நான் நிருருதனைச் சந்திக்க வேண்டும். அவன் மூலமாக அந்த கவுடில்யனிடம் இருந்து முதலில் தேவ உடும்பரத்தைக் களவாட வேண்டும். அவனுக்கும் இந்தக் காட்டுமிராண்டிக்கும் மித்திர பேதம் செய்து இருவரையும் கொல்ல வேண்டும். இதுவே எனது திட்டம்!” - துர்தரா குரோதத்துடன் கூறினாள்.

“திட்டம் நன்றாக உள்ளது இளவரசி.! ஆனால் அது நிறைவேறுவதற்கு சில ஜாலங்களைச் செய்ய வேண்டும். கவுடில்யன் மந்திர ஜாலம் செய்கிறான். அதனை முறியடிக்க நீங்கள் தந்திர ஜாலங்களைச் செய்ய வேண்டும். காட்டுமிராண்டியிடம் சற்றே பணிந்து நடந்து கொள்ளுங்கள். அவன் இதயம் கனியும். அப்போது அவனது ஆசானுக்கு எதிராக அவனது கொம்புகளைச் சீவி விடுங்கள். இறுதியில் அவன் கைகளாலேயே அவனது ஆசானை தீர்த்துக் கட்டுங்கள்...!” மங்கலி கூறினாள்.

உண்மை! மேலே மேலே சந்திரனின் கோபத்தை சம்பாதித்துக்கொள்வதால் என்ன லாபம்? அவனது சினம்தான் அதிகமாகும். ஆசானின் மீது பக்தி இன்னும் உறுதி பெறும். அதற்கு மாறாக, அவனிடம் சரசமாடி, அவனை ஆசானுக்கு எதிராகத் திருப்பி விட்டால்? தான் அவனது அந்தப்புரத்தில் சிறைப்பட்டிருப்பதும் ஒருவிதத்தில் நன்மைதான். கவுடில்யனுக்கு எதிராக அவனை திசை திருப்பி அவனது மனதைக் கலைக்கலாம். தண்டனைகளை நமக்கு சாதகமாக மாற்றிக் கொள்வதே ராஜயுக்தி.

அந்தக் கணம், படம் எடுக்கின்ற நாகம், பின்வாங்கி தனது புற்றினுள் செல்வதைப் போன்று, கனிந்த முகத்துடன், பணிப்பெண் ஆடையினை அணிவதற்காக, மங்கலியின் பின்பாகச் சென்றாள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 23. ஜல தாரை ஜாலம்

துர்தராவுக்கு பணிப்பெண் ஆடைகளை அணிவித்து விட்டு, மன்னன் கட்டளையிட்ட பணிகளைச் செய்து விட்டு, ரகசியமாக சந்திரகுப்தனின் அந்தப்புரத்தை விட்டு நழுவிய மங்கலி தனது கணவனின் மற்போர் களரிக்குச் சென்றாள். அங்கே சற்றும் இவள் எதிர்பார்த்திராத வகையில் உத்தாலனும் நிருருதனும் மற்போர் செய்துகொண்டிருந்தனர். தனது கணவனை நோக்கி, மங்கலி கையசைக்க அவன் உத்தாலனிடம் சற்று பொறுத்திருக்கும்படி சொல்லி விட்டு, மங்கலியை நோக்கி நடக்க, உத்தாலனையும் நோக்கி அவள் கையசைத்தாள்.

உத்தாலனும் வியப்புடன் நிருருதனைத் தொடர்ந்து மங்கலியை நோக்கி நடந்தான்.

“நான் இளவரசியாரிடம் இருந்து வருகிறேன். தனது சகோதரன் பிபத்த நந்தரின் படுகொலையால் மிகவும் கலங்கிப்போய் உள்ளார், இளவரசியார்! தனது பெற்றோரை சிறையில் தள்ளி தன்னைப் பணிப் பெண்ணாக மாற்றியுள்ள கவுடில்யனையும், மன்னன் சந்திரகுப்தனையும் பழிவாங்கத் துடிக்கிறார், இளவரசி! நான் இளவரசியின் பக்கம் செயல்படுவதாக வாக்களித்து விட்டேன்...” என்றதும் நிருருதன் அவளைக் கனிவுடன் பார்த்தான்.

"மங்கலி! என்னை மனிதனாக மாற்றி வரும் நீ, இளவரசி பக்கம் நிற்கையில் நான் வேறு யார் பக்கம் நிற்கப் போகிறேன். இந்த விவகாரத்தில், மனைவி சொல்லே எனக்கு மந்திரம்!” - நிருருதன் கூறினான்.

“இளவரசிக்கு பிபத்தன் வெறும் சகோதரன்தான். எனக்கு அவன் ஆருயிர் தோழன். அவனது தலையைக் கொய்த சந்திரகுப்தனின் தலையை வாங்கியே தீருவேன் --- என்று மனதினுள் சபதம் செய்திருக்கிறேன்!” --- உத்தாலன் கூறினான்.

“சபதம் செய்தால் மட்டும் இளவரசரின் ஆன்மா சாந்தி அடையாது. அவரது சகோதரியின் கற்புக்கு ஆபத்து உருவாகி உள்ளது உங்களுக்குத் தெரியுமா? சந்திரகுப்தன் இளவரசியாரை தனது படுக்கையறை பாவையாக மாற்றப் பார்க்கின்றான். இன்றிரவு தனக்கு பணிவிடை

https://telegram.me/aedahamlibrary

செய்யும்படி சந்திரகுப்தன் உத்தரவு இட்டிருக்கிறான்!” - மங்கலி கூற, உத்தாலன் பொங்கி எழுந்தான்.

"இளவரசியார் சந்திரகுப்தனின் அந்தப்புரத்திலா சிறை வைக்கப்பட்டு இருக்கிறார்? அமரேந்திரியின் அந்தப்புரத்தில்தானே அவர் பணியாற்ற வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது?"

“இது அந்த ராஜதந்திரிக்குத் தெரியுமா என்பது சந்தேகமாக உள்ளது. இந்தத் தகவலை எப்படியாவது அந்த கவுடில்யனின் செவிகளை எட்டச் செய்து விடுங்கள். அவர்களுள் மித்திர பேதத்தை உண்டாக்குவதே இளவரசியாரின் நோக்கம்!” - மங்கலி கூறினாள்.

“காத்திருக்கிறேன், இளவரசிக்குத் தொண்டு செய்ய. இந்தப் பணியை என்னிடம் தா. நான் கவுடில்யனைச் சந்தித்து மித்திர பேத பணியைத் தொடங்குகிறேன்!” -- உத்தாலன் சொன்னான்.

உத்தாலன் கவுடில்யனின் அரண்மனையினுள் நுழைந்தபோது, அரண்மனைத் தலைவன் வியாமன், கவுடில்யனைச் சந்தித்து விட்டு, தனது புரவியில் ஏறி வெளியேறிக்கொண்டிருந்தார். உத்தாலன் தனது புரவியை ஒரு மரத்தினில் பிணைத்து விட்டு, கவுடில்யனின் மாளிகையினுள் நுழைந்தான். காவலாளிகள் யாரும் வாயிலில் நின்றிருக்கவில்லை. ஒரு பணியாளன் மட்டும் உத்தாலனைக் கண்டதும் பணிந்து விட்டு, அவனை அமரும்படி கூறிவிட்டு, கவுடில்யனிடம் தெரிவிக்கச் சென்றான்.

வழக்கமாக தலைப்பாகையுடன் காணப்படும் கவுடில்யன், இப்போது பாகையினை அணிந்திருக்கவில்லை. எளிமையான வேட்டி அணிந்து மேலே உத்திரியம் ஒன்றை அணிந்திருந்தான். அவனது தேகத்தை வழக்கமாக மறைத்திருக்கும் செம்மையான சால்வையும் இப்போது காணப்படவில்லை

“பிபத்தனின் தோழன் உத்தாலனா? ஆச்சரியம்? என்னைக் காண வந்திருக்கிறாய்? என்னை உனது பரம வைரியாக அல்லவோ எண்ணியிருப்பாய் என்று நினைத்தேன்?” --- கவுடில்யன் புருவத்தை உயர்த்தினான்.

“எனது நண்பனை சூழ்ச்சி செய்து படுகொலை செய்து விட்டீர்கள். மனதில் கோபம் இல்லாமல் இருக்குமா? ஆனால் நான் இப்போது

https://telegram.me/aedahamlibrary

அதற்கு வரவில்லை. எங்கள் இளவரசியாருக்கு நியாயம் கேட்டு வந்திருக்கிறேன்." --- உத்தாலன் கூறினான்.

"அகம்பாவத்திற்கும், பணிவின்மைக்கும் என்ன தண்டனை கிடைக்க வேண்டுமோ, அதுவே அவளுக்குத் தரப்பட்டிருக்கிறது!" -- கவுடில்யன் அலட்சியமாகக் கூறினான்.

“அவர் இளவரசி! இளவரசியை ஒரு பெண்ணுக்கு சேடிப்பெண்ணாக நியமிப்பதில் தவறில்லை. ஆனால் உங்களது மன்னர் அவரை தனது பள்ளியறையில் அல்லவோ பணிப்பெண்ணாக வைத்திருக்கிறார். இது எவ்வகையில் நியாயம்?” - உத்தாலன் கேட்டான்.

கவுடில்யனின் புருவங்கள் உயர்ந்தன. "இது என்ன கட்டுக்கதை! உங்கள் துர்தரா ராஜமாதா அமரா தேவியின் பாதுகாப்பில் அல்லவா இருக்கிறாள்!" - கவுடில்யன் கூறினான்.

"ஏன்! உங்கள் அரண்மனைத் தலைவர் வியாமன் வந்திருந்தாரே. அவர்கூட தங்களிடம் உண்மையைச் சொல்லவில்லையா? அமரேந்திரியின் அந்தப்புரத்தில் இருந்து இளவரசியை கூந்தலை பற்றி உங்கள் மன்னர் இழுத்துச் சென்றாராம். தங்களுக்குத் தெரியாதா?" உத்தாலன் கேட்டான்.

கவுடில்யன் இதயத்தில் கனன்று கொண்டிருந்த அக்னி ஜ்வாலையை அவன் உமியினால் மூடி வைத்திருந்தான். உத்தாலன் தனது சொற்களால் அந்த உமியினை ஊதிவிட, மீண்டும் தீ ஜ்வாலை கொழுந்து விட்டு எரிந்து, கவுடில்யனின் முகத்தைச் செம்மையாக மாற்றியது.

துர்தராவிடம் சந்திரகுப்தனுக்கு ஒருவித ஈர்ப்பு தோன்றியிருந்ததை யூகித்து விட்டிருந்தான், கவுடில்யன். இருப்பினும், அவனது நெஞ்செல்லாம் குருபக்தி நிறைந்திருக்க, துர்தராவின் மீது அவன் கொண்டிருந்த இச்சை இவரது கட்டளைகளை மீறும் அளவுக்குச் செல்லாது என்றே நினைத்திருந்தான். தான் துர்தராவை அமரேந்திரியின் அந்தப்புரத்திற்கு அனுப்பியிருக்க, அவன் அவளை தன்னுடைய அந்தப்புரத்திற்கு இழுத்துச் சென்றதாக உத்தாலன் கூறியதும் அதிர்ந்தான். இருப்பினும் எதையும் கண்ணால் காணும் வரை எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாது என்று தீர்மானித்தான். உத்தாலன் சொல்வதை உடனடியாக நம்பினால், இவன் பரப்பசுவாமியைப் பற்றி

https://telegram.me/aedahamlibrary

அவதூறு கூறியதை நம்பிய புலிவேமுவுக்கும் இவனுக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்?

உத்தாலன் கூறியது தனக்கு ஒரு பொருட்டல்ல என்பதைப் போன்று முகத்தை வைத்துக்கொண்டான்.

"சந்திரகுப்தன் மன்னன். அவன் துர்தராவை தனது அந்தப்புரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தால் அவனுக்கு முழு உரிமையும் உள்ளது. அவள் மன்னனின் அடிமை. அடிமை எங்கே இருந்தால் என்ன?" - அலட்சியமாக கவுடில்யன் பேசினாலும், அவனது முகம் சினத்தினால் சிவந்து போனதைக் கண்டு விட்டான், உத்தாலன். அதுதானே அவனுக்கு வேண்டும்!

"பிபத்தனின் தலை சூழ்ச்சியால் கொய்யப்பட்டது. இளவரசனின் தலையைவிட மதிப்பில்லாதது எங்கள் இளவரசியின் கற்பு. அவருக்கு எந்த அவமானமும் நேரக்கூடாது என்பதற்காகவே தங்களிடம் எனது மனக்குமுறலைக் கூற வந்தேன். நான் வருகிறேன்!" என்று கவுடில்யனிடம் கூறிவிட்டு, அகன்றான், உத்தாலன்.

அவன் தலை மறைந்ததும் பணியாளனை அனுப்பி மீண்டும் வியாமனை தனது மாளிகைக்கு வரவழைத்தான், கவுடில்யன்.

"வியாமரே! துர்தரா தற்போது எங்கே இருக்கிறாள்?" - உள்ளே நுழைந்தும் நுழையாததுமாக கவுடில்யன் கேட்க, வியாமன் அதிர்ந்தான்.

"மன்னரின் அந்தப்புரத்தில்!" மெல்லிய குரலில் கூறினான், வியாமன்.

"நான் தங்களிடம் கூறியது என்ன! தாங்கள் செய்திருப்பது என்ன?" --- கவுடில்யனின் குரலில் கோபம் கொப்பளித்தது.

"துர்தராவை ராஜமாதாவின் வசம்தான் ஒப்புவித்தேன். ஆனால் சினம் கொண்ட துர்தரா, ராஜ மாதாவை தனது காலால் எட்டி உதைக்க அவர் நிலை குலைந்து பூமியில் விழுந்தார். அந்த கோபத்தில்தான் மன்னர் அவள் சிகையைப் பிடித்து இழுத்துச் சென்றார். அவளுக்கு தக்க பாடம் புகட்டுவதாகக் கூறினார். என்னால் அவரைத் தடுக்க இயலவில்லை.!"

"என்ன காரியம் செய்துவிட்டீர்? துர்தரா மன்னரின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கலாம். அவள் மன்னரது அந்தப்புரத்தில் இருப்பது

https://telegram.me/aedahamlibrary

நச்சுப் பாம்பை உள்ளே வைத்திருப்பது போல. அவளை அங்கிருந்து உடனே அப்புறப்படுத்த வேண்டும்!" கவுடில்யன் கூற, வியாமன் திகைத்தார்.

மன்னனை மீறி அவரால் எப்படி துர்தராவை அப்புறப்படுத்த முடியும்?

"என்ன யோசிக்கின்றீர்? சந்திரகுப்தன் அவன் தோழன் பலபீமாவுடன் விரிஞ்சி காட்டிற்குச் சென்று தனது குல தெய்வத்திற்கு வழிபாடு நடத்திக் கொண்டிருக்கிறான். அவன் மீண்டும் வருவதற்குள் துர்தராவை அவன் அந்தப்புரத்தில் இருந்து அப்புறப்படுத்தி விடுங்கள்!" -

"ராஜதந்திரியாரே! இந்த விவகாரத்தில் இதற்கு மேல் அடியேனால் ஒன்றும் செய்ய இயலாது!" -- முணுமுணுத்தார், வியாமன்.

கவுடில்யன் எரியும் தீபத்தையே சற்று நேரம் வெறித்துப் பார்த்தான். தானே அன்றிரவு சந்திரகுப்தனின் அந்தப்புரத்திற்குச் சென்று சந்திரகுப்தனின் நடவடிக்கைகளை வேவு பார்த்தால் என்ன? துர்தராவின் ஜாலங்களில் மயங்கி விட்டானா அல்லது இன்னும் குருவின் ஆணைகளை மதிக்கின்றானா என்பதைக் கண்டு வந்தால் என்ன?

"உண்மை! உங்களால் ஒன்றும் செய்ய இயலாதுதான்! நானே இன்றிரவு நேரே சென்று அவனது அந்தப்புரத்தில் என்ன நடக்கிறது என்பதைக் கண்டு வருகிறேன்!" - கவுடில்யன் சொல்ல சாளரத்தின் கீழே ஒரு பூச்செடியின் பின்பாக பதுங்கியிருந்த உத்தாலன், மீன் தூண்டிலில் சிக்கிவிட்டது என்கிற சேதியை நிருருதன் மூலம் மங்கலிக்குத் தெரிவிக்க, அவளும் துர்தராவிடம் தெரிவித்து விட்டாள்.

உடனே செயலில் இறங்கி விட்டாள் துர்தரா.

"மங்கலி! எனது தாய் பத்மாங்கியின் அந்தப்புரத்திற்குச் செல்லும் வெண்ணிலா முற்றத்தின் இரு புறங்களிலும் தடவாவிகள் உள்ளன. வலப்புறத் தடவாவிகளில் தாமரைப் பூக்களும், இடப்புறத் தடவாவிகளில் அல்லிக்கொடியும் பூத்திருக்கும். அல்லிப்பூ மலர்ந்திருக்கும் தடவாவிகளில் இறுதியில் உள்ள தடவாவியில் ஜல தாரா என்கிற மூலிகைக் கொடி பூத்திருக்கும். அதன் விதைகள் மனிதனை பிரக்ஞையை இழக்கச் செய்யும். பிபத்தனும், நானும் பிறந்த போது, மருத்துவர்கள், அந்த ஜல தாரை சாற்றை எனது தாயை

https://telegram.me/aedahamlibrary

நுகரச்செய்து அவர் பிரக்ஞையை இழக்கச் செய்தபின்தான் எங்களை அவரது வயிற்றில் இருந்து எடுத்தனராம். நீ சென்று அந்த ஜல தாரையை எடுத்து வா... சீக்கிரம். அந்த பல்லாங்குழி பலகை வாயனையும் இந்தக் காட்டுமிராண்டியையும் இன்றே மோத வைக்கிறேன்!" - துர்தரா சொல்ல, மங்கலி விரைவாக அங்கிருந்து நகர்ந்தாள்.

அன்றிரவு. ---

புஷ்பபுர அரண்மனை அடங்கி விட்டது. சந்திரகுப்தன் விரிஞ்சி காட்டிலிருந்து புறப்பட்டு அரண்மனையை அடைந்த போது நடுநிசி துவங்கி விட்டது. தனது புரவியிலிருந்து இறங்கிய பலபீமா, சந்திரகுப்தன் இறங்குவதற்கு உதவ, களைப்புடன் காணப்பட்ட சந்திரகுப்தன் தனது அந்தப்புரத்தை நோக்கி நடந்தான். காலையில் துர்தராவுக்கு தான் இட்டிருந்த கட்டளையை மறந்து விட, ஆயாசத்துடன் தனது அறையின் கதவுகளை தள்ளினான். உள்ளே ரம்மியமான நறுமணத்தை வீசிய புகை பரவியிருந்தது. ஆங்காங்கே அலங்கார விளக்குகள் நிறுத்தப்பட்டிருந்தன.

மங்கலி சந்திரகுப்தனை பணிந்தாள். "சுந்தரி!"

மங்கலி அழைத்ததும், சதங்கை ஒலி கேட்க, திரும்பி நோக்கினான், சந்திரகுப்தன். அவன் கண்கள் அப்படியே நிலைகுத்தி நின்றன. சேடிப்பெண்களுக்குரிய மஞ்சள் ஆடையினை அணிந்து பசுமை மேலாடையை தனது மார்புகளின் மீது போர்த்தி இருந்தாள். இளவரசிக்குரிய ஆபரணங்கள் அகற்றப்பட்டு, கிளிஞ்சல் மாலைகள் அவளது தேகத்தில் ஊசலாடிக்கொண்டு இருந்தன. நிலத்தையே பார்த்திராத அவளது கண்கள், நிலத்தில் பதிந்து நிற்க, குனிந்த தலையுடன், கையில் ஒரு ஸ்வர்ணக் கலயத்துடன் அவன் முன்பாக வந்து நின்றாள் துர்தரா.

"சுந்தரி! ஏன் பேசாமல் நிற்கிறாய். மன்னரிடம் கலயத்தைக் காட்டு. அவர் தனது முகத்தையும், கைகளையும் சுத்தப்படுத்திக் கொள்ளட்டும். பிறகு நீ அவரது பாதங்களை சுத்தம் செய்!" - மங்கலி கூறியதும் கலயத்தை அவன் முகத்தருகே நீட்டினாள் துர்தரா.

தன்னையும் அறியாமல் சந்திரகுப்தன் அந்த ஸ்வர்ணக் கலயத்தில் இருந்த நீரில் தனது கைகளை சுத்தம் செய்தான். மங்கலி நீட்டிய

https://telegram.me/aedahamlibrary

மற்றொரு ஈர வஸ்திரத்தினால் தனது முகத்தை ஒற்றிக்கொண்டான், சந்திரகுப்தன். ஆனால் அவனது விழிகள் மட்டும் துர்தராவின் முகத்தையே வெறித்துக்கொண்டிருந்தன.

சந்திரகுப்தன் வியப்புடன் மங்கலியை நோக்கினான். "இவளை ஏன் சுந்தரி என்று அழைக்கிறாய். துர்தரா அல்லவோ இவள் பெயர்!" --

"மன்னரே! இவள் இளவரசியாக இருந்த போது அவளை துர்தரா என்று அழைத்தோம். இப்போது இவளும் என்னைப் போன்று ஒரே சேடிதானே? அதனால் அவளுக்கு சுந்தரி என்று பெயரை மாற்றினேன்!"

குனிந்திருந்த துர்தரா ஓரக்கண்ணால் அந்தக் காட்டுமிராண்டியை நோக்கினாள்.

சந்திரகுப்தன் விரிஞ்சி காட்டிலிருந்து வருவதற்கு சற்று முன்பாகத்தான் இவளுக்கும், மங்கலிக்கும் ஒரு விவாதம் நடைபெற்றிருந்தது.

"முதலில் பல்லாங்குழி பலகை வாயனைக் கொல்வேன். பிறகு காட்டுமிராண்டியைக் கொல்வேன்!" - என்று துர்தரா அரற்றிக்கொண்டிருந்தபோது, அவளை கேலியுடன் நோக்கினாள்.

"இளவரசி! நீங்கள்தான் இப்படி சந்திரகுப்தனை பழி தீர்க்க நினைக்கின்றீர்கள். அவர் தங்கள் கூந்தலை பற்றி இழுத்து வந்த போது, நான் அவர் விழிகளில் சீற்றத்தைக் காணவில்லை. தங்கள் மீது காதலைத்தான் அந்த நேத்திரங்களில் கண்டேன்!" - மங்கலி கூறியிருந்தாள்.

"உளறாதே மங்கலி. என் தேகத்தை அருவருப்பால் கூசச் செய்கிறாய். எனது இரத்தமான பிபத்த நந்தனை கொலை செய்தவன் அவன். அவனுடன் நடிப்புக்காக கூட சரசமாடுவதையே வெறுக்கிறேன். அவனை நான் காதலிப்பதா? அது நந்தா வம்சத்திற்கே இழுக்கு!" என்று கர்ஜித்தாள் துர்தரா.

"அதென்னவோ தெரியாது. வேண்டுமென்றால் சோதித்துப் பாருங்கள். நான் அவர் எதிரே உங்களை கேவலப்படுத்துகிறேன். உங்கள் மீது காதல் கொண்டிருந்தால் அவர் உங்களுக்குப் பரிந்து பேசக் கூடும். என்னைக் கண்டிக்கக்கூடும்.... பார்க்கலாமா?" - என்று கூறியிருந்தாள்.

https://telegram.me/aedahamlibrary

அவள் சந்திரகுப்தனுக்கு வைத்திருந்த பரிசோதனையின் ஒரு அம்சமாகத்தான் சுந்தரி என்று இவளை அழைத்தது. சுந்தரி என்று மங்கலி துர்தராவை அழைப்பதைக் கண்டு முகம் சுளித்தான், சந்திரகுப்தன். எனவேதான் துர்தராவை ஏன் புதிய பெயரில் அழைக்கிறாய், என்று கேட்டான். அதற்கு மங்கலி கூறிய பதில் அவனுக்குச் சீற்றத்தைக் கிளப்பியது.

துர்தராவை இரக்கத்துடன் நோக்கினான், சந்திரன். இந்தப் பேரழகுப் பெட்டகத்தை பணிப்பெண் ஆடையில் நோக்கவே அவனுக்கு சிரமமாக இருந்தது. நேற்று வரை இளவரசியாக இருந்த அவளை, இந்தப் பெண், அதுவும் ஒரு சேடி அவமதிப்பது எவ்வளவு வேதனையாக இருக்கும்?

சீற்றம் பொங்க மங்கலியை நோக்கினான், சந்திரகுப்தன்.

"அவள் எனக்கு மட்டுமே அடிமை. உனக்கல்ல. அவளது பெயரை மாற்றும் அதிகாரம் உனக்கு யார் தந்தது? அவளை துர்தரா என்று கூட நீ அழைக்கக் கூடாது. நீ அவளை இளவரசி என்றேதான் அழைக்க வேண்டும்.! நான் சொல்வது புரிகிறதா?” - குரலில் துர்தராவின் மீது கரிசனம் பொங்கியது.

“என்ன இளவரசியாரே, நான் சொன்னது சரியா? மன்னரின் குரலில் தங்கள் மீது எவ்வளவு கரிசனம் கொண்டிருக்கிறார் என்பது புலப்படுகிறதா?” - கண்களாலேயே துர்தராவைக் கேட்டாள்.

“அப்படியென்றால் எனது பணி இன்னும் சுலபமானது. கத்தியின்றி, குருதிஇன்றி இந்தக் காட்டுமிராண்டியை ஒழித்துக் கட்டுகிறேன் !” தனது பார்வையில் குரோதத்தை பிரதிபலித்தாள், துர்தரா.

சட்டென்று குனிந்து கலயத்தை கீழே வைத்து அவனது பாதங்களை தனது கைகளால் பற்றி அந்த நீர் கலயத்தினுள் வைத்தாள். விரிஞ்சி காட்டின் கரடுமுரடு பாதையில் நடந்து குலதெய்வம் கோவிலுக்குச் சென்று வந்திருந்த அவனது வலிமையான பாதங்களை தனது மலர்க்கைகளால் தொட்டபோது மயிலின் இறகினால் வருடிக் கொடுப்பது போன்று உணர்ந்தான்.

“ஏய் காட்டுமிராண்டி!” என தனது கண்டம் கிழிய அலறியவளா இன்று மிருதுவான கைகளால் அவன் பாதங்களை வருடிக்கொண்டிருக்கின்றாள்.

https://telegram.me/aedahamlibrary

"இத்தகைய மனமாற்றத்தை எப்படிப் பெற்றாள்?" - சந்திரகுப்தனின் பார்வை மங்கலி பக்கம் திரும்பியது.

"நான் இளவரசிக்கு அறிவுரை கூறினேன், மன்னரே! எப்போது ஒரு மன்னன் உங்களை கைப்பற்றி தனது அந்தப்புரத்தினில் உங்களை சிறைவைத்து விட்டானோ, இனி உங்கள் வாழ்வு அவனது திருவடிகளில் தான் அடைக்கலம் ஆக வேண்டும் என்றேன். பகல் முழுவதும் யோசித்துக் கொண்டிருந்தார். மாலை மனமாற்றமும், சிந்தைத் தெளிவும் பெற்றார்!" - மங்கலி இவ்வாறு கூறியதும், சந்திரகுப்தனின் களைப்பெல்லாம் பறந்து போனது.

அவனுக்குத் தெரியாமல், கண்களால் பழத்தட்டினை நோக்கி ஜாடை காட்டினாள், மங்கலி. உடனே துர்தரா ஒரு திராட்சைக் கொத்தினை எடுத்து சந்திரனின் வாய்க்கு நேராக நீட்ட, அவளை கண்களால் விழுங்கியபடி, தனது தடித்த உதடுகளால் இரண்டு திராட்சைக் கனிகளை நாசுக்காகக் கொய்தான்.

துர்தராவுக்கு தேகமெல்லாம் எரிந்தது. தனது தமையனின் தலையைக் கொய்தவனுக்கு தான் கனிகளை ஊட்டிக்கொண்டு இருக்கிறோமே. ஒரு வாளை உருவி அவனது சிரத்தை வெட்டி வீழ்த்த வேண்டும் போன்று ஒரு வெறி.

"மன்னரே! விரிஞ்சிக் காடு வரை பயணித்து வந்திருக்கின்றீர். தாங்கள் சயனித்துக் கொள்ளுங்கள். துர்தரா உங்களுக்கு ஆலவட்டம் வீசுவாள்!" மங்கலி கூற, பட்டாடையால் அவனது பாதங்களை துடைத்துக் கொண்டிருந்த துர்தரா, அவன் எழுவதற்காக வேண்டி விலகி நிற்க, சந்திரகுப்தன் தனது மஞ்சத்தை நோக்கி நடந்தான்.

மஞ்சத்தில் அவன் படுத்ததும், வெட்டிவேர் விசிறி ஒன்றைக் கையிலெடுத்து அவனுக்கு விசிறத் தொடங்கினாள். அறை முழுவதும் வீசிய சுகந்தமும், துர்தராவின் விசிறியிலிருந்து வீசிய நறுமணக் காற்றும், அவனைக் கிறங்க வைக்க கண்களை மூடினான், சந்திரகுப்தன். அவன் கண்களை மூடியதும்தான் தாமதம். ஜல தாரை இலையில் அதன் விதையினை நசுக்கி வெளிவந்த சாற்றை ஜல தாரை இலையில் தடவி அவன் முகத்தில் பதித்தாள், துர்தரா. அடுத்த கணம், சந்திரகுப்தன் தனது பிரக்ஞையை இழந்தான்.

கவுடில்யன் மன்னனின் அந்தப்புரத்தை நோக்கி வர, தகவல் உத்தாலன்

https://telegram.me/aedahamlibrary

மூலம் மங்கலியை எட்டியது. உடனே அவள் துர்தராவிடம் தெரியப்படுத்தி விட்டாள். இதற்காகத்தானே காத்திருந்தாள், துர்தரா.

சந்திரகுப்தனின் மஞ்சத்தில் ஏறி அவன் அருகே சயனித்துக் கொண்டாள். வலுவான அவனது வலக்கரத்தினை எடுத்து தனது இடையின் மீது வைத்துக் கொண்டாள். சாளரத்தில் முக்காடிட்ட ஒரு உருவத்தின் அசைவு புலப்பட்டதும், கவுடில்யன் வேவு பார்க்க வந்து விட்டான் என்பதை அறிந்து கொண்டாள்.

சந்திரனின் கன்னத்தில் தனது முகவாயை வைத்தபடி கண்களை மூடியபடி பேசினாள்.

"அன்பே! உங்கள் இதயத்தைப் புரிந்து கொள்ளாமல் நான் தங்கள் மீது வெறுப்பைப் பொழிந்தேன். அந்த பொல்லாத கவுடில்யன் என் அண்ணனைக் கொன்றது போலவே என்னையும் தங்களை வைத்து கொல்ல முற்படுவான் என்றே நினைத்தேன். ஆனால் தங்களது காதல் இதயத்தைத் தந்து என்னை அவனிடம் இருந்து காப்பேன் என்று சத்தியம் செய்து விட்ட பின், நான் இனியுமா தங்களை வெறுக்க வேண்டும்? இனி உங்களது காதல் இதயத்திற்கு நான் அடிமை!” என்று அவன் முகத்தோடு தனது முகத்தைத் தேய்த்தாள், துர்தரா. ஆனால் ஓரக்கண்ணால், கவுடில்யனின் ஒவ்வொரு அசைவினையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

போர்வை முக்காட்டின் பின்பாக, இந்தக் காட்சியைக் கண்ட கவுடில்யனின் இரத்தம் கொதித்தது. பல்லாங்குழி பலகை வாயன் என்று கூறித் தன்னை நையாண்டி செய்த அவளுடன், சந்திரகுப்தன் சரசமாடிக்கொண்டு இருப்பதைக் கண்டதும், உலகே வெறுத்து விட்டது, கவுடில்யனுக்கு. காட்டில் திரிந்த இவனை மன்னனாக இவன் அமர்த்தியிருக்க, இவனோ பெண்பித்து பிடித்து ஆசானுக்கே துரோகம் செய்கிறானே. அவனை கையும் களவுமாகப் பிடித்து தண்டனை வழங்க வேண்டியதுதான்.

தனது முகத்தை போர்த்தியிருந்த முக்காடினை தூக்கி எறிந்து “சந்திரகுப்தா” என்று அலறுவதற்காக வாய் திறந்த கவுடில்யனின் கண்கள் தற்செயலாக நிலத்தில் கிடந்த ஜலதாரை இலைகளைக் கண்டு விட்டன. ஒரு நட்சத்திரத்தைப் போன்று ஆறு பகுதிகளைக் கொண்ட அந்த இலைகள் சிதறிக் கிடந்ததும், கவுடில்யனின் சாதுர்ய புத்தி உடனேயே விழித்துக்கொண்டது. மன்னன் மயக்க நிலையில்

https://telegram.me/aedahamlibrary

இருக்கிறான். கவுடில்யனுக்கும், சந்திரகுப்தனுக்கும் இடையே மித்திர பேதம் செய்வதற்காகத் தான் இங்கே அந்தப்புரத்தில் இந்த சரசக்காட்சி அரங்கேற்றப்படுகிறது. காலை கவுடில்யனின் மாளிகைக்கு உத்தாலன் விஜயம் செய்தது, இவனை இங்கே வரவழைப்பதற்குத்தான்... கவுடில்யனின் கூரிய புத்தி அனைத்தையும் உடனே கணித்து விட்டது.

கவுடில்யன் மயங்கிக் கிடந்த சந்திரகுப்தனின் கால் கட்டைவிரலைப் பார்த்தான். கலவியாடும் ஆணின் கால் கட்டைவிரல் எப்போதும் புடைத்து பருத்து காணப்படும். பௌருஷம் ஒரு ஆணின் கட்டை விரலில் தான் இருக்கின்றது. எனவேதான், சாந்தி முஹூர்த்தத்தில் ஒரு ஆணின் கால்களில் விழுந்து அவனது பாதங்களை தனது மலர்க்கரங்களால் பற்றி உந்துதலை ஏற்படுத்துவாள், பெண். பெண்தானே உந்துதல் சக்தி. இதனைப் புரிந்து கொள்ளாமல் ஆணுக்குப் பெண் அடிமையில்லை என்கிற வறட்டு ஜம்பங்கள் முதல் இரவிலேயே தொடங்குகின்றன.

மும்மூர்த்தி தத்துவமே, படைப்பு தொழிலினைத்தானே உணர்த்துகின்றது? பிரும்ம லோகத்தில் பிரும்ம ஞானத்தில் மூழ்கி தவம் செய்யும் நான்முகனை, கலைவாணி, மகரயாழை இசைத்துப் படைப்புக்கு நேரமாகி விட்டது என்பதனை உணர்த்துகிறாள். பாற்கடலில் உறங்கிக் கிடக்கும் திருமாலின் திருவடிகளை பற்றி அமர்ந்திருக்கிறாள், திருமகள். பாதங்களில் உள்ள பௌருஷத்தை உந்தி எழுப்புதலே பாற்கடல் காட்சியில் விளக்கப்படுகிறது. பௌருஷம் எழுந்ததும், சிவலோகத்தில் சிவம் - சக்தியின் இணைவை உணர்த்தும் அர்த்தநாரி தத்துவம்.

உண்மையிலேயே சந்திரகுப்தன் துர்தராவின் அணைப்பில் மயங்கியிருந்தால் அவனது வீர்யம் அடங்கி இருக்குமா என்ன? அவனது கால் கட்டைவிரலில் வீர்யம் பிரதிபலிக்கவில்லை. அவன் ஆழ்ந்த மயக்கத்தில் இருப்பதால், அவனது இந்திரியங்கள் ஒடுங்கி உள்ளன என்பதைப் புரிந்து கொண்டான். துர்தரா தனது ஜாலங்களை துவக்கி விட்டாள். இனியும் அவளது பிடியில் சந்திரகுப்தனை விடுவது ஆபத்து.

தீர்மானத்துடன் வந்த வழியே நடந்தான், கவுடில்யன். மறுநாள் காட்டுமிராண்டிக்கும், பல்லாங்குழி பலகை வாயனுக்கும் சொற்போர் துவங்கும். இருவரும் முட்டிக் கொண்டு, அவர்களிடையே பெரிய பிளவு தோன்றும். காட்டுமிராண்டியை கைக்குள் போட்டுக் கொண்டு, பல்லாங்குழி பலகை வாயனை தீர்த்துக் கட்டிவிட்டு, பெற்றோரை

https://telegram.me/aedahamlibrary

விடுவித்து, தந்தையை மீண்டும் மன்னனாக்கி விட்டு, பிறகு, காட்டுமிரண்டியையும் ஒழித்து விட வேண்டும். தனது ராஜதந்திரத்திற்கு தானே பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டாள் துர்தரா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 24. விரிஞ்சி நதியில் ஒரு திட்டு

நான் நேற்று இரவு உன்னைக் காண வந்தேன். நீ துர்தராவின் அணைப்பினில் கட்டுண்டு ஆவலுடன் சல்லாபத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாய். அதனால் நான் வந்த வழியே திரும்பிச் சென்றேன்!" - கவுடில்யன் தனது கண்ணிமைகளைச் சுருக்கி அதன் பிளவின் வழியாக சந்திரனைக் கூர்ந்து கவனித்தான்.

சந்திரகுப்தன் அதிர்ந்தான். "குருவே! நான் துர்தராவின் அணைப்பில் கட்டுண்டு இருந்தேனா? இருக்க முடியாது? நேற்று விரிஞ்சி காட்டில் இருந்து திரும்பிய உடனேயே களைப்பினால் கண்ணயர்ந்து விட்டேன்." - சந்திரகுப்தன் கூறினான்.

"அங்குதான் நீ ஏமாந்து விட்டாய், சந்திரா! அவள் உன்னை மயக்கத்தில் ஆழ்த்தி விட்டாள். அவளுடைய திட்டம் எனக்குப் புலப்பட்டு விட்டது. உன்னை மயக்கத்தில் ஆழ்த்தி உன்னுடன் சல்லாபம் செய்வது போன்று நடித்து, அதனை என்னைக் காண வைத்து, உன்னையும், என்னையும் பிரிப்பதே அவளது நோக்கம். அதனை நான் அறிந்து கொண்டதால் மவுனமாக திரும்பி விட்டேன். ஆனால் அவளது சதித் திட்டத்தை நாம் நம்பி விட்டிருந்தால், இந்நேரம் என்ன நடந்திருக்குமோ?" - கவுடில்யன் கேட்டான்.

"அப்படி ஒரு நிலை நமக்கிடையே ஏற்படாது, குருவே!" - சந்திரகுப்தனின் குரலில் உறுதி கொப்புளித்தது.

"ஒருகணம் நினைத்துப் பார்த்தாயா? சந்திரா! மயக்க நிலையிலேயே உன்னை துர்தரா கொன்று விட்டிருந்தால்?" - கவுடில்யன் கேட்டான்.

ஏற்கனவே, சந்திரகுப்தன் அந்தக் கேள்வியை தனக்குத் தானே எழுப்பி இருந்தான். பிபத்த நந்தன் கொலை செய்யப்பட்டதற்கும், தனது தந்தையைப் பதவி இறக்கியதற்கும் துர்தரா பழி வாங்கத் துடிப்பது அனைவருக்குமே தெரியும். இந்நிலையில் இவன் அவளுடன் ஒரே மஞ்சத்தில் படுத்திருக்கிறான். அவள் நினைத்திருந்தால் இவனது சிரத்தைத் துண்டித்து இருக்கலாம். சந்திரனுக்கு வியர்த்துக் கொட்டியது. தான் பெரிய ஆபத்திலிருந்து மீண்டு வந்திருப்பது புரிந்தது. கவுடில்யனைக் கிலியுடன் நோக்கினான்.

https://telegram.me/aedahamlibrary

சந்திரகுப்தனின் கரத்தை பற்றி தன்னருகே இழுத்து, அவனது முகத்தை ஆழமாகப் பார்த்தான், கவுடில்யன்.

"மறந்து விடாதே, சந்திரா! வனவாசியாகத் திகழ்ந்த உன்னை மாபெரும் சாம்ராஜ்யத்தின் மன்னனாக அமர்த்தியிருக்கிறேன். இந்த மவுரிய சாம்ராஜ்யம் இன்னும் விரியும். உனது சாம்ராஜ்யக் கொடியின் கீழ், எல்லா நாடுகளையும் கொண்டு வந்து உன்னை பாராளும் சக்கரவர்த்தியாகத் திகழச் செய்யப் போகிறேன். உனது பட்டத்து அரசியாக, ஒரு பேரழகியை உன்னருகே அமர்த்துகிறேன். நீ அதுவரை பொறுத்திரு. பேரழகு மட்டும் ஒருவளை அரசியாக்கிவிடாது. ஒரு மகாராணிக்கு உரிய அணிகலனே, குணமும், ஈகையும்தான். அது துர்தராவிடம் இல்லை. அவளை மனதால் கூட மனைவியாக வரிக்காதே. சற்றே பொறுத்திரு. நானே உனக்கு நல்ல மனையாளைத் தேர்ந்தெடுத்து தருகிறேன். கலவி சுகத்திற்காக, உனக்காக நான் மனதினில் எழுப்பி வரும் பிரும்மாண்ட கோட்டையை குலைத்து விடாதே!”

சந்திரகுப்தனின் குரலில் வருத்தம் தொனித்தது.

“எனக்காக நீங்கள் மேற்கொள்ளும் சிரமங்களை எண்ணி உண்மையிலேயே நான் நெகிழ்ந்து போகிறேன். என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் அனுமதியின்றி துர்தராவை எனது அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றது தவறு. எனது தாய் அமரேந்திரியை தனது காலால் எட்டி உதைத்ததால், அவளை தண்டிக்க வேண்டியே எனது அந்தப்புரத்திற்கு இழுத்துச் சென்றேன்!"

சந்திரகுப்தன் கூற, கவுடில்யன் தலையசைத்து மறுத்தான்.

“நான் சொல்வதைக் கேள். சந்திரா! அவள் விஷ கன்னிகை. அவளை உனது அந்தப்புரத்தினில் வைத்துக் கொள்வது பெரும் ஆபத்து. உனது ஜாதகத்தை நான் ஆராய்ந்து கூறியுள்ளேன். உனக்கு ஒரே ஒரு மகன் மட்டுமே பிறக்க உள்ளான். அந்த ஒரு மகனைப் பெறுவதற்கு நீ ஒரு நல்ல இளவரசியை மணந்து கொள்ள வேண்டும். நச்சு மனம் உள்ள துர்தரா உனது மனைவியானால், உனக்குப் பிறக்கும் மகனும் நச்சுத்தன்மை வாய்ந்தவனாக இருப்பான். எனவே, நான் கூறியபடி செய்து விடு!”

“உத்தரவிடுங்கள் குருவே!” - சந்திரகுப்தன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

“உனது விரிஞ்சி காட்டிலிருந்து பொங்கி வரும் விரிஞ்சி காட்டாறு, நமது மகதத்தின் எல்லையில் ஓடுகிறது அல்லவா. அந்த விரிஞ்சி ஆற்றின் நடுவே உள்ள திட்டினில் குடில் ஒன்றை எழுப்பி துர்தராவை சிறை வைத்துவிடு. அந்தத் திட்டினைச் சுற்றி காவலை போட்டுவிடு. தனிமையே அவளது சித்தத்தைக் குழப்பி, அவளைக் கொன்று விடும்! நான் உனக்குச் செய்த நன்மைக்கெல்லாம் பதிலுக்கு நீ தரும் குருதட்சிணை இதுதான்!” - கவுடில்யன் கூறினான்.

“அப்படியே செய்கிறேன்!” ---

அவசரமாக விரிஞ்சியாற்றின் நடுவே உள்ள திட்டினில் குடில் ஒன்றை எழுப்ப உத்தரவிட்டான், சந்திரகுப்தன். தோழிகள், பணிப்பெண்கள் யாருமின்றி தன்னந்தனியாக ஒரு படகினில் ஏற்றப்பட்டு துர்தரா அந்தக் குடிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். துர்தராவை யாரும் அணுக முடியாதபடி அந்தத் திட்டினில் பலத்த காவல் நின்றது. வெளியுலகின் தொடர்பில் இருந்து முழுவதுமாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் குடிலினில் இருந்தாள், துர்தரா. இந்த நடவடிக்கைகளால் அவளது உறுதி ஒன்றும் உடைபடவில்லை. கவுடில்யன் மற்றும் சந்திரகுப்தனின் மீது வன்மம் இன்னும் அதிகரிக்கவே செய்தது. சந்திரகுப்தனின் இதயத்தின் ஒரு மூலையில் தன்மீது அவன் கொண்டிருக்கும் மையல் சூறாவளியாகச் சூழ்ந்துகொண்டிருந்ததை அவள் புரிந்துகொண்டாள். அந்த மையல்தான் இவளது எதிர்காலத் திட்டங்களுக்கும், கவுடில்யனை வீழ்த்துவதற்கும் உதவப் போகின்றது.

சந்திரகுப்தனின் இதயத்தில் கனன்றுகொண்டிருக்கும் அந்த மையலை தன்னை நோக்கிப் பாய வைத்து விட்டால், போதும். அதனை எப்படி தன் பக்கமாகத் திருப்புவது என்று அந்தக் குடிலினில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தாள், துர்தரா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 25. சூறாவளி சம்போகம்

பெண்களுக்குத் திருமணம் ஆனபிறகே தாங்கள் பிறந்த இடத்தைக் காண வேண்டும் என்கிற எண்ணம் வரும். ஆண்களுக்கு, தாங்கள் அரிய சாதனைகளைச் செய்தபின், அவற்றைத் தாங்கள் பிறந்த ஊரின் மக்களிடையே பறைசாற்றி அவர்களை பிரமிக்க வைக்க வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும். சாணக்கியனுக்கும் அத்தகைய எண்ணம் ஏற்பட்டது. தனது பிறந்த ஊரான அத்தியூர் சென்று, அத்திமலைத்தேவனை தரிசித்து விட்டு, அப்படியே தனது கிராம மக்களிடம் தான் இப்போது பெரிய ராஜதந்திரி என்பதை அறியச் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்க, சந்திரகுப்தனுக்கு ஆயிரம் எச்சரிக்கைகளைக் கூறிவிட்டு, காஞ்சி வனத்திற்கு கிளம்பினான். அவன் விடுத்திருந்த எச்சரிக்கைகளுள், பிரதானமாகத் திகழ்ந்தது ஒன்று. "துர்தராவை நெருங்காதே." - என்பதுதான் அது.

சந்திரகுப்தனும் எச்சரிக்கையுடன்தான் இருந்தான். துர்தராவையே நினையாமல் இருந்தான். அவனது இதயத்தின் மூலையில் அவள் மீது அவன் கொண்டிருந்த மையல் குருபக்தி என்கிற இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்ததால், அந்த மையலினால் கரை கடந்து திட்டினில் சிறையிருந்த துர்தராவை நோக்கிப் பாய இயலவில்லை. தனது கடமைகளை ஆற்றுவதன் மூலம் துர்தராவை மறந்திருந்தான்.

ஒரு நாள் இரவு ---

சூறாவளிப் புயல் ஒன்று புஷ்பபுரத்தைத் தாக்கியது. மரங்கள் வேரோடு சாய்ந்தன.

மகேஸ்வரர் கோவில் கலசமே நொறுங்கி விழுந்து விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, சூறாவளிக் காற்றினால், விரிஞ்சி ஆறு பொங்கி, புஷ்பபுரத்தினுள் நுழைந்து அரண்மனை நந்தவனத்தையே மூழ்கடிக்கச் செய்துவிட்டது.

பொதுமக்கள் பலர் இந்தத் திடீர் வெள்ளத்தினால் உயிரிழந்ததாகத் தகவலைச் சுமந்தபடி பலபீமா, சந்திரனை நடுநிசியில் எழுப்பினான்.

"விரிஞ்சியாறு பொங்கி கடல் போன்று காட்சி அளிக்கின்றது. ஆற்றின் நடுவே தெரியும் அந்தத் திட்டு தெரியவில்லை தெரியுமா?" - பலபீமா

https://telegram.me/aedahamlibrary

சாதாரணமாகத் தான் சொன்னான்.

சந்திரகுப்தனும் அதை சாதாரண விவரமாகத்தான் கேட்டுக்கொண்டான். விரிஞ்சியாற்றின் நடுவே உள்ள திட்டு முழுகிவிட்டதாமே. தனக்குள் கூறியவனின் இதயத்தில், கனன்றுக்கொண்டிருந்த மையல் துடிக்கத் துவங்கியது.

“என்ன சொல்கிறாய்? அந்தத் திட்டில் நமது வீரர்கள் அந்த துர்தராவை காவல் காத்துக்கொண்டிருக்கின்றனரே?" - சந்திரகுப்தன் பதறினான்.

"அவர்கள் எல்லாம் சூறாவளிக் காற்று அடிக்கத் தொடங்கியதுமே, நமது அரண்மனைக்குத் திரும்பி விட்டனர்!” பலபீமா கூறினான்.

'துர்தராவின் கதி?' - குரல் கேள்வியை ஒலிக்கவில்லை. ஆனால் சந்திரனின் இதயம் துடிதுடித்தது.

அவன் கேட்காமலேயே பலபீமா கூறினான்.

“திட்டின் நடுவே இருந்த குடில் என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. இந்த சூறைக்காற்றில் அந்தக் குடில் மட்டும் பிழைத்திருக்குமா என்ன? குடிலும் அதில் இருந்தவளும் இந்நேரம் நீரில் மூழ்கியிருப்பார்கள். அவளது ஆணவத்துக்கு இயற்கையே தக்க தண்டனையை வழங்கி விட்டது

சந்திரகுப்தனின் இதயத்தில் இதுகாறும் குருபக்தி என்கிற இரும்புச் சங்கிலியினால் பிணைக்கப்பட்டிருந்த துர்தராவின் மீது உள்ள மையல் அதிகரிக்க, அந்தப் பிணைப்பு தகர்ந்தது. தனது அந்தப்புர உப்பரிகைக்குச் சென்று இருளின் ஊடே தொலைவில் தெரிந்த விரிஞ்சி நதியையும் அதன் நடுவே இருந்த அந்தத் திட்டினையும் பார்த்தான். வழக்கமாக ஒரு செந்தூரப்பொட்டு போன்று தெரியும் அந்தத் திட்டு இருளில் புலப்படவில்லை. தீப்பந்தத்தை உயர்த்தி பார்த்தான். அதன் ஒளியில் பிரளயம் போல் பொங்கி நின்ற தண்ணீரைத்தான் அவனால் காண முடிந்தது.

துர்தரா என்னும் பேரழகியை, தன்னந்தனியாக எவ்வித ஆதரவின்றி திட்டினில் தவிக்க விட்டு, சூறாவளியில் சிக்க வைத்து விட்டோமே. இப்போது அவள் உயிருடன் இருக்கிறாளோ இல்லையோ? அகம்பாவம் அவளது பிறவி குணம். அதற்காக அவளை இவ்வளவு கொடுமையாக

https://telegram.me/aedahamlibrary

தண்டிப்பதா?

துர்தராவை பற்றிய எண்ணங்கள் வரும்போதெல்லாம் தேவ உடும்பர கஷாயத்தை அருந்தும்படி ஒரு குடுவையில் கஷாயத்தை நிறைத்து தந்திருந்தார். அவளது ஜாலங்களுக்கு பலியாகாமல், உறுதியான எண்ணங்களை இவனுள் உருவாக்கும், என்று கூறிச்சென்றிருந்தார், கவுடில்யர். காற்று விர்விர்ரென்று சந்திரனின் இரும்பு தேகத்தைத் தள்ளிட முயன்று தோல்வியடைந்தது.

'அமைதியாகச் சென்று குரு அளித்திருந்த தேவ உடும்பர கஷாயத்தைக் குடித்துவிட்டு, துர்தராவை பற்றிய எண்ணங்களைத் துறந்து விட்டு, உறங்கச் செல்' அவன் அடிமனதில் குரல் ஒன்று கூறியது.

ஆனால் ---

குருபக்தி என்கிற இரும்புச் சங்கிலியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு விட்ட, துர்தராவின் மீது அவன் கொண்டிருந்த மையல் இப்போது கொழுந்து விட்டெரியத் துவங்கியது. அந்தப் பேரழகுப் பெட்டகத்தைக் காப்பாற்றியே தீர வேண்டும் என்கிற உத்வேகம் அவனுள் எழுந்தது.

உடனடி அரண்மனைப் படைகளை ஓடத்தினில் அனுப்பி துர்தராவைக் காப்பாற்றலாமா? படைகளை அனுப்பினால் உடனடியாக விவரம் வெளியே கசிந்து நாளை தீர்த்த யாத்திரை சென்றிருக்கும், குருவுக்குத் தெரிய வரும். இவனே சென்று துர்தராவைக் காப்பாற்றி யாருக்கும் தெரியாமல் அவளை ரகசியமாக ஓரிடத்தில் ஒளித்து வைத்தால்? வெள்ளத்தில் அவள் மூழ்கி இறந்து விட்டதாக உலகம் நம்பட்டுமே.

இந்த எண்ணம் எழுந்ததுமே, சந்திரன், உப்பரிகையிலிருந்து இறங்கி விரிஞ்சி நதியை நோக்கி விரைந்தான். காட்டில் வசித்த அவனுக்கு, கொட்டும் மழையோ, பொங்கும் வெள்ளமோ ஒரு பொருட்டா என்ன?

சூறைக்காற்று சற்றே அடங்கியிருந்தாலும், மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது. பாதைகளில் வெள்ளம் புரண்டு ஓட, காலில் அணிந்திருந்த தண்டைகளின் கனம் அவனது வேகத்தை மட்டுப்படுத்த, தனது காலில் இருந்த தண்டைகளை விசிறி எறிந்து விட்டு, தனது வேகத்தை அதிகரித்தான்.

https://telegram.me/aedahamlibrary

விரிஞ்சி ஆறு இன்னும் கொந்தளித்துக்கொண்டுதான் இருந்தது. ஒரே பாய்ச்சலாக நீருக்குள் குதித்த சந்திரன், அந்தத் திட்டு இருக்கும் திக்கினை யூகித்து அந்த திசையில் நீச்சலடிக்கத் துவங்கினான்.

அசுரத்தனமாகப் பாய்ந்த அலைகளை எதிர்த்து நீச்சலடித்து ஒரு வழியாக திட்டினை அடைந்தான். முகத்தில் வழிந்த நீரை வழித்தெடுத்து விட்டு திட்டினை அடைந்தான். இருள் போர்வை திட்டினை மூடி மறைத்திருக்க எந்த திசையில் நகருவது என்று தெரியாமல் நின்றான்.

பொழுது புலர்ந்து வானம் சற்றே வெண்மையைப் பரப்ப, சந்திரனால் தன்னைச் சுற்றிக் காண முடிந்தது. துர்தரா தங்கியிருந்த குடிலின் மீது மரங்கள் சரிந்து விழுந்திருக்க, குடிலின் கூரை முறிந்து கீழே விழுந்து, ஒரு பாறையின் மீது சரிந்திருந்ததைக் கண்டான். குடிலை நோக்கி நடப்பதற்காக முற்பட்டவனின் செவிகளில் அந்த முனகல் சத்தம் கேட்டது. திகைத்து நின்ற சந்திரன் தன்னைச் சுற்றிப் பார்க்க, திட்டிலிருந்து ஆற்றை நோக்கிப் பெருகிக் கொண்டிருந்த நீரின் நடுவே நின்ற ஒரு பாறையின் கீழே சிக்கித் திணறிக்கொண்டிருந்த துர்தராவைக் கண்டான்.

மழை நீர் அவளை ஆற்றை நோக்கித் தள்ளிக்கொண்டு போயிருக்க, வழியில் நின்ற பாறையில் அவள் உடல் சிக்கியதால், அவள் ஆற்றில் முழுகாமல் தப்பித்து விட்டிருந்தாள் என்பதை புரிந்து கொண்டான், சந்திரன். துர்தராவிடம் இருந்துதான் முனகல் சத்தம் கேட்டது என்பதை அறிந்ததும், அவன் இதயத்தில் ஒருவித நிம்மதி பரவியது. துர்தரா உயிருடன்தான் இருக்கிறாள்.

அவளைக் காப்பாற்ற வேண்டும். உக்கிரமாகப் பெய்யும் மழையிலிருந்து முதலில் அவளைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இடிந்து கிடந்த குடிலினை கவனித்தான் சந்திரன். குடிலின் மேற்கூரை சரிந்து ஒரு பாறையின் மீது விழுந்திருக்க, அதன் அடியில் மழை நிற்கும்வரை அவளை தங்க வைக்கலாம் என்று நினைத்தான். பாறையின் அடியில் சிக்கியிருந்த அவளது கால்களை விடுவிக்க நினைத்து, அவளது இடையை பற்றி இழுத்தான். ஆனால் கால்கள் இரண்டும் சகதியில் சிக்கியிருக்க, அவனால் அவளது கால்களை விடுவிக்க முடியவில்லை.

சந்திரன் அவளது கூந்தலை பற்றி பலமாக இழுக்க, இப்போது அவளது தேகம் அசைந்து கொடுத்தது. அவளை கூந்தலை பற்றி தொடர்ந்து

https://telegram.me/aedahamlibrary

இழுத்தான்.

திடீரென்று தனது கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள், துர்தரா.

“ஓ... காட்டுமிராண்டியா? என்னைக் காப்பாற்ற நீ வருவாய் என்று யூகித்தேன். மூன்றாவது முறையாக எனது கூந்தலை பற்றி இழுக்கிறாய்?" - அந்த பலஹீனமான நிலையிலும் அவளது குரலில் ஆணவம் போகவில்லை.

மலைத்துப் போய் நின்றான், சந்திரன். இவனது விரிஞ்சி காட்டுவாசிகளின் வழக்கப்படி, எந்த ஆடவன் ஒரு பெண்ணின் கூந்தலை மூன்று முறை பற்றி இழுத்துச் செல்கிறானோ, அவளே அவனது மனைவி. அந்த வழக்கப்படி இப்போது துர்தரா சந்திரனின் மனைவி. அந்த வழக்கத்தைப் பற்றி துர்தரா அறிந்திருக்கின்றாளா என்ன? மூன்றாவது முறையாக இவன் அவளது கூந்தலை பற்றியதாகக் கூறுகிறாளே?

துர்தராவின் குரலில் ஆணவம் தென்பட்டதே தவிர, அவள் மிகவும் நிலைகுலைந்து கிடந்தாள். எழுந்து நடக்கும் நிலையில் அவள் இல்லை என்பதை அவன் புரிந்து கொண்டான். தனது வலுவான கரங்களால் அவளை வாரி எடுத்துக்கொண்டு சரிந்திருந்த கூரையை நோக்கி நடந்தான். அதன் அடியினில் குனிந்து நுழைந்தவன், அவளை நிலத்தில் கிடத்தினான்.

துர்தரா கண்களை மூடிக் கிடந்தாள். ஆனால் அவள் நினைவினை இழந்திருக்கவில்லை. இதோ, எந்தக் காட்டுமிராண்டியை வைத்து தனது பழிவாங்கும் படலத்தைத் துவக்க நினைக்கிறாளோ, அவனது முகம் அவளது முகத்தின் அருகே இருக்கின்றது. இந்தத் திட்டினில் சிறை வைக்கப்பட்டு எப்படி மீளுவது என்று இவள் நினைத்திருக்க, இயற்கையன்னையே இவளுக்கு சாதகமாக ஒரு நிலையினை உருவாக்கி உள்ளது. இதோ இவள் மீது மையல் கொண்ட காட்டுமிராண்டி இவள் வசம் தனியே சிக்கியிருக்கிறான். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. சிக்கி முக்கி கற்களை உராய்ந்து தீப்பொறியினை ஏற்படுத்தி, சமித்து குச்சிகளை ஓமகுண்டத்தில் வைத்து நெய்யை வார்த்து ஹோமம் செய்வதை அவள் பல முறை கண்டிருக்கிறாள்.

ஆண் - பெண் சேர்க்கையே அவ்வகையில் ஒரு ஹோமத்தைப்

https://telegram.me/aedahamlibrary

போன்றுதானே நிகழ்த்தப்படுகிறது. நல்ல சூழ்நிலை. பூரண அமைதி. தடுக்க இங்கே யாரும் இல்லை. கவுடில்யனை ஒழிக்க இப்போதே மன்மத ஹோமத்தை நடத்தி அவனை வீழ்த்த வேண்டும்.

இந்த எண்ணம் தோன்றியதுமே, தனது இரு கரங்களை எடுத்து சந்திரனின் கழுத்தில் மாலையாகப் போட்டு, அவனது முகத்தை தனது முகத்தினை நோக்கி இழுக்க, முதலில் திகைத்தான் சந்திரன்.

கவுடில்யனின் கோபம் நிறைந்த முகம் அவனை தயங்க வைத்தது. அவளை உதறிவிட எண்ணித்தான் தனது உறுதியான கைகளால் அவளது தோள்களை பற்றினான். ஆனால் அவனது பலமான மார்பில் அவளது தேகம் ஒடுங்க, சந்திரகுப்தன் தான் மவுரிய மன்னன் என்பதனை மறந்தான். கவுடில்யனின் வார்த்தைகளை மறந்தான். தன்னுடன் கிடப்பவள் நந்தா வம்சத்து இளவரசி துர்தரா என்பதனை மறந்தான்.

இருவரும் சிக்கிமுக்கி கற்களாக உராய, உடனே மோகத் தீப்பொறிகள் கிளம்பின. ஹோமகுண்டத்தில் சமித்துகள் தீப்பற்றி எரிய அங்கே மன்மத ஹோமம் தொடங்கியது. கவுடில்யன் ஹோமகுண்டத்தை ஆயுதமாக வைத்து, தேவ உடும்பர சமித்துகளைக் கொண்டு மாபெரும் யாகத்தைச் செய்து மவுரிய வம்சத்தை உருவாக்கியிருந்தான்.

ஆனால் ---

சாதுர்யனும், ராஜதந்திரியுமான கவுடில்யனை ஒழிக்க, தனது தேகத்தையே ஹோமகுண்டமாக்கி, சந்திரனை அதில் யாகம் செய்ய வைத்து விட்டாள், துர்தரா.

இவர்கள் செய்த ஹோமம் பலனளிக்குமா என்பதை காலம்தான் கூற வேண்டும்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 26. கர்ப்ப தானம்

"காட்டுமிராண்டி இப்போது முழுவதும் எனது வசத்தில்.! அந்த பண்டார பல்லாங்குழி பலகை வாயன் தட்சிண பிரதேசத்திற்கு தீர்த்த யாத்திரை சென்று இருக்கிறான். அவன் கையில் உள்ள சர்வ வல்லமை பொருந்திய அந்த தேவ உடும்பரத்தை எடுத்து வந்து விடுங்கள். அவனது ஆர்ப்பாட்டம் ஓயும்!”

உத்தாலனிடம் துர்தரா மங்கலியின் மூலம் செய்தி அனுப்பியிருந்தாள். உத்தாலனும், நிருருதனும் எப்படியும் தேவ உடும்பரத்தைக் கொண்டு வந்து விட வேண்டும் என்கிற உத்வேகத்தோடு ஒரு நாள் இரவு கவுடில்யனின் மாளிகையை நோக்கிச் சென்றார்கள்.

பெரிதாகக் காவல் ஒன்றும் இல்லை. அவன் மாளிகையின் வாசல் திண்ணையில் சவுஜன்யன் என்கிற கவுடில்யனின் பணியாளன் ஒருவன் மட்டும் உறங்குவது வழக்கம். அன்றும் மாளிகையின் கதவுகளை வெளிப்புறமாக பூட்டி, அதன் திறவுகோலை தனது தலையணையின் அடியில் வைத்திருந்தான். அவனது உறக்கத்தை கலைக்காமல், உள்ளே நுழைய நினைத்து உத்தாலனும், நிருருதனும் ஒரு முறை மாளிகையைச் சுற்றி வந்தனர்.

மாளிகையின் பின்புறம் வந்த போது அவர்களின் பார்வையில் பட்டது அந்த ஓலைக் குடில். கவுடில்யனின் பிரத்யேக குடில். அத்தியூரில் அவனது தாய் தந்தை வசித்த குடிலைப் போன்றே அமைத்திருந்தான். அரண்மனைக்குச் செல்லாத காலங்களில் கவுடில்யன் அந்தக் குடிலினில்தான் தங்கியிருப்பான். உத்தாலன் அவனை ஒன்றிருமுறை சந்திக்க வந்த காலங்களில் கூட, அவனது பணியாளன் பின்புறம் சென்று குடிலினில் இருந்த கவுடில்யனை அழைத்து வந்திருந்தான்.

அந்தக் குடிலே கவுடில்யனின் ஏகாந்த வாசஸ்தலம் என்பதைப் புரிந்துகொண்ட உத்தாலன், மாளிகையினுள் பிரவேசிப்பதற்கு முன்பாக அந்தக் குடிலின் உள்ளே சோதனையிட நினைத்தான்.

“நிருருதா! நீ குடிலின் வாயிலில் காவல் இரு.! நான் உள்ளே சென்று தேவ உடும்பரத்தை எங்கே பதுக்கியிருக்கிறான் என்று தேடுகிறேன்.!” - என்று கூறிய உத்தாலன் அந்தக் குடிலினை நோக்கி நடந்தான். குடிலின் கதவைத் தொட்டதுமே அது திறந்து கொண்டது. உள்ளே சென்ற

https://telegram.me/aedahamlibrary

உத்தாலன் திகைத்தான். உள்ளே ஒரு ஓம குண்டத்தைத் தவிர வேறு எந்தப் பொருளும் காணப்படவில்லை.

அந்தக் குடிலே துடைத்து வைக்கப்பட்டிருந்தது. ஆக, கவுடில்யன் நிச்சயம் தனது வசமுள்ள தேவ உடும்பரத்தினை இந்த பாதுகாப்பு அற்ற குடிலில் வைத்திருக்க மாட்டான். மாளிகையில்தான் எங்காவது பத்திரப்படுத்தி இருக்க வேண்டும் என்கிற எண்ணத்துடன் திரும்பிய உத்தாலனின் பார்வை குடிலின் கூரையில் இருந்து கயிற்றினில் ஊசலாடிக்கொண்டிருந்த அந்தத் தொட்டிலின் மீது விழுந்தது.

ஒரு வேளை அந்தத் தொட்டிலில் தேவ உடும்பரத் துண்டங்களை வைத்திருப்பானோ? தொட்டிலை கூரையினில் பிணைத்திருந்த கயிற்றினை பார்த்தான். சற்றே மெல்லியதாகத்தான் காணப்பட்டது. இவனது வாளால் ஓங்கி அடித்தால், கயிறு அறுந்து விடும்.

உத்தாலன் தனது வாளினை உருவி அந்தக் கயிற்றை வெட்ட முயன்றான். கயிறு சற்றே உயரத்தில் இருந்தது. இன்னும் சற்று உயரமாக இருந்தால் கயிறை அறுத்து விடலாம். தன்னைச் சுற்றிப் பார்த்த உத்தாலன், குடிலின் ஒரு மூலையில் இருந்த சிறிய பூஜை மண்டபத்தை பார்த்தான். அந்த மண்டபத்தின் முன்னால் ஒரு முக்காலியில் பூஜைக்கு தேவையான வெள்ளிக் கலயங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த முக்காலியின் மீது நின்றால் போதும், அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் கயிற்றினை அறுத்து விடலாம். விரைவாகச் செயல்பட்டான் உத்தாலன். அந்த வெள்ளிக் கலயங்களை எடுத்து வைக்கப் பொறுமையின்றி அப்படியே முக்காலியை இழுக்க, கலயங்கள் பெரும் சப்தத்துடன் உருண்டோடின. அதனைப் பொருட்படுத்தாமல், முக்காலியை அந்த மரத்தொட்டிலுக்கு நேராக வைத்தவன், அதன் மீது ஏறி, தொட்டிலைப் பிணைத்திருந்த ஒரு கயிற்றினை அறுத்தான்

அடுத்த கணம் ---

மரத்தொட்டிலின் அடிபாகம் கதவு திறப்பது போன்று பிளந்து கொள்ள, ஒரு பெரிய இரும்பு உருளி அதன் உள்ளிருந்து உத்தாலனின் தலையை நோக்கி விரைவாக விழுந்தது. தன்னை சுதாரித்துக்கொண்டு உத்தாலன் கீழே குதித்து நழுவுவதற்குக் கூட அவகாசம் இல்லை. கண்கள் பீதியில் பிதுங்க, அண்ணாந்து நோக்கி வாய் பிளந்து நின்ற உத்தாலன் கடைசியாகக் கண்ட காட்சி....

https://telegram.me/aedahamlibrary

அந்த இரும்பு உருளி முழுவதும், பதிக்கப்பட்டிருந்த கூரிய இரும்பு முட்களே!

"ஆ” என்கிற அலறல் குடிலின் வெளியே கேட்க, நிருருதன் பதற்றத்துடன் உள்ளே ஓடினான். முகம் சிதைந்து தலை நொறுங்கி பிணமாகக் கிடந்த உத்தாலனைக் கண்டு வெலவெலத்துப் போய் நின்றான்.

“யாரங்கே!”- சவுஜன்யன் கையில் தீப்பந்தம் ஒன்றை ஏந்தி மாளிகையின் பின்புறமாக வருவதை அறிந்ததும், நிருருதன் ஓட்டம் பிடித்து, இருளில் கலந்து மறைந்தான்.

***

தென் பகுதிக்கு தீர்த்த யாத்திரை சென்றிருந்த கவுடில்யன் மீண்டும் மவுரியத்துக்கு அன்றுதான் திரும்புகிறான். தனது குருவுக்கு ஆர்ப்பாட்டமான வரவேற்பினை நல்க தீர்மானித்திருந்தான், சந்திரகுப்தன். தானே ஊர் எல்லைக்குச் சென்று கவுடில்யனை வரவேற்க உத்தேசித்திருப்பதாக அறிவித்தான். தான் துர்தராவை திருமணம் செய்து கொண்டதை குரு அங்கீகரிப்பாரா என்கிற அச்சம் அவனுக்கு இருந்தது. அங்கீகரிக்கவில்லை என்றால் என்ன செய்வது என்கிற கேள்வியும் அவனுள் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

ஆனால், துர்தரா அவனுடன் ஒன்றறக் கலந்து விட்டதற்கு அடையாளமாக, அவள் கர்ப்பவதியாகத் திகழ்ந்தாள். பொதுவாகவே, ஒரு பெண் கர்ப்பவதியாகத் திகழ்கிறாள் என்றால் அவளது கணவனுக்கு அவளிடம் விசேட அன்பு பிறக்கும்.

மனைவியாக ஏற்றுக்கொண்டவள் கர்ப்பம் தரிக்கும்போது, தான் ஆண்மையுள்ளவன் என்கிற கர்வம் ஒருவனுக்கு ஏற்படும். சந்திரகுப்தனோ மாபெரும் சாம்ராஜ்யத்தின் அரசன். தான் ஆண்மையுள்ளவன் மட்டுமல்ல, தனது மக்களுக்கு வருங்கால மன்னனையும் அல்லவா தரப்போகின்றான்.

சந்திரன் செங்கோலை ஏந்தினால் என்ன. மஞ்சத்தில் துர்தராவின் ஆட்சிதான் நடந்து கொண்டிருந்தது. அவனை முழுவதும் தனது கட்டுப்பாட்டினில் கொண்டு வந்திருந்தாள். வனவாசியான தன்னை, ஒரு மாபெரும் இளவரசி கணவனாக ஏற்றுக்கொண்டாள் என்பதே

https://telegram.me/aedahamlibrary

அவனுக்கு பிரமிப்பாக இருந்தது. தனது ஜாலங்களின் ஒரு பங்காக, அமரேந்திரியையும் தனது அந்தப்புரத்திற்கு அழைத்து சந்திரகுப்தனுடன் சேர்ந்து பாதபூஜை செய்தாள். இதனால் அவள் மீது சந்திரன் கொண்டிருந்த காதல் அதிகரித்தது. அவனை தனது கட்டைவிரலின் அடியில் கொண்டு வருவதற்காகத்தான் துர்தரா இப்படிச் செய்கிறாள் என்பதை அமரா நன்றாகவே அறிந்திருந்தாள்.

சந்திரகுப்தன் கொலு மண்டபத்திற்குப் புறப்பட்டு சென்றதும், நடைபெற இருந்த காட்சி இருக்கையில் அமர்ந்திருந்த அமராவுக்கு நன்றாகவே புலப்பட்டது.

சந்திரனின் தலை அந்தப்புரத்தில் இருந்து மறைந்ததுமே, அமராவின் சிகையைப் பிடித்து இழுத்துச் சென்று தனது மஞ்சத்தின் அருகே நிற்க வைப்பாள்.

*கேவலம், உனது பாதங்களைப் போய் நான் தொடவேண்டி இருந்ததே. அதற்கு பிராயச்சித்தமாக நீ எனது கால்களைப் பிடித்து விடு!" என்று மஞ்சத்தில் தூர்தரா சரிய, அவள் போதும் என்று கூறும் வரை அமரா துர்தராவின் பாதங்களை வருடிக் கொண்டிருப்பாள். துர்தரா இன்னும் அமராவை தனது மாமியாக நினைத்திருக்கவில்லை. சேடியாகத்தான் நடத்திக்கொண்டிருந்தாள். சந்திரகுப்தன் அருகில் இருக்கும்போது எவ்வளவுக்கெவ்வளவு மரியாதைகள் அமராவுக்குச் செய்யப்படுகின்றதோ, அவற்றை மிஞ்சுமளவுக்கு அவமதிப்புகள் பிறகு செய்யப்படும். பாவம் அமரா! இதைப் பற்றி சந்திரனிடம் அவள் கூறவில்லை. கூறியிருந்தாலும், முன்பு போன்று அவள் மீது சினம் கொள்வானோ! துர்தரா போதை அவனுக்கு இப்போது மிதமிஞ்சிப் போனது.

தீர்த்த யாத்திரை முடிந்து கவுடில்யன் வரும்போது, துர்தராவின் கொட்டம் அடங்கிவிடும் என்று அமராவைப் போலவே பலரும் காத்திருந்தனர்.

ஒரு இரவு, துர்தராவின் கூந்தலில் தனது முகத்தைப் புதைத்து சந்திரன் தனது மலைப்பாம்பினைப் போன்ற கரத்தால் அவளது இடையை அணைத்திருந்தான்.

"காட்டுமிராண்டியே!" - துர்தரா அழைத்தாள்.

https://telegram.me/aedahamlibrary

முன்பு போல் சந்திரனுக்கு, அவள் அவ்வாறு அழைத்தது கோபத்தை வரவைக்கவில்லை. முன்பு அகம்பாவத்துடன அழைக்கப்பட்ட, காட்டுமிராண்டி என்கிற சொல், இப்போது காதல் வேகத்தில் உரிமையுடன் உச்சரிக்கப்படுவதாகவே அவன் நினைத்திருந்தான். துர்தரா தன்னை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு விட்டாள் என்றே எண்ணியிருந்தான், சந்திரன்.

ஆனால் அடிமனதில், துர்தரா சந்திரனுடன் சல்லாபம் செய்வதையே அருவருக்கும் செயலாகத்தான் நினைத்துக்கொண்டிருந்தாள். தனது தேகத்தை சந்திரன் கையாளும்போது, "தாசி அமராவின் மகனுடன் தான் படுத்திருக்கிறோமே என்கிற எண்ணம் அவளை கூனிக் குறுகச் செய்யும். ஆனால் என்ன செய்வது? கவுடில்யன் என்கிற குள்ள நரியை ஒழிக்க வேண்டுமென்றால் அந்த குள்ளநரியின் பிடியில் உள்ள வேங்கைக்கு உணவாவதைத் தவிர வேறு வழி இல்லை. இவளது தேகத்தைத் தீண்டிய குற்றத்திற்காக இவனும் தண்டிக்கப்பட வேண்டியவனே. முதலில் தாய் தந்தையை விடுவிக்க வேண்டுமல்லவா. தந்தை தானநந்தாவை மீண்டும் மன்னனாக அமர்த்த வேண்டும் என்பதற்காக இந்த மனிதக் குரங்குடனும் சல்லாபிக்க வேண்டியதுதான்.

"சொல்... எனது பொக்கிஷமே. காட்டுமிராண்டி என்று உனது தேனூறும் வாயினால் என்னை அழைத்துவிட்டு, ஏன் மௌனம் சாதிக்கிறாய்?" --- சந்திரகுப்தன் தனது தடித்த சுட்டுவிரலால் அவளது பவளச் செவ்விதழை வருடினான். அவன் அவ்வாறு செய்கிறான் என்றால் அவன் பூரண மயக்கத்தில் இருக்கிறான் என்பது பொருள். இதுதான் சமயம், கவுடில்யனுக்கு எதிராக காய்களை நகர்த்த! துர்தராவின் மனம் கட்டளையிட்டது.

"அன்பே! தானநந்தா இப்போது தங்கள் மாமன். எனது தாய் பத்மாங்கி உங்கள் மாமி. நான் கருவுற்று இருப்பதை அறிந்து அவர்கள் எவ்வளவு சந்தோஷப்பட்டனர் தெரியுமா.?" - எச்சரிக்கையுடன் சொற்களைக் கையாண்டாள், துர்தரா.

அவள் ஒரு முறை பெற்றோரைக் காண்பதற்கு அனுமதி வழங்கி இருந்தான், சந்திரகுப்தன். கருவுற்று இருந்த இவளைக் கண்டதும், தானநந்தாவும், பத்மாங்கியும் கதறி விட்டனர்.

"மிஸ்ரபானு கூறியது போன்று ஒரு வனவாசியை நீ மணக்கும்படி நேர்ந்துவிட்டதே. அவன் சக்கரவர்த்தியாக இருந்தாலும், சேடி

https://telegram.me/aedahamlibrary

அமராவதி ரகசியமாகப் பெற்று காட்டில் வீசி எறிந்த மகன்தானே. எவ்வளவு கேவலம்.? சேடியின் மகன்! முறைதவறிப் பிறந்தவன்! காட்டில் வேண்டாத மகனாக வீசி எறியப்பட்டவன். அடவியில் இடக்கை வலக்கை அறியா வண்ணம், நாகரீகம் இல்லாமல் வளர்க்கப்பட்டவன். மென்மை இல்லாதவன். சூழ்ச்சியின் மூலம் அரியணையை அபகரித்தவன். நமது ராஜரத்தத்தில் அவனது இழிவான குருத்து கலந்து விட்டதே!” - தானநந்தன் புலம்பினான்.

“எல்லாவற்றிற்கும் மேலாக, எனது அருமை மகன் பிபத்த நந்தனின் தலையையும், எனது அருமை மகளின் கற்பையும் சூறையாடியவன். ஐயோ… எனது வயிறு குமுறுகிறதே...!" - பத்மாங்கியும் தனது பங்கிற்கு அரற்றினாள்.

"அப்பா... அம்மா! கலங்காதீர்கள். மீண்டும் உங்களை அரியணையில் வீற்றிருக்கச் செய்யவே நான் அந்தக் காட்டுமிராண்டியின் கர்ப்ப தானத்தை ஏற்றேன். எனது சகோதரன் தலையைக் கொய்தவன் அவன் என்பதை நான் மறக்கவில்லை. அவனது தலை இப்போது எனக்கு சொந்தம். அதை வேண்டும் என்கிற போது கொய்து கொள்ளலாம். இப்போது அடியாளின் இலக்கு, தீர்த்த யாத்திரை சென்றிருக்கும், அந்த பல்லாங்குழி பலகை வாயன். வரட்டும். காட்டுமிராண்டியின் கையாலேயே அவனது மரண சாசனத்தை எழுத வைக்கிறேன்.!” - கிசுகிசுத்த குரலில் கூறிவிட்டு, அந்தப்புரம் திரும்பி விட்டாள், துர்தரா.

தான் தாங்கியிருக்கும் சந்திரகுப்தனின் கர்ப்பத்தை குறித்து பத்மாங்கியும், தானநந்தாவும் புளகாங்கிதத்துடன் விசாரிக்கவில்லை. துர்தராவும் கன்னங்களில் செம்மையுடன் அது குறித்து விவரிக்கவில்லை.

சந்திரகுப்தனின் கைவிரல்கள் வீணையை மீட்டுவது போன்று அவள் தேகத்தில் ஏறியும், இறங்கியும் விளையாட, அப்போதுதான் சமயம் என்று அவனிடம் சில வரங்களை வேண்டி வாங்கினாள் துர்தரா.

"நந்தனின் மகள் நானும், மவுரியத் தலைமகனான நீங்களும் சங்கமித்துவிட்ட பிறகு, அந்த மறையவர் உருவாக்கிய மஞ்சள் கொடியை எதற்காக தாங்கிப் பிடிக்கிறீர்கள்? உங்களது தூய மனதைக் குறிக்கும் வெண்மையையும், எங்கள் நந்த குல கொடியின் வண்ணமான கடல் நீலத்தையும் இணைத்து புதிய மவுரியக் கொடியை உருவாக்குங்கள்.

https://telegram.me/aedahamlibrary

உங்கள் மாமனையும், மாமியையும், சிறையில் இருந்து அரண்மனையில் ஒரு பகுதியில் சகல வசதிகளுடன் சிறை வையுங்கள். நாம் சங்கமித்துவிட்ட பிறகு, நமது உறவுகளும் சங்கமிக்கட்டும்.

இறுதியாக, வரும் கார்த்திகை மாதத்தில் எனது அண்ணா பிபத்தனுக்கு பிறந்த தினம் வருகிறது. அன்று நம் அரண்மனை வாயிலில் அவனுக்கு வெங்கல சிலை ஒன்றை அமைக்க வேண்டுகிறேன்!"

என்னதான் ஆயுதக் களரியில் வீரர்களின் ஆயுதங்கள் தீட்டி கூர் ஏற்றப்பட்டாலும், அவற்றை உடனடியாக மழுங்கச்செய்வது, மஞ்சம்தானே.

காதல் மயக்கத்தில் துர்தராவின் அத்தனை கோரிக்கைகளையும் ஏற்று விட்டான், சந்திரகுப்தன். ஆனால் அரண்மனையை விட்டு ஒருநாள் புறப்படும் போது, முகப்பில் நின்ற பிபத்த நந்தனின் நெடிய பிரதிமையைக் கண்டதும் உறைந்து போனான். ஆசானின் கோபப்பார்வையும், சினம் கொண்ட குரலும் அவனை அச்சுறுத்த, மஞ்சத்தில் தன்னை மறந்ததற்கு தன்னையே நொந்துகொண்டான்.

அவனை வழியனுப்புவதற்காக வந்திருந்த துர்தரா அவனது மனவோட்டத்தைப் புரிந்துகொண்டாள்.

"இன்னும் ஏன் அந்த மறையவனுக்கு அஞ்சுகிறீர்கள்.? எனது அண்ணனைக் கொன்றீர்கள். எனது தாய் தந்தையரை சிறையில் அடைத்தீர்கள். என்னுடன் கலவியாடியபோது இந்தக் குற்றங்களைச் செய்து விட்டு, இவளுடன் உறவாடுகிறோமே என்று உங்கள் நெஞ்சு உங்களை உறுத்தியதா என்ன? காரியத்திலேயே கண்ணாக இருந்தீர்கள் அல்லவா? அது போல்தான், இதுவும். உங்கள் குரு உங்களை மன்னனாக அமர வைத்தான் என்பதற்காக நீங்கள் என்ன அவனுக்கு அடிமை சாசனமா எழுதித் தந்தீர்கள்? எப்படி என்னுடன் கலவியாடும்போது உங்கள் நெஞ்சு உங்களை உறுத்தவில்லையோ, அப்படித் தன்னிச்சையாக செயல்படும் போது, குரு என்ன நினைப்பாரோ என்கிற சிந்தனை உங்களை உறுத்தக் கூடாது. எல்லா அதிகாரங்களையும் கொண்ட மன்னர் நீங்கள்" --- துர்தரா கூறினாள்.

சந்திரகுப்தன் குழம்பிப் போனான். என்ன இருந்தாலும், வனவாசி அல்லவா? துர்தராவின் துர்போதனைகள் ஒரு புறம் அவனைச் சுழற்றி அடிக்க, கவுடில்யன் மீது கொண்டிருந்த நேசமும் பக்தியும் மறுபுறம்

https://telegram.me/aedahamlibrary

அவனை வாட்டி வதைத்தன.

கவுடில்யனின் குடிலினில் உத்தாலன் மர்மமான முறையில் மரணம் அடைந்ததைப் பெரிய வழக்காக மாற்றி, அதனைக் கொண்டு கவுடில்யனை கைது செய்யும் எண்ணத்தில் இருந்தாள், துர்தரா. எப்படியும் தனக்கு மகன் பிறப்பதற்குள், கவுடில்யனை ஒழித்துக் கட்டி விட வேண்டும். பிறகு ஒரு நல்ல மூஹூர்த்தத்தில் இந்தக் காட்டுமிராண்டியையும் பரலோகம் அனுப்பிவிட்டு, தந்தை தானநந்தாவை மன்னனாக அமரவைத்து மீண்டும் நந்தா வம்சத்தை உருவாக்க வேண்டும். தானே நந்த சாம்ராஜ்யத்தை ஆள வேண்டும். - என்று தொலைநோக்குத் திட்டம் ஒன்றை தீட்டியிருந்தாள், துர்தரா.

சரியாக, இந்த சமயத்தில்தான், கவுடில்யன், தட்சிண தீர்த்த யாத்திரையை முடித்துக்கொண்டு மீண்டும் புஷ்பபுரத்தில் காலடி வைத்தான்.

நாட்டின் எல்லையில் மவுரியத்தின் மஞ்சள் கொடிக்குப் பதிலாக வெண்மையும், கடல் நீல வண்ணத்திலும் இணைந்த புதிய கொடியைக் கண்டதுமே கவுடில்யனுக்குப் புரிந்துபோனது, சந்திரகுப்தன் தடம் புரண்டு விட்டான் என்பது.

அமைதியாகத் தனது மாளிகைக்குச் சென்றான். சவுஜன்யன் அவனை அன்புடன் வரவேற்றாலும், அவன் முகத்தில் சோபை இல்லை.

"சவுஜன்யா! நாட்டில் என்ன விசேஷம்?" - கவுடில்யன் கேட்டான்.

"நாட்டின் எல்லையில் தங்களை யார் வரவேற்றார்கள்?" - சவுஜன்யன் எதிர்க் கேள்வி கேட்டான்.

"யாரும் வரவில்லையே?" - அதிர்ந்தான், கவுடில்யன்.

"தளபதி அபேயன் கூடவா வரவில்லை?" - சவுஜன்யன் கேட்டான்.

"இல்லை. யாரும் வரவில்லை!" - கவுடில்யன் கூறினான்.

"நாட்டில் என்ன விசேடம் என்று கேட்டீர்களே. இதுதான் விசேடம். தங்களை நாட்டின் எல்லைக்கு வந்து வரவேற்கப் போவதாகக் கூறிய மன்னர் சந்திரகுப்தர், அவர் கூறியபடி செய்யவில்லை என்பதுதான்

https://telegram.me/aedahamlibrary

நாட்டின் விசேடம்...!" - சவுஜன்யன் கூறி முடித்திருக்கமாட்டான். வாயிலில் புரவிகள் வந்து நிற்கும் ஒலி கேட்டது.

வாயிற்புறம் எட்டிப் பார்த்தான், கவுடில்யன்.

“தளபதி அபேயனும், வீரர்களும் என்னை வரவேற்க வந்திருக்கிறார்கள்!” - கவுடில்யனின் முகம் மலர்ந்தது.

"குருவே! நீங்கள் இல்லாத போது, ஒரு நள்ளிரவு உமது குடிலில் ஒரு விவகாரம் நடைபெற்றது. அதை தங்களுக்கு கூறுவதற்குள், இப்போது அபேயன் வந்திருக்கிறார். அவரைப் பார்த்தால் தங்களை வரவேற்க வந்திருப்பவராகத் தோன்றவில்லை! ”- சவுஜன்யன் கூற, கவுடில்யன் குழப்பத்துடன் உள்ளே நுழைந்த அபேயனை நோக்கினான்.

“இராஜதந்திரியே! மறைந்த இளவரசன் பிபத்த நந்தனின் தோழன் உத்தாலனின் கொலை தொடர்பாக தாங்கள் கைது செய்யப்படுகிறீர். அரண்மனை உத்தரவு!” - அபேயன் கூறினான்.

“நன்று கூறினாய், அபேயா! இது அரண்மனை உத்தரவாகத்தான் இருக்க முடியும். சந்திரகுப்தனின் உத்தரவாக இருக்க முடியாது.! மன்னன் நலமா?” கவுடில்யன் கேட்டான்.

அபேயன் பதில் கூறாமல் நிலத்தைப் பார்க்க, கவுடில்யன் அவனது தோளினில் தட்டினான்.

“ஒரு வீரத் தளபதியின் கண்கள், நிலத்தையும், ஆகாயத்தையும் காணவே கூடாது. தெய்வ சந்நிதியில் இருக்கும் போது நிலத்தையும், போர்க்களத்தில் வீர மரணம் அடைவதற்காகக் காத்திருக்கும்போது மட்டுமே ஆகாயத்தையும் காண வேண்டும்.” - என்ற கவுடில்யன், சவுஜன்யனை நோக்கினான்.

அவனை நோக்கி சமிக்ஞை செய்ய, சுவுஜன்யன் கவுடில்யனின் அருகே வந்தான். அவனது செவிகளில் எதையோ கவுடில்யன் கிசுகிசுக்க, அவன் உள்ளே சென்று ஒரு சுவடியுடன் வந்தான். அந்தச் சுவடியை தனது இடையினில் சொருகினான், கவுடில்யன்.

"சவுஜன்யா! என்னை கைது செய்கிறார்களாம்! நான் அரண்மனைக்குச் சென்று விட்டு வருகிறேன். விரைவில் வந்து விடுவேன். எனக்கு

https://telegram.me/aedahamlibrary

கீரையை மசித்து மிளகுடன் கூட்டி, நெல்லிப் பருப்புகளைத் தூவி வை. உன் கைப்பக்குவத்தை உண்டு நாட்களாகி விட்டன... வா அபேயா! நாம் போகலாம்.!” கவுடில்யன் அபேயனுடன் நடந்தான்.

கூர்மையான பார்வையால் சந்திரகுப்தனின் நெஞ்சத்தைக் கிழிப்பதற்கு, தனது கண்களைத் தீட்டிக்கொண்டான், கவுடில்யன். கொலு மண்டபத்தினுள் நுழைந்ததுமே அவனுக்கு எல்லாம் விளங்கிப் போனது. தான் தீர்த்த யாத்திரை போன குற்றம், இவன் பாடுபட்டு சிம்மாசனத்தில் அமர்த்திய சந்திரகுப்தன் என்னும் வனவாசி மதிலுக்கு அப்பால் தாவிய கடுவன் பூனையாக மாறிவிட்டிருந்தான். அவனது பௌருஷத்தைத் திரட்டி தனது கூந்தல் நுனியில் முடித்துக் கொண்டு கவுடில்யனை ஏளனப்பார்வையோடு வரவேற்கத் தயாராக இருந்தாள், துர்தரா.

கவுடில்யன் சந்திரகுப்தனின் முன்பாக நிறுத்தப்பட்டான். அவனது ராஜதந்திரி பதவிக்கான ஆசனம் வெறுமையாக இருந்தது. இன்னும் அரை நாழிகையில் அவன் அதில் மீண்டும் அமரப் போகிறான். அதற்கான சாதுர்யம் அவனது சிந்தையில் இருந்தது. எனவே, அலட்சியமான பார்வையுடன் தான் நின்றான், கவுடில்யன்.

சந்திரகுப்தனின் முகத்தில் வியர்வை ஆறாகப் பெருக, வழக்கம்போல், கவுடில்யனின் பார்வையை தவிர்த்து, தனது செங்கோலின் உச்சியில் திகழ்ந்த மயில் உருவத்தையே வெறித்துக்கொண்டிருந்தான்.

ஒரு வருடப் பிரிவில் நிறையவே மாறியிருந்தான் சந்திரகுப்தன். ரதி கேளிக்கை விருந்தை தொடர்ந்து அனுபவித்து வந்திருக்க வேண்டும். அவனது துடைகள் பருத்து, கால் கட்டைவிரல் மேல்நோக்கி இருந்தது. கால் கட்டைவிரல் மேல்நோக்கி இருந்தால் கலவியாட்டத்தில் நாட்டம் உள்ளவன் என்பது பொருள்.

துர்தராவின் குவிந்த வயிறும், சரிந்த மார்பகங்களும், சிவந்த கண்களும் அவள் சந்திரனை தனது வசம் முழுதுமாக இழுத்துக்கொண்டதற்கு ஆதாரங்களாக விளங்கின.

சினம் கலந்த பார்வையால் அபேயனை வெறித்தாள், துர்தரா.

"தளபதியே! அன்றொருநாள், என்னை கைது செய்த போது, பெண் என்றும் பாராமல் எனது காலில் விலங்கு பூட்டினீர்கள்! ஆனால் இன்று நமது ராஜதந்திரிக்கு விலங்கு பூட்டாமல் அழைத்து வருகிறீர்.

https://telegram.me/aedahamlibrary

ஒருவேளை, என்னைவிட ராஜதந்திரி நளினமானவர் என்பதாலோ?” - என்றவள் கலகலவென்று சிரித்தாள். பிறகு கவுடில்யனை ஏளனத்துடன் நோக்கினாள்.

"வாருங்கள் ராஜதந்திரியாரே! தங்களை பல்லாக்கில் அழைத்து வந்திருக்க வேண்டும். சூழ்நிலை அவ்வாறு அமையவில்லை. முதலில் தங்கள் சீடன் சந்திரகுப்த மவுரியருக்கும், தானநந்தாவின் மகள், துர்தராவாகிய எனக்கும் திருமணம் அமோகமாக நடந்தேறியது. எங்கள் இனிய தாம்பத்தியத்தின் அடையாளமாக, மவுரிய குலக்கொடி எனது வயிற்றில் வளர்கின்றது. இனி உங்கள் சிந்தையில் நீங்கள் சூழ்ச்சிகளை கர்ப்பம் தரிக்கும் போதெல்லாம், எனது கர்ப்பப்பையில் நான் தாங்கும் சூல், அந்த சூழ்ச்சிகளை முறியடிக்கும்.

"எனது அண்ணன் பிபத்த நந்தனின் நண்பன் உத்தாலன் உங்களது குடிலில் இறந்து கிடந்தான். அவனைக் கொல்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, தாங்கள் தீர்த்த யாத்திரை போனதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. மன்னரின் அனுமதியோடுதான் தாங்கள் கைது செய்யப்பட்டுள்ளீர். இதற்கு தாங்கள் கூறும் பதில் என்ன?”

கவுடில்யனை வளைத்து விட்ட ஆனந்தத்தில், துர்தராவின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவம் ஆடியது. "அடேய்... சிக்கினாய், பல்லாங்குழி பலகை வாயா!”

கவுடில்யன் சற்றும் கலங்கவில்லை.

"போதும், சந்திரகுப்தா வேடிக்கை. நீதானே எனக்கு ஓலை அனுப்பினாய். எனது அடிமை துர்தராவை, உத்தாலனும், நிருருதன் என்பவனும் ரகசியமாக சந்திக்கிறார்கள் என்று. பிபத்தனைக் கொன்றதற்காக பழிவாங்கும் விதமாக அவர்கள் என்னைக் கொல்லக்கூடும் என்று ஓலை அனுப்பினாயே. நான் அவர்களைக் கொல்லப்போகிறேன் என்றபோது, நான்தானே மன்னன் ஆன பிறகு இம்மாதிரி கொலைகளைச் செய்யாதே. அது உனது பதவிக்கு இழுக்கினைத் தேடித் தரும் என்றேனே. நான் தீர்த்த யாத்திரைக்குச் சென்றிருக்கையில் நீயே உத்தாலனைக் கொன்று விட்டு என்னை விசாரிக்கின்றாயே? இது என்ன நியாயம்?” - கவுடில்யன் கேட்டான்.

துர்தரா திடுக்கிட்டு, சந்திரகுப்தனைத் திரும்பி நோக்கினாள். சந்திரகுப்தன் அரண்டு போனான். துர்தராவின் வலைக்குள் விழுவதற்கு

https://telegram.me/aedahamlibrary

முன்பாக, உளவாளிகளின் மூலம் உத்தாலன், நிருருதன், மற்றும் மங்கலி ஆகியோர் துர்தராவுடன் கூடி சதி செய்து வருவது தெரிய வர, இது குறித்து உடனடியாக கவுடில்யனுக்கு ஓலை அனுப்பி அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று சேதி அனுப்பியிருந்தான். கவுடில்யன் தீர்த்த யாத்திரைக்குச் செல்வதற்கு முன்பாக அனுப்பப்பட்ட ஓலை. அதைப் பற்றி முற்றிலும் மறந்தே விட்டிருந்தான், சந்திரகுப்தன். அதனை இப்போது தனக்கு சாதகமாக்கிக் கொள்கிறார், அவனது ஆசான்.

அடுத்த கணம் ---

"குருவே! என்னை மன்னித்து விடுங்கள். காமம் கண்ணை மறைத்துவிட்டது. துர்தராவின் காதல் வலையில் சிக்கி விட்டேன். அவள் ஏற்படுத்திய மதிமயக்கத்தில், குரு துரோகம் செய்ய இருந்தேன். தங்களைக் கண்டதும் எனது சிந்தை தெளிவாகிவிட்டது. அபேயா! ராஜதந்திரியை கைது செய்யும்படி அரசியார் இட்ட உத்தரவை நான் ரத்து செய்கிறேன். ராஜ தந்திரியாரே, எழுந்தருளுங்கள். தங்களது இருக்கையில் அமருங்கள்!” - என்றவன் கவுடில்யனின் கரத்தை பற்றி அவரது இருக்கையில் அமர வைத்தான்.

கவுடில்யன் வெற்றிப் பார்வையை துர்தரா பக்கம் வீச, சினத்தினால் அவளது முகம் செம்மையை அடைந்திருந்தது.

“சந்திரகுப்தா! உனது விதை துர்தராவின் வயிற்றில் வளருவது குறித்து மகிழ்ச்சி. நந்த நாட்டின் நிலத்தை ஒரு காட்டுவாசி உழுதிருக்கிறான், என்பதே போதும், தானநந்தாவின் கர்வத்தை ஒடுக்க. கர்ப்ப ஸ்திரீயை கொலு மண்டபத்தில் அமர வைக்காதே, சந்திரகுப்தா. அரசியல் விவகாரங்களைப் பற்றி ஏன் அவள் வயிற்றில் உள்ள சூலினைக் கேட்க வைக்கிறாய். அந்தப்புரத்தில் நலங்கு பாடல்களைக் கேட்கட்டும். அடுத்த வாரம் கிரகணம் ஒன்று ஏற்படப் போகிறது. கிரகண காலத்தில் கர்ப்ப ஸ்திரீகள் வெளியே நடமாடக்கூடாது. அவளை அந்தப்புரத்திலேயே சிறை வை!” - கவுடில்யன் உத்தரவிட்டான்.

“தோழியரே! துர்தராவை அந்தப்புரத்திற்கு இட்டுச் செல்லுங்கள். நான் கூறும் வரை அவளை வெளியே அனுமதிக்க வேண்டாம்.!” - சந்திரகுப்தன் கூற,

வேறு வழியின்றி எழுந்தாள், துர்தரா.

https://telegram.me/aedahamlibrary

கவுடில்யனைக் கடக்கும் போது, அவள் காதுபட முணுமுணுத்தான், கவுடில்யன்:

“எனது சிந்தையில் நான் சூழ்ச்சிகளை கர்ப்பம் தரித்தாலும், அவை சுகப்பிரசவமாகவே முடியும். உனது சிந்தையில் சூழ்ச்சிகள் கர்ப்பம் ஜனித்த உடனேயே குறைப்பிரசவமாக கலைந்து போகின்றது. சிந்தையின் கர்ப்பம் குறைப்பிரசவமாக முடியலாம். ஆனால், வயிற்று கர்ப்பம் அவ்வாறு முடியக்கூடாது. தெரிந்தோ, தெரியாமலோ, சந்திரகுப்தனின் மனைவியாகி விட்டாய். இதுவே உனக்கு பெரிய அவமானம். காட்டுமிராண்டி கடித்த எச்சில் பழம் நீ. இனியாவது இறுமாப்பினை அகற்றி ஒரு நல்ல அரசியாகத் திகழ்ந்து நாட்டுக்கும், உனது கணவனுக்கும் நல்ல பெயரைப் பெற்றுத் தா.”

துர்தராவுக்கு புத்திமதிகளைக் கூற, அவள் தான் கொலுமண்டபத்தில் இருப்பதை மறந்தாள்.

“உன்னையும், அந்தக் காட்டுமிராண்டியையும் ஒழித்துக் கட்டத்தான் நான் அவனை மணந்துகொண்டேன். அவன் மீதுள்ள காதலினால் அல்ல. உங்கள் இருவருக்கும் எனது கையால்தான் மரணம்!” - தனது திட்டத்தை ஒரு கணத்தில் தவிடு பொடியாக்கி விட்டானே கவுடில்யன் என்கிற ஆவேசத்தில், சூழ்நிலையை மறந்து சொற்களை வீசினாள். இதைத்தானே கவுடில்யன் எதிர்பார்த்தான்.

"பார்த்தாயா சந்திரா! உன்னைக் காதலித்து மணக்கவில்லை அவள். நம்மை ஒழிப்பதற்கே உன்னுடன் கலவியாடி இருக்கிறாள். நீயும் அவளது வலையில் விழுந்து விட்டாய். இப்போதும் நான்தான் உன்னைக் காப்பாற்றியுள்ளேன். உன் மீது இருக்கும் வெறுப்பினை விட, என் மீது அவளுக்கு வெறுப்பு அதிகமான காரணத்தால், முதலில் என்னை ஒழிக்கத் திட்டமிட்டாள் அதன் பிறகு உன்னை ஒழித்திருப்பாள். அதனால்தான் அவள் உன்னை விட்டு வைத்திருக்கிறாள். படித்துப் படித்து பாடத்தை உனக்குப் புகட்டினேன். ஆனால் நீ தேக சுகத்தையே பெரிதாக நினைக்கிறாய்.

“வீரர்களுக்கு உயிர் அற்பமானது. எனவேதான் அதைத் துறக்க அவர்கள் எப்போதும் தயார் நிலையில் இருப்பார்கள். ஆனால் பெண்களுக்கு கற்பு ஒப்பற்ற பொக்கிஷம். நாகத்தின் நாகமணி போன்றது. எப்போது ஒரு பெண் தனது சூழ்ச்சி வெற்றி பெற வேண்டும் என்று தனது கற்பையே பணயம் வைக்கிறாளோ, அவளால் நாடே

https://telegram.me/aedahamlibrary

அழியும். இனியும் இவளை நம்பாதே, சந்திரகுப்தா இவளுக்கு உரிய இடம் சிறைச்சாலை. உனது சிசுவை இவள் தாங்கிக்கொண்டிருக்கிறாள் என்பதால், அவளை அந்தப்புரக் காவலில் வை. இது உனது குருவின் கட்டளை. பிறகு உனது இஷ்டம்.!" - கவுடில்யன் கூறினான்.

துர்தரா தன்னுடன் உறவாடியதே தன்னைக் கொல்வதற்கே என்பதைப் புரிந்துகொண்டும் அவள் மீது காதலை வெளிப்படுத்தினால், அவன் மீண்டும் காட்டுவாசியாகத் திரிவதே மேல்.! தனக்குள் நினைத்த சந்திரகுப்தன், துர்தராவை மீண்டும் அந்தப்புரச் சிறைச்சாலையில் வைக்கும்படி உத்தரவிட்டான்.

தனக்குப் பிரியமான மசித்த அகத்தி கீரையை அன்னமுடன் கலந்து உண்பதற்காக ஆர்வமுடன் தனது மாளிகைக்குத் திரும்பிக்கொண்டிருந்தான், கவுடில்யன். தனது மாளிகையினுள் நுழைவதற்காக எத்தனித்தவன் தனது மாளிகையின் வாயிலில் ஒரு முதியவர் நிற்பதை கண்டான்.

"சுவாமி! நான் ஒரு தேசாந்திரி. உண்டு நாளாகி விட்டது. எனக்கு அன்னம் வழங்க முடியுமா?" அந்த வயோதிகர் கேட்க, அவரை வரவேற்று உபசரித்தான், கவுடில்யன்.

"வாருங்கள்! உங்கள் கால்களை கழுவிக் கொள்ளுங்கள். நாம் இருவரும் சேர்ந்து உண்போம்!" என்றவன், அந்த தேசாந்திரிக்கு வேண்டிய அளவு அன்னம் படைத்தான்.

உண்டு முடித்ததும், அந்த வயோதிகர் இவன் மாளிகையின் திண்ணையில் படுத்து உறங்கினார். கவுடில்யனும் தனது குடிலுக்குச் சென்று சற்றே கண்ணயர்ந்தான்.

கவுடில்யன் கண்விழித்தபோது, பொழுது சாயத் தொடங்கி இருந்தது. விளக்கேற்றும் நேரம் ஆகிவிட்ட படியால், வாசல் திண்ணையில் உறங்கிக்கொண்டிருக்கும் தேசாந்திரியை எழுப்பும் எண்ணத்தோடு திண்ணைக்கு விரைந்தான்.

திண்ணையில் அந்த தேசாந்திரியை காணவில்லை. ஒரு சிறு மூட்டை மட்டுமே இருந்தது. இயற்கை கடனைக் கழிக்க அந்த முதியவர் சென்று இருக்கக்கூடும் என்று கவுடில்யன் அவருக்காகக் காத்திருந்தான். அந்த முதியவர் திரும்பி வரவே இல்லை. ஒரு வேளை, தனது மூட்டையை

https://telegram.me/aedahamlibrary

மறந்து சென்று விட்டாரோ? தயக்கத்துடன் அவன் அந்த மூட்டையைப் பிரித்தான்.

மூட்டையில் ஏராளமான பனை சுவடிகள். ஒன்றும் எழுதப்படாமல் இருந்தன.

மேலே ஒரு சுவடியில் மட்டும் எழுதப்பட்டிருந்தது.

"சானேஷ்வரியின் தவப்புதல்வனே. உனது சாதுர்யமே நாளைய சாத்திரம். ராஜ்ய சாத்திரங்களை இந்தச் சுவடிகளில் வடிப்பாயாக. அத்திமலை அருளாளரின் இன்னருளால், நீ மாபெரும் மதியூகத்தைப் பெற்றிருக்கிறாய். உனது சிந்தையின் ஆற்றல் வரப்போகும் உலகை வழி நடத்திச் செல்லட்டும். தேவ உடும்பர அத்தி மரத்தில் நான் ஆவிர்பவித்து உலக மக்களுக்கு வளங்களை தருவது போல், நீயும் உனது ஆற்றலை இந்தச் சுவடிகளில் நிரப்பி, மக்களுக்கு பயன் அளிக்க வேண்டும். நீதியை மக்களுக்கு போதிக்கும் நீ சாணக்கியனாக வருங்காலத்தில் போற்றப்படுவாய். சானேஷ்வரி தாயின் தவப்புதல்வன் இயற்றிய இந்த நீதியை சாணக்கிய நீதி என்று வருங்காலம் போற்றட்டும். இன்றே பணியைத் துவங்கு. உன்னை வழி நடத்திச் செல்ல ஹஸ்திகிரியின் மீது நான் நின்று இருக்கிறேன்'' - என்றது அந்தச் சுவடி.

அதன் கீழ் ஒரு யானை, ஒரு மலை மற்றும் ஒரு அபய ஹஸ்தம் மூன்றும் வரையப்பட்டிருந்தன.

பரவசத்தில் ஆழ்ந்து போனான், கவுடில்யன். இவனை வாழ்த்த முதியவர் உருவில் அந்த அத்திமலைத்தேவனே வந்திருக்கும்போது, கேவலம் துர்தரா என்கிற ஜந்துவை ஜெயித்து விட்டதைப் பெரிய விஷயமாக நினைத்துக் கொண்டிருக்கிறானே, இவன்.

தனது தந்தை ஆராதித்த அத்திமலைத்தேவனை விழுந்து பணிந்துவிட்டு, தனக்குத் தெரிந்த ராஜிய சாத்திரங்களை வடிக்கத் துவங்கினான். இந்தப் பணியை முடித்து அதனை புஷ்பபுர அரண்மனையில் அரங்கேற்றும் போது, கவுடில்யன் என்கிற பெயர் சாணக்கியன் என்று மாறப் போகிறது. அவன் சாத்திரங்களை தொடர்ந்து எழுதட்டும். துர்தராவை சற்று கவனிப்போம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 27. காட்டாற்றில் குளித்த காரிகை

துர்தரா தனது அந்தப்புர நந்தவனத்தில் அமைக்கப்பட்டிருந்த தாமரை பொய்கையின் கரையில் அமர்ந்திருந்தாள், மிருணாளினி என்கிற பேசும்திறனற்ற ஒரு வயதான சேடிப்பெண், இவளுக்கு பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தாள். துர்தரா தனது தேவைகளை மிருணாளினியிடம் சைகையினில் தெரிவிக்க, அவள் சென்று மற்ற தாதிகளிடம் கூறுவாள். அவர்களும் துர்தராவுக்கு தேவையானவற்றை அவளிடம் கொடுத்து அனுப்பிவிடுவார்கள். பேச்சுத் துணைக்குக் கூட யாருமின்றி, அனேகமாக பித்து பிடித்த நிலைக்குத் தள்ளப்பட்டாள், துர்தரா. சந்திரகுப்தன் இவளைக் காண வருவதும் இல்லை. ஒருவிதத்தில் அதனை வரவேற்றாள், துர்தரா. ஆசைக்காதல் கணவன் வரவில்லையென்றால் ஒரு பெண்ணுக்கு இதயம் துன்பத்தில் துவளும். இவள் சந்திரனை காதலித்தாளா என்ன? தனது பழிவாங்கும் படலத்திற்கு அவன் மிகவும் தோதாக அமைந்தான். ஆனால் இவளது திட்டமே தோல்வி அடைந்து விட்ட பிறகு, அவன் வந்தால் என்ன, வராவிட்டால்தான் என்ன. அந்தக் காட்டுமிராண்டியின் முகத்தினை காணாமல் இருப்பதே நலம். மனத்தினுள் நினைத்த துர்தரா, நீரில் பிரதிபலித்த தனது உருவத்தை நோக்கினாள். கர்ப்பம் தரித்திருந்த அவளது வயிறு ஒரு பானையைப் போன்று குவிந்திருந்தது அவளது கண்களில் புலப்பட்டது.

கேவலம், அந்தக் காட்டுமிராண்டியின் குழந்தையை அல்லவா நாம் சுமந்து கொண்டிருக்கிறோம். அருவருப்புடன் தனது வயிற்றினைப் பார்த்தாள். தான் சுமக்கும் கர்ப்பத்தைச் சிதைத்து விட்டால், கவுடில்யனுக்கும், சந்திரகுப்தனுக்கும் பெரிய தோல்வி ஏற்படும் அல்லவா.? அன்றொரு நாள் கவுடில்யன் சந்திரகுப்தனுடன் உரையாடிக்கொண்டிருந்த போது அவர்களது உரையாடலை மறைந்திருந்து கேட்டிருந்தாள்.

“தெரிந்தோ தெரியாமலோ, துர்தராவிடம் கூடிவிட்டாய். உனது ஜாதகத்தின்படி உனக்கு ஒரு பிள்ளைதான் விதித்திருக்கிறது. உனக்கு வேறு வழி இல்லை. உனக்கு மகன் பிறக்கும் வரையாவது துர்தராவை பத்திரமாகப் பார்த்துகொள். மகன் பிறந்ததும், அவளை என்ன செய்வது என்று முடிவு கட்டலாம்!” கவுடில்யன் கூற, சந்திரகுப்தன் யோசனையுடன் தலையசைத்தான்.

https://telegram.me/aedahamlibrary

தனது வயிற்றில் இருக்கும் சிசு பிறக்கும்வரையில் நிச்சயம் கவுடில்யனும், சந்திரகுப்தனும் இவளுக்கு எவ்விதத் தீங்கையும் விளைவிக்க மாட்டார்கள். எனவே இவள் சிசுவை கர்ப்பத்தில் தாங்கும்வரை இவளது பாதுகாப்புக்குக் குறைவில்லை.

யோசித்தபடி துர்தரா அமர்ந்திருக்க, மிருணாளினி வந்தாள். அவள் ஏந்தியிருந்த தட்டில் முக்கனிகளும், பழச்சாறும் வைக்கப்பட்டிருந்தன. தட்டை அவள் முன்பாக வைத்துவிட்டு, மிருணாளினி அப்பால் சென்றாள். பழரசக் கோப்பையை கையில் எடுத்தவளின் கண்கள் வியப்பால் விரிந்தன.

நடுஜாமத்தில் விழித்திரு. உன்னுடன் உரையாட விரும்புகிறேன். - காட்டுமிராண்டி

வெள்ளித்தட்டில் எழுதப்பட்டிருந்த அந்த வாசகத்தைக் கண்டதும் திகைத்துப் போனாள். பணியாளன் மூலம் ஓலையினை அனுப்பாமல் எதற்காக தட்டினில் எழுதி அனுப்புகிறான் சந்திரகுப்தன்? ஒரு வேளை, ஓலை அனுப்பினால் ஒற்றர்கள் மூலம் சேதி கவுடில்யனை எட்டிவிடுமோ என்பதற்கு பயந்து, எச்சரிக்கையுடன் இப்படித் தகவல் அனுப்புகிறான். காட்டுமிராண்டி இவளிடம் என்ன பேச விரும்புகிறான். அவனுக்காக தான் காத்திருக்கக் கூடாது என்று மனம் நினைத்தாலும், சிறையில் வாடும் தனது பெற்றோரை விடுவிக்க வேண்டியாவது அவனை சகித்துக்கொண்டுதான் தீர வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டாள்.

நடு ஜாமம் ---

உறங்காமல் சந்திரகுப்தனுக்காக விழித்திருந்தாள், துர்தரா. நடுஜாமத்தில் அவள் தங்கியிருந்த அறையை நோக்கி கனத்த காலடிகள் ஒலிக்க, நீண்ட நாட்களுக்குப் பிறகு அவள் முன் ப்ரசன்னமானான், சந்திரகுப்தன்.

சற்று நேரம் அவளையே உறுத்துப்பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களில் கனிவு. மெதுவாக அவளை நோக்கி நடந்து வந்தவன், அவள் முன்பாக அமர்ந்தான். முகத்தில் வெறுப்பை தேக்கி வைத்து அவனை காயப்படுத்த நினைத்தாள் துர்தரா. ஆனால் அதற்குள் சந்திரன் அவளது தோளினை பற்றி அவளது தேகத்தை தனது மார்பினில் ஒடுக்கிக் கொண்டான்.

https://telegram.me/aedahamlibrary

"துர்தரா! உன்னை முதன்முதலாக சந்தித்தபோதே உன் மீது காதல் கொண்டு விட்டேன். ஆனால் நான் சூழ்நிலையின் கைதி. உன் மீது வெறுப்பைப் பொழிந்தால்தான் எனக்கு நன்மை கிடைக்கும் என்று அங்ஙனமே உன்னை வெளியில் வெறுத்து வந்தேன். வெளியே எவ்வளவு வெறுப்பினை உமிழ்ந்தேனோ, உள்ளே அதற்கு மேலாக உன்னைக் காதலித்து வந்தேன். இன்று மாலை அந்தப்புர நந்தவனத்தில் நீ தனியாக அமர்ந்திருந்தது, என்னை உலுக்கி விட்டது. துர்தரா! எனக்காக நீ ஏன் உன் குணத்தை மாற்றிக்கொள்ளக் கூடாது? நமக்கு மகன் பிறக்கப் போகிறான். அவன் யுவராஜாவாகத் திகழப் போகிறான். நீ அரசியாக என் பக்கத்தில் அமர்ந்து கொள். உனது பெற்றோரை நான் இறுதி வரை பத்திரமாகப் பார்த்துக்கொள்கிறேன். நாம் இருவரும் சந்தோஷமாக வாழ்வோம்.

"நான் உன்னிடம் எதிர்பார்ப்பது சற்று மென்மையை மட்டுமே. எனது ஆசானை சகிக்கக் கற்றுக்கொள். அவர் எனக்காகத்தான் பாடுபடுகிறார். உங்கள் இருவருக்கும் இடையே நான் சமரசத்தை உண்டுபண்ண நினைக்கிறேன். நம் மகனுக்காக இதைச் செய்... எனக்காக.! நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது துர்தரா. நான் காட்டுமிராண்டிதான். காட்டு மலையில் இருந்து உற்பத்தியாகும் காட்டாறுதான் உங்கள் நாட்டில் புனித நதியாக ஓடுகிறது. நான் காட்டில் குளித்த நீர்தான் உங்கள் நாட்டிற்கு வந்து நீ அதில் குளிக்கிறாய். என்னை அந்தக் காட்டாறாக நினைத்து என்னுள் நீந்து, துர்தரா. என்னை வெறுக்காதே!" - இனிமையான மொழியில் அவன் பேச, துர்தரா விக்கித்துப் போனாள். இதுவரை எந்த ஆடவனும் இவளிடம் இங்ஙனம் காதல் பிச்சை கேட்டதில்லை. அவனுக்கு என்ன பதில் கூறுவது என்று விழித்தவள், அவனது பிடியில் இருந்து திமிறிக்கொண்டு அவனது கண்களுள் பார்த்தாள்.

முதல் தடவையாக அவனது கம்பீரம் அவளுக்குப் புலப்பட்டது. இவன் மட்டும் அந்த பல்லாங்குழி பலகை வாயனின் அடிமையாக இல்லாமல் இருந்தால், இவள் அவனைக் கண்டதும் காதலித்து இருப்பாளோ என்னவோ. காட்டுமிராண்டியின் வலிமையை தாண்டி அவனது கண்களில் ஒரு குழைவு. தன்னைக் காதலிப்பதாகக் கூறுகிறானே. அந்தக் காதல்தான் கண்களில் குழைவாகக் காணப்படுகிறதா? அவனது அகன்ற மார்பு, மலைகளைப் போன்ற தோள்கள், புடைத்த புஜம், நரம்புகள் முறுக்கேறிய தேகம், கதாயுதம் போன்ற கால்கள், என்று வலிமையின் மொத்த உருவமாக நின்ற அவன் முன்பாக இவள் ஒரு சிறு

https://telegram.me/aedahamlibrary

முயலைப் போன்றுதான் உணர்ந்தாள். அவன் தன்னிடம் மனம் விட்டுப் பேசி, அவள் என்ன பதிலை தரப்போகிறாள் என்பதற்காக ஆவலுடன் காத்திருப்பதை உணர்ந்தாள். அவனைக் காயப்படுத்த என்ன மறுமொழி கூறுவது என்று யோசித்தவளுக்குள் ஒரு சின்ன சலனம்.

அவனைக் காயப்படுத்தி மேலும் அவனைப் புறம் தள்ளுவதைவிட, அவனுடன் நட்பைப் பாராட்டி காரியங்களை சாதித்துக் கொள்ளலாமே என்கிற எண்ணம் துளிர் விட்டது. நடந்தது நடந்துவிட்டது. இவளது கற்பினை அவனுக்கு பந்தி வைத்து பரிமாறிவிட்டாள். ரகசியமாக நடந்த திருமணத்தில் இவளது கழுத்தில் வலுக்கட்டாயமாக மங்கள சூத்திரத்தையும் அணிவித்து விட்டான். கணவன் என்கிற பதவியை அடைந்துவிட்டான். இவளோ இப்போதைக்கு எவ்வித ஆதரவுமின்றி, சாய்ந்து அழுவதற்கு தோள் கூட இன்றித் தவிக்கிறாள். இவளை எல்லா வகையிலும் வெற்றி கொண்டு விட்ட அவனிடம் சரணாகதி அடைந்து பெற்றோரை காப்பாற்றுவோம். அவர்களும் எத்தனை காலமாக சிறையினில் அடைந்து கிடப்பார்கள்.? பிபத்தனும் இறந்து விட்டான். இவன்தான் மன்னனாக ஆளட்டும். இவர்களுக்குப் பிறக்கும் மகன் அடுத்த மன்னனாகத் திகழட்டுமே. இவளுக்கு நஷ்டம் என்ன? ஆனால் என்ன இருந்தாலும், அந்த கவுடில்யனுக்கு மன்னிப்பு கிடையாது. முதலில் கணவனின் நன்மதிப்பைப் பெற்று அவனை நம் வசம் கொண்டு வந்து, பிறகு அவனைப் பழிதீர்ப்போம். மனதினுள் எண்ணிக் கொண்டிருந்தாள், துர்தரா. அதே சமயம், அவனிடம் சரணாகதி அடைந்து மன்னிப்புக் கோரவும் அவளது தன்மானம் இடம் தரவில்லை.

துர்தரா மன்னிப்புக் கேட்டு, கணவனிடம் மன்றாடினாள் என்பதைவிட, துர்தரா கண்ணீர் விட்டுக் கதறினாள் என்று நாளை அவையில் பேசிக்கொண்டால் பரவாயில்லை. இவள் அழுவதால் சந்திரகுப்தன் இன்னும் கனிந்து இவள் மன்னிப்புக் கோருவதாக நினைப்பான். அழுது புலம்பி தான் ஒரு பலவீனமான பெண் என்று காட்டிக் கொண்டு, சந்தர்ப்பம் வரும்போது தாக்குதலை நடத்த வேண்டும்! அவ்வளவுதான் ---

தன்னுள் புதைத்து வைத்திருந்த சோகத்தை, கண்ணீரை, ஏக்கத்தைக் கொட்டி, கதறித் தீர்க்கத் துவங்கினாள், துர்தரா. அணை ஒன்று உடைந்து அதில் இருந்து நீர் பேரலையாகப் பாய்வது போன்று அழுகையுடன் அவன் மீது சரிய, துடிதுடித்துப் போனான், சந்திரகுப்தன்.

"என் நாதனே.! இந்த அன்பை எல்லாம் எங்கே பதுக்கி வைத்திருந்தீர்கள்

https://telegram.me/aedahamlibrary

இவ்வளவு காலம்?" - காட்டுமிராண்டி என்று சொல்லாமல் நாதனே என்று அவள் விளிக்க, பரவசத்துடன் அவளை வாரி அணைத்தான்.

"மூன்று முறை உன் கூந்தலை பற்றி இழுத்துச் சென்றேனே. அப்போது உனக்கு வலித்ததா? நான் உன் கூந்தலை பற்றிய விதத்தைப் பார்த்தே, என்னுடைய அன்பை நீ புரிந்து கொள்ளவில்லையா?" - வாஞ்சையுடன் அவளை நோக்கிக் குனிந்தான், சந்திரகுப்தன்.

"வனவாசி என்று உங்களை எத்தனை முறை அழைத்திருப்பேன். எனது மனம் என்னும் பிருந்தாவனத்தில் வசிக்கும் கண்ணன் நீங்கள் என்று எனது குரல் உங்களுக்கு உணர்த்தவில்லையா?" - துர்தரா கேட்டாள்.

சந்திரகுப்தன் அயர்ந்து போய் நின்று விட்டான். துர்தராவா இவ்வளவு இனிமையாகப் பேசுவது? அவள் இவனுக்காக நடிக்கிறாளா, இல்லை அனைத்துமே உண்மையான வார்த்தைகளா? சந்தேகத்துடன் அவளைப் பார்க்க, அவள் அவனது பார்வையைப் புரிந்து கொண்டாள்.

"மவுரியரே! நீங்கள் மட்டும்தான் கண்டதும் காதல் கொண்டீரோ. உங்களைக் கண்ட மாத்திரத்தில் நானும் உங்களிடம் காதல் கொண்டுவிட்டேன். எனது காதலை வெளிப்படுத்தினால், நீங்கள் என்னை பலவீனம் பிடித்தவள் என்று நினைப்பீரோ என்று உங்கள் மீது வெறுப்பை உமிழ்ந்தேன். மேலும், எதிரியின் மகளை நீங்கள் காதலித்தால் உங்கள் ஆசானின் சாபம் உங்களை தாக்கக் கூடும் என்று எனது மனதை கல்லாக்கிக் கொண்டு உங்களை எதிர்த்தேன். எனது தமையனின் தலையைக் கொய்தவன், எனது பெற்றோரை சிறையில் தள்ளியவன் என்று இருக்க, உங்களை நான் காதலித்தால் எனக்கு அவப்பெயர் கிட்டும் என்று நான் எனது காதலை முழுவதுமாக வற்றச் செய்து தங்களுடன் மோதினேன். ஆனால் உண்மையில் நீங்கள் என்னை பலவந்தமாக திருமணம் செய்து என்னை அடைந்த போது மனதினுள் பரவசம் அடைந்தேன். ஊருக்கு நான் தங்களிடம் சிறைப்பட்ட கைதி. ஆனால் நான் காதலித்தவனே என்னை வசப்படுத்திக்கொண்டான் என்கிற மகிழ்ச்சி. என்னை சந்தேகப்படாதீர்கள். எனது வார்த்தைகள் அனைத்தும் நிஜம். இனி தங்கள் மனம் கோணாமல், உங்கள் உத்தரவுகளுக்கு அடிபணிந்து, மக்களுக்கு நல்ல அரசியாக, உங்கள் தாய்க்கு நல்ல மருமகளாக, தங்களுக்கு நல்ல மனைவியாக, தங்கள் மகனுக்கு நல்ல தாயாகத் திகழ்கிறேன். இது உறுதி." --- துர்தரா கூறினாள். மனதினுள் எனக்கு நல்ல சந்தர்ப்பம் அமையும்வரை தான் இந்த உறுதி என்று

https://telegram.me/aedahamlibrary

கூறிக்கொள்ள அவள் தவறவில்லை.

பரவசப்பட்டுப் போனான், சந்திரகுப்தன். இருப்பினும் எல்லா உறுதிமொழிகளையும் தந்தவள், தனது ஆசானைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே...! குழப்பத்துடன் அவளது கண்களை நோக்கினான்.

"மவுரியரே! இனி நான் தங்கள் அடிமை என்கிறபோது, தங்கள் குருநாதர் எனக்கும் குருநாதர் என்றாகி விடுகிறது அல்லவா. அவரை நிந்தித்ததற்கு நான் வருந்துகிறேன். தாங்கள் தான் உமது ஆசானிடம் சொல்லி என்னை அவர் மன்னிக்கும்படி செய்ய வேண்டும்…!" - துர்தரா கூறினாள்.

"வருந்தாதே, துர்தரா! இனி நாம் புதிய வாழ்க்கையைத் துவங்குவோம். ஆசானிடம் பேசி, உங்கள் இருவரிடையே இணக்கத்தை உண்டு பண்ணுவேன். நீ எனது இதயம். ஆசான் எனது சிந்தை. இதயத்திற்கும், சிந்தைக்கும் இணக்கம் உண்டாகிவிட்டால், செயல் தன்னால் சிறந்தோங்கும்!" --- சந்திரகுப்தன் பூரிப்புடன் சொன்னான்.

காட்டுமிராண்டியே.! ஒன்று நீ இதயத்துடன் மட்டும் வாழப் போகிறாய் அல்லது சிந்தையுடன் மட்டுமே திகழப் போகிறாய்.! --- மனதினுள் நினைத்தாள் துர்தரா.

“உங்கள் தாயை நான் உதைத்துத் தள்ளியதற்கு அன்றாடம் தண்டனை வாங்கிக் கொண்டிருக்கிறேன், தெரியுமா?" துர்தரா கூற, சந்திரகுப்தன் வியப்புடன் அவளை நோக்கினான்.

“உங்கள் சார்பாக உங்கள் மகன் அன்றாடம் என் வயிற்றில் உதைத்துக்கொண்டிருக்கிறான்!" துர்தரா கூற, சரியாக அவள் வயிற்றில் இருந்த சிசு அவள் வயிற்றை உதைக்க, ஆ என்று சற்றே வலியினை முகத்தில் துர்தரா காட்டியதும்தான் தாமதம்.

"என்னை மன்னித்துவிடு துர்தரா! உன்னிடம் மிகக் கடுமையாக நடந்துகொண்டு விட்டேன்!" கனிவுடன் அவளை எழுப்பியவன், மஞ்சத்தை நோக்கி அவளை அழைத்துக்கொண்டு நடந்தான்.

துர்தரா சிரித்தாள். “இந்த நேசம் நீடிக்குமா இல்லை ஆசானைக் கண்டதும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறி விடுமா?" - துர்தரா கேட்டாள்.

https://telegram.me/aedahamlibrary

"இந்த வேந்தன் இனி தன்னிச்சையாக ஆட்சி செய்வான்!" - சந்திரகுப்தன் கூறியதும்தான் தாமதம், துர்தரா பேரானந்தத்துடன் அவனது தோளினில் தலைவைத்தபடி நடந்தாள்.

"அடேய்... பல்லாங்குழி பலகை வாயனே.! உனது சீடன் கையினால்தான் உனக்கு மரணம்!" - தனக்குள் எக்காளமிட்டபடி நடந்தாள், துர்தரா.

***

சவுஜன்யன் குடிலின் அடுக்களையில் அமர்ந்து அகத்திக்கீரையினை ஆய்ந்து கொண்டிருந்தான். மரக்குடுவை ஒன்றில் ஆய்ந்த கீரைகளைப் போட்டு, நெல்லிக்கனி, உப்பு, மிளகு மற்றும் சீரகத்தை கீரையுடன் சேர்த்து மசித்து அந்தக் கலவையை அன்னத்தோடு சேர்த்து கவுடில்யனுக்கு பரிமாறி விட்டால் அன்றைய உணவு முடிந்தது. மாலையில் ஒரு குவளையில் எலுமிச்சை பானகமும், இரவு சூடான பாலும் மட்டுமே கவுடில்யன் அருந்துவது வழக்கம். கவுடில்யனுக்கு உணவு பரிமாறிவிட்டு, இவனும் உண்டு விட்டு, பிறகு ராஜதந்திரியின் வஸ்திரங்களை ஆற்றங்கரைக்குச் சென்று தோய்த்து உலர்த்தி, மடித்து எடுத்து வர வேண்டும்.

கவுடில்யன் அர்த்தசாத்திரத்தை வடிக்கத் தொடங்கிய பிறகு அரண்மனைக்குப் போவதை குறைத்துக்கொண்டு விட்டான். எப்போதாவது அவசரத் தேவையென்றால் மட்டுமே, சந்திரகுப்தன் அவனை அரண்மனைக்கு அழைப்பது வழக்கம். கவுடில்யன் அவ்வாறு தனது குடிலுக்குள் தன்னைப் புதைத்துக்கொண்டது, துர்தராவுக்கு வசதியாக இருந்தது. தனது பரம வைரியான பல்லாங்குழி பலகை வாயனின் முகத்தில் விழிக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்று மனதினுள் குதூகலித்தாள். மனதிற்குள் தனது வாழ்க்கையினை குலைத்த கவுடில்யனையும், தன்னை படுக்கையறை பாவையாக வைத்து, அவள் மூலமாக தனக்கு ஒரு வாரிசினை ஏற்படுத்திக்கொண்டுவிட்ட சந்திரகுப்தன் மீதும் அதிக வன்மம் கொண்டிருந்தாள். மனதினுள் வஞ்சமும், முகத்தில் மயக்கும் வசீகரத்தையும் கொண்டு சந்திரகுப்தனை வசப்படுத்திக் கொண்டிருந்தாள். துர்தரா இப்போதெல்லாம் சந்திரகுப்தன் பக்கலில் அரியணையில் அமர்ந்து கொண்டு அரசியல் விவகாரங்களைக் கவனிக்கிறாள். அவ்வப்போது வெற்றிடமாக இருக்கும் கவுடில்யனின் இருக்கையைக் காணும்போதெல்லாம் அவளது குருதி பொங்கும். அந்த

https://telegram.me/aedahamlibrary

கவுடில்யனை மவுரியத்திலிருந்து மட்டுமல்ல, இந்த உலகில் இருந்தே விரட்ட வேண்டும். அவன் ஒன்றும் பெரிய ராஜதந்திரி அல்ல. தேவ உடும்பர மூலிகையை கொண்டு மாய ஜாலங்களைப் புரிந்து சந்திரகுப்தனை தனது வசப்படுத்தி உள்ளான். தேவ உடும்பரம் இல்லையென்றால் அவன் ஒரு மனிதனே அல்ல. அவனது வசம் உள்ள தேவ உடும்பர மூலிகையைப் பறித்தாலே போதும், அவனை ஒழித்து விடலாம். மனதிற்குள் எண்ணியபடியே அவை நடவடிக்கைகளை கவனித்துக்கொண்டிருந்தாள்.

அப்போது தளபதி அபேயன் எழுந்து மன்னனை நோக்கினான்.

“அரசே! தக்ஷ சீலத்தில் இருந்து கவலையை உண்டாக்கும் தகவல்கள் வந்துள்ளன. புரட்சியாளர்கள், பொதுமக்களுக்கு உபத்திரவத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றனர். தங்களுக்கு உதவாத மக்களின் வீட்டை தீயிட்டுக் கொளுத்துகின்றனராம்!” அபேயன் இவ்வாறு கூறியதும், அரண்மனை விவகாரத் தலைவர் வியாமர் எழுந்து நின்றார்.

“உண்மைதான் அரசே! எனது தம்பி பிங்கள சோமன் தக்ஷ சீலத்தில்தான் வசிக்கிறான். புரட்சியாளர்கள் காட்டில் இருந்து வந்து, இளம் வாலிபர்களை வலுக்கட்டாயமாகக் கடத்திச்சென்று தங்களது கூட்டத்தில் சேர்க்கின்றனராம். பணிய மறுக்கும் வாலிபர்களை வெட்டி வீழ்த்துகின்றனராம்.”

சந்திரகுப்தன் அதிர்ந்தான். "கவலையை ஏற்படுத்தும் தகவல். உடனே அவர்களை அடக்க வேண்டும்!” என்றதும் அருகில் இருந்த துர்தரா அவனை அலட்சியமாகப் பார்த்தாள்.

"தக்ஷ சீல பிரச்சனை ஒன்றும் புதிது அல்லவே. எனது தந்தையாரின் காலத்தில் கூட புரட்சியாளர்கள் வன்முறையை கட்டவிழ்த்து விட்டனர். ஆனால் எனது தந்தைதானே அங்கு சென்று, அவர்களை அடக்கினார். நமது தேசத்தின் போதாத காலம். இப்போது உண்மையான் வீரம் சிறையில் முடங்கிக் கிடக்கிறது. மன்னரே! புரட்சியாளர்களை அடக்க வேண்டும் என்று இங்கே அமர்ந்து கூறுவதில் பயனில்லை. உடனே தக்ஷ சீலத்திற்கு படையை அனுப்புங்கள்!” - பேச்சில் அகம்பாவமும், அலட்சியமும் இழையோட, தனது மயக்கும் விழிகளை சந்திரகுப்தனின் பக்கமாகத் திருப்ப, அவன் தலை தன்னையும் அறியாமல் ஆடியது.

"ஆம்... துர்தரா. படைகளை அனுப்ப வேண்டியது தான்!" - சந்திரகுப்தன்

https://telegram.me/aedahamlibrary

கூறியதும், துணைத் தளபதி பலபீமா எழுந்தான்.

"அரசே! தக்ஷ சீலம் நம்மைச் சேர்ந்தது. தக்ஷ சீலத்தின் மீது நாமே போர் தொடுப்பது போன்ற எண்ணத்தை ஏற்படுத்தினால், பொதுமக்களுக்கு புரட்சியாளர்கள் பக்கம் அனுதாபம் பிறக்கும். அரசியார் கூறுவது போன்று, அவரது தந்தை இரும்புக்கரம் கொண்டு பிரச்னையை அணுகியதால்தான், இப்போது புரட்சியாளர்கள் அதிகரித்திருக்கின்றனர். இந்த விஷயத்தில் நிதானம் தேவை.!" - பலபீமா கூற, துர்தரா உதட்டைக் கடித்தபடி அவனை எரிச்சலுடன் நோக்கினாள்.

"சரி! இந்த விவகாரத்தில் என்ன செய்யலாம் என்று நீ நினைக்கிறாய், பலபீமா?" - சந்திரகுப்தன் கேட்டான்.

"அரசே! தக்ஷ சீலத்தை நம்மிடம் இருந்து பிரித்து தன்னாட்சி பெற புரட்சியாளர்கள் முயலுகின்றனர். பால்யத்தில், நாம் இருவரும் 'மன்னன் - கள்வன்' விளையாட்டினை விளையாடிக்கொண்டிருந்த போது நிகழ்ந்த சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். உணர்ச்சிவசப்பட்ட நீங்கள், கள்வனாக நடித்துக் கொண்டிருந்த எனது கையை வெட்டி விட, என் கை துண்டிக்கப்பட்டது. அப்போது நமது ராஜதந்திரி தேவ உடும்பர மூலிகையின் மூலம் துண்டிக்கப்பட்ட என் கையை மீண்டும் இணைத்தார் அல்லவா. ரத்தமும் சதையும் கொண்ட எனது கையை உடலுடன் ஒன்றாக அவரால் இணைக்கமுடியும் என்றால், பிரிந்து செல்ல நினைக்கும், தக்ஷ சீலத்தையும் அவரால் நம்முடன் இணைக்க முடியும். இந்த விவகாரத்தில் ராஜதந்திரி கூறுவதைக் கேட்போம்."

துர்தராவின் முகம் சிறுத்தது. எரிச்சலுடன் சந்திரகுப்தனை நோக்கினாள்.

சந்திரகுப்தன் யோசனையில் ஆழ்ந்தான். அவனது ஆசானுக்கும் அவனுக்கும் இடையே திரை ஒன்று இப்போது விழுந்து விட்டது. துர்தராவை மனைவியாக ஏற்று அவளை கொலு மண்டபம் வரை அழைத்து வரத் துவங்கி விட்டதை தனது ஆசான் விரும்பவில்லை என்பதைப் புரிந்துகொண்டான். ஏதோ நூலினை எழுதுகிறேன் பேர்வழி என்று கொலு மண்டபத்திற்கு வருவதை அவர் தவிர்த்து வந்தார்.

ஆசான் மீது அவன் கொண்டிருந்த பக்தி இம்மியளவும் குறையவில்லை. கடல் அலைகளில் பெரும் அலை, சிறு அலை என்று மாற்றி மாற்றி

https://telegram.me/aedahamlibrary

வருவது போன்று, அவன் மனதினில் குருபக்தியும், காதல் மயக்கமும் மாற்றி மாற்றி அலைமோதின. சில சமயங்களில் குரு பக்தி பெரிய அலையாகவும், சில சமயங்களில் துர்தரா மீது கொண்டிருந்த மையல் பெரிய அலையாகவும் மோதும். எப்போது எந்த அலை ஓங்குகிறதோ அதற்கு தக்கவாறு தனது மனநிலையை அவ்வப்போது மாற்றிக்கொண்டிருந்தான், சந்திரகுப்தன். விளைவு, அவனைப் புரிந்துகொள்ள இயலாமல், கவுடில்யனும், துர்தராவும் தவித்தனர்.

சந்திரன் என்ன கூறப் போகின்றான் என்பதை உன்னிப்பாகக் கவனித்தாள், துர்தரா.

சந்திரன் அவள் பக்கமாக சரிந்து அவளது செவிக்குள் கிசுகிசுத்தான்.

"துர்தரா! அன்றொருநாள் எனக்கு வாக்கு தந்தாயே. எனது ஆசானுடன் சமரசம் செய்து கொள்கிறேன் என்று. அதற்கான சூழ்நிலை இப்போது உருவாகிவிட்டது. நீ ஆசானுடன் சமரசம் செய்துகொண்டால் அவர் கட்டாயம் தொடர்ந்து அரசவைக்கு வருவார். அவரது ஆலோசனைகள் எனக்கு அன்றாடம் கிடைக்கும்.!” - சந்திரன் கூறியதும், போலியாக புன்னகைத்தாள், துர்தரா.

"அடியாள் காத்திருக்கிறேன், அரசே!” - என்று மனதெல்லாம் கசப்புத்தன்மை பரவ, எச்சரிக்கையுடன் முகத்தில் அதனை பிரதிபலிக்காத வண்ணம் சந்திரனை நோக்கினாள்.

“அபேயா! ராஜதந்திரிக்கு ஒரு ஓலையைத் தருகிறேன். அதனை இப்போதே சென்று சேர்த்துவிடு. நாளை பவுர்ணமி. நானும் அரசியாரும், அந்தப்புர உப்பரிகை மல்லிகை பந்தல் மண்டபத்தில் ஆசானுக்கு விருந்தளிக்கிறோம். அதன் பின், நமது ஆசான், அரசவை ஆலோசனைகளில் கலந்து கொள்வார்.!” மன்னனின் குரல் உற்சாகத்துடன் ஒலித்தது.

மன்னன் தனது காதல் கிளிக்கும், சாதுர்ய கருடனுக்கும் இடையே தன்னை சமாதானப் புறாவாக அனுப்புகிறான் போலும். இந்த சமரச முயற்சி பலனளிக்குமா என்கிற சந்தேகத்துடன் மன்னனையே நோக்கியபடி நின்றான், அபேயன்.

நடுநிசியில் ஒரு முறை கண்விழித்த சவுஜன்யன் பின்புறம் சென்று கவுடில்யனின் குடிலினை நோக்கினான். விளக்கில் எண்ணெய் தீர்ந்து

https://telegram.me/aedahamlibrary

அதன் சுடர் படபடத்துக்கொண்டிருக்க, அதை கவனியாது தனது அர்த்தசாத்திரத்தை புனைந்து கொண்டிருந்தான், கவுடில்யன். சவுஜன்யன் அடுக்களைக்குச் சென்று சிறிது பாலை காய்ச்சி, அதில் ஏலம், கற்கண்டு துகள், பச்சை கற்பூரம் மற்றும் குங்குமப்பூவை சேர்த்து ஒரு குவளையில் எடுத்துக்கொண்டு, மற்றொரு கையில் எண்ணெய்க் கலயத்தை எடுத்துக்கொண்டு குடிலினை நோக்கி நடந்தான். அவன் வருகையைக் கூட உணராமல், கவுடில்யன் ஓலைகளில் எழுத்தாணியைப் பதித்துக் கொண்டு இருக்க, தகளியில் எண்ணெயை வார்த்து விட்டு, பால் குவளையை கவுடில்யனின் முன்பாக வைத்தான்.

என்ன ஏது என்று கேளாமல், அவன் தந்த பாலை இரண்டே விழுங்கில் தீர்த்துவிட்டு தனது பணியை தொடர்ந்தான் கவுடில்யன். அதன் பிறகு சவுஜன்யன் உறங்கிப் போனான்.

காலை அவன் கண்விழித்தபோது குளித்து முடித்து தனது வைதீகக் கடமைகளை முடித்துக்கொண்டு தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்தான், கவுடில்யன்.

சவுஜன்யன் அவசரமாக தனது காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அன்றைய உணவை தயாரிப்பதற்காக அடுப்பினை மூட்டிய நேரம். ---

ஒரு மன்னன் என்பவன் ஒரு காரியத்தை சாதிக்கும் பொருட்டு சாம, தான பேத, தண்டத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று ஓலையில் தனது எழுத்தாணியால் கவுடில்யன் கீறிய அதே சமயம் ---

அபேயன் சந்திரகுப்தனின் ஓலையைச் சுமந்தபடி கவுடில்யனின் மாளிகையினுள் நுழைந்தான். புரவியின் காலடி ஓசை கேட்டு வெளியே வந்த சவுஜன்யன், அபேயனைப் பார்த்ததும் பணிந்தான்...

“மன்னரிடம் இருந்து ராஜதந்திரிக்கு ஓலை சுமந்து வந்திருக்கிறேன்!” --- அபேயன் கூறியதும் அவனைப் பின்புறம் இருந்த குடிலுக்கு அழைத்துச் சென்றான், சவுஜன்யன்.

“சுவாமி! தளபதி வந்திருக்கிறார்!” --- சவுஜன்யன் குரல் கொடுக்க, தூணைப் பிளந்து கொண்டு வரும் சிம்மத்தைப் போன்று, தனது கற்பனை உலகைக் கிழித்துக்கொண்டு நிகழ்காலத்திற்கு வந்தான், கவுடில்யன்.

https://telegram.me/aedahamlibrary

அவனது பார்வை தன் மீது பதிந்திருந்தாலும், அவனது கருத்து எங்கோ சஞ்சாரம் செய்துகொண்டிருப்பதை உணர்ந்த அபேயன், கவுடில்யனை வணங்கினான்.

"மன்னரிடம் இருந்து ஓலை!" --- பணிவுடன் அவனிடம் பட்டோலையை தந்தான்.

“ஓலையா? என்ன விஷயம்?” - இயந்திரகதியில் தனது பார்வையை பட்டோலையில் மேய விட்டான், கவுடில்யன்.

எனதுயிர் ஆசானே! தங்களது மௌனம் கலையட்டும். ஆணவமும், அகந்தையும் நீங்கி, எனது மனையாள் துர்தரா இப்போது மவுரிய குல ரத்தினமாக ஜொலிக்கத் துவங்கி விட்டாள். தங்களை நிந்தித்த துர்தரா மாண்டு விட்டாள் என்பதை தங்களிடம் தெரிவிக்கச் சொல்கிறாள். எனது ஆசானுக்கு தனது வந்தனங்களையும் தெரிவிக்கிறாள். தனது கடந்த கால நடவடிக்கைகளுக்கு வருத்தம் தெரிவிக்கிறாள். தனது கையால் உங்களுக்கு விருந்தளிக்க விரும்புகிறாள். நாளை பௌர்ணமி இரவு, உப்பரிகை மல்லிகை மண்டபத்தில், நிலவொளியில் தங்களுக்கு உணவளிக்க விரும்புகிறாள். கர்ப்பிணியான அவளது ஆசையை பூர்த்தி செய்யும் விதத்தில் தாங்கள் நிச்சயம் இந்த அழைப்பை ஏற்று என்னை கவுரவப்படுத்துவீர் என நம்புகிறேன்.

தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

சந்திரகுப்த மவுரியன்

துர்தரா தேவி மவுரியன்.

ஓலையினைப் படித்த கவுடில்யனின் விழிகள் நிலைகுத்தி நின்றன. தான் வடித்துக்கொண்டிருந்த சுவடிகளின் மீது படர்ந்தன.

ஒரு மன்னன் ஒரு காரியத்தை சாதிக்க, சாம, தான, பேத, தண்டத்தை பிரயோகிக்க வேண்டும். ----

சரியான சந்தர்ப்பத்தில்தான் ஓலை வந்திருக்கிறது. இவனுக்கும் சந்திரகுப்தனுக்கும் இடையே மித்திர பேதத்தை உண்டாக்க நினைத்த துர்தரா தோல்வி அடைந்தாள். பிறகு சந்திரனை மயக்கி, உத்தாலன் கொலை வழக்கில் இவனை தண்டிக்க முயன்றாள். அந்த முயற்சியும்

https://telegram.me/aedahamlibrary

தோல்வியுற்றது. இப்போது சமாதானத்தை விரும்புகிறாள். தானமாக நட்பைத் தருகிறாள். இவன் என்ன செய்யப் போகிறான்?

அவனது பார்வை தனது தந்தை ஆராதித்த அத்திமலைத்தேவன் விக்கிரகத்தை ஒருமுறை கண்டது. பிறகு சுழன்று தான் ரகசியமாக பதுக்கியிருந்த அத்திமர மூலிகை துண்டங்களின் மீது பதிந்தது. தேவ உடும்பர அத்தி மூலிகைகள் அவனுக்கு நடக்கப்போவதை உணர்த்தும். அதைக்கொண்டு அவன் இந்த அழைப்பினை ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்று தீர்மானம் செய்யலாம்.

அவன் தனது ரகசியத்தை வெறித்து நோக்க, அவன் யோசித்துக் கொண்டிருப்பதாக நினைத்தான், அபேயன்.

"இராஜதந்திரியே! மன்னர் தங்கள் பதிலை பெற்று வரச் சொன்னார்!" - தான் அவனது பதிலுக்காகக் காத்திருப்பதை உணர்த்தினான், அபேயன்.

சற்று நேரம் யோசித்தான் கவுடில்யன். சந்திரகுப்தன் துர்தரா மீது பித்து பிடித்து இருந்தாலும், இதுவரை இவனுக்கு உரிய மரியாதைகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறான். என்னதான் இவன் அவனை மன்னனாக அமர்த்தியிருந்தாலும், மகுடம் அணிந்த சிரசுக்கு மரியாதை செலுத்த வேண்டிய கடமை இவனுக்கு உண்டு அல்லவா. ஒரு சிற்பத்தை வடித்த சிற்பி, அந்த சிற்பத்தை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்த பிறகு, நான் உருவாக்கிய சிற்பம்தானே என்று அலட்சியப்படுத்த முடியுமா என்ன. தெய்வ சிலைக்கு உரிய பூசனைகளைச் செய்துதானே ஆக வேண்டும்.

"வருகிறேன் என்று சொல்!" - மூன்று வார்த்தைகளை மட்டும் உதிர்த்துவிட்டு, சந்திரகுப்தனின் ஓலையைச் சுருட்டி வைத்துவிட்டு, தனது எழுத்துப்பணியைத் தொடங்கினான், கவுடில்யன்.

நிம்மதி மூச்சு ஒன்றை சிந்தியபடி அபேயன் தனது புரவியை நோக்கி நடக்க, தனது சமையல் பணியைத் துவங்குவதற்குச் சென்றான், சவுஜன்யன்.

***

நிருருதனின் மற்போர் களரி. தனது நண்பன் உத்தாலனின் மகன் சுபந்துவிற்கு மற்போர் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தான். சுபந்துவின்

https://telegram.me/aedahamlibrary

கண்களில் ஒருவித விரக்தியும், உக்கிரமும் ஒருங்கே பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

"ஆசானே! நீங்கள் என் தந்தையின் தோழர். அவரை அநியாயமாகக் கொன்ற அந்த கவுடில்யனை நான் பழி வாங்க வேண்டும். எனவே, நீங்கள் எனக்கு ஒரு வித்தை பாக்கியில்லாமல், மற்போரின் எல்லா நியதிகளையும் கற்றுத் தர வேண்டும்!" -- சுபந்து கூறினான்.

“சுபந்து! உன்னை என் மகனாகக் கருதுகிறேன். இளவரசர் பிபத்ததேவரின் கொலை, உன் தந்தையின் கொலை எல்லாவற்றிற்கும் அவன் பதில் கூறியே ஆக வேண்டும். அவனைக் கொல்ல இந்த மற்போர் பயன் தராது. சூழ்ச்சிக்கார நரி அவன். அவனை தந்திரமாகத் தான் கொல்ல முடியும்!" - நிருருதன் கூறிக்கொண்டு இருக்கும் போதே, அவன் மனைவி மங்கலி அரண்மனைப் பணியை முடித்துக்கொண்டு வந்தாள்.

முகத்தில் களைப்பும், குழப்பமும் மிகுந்திருக்க மங்கலி, இவர்களை நோக்கி வந்தாள்.

"மங்கலி! அதற்குள் வந்துவிட்டாயே. அரண்மனைப் பணி முடிந்து விட்டதா?" - வியப்படைந்தான் நிருருதன்.

“இல்லை. இன்று இரவு அரசரும், அரசியும், ராஜதந்திரிக்கு அந்தப்புர உப்பரிகையில் விருந்து அளிக்கிறார்கள். அரசியார் துர்தராதேவியே ராஜதந்திரிக்கு உணவைப் பரிமாற இருக்கிறார்கள்.!" -- மங்கலி கூறினாள்.

"ஓஹோ... மன்னர் தனது மனைவிக்கும், ஆசானுக்கும் இடையே சமரசத்தை உண்டு பண்ணுகிறார் போலும்!" - நிருருதனின் குரல் கசப்புடன் ஒலித்தது.

"அரசியார் எப்படி இதற்கு ஒப்புக்கொண்டார்? அவரது பிரிய அண்ணனைக் கொன்றவனை திருமணம் செய்து கொண்டார். தனது பெற்றோரை சிறையில் அடைத்த அந்த கவுடில்யனுடன் சமரசம் செய்து கொள்ளப் போகிறாரா? அவர் மனம் எப்படி இதற்கு உடன்பட்டது? துர்தராதேவியும் பதவி மோகத்தில் விழுந்து விட்டாரா?" - சுபந்து வெகுண்டான்.

https://telegram.me/aedahamlibrary

"அப்படியில்லை என்று தோன்றுகிறது. நமது அரசியார் எந்தக் காலத்தில் சமரசங்களுக்கு உடன்பட்டிருக்கிறார்? சமரசம் என்கிற திரைக்குப் பின்பாக ஏதோ ஒரு நாடகம் நடக்கிறது." - மங்கலி கூறினாள்.

"என்ன நாடகம்?" - சுபந்து கேட்டான்.

மங்கலி சுற்றுமுற்றும் நோக்கினாள். "சற்று குடிலினுள் வாருங்கள்!" என்றபடி எழுந்து நடந்தாள். மற்ற இருவரும் அவளை வியப்புடன் தொடர்ந்தனர்.

நிருருதனும், சுபந்துவும் குடிலினுள் நுழைந்த உடனே, குடிலின் கதவை மூடிய மங்கலி தனது இடையினில் இருந்து ஒரு சுருக்கு பையை எடுத்து அந்தரத்தில் ஊசலாட்டினாள்.

"அரசியார் அளிக்கும் விருந்தில் ராஜதந்திரி குடிக்கும் பானத்தில் இதனைக் கலந்து விடும்படி எனக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது. விஷயத்தை வெளியே யாரிடமும் கூறாதீர்கள்.!" - மங்கலி கூற, மற்ற இருவரின் கண்களும் விரிந்தன.

"சமரச விருந்தே இதற்குத்தான். சமரசம் பேசி, பழரசம் வழங்கி, உயிர் ரசத்தை அருந்த நினைக்கின்றாரா துர்தரா தேவி. சபாஷ்! அப்படியே அந்தக் காட்டு மிராண்டியையும் ஒழித்து விட்டால், மீண்டும் மன்னர் தானநந்தா அரியணையில் அமர்வார்.!" --- புளகாங்கிதத்துடன் கூறினான், சுபந்து.

"என் மனைவியை என்ன நினைத்தாய், சுபந்து. தனது மலர்க்கரங்களால், ஒரு பெரிய காரியத்தை செய்து மாபெரும் சாம்ராஜ்யத்தையே ஒழிக்கப் போகிறாள்.!" - நிருருதன் கூறினான்.

"நீங்கள்தான் எனக்கு முன்னோடி. உங்கள் ஆசான் சிகாமணியை தீர்த்துக்கட்டிய கதையை அரசியாரிடம் கூறினேன். அதன் பாணியிலேயே, மன்னரின் ஆசானை தீர்த்துக்கட்ட சமரசத்திற்கு சம்மதித்திருக்க வேண்டும். ஆனால் வியப்பு என்னவென்றால், அரசியார், இந்தப் பொடியை நேராக என்னிடம் தராமல், அவரது அந்தரங்கத் தோழி ஊமைச்சி மிருணாளினி மூலமாகப் பொடியைக் கொடுத்தார்!" --- மங்கலி கூறினாள்.

https://telegram.me/aedahamlibrary

"யார் கொடுத்தால் என்ன? அரசியாரின் திட்டம் கைகூட வேண்டும்!" --- நிருருதன் கூறினான்.

“இன்றுதான் எனது மனம் குளிர்ந்தது. சதிகாரர்களில் பிரதானமானவன் தீர்த்துக்கட்டப்படுவான். எனது தந்தையைக் கொன்றவனை என் கையால் கொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால், அதற்கு இன்னும் காலம் பிடிக்கும். அதற்குள் அரசியாரே அவனை ஒழித்துக்கட்ட திட்டம் தீட்டி விட்டார். அதுவே போதும் எனக்கு!” - சுபந்து கூறினான்.

"உங்கள் மனம் குளிர்ந்தால் போதாது. உங்கள் நாக்கு பனிக்கட்டியாக உறைய வேண்டும். இந்தத் திட்டத்தை எங்கேயாவது கூறிவிடாதீர்கள். பிறகு பல்லாங்குழி பலகை வாயன் நம்மை சோழிகளாக உருட்டி விடுவான்!”- மங்கலி எச்சரிக்கை செய்ய, தலையசைத்து விட்டுக் கிளம்பினான், சுபந்து.

போகும் வழியில் எண்ணெய் வியாபாரி, அவிவேகனின் விற்பனைக் கூடத்தைக் கடக்க வேண்டியிருந்தது, சுபந்துவுக்கு. அவனது தாய் வனஜை ஒரு கலயத்தில் எண்ணெயை வாங்கிக்கொண்டிருந்தாள். அவள் முகத்தினில் இழையோடிய சோகம், நாள்பட அதிகரித்துக்கொண்டுதான் இருந்தது. கணவன் உத்தாலன் கொலை செய்யப்பட்ட பிறகுதான், முன்பு உற்சாகமாக வளைய வந்துகொண்டிருந்த வனஜையிடம் இந்த மாற்றம்.

தாயைக் கண்டதும் சுபந்துவின் இதயத்தில் வாஞ்சை பொங்கியது. தன்னையும் அறியாமல் அவளை நோக்கி நடந்தான். தொடர்ந்து மற்போர்புரிந்து வலிமையாக கனத்த தனது வலக்கரத்தினை வனஜையின் தோளினில் மாலையாகப் படர வைக்க, தன்னை யாரோ தீண்டுவதை உணர்ந்து தீயை மிதித்தவள் போல் அவள் திரும்பிப் பார்க்க, தனது மகன், புன்முறுவலுடன் நிற்பதைக் கண்டதும், அவளது முகம் மலர்ந்தது.

“பயிற்சி முடிந்ததா மகனே?” - பரிவுடன் வனஜை கேட்டாள்.

“தாயே! உனது நாதனைக் கொன்றவனை அழிக்க வேண்டும் என்பதற்காகத்தானே என்னை மற்போர் களரிக்கு அனுப்பி வருகிறாய்?” --- சுபந்து கேட்டான்.

https://telegram.me/aedahamlibrary

வனஜை அவனுக்கு பதில் கூறாமல், இறந்துபோன தனது கணவனைப் பற்றிய நினைவுகளில் மூழ்கி, மௌனமாக நிற்க, எண்ணெய் விற்பனையாளர், அவிவேகன் உடனே பதில் தந்தான். உத்தாலனின் ஆதரவாளன் அவன். திரண்ட செல்வத்தைக் கொண்டிருந்த உத்தாலனின் தந்தைதான் அந்த எண்ணெய் வியாபாரிக்குச் செக்கு அமைத்துக் கொடுத்திருந்தார். வியாபாரம் வளமாகப் பெருகி வர, அவிவேகனுக்கு உத்தாலனின் குடும்பத்தின் மீதும் பாசம் பெருகிக்கொண்டிருந்தது. ஒரு நாடோடியும், ஒரு வனவாசியும் சேர்ந்து கூட்டாக சதி செய்து மன்னரை சிறையில் தள்ளி, இளவரசனைக் கொன்று, இளவரசியையும் பலவந்தமாக அடிமைப்படுத்தி, பிறகு தனக்கு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த உத்தாலனையும் கொன்று விட்டார்கள், என்பதை அவிவேகனால் ஜீரணிக்கவே முடியவில்லை. அவனது எண்ணெய் விற்பனைக் கூடத்தில், காலையில் விளக்குகளில் வார்ப்பதற்கு எண்ணெய் விற்கப்படும். இரவில், மன்னனுக்கும், ராஜதந்திரிக்கும் எதிராக நடைபெறும் சதியாலோசனைகள் சுடர் விட்டு எரிவதற்கு, எண்ணெய் வார்க்கப்படும்.

அந்த வேகத்தில்தான் அவிவேகன் வனஜையை முந்திக்கொண்டு சுபந்துவின் கேள்விக்கு பதில் கூறினான்.

“இது என்ன கேள்வி சுபந்து! உனது தந்தை பிபத்த நந்தனின் உயிர்த்தோழன். சதியாளர்கள் அந்த உயிர்த்தோழர்களின் உயிரை வாங்கி விட்டனர். உனது தந்தையின் மரணத்திற்கு தக்க தண்டனையை நீதான் தரப்போகிறாய். அதற்காகத்தான் உனக்கு இந்த மற்போர், வாட்போர் பயிற்சிகள் எல்லாம்.!”

"உஷ்... அவிவேகரே! பொது இடத்தில் உணர்ச்சிவசப்பட்டு பேச வேண்டாம். மனிதர்கள் சஞ்சரிக்கும் காலை வேளை. இராஜதந்திரியே மாறுவேடத்தில் குள்ள நரியாக உலாவிக் கொண்டிருக்கலாம்!" - தொலைவில் பழக் கூடையால் முகத்தை மறைத்தபடி ஒரு வியாபாரி வருவதைக் கண்ணுற்று அவனை எச்சரித்தாள், வனஜை.

அவிவேகன் கடகடவென்று சிரித்தான். "அம்மா! உங்கள் மாமனாரின் தயவால் எனது எண்ணெய் விற்பனைக் கூடத்தில்தான் அரண்மனையே எண்ணெய் வாங்குகிறது. இரவில் எனது எண்ணெய் தான் மன்னருக்கும், ராஜதந்திரிக்கும் வெளிச்சத்தைத் தருகிறது. நாம் என்ன சதியா செய்கிறோம்? எண்ணெய் வியாபாரியான நான் நாட்டில் வெளிச்சத்தை உண்டு பண்ண நினைப்பது இயற்கைதானே. கவலை

https://telegram.me/aedahamlibrary

கொள்ளத் தேவையில்லை.?" என்றான் அவிவேகன்.

வனஜை மகன் சுபந்துவின் முகத்தில் ஒருவித வாட்டம் தென்படுவதைக் கண்டு திகைத்தாள். "சுபந்து! ஏதாவது பிரச்னையா? அல்லது பசியால் உனது முகம் வாடியுள்ளதா?" ---

சுபந்து வாட்டத்துடன் அவளை இன்னும் இறுக அணைத்தான். "ஆம்... தாயே. எனக்குப் பசியை உண்டு பண்ணியதே நீங்கள் தான். எனது உணவைக் கூட தயார் செய்து எனக்கு அடையாளம் காட்டினீர்கள். ஆனால் எனக்காக வைக்கப்பட்டிருந்த உணவை அரசியார் துர்தரா தேவி ரசித்து உண்பதற்கு தயாராகிவிட்டார். எனவே எனக்காக வைக்கப்பட்டிருந்த உணவை நான் உண்ண முடியாது!" --- சங்கேதமாக சுபந்து கூற, வனஜை, அவிவேகன் இருவருமே புரியாமல் அவனைக் கேள்வியுடன் நோக்கினர்.

"என்ன ஆயிற்று, மகனே!" - வனஜை கேட்டாள்.

"அந்த ராஜதந்திரியைக் கொல்வதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை. அரசியாரே, நாளைய சமரச விருந்தில் அவன் அருந்த இருக்கும் பழரசத்தில் நஞ்சினைக் கலந்து அவனை பரலோகம் அனுப்புவதற்கு திட்டம் தீட்டி விட்டார். இது ரகசியமாக இருக்கட்டும்.!" --- சுபந்து கூறியதும், வனஜை மற்றும் அவிவேகன் இருவரின் முகங்களும் மலர்ந்தன.

"எல்லாம் நன்மைக்கே, சுபந்து! உன்னை விட அரசியாருக்குத்தான் முன்னுரிமை அதிகம். நீ தந்தையை மட்டும் தான் இழந்தாய். அரசி துர்தராதேவி, பெற்றோரை, தமையனை, எல்லாவற்றிற்கும் மேலாக தனது கற்பினை அந்தக் காட்டுமிராண்டியிடம் இழந்தார் அல்லவா. அவர் ராஜதந்திரியைக் கொல்வதுதான் சாலப் பொருத்தமாக இருக்கும். அதனால் நீ கலக்கத்தை விட்டொழி.!" - அவிவேகன் கூறினான்.

"தனது ஆசானைக் கொன்றால், காட்டுமிராண்டி பொறுப்பானா? அரசிக்கு அவன் எதாவது தீங்கிழைத்து விட்டால்?" - வனஜை கவலைப்பட்டாள்.

"அம்மா! ஆற்று முதலை வாயினில் சிக்கிய புள்ளிமானும், மஞ்சத்து மாதரசியிடம் சிக்கிய மன்னனும் மீள்வது எங்ஙனம்? மன்னனின் கோபதாபங்களை அடக்கி அவனை கட்டுக்கோப்புடன்

https://telegram.me/aedahamlibrary

வைத்திருப்பதற்குத் தானே அரசி பதவி. இந்தத் திட்டம் உனக்கு எப்படித் தெரியவந்தது, சுபந்து? இது உண்மையான சேதியா, இல்லை இராஜதந்திரியே, இம்மாதிரி செய்திகளைப் பரப்புகின்றானா? - சந்தேகத்துடன் கேட்டான், அவிவேகன்.

"முற்றிலும் உண்மை. அரசியின் சேடி ஊமைச்சி மிருணாளினி எனது ஆசானின் மனைவி மங்கலியிடம் பழரச பானத்தில் கலப்பதற்கு வேண்டிய நஞ்சை தந்திருக்கிறாள். நமது ராஜதந்திரிதான் இரவில் கனிகளையும், பழரசத்தையும் மட்டும்தானே ஏற்றுக் கொள்வார். எல்லா ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன." - சுபந்து கூறினான்.

அந்த எண்ணெய விற்பனைக் கூடத்திற்கு இரண்டு வாயில்கள் உண்டு. அரண்மனையைச் சேர்ந்தவர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆகியோருக்கு எண்ணெய் வியாபாரம் செய்வதற்கு ஒரு வாயில். சாதாரண மக்கள் எண்ணெய் வாங்குவதற்கு ஒரு வாயில். முன்னர் கூறிய வாயிலில்தான், வனஜையும், சுபந்துவும் நின்றிருந்தனர். பொதுமக்கள் எண்ணெய் வாங்குவதற்கு என்று அமைக்கப்பட்டிருந்த வாயிலில், எண்ணெய்க் கலயத்துடன் ஒரு உருவம் வந்து நின்றதை மற்ற மூவரும் கவனிக்கவில்லை. அவர்களது பேச்சு செவிகளில் விழ, திடுக்கிட்டுப் போன அந்த உருவம், அப்படியே அந்த விற்பனைக்கூடத்தின் வாயிலில் அடுக்கப்பட்டிருந்த மாட்டுத் தீவனம் நிறைந்த சாக்கு மூட்டைகளின் பின்பாக ஒடுங்கியது.

தண்ணீரை வார்க்கும் போது, அது ஒரே சீராக விழாது. ஆனால் எண்ணெய்யை வார்க்கும் போது, அது ஒரே சீராக மெல்லிய கோடாகத்தான் பெருகும். இதனை தைல தாரை என்று கூறுவார்கள். அந்த எண்ணெய் விற்பனைக்கூடத்தில் சுபந்து விவரித்துக்கொண்டிருந்த சதித்திட்டம், தைல தாரையாக, ஒரே சீராக அந்த உருவத்தின் செவிகளுள் பாய்ந்து கொண்டிருந்தது.

அந்தச் செவிகளுக்குரியவன், கவுடில்யனின் பணியாளன், சவுஜன்யன். எண்ணெய் வாங்குவதற்காக அவிவேகனின் விற்பனைக் கூடத்திற்கு வந்தவன், எண்ணெயை மறந்தான். தன்னையும் மறந்தான். சமரச விருந்தில் அரங்கேற இருந்த சதித்திட்டத்தின் அனைத்து விவரங்களையும் தன்னுள் பதிவு செய்து கொண்டிருந்தான், சவுஜன்யன். என்ன இருந்தாலும் ராஜதந்திரியின் பணியாளன் அல்லவா? அவன் விடும் சுவாசக்காற்றின் ஒலி கூட அந்த விற்பனைக் கூடத்தின் பிரதான

https://telegram.me/aedahamlibrary

வாயிலில் கேட்கவில்லை.

*****

https://telegram.me/aedahamlibrary

# 28. கனிரசம்... சமரசம்

கவுடில்யன் அரண்மனை அந்தப்புரத்தில் நிகழ இருந்த சமரச விருந்துக்குப் புறப்படத் தயாராகிக்கொண்டு இருந்தான். அவனது சீராக மடித்த வேட்டியையும், அங்கவஸ்திரத்தையும், மாளிகை வஸ்திரக் கொட்டடியில் இருந்து எடுத்துக்கொண்டு கொல்லைப்புறக் குடிலுக்கு வந்த சவுஜன்யன் தற்செயலாக நிலவினை நோக்கினான். என்ன காரணத்தினாலோ, அன்றைய நிலவு யாருடைய குருதியிலோ முக்கி எடுத்தது போன்று செம்மையாகக் காட்சி தந்தது. உள்ளத்தில் கவலை பரவ, வேட்டியுடன் குடிலினில் நுழைந்தான்.

கவுடில்யன் தீவிர யோசனையில் காணப்பட்டான். தனது உயிருக்கு ஆபத்து என்கிற யோசனையினால் அல்ல, தான் இயற்றிக்கொண்டிருக்கும் ராஜநீதியை தொடர்ந்து எப்படி எடுத்துச்செல்வது என்று யோசிக்கின்றானோ என்னவோ.

தனது பழைய வேட்டியைக் களைந்து, கௌபீனத்துடன் நின்ற கவுடில்யனிடம், புதிய வேட்டியை நீட்ட, அவன் அதை பஞ்சகச்சமாகத் தரித்தான். சவுஜன்யன் நீட்டிய அங்கவஸ்திரத்தை மௌனமாக வாங்கி தனது மேனியை மறைத்தான். அதன்பின் அவன் தந்த செம்மை வண்ண சால்வையினை போர்த்திக்கொண்டான். அவனது மௌனம் தொடர்ந்தது.

ஆடை உடுத்தியதும் ஆபரணங்களின் அணிவகுப்பு தொடர்ந்தது. நவரத்தின மாலை, தாமரை மணி மாலை, துளசி மணி மாலை, ஸ்வர்ண சங்கிலி, சால்வை நழுவாமல் இருக்க ஸ்வர்ண வங்கி என்று சவுஜன்யனே கவுடில்யனை அலங்கரித்தான். விரிந்திருந்த தனது கூந்தல் கற்றையை முடியிட்டு தனது சிரசின் மீது அலட்சியமாகப் போட்டான், கவுடில்யன். அது பணிவுடன் வழக்கமாக அவனது சிரசின் மீது அமரும் ஓணானைப் போன்று தனக்குரிய இடத்தில் சென்று அமர்ந்தது. அன்றிரவு அவன் கூந்தல் முடியை அவிழ்க்கும் வரையில், அது இருந்த இடத்தை விட்டு நகராது. கவுடில்யன் போடும் முடிச்சின் உறுதி அப்படிப்பட்டது.

இறுதியில், கவுடில்யனின் கனமான ஸ்வர்ண கங்கணத்தை அவனது வலது கரத்தில் பூட்டினான், சவுஜன்யன். இன்னும் கவுடில்யன் வாய் திறக்கவில்லை. தனது அலங்காரம் பூர்த்தி அடைய, ஒருகணம்

https://telegram.me/aedahamlibrary

உயரத்தில் அண்ணாந்து பார்த்தான். அவனது பார்வையைப் புரிந்து கொண்ட சவுஜன்யன், ஒரு ஏணியைக் கொண்டு வந்து நிறுத்தி, அதன் மீது ஏறி உயரே ஊசலாடிக்கொண்டிருந்த அந்த தண்டத்தை எடுத்து அவனிடம் நீட்டினான்.

துர்தரா தேடிக்கொண்டிருந்த தேவ உடும்பரத் துண்டங்களை தன்னுள் கொண்டிருக்கும் சுத்த வெள்ளியினால் செய்யப்பட்ட தண்டம் அது. மேலே உள்ள யானை உருவத்தைத் திருகினால், தண்டத்தின் உச்சி திறக்க, உள்ளே தேவ உடும்பர மூலிகைத் துண்டங்களால் தண்டம் நிறைந்திருக்கும். தனது ஒப்பற்ற ஆற்றலுக்குக் காரணமான அந்த தேவ உடும்பர மூலிகைகள் நிறைந்த அந்த தண்டமும், தந்தை காஞ்சனகுப்தர் வழிபட்டு வந்த அத்திமலைத்தேவன் விக்கிரகமும் தான் அவனது குலச் சொத்து. சிவன் சொத்து குல நாசம். அத்தியானின் சொத்து குலச் செழிப்பு - என்பதை உணர்த்தும் ராஜதந்திரியின் கைத் தண்டம். பயபக்தியுடன் அதைப் பெற்று கண்களில் ஒற்றிக் கொண்டவன், தந்தை ஆராதித்த, அத்திமலையானின் விக்கிரகத்தை வழிபட்டான்.

“அத்திமலைத்தேவா! நஞ்சை முறிப்பவன் நீ. தூணைப் புடைத்து வெளிவந்த நரசிங்கன் கை நகங்களில் ஏறிய நஞ்சினையே முறித்த தேவ உடும்பர அத்தி மூலிகை என்னையும் நஞ்சமதியாளின் சதியில் இருந்து காக்கட்டும்…!” என்று வேண்டியவன், சவுஜன்யனை நோக்கினான். அவனது கண்களில் தென்பட்ட கலக்கம் அவனை உறுத்தியது. காஞ்சனகுப்தன், சானேஷ்வரிக்குப் பிறகு இவன் மீது அக்கறை செலுத்தக்கூடியவர், வேறு யார் இருக்கிறார்கள், இந்த சவுஜன்யனைத் தவிர.

“அச்சம் தவிர், சவுஜன்யா! மீண்டும் வருவேன். மீண்டு வருவேன். மவுரியத்துக்கு மீட்சி தருவேன்.!” - என்றபடி மாளிகையின் வாயிலை நோக்கி நடந்தான்.

சந்திரகுப்தன் அனுப்பியிருந்த இரதம் அவனுக்காகக் காத்திருந்தது. இரதத்தின் முன்பாக அபேயனும் இன்னும் சில காவலாளிகளும் நின்றிருந்தனர்.

"மிகவும் மகிழ்ச்சி குருநாதரே. மன்னரை மட்டுமல்ல. என்னை ஆளாக்கியதும் தாங்கள்தான். நாடோடியாக இருந்த என்னை நாட்டின் தளபதியாக மாற்றி உள்ளீர்.! உங்களை அரண்மனை விருந்துக்கு அழைத்துச் செல்வதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்!” ---

https://telegram.me/aedahamlibrary

அபேயன் கூறினான்.

"அன்று ஒரு நாள் அரசி துர்தரா என்னை கைது செய்து அழைத்து வரச் செய்தாளே! அப்போதும் நீதானே என்னை அழைத்துச் செல்லும் பேற்றினைப் பெற்றாய்…!" கவுடில்யன் கடகட என்று சிரிக்க, அபேயனின் முகம் சூம்பியது.

"நகைச்சுவைக்குச் சொன்னேன், அபேயா! உன் போன்றவர்கள் தங்கள் கடமையை சரிவரச் செய்தாலே நாடு நன்றாக இருக்கும்….!" - என்றபடி இரதத்தினில் ஏறினான். சவுஜன்யன் கண்களில் கவலையுடன் கவுடில்யன் சென்ற இரதம் திருப்பத்தில் மறையும் வரை வெறித்துப் பார்த்தபடி நின்றான்.

புஷ்பபுர அரண்மனையின் வாயிலில் மன்னன் சந்திரகுப்தன், அரசி துர்தரா மற்றும் அனைவரும் கவுடில்யனுக்காகக் காத்திருந்தனர். துர்தரா தனது கண்களில் கூடியமட்டில் வெறுப்பினை மறைத்து பணிவை வெளிப்படுத்திக்கொண்டிருந்தாள். இந்த கவுடில்யனுடன் சமரசம் செய்து பெற்றோர்களை முதலில் விடுவிக்க வேண்டும், என்கிற எண்ணம் மட்டுமே அவளது சிந்தையெல்லாம் நிறைந்திருந்தது.

"சந்திரகுப்தா.! எப்படி இருக்கிறாய்?" - கவுடில்யன் கேட்டாலும், அவனது கண்கள் ஜாடையாக துர்தராவின் முகத்தை அளந்து கொண்டிருந்தன.

அவனது கை தன்னையும் அறியாமல், கையிலிருந்த வெள்ளித்தடியினை இறுகப் பற்றின. -

"ஆசானே! தாங்கள் இயற்றும் அர்த்தசாத்திரத்தை கற்பதற்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்! தற்போது எதனைப் பற்றி எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்?" - குரலில் அக்கறை மிகுந்திருக்க, கேட்டான் சந்திரன்.

"சாம, தான, பேத, தண்டத்தை ஒரு மன்னன் எப்படிப் பிரயோகிக்க வேண்டும் என்பதனை குறித்து விளக்கிக்கொண்டிருக்கிறேன்!" - கவுடில்யனின் கண்கள் துர்தராவின் கண்களுக்குள் நோக்கின.

"இராஜதந்திரியே! தங்கள் வரவு நல்வரவாகுக. அடியாள் உமக்கு அளிக்கும் விருந்தினை ஏற்று எங்களை கௌரவிக்க வேண்டுகிறேன்!" -

https://telegram.me/aedahamlibrary

துர்தரா கூறினாள்.

"பெண்களின் மனது பாற்கடலைப் போன்றது, துர்தரா தேவி! அதனை கடையக் கடைய, ஆலகால நஞ்சும் வரும், அம்ருதமும் வரும். தற்போது உனது மனதில் அமுதம் பெருக்கெடுத்து ஓடுவதாக அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி.!" - கவுடில்யன் கூற, சந்திரகுப்தன் உற்சாகமடைந்தான்.

மனைவிக்கும், ஆசானுக்குமிடையே நிகழ்ந்து வந்த பனிப்போரில், முதன்முறையாக அன்று நட்புக் கதிர் தோன்றிவிட்டது. இனி பனிப்பகை விலகும் என்கிற எண்ணம் தோன்ற கவுடில்யனைப் பார்த்தான்.

"ஆம் ஆசானே! அம்ருதம் மட்டும் தோன்றவில்லை. சந்திரன், இலக்குமி அனைத்துமே பாற்கடலில் இருந்து தோன்றியது போல், அவள் மனதில் இப்போது நல்ல குணங்கள் தான் தோன்றி வருகின்றன.!" - சந்திரகுப்தன் மனைவியை புகழ, கவுடில்யன் புன்சிரிப்புடன் அவனை நோக்கினான்.

அடேய் சந்திரா! இப்படி கிரகணம் பிடித்த சந்திரன் ஆகி விட்டாயே. உனது வீரம், பௌருஷம், வலிமை எல்லாவற்றையும், அவளது முந்தானையில் முடிந்து கொண்டு விட்டாளே! ஒரு மன்னன் எப்படியெல்லாம் இருக்கக் கூடாது என்பதற்கு உதாரணமாக உன்னையே எடுத்துக்காட்டாக வைக்கும்படி செய்துவிட்டாயே.! --- மனதினுள் குமுறிய கவுடில்யன் தனது மீது உதிர்க்கப்பட்ட மலர்களை அப்புறப்படுத்தியபடி அரச தம்பதிகளை தொடர்ந்து உப்பரிகை நிலாமண்டபத்திற்குச் சென்றான்.

மிக ரம்மியமாகக் காட்சி தந்தது அந்தப்புர உப்பரிகை. உப்பரிகையின் நடுவே அழகிய பவழ மண்டபம். அதன் மீது பந்தலாகப் படர்ந்து இருந்த மல்லிகைக்கொடி, மலர்களை உதிர்த்து அந்த உப்பரிகை முழுவதும் நல்ல சுகந்தத்தை பரவச்செய்திருந்தது. நூற்றெட்டு முக விளக்குகள் இரண்டு அந்த உப்பரிகையில் நிறுத்தப்பட்டிருக்க, அவை சுடர் விட்டுப் பிரகாசித்து, உப்பரிகையைக் கடந்து அங்கிருந்த மரங்களில் கூட வெளிச்சத்தை ஏற்படுத்தின. மரத்தில் கூடுகட்டி இருந்த பறவைகள் இன்னும் சூரியன் மறையவில்லை என நினைத்து இங்கும் அங்கும் பறந்து விளையாடிக் கொண்டிருந்தன. முழுமதி வானில் நிறைந்திருந்து தனது பங்கிற்கு அந்த சமரச விருந்திற்கு ஒளி சேர்த்தது.

ஒரு வட்ட மேஜை. அதனைச் சுற்றி மூன்றே இருக்கைகள். கவுடில்யன்

https://telegram.me/aedahamlibrary

ஒன்றில் அமர்ந்ததும், சந்திரகுப்தனும், துர்தராவும் மற்றவற்றில் அமர்ந்தனர்.

கவுடில்யனுக்குப் பிடித்த கீரை வகைகள், அவரை மற்றும் பாகற்காய் வகைகள், பனை வெல்லத் தின்பண்டங்கள், கனி வகைகள், வாழைத்தண்டினை வேகவைத்து சுண்டப்பட்ட பொடித்தூவல்கள், மிளகூட்டல், ஜீரான்னம் என்று பல்வேறு உணவு வகைகள் மேஜையில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

கவுடில்யன் கண்களில் பிரம்மிப்பினை வெளிப்படுத்தினான்.

"துர்தரா தேவி! மாதரசிகளுக்குப் பிரியமான விளையாட்டு பல்லாங்குழி. அரசிகள் நன்முத்துக்களைக் கொண்டு பல்லாங்குழி விளையாடுவார்கள். நடுத்தர வர்க்கத்து பெண்கள் சோழிகளை வைத்து பல்லாங்குழி விளையாடுவார்கள். ஏழைப் பெண்கள், புளியன் கொட்டையை வைத்து விளையாடுவார்கள். முத்துக்களைக் கொண்டு விளையாடினாலும், சோழிகளைக் கொண்டு விளையாடினாலும், வெறும் புளியன் கொட்டைகளைக் கொண்டு விளையாடினாலும், பல்லாங்குழி பலகை ஏற்றுக்கொள்ளும். அந்தப் பலகைக்கு முத்துக்களும் ஒன்றுதான். புளியன் கொட்டைகளும் ஒன்றுதான். கையில் எவ்வளவு முத்துக்கள் இருந்தாலும், ஒரு குழியில் ஒரு முத்தினைத்தான் போட முடியும். அதே போல், இந்த பல்லாங்குழி பலகை வாயனுக்கு இவ்வளவு உணவு வகைகள் படைப்பது வீண். ஒரு பலகை குழியில் ஒரு முத்தினைப் போடுவது போன்று எனது பல்லாங்குழி பலகை வாயில் ஒரு குவளை பழரசத்தினை ஊற்றினால் போதும்!" ---

கவுடில்யன் சிரித்துக்கொண்டு நகைச்சுவையாகவும் பேசவில்லை. கண்களில் அனல் பறக்க கடுமையான சொற்களையும் உதிர்க்கவில்லை. அவனது முகம் தாமரை இலைகளால் மூடப்பட்டு, நீரின் அசைவையே காட்டாத ஒரு பொய்கையைப் போன்று இருந்தது. சந்திரகுப்தன் தனது மனைவியின் முகத்தினை கவலையுடன் நோக்கினான். கவுடில்யனின் பேச்சு அவளது கோபத்தை கிளறி இருக்குமோ?

துர்தரா கலகலவென்று நகைத்து தனது கோபத்தினை மட்டுப்படுத்தினாள்.

"ராஜதந்திரி! சிறு வயதில் இந்திரகோப பூச்சிகளை நூலில் கட்டி விளையாடியிருக்கிறேன். ஓணான்களை கல்லால் அடித்து துன்புறுத்தி

https://telegram.me/aedahamlibrary

உள்ளேன். பால்ய லீலைகளைப் புரியும்போது நாம் எதை எதையோ பேசுகிறோம், செய்கிறோம். கண்ணன் வெண்ணையை திருடியது பால்யத்தில். கீதை உபதேசித்ததும் அவன்தான். வெண்ணை திருடியவனிடம் என்ன உபதேசம் கேட்க வேண்டியிருக்கிறது என்று அருச்சுனன் நினைத்தானா என்ன.? பால்ய லீலைகள் மனதின் சந்தோஷத்திற்காக நிகழ்த்தப்படுபவை. நீர் எனது பால்யத்தில் கூறியவற்றை நினைவுப்படுத்துகின்றீர். இப்போது நான் ஓர் பொறுப்பான அரசி. மேலும், என கணவர் உமது பால்யக் கதையைச் சொல்லியிருக்கிறார். உமது பெற்றோரை தீக்கு இரையாக்கியவனை நீர் பழி வாங்கவில்லையா. அதைபோன்று எனது தமையனைக் கொன்று, எனது பெற்றோரை சிறையில் தள்ளிய உங்கள் இருவரின் மீது நான் கொண்டிருந்த வஞ்சம் இயற்கையே. ஆனால் இப்போது மன்னரின் வாரிசை சுமக்கும் இந்த நேரத்தில் எனது வஞ்சம் தீர்க்கும் எண்ணம் அடியோடு தீர்ந்து விட்டது. இப்போது நான் புத்தம் புதிய துர்தரா. உங்களிடம் நட்பை எதிர்பார்க்கும் மவுரிய அரசி.!”

நிதானமாகவும், சாதுர்யமாகவும் பேசினாள்.

"பொதுவாக மஞ்சம்தான் வஞ்சத்தை உருவாக்கும்.! ஆனால், மஞ்சத்தில் எமது மன்னரிடம் நீ தஞ்சம் அடைந்ததும், உன்னுடைய வஞ்சம் தானாக விலகி விட்டதைக் கண்டு மகிழ்கிறேன். உன்னையே திருத்தி பணி கொண்டு விட்ட சந்திரகுப்தனுக்கு நான் போதித்த கல்வி பலனளித்தது குறித்து மீண்டும் மகிழ்கிறேன்.!” -

கவுடில்யனின் கண்கள் அங்கே வைக்கப்பட்டிருந்த பழரசக் கோப்பையினை நோக்கின. சவுஜன்யன் இவனை எச்சரித்திருந்த நஞ்சு கலந்த பழரசப்பானம் அதுவாகத் தான் இருக்க வேண்டும். அதனை இவன் குடிக்கும் வரை துர்தராவுக்கு படபடப்பு அதிகமாக இருக்கும். எனவேதான இவன் வேண்டுமென்றே கடுமையான சொற்களால் அவளைத் தாக்க, அவள் பொறுமை காக்கின்றாள் போலும்.

கவுடில்யன் தனது ஓரக்கண்களால் சந்திரகுப்தனை நோக்கினான். இருவரிடையே சமரசம் ஏற்பட வேண்டுமே என்கிற கவலையினாலோ என்னவோ அவனது கண்கள் பதட்டத்துடன் சுழன்றன.

“திராட்சை கனிகளை எடுத்துக்கொள்ளுங்கள்!” துர்தரா நீட்டிய தட்டை நோக்கினான் சாணக்கியன்.

https://telegram.me/aedahamlibrary

'கனியாய் இருக்கும் வரை சுவையினை மட்டுமே தரும் திராட்சைக் கனிகள், ரசமாக மாறியதும் போதையை தருகின்றன. கொடிகளில் இருக்கும் வரை மனித சிந்தனைக்குத் தெளிவினை ஏற்படுத்தும் இந்தக் கனிகள், அரண்மனையின் வெள்ளிக்குடுவைகளில் சாறாக சிறைப்பட்டதும், போதை தருகின்றனவே. அரண்மனை வாசமே போதையைத் தரக்கூடியதா என்ன?" - உரக்கக் கேட்டபடி, தட்டிலிருந்து இரண்டு கனிகளை உதிர்த்து வாயில் போட்டான், கவுடில்யன்.

"எனது மனையாளை மன்னித்து அவளுக்கு ஆசி கூற வேண்டும், ஆசானே. அவளும் நடந்ததை மறந்து, தங்களிடம் நேசக்கரத்தை நீட்ட விரும்புகிறாள்!" சந்திரகுப்தன் கூறினான்.

"எல்லாவற்றிற்கும் காலம் வர வேண்டும், சந்திரகுப்தா. நான் முதன்முதலாக புஷ்பபுர அரண்மனையில் காலை வைத்தபோதே துர்தரா தானநந்தாவின் மகளாக எனக்கு நேசக்கரம் நீட்டியிருந்தால், உன்னால் எப்படி மன்னனாக அமர்ந்திருக்க முடியும்? உனது அரசியாக அவள் எனக்கு நேசக்கரம் நீட்ட வேண்டும் என்கிற தலைவிதி இருக்கும் போது, அவளால் என்ன செய்ய முடியும்?" - கவுடில்யனின் குரலில் தொனித்த கேலியை புரிந்துகொண்டாள், துர்தரா.

அவளது முகம் மாற, அதனை மறைக்க, பழரசக் கோப்பையை கையிலெடுத்தாள், துர்தரா.

"சுவாமி! கனிரசம் அருந்துங்கள்! இதுதான் இரவில் தங்களது முக்கியமான ஆகாரம் என்பது எனக்குத் தெரியும்!" - துர்தரா கூறினாள்.

அந்தக் கோப்பையையே சற்று நேரம் வெறித்த கவுடில்யன் அதனை கையில் வாங்கினான். "எனக்கு மட்டுமல்ல. உனக்கு, இந்த நாட்டிற்கு, அனைவருக்குமே இதுதான் இன்று முக்கிய ஆகாரம் இல்லையா?" --- இகழ்ச்சியுடன் கேட்ட கவுடில்யன் அந்தக் கோப்பையை தனது தலையின் மீது உயர்த்திப் பிடித்தான்.

"சந்திரகுப்தா! நான் இந்தப் பழரசத்தை அருந்தலாமா?" - கவுடில்யன் கேட்டான்.

"அருந்தலாம் சுவாமி! இதென்ன கேள்வி, ஆசானே?" --- வியப்புடன் கேட்டான்.

https://telegram.me/aedahamlibrary

"சிவனார் ஆலகால நஞ்சை அருந்தியபோது அவருக்கு பக்கலில் மனைவி பார்வதி இருந்தாள், அவனது கழுத்தினைப் பிடித்து நஞ்சினை கண்டத்திலேயே நிறுத்தினாள். அப்படி எனது கழுத்தினைப் பிடிக்க எனக்கு யார் இருக்கிறார்கள்?" - கவுடில்யன் கேட்டான்.

சந்திரகுப்தன் வெலவெலத்தான். துர்தராவுக்கு வியர்த்துக்கொட்டியது.

“என்ன சொல்லுகிறீர்கள், ஆசானே?” சந்திரகுப்தனின் குரல் நடுங்கியது.

“இந்தப் பழரசக் கோப்பையில் என்னைக் கொல்ல நஞ்சு கலக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் நான் இதை குடிக்க வேண்டுமா என்று உன்னைக் கேட்டேன்!” --- கவுடில்யன் கூற, சந்திரகுப்தன் திடுக்கிட்டு துர்தராவை நோக்கினான்...

“இல்லவே இல்லை. இது முழு பொய். நான் இந்தக் குவளையினில் நஞ்சை கலக்கவில்லை!” - துர்தரா வீறிட்டபடி தனது ஆசனத்தில் இருந்து எழுந்தாள்...

"நஞ்சை கலக்கவில்லை என்று நிரூபிக்க அதிகம் சிரமப்படத் தேவையில்லை. அரசியாரின் பிரிய தோழிக்கோ, செல்ல நாய்க்கோ, பூனைக்கோ இந்தக் கனிரசத்தைத் தந்து நிரூபிக்கலாமே. என்ன சொல்கிறாய், சந்திரா?" - கவுடில்யன் இருக்கையிலிருந்து எழுந்து நின்றபடி கேட்டதும், அமர்ந்திருந்த சந்திரகுப்தனும் அயர்ந்து போய் நின்றான்.

“அவ்வளவுதானே. இந்தக் கோப்பையில் நான் நஞ்சு கலக்கவில்லை என்பதனை நிரூபிக்க நானே இதனை அருந்துகிறேன்!" - கவுடில்யன் உயர்த்தியிருந்த கோப்பையினை அவனது கையிலிருந்து பிடுங்கினாள், துர்தரா. அவளது அவசர நடவடிக்கையைக் கண்டு கவுடில்யனின் சந்தேகம் அதிகரிக்க, சந்திரகுப்தனை நோக்கினான்.

பழரசத்தின் மூலம் சமரசத்தை ஏற்படுத்த நினைத்திருந்த சந்திரகுப்தன், நிலைமை ரசாபாசமாகப் போவதை உணர்ந்து, கர்ப்பிணியான துர்தராவை சமாதானப்படுத்த எண்ணினான்.

ஆனால்.... அதற்குள் ---

https://telegram.me/aedahamlibrary

தான் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டும் என்கிற ஆதங்கத்தில், கோப்பையை தனது இதழில் பதித்து, கனிரசத்தை மடக் மடக் என்று விழுங்கினாள், துர்தரா.

"இப்போது சந்தேகம் தீர்ந்ததா, ராஜதந்திரியாரே! நானே அந்த கனிரசத்தை அருந்திவிட்டேன்...!" --- துர்தரா சிநேகத்துடன் சிரித்தாள்.

"தீர்ந்தது துர்தரா!" - நின்றுகொண்டிருந்த கவுடில்யன் அமர்ந்தான். ஆனால் சந்திரன் அமரவில்லை. மலைத்துப் போய் துர்தராவையே பார்த்துக் கொண்டிருந்தான். புன்சிரிப்புடன் அமர முயன்ற துர்தரா திடீரென்று நிலைதடுமாறி நிலத்தில் சரிந்தாள்.

"ஆ.. ஆ..!" என்றபடி தனது கழுத்தை இரு கைகளாலும் பிடித்தாள். "...எரிகிறதே...! என்னால் சுவாசிக்க இயலவில்லையே!" - அலறத் துவங்கினாள்.

கவுடில்யன் பதட்டத்துடன் எழுந்தான். "அரசியாரை அந்தப்புரம் தூக்கிச் செல்லுங்கள்.!" - கவுடில்யன் உத்தரவிட, துர்தரா கிடந்த இரத்தினக் கம்பளத்துடன் அவளைச் சுமந்து சென்றனர், பணியாளர்கள். வைத்தியர்கள் உடனேயே தருவிக்கப்பட, அவர்கள் அந்தப்புரத்தில் அவளுக்கு வைத்தியம் செய்யத்துவங்கினர்.

அந்தப்புர அறையின் வெளியே பேயறைந்தவனைப் போன்று சந்திரகுப்தன் அமர்ந்திருக்க, கவுடில்யன் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருந்தான்.

வைத்தியர் ராமமிஸ்ரர் வரும் வரை இருவருமே மௌனத்தை கடைப்பிடித்தனர். வைத்தியர் வந்ததும், ஆசான் மற்றும் சீடன் இருவருமே அவரை நெருங்கினார்கள்.

"அரசே. கொடிய விஷம். அரசியார் உயிருக்குப் போராடிக்கொண்டு இருக்கிறார். ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த வந்தேன்.!" - வைத்தியரின் குரலில் சுரத்தில்லை.

"என்ன வைத்தியரே?" - சந்திரகுப்தனின் குரலில் நடுக்கம்.

"அரசியார் உட்கொண்டது கொடிய பிராண சூதன விஷம். சுவாசப்பையினை எரித்துவிடும். உடனேயே அரசியாரின் உடலில்

https://telegram.me/aedahamlibrary

சூலகரணியை செலுத்த வேண்டும். சூலகரணி விஷத்தை மட்டும் முறிக்காது. அரசியாரின் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவையும் முறித்துவிடும். என்ன செய்வது என்று புரியவில்லை.!” வைத்தியர் ராமமிஸ்ரர் கூறினார்.

சந்திரகுப்தன் நடுநடுங்கிப் போனான். தனது ஆசானை பார்த்தான்.

"ஆசானே! நான் என்ன செய்வது. நீரே எனக்கு ஒரு நல்ல வழியினை காட்ட வேண்டும்.!” - முதன்முதலாக ஆண்மையும், வீரமும் நிறைந்த சந்திரகுப்தனின் கண்களில் கண்ணீரைப் பார்த்தான், கவுடில்யன்.

தனது அறிவுக்கு வேலை கொடுக்கத் துவங்கினான், கவுடில்யன்.

மீண்டும் இங்கும் அங்கும் நடை போட்ட கவுடில்யன், திடீரென்று ராமமிஸ்ரரின் முன்பாகச் சென்று நின்றான்.

“வைத்தியரே! இரு உயிர்களையும் காப்பாற்ற முடியவே முடியாதா?” --- கவுடில்யன் கேட்டான்.

வைத்தியர் பதில் கூறாமல் தலைகுனிய, கவுடில்யன் யோசித்தான். பிறகு சந்திரகுப்தனை உன்னிப்பாகக் கவனித்தான்.

“சந்திரா! அன்றொருநாள் நான் ஒரு போட்டியினை அறிவித்தேன். உறங்குபவன் கழுத்தில் இருக்கும் தாயத்தினை கழற்றி எடுத்து வருபவனே மன்னன் என்றேன். தாயத்தினை அறுக்கவும் கூடாது... உறங்குபவனின் உறக்கமும் கலையக்கூடாது என்றேன். அது உனக்கு நான் வைத்த சோதனை.

“இப்போது காலம் உனக்கு சோதனை ஒன்றை வைத்துள்ளது. உனது மனைவியின் விஷமும் முறிய வேண்டும். உனது வாரிசும் காப்பாற்றப்பட வேண்டும். நீ என்ன முடிவினை எடுக்க நினைக்கிறாயோ, எடுத்துக் கொள்.!” என்றபடி சாளரத்தை நோக்கிச் சென்று, படர்ந்துவிட்ட இருளை வெறித்துப் பார்த்தபடி நின்றான், கவுடில்யன்.

ராமமிஸ்ரர், தனது வைத்தியக் குழாமை அழைத்துக்கொண்டு வெளியேற, சந்திரகுப்தன் மட்டும் அறையில் தனித்து விடப்பட்டான்.

https://telegram.me/aedahamlibrary

சாளரத்தின் வழியே இருளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கவுடில்யன் தனது பின்பாக ஒரு அசைவினை உணர, சடாரென்று திரும்பினான்.

“என்ன முடிவினை எடுத்தாய், சந்திரா?” -

குனிந்த தலை நிமிராமல் முணுமுணுத்தான், சந்திரகுப்தன். “பார்வதிதேவியார் தனது கணவனின் கழுத்தைப் பிடித்து நஞ்சினை தடுத்து நிறுத்தியது போன்று, நானும், எனது மனைவியின் உடல் முழுவதும் நஞ்சு பரவாமல் அதனைத் தடுத்து நிறுத்தி விட்டேன்!” --- அமைதியான குரலில் சந்திரன் கூறினான்.

“எப்படி?” --- கவுடில்யன் மலைத்தான்.

இப்படித்தான்!” - தனது சால்வையினை விலக்கி தனது வலது கையை உயர்த்தினான், சந்திரகுப்தன்.

சந்திரகுப்தனின் வலது கையில் துர்தராவின் துண்டிக்கப்பட்ட தலை ஊசலாடிக்கொண்டிருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 29. சடலத்துக்குப் பிறந்த சிசு

ஒரு கணம்தான் ---

மலைத்துப் போய் நின்றான், கவுடில்யன்...! துர்தரா இப்போது அரசியல்ல….! தற்போது தலையற்ற ஒரு முண்டம் என்பது உறைக்க, அவள் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவும் அல்லவா இறந்து விடும்? சந்திரகுப்தனின் ஜாதகப்படி அவனுக்கு ஒரே ஒரு மகன் மட்டும் அல்லவா பிறக்கும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

"ராமமிஸ்ரரே! உடனே வாருங்கள். நாம் மன்னரின் வாரிசினை காப்பாற்ற வேண்டும்!" - அரசியின் அறைக்குள் பாய்ந்தான், கவுடில்யன். தலை கொய்யப் பட்ட அதிர்ச்சியில் துர்தராவின் உடல் இன்னும் துடித்துக்கொண்டிருந்தது.

"ராமமிஸ்ரரே! துர்தராவின் வயிற்றில் இருக்கும் சிசுவை உடனே வெளியே எடுக்க வேண்டும்!" கவுடில்யன் கூறியவுடன், ராமமிஸ்ரர் திகைத்தார்.

"சிசுவை எடுப்பதா? அரசியார் மரணம் அடைந்துவிட்டதால், இனி கர்ப்பமும் அழிந்து விடும்.!" --- ராமமிஸ்ரர் கூறினார்.

"எனக்குத் தெரியும். துர்தராவின் தேகம் கதகதப்பினை இழப்பதற்குள், சிசுவை வெளியே எடுத்து விட வேண்டும். உடனே கர்ப்பமுற்ற ஒரு ஆட்டினை தருவியுங்கள்.!" கட்டளைகளை இட்டவாறு, மருத்துவர்களைப் பார்த்தான், கவுடில்யன்.

“இப்போது துர்தராவின் கர்ப்பத்தில் உள்ள சிசுவின் வளர்ச்சி எவ்வளவு தூரம் ஏற்பட்டிருக்கிறது?" கவுடில்யன் கேட்டதும், மருத்துவர்கள் ஒருவரை யொருவர் நோக்கினர்.

"ஏழரை மாதம் முடிந்து விட்டது, ராஜதந்திரி!" --- மருத்துவர் குழாமில் ஒருவர் கூறினார்.

"நல்லது! எட்டு மாதம் வரை, நாம் சிசுவை எப்படியாவது காப்பாற்றினால் பிறகு அது பிழைத்து விடும். எனது திட்டம் இதுதான். கர்ப்பப்பையின் கதகதப்பு இருக்கும் வரையில்தான் கர்ப்பத்தில் குழந்தை தங்கும். நாம் அன்றாடம் ஒரு சினை ஆட்டினைக் கொன்று,

https://telegram.me/aedahamlibrary

அதன் கர்ப்பப்பையினில் குழந்தையை வைப்போம். இன்னும் பதினைந்து நாட்களுக்கு அங்ஙனம் மன்னரின் வாரிசை அன்றாடம் ஒரு ஆட்டின் கர்ப்பப்பையினில் பத்திரப்படுத்தினால், மன்னரின் வாரிசு தங்கும்! உடனடியாக, எனது யோசனையை செயல்படுத்துங்கள்!" கவுடில்யன் கூறினான்.

ராமமிஸ்ரர் குழப்பத்துடன் தலையசைத்தார். ராஜதந்திரிக்கு பித்து பிடித்து விட்டதா என்ன? ஆட்டின் கர்ப்பப்பையினில் சூலை பத்திரப்படுத்தினால், அது எப்படி உயிர் பிழைக்கும்? அரசியல் விவகாரங்களில் வேண்டுமானால் அவன் ராஜதந்திரியாக இருக்கலாம். மருத்துவ விஷயங்களில் அந்த ராஜதந்திரம் எடுபடுமா என்ன? நமக்கு என்ன? சொன்னதைச் செய்வோம்.? இல்லை என்றால், அரசியின் தலை போல் நமது தலையும் கொய்யப்படும் என்னும் எச்சரிக்கை உணர்வு மனதில் பரவ, ஒரு சினை ஆட்டைத் தருவிக்கக் கட்டளையிட்டார், ராமமிஸ்ரர்.

அதன் பிறகு நந்தவனத்தினில் ஒரு குடில் அமைக்கப்பட்டது. தென்னம் ஓலைகளால் வேயப்பட்ட அந்தக் குடிலின் மீது இளம் காலை வெயில் மட்டுமே விழும்படியாக ஒரு ஆல மரத்தின் அடியில் அமைக்கப்பட்டது. அந்த ஆலமரத்தின் மீது எப்போதும் நீர் பாய்ச்சிக்கொண்டு இருக்கும்படி கட்டளையிட்டான், கவுடில்யன். காலை இளம் வெயிலும், ஈரப்பதமும் ஒரே சீரான அளவில் இருக்கும்படியாகச் செய்து, அந்தக் குடிலின் தட்ப வெப்ப நிலையினை ஒரு குறிப்பிட்ட பதத்தில் நிலவும்படியாகச் செய்தான்.

தனது வெள்ளித்தடியின் மேல்புற யானை உருவத்தினை திருகியதும், அதன் மேல்புறம் திறந்தது. தடியின் உள்ளே இருந்த தேவ உடும்பர அத்தி மூலிகைத் துண்டம் ஒன்றை எடுத்து அதனை நீரில் கரைத்து, காய்ச்சி, அந்தக் கலவையுடன், சாவல்ய கரணி மூலிகையைக் கலந்தான். குருதியைப் போன்ற ஒரு நிறத்தில், அந்தக் கலவை கெட்டியாக மாற, அதனை குளிர்ந்த நீரைக் கொண்ட ஒரு கலயத்தில் ஆற வைத்தான் சாணக்கியன்.

"ராம மிஸ்ரரே! ஆட்டின் கர்ப்பப்பையில் அந்தச் சூலினை வைத்து அதனை இந்தக் கலவையில் பத்திரப்படுத்துங்கள். அன்றாடம் இதனைச் செய்யுங்கள். அரை மண்டலம் கழிந்த பிறகு, என்னிடம் வந்து நடப்பதை தெரிவியுங்கள்!" - உத்தரவிட்ட கவுடில்யன், ஆயாசத்துடன் தனது மாளிகைக்குத் திரும்பினான்.

https://telegram.me/aedahamlibrary

அன்றாடம் ஒரு சினை ஆட்டினை அரண்மனைக்குத் தருவிக்க வேண்டும் என்று சந்திரகுப்தன் கட்டளை இட்டவுடன், அத்தகைய ஆடு ஒன்றை வரவழைப்பதில் எவ்வித சிரமமும் இருக்கவில்லை. கவுடில்யனின் கட்டளைப்படி துர்தராவின் வயிற்றினைப் பிளந்து அவளது கர்ப்பப்பையை எடுத்து அந்தச் சூலினை ஆட்டின் கர்ப்பப்பையில் வைத்து குழந்தை சிசுவினைக் காப்பாற்றப் போராடினார்கள், மருத்துவர்கள்.

கவுடில்யனின் யோசனை எங்கே பலிதம் ஆகப் போகிறது, என்கிற நம்பிக்கையின்மையோடுதான் மருத்துவர்கள் செயலாற்றினார்கள். அவன் கூறியபடியே, சாவல்ய கரணி மற்றும், தேவ உடும்பர அத்தி மூலிகையைக் காய்ச்சி அந்தக் கலவையினில், துர்தராவின் கர்ப்பத்தில் இருந்து எடுத்த சூலினை ஆட்டின் கர்ப்பப்பைக்கு மாற்றி, கலவையில் வைத்தார்கள். அரை மண்டலம் முழுவதும், பணியாளர்கள், அந்த ஆலமரத்தின் மீது குளிர்ந்த நீரைப் பாய்ச்சிக்கொண்டே இருந்தனர்.

அரை மண்டலம் கழிந்தது

ஒரு வெள்ளிக்கிழமை விடியற்காலை வேளையில், ராமமிஸ்ரர் குடிலை நோக்கிச் சென்றார். தூக்கம் வழிந்த கண்களுடன் காவலர்கள் நிற்க, பணியாளர்கள் ஆலமரத்தின் மீது நீர் பாய்ச்சுவதற்கு, பெரிய கங்காளங்களில் நீரைச் சேகரித்துக்கொண்டிருந்தனர். காலை வெயில் இன்னும் குடிலின் மீது படர்ந்திருக்கவில்லை. இரவு பெய்த பனித்துளிகள் அந்த ஆலமரத்தின் இலைகளில் இன்னும் அமர்ந்திருந்தன. காலை வெயில் வந்ததும் நாங்கள் புறப்பட்டு விடுகிறோம் என்று அறிவித்துக் கொண்டிருந்தன.

உள்ளே நுழைந்த ராமமிஸ்ரர் திகைப்புடன் நின்றார். இரவு பணியில் அமர்த்தப்பட்டிருந்த மருத்துவனும், மருத்துவச்சியான அவன் மனைவியும் ஒரு மூலையில் அமர்ந்த நிலையில் உறங்கிக்கொண்டிருந்தனர். இரவெல்லாம் கண்விழித்திருப்பார்கள், பாவம்.

தேவ உடும்பர மூலிகைக் கலவையில் வைக்கப்பட்டிருந்த அந்த ஆட்டின் கர்ப்பப்பை கலவையில் மிதந்து கொண்டிருக்க, திடீர் என்று அதனுள் ஒரு சிறு அசைவு. ஆமாம். மன்னரின் வாரிசு தனது காலால் ஆட்டின் கர்ப்பப்பையின் சுவற்றை உதைத்துக் கொண்டிருந்தது. ராமமிஸ்ரரால், தனது கண்களையே நம்ப முடியவில்லை. "சிசு

https://telegram.me/aedahamlibrary

அசைகிறது!" --- அவரது பதற்றமான கூக்குரலைக் கேட்டு, அலறியடித்துக் கொண்டு எழுந்தனர், மருத்துவத் தம்பதியர்.

ராமமிஸ்ரர் உடனடியாக அரண்மனைக்கு ஓடினார். மன்னரிடம் விஷயத்தைத் தெரிவிக்க, அவன் உடனே அபேயனை கவுடில்யனின் மாளிகைக்கு அனுப்பினான்.

கவுடில்யன் விரைவாக வந்து அந்தக் குடிலினுள் நுழைந்தான். துர்தராவின் வயிற்றில் இருந்து எடுக்கப்பட்ட குழந்தை தனது காலை உதைத்துக் கொண்டிருப்பதை தனது கண்களால் ஊர்ஜிதம் செய்துகொண்டான், கவுடில்யன். இனி கவலையில்லை. மன்னரின் வாரிசு தங்கிவிடும். அந்தக் குழந்தை பிழைத்து விடும். மன்னரின் இளவரசன் பிழைத்துக்கொண்டான், என்று பகிரங்கமாக அறிவிக்கப்பட, எங்கும், கொண்டாட்டம். வாணவேடிக்கைகள் ஒலிக்க, அந்த சத்தம் சிறைச்சாலை வரை எட்டி, தானநந்தா, பத்மாங்கியின் செவிகளிலும் சத்தம் நுழைந்தது.

துர்தராவின் குழந்தை பிழைத்துக் கொண்டு விட்டதாமே.!

மகள் துர்தராவும் சந்திரகுப்தனால் தலை துண்டிக்கப்பட்டு இறந்து போனாள் என்கிற செய்தியைக் கேட்டதும், பத்மாங்கி மரணப்படுக்கையில் விழுந்தாள்.

தானநந்தாவிடம் கண்ணீர் விட்டுக் கதறினாள்.

"நம் அரண்மனை ஜோசியர் மிஸ்ரபானு கூறியது போல் ஆனதே.

சக்கரவர்த்தினியாகத் திகழ்வாள். ஆனால் காட்டுவாசியை மணப்பாள்.

இறந்தபிறகு தாயாவாள்

என்று மிஸ்ரபானு கூறிய இரண்டு முரண்பாடுகளும் பலிதம் ஆனதே."

கண்ணீர் வடித்து கதறிய பத்மாங்கி அன்றிவே தனது ஆயுளை முடித்துக்கொண்டாள்.

இப்போது தானநந்தாவின் மனதில் இனம் புரியாத உணர்ச்சி. அன்றொரு நாள் கவுடில்யன் தான் தேவ உடும்பரத்தை தருகிறேன். அதற்கு பிரதிபலனாக தனக்கு ஒரு பதவியை தரும்படி கேட்டபோது,

https://telegram.me/aedahamlibrary

தான் அதற்கு இசைவு தெரிவித்திருந்தால், இப்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருப்பான்.

பிபத்த நந்தன் உயிருடன் இளவரசனாக இருந்திருப்பான். துர்தரா ஒரு பெரிய சக்கரவர்த்தியை மணந்து சுகமாக இருந்திருப்பாள். இவன் உலகம் போற்றும் சக்கரவர்த்தியாக இருந்திருப்பானே.

பல்லாங்குழி பலகை வாயன்.! ஒரு சொல் அல்லவா ஒரு சாம்ராஜ்யத்தையே அழித்து விட்டது. இந்திரபிரஸ்தம் வந்த துரியோதனன், நீர் எது, தரை எது என்று தெரியாமல் விழுந்து விட, அதைப்பார்த்து பாஞ்சாலி எள்ளி நகையாடியதுதானே, மகாபாரத யுத்தத்திற்குக் காரணம். சிவதனுசை ஏந்த இயலாமல், இராவணன் நழுவ விட்டதால், சிரித்த ஜானகியின் மீது கோபம் கொண்டதால்தானே, அவன் அவளைக் கடத்திச்சென்று சிறை வைத்தான்.

எள்ளி நகையாடுதல் என்பது அப்போதைக்கு இதமாக இருக்கும். ஆனால், பாதிக்கப்பட்டவர்கள் மனதில் வஞ்சம் என்கிற விதையை அது விதைக்கும். அந்த வஞ்சம், செடியாக வளர்ந்து பின்பு ஆலமரமாக மனதினில் பரவும். அப்போது சிரித்தவர்கள் அந்த வஞ்ச ஆலமரத்தின் விழுதுகளால் கட்டுண்டு பழி தீர்க்கப்படுவார்கள், என்பது இவனது குடும்பத்தைப் பொறுத்தவரை உண்மையாகி விட்டது. துர்தரா "பல்லாங்குழி பலகை வாயன்" என்று கூறியதைத் தவிர்த்திருக்கலாம்! இப்போது பல்லாங்குழி பலகைக் குழியில் இருந்து சோழிகளை வழித்தெடுப்பது போன்று, துர்தராவின் தலையை துண்டித்ததோடு, அவளது வயிற்றில் இருந்து அவளது கர்ப்பத்தையும் அல்லவா வழித்தெடுத்து விட்டார்கள், சந்திரகுப்தனும், கவுடில்யனும். வேதனையில் புலம்பினான், தானநந்தா. என்ன செய்வது. பதவியில் இருக்கும்போது சிந்திக்க இயலாதபடி, அகந்தையும், ஆணவமும் அல்லவா குறுக்கே நிற்கின்றது.

இரண்டு திங்களுக்குப் பிறகு, ---

புதிய நிலவு உருவான இரண்டாம் நாள், பூச நட்சத்திரம் கூடிய சனிக்கிழமை, சந்திரகுப்தனின் மகன் பிறந்ததாக அறிவிக்கப்பட்டது. ஆட்டின் கர்ப்பப்பையில் இருந்து தனது கைகளாலேயே குழந்தையை எடுத்த கவுடில்யன், அதனை தானே சுத்தப்படுத்தி, பட்டுத் துணியில் வைத்து, சந்திரகுப்தனிடம் நீட்டினான்.

https://telegram.me/aedahamlibrary

“இதோ மவுரியத்தின் இளவரசன். உனது மகன், சந்திரகுப்தா!” - கருநீல பட்டுத்துணியில் மலர்க் குவியலாகக் கிடந்த தனது மகனை வாஞ்சையுடன் நோக்கினான் சந்திரகுப்தன். அதன் உச்சியில் தனது உதடுகளைப் பதித்தவன், "எனது மகன்!” என்று உரத்த குரலில் கூறிச் சிரித்தவன், தனது தாய் அமரேந்திரியிடம் குழந்தையை நீட்டினான், சந்திரன்.

குழந்தையை முத்தமிட குனிந்த அமரேந்திரி திகைத்தாள். குழந்தையின் நெற்றியில் கருமை நிறத்தில் ஒரு அடையாளம் காணப்பட்டது.

"ராஜதந்திரியாரே. என்ன இது? தீயினால் சுட்டது போன்று குழந்தையின் நெற்றியில் ஒரு வடு உள்ளதே?" - பதற்றத்துடன் கேட்டாள், அமரேந்திரி.

“துர்தரா அருந்திய விஷம், கர்ப்பத்தை பாதிக்கத் துவங்கியதன் அடையாளம். நல்லவேளையாக, விஷம் பரவுவதற்குள், அவளது உடலில் இருந்து குழந்தையை எடுத்து விட்டோம். அவனது நெற்றியில் ஒரு பிறைச் சந்திரனைப் போன்று அந்த வடு காணப்படுவதால், நமது இளவரசன் இனி பிந்துசாரன் என்று அழைக்கப்படட்டும்.!” - கவுடில்யன் கூறியதும், சந்திரகுப்தன் உணர்ச்சியுடன் வந்து கவுடில்யனின் பாதங்களில் பணிந்தான்.

"பிந்துசாரன்!” - உணர்ச்சியுடன் அந்தப் பெயரை மூன்று முறை உச்சரித்தான், சந்திரன்.

"ராஜமாதா! குழந்தைக்கு முதல் பால் ஊட்டுங்கள்.!” கவுடில்யன் சொன்னதும், அமரா அவனை நோக்கி தலைகுனிந்தாள்.

“இதற்கென்றே ராஜ்வந்தி என்கிற ஒரு செவிலியை தயார் செய்திருக்கிறேன், ராஜதந்திரி. அவளும் அந்தப்புரத்தில் காத்திருக்கிறாள். இப்போதே அவள் வசம் குழந்தையை ஒப்படைக்கிறேன்.!" அமரேந்திரி குழந்தையுடன் வெளியேறினாள்.

குழந்தை பிறந்ததற்கான கொண்டாட்டங்களை அறிவிக்க வேண்டி சந்திரனும் அமராவின் பின்னால் செல்ல, கவுடில்யன் அவனையே வெறித்துப் பார்த்தான்.

"சந்திரகுப்தா!” - வெளியேற முயன்ற சந்திரகுப்தன் வியப்புடன்

https://telegram.me/aedahamlibrary

கவுடில்யனை நோக்கினான்.

“சற்று இங்கே வா!” - கவுடில்யன் கூறியதும், சந்திரகுப்தன் அவனை நோக்கி நடந்து வந்தான்.

"பாவம் துர்தரா! --- கவுடில்யன் கூறியதும், சந்திரகுப்தனின் கண்களில் சோகம்.

“என்ன செய்வது, ஆசானே! எனக்கு ஒரே ஒரு மகன் தான், ஜாதகத்தில் விதித்திருக்கிறது என்று தாங்கள் தானே கூறினீர்கள். எனவேதான், அவளைக் கொன்று குழந்தையைக் காப்பாற்றினேன். இல்லையேல் அவளைத்தான் காப்பாற்றி இருப்பேன்!” - என்ற சந்திரகுப்தனை ஆழமான கண்களால் நோக்கினான், கவுடில்யன்.

"உனக்கு நான்கைந்து குழந்தைகள் ஜாதகத்தில் விதிக்கப்பட்டிருந்தாலும் நீ துர்தராவைத்தான் கொன்று இருப்பாய்!” - அவனைத் தொடர்ந்து தனது கீழ்கண்களால் நோட்டம் விட்டான், கவுடில்யன்.

"ஆமாம் ஆசானே! தங்களைக் கொல்வதற்கு, துர்தரா பழரச பானத்தில் நஞ்சு கலந்திருப்பதை என்னால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அந்த கோபத்தில் தான் அவளைக் கொன்றேன்!” - சந்திரகுப்தன் கூறினான்.

“பாவம் துர்தரா! அவள் அந்த பானத்தில் நஞ்சை கலக்கவில்லை!” --- கவுடில்யன் முகத்தில் எவ்வித சலனமும் இல்லை.

சந்திரகுப்தனின் முகம் அரண்டு போனது. "துர்தரா கலக்கவில்லையா? ஐயோ அவசரப்பட்டு விட்டேன். ஆசானே! அந்த பானத்தில் நஞ்சை கலந்தது யார்?”

“நீதான் கலந்தாய், சந்திரகுப்தா! துர்தராவோடு சுகமாக வாழ வேண்டும் என்கிற துடிப்பினில், அதற்கு நான் தடையாக இருப்பேனோ என்கிற ஆதங்கத்தில், உன்னை எனது கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொள்ள, நீயே எனது பானத்தில் நஞ்சை கலந்தாய், சந்திரகுப்தா. அதை அறியாமல், துர்தரா தான் நிரபராதி என்பதை நிரூபிக்கும் அவசரத்தில் அந்த பானத்தை அருந்தி விட்டாள். அவள் பிழைத்தால் உனது சதி அம்பலம் ஆகிவிடப் போகிறதே என்று நீயே அவளைக்

https://telegram.me/aedahamlibrary

கொன்றுவிட்டாய்.

"தெரிந்தோ, தெரியாமலோ, துர்தராவா, நானா என்கிற கேள்விக்கு என்னைத் தேர்ந்தெடுத்து துர்தராவை அழித்து விட்டாய். இது காலத்தின் கட்டாயம்.! எனக்கு அர்த்த சாத்திரம் எழுதும் பணிகள் இருக்கிறது. நான் வருகிறேன், சந்திரா!" --- கவுடில்யன் தனது மாளிகைக்குத் திரும்பினான்.

சந்திரகுப்தன் உறைந்து போய், அவன் சென்ற திக்கையே நோக்கிக்கொண்டிருந்தான்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 30. யவன மோகினி

ஷீரள [1] நதியின் கரை ---

சந்திரகுப்தன் தனது புரவியில் சென்று கொண்டிருந்தான். வாழ்க்கை அவனுக்கு வெறுமையாக இருந்தது. காட்டுவாசியாகவே வாழ்ந்திருந்தால், இன்னும் மகிழ்ச்சியாக இருந்திருப்பானோ? இப்போது மாபெரும் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தும், வாழ்வில் ஒரு பிடித்தம் இல்லை. ஒரு வேளை இவனது இருக்கையின் பக்கலில் துர்தரா அமர்ந்திருந்த இடம் இன்னும் வெறுமையாகவே இருப்பதால் இந்த எண்ணமோ.? கலவியாடும் தேவை குறித்து கவலையில்லை. அரண்மனை பெண்கள், நான் நீ என்று இவனது மஞ்சத்தில் ஊழியம் செய்ய சித்தமாக இருக்கிறார்கள். ஆனால், தேக உறவு மட்டுமா ஒரு மனிதனுக்கு பூரண திருப்தியை தரும். ஊடலும், கூடலும் கொண்டு, மனதில் காதல் அரசியாக வீற்றிருக்க ஒரு நங்கை வேண்டும் அல்லவா?

இப்போதெல்லாம் கவுடில்யன் அரண்மனைக்கு வருவதே இல்லை. அவரது அர்த்த சாத்திரத்தை இவன்தான் கொலு மண்டபத்தில் அரங்கேற்றினான். இனி உலகம் அவரை சாணக்கியன் என்றே அழைக்க வேண்டும் என்கிற கட்டளையையும் இவன் தான் பிறப்பித்து இருந்தான். இப்போது சாணக்கியன் தனி உலகத்தில் இருக்கிறான். அவரைச் சுற்றி அறிஞர்கள் அமர்ந்திருக்க, தர்க்கத்திலும், ஆன்மீக சதஸ்சிலும் பொழுதைக் கழிக்கிறான். சந்திரகுப்தன் அழைத்தால் மட்டுமே அரண்மனைக்கு வருகிறான். வந்தாலும், அவனிடம் பழைய அன்னியோனியம் இல்லை. ஒரு மன்னனுக்கும் அவனது ராஜதந்திரிக்கும் இடையே நிலவும் ராஜாங்க உறவு மட்டுமே அவர்களிடம் தற்போது நிலவுகிறது. அமரேந்திரி பிந்துசாரனின் முழு பொறுப்பையும் எடுத்துக்கொண்டு விட, சந்திரகுப்தனுக்கு தற்போது துணை தனிமைதான்.

தனது புரவியில் சென்று கொண்டிருந்தவனின் செவிகளில் திடீரென்று இனிமையாக ஒலித்தன சிரிப்பலைகள். கலகல என்று ஸ்வர்ண நாணயங்களை மரக்காலில் நிரப்பி கீழே உருட்டியது போன்ற சிரிப்பு ஒலிகள். வியப்புடன் புரவியை நிறுத்தியவன், மெதுவாக ஷீரள நதியை நோக்கி நடந்தான்.

ஒரு மரத்தின் பின்னே பதுங்கி, நதியை நோக்கினான். நதியில் குளித்து

https://telegram.me/aedahamlibrary

ஆடைகளை மாற்றிக்கொண்டிருந்தனர் சில நங்கையர். அதில் ஒருத்தி ஒரு பாறையின் மீது அமர்ந்திருக்க, அவளது கூந்தலைத் துவட்டிக் கொண்டிருந்தாள், தோழி ஒருத்தி.

பிரமித்துப் போய் நின்றான், சந்திரகுப்தன். துர்தராவின் அழகு சூரிய ஒளியைப் போன்று திகழ்ந்தது... ஆனால் கதிரின் தணல் ஆணவமாய் அவள் தேகத்தில் பரவி கலவியாடும்போது இவனுக்குத் தகிப்பினைத் தந்தது.

ஆனால், இந்தப் பெண்ணின் தேகம் ---

நிலவை எடுத்து சிறு சிறு துண்டங்களாகச் செய்து அதனை உரைகல்லில் தேய்த்து அந்தக் குழைவை பன்னீரில் கரைத்து, குங்குமப்பூ கலந்த சந்தனத்தைச் சேர்த்து, உருட்டி செய்த உருவம்.

நெடிய உயரம். மெலிந்த தேகம். நீண்ட கால்கள். சதைப்பற்றே இல்லாத சீரான தேகம். இப்படி ஒரு அழகை சந்திரன் பார்த்ததே இல்லை. ஆடைகள் உடலை மறைக்கத்தான் என்றாலும், சில பெண்கள் ஆடையை அதீதமாக அணிந்து, உடலை வஸ்திரத்தினால் பொட்டலமாகக் கட்டியிருப்பார்கள். இவளோ ஒரு நீண்ட மெல்லிய மஞ்சள் வஸ்திரத்தை தனது தேகத்தில் வழிய விட்டிருந்தாள். மெல்லிய அந்தத் துணியின் வழியே அவளது பளிங்கு தேகம் நன்றாக அவனுக்குப் புலப்பட்டது. சூரிய சந்திரர்கள் இரண்டும்தான் மனித வாழ்வை வழிநடத்திச் சென்றுகொண்டு இருக்கின்றன. அந்தச் சூரிய சந்திரர்களை தனது மார்பினில் அந்தப் பெண் ஏந்திக்கொண்டிருந்தவளைப் போன்று இருந்தாள்.

அவளது தேக அமைப்பையும், மினுமினுப்பையும் கவனிக்கும் போதே அவள் பாரத வர்ஷத்தின் கர்ம பூமியைச் சேர்ந்தவள் அல்ல என்பதைப் புரிந்து கொண்டான். போகத்தைத் தரும் போக பூமியைச் சேர்ந்தவள் என்றும் புரிந்துகொண்டான்.

அவள் யார் என்பதை அறிந்துகொள்ளும் துடிப்பு உடனே ஏற்பட சற்று தொலைவில் திரும்பி நோக்கினான். அங்கே ஒரு இரதம் நின்று கொண்டிருந்தது. அந்த இரதத்தின் அமைப்பே விசித்திரமாக இருந்தது. அந்த இரதத்தின் இரு பக்கங்களிலும் இறக்கைகள் போன்று அமைப்பு காணப்பட்டது. அதன் அருகே ஒரு இரத சாரதி நின்றிருந்தான்.

https://telegram.me/aedahamlibrary

அவனை அணுகிய சந்திரன் அந்த சாரதியைப் பார்த்து கேட்டான்.

“இந்த ரதம் யாருடையது? அங்கே நீராடிக் கொண்டிருக்கும் பெண் யார்?"

சந்திரகுப்தனின் உடையையும், அவனது கம்பீரத்தையும், அவனது போர்வாளையும் பார்த்த மாத்திரத்திலேயே அந்த இரதசாரதி அவன் ஒரு மன்னனாக இருக்கக் கூடும் என்பதை யூகித்து விட்டிருந்தான். அவனை நோக்கிப் பணிந்து,

“யவன இளவரசி ஹெலீனா தான் நீராடிக்கொண்டு இருக்கிறார். அவருடைய இரதம்தான் இது. அவரது தந்தை யவன அரசன் செலுகஸ் நிகேதர் காந்தாரத்தைக் கைப்பற்றி உள்ளார். சீரள நதியைப் பற்றி அறிந்து, இளவரசியார் இங்கே நீராட வந்திருக்கிறார்.” - சாரதி கூறினான்.

மீண்டும் ஒரு முறை தான் பதுங்கியிருந்த மரத்தினை நோக்கி நகர்ந்த சந்திரன், அந்த யவன இளவரசி ஹெலீனாவின் அழகைப் பருகிக்கொண்டிருந்தான். அவளது நடையழகு, உடையழகு, உரையழகு, ஜடையழகு அனைத்து அழகையும் பருகியதால், வெறி கொண்ட ‘வண்டாக’ மாறினான். தேசங்களைக் கைப்பற்றி, அஸ்வமேத யாகத்தை செய்வதில் என்ன பலன்? இப்படி ஒரு பெண்ணை மனத்தால் ஆவாகனம் செய்து, மன்மத ஹோமத்தைச் செய்து, தனது பக்கத்தில் சக்கரவர்த்தினியாக இருக்கச் செய்து, ஒருவரின் மனதினை மற்றவர் மேய்ந்து, காதல் மேய்ச்சல் நிலத்தில் கம்பீரக் குதிரைகளாக ஓடிக்கொண்டிருப்பது தானே பெருமை.

ஹெலீனா தனது இரதத்தில் ஏறி புறப்பட்ட சமயத்தில் தனது புரவியில் ஏறி அவளது வழியை மறித்து நின்றான், சந்திரகுப்தன். ஹெலீனாவின் கண்கள் அவனை நோக்கின.

ஹெலீனாவின் பளிங்கு நிறத்திற்கு, சந்திரனின் தேகம் கருத்து காணப்பட்டது. ஆனால் கருப்பில்தானே கம்பீரம் உள்ளது. காந்தல்தானே ருசியைத் தருகின்றது. யவன ஆண்களின் சோகை வெண்மை நிறத்தையே பார்த்துப் பழக்கப்பட்டிருந்த அவளுக்கு, சந்திரனின் கம்பீரமான கருத்த நிறம் கவர்ச்சியைத் தந்தது.

அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள் என்கிறபோது

https://telegram.me/aedahamlibrary

அங்கே காதல் கட்டாயம் உருவாகியிருக்கும். இங்கே சந்திரனின் யௌவனமும் நோக்கியது! யவனமும் நோக்கியது. உடனே சிக்கிமுக்கி கற்கள் உராய்ந்தது போன்று அங்கே காதல் தோன்றிவிட்டது. ஹெலீனா அவனைத் திரும்பிப் பார்த்தபடியே செல்ல வருங்கால மவுரிய அரசி தேவி ஹெலீனா மகராணி வாழ்க வாழ்க என்று அரற்றியபடி மவுரியத்தை நோக்கிச் சென்றான், சந்திரகுப்தன்.

“யவன அரசன், செலுகஸ் நிகேதரின் மகள் ஹெலீனாவை காதலிக்கிறேன். தாங்கள் தான் அவளை எனது அரசியாக மவுரிய சிங்காசனத்தில் அமர்த்த வேண்டும்!” - தான் நினைத்ததைச் செய்து முடிக்கும் ஆசான், சாணக்கியனின் பாதாரவிந்தங்களில் சரண் புகுந்தான், சந்திரகுப்தன்.

யோசித்தார், சாணக்கியர்.

"நாலு வகை பெண்மணிகள் உண்டு, சந்திரா.! பத்மினி, ஹஸ்தினி, சித்தினி, சங்கினி என்று பெண் இனத்தை நான்கு வகைப்படுத்துவார்கள். பத்மினி, வகை பெண்களின் பேரழகு சுத்த சத்வ வெண்ணையை உருக்கிய நெய்யினைப் போன்றது. தைரியமாக உட்கொள்ளலாம். ஹஸ்தினியின் பேரழகு சீரான தைல தாரையைப் போன்றது. அடக்கமாக இருக்கும். பொங்கிப் பாயாது. சித்தினியின் பேரழகு தீபங்களை எரிக்க உதவும் எண்ணெயைப் போன்றது. அதனை உணவுப் பதார்த்தங்களை தயாரிக்க உபயோகம் செய்யக் கூடாது. உடல் நலத்திற்குக் கேடு. சங்கினியின் பேரழகு திலம தைலத்தைப் (எள்ளெண்ணை) போன்றது. மிகவும் வீரியம் வாய்ந்தது. நமது தேகத்தைச் சுட்டெரித்து நம்மை உருக்குலைத்து விடும். நீ குறிப்பிட்ட பெண், கடைசிவகை திலமதைலத்தைப் போன்றவள். மிகவும் ஆபத்தானவள். எப்போதும், அயல் தேச பொருள் மனதிற்கு இதம் அளித்தாலும், நமது மண்ணில் மாசுகளை உருவாக்கும். புரிந்து கொள். அவளை மறந்து விடு!”

பெண்கள் பூமியைப் போன்றவர்கள். அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு பூகம்பமாக வெடித்தாலும், வினாடிகள் கழிந்து மீண்டும் அமைதியான பூமி தேவியாக நிற்பார்கள். உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும், மட்டுப்படுத்தவும் தெரிந்தவர்கள். ரதிதேவி கலைகளை அறிந்திருந்தாலும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கிற நான்கு போர்வைகளைக் கொண்டு மனதின் இச்சைகளை மறைப்பவர்கள். ஆண்களுக்குத்தான் அப்படி ஒன்றும் விதிக்கப்படவில்லையே. அவர்கள்

https://telegram.me/aedahamlibrary

வானத்தைப் போன்றவர்கள் அன்றோ?

மன்மத மோகம் மப்பும் மந்தாரமுமாக சிந்தனைச் சூரியனை மறைத்துவிட்டால், காம மேகங்கள் அவர்களை சூழ்ந்து, பின்னர், இடி இடித்து மழையெனப் பெய்து விட வேண்டும் என்கிற துடிப்புடையவர்கள் அன்றோ. ஆசானின் நல்வார்த்தைகள் சந்திரனின் சிந்தையினில் புகவே இல்லை.

“ஆசானே! எனக்கு ஹெலீனா வேண்டும்! நீங்கள் அன்றி வேறு எவராலும் எனது ஆசையை நிறைவேற்ற முடியாது. தாங்கள் வழிபடும் அத்திமலைத்தேவனை வேண்டி, அவளை எனது பட்டத்து ராணியாக அமர்த்துங்கள்!" - சந்திரன் கூறினான்.

"உனது நிறத்தைப் பார்த்து துர்தராவே உன்னை எள்ளி நகையாடினாள். பெண்களுக்கு கர்வம் தருவது இரண்டு விஷயங்கள். ஒன்று கூந்தலின் நீளம், மற்றொன்று தேகத்தின் வண்ணம். பளிங்கைப் போன்ற அவள், உனது கங்கைக்கரை மண்ணாய்க் கருத்திருக்கும் கரும்பாறை போன்ற தேகத்தை எங்ஙனம் ஏற்பாள்?" கவுடில்யன் கேட்டான்.

“காதலுக்கு பேதம் இல்லை ராஜதந்திரியாரே!” - சந்திரன் கூறினான்.

“காதலுக்கு பேதம் இல்லை என்று கூறி நடைபெறும் திருமணங்களால் தான் பல குடும்பங்களும், நாடுகளும் சீரழிந்து போயின. காதல் ஒரு சாமான்யனின் வாழ்க்கையில் புகலாம். ஆனால் ஒரு மன்னன் எப்போதும் கண்டதும் காதலில் விழக்கூடாது. காதலிப்பதற்கு முன் எச்சரிக்கை அவசியம்... காதல் என்கிற பெயரில் எதிரிகள் சூழ்ச்சியினை விதைக்கலாம்!” -- சாணக்கியன் கூறினான்.

"காதல் மனதைப் பொறுத்தது. காமம் தேகத்தைப் பொறுத்தது. இவை தோன்றும் போது, நாடுகளின் எல்லை, கலாச்சாரம், நாகரீகம், எல்லாமே இரண்டாம்பட்சமாகி விடுகிறன. ஆசானே. இப்போது என்னுடைய மனநிலையைக் கூறி விடுகிறேன். ஹெலீனாவைத் திருமணம் செய்வதற்கு எனது மன்னர் பதவி தடையாக இருந்தால், நான் மன்னர் பதவியை விட்டு நீங்கி விடுகிறேன். நீங்கள் தானநந்தாவையே மீண்டும் மன்னனாக்கி விடுங்கள்!” - சந்திரன் பிடிவாதமாகக் கூறினான்.

சாணக்கியனின் மனம் திடுக்கிட்டது. சந்திரனின் சிந்தையை யவன கிரகணம் பிடிக்கத்துவங்கி விட்டது என்பதைப் புரிந்துகொண்டான்.

https://telegram.me/aedahamlibrary

"சரி சந்திரா! உன் ஆசையைக் கெடுப்பானேன்! - நானே செலுகஸ் நிகேதனிடம் சென்று பேசிப் பார்க்கிறேன்!" - கவுடில்யன் கூறினான்.

அன்றே காந்தாரத்திற்குப் புறப்பட்டான், சாணக்கியன். காஞ்சி வனம் என்கிற அத்தியூரில் பிறந்து, புலிவேமுவை நட்பாக்கிக் கொண்டு, நந்த மன்னனால் அவமானம் செய்யப்பட்டு, மவுரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கி, இப்போது தனது மவுரிய சீடனுக்காகப் பெண் கேட்டு, யவன அரசனைச் சந்திக்க காந்தாரத்திற்கு பயணம் செய்துகொண்டிருந்தான், சாணக்கியன்.

மறைகளை உச்சரித்துக்கொண்டிருந்த விஷ்ணுகுப்தனின் வாய், கவுடில்யன் என்கிற பல்லாங்குழி பலகை வாயாக மாறி, இப்போது சாணக்கியன் என்கிற பெயரில் ராஜாங்க காரியங்களை உரைத்துக்கொண்டிருக்கிறது. தனது பயணம் வெற்றிகரமாக முடியும் என்று சாணக்கியனுக்குத் தோன்றவில்லை. இருப்பினும், சந்திரகுப்தனின் திருப்திக்காகப் பயணத்தை மேற்கொண்டிருந்தான், சாணக்கியன்.

***

செலுகஸ்சின் வெண்மையான முகம் சினத்தினால் செம்மையடைந்தது.

"எனது கலாச்சாரம் வேறு. சந்திரகுப்தனின் கலாச்சாரம் வேறு! போர்க்களத்தில் இரு கலாச்சாரக் குருதிகளும் கலக்கலாமே தவிர, மஞ்சத்தில் என்றும் கலவாது. சந்திரகுப்தன் எனது மகளை மனதில் நினைக்கிறான் என்பதே எனக்கு அருவருப்பினைத் தருகிறது.!" செலுகஸ் நிகேதன் கூறினான்.

கவுடில்யன் அவனுடன் உரையாடிக் கொண்டிருந்தாலும், அவனது சிந்தை, செலுகஸ்சின் உடற்கூற்றின் மொழி, அவனது சிந்திக்கும் தன்மை, அவனது படை பலம், போன்றவற்றை படம்பிடித்துக்கொண்டிருந்தது. செலுகஸ் தொடர்ந்து சாணக்கியனின் வேண்டுதலை நிராகரித்துக்கொண்டிருக்க, வேண்டியதகவல்களை தான் திரட்டிக்கொண்டு விட்டோம் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்ட பிறகு, சாணக்கியன் மவுரியம் புறப்பட்டு விட்டான், மூன்றே மூன்று சொற்களை உதிர்த்துவிட்ட பிறகு.

"போர்க்களத்தில் சந்திப்போம், செலுகஸ்!" - என்கிற மூன்று சொற்கள்

https://telegram.me/aedahamlibrary

தான் அது. போர் முடிந்தது.

யவன அரசன், செலுகஸ் நிகேதன் தோற்றுவிட்டான். இருப்பினும், ஹெலீனாவை சந்திரகுப்தனுக்கு மணம் செய்விக்க அவன் மறுத்துவிட்டான்.

"என்னையும், என் மகளையும் கொன்று விடு.! ஆனால் உன்னை எனது மருமகனாக ஏற்க மாட்டேன்!" --- செலுகஸ் பிடிவாதமாகக் கூற, அப்போது அந்தப்புரத்தில் இருந்து இறங்கி வந்தாள், ஹெலீனா.

"தந்தையே! போரில் வென்றவர் எதைப் பெற விரும்புகிறாரோ அதை நாம் வழங்கியே தீர வேண்டும். அவர் என்னை விரும்புகிறார். நான் அவரை ஏற்கிறேன்.!" --- என்ற ஹெலீனா, சந்திரகுப்தனை நோக்கினாள்.

"நான் உங்களை மணந்து கொள்ளத் தயார். ஆனால் எனக்கு இரண்டு வரங்களைத் தர வேண்டும்!" - சந்திரகுப்தனை நோக்கினாள் ஹெலீனா.

கைகேயி படலம் நடைபெறத் துவங்கிவிட்டது. - சாணக்கியன் நினைத்தான்.

"நீர் பெரிய மன்னன்.! ஆனால் ஒரு காலத்தில் வெறும் காட்டுவாசி என்பதாக எனது தந்தை தெரிவித்தார். உங்கள் ராஜதந்திரியின் மதியூகத்தால்தான் நீங்கள் ஒரு மன்னர். இதுதான் எனது தந்தையின் மனதை உறுத்துகிறது. எனவேதான் அவர் நமது திருமணத்திற்கு தடை சொல்கிறார். எனவேதான் நான் உங்களிடம் இரண்டு வரங்களைக் கேட்கிறேன்.

"முதல் வரம், நீங்கள் இறுதிவரை மன்னராக இருக்க வேண்டும் என்கிற உறுதிமொழியை எனக்குத் தர வேண்டும்.

"இரண்டாவது வரம், உங்களுக்கும், எனக்கும் பிறந்த மகனே மவுரியத்தை ஆள வேண்டும்!"

ஹெலீனா கேட்டவுடன், சற்றே யோசனையுடன் சந்திரகுப்தன் தனது ஆசானை நோக்கினான்.

சாணக்கியனுக்கு மனதினுள் நிம்மதி பரவியது. ஹெலீனா என்ன வரம்

https://telegram.me/aedahamlibrary

கேட்பாளோ என்று சிறு அச்சம் அவன் மனதினுள் புறப்பட்டது. ஆனால் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. கைகேயி படலத்தைத்தான் மீண்டும் அரங்கேற்றுகிறாள். அரியணைக்கு இன்னொரு மகன் பிறந்தால் தான் இப்போதைக்கு போட்டி சந்திரகுப்தனுக்கு பிந்துசாரனைத் தவிர வேறு மகன் பிறக்கப் போவதில்லை என்பதுதானே விதி.

சாணக்கியன் சந்திரகுப்தனை நோக்கி தலையசைக்க, சந்திரகுப்தன் ஹெலீனாவை நோக்கினான். -

“உனது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டேன். உனக்கும் எனக்கும் மகன் பிறந்தால் அவனே மன்னனாகத் திகழ்வான்!” - சந்திரகுப்தன் கூற, அவள் தனது தந்தையை நோக்கினாள்.

"தந்தையே! மவுரிய மன்னனை மணக்க நான் சம்மதிக்கிறேன். எங்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்! " - என்றவள் சாணக்கியனை பார்த்தாள்.

“ராஜதந்திரியே! நீர்தான் எனக்கு சம்ஸ்கிருத மொழி, சனாதன தர்மம் மற்றும் உங்களது இசை ஆகியவற்றை பயில்விக்க வேண்டும். முற்றிலும் ஒரு பாரத அரசியாகத் திகழ்வதில் நான் பெருமை கொள்கிறேன்!” - என்றாள்.

உடனடியாக, ஹெலீனாவிற்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இறங்கினான், சந்திரகுப்தன். தானநந்தா உயிருடன் இருக்கும்வரை என்றாவது ஒரு நாள் மீண்டும் அவன் மன்னனாகி விடுவான் என்கிற அச்சம் அவளுக்கு இருக்கும். மேலும், இவனை எதிர்ப்பவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இன்னும் திகழ்ந்து கொண்டிருந்தான், தானநந்தா. இனியும் அவனை விட்டு வைப்பதில் அர்த்தம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டான், சந்திரன் மகன், மகள், மனைவி மூவருமே மாண்டு போன பிறகு தானநந்தாவுக்கு இன்னும் வாழும் ஆசை இருக்குமா என்ன.? திருமணத்திற்கு முன்பாக, சிறையில் இருந்த தானநந்தா விடுவிக்கப்பட்டான். உடனே நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்கிற நிபந்தனையை விதித்தான் சந்திரகுப்தன்.

விரிஞ்சி காட்டினுள் நுழைந்த தானநந்தா, தட்டுத் தடுமாறி நடந்துகொண்டிருந்த போது, திடீரென்று பின்பாக புரவியின் காலடியோசை ஒலிக்க, திரும்பினான், தானநந்தா.

https://telegram.me/aedahamlibrary

சந்திரகுப்தன்தான் முகத்தில் எவ்வித உணர்வும் இன்றி குதிரையில் இருந்து இறங்கி வந்தான். தானநந்தாவை நோக்கி கரங்குவித்தான்.

"நீர் நந்த மன்னன். எனது மாமனும் கூட. உங்கள் மகன், மகள் இருவரையும் இந்தக் கரத்தால் வெட்டிக் கொன்றேன். அதற்கு முதலில் உங்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். உங்களை அவர்களிடமிருந்து பிரித்ததற்காக வருந்துகிறேன். நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் சென்று சேர்ந்து கொள்ளுங்கள்!” - சற்றும் பதட்டம் இன்றிப் பேசியவன், தனது வாளினை உருவி தானநந்தாவின் தலையைத் துண்டித்தான். நந்தா வம்சத்து கதை அதோடு முடிந்தது.

ஹெலீனா தேவி - சந்திரகுப்தனின் திருமணம் மிகவும் விமரிசையாக நடந்தேறியது. துர்தரா என்கிற பாரத திராட்சைக் கனிரசமே அவனுக்கு அதிக போதையைக் கொடுத்தபோது, யவன தேசத்து திராட்சைக் கனிகளைப் பற்றி கூறவும் வேண்டுமோ. ரதி - மன்மத வேள்வியில் வாத்ஸ்யாயனர் போதிக்க மறந்திருந்த கலைகளையெல்லாம், ஹெலீனா அவனுக்குக் கற்பித்தாள்.

மஞ்சத்தில் அவனது ஆட்டங்களுக்கு ஈடு கொடுத்த ஹெலீனா, மஞ்சத்தை விட்டு இறங்கியதும், அவனை ஆட்டுவிக்கத் துவங்கினாள். பிந்துசாரனை வெறுத்த ஹெலீனா, அவனைத் தனது அரண்மனையில் வைத்துக் கொள்ளவும் அவள் விரும்பவில்லை. அமரேந்திரியின் பொறுப்பில் பிந்துசாரன் தனி மாளிகை ஒன்றில் வளர்ந்து வர, பிந்துசாரனைச் சென்று பார்க்கத் துடித்த சந்திரகுப்தனை தனது கட்டுப்பாட்டினில் கொண்டுவந்த ஹெலீனா அவன் மகனைச் சென்று பார்ப்பதற்கும் தடை விதித்தாள்.

ஒரு நாள் விடியற்காலை, சாணக்கியன் நீராடி, சந்தியா தேவதையை ஆராதனை செய்துகொண்டிருந்த நேரம், அரண்மனையிலிருந்து ஒரு காவலன் வந்து நின்றான். அவனை நோக்கி நடந்தான் சாணக்கியன்.

“ராஜமாதா அமரேந்திரி தேவியார் காலமானார்!” -- காவலன் வந்து கூற, சாணக்கியன் ராஜமாதாவின் மாளிகைக்குச் சென்றான்.

சந்திரகுப்தன் தனது தாயின் மரணத்திற்கு மனைவி ஹெலீனாவுடன் வந்திருந்தான்.

சாணக்கியன் ஹெலீனாவைப் பொருட்படுத்தாமல் சந்திரகுப்தனை

https://telegram.me/aedahamlibrary

நோக்கி நடந்தார்.

“உன் ஆறு வயது பாலகன் பிந்துசாரனை என்ன செய்யப் போகிறாய். அவனை கவனித்து வந்த உனது தாயும் மரணம் அடைந்து விட்டாளே!” - சாணக்கியன் கேட்டான்.

அவருக்கு தக்க பதிலைச் சொல்ல இயலாமல் மனைவி ஹெலீனாவை நோக்கினான் சந்திரகுப்தன்.

"எனது அரண்மனைக்குத்தான் அவனை அழைத்துச் செல்ல வேண்டும்...!” என்று கூற வந்தவன் அவள் தனது பூனைக் கண்களால் அவனை உறுத்துப்பார்க்க, சந்திரனின் வாயில் இருந்து புறப்பட்ட வார்த்தைகள் அப்படியே காற்றில் உருகி மறைந்தன.

சந்திரகுப்தனின் நிலைமையை யூகித்த சாணக்கியன் அவனிடம் ஒரு வேண்டுகோளினை வைத்தான்.

"சந்திரா! உன் அனுமதியோடு, பிந்துசாரனை எனது மாளிகையில் வளர்க்க விரும்புகிறேன். கல்வி, போர்க்கலை அனைத்தையும் நான் அவனுக்கு போதிக்கிறேன். எனக்கும் வாழ்க்கையில் எவ்வித பற்றுதலும் இல்லை. எனது பணியாளன் சவுஜன்யனும், அவனது விதவை சகோதரி உத்ராவும் பிந்துசாரனை கவனித்துக் கொள்வார்கள்!" சாணக்கியன் கூறியதும், சந்திரகுப்தனின் கண்கள் கலங்கின.

"நீங்கள் கூறிய எச்சரிக்கைச் சொற்களை மீறி ஹெலீனாவை மணம் புரிந்தேன். அந்த காமக் கிழத்தியாளின் ஜாலத்தில் மயங்கி, எனது பௌருஷம், ஆண்மை, ஆற்றல், வலிமை எல்லாவற்றையும் இழந்து இப்போது நடைப்பிணமாக நிற்கிறேன். காட்டில் விளையாடிக்கொண்டிருந்த என்னை பெரிய மன்னனாக ஆக்கினீர். இறுதியில் இந்த யவன மோகினியின் கைப்பாவையாக நான் மாறிவிட்டேன்!” - கண்களாலேயே ஆசானிடம் பேசினான், சந்திரன்.

"நல்லது ராஜதந்திரியாரே! உங்கள் விருப்பம் போல் பிந்துசாரனை நீங்களே வளர்த்து வாருங்கள்." - என்றான்.

அன்று மாலை விரிஞ்சி ஆற்றங்கரையில் அமரேந்திரியின் சிதைக்கு தீ மூட்டியபிறகு ஆற்றினில் நீராடி விட்டு அரண்மனைக்குத் திரும்பினான், சந்திரகுப்தன்.

https://telegram.me/aedahamlibrary

அன்றிரவு ---

பலத்த மழை பெய்துகொண்டிருக்க, சாணக்கியனின் மாளிகையில் அழுதுகொண்டிருந்த பிந்துசாரனுக்கு சவுஜன்யனின் சகோதரி உத்ரா, பாலைக் காய்ச்சி புகட்டிக் கொண்டிருந்த நேரம். மழையின் பலத்த சத்தத்திற்கு நடுவே, மாளிகையின் வாயில் கதவினை யாரோ தட்டும் ஒலி, கேட்க, உத்ரா, பால் குவளையை அப்பால் வைத்து விட்டு, உறங்கி விட்ட பிந்துசாரனை மஞ்சத்தில் கிடத்தி விட்டு, மாளிகை வாயிலை நோக்கி நடந்தாள். வியப்புடன் கதவைத் திறந்தவள், வெளியே முக்காடிட்டு நின்ற உருவத்தைக் கண்டு திகைத்தாள். மழையில் தெப்பலாக நனைந்த ஈரத்துடன் உள்ளே வந்தது அந்த உருவம். மன்னன் சந்திரகுப்தன். திடுக்கிட்டுப் போன அவளை தனது உதடுகளின் மீது விரலை வைத்து எச்சரித்தான்.

“யார் நீ?” - சந்திரகுப்தன் கேட்டான்.

“ராஜதந்திரியின் பணியாளன் சவுஜன்யனின் சகோதரி!” - உத்ரா பதில் தந்தாள்.

“ஓ... நீதான் அந்த உத்ராவா! பிந்துசாரனை பத்திரமாகப் பார்த்துக் கொள்!” --- என்றவன் தனது ஆசானின் அறையை நோக்கிச் சென்றான்.

சாணக்கியன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அவரது திருவடிகளை பற்றிக்கொண்டே நின்றான், சந்திரகுப்தன்.

"வனவாசியான என்னை பார் போற்றும் மன்னனாக மாற்றினீர். நீர் ஆராதித்த அந்த அத்திமலைத்தேவனுக்கு முதலில் எனது நன்றியினை தெரிவிக்கிறேன். மூலையில் கிடந்த என்னை சிங்காதனத்தில் அமர்த்தினீர். எனது தாய் யார் என்பதை எனக்கு அறிய வைத்தீர். பெண் மோகத்தில் தங்களுக்கு நான் நஞ்சு கலந்த பானத்தை அளித்தபோது அதனை பொருட்படுத்தாமல் என்னை மன்னித்தீர். எனது மகனை உயிர்ப்பித்தீர். அவனை வளர்க்கும் பொறுப்பினையும் எடுத்துக்கொண்டீர். என் மகனை சீரிய முறையில் வளர்த்து அவனை நீங்கள் மன்னனாக அரியாசனத்தில் அமர்த்துவீர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஹெலீனா என்னும் மாயக்காரியின் வலையில் விழுந்துவிட்ட எனக்கு அதிலிருந்து விடுபட ஒரே ஒரு வழிதான் தோன்றுகிறது. பிபத்தன், துர்தரா மற்றும் தானநந்தாவின் கொலைகளைச் செய்த எனக்கு விமோசனத்தை நாடிச் செல்ல வேண்டிய

https://telegram.me/aedahamlibrary

தருணம் வந்து விட்டது. ஜைன துறவியான ஆதிநாதர் வழி செல்கிறேன். இனி சன்மார்க்கம் எனது வழி. எனது மகனை மன்னனாக்கித் தொடர்ந்து நீங்கள் மவுரியத்தை வாழ வைக்க வேண்டும்" - கண்ணீரால் அவரது பாதத்தை நனைத்த சந்திரகுப்தன் தனது கழுத்தில் சாணக்கியன் அணிவித்திருந்த அந்த தேவ உடும்ப அத்திமர தாயத்தைக் கழற்றி அவரது காலடியில் வைத்துவிட்டு, மகன் பிந்துசாரன் உறங்கிக்கொண்டிருந்த அறைக்குச் சென்று அவனது கன்னத்தில் முத்தம் இட்டான்.

"உத்ரா.! என்றாவது ஒரு நாள், என் மகன் என்னைப் பற்றி கேட்டால், அவனிடம் கூறு. அவனது தந்தை மன்னனாக எந்த சாதனைகளையும் செய்யவில்லை. அவனை ஈன்றது மட்டுமே நான் செய்த சாதனை என்று நான் கர்வத்துடன் கூறியதாகக் கூறு!" என்று கூறிவிட்டு, மாளிகையை விட்டு வெளியேறி, கொட்டும் மழையில் நடந்து சென்று இருளில் மறைந்தான்.

மறுநாள் காலையில் எழுந்ததுமே, தனது காலடியில் கிடந்த அந்த தாயத்தைத் தான் முதலில் நோக்கினான் சாணக்கியன். உத்ரா வந்து நடந்ததை விவரித்ததும், யோசனையில் ஆழ்ந்தான், சாணக்கியன். இனி அவன் சந்திரகுப்தனைக் காணப்போவதில்லை.

கி.மு. 305-இல் யவன (கிரேக்க நாட்டு அரசன் செலுகஸ் நிகேதனை வீழ்த்தி அவன் மகளை திருமணம் செய்து கொண்ட சந்திரகுப்தன், அதன் பிறகு நான்கு வருடங்கள் மட்டுமே மன்னனாகத் திகழ்ந்தான். வாழ்வினை வெறுத்து, சந்நியாசம் பெற தக்ஷிணத்தில் உள்ள சிரவண பெலகோலாவுக்குச் சென்று துறவறம் பெற்றான். கி.மு. 297இல் அங்கேயே மரணம் அடைந்தான்.

**[1]** இப்போதைய பஞ்சாபில் உள்ள ஜீலம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 31. கங்கணத்தில் ஒரு ரகசியம்

கி.மு. 297 ---

மவுரியம் பதினாறு வயது பிந்துசாரனின் பட்டாபிஷேகத்திற்குத் தயாராகிக்கொண்டிருந்தது. விடியலிலேயே அவனை எழுப்பி, மங்கல ஸ்நானம் செய்விக்கப்பட, புதிய ஆடைகளை அணிந்து கொண்டான், பிந்துசாரன். அவனது தந்தை சந்திரகுப்தன் மவுரியன் அணிந்திருந்த தேவ உடும்பர தாயத்தினை அவனது கழுத்தினில் முதல் வேலையாக பிணைத்தான், கவுடில்யன்.

“ஆசானே! இது என்ன?” பிந்துசாரன் சாணக்கியனைக் கேட்டான்.

“நமது மவுரியத்தை உருவாக்கிய விதை இதுதான். நமது சாம்ராஜ்யத்தின் அடித்தளமே இதுதான். இதனை எப்போதும் நீ அணிந்திருக்க வேண்டும். இது உன் கழுத்தினில் உள்ள வரை எவராலும் உன்னை வெற்றிகொள்ள முடியாது!” கவுடில்யன் கூறினான்.

ஒரு முறை நிலைக்கண்ணாடியில் தனது பிம்பத்தைப் பார்த்துக்கொண்டான், பிந்துசாரன். பாலகன் பருவத்தைக் கடந்து யௌவன பருவத்தில் நுழைந்திருந்தான் பிந்துசாரன். ஆட்டு கர்ப்பப்பையில் வளர்ந்து தான் ரட்சிக்கப்பட்ட கதைகளையெல்லாம் இன்னும் அறியாதவன் சற்றே பெண்மை வடிவில் துர்தராவின் சாயலில் இருந்தான். துர்தராவின் மகன் என்பதனை பறைசாற்றும் விதமாக அவனது நெற்றியில் அவள் அருந்திய நஞ்சு சுட்டெரித்த வடு ஒரு கரிய சுடரைப் போன்று மிளிர்ந்துகொண்டிருந்தது.

“இது என்ன ஆசானே, எனது நெற்றியில் மட்டும் இத்தகைய வடு உள்ளதே?” பாலகப் பருவத்திலேயே அவன் சாணக்கியனைக் கேட்டிருந்தான். நடந்ததைக் கூற சாணக்கியன் ஒன்றும் விவேகம் இல்லாதவன் இல்லையே.!

“பிந்துசாரா! மனிதர்களில் ஒரு சிலரே இத்தகைய வடுவினை பெறும் பாக்கியம் பெற்றவர்கள். கூரிய சிந்தை பெற்றவர்களின் தேஜஸ் வெளியேறாமல் இருக்க, இறைவன் ஏற்படுத்தித் தந்த தடுப்புச் சுவர்தான், அந்த வடு!” மிகச் சாதுர்யமாக பதில் தந்திருந்தான், சாணக்கியன். அதனை உண்மை என்று பிந்துசாரனும் நம்பியிருந்தான்.

https://telegram.me/aedahamlibrary

பிந்துசாரனை வளர்த்த உத்ராவிடம் பிந்துசாரனின் பிறப்பு ரகசியத்தை கூறாதே என்று உறுதிமொழி வாங்கியிருந்தான், சாணக்கியன். எனவே தனது பிறப்பின் பின்பாக உள்ள ரகசியங்களை அறியாமலேயே பதினாறு பிராயங்களை எட்டி விட்டிருந்தான், பிந்துசாரன்.

பணிப்பெண்கள் அவனை அலங்கரித்து முடிக்க, டமாரங்களும், சங்கும் முழங்க, கொலு மண்டபத்திற்கு சாணக்கியனுடன் நடந்தான், பிந்துசாரன். சாணக்கியனின் கையால் அவன் சிரசில் மகுடம் வைக்கப்பட்டது. மயில் உருவம் பொறித்த செங்கோலும் அளிக்கப்பட்டது.

“தந்தையின் வழியில் இரண்டாம் மவுரிய அரசனாக நல்லாட்சி தருவேன்!” என்று சாணக்கியன் போதித்திருந்த ஒற்றை வரியை ஒப்புவித்தான், பிந்துசாரன்.

உன் பணி முடிந்தது.! இனி நான் பார்த்துக் கொள்கிறேன் - என்பது போன்று எழுந்தான், சாணக்கியன். ஓரக்கண்களால் அவை நடவடிக்கைகளை வெறுப்புடன் கவனித்துக்கொண்டிருந்த ஹெலீனா தேவியை நோட்டம் விட்டான்.

பிந்துசாரனின் வளர்ப்பினை ஏற்று அவனை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வராதது, தான் செய்த மிகப்பெரிய தவறு என்று சந்திரகுப்தன் காணாமல் போன அன்றுதான் புரிந்துகொண்டாள், ஹெலீனா. தனக்கு ஒரு மகன் பிறப்பான். அவன் மவுரிய சிங்காதனத்தை அலங்கரிப்பான் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தவளுக்கு, சந்திரகுப்தனின் சரித்திரத்தில் இன்னொரு மகன் என்கிற பேச்சுக்கே இடமில்லை என்பதை போக போகப் புரிந்து கொண்டாள். தான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை அறிந்து கொண்டு, சந்திரகுப்தனை சித்திரவதை செய்யத் துவங்கினாள். யவன மனையாளிடம் தனது யௌவனத்தை அடகு வைத்தான், சந்திரகுப்தன் விளைவு, தேயும் சந்திரனாக மாறத்துவங்கினான். துறவறத்தை ஏற்று, நிலவு இல்லாத அமாவாஸ்யை தினம் போன்று மவுரியத்தில் தான் இல்லாத நிலையினை அடைந்தான்.

இப்போது ஹெலீனா புதிய திட்டம் ஒன்றைத் தீட்டிக்கொண்டிருந்தாள். அவள் தந்தை செலுகஸ் நிகேட்டர் கி.மு.285- இல் கொலைசெய்யப்பட, அவன் மகனும், ஹெலீனாவின் தம்பியுமான அன்தியோதஸ் சோதர் கிரேக்க மன்னனாகப் பதவி ஏற்றிருந்தான். அவனது மகள் அபாமினாவை பிந்துசாரனுக்கு மணமுடிக்க நினைத்திருந்தாள்,

https://telegram.me/aedahamlibrary

ஹெலீனா, பிந்துசாரன் மீது திடீர் பாசம் பொழிந்து, அவனுக்கு கிரேக்க சரித்திரங்களைக் கூறுவாள். அலெக்சாண்டரின் தளபதியாக பணியாற்றிய தனது தந்தை செலுகஸ் நிகேதரின் வீர பிரதாபங்களை அளந்து விடுவாள். எப்படியும் பிந்துசாரனுக்கு அபாமினாவை திருமணம் செய்து வைத்து, மவுரியத்தின் அதிகாரத்தை தனது வசம் வைத்திருக்கத் திட்டமிட்டிருந்தாள், ஹெலீனா.

ஆனால் ---

அவளது திட்டங்கள் அனைத்தையும் தனது சுவாசக்காற்றினால் ஊதித் தள்ளிக்கொண்டு இருந்தான், சாணக்கியன். சாணக்கியன் இருக்கும்வரை தனது திட்டம் பலிக்காது என்பதைப் புரிந்துகொண்டுவிட்ட ஹெலீனா, பிந்துசாரனின் திருமணத்திற்குப் பிறகு அவனை ஒருகை பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்திருந்தாள்.

தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்றிருந்த சாணக்கியன், ஹெலீனாவை நோக்கித் எழுந்து அசைத்துவிட்டு, பேசத்துவங்கினான்.

“ராஜமாதா, ஹெலீனா தேவியார் நமது மன்னரின் மகுடாபிஷேகத்திற்கு வராமல் இருந்து விடுவார் என்றே நினைத்திருந்தேன். ஆனால், பெரிய மனதுடன் இங்கே வந்திருந்து மன்னரை வாழ்த்தி உள்ளார். எனவே, அவர் நம்முடன் இருக்கும் போதே, ஒரு முக்கிய அறிவிப்பினை வெளியிட விழைகிறேன்.

"மன்னர் பிந்துசாரன் பதினாறு பிராயங்களை அடைந்து விட்டார். மகுடம் தரித்து செங்கோலும் ஏந்தி விட்டார். கையோடு மற்றொரு கடமையையும் முடித்து விடலாம் என்று இருக்கிறேன். எனக்கு வயோதிகம் அதிகமாகி விட்டது. முன்பு போன்று என்னால் சிந்திக்க முடியவில்லை. சிந்தனை நல்ல நிலையில் இருக்கும் போதே நல்ல காரியங்களை முடித்து விட வேண்டும்.

"மன்னரை மகுடம், செங்கோல் அலங்கரிக்கின்றன. அருகே ஒரு பட்டத்து அரசியும் அமர்ந்து விட்டால், அரசி மன்னனைப் பார்த்துக்கொள்ள, மன்னன் ராஜாங்கத்தைப் பார்த்துக்கொள்வான். எனவே. நமது மன்னருக்கு ஏற்ற மனைவியாக காஷ்மீரத்து இளவரசி சுபத்ராங்கியை மணமுடிக்க நிச்சயித்திருக்கிறேன்.!" - சாணக்கியன் கூறியதுமே, ஹெலீனா கோபத்துடன் எழுந்தாள்.

https://telegram.me/aedahamlibrary

“திருமணத்திற்கு இப்போது என்ன அவசரம்? இப்போதுதானே பட்டாபிஷேகம் முடிந்தது.!” ஹெலீனா கேட்டாள்.

"பாரத கலாச்சாரப்படி இல்லாள் இல்லாமல் ஒரு மன்னன் இருக்கக்கூடாது. எனவே பிந்துசாரனுக்கு இப்போது திருமணம் அவசியமாகிறது!" சாணக்கியன் அமைதியாகச் சொன்னான்.

"அப்படியென்றால் எனது தம்பி மகள் அபாமினா இருக்கிறாள். அவளைத்தான் பிந்துவுக்கு நான் மணமுடிக்க எண்ணியிருக்கிறேன்!” ஹெலீனா சளைக்கவில்லை.

"ஏன்... ராஜமாதா.? தங்களது கணவர் சந்திரகுப்தரை சந்நியாசத்திற்கு தள்ளியது போன்று, உமது மகனையும் சந்நியாசத்தில் தள்ள நினைக்கின்றீர்களா?” சாணக்கியன் கூறியதும் வாயடைத்துப் போனாள், ஹெலீனா.

"வரும் வளர்பிறையில், சுபத்ராங்கிக்கும், பிந்துசாரனுக்கும் திருமணம். இப்போது மன்னரை வாழ்த்தி விட்டு சபை கலையலாம்!” சாணக்கியன் கூற, ஹெலீனா தோல்வியால் துவண்டாள். அதனை மறைக்க இதழைக் கடித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

***

மிருணாளினியை நினைவு இருக்கின்றதா? சந்திரகுப்தன் துர்தராவை சிறை வைத்து, அவள் யாருடனும் உறவாடி சதி செய்யக்கூடாது என்று ஊமை பெண் ஒருத்தியை அவளுக்குத் தாதியாய் நியமித்திருந்தானே. அந்த மிருணாளினியின் வயது எண்பதைக் கடந்து விட்டிருந்தது. வாய் பேசாதவர்களுக்கு ஆயுள் நீளும் என்பதை உறுதி செய்யும் விதமாக, அந்த எண்பது வயதிலும் அவளது புலன்கள் இன்னும் கூர்மையாகத் தான் இருந்தன. பிந்துசாரன், சுபத்ராங்கி திருமணம் முடிந்து பொதுமக்களுக்கு அவர்கள் தானங்களைச் செய்யப் போவதாக அறிவிப்பு வந்ததும், அவள் சுறுசுறுப்பு அடைந்தாள். துர்தரா இவளிடம் முக்கியமான பொறுப்பு ஒன்றைத் தந்திருந்தாள். துர்தரா கொலை செய்யப்படுவதற்கு முன் அன்று காலையில் இவளை அவசரமாக அழைத்திருந்தாள்.

“எனது பிரசவ நேரம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. வனவாசியை மணப்பேன் என்கிற ஜோதிடக்குறிப்பு மெய்ப்பட்டுப் போனது.

https://telegram.me/aedahamlibrary

இப்போது பிள்ளையை பெறுவதற்கு முன் நான் மடிவேன் என்கிற கூற்று ஒன்று உள்ளது. அதன்படி நான் மறைந்துவிடுவேனோ என்று அச்சமாக உள்ளது.

ஒரு வேளை, நான் அப்படி மரணம் அடைந்து விட்டால், எனது மகனிடம் பேசும் வாய்ப்பே எனக்கு இல்லாமல் போய்விடும். நான் உனக்கு ஒரு பொறுப்பினை தருகிறேன். இந்த கங்கணம் எனது தாய் எனக்கு பரிசளித்தது. யாளி முகத்துடன் உள்ள இந்த கங்கணத்தின் உள்ளே ஒரு வெண்பட்டுத் துணியில், எனது மகனுக்குச் சேதி ஒன்று வரைந்திருக்கிறேன். தக்க பருவத்தில் அவன் அதை வாசிக்க வேண்டும். அவன் பாலகனாக இருக்கும்போது அவனிடம் இந்த ஓலையைக் கொடுத்து விடாதே. அவனது திருமணம் முடிந்தவுடன் அவனது மனையாளிடம் இதனைக் கொடு. அவள் எனது மகனுக்கு உண்மையை புரிய வைப்பாள்...!” என்று கூறி மிருணாளினியின் வசம் அந்த கங்கணத்தைக் கொடுத்திருந்தாள், துர்தரா.

அந்த கங்கணத்தை தனது பாக்கு அடைப்பைப் பெட்டியினில் பத்திரப்படுத்தியிருந்தாள், மிருணாளினி. தான மண்டபத்திற்குச் சென்று தானம் வாங்குவது போல் அந்த கங்கணத்தை திருமணத் தம்பதியினரிடம் பரிசாகத் தந்து விட வேண்டும்.

தீர்மானித்த மிருணாளினி, ஒரு முறை கங்கணத்தை கையில் எடுத்துப் பார்த்தாள். மிகவும் கனமாகவும், பருமனாகவும் காணப்பட்ட அந்த கங்கணத்தின் இரு யாளி முகங்களும் முத்தம் இடுவது போன்று அமைக்கப்பட்டிருந்தன. இரு யாளி முகங்களையும் ஒருங்கிணைக்கும் பகுதியினில் ஒரு திருகு முடுக்கப்பட்டிருந்தது. அந்தத் திருகு இரு முகங்களையும் இணைப்பதற்கும், பிரிப்பதற்கும் அமைக்கப்பட்ட திருகு. கரத்தில் அந்த கங்கணத்தை அணிவிக்கவேண்டும் என்கிறபோது, அந்தத் திருகினை உபயோகித்து, யாளி முகங்களைப் பிரித்து, அணிந்து கொண்டு, பிறகு மீண்டும் முடுக்கி விட வேண்டும் போலும். அந்தத் திருகின் அருகிலேயே மற்றொரு திருகு காணப்பட்டது. அதனை திருகிப் பார்த்தாள், மிருணாளினி. பருமனான அந்த கங்கணம் இரண்டு கூறாகப் பிரிய, உள்ளே ஒரு வெண்பட்டுத் துணி பத்திரப்படுத்தப்பட்டு இருந்தது.

புறாவின் இறகினில் வெண்பட்டு ஓலையினை அனுப்புவது போன்று, ரகசியங்களைப் பாதுகாக்க, இத்தகைய ஆபரணங்களை உபயோகம் செய்வார்கள் என்பதைப் புரிந்து கொண்டாள், மிருணாளினி.

https://telegram.me/aedahamlibrary

அரண்மனை கண்ணாடி மாளிகையில்தான் தானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருமணத் தம்பதிகள் கண்ணாடி மாளிகையின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நிற்க, மக்கள் வரிசையினில் சென்று அவர்களை வாழ்த்தி தானம் பெற்றுக் கொண்டிருந்தனர். தனது மாமன் பிபத்த நந்தனின் தலையை தனது தந்தை துண்டித்தது அந்த கண்ணாடி மாளிகையில் தான் என்பதை அறியாமல், மக்களை வணங்கி அவர்களுக்கு தங்க நாணயங்களை அள்ளித் தந்துகொண்டிருந்தான், பிந்துசாரன். அவனது குடும்பக் கதையைத் தாங்கிய கங்கணத்தை அடைப்பிலிருந்து எடுத்து தனது இடைச் சுருக்குப் பையினில் பதுக்கியிருந்தாள், மிருணாளினி. தனது வாய்ப்புக்காகக் காத்திருந்தவள், தொலைவில் இருந்தே அரச தம்பதியரை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள். துர்தராவே ஆண் உருவில் உயிர்பெற்று வந்ததைப் போன்று தோன்றியது, பிந்துசாரன் நின்றிருந்த விதம்.

தனது குடும்ப ரகசியம் மெதுவாக ஊர்ந்து தன்னை நோக்கி வருவதை அறியாமல் பிந்துசாரன் தானம் அளித்தபடி நின்றான். சாணக்கியன் தான மண்டபத்தில் இல்லாதது மிருணாளினிக்குச் சாதகமாக இருந்தது.

தனது வாய்ப்பு வந்ததும், இடுப்பில் இருந்த சுருக்குப் பையினை உருவினாள். அவள் அதனை உருவிய விதம், மறைத்திருந்த கத்தி ஒன்றை அவள் உருவுவதைப் போன்று தோன்ற, அருகே நின்றிருந்த காவலர்கள், எச்சரிக்கை உணர்வுடன் முன்னே, வர, அவள் கையில் ஊசலாடிய பையினைக் கண்டதும், சற்றே நிம்மதியுடன் பின் வாங்கினர்.

"அரசே! உங்கள் தாய் துர்தராதேவியின் அந்தரங்கச் சேடி நான். தங்களை கர்ப்பம் தரித்தபோது நான்தான் அவருக்கு பத்திய உணவைப் புகட்டுவேன்!” என்று மிருணாளினி சமிக்ஞையில் சொன்னதும், அவளை வாஞ்சையுடன் நோக்கினான்.

"உங்களைக் கண்டதும், எனது தாயைக் கண்டது போன்று தோன்றுகிறது. தங்களுக்கு என்ன வேண்டும் என்று கேளுங்கள், தருகிறேன். தானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்!” - பிந்துசாரன் கூறினான். தொடர்ந்து சமிக்ஞையில்தான் பேசினாள், மிருணாளினி.

“உனது பாட்டன் தானநந்தாவின் கையினால் தானம் பெற்றவள் நான். தானத்திற்கு பெயர் போனது நந்த வம்சம். அத்தகைய நந்த வம்சத்தை

https://telegram.me/aedahamlibrary

வீழ்த்தி சூழ்ச்சியால் மவுரியம் தோற்றுவிக்கப்பட்டது. அந்தக் கதையை உனது தாய் கைப்பட மடலாக எழுதி தனது கங்கண வளையலில் வைத்திருக்கிறாள். அதை உனது திருமணத்தன்று உனது மனையாளிடம் கொடுக்க வேண்டும் என்பது துர்தரா தேவியின் உத்தரவு. அதை ஒப்படைக்கவே நான் இங்கே வந்துள்ளேன். தானம் பெற அல்ல!" என்று கைகளை அசைத்துப் புரிய வைத்தவள் அந்தச் சுருக்குப் பையை சுபத்ராங்கியிடம் நீட்டினாள்.

சுபத்ராங்கிக்கு மட்டும் புரியும்படியாக சைகை காட்டினாள். "பெண்ணே! எப்போது ஒரு மன்னனை கணவனாகக் கொண்டு விட்டாயோ, அவனை மட்டுமல்ல, அந்த நாட்டுக்கும் நீதான் பொறுப்பு. உனது கணவனையாவது சூழ்ச்சிகளில் இருந்து காப்பாற்று. கங்கணத்தின் சிறு குமிழை முடுக்கினால், சரித்திரம் பேசும். உண்மைகள் கங்கணத்தின் உள்ளேதான், உறங்குகின்றன. எனது பொறுப்பினை முடித்து விட்டேன்! இனி நிம்மதியாக எனது இறுதி நாட்களுக்குக் காத்திருப்பேன்!" என்றபடி தம்பதியரை பணிந்து விட்டு, அங்கிருந்து வெளியேறினாள், மிருணாளினி.

அன்றிரவு ---

கணவன் உறங்கிய பிறகு, அந்த கங்கணத்தை கையில் எடுத்த சுபத்ரா அதன் சிறு குமிழினைத் திருக, கங்கணம் இரண்டாகப் பிளந்து விரிந்தது. உள்ளே ஒரு பட்டோலை சுருட்டி அதனுள் திணிக்கப்பட்டு இருந்தது. அந்தப் பட்டோலையை கையில் எடுத்தாள், சுபத்ரா. அதனை விரித்தபோது நீளமாக ஊசலாடியது.

"பிரிய மகனே!

மடல் பிந்துசாரனை --- பிரிய மகனே --- என்று அழைக்க, ஒருகணம், பார்வையை உறங்கிக் கொண்டிருந்த பிந்துசாரனின் பக்கமாகத் திருப்பினாள், சுபத்ரா... பாவம்! மகனின் பெயர் கூட அறியாமல், துர்தரா தனது மகனுக்கு எழுதிய மடல். தொடர்ந்து மடலை வாசித்தாள்.

பிரிய மகனே,

நீ காணாத தாய், தான் பார்த்திராத மகனுக்கு வரையும் மடல். உனது கதை உனக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. புதிய சரித்திரம் புனையப்பட்டு பழைய சரித்திரங்கள் மறைக்கப்படும் என்பதை நான்

https://telegram.me/aedahamlibrary

அறிவேன். அதனால்தான், எனது கர்ப்பப்பையினையே பட்டோலையாக மாற்றி, எனது குருதியால் எனது மகனுக்கு இந்த மடலை வரைகிறேன். சூழ்ச்சிதான் உனது பாட்டன் தானநந்தா, பாட்டி பத்மாங்கி, மாமன் பிபத்த நந்தன், ஆகியோரின் அவல நிலைக்குக் காரணம். எனது தந்தையும் தாயும் சிறையில், மாமனோ கொலை செய்யப்பட்டான். நானோ உனது தந்தையால் பலவந்தமாக மணமுடிக்கப் பெற்றேன். உனது தந்தையை நான் காட்டுமிராண்டி என்றுதான் இறுதி வரை அழைத்து வந்தேன். அவனும் அவனது ஆசான் அந்த பல்லாங்குழி பலகை வாயனும்தான் நமது நந்த குலத்தை நாசம் செய்தனர். நமது நந்த சாம்ராஜ்யத்தை அழித்து, மவுரியத்தை நிலைநாட்டிட அவன் மிகவும் சக்தி வாய்ந்த தேவ உடும்பர மூலிகையை பிரயோகம் செய்திருக்கிறான். அந்த ரகசியத்தை எப்படியாவது அவனிடம் இருந்து களவாடி அவனை ஒழித்துக் கட்டிவிடு. மீண்டும் நந்த ஆட்சியை நிறுவி, மவுரியத்தின் காட்டுமிராண்டி ஆட்சிக்கு முடிவு கட்டு. நீ நந்த குலத்தின் கற்பகத் தரு. காட்டுமிராண்டி மவுரியத்தின் நிழல் கூட உன் மீது படராமல் பார்த்துக்கொள். இதுவே உன்னை ஈன்ற தாய்க்கு நீ தரும் வரம்.! --- துர்பாக்கியவதி தாய் துர்தரா.

உறங்கும் கணவனை யோசனையுடன் நோக்கினாள், சுபத்ரா. இப்போதுதான் ராஜ்ய பாரத்தையும், சம்சார பாரத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கிறான். இப்போது மனபாரத்தை உண்டுபண்ணக்கூடிய எதையும் அவனது கவனத்திற்கு கொண்டு போக வேண்டாம் என்கிற தீர்மானத்தோடு, மீண்டும் அந்தப் பட்டோலையை கங்கணத்தினுள் திணித்து, குமிழினை முடுக்கி, மறைவாக பத்திரப்படுத்தினாள், சுபத்ரா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 32. சாணக்கியர் வெளியேற்றம்

தனது முன்பாக பணிவுடன் கைகூப்பி நின்ற பிந்துசாரனின் மூன்று மகன்களையும் நோக்கினார், சாணக்கியர். சுசிமா, அசோகன், விதசோகன் மூவரும் ஆசானின் அடுத்த உத்தரவுக்காகக் காத்திருந்தனர். அரண்மனை நந்தவனத்தில் அவர்களுக்கு தான் போதித்த கல்வியை அவர்கள் எவ்வளவு தூரம் கற்றறிந்து கொண்டுள்ளனர், என்பதை சோதிக்கவே, சில போட்டிகளை அறிவித்திருந்தார், சாணக்கியர்.

தாதி ஒருத்தியை நோக்கி சாணக்கியர் தலையசைக்க அவள் ஒரு தட்டினில் இனிய தின்பண்டங்களுடன் சற்று தொலைவில் இருந்த மகிழ மரத்தின் கீழ் நின்றாள். மற்றொரு பணியாளனை நோக்கி சாணக்கியர் கண்ணசைக்க, அவன் ஒரு தட்டில் சிறிய வாள், கத்தி, கேடயம் ஆகியவற்றை ஏந்தி அந்த தாதியின் அருகே சென்று நின்றான். கடைசியாக, தன்னை நோக்கி ராஜதந்திரி தலையசைத்ததும் வேதியர் ஒருவர், தான் ஏந்தியிருந்த தட்டு நிறைய ஓலைச் சுவடிகளுடன் மரத்தின் கீழ் நின்றிருந்த தாதியின் மறுபக்கம் சென்று நின்றார்.

சாணக்கியன் பிந்துசாரனின் மூன்று குழந்தைகளையும் அரவணைத்தபடி நின்றிருந்தார். எட்டு வயது சுசிமா, ஆறு வயது அசோகன், மற்றும் நான்கு வயது விதசோகன் மூவரிடமும், தொலைவில் மகிழ மரத்தின் கீழே நின்றிருந்த மூவரையும் சுட்டிக் காட்டினார்.

“இளவரசர்களே! அதோ... அந்த மகிழ மரத்தின் கீழ் மூன்று பேர் உங்களுக்கு விருப்பமான பொருட்களுடன் காத்திருக்கின்றனர். யாருக்கு, எது வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள்.!” --- அவர்களை அந்த மரத்தை நோக்கி உந்தித்தள்ளினார், சாணக்கியர்.

மூன்று குழந்தைகளும் அந்த மரத்தை நோக்கி நகர்ந்தன. பிந்துசாரனிடம் சந்திரகுப்தனிடம் இருந்த அந்த அரசியல் கனல் காணப்படவில்லை. ஏதோ சந்திரகுப்தனுக்கு மகனாகப் பிறந்து விட்டோம், என்பதனால் மன்னனாக இருக்கிறோம் என்பது போன்று அரியணையில் அமர்ந்திருந்தானே தவிர, தக்ஷ ஷீலத்திலும், கலிங்கத்திலும் பிரச்சனைகள் தலைதூக்க அதை அடக்க எண்ணாமல், அரண்மனை சுகவாசத்தை விட்டு வெளியேறாமல் நாட்களைக் கழிக்கின்றான். அவனது மகன்களும் அங்ஙனம் இருக்கக்கூடாது என்பதற்காக, அந்த

https://telegram.me/aedahamlibrary

மூன்று குழந்தைகளில், எவன் அரசியல் கனலைத் தன்னுள் கொண்டிருக்கிறான் என்பதை அறியவே இந்தச் சிறு சோதனை.

சுசிமா, அசோகன், விதசோகன், மூவருமே அந்த மகிழ மரத்தை நோக்கி நடந்தனர். தொலைவில் வரும்போதே இனிப்பு தின்பண்டங்களின் வாசம் சுசிமாவை மயக்க, அவனது கண்கள் மற்ற இருவரின் தட்டுகளில் இருந்த பொருட்களைக் காண மறுத்தன. அவனது கண்கள் அந்த அழகிய தாதியை நோக்கி நிலைகுத்தி இருந்தன. நேராகக் சென்று அவளது தட்டில் இருந்த தின்பண்டம் ஒன்றை எடுத்துக் கடிக்கத் துவங்கினான், சுசிமா, பிந்துசாரனின் பட்டத்து இளவரசன்.

விதசோகன் கடைமகனாக இருந்தாலும் அவனுக்கு அறிவுப்பசி அதிகம் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம், நேராக சுவடிகளைத் தாங்கி நின்ற வேதியரை நோக்கிச் சென்றான்.

அசோகன் மட்டும் அந்த மரத்தை நோக்கிக் கிளம்பும் போதே தனக்கு என்ன தேவை என்பதை தீர்மானித்தவன் போன்று நேராக, வாளையும், கத்தியையும் ஏந்தியிருந்த வீரனை நோக்கிச் சென்றான். தட்டினில் வைக்கப்பட்டிருந்த குறுவாளை எடுத்துச் சுழற்றத் தொடங்கினான், அசோகன்.

"அதோ, மவுரியத்தை காக்கப்போகும் ரட்சகன்!" தனக்குள் முணுமுணுத்த சாணக்கியர் அருகிலிருந்த தாதி ஊர்மிளையை நோக்கினார்.

"இளவரசர்களை மீண்டும் அவர்களது ஜாகைக்கு அழைத்துச் செல், ஊர்மிளா! அவர்களின் பொறுப்பாளர் சமந்தகரிடம், அசோகனை மற்ற இளவரசர்களுடன் தங்க வைக்காமல், தனியொரு அறையில் தங்க வைக்கும்படி, நான் சொன்னதாக, சொல்!” - ஊர்மிளையிடம் அதிகாரமாகக் கூறி விட்டு, அவளது கைகூப்பு செய்கையை அலட்சியம் செய்தபடி பிந்துசாரனின் அந்தப்புரத்தை நோக்கி நடந்தார், சாணக்கியர்.

கலிங்கத்தில் மவுரியத்திற்கு எதிராகப் படை திரட்டப்படுவதாக சேதி வர, மன்னன் எவ்வித பரபரப்பும் இன்றி இருக்கிறானே, என்கிற ஆதங்கம் மீண்டும் தலைதூக்க, அவனுக்கு இன்னொரு சுற்று புத்தி புகட்ட வேண்டும் என்கிற தீர்மானத்துடன் அவனது அந்தப்புரத்தினுள் நுழைந்தார். பிந்துசாரன் சாணக்கியர் வளர்த்த பிள்ளை என்பதால்,

https://telegram.me/aedahamlibrary

அவருக்கு மட்டும் அந்த அரண்மனையில் எல்லா உரிமைகளும் இருந்தன.

கணவன் பிந்துசாரனின் தேகத்தில் தைலத்தை ஊற்றி அனல் பறக்கத் தேய்த்துக் கொண்டிருந்தாள், சுபத்ராங்கி. போர்வாளில் எண்ணையை ஊற்றி அதனை மினுமினுக்கும்படி செய்ய வேண்டியவன், தேகத்தை மினுமினுக்கச் செய்கின்றான். துர்தராவைப் போன்றோ, ஹெலீனாவைப் போன்றோ பிந்துவுக்கு மனைவி அமையக் கூடாது என்று பார்த்துப் பார்த்து தேர்ந்தெடுத்து ஒரு குணவதியை அரசியாக்கியதன் பலன், அவள் பதி சேவையே பரமன் சேவை என்பதே போன்று, தனது பணிவிடைகளால், பிந்துசாரனை முழு சோம்பேறியாக மாற்றி விட்டிருந்தாள். தனது மலர்க் கரங்களால் அவனது தேகத்தைத் தேய்க்க, அதனால் கிறங்கிப் போய் கண்களை மூடி இருந்தான், மன்னன்.

திரண்ட வெண்ணையும், பசுநெய்யும் அளவுக்கு அதிகமாக உண்டு, பிந்துசாரனின் தேகம் கொழுத்து, ஒரு வெள்ளைப் பன்றியை ஒத்திருந்தது. மன்னருக்கே உரிய முறுக்கேறிய நரம்புகளும், திரண்ட புஜபலமும், தெறித்து விழப் போகின்றனவோ என்னும் அச்சத்தினை ஏற்படுத்தும் வண்ணம் துடிக்கும் தசைகளும் இல்லாமல், வெண்ணை சாற்றப்பட்ட அனுமன் சிலையைப் போன்று அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்ததுமே மனதில் எழுந்த அசூயையை மறைத்த வண்ணம், அவன் முன்பாக நின்றார், சாணக்கியர்.

“பிந்துசாரா! நெற்றியில் தழும்பு இருப்பதில் தவறில்லை. ஆனால் வீரமான இதயத்தில் தழும்பு ஏற்படக்கூடாது. இது என்ன.? அமர்ந்திருக்கும் அந்தப்புர மஞ்சத்தை விட்டு நீங்க மறுக்கிறாய்? அந்தப்புர மஞ்சத்தில் அமர்ந்திருப்பது ஒரு மன்னனுக்கு இழுக்கு அல்லவா?

"சுபத்ரா! இது என்ன! உனது கணவனை ஆராதிக்கும் மூர்த்தியாகவே மாற்றி விட்டாய். எண்ணெய் நீராட்டமும், சுகந்த புகை நுகருதலும், அறுசுவை உணவும், உனது கணவனின் தேகத்திற்கு மெருகேற்றலாம். ஆனால் மன்னனாகிய அவனது புகழுக்கு இழுக்கைத் தேடித் தருவதை நீ உணரவில்லையா.?

“பிந்து சாரா! கலிங்கம் கொதிக்கிறது. நீ இங்கே உன் தேகத்தின் வெப்பத்தைக் குறைக்க எண்ணெய்க் குளியலை செய்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருக்கிறாய். கலிங்கத்தின் வெப்பத்தை அல்லவா நீ குறைக்க வேண்டும்? நான் உன் மகன்களுக்கு வைத்த சோதனையில் உன் இரண்டாவது மகன் அசோகன்தான் வெற்றி பெற்றான். உன்னிடம் இல்லாத அந்தக் கனல் அவனிடம் கொழுந்து விட்டெரிகிறது.!" - சற்று காட்டமாகவே சொன்னார் சாணக்கியன்.

சுபத்ராவை ஒரு முறை நோக்கிவிட்டு, சாணக்கியனைப் பார்த்தான், பிந்துசாரன்.

"உங்களுடைய ஆதங்கம் புரிகிறது. ஒரு வகையில், எல்லாவற்றையும் தாங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்கிற அலட்சியம்தான் எனது இந்த நிலைக்குக் காரணம். இனி இப்படி இருக்க மாட்டேன். இன்றே போர்க்கலைகளை மீண்டும் பயில்கிறேன்!" - பிந்துசாரன் கூறினான்.

"முதலில் உனது தேகச் சக்கரங்களை தீட்டிக் கொள். உனது உடல் இடித்து வைத்த புளிக்கொழுந்தினைப் போன்று உள்ளது. மற்போர் களரிக்குச் சென்று மற்போர் பயிற்சி செய். அப்போதுதான், உன் உடலில் புதைந்திருக்கும் நெய் வேர்வையாக வெளிவந்து, உனது மந்தத்தை ஒழிக்கும். தேகத்தில் அடி விழ விழ, நரம்புகள் சிலிர்த்துக்கொண்டு எழும்!" - சாணக்கியர் அவனிடம் அறிவுரை கூறினார்.

அறிவுரைகள் ஒருவனை திருத்தி அவனை நல்வழிப் படுத்துவதற்காகக் கூறப்படுகின்றன. விஷ்ணுகுப்தன் என்னும் சிறுவனாக காஞ்சி வன அத்தியூரில் பிறந்து, நந்தனைக் கவிழ்த்து, அர்த்த சாத்திரத்தை இயற்றி, மவுரியத்தைத் தோற்றுவித்து, உலகம் போற்றும் ராஜதந்திரியாக வலம் வந்துகொண்டிருந்த சாணக்கியன் வழக்கம்போல்தான் பிந்துசாரனுக்கு அறிவுரைகளை வழங்கிக்கொண்டிருந்தார்.

ஆனால் ---

எந்த ஒரு மனிதருக்கும் உச்ச நிலை சாஸ்வதமா என்ன? உச்சத்தில் இருப்பவர்களின் கதையும் ஒரு நாள் முடியத்தானே வேண்டும்.? சாணக்கியனுக்கும் சிரம தசை தோன்ற வேண்டும் அல்லவா.?

மற்போர் களரியில் சேர்ந்து தேகத்தை சீராக்கிக் கொள் என்று பிந்துசாரனுக்கு அவர் அறிவுரை கூறிய வேளைப் போதில்தான் சனி பெயர்ந்திருக்க வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

அவரது அறிவுரையினை ஏற்று, மற்போர் களரி ஒன்றில் சேர்வதற்கு பிந்துசாரன் தீர்மானித்தான். அதற்கு உரிய இடமாக அவன் தேர்ந்தேடுத்த களரிதான் சாணக்கியனுக்கு சிரம தசை உண்டாகக் காரணம். மன்னன் தேர்ந்தெடுத்த மற்போர் களரியின் தலைவர், சுபந்து. பிபத்த நந்தனின் தோழன் உத்தாலனின் மகன்தான் சுபந்து. தனது தந்தையின் கொலைக்காக இன்னும் வஞ்சம் தீர்க்க நினைத்திருப்பவன். துர்தராவின் தோழி மங்கலியின் கணவன் நிருருதனின் சீடன். நிருருதன் இறக்கும் தறுவாயில் தனது களரியை சுபந்துவிற்கு அளித்து விட்டான். சுபந்துவின் சீடனாகத் தான் பிந்துசாரன் மற்போர் பயின்றான்.

மன்னனே தன்னிடம் மற்போர் கற்க வந்ததை எண்ணி இறைவனுக்கு நன்றி தெரிவித்தான், சுபந்து. வழிபடச் சென்ற தெய்வம் அவன் வழியே வந்தது போன்று ஒரு பக்கம் மற்போர் கலைகளின் மூலம், அவனது நரம்புகளைப் புடைக்கச் செய்தான் என்றால், இன்னொரு பக்கம், தனது கொடிய சொற்களால் மன்னனின் உணர்வுகளைக் கொதிக்கச் செய்தான்.

"மன்னா! உங்களுக்கு நீங்கள் பிறந்த கதையே தெரியாதா?” - சுபந்து கேட்டான்.

“தெரியாதே.! எனது தாய் பிரசவத்தின் போது இறந்து விட்டாள் என்று அறிந்திருக்கிறேன்.!” - பிந்துசாரன் கூறினான்.

“அதுதான் இல்லை. உனது பாட்டன் தானநந்தா, மகத அரசன். அவன் மனைவி பத்மாங்கி. அவர்களுக்கு உன் மாமன் பிபத்த நந்தனும், உன் தாய் துர்தராவும் பிறந்தனர். ராஜதந்திரி என்று கூறிக்கொள்ளும் கவுடில்யனைப் பார்த்து உன் தாய் சிறு வயதில் கேலி செய்தாள். அதற்கு அவன் அளித்த தண்டனை பெரியது. காட்டுவாசியான உனது தந்தையை அடிமையாக்கி, தன்னிடம் உள்ள தேவ உடும்பர மூலிகையின் சக்தியால் அவனை மன்னனாக்கி விட்டான். உனது பாட்டியையும், பாட்டனையும் சிறையில் அடைத்தான். அந்தக் காட்டுமிராண்டியைக் கொண்டு உனது மாமனை கொலை செய்தான். உனது தாய் துர்தரா தேவியை பலவந்தமாக அந்தக் காட்டுமிராண்டிக்கு திருமணம் செய்வித்து, உன்னை கர்ப்பத்தில் சுமக்க வைத்தான். கர்ப்பவதியான உனது தாயின் வயிற்றினைப் பிளந்து, அவளை கேவலப்படுத்துவதற்காக உன்னை ஆடுகளின் கர்ப்பப் பையினில் வளர்த்தான். உனது தந்தைக்கு யவன இளவரசி ஹெலீனாவை திருமணம் செய்வித்து, உனது தாயின் பெயரை சரித்திரத்தில் இருந்து

https://telegram.me/aedahamlibrary

மறைத்தான். உன்னையும் தனது அடிமையாக வைத்திருக்கிறான், அந்த பல்லாங்குழி பலகை வாயன். அப்படித்தான் உனது தாய் அவனை அழைத்தாள்.”

சுபந்து அடுக்கிக்கொண்டே போக, உறைந்து போய் நின்றான், பிந்துசாரன்,

எனது வாழ்க்கையின் பின்னால் இவ்வளவு பெரிய சோகக் கதை இருக்கிறதா...?

குழப்பத்துடன் அரண்மனைக்குத் திரும்பியவன், மஞ்சத்தில் வேதனையுடன் சாய்ந்தான். கணவனின் வாடிய முகத்தைக் கண்டு, பதைபதைத்துப் போனாள், சுபத்ராங்கி.

"என்ன நடந்தது, சுவாமி?” --- கவலையுடன் சுபத்ரா கேட்க, சுபந்து கூறியதை ஒன்று விடாமல் கூறினான், பிந்துசாரன்.

சுபத்ரா பதில் கூறவில்லை. தனது போஷணப் பெட்டியில் பதுக்கியிருந்த, மிருணாளினி கொடுத்திருந்த சுருக்குப் பையில் இருந்து அந்த கங்கணத்தை எடுத்தாள். அதன் சிறு குமிழை திருப்ப, கங்கணம் பிளந்து, துர்தரா தனது மகனுக்கு எழுதிய பட்டோலை வெளியே எட்டிப் பார்த்தது. அந்தப் பட்டோலையை தனது கணவனிடம் நீட்டினாள், சுபத்ரா.

"பிரிய மகனே!” --- முதன்முறையாக தனது தாயின் குரல் தன்னை அழைப்பது போன்று உணர்ந்த பிந்து சாரனின் கண்களை நீர் மறித்தது. தட்டுத் தடுமாறி தனது தாயின் மடலை வாசித்தான், பிந்து.

“உனது தேகத்தை சீராக்கிக் கொள்ள மற்போர் பயிற்சி அவசியம். உனது உடலில் உள்ள நெய் வெளியேற்றப்பட வேண்டும்" - என்று கூறியிருந்தார், அல்லவா சாணக்கியர்?

பிந்துசாரனின் உடலில் அதிகமாக நெய் இருந்த காரணத்தினாலோ என்னவோ, அவனது கோபத்தீ கொழுந்து விட்டு எரிந்து தனது ஆசானின் மீது கொண்டிருந்த பக்தியை துவேஷமாக மாற்றியது. எவ்வளவு கொடுமைகளைப் புரிந்துவிட்டு, ஒன்றுமே அறியாதவர் போன்று இவனுக்கு அறிவுரைகளை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார்.

https://telegram.me/aedahamlibrary

பிந்துசாரனின் முதல் அஸ்திரமாக வந்த அறிவிப்பு இதுதான்.

“இனி சாணக்கியர் அரண்மனைக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது!”

இந்த அறிவிப்பு சாணக்கியரின் செவிகளை எட்டியபோது அவர் கலங்கவில்லை. ஆனால், தனது அந்தரங்க ஆலோசகனாக, உத்தாலன் மகன் சுபந்துவை நியமித்திருக்கிறான், பிந்துசாரன் என்பதை அறிந்ததும், அதிர்ந்து போனார், சாணக்கியன். இனி மவுரியத்திற்கு தனது சேவை தேவை இருக்காது. மீண்டும் காஞ்சிக்கே திரும்பிவிடலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த போதுதான், அந்த அறிவிப்பு வந்தது.

"மவுரியத்தின் எல்லையை விட்டு, சாணக்கியர், உடனே புறப்பட்டுச் சென்று விட வேண்டும். இனி ஒரு போதும், அவர் மவுரியத்தினுள் கால் பதிக்கக் கூடாது.!” இரண்டே வரிகளில், அர்த்த சாத்திரத்தை எழுதியவரின் கதையினை முடித்து விட்டான் பிந்துசாரன்.

இனி மவுரியத்திற்கு இவரால் பிரயோசனம் இல்லை. சாணக்கியன் வெறுப்புடன் தன்னிடம் இருந்த மிகுதி உடும்பர அத்திமரத்துண்டத்தை தீயினில் எரித்தார்.

சாணக்கியனுக்காக வருந்துபவர் யார் இருக்கிறார்கள்.? தனியொருவனாக காஞ்சியில் இருந்து புறப்பட்டான். தனியொருவனாக இனி காஞ்சிக்குத் திரும்ப வேண்டியது தான். இவனுக்கு பணிவிடை செய்த சவுஜன்யனும், நாகம் தீண்டி மடிந்து விட்டான். அவனது சகோதரி உத்ரா, அரண்மனையில் பிந்துசாரனின் பாதுகாப்பில் தான் இருக்கிறாள். அவளாவது நன்றாக இருக்கட்டும்.

காவலாளிகள் புடை சூழ விரிஞ்சி காட்டின் எல்லையை நோக்கி நடந்தார், சாணக்கியர். அத்தியூரில், பரப்பசுவாமியை சமாளித்தது முதல், எவ்வளவோ சாதனைகளைச் செய்திருக்கிறான். புகழின் உச்சத்தை அடைந்திருக்கிறான். இருப்பினும், வாழ்க்கையில் ஒரு வெறுமை தோன்றி விட்டது. அமைதியாக அத்திமலைத் தேவனை ஆராதித்துக்கொண்டு அத்தியூரிலே ஒரு மூலையில் காலத்தைக் கழித்துக்கொண்டு இருந்து விடலாம் என்கிற தீர்மானத்துடன் தான் கிளம்பியிருந்தான்.

அவனை விட்டுவிட்டு, காவலர்கள் திரும்பி விட்டனர். போகும்போது,

https://telegram.me/aedahamlibrary

ஒருவர் கூட அவனுக்கு வணக்கம் செலுத்தவில்லை. ஒருவன் விழுந்துவிட்டால், அவனை யார் மதிக்கப் போகின்றார்கள்? சிரித்தபடி நடந்தார் சாணக்கியன்.

பொழுது சாய்ந்து விட்டது. இரவை எங்கேயாவது கழிக்க வேண்டும். தொலைவில் ஒரு மலைக்குகை தெரிந்தது. அந்தக் குகையினுள் அடக்கமாக இருக்கும். குளிர் தெரியாது. அங்கேயே இரவைக் கழிப்போம்! என்று எண்ணியபடி குகையை நோக்கி நடந்தார், சாணக்கியர்.

தனது மேலாடையை விரித்துக்கொண்டு குகையின் பாறை ஒன்றில் படுத்து விட்டார். உறக்கம் வர மறுத்தது. தனது பெற்றோர் காஞ்சனகுப்தர் மற்றும் சானேஷ்வரியை நினைத்தார். பெற்றோருடனே நிம்மதியாகக் காலத்தைக் கழித்திருக்கலாம். அரசியல் ஆர்வமும், புகழ் போதையும் தன்னை பெரிய உயரத்திற்கு எடுத்துச்சென்று கீழே கிடாசி விட்டது.

தனது அவல நிலையை எண்ணி குமுறியபடி படுத்திருந்தவரின் செவிகளில் அந்த சத்தம். யாரோ இவர் படுத்திருக்கும் குகையை நோக்கி வர, அந்தக் கால்களின் அடியில் நொறுங்கும், காய்ந்த சருகுகளின் ஒலி. மீண்டும் மீண்டும் அந்த ஒலி கேட்க, ஒன்றிரண்டு பேருக்கு மேல் அந்தக் குகையை நோக்கி வருவதை உணர்ந்து உறங்குவது போன்று கிடந்தார், சாணக்கியர்.

வந்தவன் சுபந்து. உடன் அவனது மற்போர் களரியில் பயிலும் மாணவர்கள்.

தன்னை அவர்கள் தாக்கக் கூடும் என்று எண்ணி அவர் துள்ளி எழ முற்படுவதற்குள், அவர்கள் அவர் மீது தங்கள் கையிலிருந்த கலயத்தைக் கவிழ்த்தனர். சாணக்கியரின் தேகம் முழுவதும் எண்ணெய பரவ, ஒருவன் சட்டென்று தீப்பந்தம் ஒன்றை எடுத்து அவர் மீது வீசினான்.

சாணக்கியரின் தேகம் தீப்பற்றி எரியத் துவங்கியது. "நல்லது சுபந்து. மரண உலகத்திற்கு என தாய் தந்தை போன வழியிலேயே என்னையும் அனுப்புகிறாய். நல்லது!" - என்றபடி அப்படியே கண் மூடி மோன நிலையில் அமர்ந்தார் சாணக்கியர். சாணக்கியரின் தேகம் கொழுந்து விட்டு எரிய, சுபந்துவும், அவனது ஆட்களும் ஓடி மறைந்தனர்.

https://telegram.me/aedahamlibrary

***

"உன் தாய் தொடர்ந்து சாணக்கியரையும், சந்திரகுப்தனையும் அவமானம் செய்தபடி இருந்தார். உனது தந்தை உன் தாயை காதலித்துதான் மணம் புரிந்தார். ஒரு கட்டத்தில், தாயுடன் வாழ்வதற்காக, தனது ஆசானுக்கே நஞ்சினை கலந்தார். அது தெரிந்து ஆசான் அவரை ஒன்றுமே சொல்லவில்லை. உனது பாட்டனின் ஆட்சி அகந்தையினால் அழிந்ததே தவிர சூழ்ச்சியால் இல்லை. வனவாசியாக இருந்த உன் தந்தையை மாபெரும் சக்கரவர்த்தியாக ஆக்கியது சாணக்கியரின் மதியூகமே. இதெல்லாம் தெரியாமல், நீ அவசரப்பட்டு அவரை நாடு கடத்தி விட்டாய். உன் தாயின் மனதில் வஞ்சத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லாத காரணத்தால் இப்படி ஒரு மடலை உனக்கு வரைந்திருக்கிறாள். நீயோ ஒரு மன்னன். நாட்டிற்கு எது தேவை, மக்களுக்கு எது அவசியம் என்று முடிவு எடுக்க வேண்டியவன். இறந்த உனது தாயை திருப்தி செய்ய வேண்டும் என்று மவுரிய மக்களை தண்டித்து விடாதே. உனக்கு அனுபவம் போதாது. சாணக்கியரின் அறிவுரை உனக்கு மிகவும் தேவை. கலிங்கம் கொதித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில், ஆசானை அழைத்து அருகில் வைத்துக் கொள்." - பிந்துசாரனை வளர்த்த உரிமையில், உத்ரா அவனுக்கு அறிவுரை கூற, பிந்துசாரனின் மனதில் தெளிவு பிறந்தது.

சுபந்துவை உடனே அழைத்தான். "தவறு இழைத்து விட்டேன். ஆசானின் சேவை எனக்குத் தேவை. உடனே அவரை திருப்பி அழைத்து வா!" - என்றதும் கள்வனுக்குத் தேள் கொட்டியது போன்று விழித்தான், சுபந்து.

"என்ன இன்னும்... நிற்கிறாய்! ஓடிச்சென்று அவரை தேடிப்பிடித்து அழைத்து வா!" - பிந்து கூற, சுபந்து தலைகுனிந்து நின்றான்.

'சாணக்கியனைக் கொன்று விட்டேன். அவரது உடலுக்கு தீ வைத்து விட்டேன்.!"

சுபந்து கூறியதும், பிந்துசாரனால் கதறத்தான் முடிந்தது.

கதறலின் நடுவே, "யாரங்கே, இந்தக் கொடியவன் சுபந்துவைச் சிறையில் தள்ளுங்கள்!" என்கிற கட்டளையைத்தான் பிறப்பிக்க முடிந்தது. உணர்வு பூர்வமாக செயலாற்றும் தனது கணவனை கவலையுடன் நோக்கினாள், சுபத்ரா.

https://telegram.me/aedahamlibrary

*****

https://telegram.me/aedahamlibrary

# 33. இளவரசன் செய்த கொலை

தாரதம்யா நடம் புரிந்து கொண்டிருந்தாள். இசைவாணர்களின் தாளத்திற்கு ஏற்ப கால்கள் ஆடவும். கைகள் நாட்டிய முத்திரைகளைக் காட்டவும், முகம், பாவங்களை வெளிப்படுத்தவும் செய்தாலும், தாரதம்யாவின் விழிகளில் ஒருவித மருட்சி திரண்டிருந்தது....

பகலில்தான் பிந்துசாரனின் கொலு மண்டபத்தினில் இரு முறை நடனம் ஆடியிருந்தாள் தாரதம்யா. இனி அன்றைய பொழுது மன்னர்களை நடனம் ஆடி சந்தோஷப்படுத்தத் தேவையில்லை. இரவுப் பொழுதை அமைதியாகக் கழிக்கலாம், என்று நினைத்தவள், அமைச்சர் ராதாகுப்தனின் மகனும், தனது காதலனுமான ராஜமித்ராவை தனது மாளிகைக்கு வரச் சொல்லியிருந்தாள்.

ராஜமித்ராவும் கையில் மலர்க்கொத்துடன் அவளைச் சந்திக்க வந்திருந்தான். அவனை அமரக் கூட சொல்லவில்லை, தாரதம்யா. அதற்குள் பணியாள் ஓடி வந்து பட்டத்து இளவரசன் சுசிமா அவளைக் காண வந்திருப்பதாக சேதி கூற, பரபரப்புடன் சுற்றும் முற்றும் நோக்கிய ராஜமித்ரா, அவசரமாக அருகிலிருந்த திரைச்சீலையின் பின்பாகப் பதுங்கிக்கொண்டான்.

தலைவிதியே என்று யுவராஜா சுசிமாவை வரவேற்றாள், தாரதம்யா. இப்போது பிந்துசாரனின் மூன்று மகன்களுமே இளமை பீறிட்டுப் பொங்கிக் கொண்டிருக்கும் பருவ வாலிபர்கள். ஆட்டம், கேளிக்கை, கொண்டாட்டம்தான் அவர்களது அன்றாட நடவடிக்கைகள்.

"காலையில் கொலு மண்டபத்தில் உனது நடனத்தைப் பார்த்தது முதலாக எனது சிந்தை மேடையில் உனது காற்சதங்கைகள் தாம் ஒலிக்கின்றன. எனக்கு மட்டுமே நீ தனியாக நடனம் ஆட வேண்டும்.!" - சுசிமா உத்தரவிட்டான்.

“இளவரசே! அடியாளுக்கு உடல்நலம் சரியில்லை!” - என்று கூட சொல்லிப்பார்த்துவிட்டாள். பட்டத்து இளவரசன் ஆயிற்றே! வருங்கால மன்னன் என்கிற ஆணவம் ஏற்கனவே, சுசிமாவின் சிரசில் பரவியிருக்க, ‘ஹூம்’’ எங்கிற ஆங்கார முனகலோடு இருக்கையினில் சாய்ந்து அமர்ந்துவிட்டான்.

https://telegram.me/aedahamlibrary

தலைவிதியே என்று இசைக் கலைஞர்களை வரவழைத்து நடனம் புரிந்து கொண்டிருந்தாள், தாரதம்யா.

சாணக்கியனை விரட்டி அடித்ததில் இருந்தே, தனது மகன்களை வளர்க்கும் விஷயத்தில், பிந்துசாரன் அலட்சியம் காட்டியிருந்தான். அதன் பலன், முதல் இரண்டு மகன்களான சுசிமாவும், அசோகனும், தீய நடவடிக்கைகளுக்கு பெயர் போனவர்களாக இருந்தனர். கடையவன் விதசோகன் பரவாயில்லை. புத்த மத இலக்கியங்களில் ஆர்வம் கொண்டு, புத்த கயையில் பெரும்பாலான காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான். ஆனால் சுசிமா மற்றும் அசோகனின் நடவடிக்கைகளை பிந்துசாரனால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

நண்பர்களோடு வேட்டைக்குச் சென்றிருந்த அசோகன், விதிஷா நாட்டின் காடுகளில் வேட்டையாடிக் கொண்டிருந்தான். அப்போது விதிஷா நாட்டின் தனாதிகாரியின் மகள் விதிஷாதேவி தனது தோழியருடன் காட்டில் உள்ள நாகதேவதைக்கு பால் வார்த்து பூசனை செய்ய வந்திருந்தாள். அவளது பேரழகில் சொக்கிப்போன அசோகன், விதிஷாதேவியை பலவந்தமாக கடத்தி வந்து சிறை வைத்திருந்தான். விதிஷா மன்னர் தூது உரைத்து, தனது தனாதிகாரியின் மகளை மீட்டுத்தரச் சொல்ல, பிந்துசாரன் விதிஷாதேவியையே அசோகனுக்கு திருமணம் செய்து தருவதாக அறிவித்தான். மூத்தவன் சுசிமாவின் திருமணம் முடிந்தவுடன், விதிஷாவுக்கும், அசோகனுக்கும் திருமணம் நடைபெறும் என்று அறிவிக்க, அசோகன் உரிமையுடன் விதிஷாவை நாடச்சென்றான்.

"நான் ஒரு மன்னனின் மனையாளாகத்தான் திகழ்வேன்! பட்டமில்லாத ஒரு இளவரசன் என்னைத் தீண்ட முடியாது!" - அப்போதைக்கு அவனிடம் இருந்து தப்பும் எண்ணத்துடன் விதிஷா கூறியிருந்தாலும், அவளது சொற்கள், அசோகனது நெஞ்சைக் கிழித்து ரணமாக்கின.

“அப்படியென்றால், நான் மன்னனாக பதவி ஏற்றதும் உன்னைத் தொடுகிறேன்.!” - என்று சவால்விட்டுச் சென்றிருந்தான். சுசிமாவும், அசோகனும் போட்டி போட்டுக்கொண்டு பகலில் காட்டு மிருகங்களையும், இரவில் அரண்மனை பெண்களையும் வேட்டையாடிக் கொண்டிருந்தனர். சுசிமாவின் அறையில், வைக்கோல் அடைக்கப்பட்ட அவன் வேட்டையாடிக் கொன்ற அறையில் ஒரு சிங்கத்தின் தலை மாட்டப்பட்டிருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

ரூபாலி என்கிற பெண்ணை தனது மஞ்சத்திற்கு ஒரு இரவு வலுக்கட்டாயமாகக் கொண்டு சென்றான், அசோகன்.

“மன்னித்து விடுங்கள் இளவரசே! நான் தங்களுக்கு பிரயோஜனப்படமாட்டேன். தங்களது தமையன் என்னை உபயோகப்படுத்திக்கொண்டார்!” - ரூபாலி கைகூப்பி கெஞ்ச அசோகன் ஆத்திரத்தில் அவளது குரல் வளையை தனது கட்டை விரல்களால் நசுக்க, ரூபாலியின் கதை அங்கேயே முடிந்தது. பிந்துசாரனுக்கு தகவல் போக, ரூபாலி விரிஞ்சி ஆற்றில் வீசி எறியப்பட்டாள். மவுரிய இளவரசர்கள் வெறியர்கள் என்று ஏற்கனவே நாடெங்கும் ரகசியமாகப் பேசப்பட்டு வந்தது.

தாரதம்யாவின் கண்கள் பயத்துடன் அந்த நீல வண்ணத் திரையையே அவ்வப்போது பார்த்துக் கொண்டிருந்தன.

"அல்லிமலர் இரவில் மூடியது ஏன்?

காதல் மதி வந்த வேளையிலே,

குறுக்கே வந்த கதிரோனைக் கண்டா."

என்று சமய சந்தர்ப்பத்தினை நோக்காமல், பாடகி பாட, தாரதம்யாவுக்கு வியர்த்துக் கொட்டத்துவங்கியது.

இந்த வெறியன் பட்டத்து இளவரசன் சுசிமாவிடம், தனது காதலன் ராஜமித்ரா சிக்காமல் இருக்க வேண்டுமே என்கிற கவலையுடன் சுழன்றாடினாள். சுசிமா நடனத்தை மட்டும் ரசித்து விட்டுப் புறப்பட்டுச் சென்றால் பரவாயில்லை. ஆனால் அவனைப் பார்த்தால் அவன் உடனே புறப்பட்டு விடுவான் என்று தோன்றவில்லை. இவளது நடனத்தைப் பாராட்டி இவளது தேகத்திலே பாராட்டுப் பத்திரத்தை எழுத வேண்டும் என்று அவன் துடிப்பது, அவனது கண்களிலேயே பிரதிபலித்ததை உணர்ந்தாள், தாரதம்யா.

தாரதம்யாவுக்கு உடல் களைத்ததோ, பாடகிக்கு வாய் வலித்ததோ, இல்லை இசைவாணர்களின் கரங்கள் வலுவிழந்ததோ, இல்லை தரதம்யாவின் காதலன் ராஜமித்ராவுக்குத்தான் விதி கொடுமையாக மாறியதோ, அங்கே நிகழ்ந்த நடனம் முற்றுப் பெற்றது.

https://telegram.me/aedahamlibrary

தனது கரத்தில் இருந்த மல்லிகைச் சரத்தை தாரதம்யாவை நோக்கி வீசினான், சுசிமா. அதே சமயம் திரை மறைவில் இருந்து, தன்னை மறந்து நடனத்தைக் கண்டு களித்த ராஜமித்ராவும் உணர்ச்சிவயப்பட்டு, தன்னிடம் இருந்த மலர்க் கொத்திலிருந்து ஒரு செவ்வந்திப் பூவை தாரதம்யாவின் மீது வீசினான்.

மல்லிகை மலரும், செவ்வந்தியும் தாரதம்யாவின் காலடியில் தான் விழுந்தன. ஒரு வேளை, அவள் குனிந்து அந்தச் செவ்வந்தி மலரைக் கையில் எடுத்து தனது தலையினில் சூடாமல் இருந்திருந்தால், சுசிமா அந்தச் செவ்வந்தி மலரைக் கவனித்திருக்க மாட்டானோ என்னவோ.

தான் மல்லிகையை வீச, யாரோ வீசிய செவ்வந்தியை அவள் சூடிக்கொள்வதைக் கண்டதும், சுசிமாவின் முகம் சிவந்தது. அந்தச் செவ்வந்திப் பூ எங்கிருந்து வந்தது என்று கவனிக்க, திரைச்சீலையின் பின் அசைவினை உணர்ந்து, தனது வாளினை உருவிக்கொண்டு திரைச்சீலையை நோக்கி விரைந்தான்.

நிலைமை விபரீதமாக மாறுவதை உணர்ந்த தாரதம்யா, சுசிமாவின் வழியில் நின்று அவனை திசை திருப்ப முயன்றாள்.

“இளவரசே! இன்னும் நடன நிகழ்ச்சி முடியவில்லை. அடுத்த பாடலுக்கு ஆடப் போகிறேன்!” - என்று கூற, அவளைத் தள்ளிக்கொண்டு முன்னேறிய சுசிமா, அந்தத் திரையினை தனது வாளினாலேயே கிழித்து எறிந்தான்.

திரையின் பின்னே வெலவெலத்துப் போய் நின்றிருந்தான், ராஜமித்ரா.

"ராஜமித்ரா நீயா? மந்திரிகுமாரனுக்கு நடன மாதின் மாளிகையினில் என்ன வேலை?” - கர்ஜித்தான், சுசிமா.

“அரசனின் மகனுக்கு என்ன வேலையோ, அதே வேலை மந்திரியின் மகனுக்கும் இருக்காதா?” --- எப்படியும் அகப்பட்டு விட்டோம் என்கிற எண்ணத்தில், காட்டத்துடன் பேசினான், ராஜமித்ரா.

“இங்கிருந்து ஓடிச் செல்!” --- சுசிமா கட்டளையிட்டான்.

“நானும் தாரதம்யாவும் காதலர்கள். எனவே, ஓடிச்செல்ல வேண்டியவன் நான் அல்ல!” - ராஜமித்ரா பதில்கூற, அதற்குமேல் சுசிமாவின்

https://telegram.me/aedahamlibrary

கோபத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை. தனது வாளை ஓங்கி, ராஜமித்ராவின் இதயத்தில் பாய்ச்சினான். அலறியபடி விழுந்த ராஜமித்ரா தலத்திலேயே விழுந்து உயிரை விட்டான்.

தாரதம்யாவும், இசைவாணர்களும் அலறியபடி ஓடிப்போக, ஆவேசத்துடன் தனது ஜாகைக்குத் திரும்பினான், சுசிமா.

***

மறுதினம் ---

நாடே இந்த சம்பவம் குறித்துப் பேச, அமைச்சர் ராதாகுப்தர் ஆவேசத்துடன் மன்னன் பிந்துசாரனிடம் நியாயம் கேட்க வந்திருந்தார்.

பிந்துசாரனுக்கு அவரைச் சந்திப்பதற்குக் கூட முகம் இல்லை. “சாணக்கியரே! நீங்கள் இல்லாததன் விளைவு, எனது மகன்கள் தறிகெட்டுத் திரிகின்றனர். அவர்களைக் கட்டுப்படுத்த இயலாமல் தவிக்கிறேன்.!" - என்று புலம்பியபடி ராதாகுப்தனை உள்ளே அழைத்தார்.

"மன்னா! எனது ஒரே, மகன், எனது சிதைக்குத் தீ மூட்டுவான் என்று நான் காத்திருக்க, அவனது சிதைக்கு என்னைத் தீ மூட்டச் செய்து விட்டாரே, இளவரசர். இதற்கு என்ன பதில் கிடைக்கப் போகிறது எனக்கு!” - ராதாகுப்தர் கேட்டார்.

“அமைச்சரே! நானே எனது மகன்களது நடவடிக்கைகளைப் பற்றி தங்களிடம் குறைபட்டபோது, நீர்தானே அவர்களுக்குப் பரிந்துக்கொண்டு என்னை அடக்கினீர்.

போர்க்கலைகளைக் கற்ற இளவரசர்களின் நெஞ்சம் மரத்துப் போனால்தான் போர்க்காலத்தில் அவர்களது வீரம் செழிக்கும் - என்று நீர்தானே கூறினீர். இப்போது என்னிடம் நியாயம் கேட்பது எவ்விதத்தில் நியாயம்? எனது மகன்களின் மனங்கள் மரத்துப் போனதோடு, கொடுமையாகவும் மாறிவிட்டன. என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை, ராதாகுப்தரே. உங்கள் பேரிழப்பு ஈடுசெய்ய முடியாதது. அதற்குப் பரிகாரமாக உமது மகள் ராஜிவியை எனது மகன்களில் ஒருவனுக்கு மணமுடிக்கிறேன். இதற்கு மேலும், என்னால் என்ன செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?” விரக்தியுடன்

https://telegram.me/aedahamlibrary

கூறினான், பிந்துசாரன்.

மன்னனை மறுத்துப் பேச இயலாமல், ராதாகுப்தர், வந்த வழியே திரும்பினார். மன்னரின் அறையை விட்டு, நீண்ட நடைமண்டபத்திற்குள் நுழைந்தார். அந்த நடைமண்டபத்தின் வழியாகத்தான் கொலு மண்டபத்திற்கும், அரண்மனையின் இதர பகுதிகளுக்கும் செல்ல முடியும். நான்கு வரிசை தூண்களுடன், நீண்டிருந்த அந்த நடைபாதை மண்டபத்தில் ஆங்காங்கே சுளுந்துகள் எரிந்துகொண்டிருக்க, மண்டபத்தின் தொலைவில், ஒரு உருவம் மன்னரின் அறையை நோக்கி நடந்து வருவதைக் கண்டார், ராதாகுப்தர். சற்று அருகே வந்த பிறகே, வருவது மன்னரின் இரண்டாவது மகன் அசோகன் என்பதை உணர்ந்து கொண்டார்.

“எனது மகனைக் கொன்றவனை நான் எதற்கு மாப்பிள்ளையாக ஏற்க வேண்டும்.? மாப்பிள்ளையாக மட்டுமல்ல. அரசனாகவும் ஏற்க முடியாது. இதோ வருகிறானே. இவனே எனது மாப்பிள்ளையாக, மவுரிய அரசனாக இருந்து விட்டுப் போகட்டுமே. இவனை நம் வழிக்குக் கொண்டு வர முடியுமா என்று பிரயத்தனம் செய்வோம்!” - அசோகன் அவரைக் கடந்து செல்வதற்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டிருந்தார், ராதாகுப்தர்.

தன்னை உறுத்துப்பார்த்தபடி வந்த அசோகனை பணிவுடன் தடுத்து நிறுத்தினார், ராதாகுப்தர்.

"ராஜநடை மண்டபத்தில் கம்பீர சிம்மமாக, நீங்கள் நடந்து வரும் அழகைக் கண்டு சொக்கி நிற்கிறேன், இளவரசே! எனக்கு நிகழ்ந்த துக்கத்தைப் பற்றி தாங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்!” - ராதாகுப்தர் நெஞ்சினை துக்கம் அடைக்க, குரல் தழுதழுக்கக் கூறினார்.

“அறிந்தேன், அமைச்சரே. நடனமணி தாரதம்யாவுடன் இரவைக் கழிப்பதற்கு நிகழ்ந்த போட்டியில், எனது அண்ணன் உங்கள் மகனை வெட்டி வீழ்த்தியதாக அறிந்தேன். உங்கள் மகன் இறந்தான் என்பதைவிட, மிகவும் கேவலமான காரணத்திற்காக குத்தி கொலை செய்யப்பட்டதை எண்ணி வருந்துகிறேன்!” அலட்சியமாகக் கூறினான்.

எலுமிச்சைக் கனி, புளியினை புளிப்பு என்று பழித்தது போன்று, அசோகன் சுசிமாவையும், ராஜமித்ராவையும் பழித்தான், தனது கைவிரல்களில் ரூபாலியின் குருதிக் கறையினை வைத்துக்கொண்டு.

https://telegram.me/aedahamlibrary

"எனக்கு நியாயம் வழங்க வேண்டும். உங்கள் தந்தை எனக்கு அதனை வழங்க மறுத்து விட்டார்!”- ராதாகுப்தர் கூறினார்.

“நான் இந்த விவகாரத்தில் என்ன நியாயத்தை வழங்க முடியும். நான் என்ன மன்னனா என்ன? உமது மகனைக் கொன்றவன்தான் அடுத்த மன்னனாகப் பதவி ஏற்கப் போகிறான். இந்நிலையில் உமக்கு என்ன நியாயம் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள், அமைச்சரே?" - அசோகன் கேட்டான்.

"உங்களால் எனக்கு நிச்சயம் நியாயம் கிடக்கும் இளவரசே" - ராதாகுப்தர் கூறினார்.

"பார்க்கலாம்! நான் ஒரு வேளை மன்னனாகப் பதவி ஏற்றால் உமது மகனின் கொலைக்கு நியாயம் வழங்குகின்றேன்!” - அசோகன் அவரைக் கடந்து செல்வதற்கு முயன்றான்.

“மன்னராக உங்களால் நியாயம் வழங்க முடியாது, அசோகா! நீங்கள் நியாயம் வழங்கினால், அடுத்த கணம் மன்னராகலாம்!” - ராதாகுப்தர் கூறினார்.

அவரைக் கடந்து இரண்டடிகளை எடுத்து வைத்த அசோகன், அவரது குரலில் தொக்கி நின்ற கருத்து ஒன்று அவனது மனதில் எதையோ உணர்த்த வியப்புடன் நின்று அவரைத் திரும்பி நோக்கினான்.

அவர்கள் நின்றிருந்த பகுதியின் அருகில் இருந்த தூணில் சொருகப்பட்டிருந்த சுளுந்தின் ஒளியில் இருவரின் முகங்களும் தகதகத்தன.

“நியாயம் வழங்கினால் நான் மன்னன் ஆவேனா?” --- அவரை உறுத்துப்பார்த்தான் அசோகன்.

“ஒரு வேளை, நீங்கள் மன்னன் ஆக வேண்டுமென்பதற்காகத்தான், எனது மகன் ராஜமித்திரன் தனது உயிரை தியாகம் செய்தானோ என்னவோ!" - மிகவும் சாதுர்யத்துடன், ராதாகுப்தர் சொல் ஜாலம் புரிய, டக் டக் டக் என்று தனது காலணிகள் ஒலிக்க தனது தந்தையின் அறையை நோக்கிச் சென்றான், அசோகன்.

"ஒரு மன்னன் தான் எனது உடலைத் தீண்ட வேண்டும்!” -

https://telegram.me/aedahamlibrary

விதிஷாதேவியின் குரல் அவனது வலது செவியிலும், எனது மகனின் கொலைக்கு நீங்கள் நியாயம் வழங்கினால், நீங்கள் மன்னராகி விடுவீர்கள், என்று கூறும் ராதாகுப்தனின் குரல் இடது செவியிலும் எதிரொலிக்க, தந்தையின் அறை வாயிலில் நின்றவன் மீண்டும் தான் வந்த வழியே பார்த்தான்.

தொலைவில் அந்தச் சுளுந்தின் ஒளியில் இவனையே வெறித்துப் பார்த்தபடி இன்னும் நின்றிருந்தார், ராதாகுப்தர்,

*****

https://telegram.me/aedahamlibrary

# 34. அசோக வனம்

ஒரு நாள் நள்ளிரவு ---

பிந்துசாரனுக்கு உடல்நிலை மோசமாகியது. தேகத்தின் வலதுபுறம் செயலற்றுப் போக, பேச்சும் குழறத்துவங்கி விட்டது.

"அரசியாரே! மன்னரின் முடிவுக்கு காலம் கட்டியம் கூறத்துவங்கிவிட்டது. மன்னர் நல்லபடியாக இருக்கும்போதே பொறுப்புகளை முடித்து விடுங்கள். நாட்டில் குழப்பம் மேலோங்கக் கூடாது என்பதனால் உங்களிடம் உண்மையைக் கூறுகிறேன்.!" - வைத்தியர் கூறியதும், சுபத்ராங்கி கவலை கொண்டாள்.

பிந்துசாரன், சற்று தெளிந்து இருந்த வேளையில் அவனுடன் கலந்து பேசி சுசிமாவுக்குத் திருமணத்தைச் செய்ய நிச்சயித்தனர். காமரூபத்துக் [1] கட்டழகி சித்திரசேனாவை சுபத்ராங்கியே சென்று பெண் பேசி திருமணத்தை உறுதிப்படுத்தி விட்டாள். மன்னன் சூரிய பிரகியோதிஷ ஆதிபதியின் மகள், சித்ரசேனா.

திருமணம் நிச்சயம் செய்துவிட்டு, மீண்டும் மவுரியம் வந்த சுபத்ராங்கிக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. நண்பர்களுடன் வேட்டையாட கலிங்கக் காட்டிற்குச் சென்றிருந்த அசோகன், அங்கு நீராடிக்கொண்டிருந்த கார்வாகி என்கிற பெண்ணை கடத்திக்கொண்டு வந்திருந்தான். வனவாசி தலைவனின் மகள் கார்வாகி. இயற்கை அழகு அவளிடம் மிகுந்திருந்தது. ஆனால் மவுரியத்தின் சட்ட திட்டங்களை மீறி ஒரு காட்டுவாசியை அசோகன் அழைத்துக் கொண்டு வந்தது பெரும் பிரச்னையை ஏற்படுத்தி விட்டது. ஏற்கனவே விதிஷாதேவி என்கிற விதிஷா நாட்டு தனாதிகாரியின் மகளையும் கடத்தி வந்திருந்தான். வேறு வழியின்றி, இருவரையும் அவனுக்கு மணமுடிக்கத் தீர்மானித்தான் பிந்துசாரன்.

சுசிமா - சித்ரசேனா திருமணம் நடைபெறும் அதே முகூர்த்தத்தில், அசோகன் பலவந்தமாக சிறைபிடித்து வந்திருந்த விதிஷாதேவியையும், கார்வாகியையும் அவனுக்குத் திருமணம் செய்விக்க ஏற்பாடுகள் நடந்தேறின.

காமரூபத்தின் மன்னன் சூரிய பிரத்யோகிஷ ஆதிபதிக்குத் தகவல்

https://telegram.me/aedahamlibrary

சென்றது. சூரிய ஆதிபதி வைதீக மதத்தைப் பேணுபவன். நியமநிஷ்டைகளை பின்பற்றுவதில் ஆர்வம் மிக்கவன். தனது மகளின் திருமணம், நியமத்துடனும், மிகவும் கோலாகலமாகவும் நடைபெற வேண்டும் என்று கனவு கண்டிருக்க, சுசிமாவின் தம்பி அசோகன் கடத்தி வந்த பெண்களை, அதுவும் மன்னர் குலத்தினைச் சார்ந்திராத பெண்களையும் அதே பந்தலில் அவனுக்குத் திருமணம் செய்விக்க பிந்துசாரன் முடிவு செய்தது, சூரிய ஆதிபதிக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது. தனது தூதர்களை உடனே மவுரியத்திற்கு அனுப்பினான் பிரத்யோகிஷ ஆதிபதி...

எனது மகள் சித்திரசேனாவின் திருமணத்தோடு, ஒரு தனாதிகாரி மற்றும் வனவாசி பெற்ற பெண்களின் திருமணம் நடைபெறுவதை நான் விரும்பவில்லை. காமரூபம் சிவனார் நடமாடிய இடம். எங்கள் நாட்டின் புனிதம், நடைபெற உள்ள திருமணத்தின் மூலம் பாதிக்கப்படுவதை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. சுசிமாவை மணந்து சித்ரசேனா மவுரியத்தின் அரசியாக அமர இருப்பதை வரவேற்கிறோம். ஆனால், அசோகனின் நடவடிக்கைகள் எங்களுக்கு சந்தேகத்தைத் தருகின்றன. இந்நிலையில், நிச்சயித்த இந்தத் திருமணத்தை தொடர்ந்து நடத்த இயலாமைக்கு வருந்துகிறேன்! சூரிய பிரத்யோகிஷ ஆதிபதி.

பிந்துசாரனின் முகம் சிறுத்துப் போனது. சுபத்ராங்கியை கவலையுடன் பார்த்தான். விவரம் அறிந்ததும் சுசிமாவின் கோபங்கள் அனைத்தும் அசோகனின் மீது பாய்ந்தன.

தனது தந்தையைச் சினத்துடன் நோக்கினான்.

"சூரிய ஆதிபதி கூறுவதில் தவறு ஒன்றுமில்லை. வேலியே பயிரை மேய்வது போன்று காமாந்தகன் அசோகன் கண்களில் படும் பெண்களையெல்லாம் மஞ்சத்துப் பாவைகளாக மாற்றி வருகிறான். காமரூபத்து இளவரசியின் திருமணம், ஒரு வியாபாரி மற்றும் வனவாசியின் மகள்களோடு நடைபெறுவதா? (விதிஷா தனாதிகாரி பிரண சூதனர் ஒரு பட்டு வஸ்திர வியாபாரியாகத் திகழ்ந்தவர்) நீங்கள் எப்படி இப்படி ஒரு யோசனையை எடுத்தீர்கள்?" - சுசிமா கேட்டான்.

"அவனுக்கு வாக்கு கொடுத்து விட்டேன், சுசிமா!" மஞ்சத்தில் கிடந்தபடி வேதனையுடன், கூறினார், பிந்துசாரர். சொற்கள் தெளிவில்லாமல் வெளிவர, சுசிமாவின் முகத்தில் அசூயை.

https://telegram.me/aedahamlibrary

“உம்மால் எதையும் செய்ய இயலாது என்கிறபோது எதற்காக சிரமப்படுகிறீர்கள். எனது திருமணத்தோடு, மகுடாபிஷேகத்திற்கும் நாள் குறியுங்கள் அம்மா.! யாரங்கே! பிரதம அமைச்சர், பீஷ்ம சார்வாகரை அழையுங்கள்!” - உத்தரவிட்டான், சுசிமா.

என்னவோ ஏதோ என்று பதறியபடி ஓடிவந்தார், பீஷ்மர், தலைமை அமைச்சர்.

கண்ணீருடன் அரசியையும், இயலாமையுடன் மன்னரையும், சினத்துடன் சுசிமாவையும் பார்த்தவுடன் பெரும் பிரச்சனை ஏதோ உண்டாகி உள்ளது என்பதை யூகித்து விட்டார், தலைமை அமைச்சர்.

"பிரதம அமைச்சரே! மன்னரின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதால், எனது மகுடாபிஷேகத்திற்கு நாள் குறிக்க வேண்டுகிறேன். மேலும், நான் மன்னனாக பொறுப்பு ஏற்கும் வரை, இந்த நாட்டின் பொறுப்பாளராக என்னை நியமிக்கும் அறிவிப்பினை செய்து விடுங்கள்!” - சுசிமா கூறினான்.

அன்றிரவே, சுசிமா கேட்டுக்கொண்டபடி, அரண்மனையில் இருந்து, யுவராஜா சுசிமா மன்னரின் சார்பாக நாட்டின் பொறுப்பாளராகச் செயல்படுவார் --- என்கிற அறிவிப்பு வெளிவந்தது...

மறுநாள் காலை ---

அரண்மனையிலிருந்து கிடுகிடு அறிவிப்புகள் தண்டோரா மூலம், மவுரியத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவின.

அறிவிப்பு இதுதான். ---

இளவரசன் அசோகனின் நடவடிக்கைகள் அரண்மனை சட்டதிட்டங்களுக்குப் புறம்பாக இருப்பதால், ஒரு ஆண்டிற்கு அவன் நாடு கடத்தப்படுகிறான். இன்று முதல் ஒரு ஆண்டு காலத்திற்கு அசோகன், நாட்டினுள் கால் வைக்கக் கூடாது. இன்று மாலைக்குள் அவன் இந்த நாட்டின் எல்லையை தாண்டிச் சென்று விட வேண்டும். நடவடிக்கைகளில் மாறுதலைக் கொண்டிருந்தால், ஒரு வருடத்திற்குப் பிறகு அவன் மீண்டும் நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவான்.

இதனால், அசோகனுக்கும், விதிஷாதேவிக்கும், கார்வாகிக்கும்

https://telegram.me/aedahamlibrary

நடைபெறுவதாக இருந்த திருமணம், ரத்து செய்யப்படுகிறது. ---

மன்னரின் சார்பாக, நாட்டின் பொறுப்பாளர், யுவராஜா, சுசிமா.

அசோகன் சினத்துடன் தனது தாய் தந்தையைக் காண்பதற்காக அந்தப்புரத்தை நோக்கி நடந்தான். அன்றொருநாள் ராதாகுப்தரை அவன் சந்தித்திருந்த அந்த நடைமண்டபத்தின் வாயிலில் இருந்த காவல் அதிகாரிகள் அவனை உள்ளே அனுமதிக்க மறுத்தனர்.

"உங்களை உள்ளே அனுமதிக்கக் கூடாது என்பது யுவராஜாவின் உத்தரவு!”

கோபத்துடன் திரும்பி நடந்தான், அசோகன். அன்று மாலையே, நாட்டின் எல்லையை நோக்கி நடக்கத் துவங்கியபோது அவன் பின்பாக காலடியோசைகள் கேட்க, வியப்புடன் திரும்பினான்.

விதிஷாதேவியும், கார்வாகியும்தான் அவனைப் பின்தொடர்ந்து வந்தனர்.

“நீங்கள் ஏன் என்னுடன் வருகின்றீர்? நான் மட்டும்தான் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பது உத்தரவு?" --- அசோகன் கூறினான்.

“எங்களைக் கடத்தி வந்து விட்டீர்கள். எங்களை இனி எங்கள் நாட்டிலும் ஏற்க மாட்டார்கள். நீங்கள் இல்லாத உங்கள் மவுரிய நாட்டிலும், எங்களை பணிப்பெண்களை விடக் கேவலமாக நடத்துவார்கள். இராமன் இருக்குமிடம்தானே ஜானகிக்கு அயோத்தி. அதுதான் நாங்களும் கிளம்பி விட்டோம்.!" - விதிஷாதேவி கூறினாள்.

"ஆம்! எங்களைக் கடத்தி வந்த நீங்கள் தான் எங்களுக்கு எல்லாம். நீங்கள் தான் எங்களைக் காக்க வேண்டும். நீங்கள் எங்கு இருக்கப் போகிறீர்களோ அங்குதான் நாங்களும் இருப்போம்!" - கார்வாகி கூறினாள்.

அசோகன் அவர்களையும் அழைத்துக்கொண்டு விரிஞ்சி காட்டினுள் நுழைந்தான்.

ஒரு வருடம் முடிந்து விட்டது. சுசிமாவுக்கும், சித்ரசேனாவுக்கும் திருமணம் நடந்து அவர்களது இன்ப வாழ்க்கையின் சின்னமாக

https://telegram.me/aedahamlibrary

சவ்ஷீலா என்கிற மகள் பிறந்திருந்தாள்.

சுசிமாவின் மகுடாபிஷேகத்திற்குக் கூட நாள் குறிக்கப்பட்டு விட்டது. பிந்துசாரன் செயலற்றுப் போய்விட, சுசிமா யுவராஜாவாக இருக்கும் போதே சர்வவல்லமை பொருந்தியவனாக இருந்தான். தனது மகன் ராஜமித்ரனை கொலை செய்த சுசிமா மன்னராகி விடக்கூடாது என்பதில் ராதாகுப்தன் தீவிரம் காட்டினான். அசோகனுக்கு ஆதரவாக ராதாகுப்தன் ரகசியக் கூட்டங்களைக் கூட்ட, விவரம் சுசிமாவை எட்டியது. அமைச்சர் பதவியில் இருந்து ராதாகுப்தனை நீக்கி விட்டிருந்தான். அமைச்சர் பதவியினைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டி, மறைமுகமாக அசோகனுக்கு ஆதரவாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த ராதாகுப்தன் பகிரங்கமாக அசோகனுக்கு ஆதரவாக மக்களைத் திரட்டத் துவங்கினான். வெகுண்ட சுசிமா, அவனது தலைக்கு குறிவைக்க, ராதாகுப்தன் கலிங்கக் காட்டில் தங்கியிருந்த அசோகனை நாடிச்சென்றான். தனது மாமனும் கார்வாகியின் தந்தையுமாகிய நீல ருத்ரனின் பாதுகாப்பில் குடில் ஒன்றில் வசித்து வந்தான் அசோகன்.

ராதாகுப்தன் தன்னைத் தேடி வந்ததும், வியப்பின் உச்சிக்குச் சென்றான்.

"அமைச்சரே! ஏது இவ்வளவு தூரம்?” - அசோகன் கேட்டான்.

“நான் அமைச்சன் இல்லை இப்போது. தேசத்துரோகி. உங்களை ஆதரித்தேன் என்கிற காரணத்திற்காக என்னை கொலை செய்ய உத்தரவிட்டார், உங்கள் தமையன். தப்பி ஓடி வந்திருக்கிறேன். தங்களை ஆதரிக்க மட்டும் செய்யவில்லை. தங்களை ஆராதித்துக் கொண்டிருக்கிறேன். எனது மகனின் கொலைக்கு உங்களால் நியாயம் வழங்க முடியும் என்று இன்னும் தீர்மானமாக நம்புகிறேன்.!” - ராதாகுப்தன் கூறினான்.

“என்னால் எப்படி மன்னனாகப் பதவி ஏற்க முடியும்? மக்கள் என்னை ஏற்க வேண்டுமே?” - அசோகன் கேட்டான்.

"சாணக்கியரை மறந்துவிட்டீரா, இளவரசே? இது போன்று வனவாசியாகத் திரிந்த உமது பாட்டன் சந்திரனை, மன்னனாக்கி மவுரியப் பேரரசை அமைத்தானே. அந்த வனவாசியையே மக்கள் அரசனாக ஏற்கவில்லையா?”

https://telegram.me/aedahamlibrary

ராதாகுப்தன் கேட்டான்.

"கேள்விப்பட்டிருக்கிறேன். சாணக்கியரால் எப்படி அங்ஙனம் ஒரு பிரம்மாண்ட காரியத்தைச் செய்ய முடிந்தது? படை பலம், ஆள்பலம் உள்ள எனது கொள்ளுப்பாட்டனின் சாம்ராஜ்யத்தைக் கவிழ்த்து எப்படி எனது தந்தையை மன்னனாக சிங்காசனத்தில் அமர்த்த முடிந்தது?”

“நல்ல கேள்வி! சூட்சுமமே உங்கள் தந்தையார் பிந்து சாரன் கழுத்தில் உள்ள அந்த தேவ உடும்பர தாயத்தில்தான் உள்ளது. தேவ உடும்பரம் என்பது மிகவும் சக்தி வாய்ந்த மூலிகை. உலகிலேயே இரண்டு இடங்களில்தான் அந்த மரம் தோன்றியுள்ளது. விதுரர் விதைத்த தேவ உடும்பர மரம்தான், புத்தன் அமர்ந்த போதி மரம். தட்சிணத்தில் எங்கோ விச்வகர்மாவினால் மற்றொரு தேவ உடும்பர மரம் விதைக்கப்பட்டு இருக்கிறதாம். நமது சாணக்கியர், தட்சிணத்தைச் சேர்ந்தவர். அவர் வரும்போது அந்த தேவ உடும்பரத்தைக் கொண்டு வந்து அஸ்வமேத யாகம் செய்துதான், உங்கள் பாட்டனை அரசனாக அமர்த்தினாராம். உங்கள் தந்தை அணிந்திருக்கும் தேவ உடும்பர தாயத்தினைதான், சாணக்கியர், உங்கள் பாட்டன் சந்திரகுப்தரின் கழுத்தினில் பிணைத்தாராம்."

விதிஷாதேவி இரு குவளைகளில் பழரச பானத்தைக் கொண்டு வந்து அவர்கள் முன் வைத்தாள்.

அசோகன் விதிஷாதேவியை யோசனையுடன் பார்த்தான். ஒரு மன்னன்தான் என்னைத் தீண்ட வேண்டும் என்று அவள் கூறிய பிறகு இதுவரை அவளைத் தீண்டாமலேயே இருக்கிறான். கார்வாகியுடன் அவன் வாழ்ந்து கொண்டிருந்தாலும், விதிஷா இரவு வேளைகளில், கார்வாகியின் தாய் சஞ்சனையுடன்தான் உறங்குகிறாள். அவளைத் தீண்ட வேண்டும் என்பதற்காகவாவது இவன் மன்னனாக வேண்டும்.

"ராதா குப்தரே! கவலை கொள்ளாதீர்கள். எனது தலைமை அமைச்சர் நீங்கள்தான். அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும்?" - அசோகன் கேட்டான்.

"இன்னும் ஒரு பவுர்ணமிதான் மிகுதி உள்ளது, தங்களது வனவாசம் முடிய. பவுர்ணமி கடந்த திரயோதசியில் உங்கள் அண்ணன் மன்னனாகப் பதவி ஏற்க உள்ளார்.!" - ராதாகுப்தன் கூறினான். ---

https://telegram.me/aedahamlibrary

"சுசிமாவுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?" - அசோகன் கேட்டான்.

"அவனுக்கும், சித்ரசேனாவுக்கும், ஒரு மகளே உள்ளது!" - ராதாகுப்தன் கூறினார்.

***

பவுர்ணமி முடிந்த மறுநாள். ---

புஷ்பபுர அரண்மனை, நந்தவனத்தில் சித்ரசேனா குழந்தை சவ்ஷீலாவுக்கு உணவு புகட்டிக்கொண்டிருக்க, அவள் அருகே உற்சாகத்துடன் அமர்ந்து குழந்தைக்கு விளையாட்டு காட்டிக்கொண்டிருந்தான், சுசிமா. தனது உத்தரீயத்தால், தனது முகத்தை மறைத்தும், பிறகு அதனை எடுத்து முகத்தைக் காட்டியும் குழந்தைக்கு விளையாட்டு காட்ட, சுசிமாவின் முகம் அந்த வஸ்திரத்தின் பின்பாக மறையும் போதெல்லாம் சவ்ஷீலா சிரிக்கத் தொடங்கினாள்.

"இன்னும் மூன்றே நாள்.! மவுரியத்தின் மன்னன் நான்!" - என்கிற எண்ணம் அவனுக்கு பிரமிப்பினைத் தர, மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது அவனுள். அந்த உற்சாகத்தில், முந்தைய தினம், அசோகனுக்கு தான் விதித்திருந்த தண்டனைக்காலம் முடிந்து விட்டது என்பதனை மறந்துவிட்டிருந்தான். அசோகனைப் பற்றி எந்தத் தகவல்களும் கடந்த ஒரு ஆண்டில் அரண்மனைக்கு வந்திராத காரணத்தால், அவனது தண்டனைக் காலம் நிறைவடைந்தது குறித்து மந்திரி பிரதானிகளும், அதிகாரிகளும் கூட கண்டுகொள்ளவில்லை.

சிறிய வெள்ளிக்கரண்டி ஒன்றில் பால் குழைவை சவ்ஹீல்யாவின் வாயருகே கொண்டு சென்றாள், சித்ரசேனா. முகத்தைத் திருப்பிக்கொண்ட குழந்தை எட்டி தனது தந்தை சுசிமாவைப் பார்க்க, அவனும் தனது முகத்தை வஸ்திரத்தினால் மறைக்க, சவ்ஷீலா சிரிக்கத் தொடங்கினாள்.

சிரித்துக்கொண்டிருக்கும் குழந்தையையே சித்ரசேனா பார்த்துக் கொண்டிருந்தாள். முகத்தினை மேலாடையால் போர்த்திக்கொண்டிருந்ததால், சுசிமாவாலும் எதனையும் நிச்சயம் கண்டிருக்க முடியாது.

புயலென அரண்மனை நந்தவனத்திற்குள் பிரவேசித்துக்கொண்டிருந்த

https://telegram.me/aedahamlibrary

அசோகனை காவலர்கள் பார்த்தனர். மனம் திருந்தி வரும் தம்பியை அண்ணன் வாரி அணைத்து, மகுடாபிஷேகத்தின்போது பிரிந்த குடும்பம் ஒன்று சேரப்போகிறது போலும், என்றுதான் அவனது பிரவேசத்தை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அசோகன் ஆவேசத்துடன், நந்தவனத்தில் குடும்பமாக அமர்ந்திருந்த அண்ணன் சுசிமாவின் பின்பாகச் சென்று நின்றான். இன்னும் சுசிமா தனது முகத்தை மறைத்திருந்த மேலாடை வஸ்திரத்தை நீக்கியிருக்கவில்லை.

ஆவேசத்துடன் அவனை நோக்கிய அசோகன் தனது வாளை உருவினான். அந்த கணத்தில் தனது கணவனின் பின்புறமாக ஏற்பட்ட அசைவினைக் கண்டு திகைப்புடன் திரும்பினாள், சித்ரசேனா.

“தந்தை இருக்கும் போது, நீ எப்படி மன்னனாகலாம்?” - ஆவேசத்துடன் கேட்டபடி அசோகன் சுசிமாவின் கழுத்தை வாளினால் கொய்தான்.

மூடியிருந்த மேல் வஸ்திரத்துடன் சுசிமாவின் தலை காணாமல் போக, பீறிட்டுப் பொங்கும் இரத்தத்துடன் அவன் உடல் பூமியில் விழுந்து துடிக்க, அதையும் ஏதோ விளையாட்டு என்று நினைத்து சவ்ஷீலா சிரித்தாள்.

வீல்! என்னும் அலறலுடன் குழந்தையின் முகத்தை தனது தோளினில் புதைத்துக்கொண்ட சித்ரா, சுசிமாவின் துடிக்கும் உடலில் இருந்து நழுவி தனது காலடியில் விழுந்த அந்த தேவ உடும்பர தாயத்தைப் பார்த்தாள்.

“அசோகனை நம்பாதே! உன் கணவனைக் கொன்று விட்டு பதவியை அபகரித்துக்கொள்ளும் கொடும் மனதை படைத்தவன்!” - தனது தந்தை சூரிய ஆதிபதியின் எச்சரிக்கை நினைவுக்கு வர, சட்டென்று குனிந்து அந்த தாயத்தினை எடுத்து தனது மார்பு கச்சையின் நடுவே பதுக்கிக் கொண்டவள், குழந்தையுடன் ஓடத்துவங்கினாள்.

துடிக்கும் அண்ணனது உடலையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த அசோகனுக்கு ராதாகுப்தன் கூறிய தேவ உடும்பர தாயத்தினைப் பற்றி நினைவுக்கு வர, உடனே தந்தை படுத்திருந்த அறையை நோக்கிச் சென்றான்.

அறையில் பிந்துசாரன் படுத்திருக்க, அவனது கால்களை

https://telegram.me/aedahamlibrary

வருடிக்கொண்டிருந்தாள், சுபத்ராங்கி.

அசோகனைக் கண்டதும் இருவருமே உணர்வு வயப்பட்டனர். "வந்து விட்டாயா மகனே! அண்ணன் உன்னைப் பார்த்தானா?”

"அவன் இனி எதையும் பார்க்கும் நிலையில் இல்லை. அவன் என்னை நாடு கடத்தியபோது, நீங்கள் இருவரும் மௌனித்து தானே இருந்தீர்கள். இப்போது என்ன திடீர் பாசம். தந்தையே! நீங்கள் அணிந்திருந்த அந்த தேவ உடும்பர தாயத்து எங்கே?” - அசோகன் சீறினான்.

"உனது அண்ணனுக்கு மகுடாபிஷேகம். இனி அவன் அணிந்திருக்கட்டும் என்று அவனுக்குத் தந்து விட்டேன்!” பிந்துசாரன் கூறிக்கொண்டு இருக்கும்போதே, அசோகன் நந்தவனத்திற்கு ஓடிச்சென்றான். துடிக்கும் அண்ணனின் கழுத்தில் அந்த தாயத்து காணப்படவில்லை. ஓடிச் சென்று அவன் சிரசை மூடியிருந்த அந்த ரத்தம் தோய்ந்த வஸ்திரத்தை நீக்கினான். கொய்யப்பட்ட தலையிலும் அந்த தாயத்து காணப்படவில்லை. எங்கே போனது சாணக்கியன் அணிவித்திருந்த அந்த தாயத்து.?

அப்போதுதான். ---

அங்கே சித்ரசேனாவும், அவளது குழந்தையும் காணப்படவில்லை என்பதை உணர்ந்தான். சித்ரசேனாவை பிடியுங்கள்!” என்கிற ஆணையை பிறப்பிக்க, இனி மவுரியத்திற்கு அசோகன் தான் தலைவன் என்பதைப் புரிந்துகொண்ட காவலர்கள், அவனது கட்டளைப்படி, சித்ரசேனாவைத் தேடிப்பிடிக்கப் புறப்பட்டனர்.

[1] காமரூபம் மனசி மற்றும் வரநதி என்கிற இரு நதிகளிடையே இருந்த நாடு. மன்மதன் என்கிற காமனை முக்கண்ணினால் எரித்து, பிறகு ரதியின் கோரிக்கையை ஏற்று அரூபமாகவே அவனை சிவனார் உயிர்ப்பித்த இடம். காமனுக்கு மீண்டும் அரூப ரூபம் கிடைத்ததால், காமரூபம் என்று அழைக்கப்பட்டு வந்தது. கல்கி புராணத்திலும் சாணக்கியாவின் அர்த்த சாத்திரத்திலும், காமரூபத்தை பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. கி.மு. 350 முதல் கி.பி. 1150 வரை தனித்தன்மையைக் கொண்டிருந்த காமரூபம் ஐந்தாம் நூற்றாண்டில் தனித்தன்மையை இழந்தது. இப்போதைய கவுஹாத்தி, தேஜ்பூர் தொடங்கி பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கின் முழு பகுதிகளையும் தன்னுள் கொண்டது காமரூபம். பூடான் மற்றும் வங்காளதேசத்தின்

https://telegram.me/aedahamlibrary

பகுதிகளையும் தன்னுள் கொண்டிருந்தது. ஐந்தாம் நூற்றாண்டில் தனது தனித்தன்மையை இழந்தது. The first dated mention comes from the Periplus of the Erythraean Sea (1st century) where it describes people called Sisatai, [12] and the second mention comes from Ptolemy's Geographia (2nd century) calling Kamarup region Kirrhadia after the Kirata population. [13] Arthashastra (early centuries of the Christian era [14]) mentions "Lauhitya", [15] which is identified with Brahmaputra valley by a later commentator. The earliest mention of a kingdom comes from the 4th-century Allahabad inscription of Samudragupta that calls the kings of Kamarupa (Western Assam) and Davaka (now in Nagaon district) frontier rulers (pratyanta nripati). [17] The Chinese traveler Xuanzang visited the kingdom in the 7th century, then ruled by Bhaskaravarman.

*****

https://telegram.me/aedahamlibrary

# 35. எங்கேயோ கேட்ட குரல்

சித்ரசேனா குழந்தையுடன் ஓடிக்கொண்டே இருந்தாள். தன்னைத் தேடிவர வீரர்களை அசோகன் அனுப்புவான். தேடிவரும் வீரர்கள் நிச்சயம் விரிஞ்சி காடுகளில் தான் தன்னைத் தேடிச் செல்வார்கள் என்பதை யூகித்து வடக்கே சென்று கொண்டிருந்தாள். வடக்கே மதுரவனம் உள்ளது. அந்த வனத்திற்கு அப்பால் மதுரா நகரம் உள்ளது. கண்ணன் பிறந்த மதுராவை அடைந்து விட்டால் அங்கிருந்து காமரூபத்திற்கு தப்பி விடலாம். கங்கை, யமுனையில் நீராடிவிட்டு அடுத்தது, பிரம்ம புத்திர நதியில் நீராட பல யாத்ரிகர்கள் காமரூபத்திற்கு மதுராவில் இருந்து வருவது வழக்கம். அவர்களுடன் கலந்து யாத்திரை செய்வது போன்று காமரூபம் சென்று விடலாம் என்கிற எண்ணத்தில்தான் சித்ரசேனா வடக்கே மதுராவனத்தினுள் ஓடிக்கொண்டிருந்தாள். நல்ல முடிவைத்தான் மேற்கொண்டிருந்தாள். அசோகனின் வீரர்கள் சித்ராவை விரிஞ்சி காட்டில் வலைவீசித் தேடிக்கொண்டிருந்தனர்.

இரவு படர்ந்து விட்டது. கடுங்குளிர் தாக்கத்துவங்கி விட்டது... உயிர் பிழைத்தால் போதும் என்று குழந்தைக்கு மாற்றுத் துணிகூட எடுத்துக்கொள்ளாமல் ஓடி வந்திருந்தாள். குழந்தை சவ்ஷீலா குளிரைத் தாளவொட்டாமல் அழ, அவளது அழுகை சத்தம், காட்டு மிருகங்களை தங்கள் பக்கமாக இழுத்து விடப்போகிறதே என்று அஞ்சி அவளை அவசரமாக சமாதானம் செய்ய முயன்றாள். தனது சேலைத்தலைப்பினால், தனது கணவன் சுசிமா விளையாடியது போன்று, தனது முகத்தை மறைத்தும், காட்டியும் விளையாட, குழந்தை சற்று நேரம் சிரித்துவிட்டு, பிறகு உறங்கிப் போனது. தனது சேலைத் தலைப்பினை கிழித்து குழந்தையை அதன் மீது கிடத்தியவள், சுற்று முற்றும் பார்த்தாள். ஒடிந்த மரக்கிளைகளுக்கா காட்டில் பஞ்சம். சுள்ளிகளைச் சேகரித்து வந்து குழந்தையின் அருகில் குவித்தாள். தீ மூட்டுவதற்கு என்ன செய்வது என்று சுற்றிப் பார்த்தாள். சற்று மிருதுவான இரு கற்கள் தென்பட, அவற்றை உரைத்து தீயை மூட்டப் பார்த்தாள். தீ உண்டாகவில்லை. என்ன செய்வது?

உறங்கிக்கொண்டிருந்த குழந்தையின் தேகம் நடுங்கிக்கொண்டுதான் இருந்தது. சித்ராவுக்கு அழுகை பீறிட்டது. நேற்று வரை தங்கத்தொட்டிலில் உறங்கியவள், ஒரே நாளில் காட்டின் கடுமையான நிலத்தில் உறங்க வேண்டிய கட்டாயம்.

https://telegram.me/aedahamlibrary

மார்பில் உருத்திக்கொண்டிருந்த தேவ உடும்பரத்தை எடுத்தாள்.

அதனை உறுத்துப் பார்த்தாள். "தேவ உடும்பர மூலிகையே! நேற்றுதான எனது கணவன் உன் பெருமையைப் பாடினான். உன்னை அணிந்தவர்களை சக்கரவர்த்தியாகத் திகழ வைப்பாய் என்றாரே! அதை அணிந்ததுமே அவரது தலை கொய்யப்பட்டதே! உன் சக்தி அவ்வளவுதானா? உன்னை முதலில் தீயிலிட்டுப் பொசுக்க வேண்டும். உன் நல்ல காலம் என்னால் தீ மூட்ட முடியவில்லை!" --- உரக்கக் கதறியவள், பின்பு செய்வது அறியாமல் அழத்தொடங்கினாள்.

தொடர்ந்து அழுது கொண்டிருந்தவள், பின்பு தன்னைத் தேற்றிக்கொண்டு அடுத்தது என்ன என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல் கேட்டது.

“பெண்ணே... நீ யார்?” ---

திடுக்கிட்டுப் போனாள் சித்ரசேனா... அச்சத்தால் மேனி நடுங்கியது.

"யார்... யார்... யார் என்னுடன் பேசுவது?' - சித்ரா எதிர்க்கேள்வி கேட்டாள்.

"துன்பத்தில் புலம்பிக்கொண்டிருப்பவள் நீ. நான் மோன நிலையில் இருப்பவன். எனது மோன நிலையைக் குலைத்த உன்னிடம் நான் கேள்வி கேட்பதுதான் சரியாகும். நீ யார் பெண்ணே!” - அந்தக் குரல் கேட்டது.

“நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. இருப்பினும், தங்கள் குரலில் உள்ள பரிவு எனக்கு ஆறுதலை தருகிறது.! எனது பெயர் சித்ரசேனா.! காமரூபத்தைச் சேர்ந்தவள். மன்னன் சூரிய பிரகியோதிஷ ஆதிபதியின் மகள். என்னை மவுரிய நாட்டின் பட்டத்து இளவரசன் சுசிமாவுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர்.

“நாளை மறுநாள் சுசிமாவுக்கு மகுடாபிஷேகம் என்கிற நிலையில் அவரது சகோதரனால் நேற்று தலை துண்டிக்கப்பட்டு மாண்டு போனார். அவரது மனைவியான நானும், எனது குழந்தையும் காமரூபத்திற்குத் தப்பி ஓடுகிறோம்.” -

https://telegram.me/aedahamlibrary

சற்று நேர மவுனத்திற்குப் பிறகு ஒரு மெல்லிய நகையொலி கேட்டது.

"சிறு வயதில் இனிப்பினை எடுத்தவன் இப்போது கசப்பினைப் பெற்றான்.

சிறு வயதில் வாளினை எடுத்தவன் இப்போது வெற்றியைப் பெறுகிறான்."

அந்தக் குரல் கூற, சித்ரா குழப்பத்துடன் குரல் வந்த திக்கினை நோக்கினாள்.

"சுவாமி! நீங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லை!" - சித்ரா கூறினாள்.

"மரணம் எல்லாவற்றிற்கும் விடிவினை ஏற்படுத்தி விடும் என்று பலரும் நினைக்கிறார்கள். மரணம் என்பது ஒரு இடைவெளிதான். கர்மாதான் சுழன்று சுழன்று அடிக்கும்... கர்மா என்னும் முடிவில்லா நூலின் பல்வேறு அத்தியாயங்கள், தான் மரணம். சந்திரகுப்தனுக்கும் அதைத்தான் கூறினேன். மவுரிய மயிலின் தோகைகள் உதிர்ந்து புதிய தோகைகள் தோன்றி விட்டன. ஆனால், ஒவ்வொரு தோகை பீலியும் தன்னால்தான் மயில் வாழ்கிறது என்று நினைக்கின்றன. நான் உருவாக்கிய மயில் என்பதை மறந்ததால் வந்த வினை இது. பெண்ணே. சற்று முன் தேவ உடும்பரத்தை பழித்தாயே. அதனைப் பழிக்காதே. அதர்வண சாகையில் தேவ உடும்பரத்தைப் போற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அதில் தெளிவாகத்தான் கூறப்பட்டுள்ளது. தேவ உடும்பரத்தை சுயநலத்திற்காக பிரயோகிப்பவன் சர்வ நாசத்தை அடைவான் என்று கூறப்பட்டுள்ளது. அதனை துஷ்ப்ரயோகம் செய்வதால் இந்தத் தண்டனைகள். நானே அதனை துஷ்ப்ரயோகம் செய்த பலனைத்தான் இப்போது அனுபவிக்கிறேன்!" - அந்தக் குரல் கூறியது. ---

"சுவாமி! தாங்கள் யார்?" - சித்ரா வியப்புடன் கேட்டாள். சந்திரகுப்தனைப் பற்றி பேசுகிறாரே. மவுரியத்திற்கு வேண்டப்பட்டவரோ?

"பெண்ணே! எனக்கு பல பெயர்கள் உண்டு! காஞ்சி அத்தியூரில் பிறந்து எனது தாயால் விஷ்ணுகுப்தன் என்னும் பெயரைப் பெற்றேன். பிறகு கவுடில்யன் என்கிற பெயரைக் கொண்டு, மகதம் வந்தேன். தானநந்தா, மற்றும் அவன் மகள் துர்தராவினால் அவமானம் அடைந்து அவர்களை

https://telegram.me/aedahamlibrary

வீழ்த்தி, காட்டுவாசியான உனது மாமனின் தந்தையை மன்னனாக அமர்த்தினேன். எனக்கே அவன் நஞ்சை கலந்தாலும், அவனை மன்னித்து அவனுக்கு ராஜதந்திரியாகத் திகழ்ந்தேன். உனது மாமன் பிந்து சாரனை வளர்த்தவன் நானே. என்னை சாணக்கியன் என்று அழைத்தார்கள். என்ன காரணத்தினாலோ, உனது மாமன் என்னை வெறுத்தான். என்னை காட்டிற்கு அனுப்பினான். வீரர்கள் சிலர், எனது உடலை தீயிட்டுக் கருகச் செய்தனர். உடலைத்தான் அவர்களால் எரிக்க முடிந்தது. எனது சிந்தையையோ, உணர்வுகளையோ, எனது சாதுர்யத்தையோ அவர்களால் தீயிட்டுப் பொசுக்க இயலவில்லை. அஸ்வத்தாமா, உருகும் உடலுடன் அவதிப்பட்டது போன்று இங்கே குகை ஒன்றில் உடல் அழுகிக் கிடக்கிறேன், பெண்ணே! நீ சற்றுமுன் கூறினாயே, தேவ உடும்பரம். அதனை துஷ்ப்ரயோகம் செய்ததால் தானோ எனக்கு இந்த கதி!" - சாணக்கியன் கூறினான்.

"சாணக்கியரா! தங்களைப் பற்றி நிறைய அறிந்திருக்கிறேன், சுவாமி. நான் வந்து தங்களைக் காணலாமா?" - சித்ரசேனா கேட்டாள்.

"வேண்டாம் அம்மா! நீ எனது நிலையைப் பார்த்து பயமும், அருவருப்பும் கொள்வாய். சதை எரிந்து எலும்பும், அழுகிய பிண்டமுமாக இருக்கிறேன்.!" - சாணக்கியன் கூறினான்.

"இல்லை... சுவாமி! நான் பயப்பட மாட்டேன். அனாதையாக நிற்கிறேன். எனக்கு சகல சாத்திரங்களையும் அறிந்த நீரே துணையாகக் கிடைத்து விட்டீர். இனி நான் வருந்தப் போவதில்லை. நான் காமரூபத்திற்கும் செல்லாமல், தங்களுக்கு பணிவிடை செய்து எனது வாழ்நாளை இந்த மதுரவனத்திலேயே கழிக்கிறேன்." தீர்மானத்துடன் எழுந்தவள், உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை தூக்கிக்கொண்டு சாணக்கியனின் குரல் வந்த திக்கினை நோக்கி நடந்தாள்.

உடலெல்லாம் கருகி, சதையும் சீழுமாக உருகி, மிகவும் கோரமான நிலையில் கிடந்த சாணக்கியரை, குகையினுள் கண்டாள் சித்ரசேனா. அவரது நிலையைக் கண்டு உள்ளுக்குள்ளே அதிர்ந்தாலும், முகத்தில் அசூயையைக் காட்டவில்லை.

"சுவாமி! எவ்வளவு காலமாக இப்படி அனாதரவாக கிடக்கின்றீர்?" - சித்ரா திகைத்தாள்.

"பெண்ணே. விரிஞ்சி காட்டில் எனது தேகத்திற்கு தீ வைத்தான், சுபந்து

https://telegram.me/aedahamlibrary

என்பவன். தீ வைத்தவுடன் அவர்கள் ஓடி விட்டனர். அத்திமலையானின் இன்னருளால் உடனே மழை பொழிய, அதில் நனைந்தேன். தீ மட்டுப்பட்டாலும், உடல் கருகி விட்டது. அதன்பின் கால் போன போக்கில் நடந்து, மதுரவனத்தில் நுழைந்து இந்தக் குகையில் தங்கியிருக்கிறேன். கடந்த ஒரு திங்களாகத் தான் என்னால் நடமாட முடியவில்லை. புண்கள் புழுத்துப் போயின. அதோ அந்த வேரோடியிருக்கும் ஒரு மரம் குகையில் சிறு பிளவினை உண்டாக்கி இருக்கிறது அல்லவா? அதன் வழியே விழும் நீரை அருந்தி என்னை உயிர்வாழச் செய்து கொண்டு இருக்கிறேன்!" - சாணக்கியன் கூறினான்.

"சுவாமி! தங்கள் காயங்களை ஆற்றுவதற்கு மூலிகை மருந்து ஏதேனும் உள்ளதா?"

"நீ சற்றுமுன்பாக சபித்துக்கொண்டிருந்தாயே. தேவ உடும்பரம். அந்த மூலிகை இருந்தால் எனது புண்களை ஆற்றலாம். மீண்டும் தேகத்தில் தோல் வளரச் செய்யும் அந்த மூலிகை.!" - சாணக்கியர் சொன்னார்.

"தெய்வச்செயல்தான் என்னை உங்களிடம் அழைத்து வந்திருக்கிறது. சுவாமி! எனது கணவர் சுசிமா அணிந்திருந்த தாயத்து தற்போது என் வசம்தான் உள்ளது. அதனைக் குழைத்தே தங்களது தேகத்தில் மருந்தாகத் தடவுகிறேன்.!" - சித்ரா கூறினாள்.

சித்ரசேனா நீட்டிய கரத்தில் ஊசலாடிக்கொண்டிருந்த அந்த தாயத்தினை கண்கள் பனிக்க நோக்கினார், சாணக்கியர். அத்திமலைத்தேவன் இவரைக் கைவிடவில்லை. இனி அவர் கதை அந்தக் குகையிலேயே முடிந்து விடப் போகிறது என்றுதான் எண்ணியிருந்தார். சாணக்கியனுக்கு அத்தியூரில் தனது இறுதி சுவாசத்தினை விட வேண்டும் என்று உள்ளூர ஆசை இருந்தது. இதோ... சித்திரசேனை மூலமாக அந்த ஆசை மீண்டும் உயிர்பெற்றிருக்கிறது.

சித்ரசேனாவைக் கண்ணீருடன் பார்த்தார், சாணக்கியர்.

"அம்மா! நீ சித்ரசேனா இல்லை. என்னைக் காப்பாற்ற வந்திருக்கும் என் தாய் சானேஷ்வரி! உன் கையிலிருக்கும் குழந்தை..."

"எனது மகள். சவ்ஷீலா! மவுரிய யுவராஜா சுசிமாவின் மகள்.!" - சித்ரசேனா, அந்த தாயத்தினை ஈரப்படுத்தி பாறையில் குழைக்கத்

https://telegram.me/aedahamlibrary

துவங்கினாள். அந்தக் குழைவினை, அருவருப்பின்றி சாணக்கியனின் புண்களின் மீது அப்பினாள்.

சாணக்கியர் உறங்கிக்கொண்டிருக்கும் சவ்ஷீலாவின் முகத்தையே பார்த்தார்.

"கவலைப்படாதே சவ்ஷீலா! உனது தந்தை பறிகொடுத்த மகுடத்தை உனது வம்சம் மீட்டெடுக்கும்.!" - முணுமுணுத்தார், சாணக்கியர்.
சித்ரசேனாவுக்கு தந்தையைப் போன்ற சாணக்கியரின் பாதுகாப்பு கிடைக்க, அவருக்கோ தனது தாய் சானேஷ்வரியே சித்ரசேனா உருவில் தன்னை நாடி வந்துவிட்ட எண்ணம்.

அமைதியாக, கிடைக்கும் காய்கனிகளை உண்டு, அந்தக் குகையிலேயே வாழ்ந்துகொண்டிருந்தனர், மூவரும்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 36. அழகிய நரகம்

விதிஷாதேவி அசோகனின் பள்ளியறைக்குள் பிரவேசித்து, அவனும் அவளை ஆட்கொண்டு விட்டான். இப்போது புதிய மன்னன் அவன்தானே. ஒரு மன்னன் தான் தன்னைத் தீண்ட வேண்டும் என்கிற நிபந்தனையைப் போட்டாள் அல்லவா? மன்னன் ஆனதும், முதல் காரியமாக, தனது அருமைத் தம்பி விதசோகனை கைது செய்து சிறையில் தள்ளும் உத்தரவினில் தனது மயூர இலச்சினையை முதன் முறையாக வைத்தான். அப்போதே விதிஷாதேவி அவன் மனதை ஆக்கிரமித்து விட்டாள். அன்றே அவள் மீதும் மவுரியனின் மயூர இலச்சினை வைக்கப்பட்டது. ஆனால் அந்த நிபந்தனையை விதித்து அவனைக் காக்க வைத்ததற்கு அவளுக்கு கடும் தண்டனையை விதித்தான்.

முதன் முதலாக அவன் மணந்தது விதிஷா தேவியைத்தான். ஆனால் பட்டத்து அரசியாக அவன் நியமித்தது, தனது மூன்றாவது மனைவி அசந்தமித்ராவை.

நான்கு மனைவியருக்கும் தனித்தனியாக மாளிகைகளைக் கட்டி மையத்தில் தனது மாளிகையை எழுப்பிக்கொண்டான், அசோகன். நான்கு மனைவிகள் இருந்தாலும், சந்திரன் ரோகிணி நட்சத்திரத்தின் மீது விசேட ப்ரீதி வைத்தது போன்று, அசோகனும் தனது மனைவி பத்மாவதியின் மீது தனிப்பிரியம் வைத்திருந்தான் விதிஷாதேவியைப் போன்று நிபந்தனை எதுவும் அவள் விதிக்கவில்லை. அசந்தமித்ராவைப் போன்று பட்டத்து ராணி என்கிற ஆர்ப்பாட்டங்களைச் செய்யவில்லை. கார்வாகியைப் போன்று ராஜாங்க விஷயங்களை அறியாத பேதையாக இருக்கவில்லை. அமைதியாக தனது மாளிகையில் இருப்பாள். அசோகன் அவளை நாடும் சமயங்களில் தூய்மையான காதலைத் தந்து அவனுக்குப் பணிவிடை செய்வாள். தனக்கென்று எதுவும் கேட்கமாட்டாள். தாதிகளை அழைக்காமல் தானே, அவனது உடை, வாள் கேடயங்களைக் கழற்றி வைப்பாள். அசோகனே வியக்குமளவுக்கு அரசியல் ஆலோசனைகளைக் கூறுவாள். அவனது பாதங்களை வருடி உறங்க வைப்பாள்.

தேய்பிறை, வளர் பிறை என்று ஒரு திங்களில் ஒவ்வொரு மனைவியுடனும் மூன்று நாட்கள் தங்குவான். ஆனால் பத்மாவதியின் மாளிகையில் மட்டும், ஏழு நாட்கள் தங்குவான். மகன்களில்

https://telegram.me/aedahamlibrary

பத்மாவதிக்குப் பிறந்த குணாளன் மீதும், மகள்களில் விதிஷாதேவிக்குப் பிறந்த சங்கமித்தாவின் மீதும் அதிக பாசம் கொண்டிருந்தான், அசோகன்.

குறிப்பாக சங்கமித்தா, கூர்மையான அறிவைப் படைத்திருந்தாள். குணாளன் நல்ல குணங்களின் உறைவிடமாகத் திகழ்ந்தான்.

ஒரு முறை, விதிஷாதேவி மாளிகையில் இருந்து புறப்பட்டு, பத்மாவதியின் மாளிகைக்கு வந்து அங்கே தங்கியிருந்தான், அசோகன். வரும்போது சங்கமித்தாவையும் அழைத்து வந்திருந்தான். சங்கமித்தாவும், குணாளனும் விளையாடிக்கொண்டு இருக்க, பத்மாவதி அசோகனுக்கு விசிறிக்கொண்டிருந்தாள்.

அப்போது எது குறித்தோ விவாதித்தபடி குழந்தைகள் இரண்டும் அசோகனிடம் வந்தார்கள்.

குணாளன் தந்தையின் முகவாயை பற்றி தனது பக்கமாகத் திருப்பினான்.

“தந்தையே! களவாடுதல் பாபம்தானே. ஆனால் சங்கமித்தா தான் களவாடப் போவதாகக் கூறுகிறாள்...!” - குணாளன் அரண்டு போய் கூறினான்.

அசோகன் வாஞ்சையுடன் மகளைப் பார்த்தான். "சங்கமித்தா! இளவரசி நீ. அதுவும் தந்தைக்கு மிகவும் பிரியமானவள். நீ கேட்பதற்கு முன்பாகவே நான் அனைத்தையும் உனக்குத் தருகிறேன். நீ எதற்கு களவாட வேண்டும்.?" -

"தந்தையே! தாங்கள் புதிதாக எழுப்பியுள்ள, நரகம் மாளிகைக்குள் நுழைய வேண்டும் என்று எண்ணுகிறேன். களவாடியவர்களையும், தவறு செய்தவர்களையும்தானே, நரகத்திற்கு அனுப்புவீர்கள்! எனக்கு நரக மாளிகைக்குப் போக வேண்டும் என்று ஆசையாக உள்ளது!” - சங்கமித்தா கூறியதும், அசோகன் குழப்பத்துடன் மனைவி பத்மாவதியைப் பார்த்தான். அவளது முகத்திலும் குழப்ப ரேகைகள்.

அசோகன் மன்னராகப் பதவி ஏற்றதும், நரகம் என்கிற பிரம்மாண்ட சிறைச்சாலை ஒன்றை எழுப்பி இருந்தான். நரகத்தின் வாயிலை மிகவும் கவர்ச்சியாக அமைத்திருந்தான். வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கும்

https://telegram.me/aedahamlibrary

நந்தவனங்களும், நீரூற்றுகளும், செயற்கை நீர்வீழ்ச்சிகளும், நீர்ப் பறவைகளும், அந்த நந்தவனங்களில் காணப்படும். ஆங்காங்கே பளிங்கு சிலைகளை நிறுத்தி காண்போரை மயங்கச் செய்திருந்தான். வெளிப்புற அழகின் பின்பாக ஆபத்துகள் நிறைந்திருக்கும், என்பதை நிரூபிப்பது போன்று, அந்த நந்தவனத்தைக் கடந்து படிகளில் இறங்கிச் சென்றால் பெரிய சிறைச்சாலை ஒன்று காணப்படும். பாதாள குகையில் புறாகூண்டினைப் போன்று சிறு சிறு அறைகள். அதில் கள்வர்களும், கயவர்களும், அரசியல் எதிரிகளும் அடைக்கப்பட்டனர். அந்தக் குகை நீண்டு வளைந்து செல்லும். குகையின் முடிவில் மூன்று பெரிய கூடங்கள் காணப்பட்டிருக்கும். பெரிய சித்திரவதைக் கூடம், சிறிய சித்திரவதைக் கூடம், மரணக் கூடம் என்று அந்த மூன்று கூடங்களை அழைப்பர். அந்தக் கூடங்களில் எழும் ஓலங்கள் சிறைச்சாலைகளில் அடைந்து கிடப்போரின் நெஞ்சை பிளக்கும். அந்தச் சிறைச்சாலையை நரகம் என்றே நாட்டு மக்கள் அழைத்து வந்தனர். அரண்மனையும் அப்படியே அழைக்கத் துவங்கி இருந்தது. அந்த நரக மாளிகைக்கு தனது மகள் சங்கமித்தா போக வேண்டும் என்று கூறியது அசோகனுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

பத்மாவதிதான், சங்கமித்தாவை கடிந்துகொண்டாள்.

“சங்கமித்தா! அரண்மனை நந்தவனத்தில் விளையாட உனக்கு இடமா இல்லை! போயும் போயும், எதற்காக அந்த நரகத்திற்குப் போக நினைக்கிறாய்?” - பத்மாவதி கேட்டாள்.

“இல்லை சின்னம்மா! அங்கே போனால், எனது சிற்றப்பன் விதசோகரைக் காண்பேன் அல்லவா. எனக்கு எனது சிற்றப்பனைக் காண வேண்டும் போல் இருக்கிறது!” - சங்கமித்தா கூறியதும், துடித்துப் போனான், அசோகன்.

அவனது தம்பி விதசோகனைப் பற்றி அவனே முழுவதுமாக மறந்திருந்தான். சுசிமாவைக் கொன்றதும், பிந்துசாரனை அரண்மனைக் காவலிலேயே வைத்திருந்தான். தனது இளைய மகன் அசோகனால், மூத்த மகன் சுசிமா தலை துண்டிக்கப்பட்டு இறந்தான் என்கிற சேதி கேட்டு அதிர்ச்சியில் மயங்கிய பிந்துசாரன் அதன் பின்னர் எழுந்து கொள்ளவே இல்லை. தந்தை மரணம் அடைந்ததும், மன்னனாகப் பதவி ஏற்றான். பதவி ஏற்ற ஆறு திங்கள்களில், புதிய அரண்மனை ஒன்றை தனக்கும், தனது தேவியருக்கும் அமைத்துக்கொண்டு பழைய அரண்மனையின் நந்தவனத்தில் நரகம் என்கிற சிறைச்சாலையினை

https://telegram.me/aedahamlibrary

அமைத்தான்.

விதசோகனும் நரக சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டான். அந்த நீண்ட குகையின் ஒரு சிறிய அறையில் தனது நெடிய உடலை குறுக்கிக் கொண்டு தியானத்தில் அமர்ந்திருப்பான், விதசோகன். சுசிமாவை அசோகன் கொலை செய்த கையோடு தன்னையும் கொன்று விடுவான் என்றுதான் எதிர்பார்த்திருந்தான். ஆனால் சிறு வயதில் இருந்தே ராஜாங்க விவகாரங்கள் விதசோகனை ஈர்க்கவில்லை. பௌத்த இலக்கியங்களைக் கற்பதில்தான் அவன் ஆர்வம் காட்டி வந்தான். ஆனால், சுசிமாவின் ஆதரவாளர்கள் ஒரு குழுவாக வந்து, சுசிமாவின் இடத்தை இவன்தான் நிரப்ப வேண்டும் என்றும், அசோகனுக்கு எதிராக புரட்சியைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் கூற, இவன் மீது சந்தேகம் கொண்டுவிட்ட அசோகன் பதவிக்கு வந்ததும் முதலில் இவனை சிறையில் அடைத்து விட்டான். விசாரணையில் தனக்கு அரசியல் ஈடுபாடு இல்லை என்று கூறியும், அசோகன் அவனை நம்பாமல், சிறையில் தள்ளி விட்டான். தலைவிதியே என்றுதான் சிறையில் நாட்களைக் கழித்துக்கொண்டிருந்தான், விதசோகன்.

பழைய சிறைச்சாலையில் இருந்த வரை அவன் நிம்மதியாகவே இருந்தான்.

ஆனால் புதிய சிறைச்சாலைக்கு வந்தபிறகு, அவன் தனது நிம்மதியை இழந்துவிட்டான். நடுநிசியில் சிறைச்சாலை குகையில் அவனுக்கு விசித்திர அனுபவங்கள் கிடைத்தன. அந்தக் குகையில் சிறுசிறு அறைகளாக நாற்பது அறைகள் இருந்தன. குகையின் மையத்தில் வட்டமாக சிறு முற்றம் போன்று காணப்பட, அங்கே வைக்கப்பட்டிருந்த பெரிய கப்பரையில் தீ எரிந்துகொண்டிருப்பது வழக்கம். அதனைத் தவிர, குகையினில் வேறு ஒளி கிடையாது. அந்தக் கப்பரையின் இடதுபுறம் இருபது அறைகளும், வலதுபுறம் இருபது அறைகளும் இருக்க, அந்தக் கப்பரையின் ஒளியில்தான் இரவைக் கழித்தனர், கைதிகள். இரவு நேரங்களில் காவலாளிகள் பாதாள குகையின் வெளியே உள்ள இரும்புக் கதவை அடைத்து விட்டு, நந்தவனத்தில் காவல் இருப்பார்கள். அந்த பாதாள குகைக்கு ஒரு புறம் வாயில்தான் என்பதால் கைதிகள் தப்பிச்செல்ல வேறு வழி கிடையாது. நரகத்தில் நுழைபவர்களுக்கு ஒரு வழிப் பாதையே, என்று பொதுவாகவே கூறுவது வழக்கம்.

ஒரு நள்ளிரவு. ---

https://telegram.me/aedahamlibrary

பாதாள சிறையில் தனது குறுகிய அறையில் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான் விதசோகன். சித்திரவதைக் கூடங்களும் அமைதியாக இருந்தன. அனைத்து அறைகளிலும் கைதிகள் உறங்கி விட்டிருந்தனர் போலும்... அப்போது ---

யாரோ இருவர் பேசிக்கொண்டு அந்த நீண்ட குகையில் நடந்து வரும் ஒலி கேட்டது. வருபவர்களின் காலணிகள் சரக்... சரக் என்று அந்த நடுநிசியில் ஒலிக்க, அதன் எதிரொலி இவனது அறை சுவர்களில் மோதி, நடுநிசியில் பயங்கரமாக ஒலித்தது.

"கவலைப்படாதே... இந்த அநியாயங்களுக்கு சாம்ராஜ்யம் பதில் சொல்லியே ஆக வேண்டும். எனது கணக்கே தீர்க்கப்படாமல் இருக்க, இப்போது உனது கணக்கும் சேர்ந்து விட்டதே!" --- என்று ஒரு குரல் சொல்ல,

"சற்றும் எதிர்பாராமல் இப்படி நடந்து விட்டதே.! நான் என்ன செய்வது!" --- என்று யாரோ பதில் கூறுவது கேட்டது.

காவலாளிகள் வரும் நேரம் இல்லையே. யார் இவ்வாறு பேசியபடி வருவது என்று சற்றே தலையை உயர்த்தி அறையின் வெளியே தென்படும் பாதையை கவனித்தான், விதசோகன்.

காலணிகளின் சத்தம் வெகு அருகாமையில் கேட்க, தொலைவில் இருந்த கப்பரை பிரதிபலித்த மங்கிய ஒளியில் வருபவரை கவனித்தான், விதசோகன்.

இருவர் நடந்து சென்றனர். சென்றனர் அல்ல.! சென்றது! தலையில்லாத இரு முண்ட உடல்கள் மட்டும் நடந்து சென்றுகொண்டிருந்தன. இரண்டிலும் தலைகள் இல்லை. ஆனால் இடப்புறம் சென்ற உடல் வலக்கரத்தினால் தனது வயிற்றுப்பகுதியைத் தடவிக் கொண்டே சென்ற விதத்தைப் பார்த்து யூகித்தான், அது சுசிமாவின் உடல் என்பதை.

மறுநாள் காலைக் கடன்களைக் கழிப்பதற்காக சித்திரவதைக் கூடத்தை ஒட்டிய செயற்கை குளத்தின் அருகே கைதிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே காலைக்கடன்களைக் கழிக்க ஏராளமான மண்பானைகள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு கல்யானை உருவத்தின் துதிக்கையில் இருந்து நீர் பொழிந்துகொண்டே இருக்கும். அதில்தான் அவர்கள் வரிசையாக நீராட வேண்டும். பழைய வேட்டிகளைக்

https://telegram.me/aedahamlibrary

களைந்து புதிய வேட்டிகளை அணிந்து, சிறைச்சாலையின் அடுக்களைக்குச் செல்ல வேண்டும். அங்கே வழங்கப்படும் கூழினை அருந்திவிட்டு அவரவர்கள் அறைக்குத் திரும்ப வேண்டும். இதுவே அன்றாட சிறைச்சாலையின் நிகழ்வுகள்.

யானை துதிக்கையின் அடியில் நின்று நீராடிக் கொண்டிருந்த விதசோகன் தனக்குப் பின்னால் இறுதியாக நின்ற கைதியைப் பார்த்தான். சற்றே முதியவனாகக் காட்சி தந்த அவரிடம், முந்தைய இரவு தான் பார்த்த காட்சியைப் பற்றி கேட்டான்.

“இரண்டு தலையில்லா முண்டங்கள் நடுநிசியில் குகை பாதையில் செல்வதைப் பார்த்தேன். என்னால் நம்ப முடியவில்லை!” --- விதசோகன் கூறியதும், அந்த முதியவன் சிரித்தான்.

"புதிய சிறைச்சாலைக்கு நாம் வந்த நாள் முதலாக நான் அந்தக் காட்சியைக் காண்கிறேன். உங்களுக்குத் தெரியாதா இளவரசே. இருவரில் ஒன்று உங்கள் தமையனார் சுசிமாவின் உடல். மற்றொன்று யார் தெரியுமா.?” --- முதியவர் கேட்டார்.

“யார்?” - வியப்புடன் கேட்டான் விதசோகன்.

"உங்கள் பாட்டியார் துர்தராதேவியின் தமையன் பிபத்த நந்தனின் உடல்தான் மற்றது. உங்கள் கொள்ளுப் பாட்டன், தானநந்தா, அவர் மகன் பிபத்தன், மகள் துர்தரா, இப்போது உனது அண்ணன் சுசிமா என்று அனைவருமே தலை சீவப்பட்டுதானே இறந்தனர். எனவே உங்கள் குடும்ப முன்னோர்கள் முண்டங்களாக அலைகின்றனர். அன்று ஒரு நாள், பிபத்தன் உடலும், துர்தராவின் உடலும் இந்தப் பக்கமாக வந்தன. மவுரியம் நசித்துப் போகும் என்று அப்போது துர்தராவின் குரல் கூறியதைக் கேட்டேன்!” - அந்த கிழவர் கூறியதும், விதசோகனின் மனதில் ஒரு எண்ணம். எப்படியாவது விடுதலையைப் பெற்று, முன்னோர்கள் நற்கதியை அடைய வைக்க, புத்த கயை சென்று சங்கத் தலைவரை வேண்டினால் என்ன. போதி மரத்தடியில் சாந்தி கிரியைகளைச் செய்தால் அவர்களுக்கு நற்கதி கிடைக்கும் அல்லவா. அண்ணன் அசோகனிடம் மன்றாடியாவது விடுதலை பெற்று இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். ஆனால் அசோகனை இவனால் எப்படி அணுக முடியும்.? யோசித்தபடி சிறையில் கிடந்தான், விதசோகன்.

இந்த நிலையில்தான், சிற்றப்பனைக் காண சிறைக்குப் போக வேண்டும்

https://telegram.me/aedahamlibrary

என்று குணாளனிடம் சங்கமித்தா கூற, அதனை அசோகனிடம் அவன் தெரிவித்து விட்டிருந்தான்.

தான் நரகத்திற்குச் சென்று சிற்றப்பனைக் காண வேண்டும் என்று சங்கமித்தா கூறியதும், அதிர்ந்து போய் பத்மாவதியை நோக்கினான், அசோகன். பொறுமையின் பூஷணமாகவும், மதியூகியாகவும், கணவனின் மீது மட்டற்ற காதலைக் கொண்டிருப்பவளுமான பத்மாவதி, தான் மைத்துனனுக்கு ஆதரவாகப் பேச வேண்டிய கட்டம் வந்து விட்டதை உணர்ந்தாள்.

"மன்னரே! எனது மைத்துனருக்கு அரசியல் ஆசை எள்ளளவும் இல்லை. அவர் புத்த கயைக்குச் சென்று சங்கத்திற்கு பணி புரியவே விரும்புகிறார். தாங்கள் அவரை சிறையினில் அடைத்து வீணாகத் துன்புறுத்துகிறீர்கள். அவரையும் நம்மோடு வாழவைத்து அவருக்கு மணமுடித்து, அனைவரும் சுகமாக வாழ்வோம். மைத்துனரை எனது பொறுப்பில் விடுங்கள். அவரை ஒரு நல்ல மனிதராக என்னால் நடமாட வைக்க முடியும். மூத்தவரைக் கொன்றதற்குப் பரிகாரமாக இளையவரை வாழ வைப்போம்." நயமாக பத்மாவதி கூற, குணாளனும், சங்கமித்தாவும் அசோகனின் இருபுறமும் நின்று அவனிடம் இறைஞ்சினர்.

"தந்தையே! சிறிய தந்தையைக் காண வேண்டும் போல் இருக்கிறது. அவரை அழைத்து வாருங்கள்!" என்று வேண்ட, தூசு படிந்திருந்த அசோகனின் இதய வீணையில் பாசத் தந்தியை மீட்டி விட்டனர், பத்மாவதியும், குழந்தைகளும்.

திடீரென்று, ---

அசோகன் தனது விடுதலையை அறிவித்ததோடு, தலைமை அமைச்சரையே அனுப்பி அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றதைக் கண்டு திகைத்தான், விதசோகன். தனது முன்னோர்களுக்கு தான் நற் கிரியைகளைச் செய்ய வேண்டும் என்று வேண்டிய பலன், அவனது முன்னோர்களே அதற்காக வசதிகளைச் செய்து தருகின்றனர் போலும், என்று நினைத்தபடி பத்மாவதியின் மாளிகைக்குள் நுழைந்தான், விதசோகன்.

கண்கள் பனிக்க, பாய்ந்து வந்து அவனைக் கட்டிக்கொண்டான், அசோகன்.

https://telegram.me/aedahamlibrary

"வாருங்கள் மைத்துனரே! கெட்ட காலம் முடிந்து இனி நல்ல வேளை பிறந்து விட்டது. நாம் அனைவரும் ஒற்றுமையாக சுகித்து வாழ்வோம்!” - பத்மாவதி தனது மைத்துனருக்கு விருந்து பரிமாறியபடி கூறினாள்.

“சிற்றப்பா!” - குணாளனும், சங்கமித்தாவும் விதசோகனைச் சுற்றி வந்து கொண்டாட, துக்கம் நெஞ்சை அடைக்க, வாயில் போட்ட அன்னக்கவளத்தை விழுங்க முடியாமல் கண்ணீர் சிந்தினான், விதசோகன்.

“அண்ணா! உனது வீரவாளுக்குத் தடவப்படும் தைலமாக நான் இருப்பேனே தவிர, உனக்கு எதிராக ஒரு கணமும் செயல்படமாட்டேன்.!” - உணர்ச்சியுடன் அவன் கூற, அசோகன் அவனைத் தேற்றினான்.

"தம்பி! உன்னை சிறையில் வைத்தது நான் செய்த தவறு. உன்னையும், சுசிமாவையும் ஒரே தட்டில் வைத்ததும் தவறு. சுசிமாவின் ஆதரவாளர்களது நடவடிக்கைகளினால் உன் மீது சந்தேகம் தோன்றியதே தவிர வேறு என்ன. என்னை மன்னித்து விடு.! கவலையை விடு! உனக்கு விரைவில் ராஜாங்கப் பதவியை அளிக்கிறேன். இனி நீயே தக்ஷ சீலத்தின் தலைவன். அங்கே அடிக்கடி புரட்சிகள் வெடிக்கின்றன. நீ ஊர்த்தலைவனாக இரும்புக் கரத்துடன் புரட்சியாளர்களை நசுக்க வேண்டும்!" - அசோகன் கூறினான்.

"அரசே! தக்ஷ சீலத்தை அடக்குவதற்கு மைத்துனர் போவதற்கு முன்பாக, அவரை அடக்கி ஆள, ஒரு தலைவி தேவை அல்லவா? உடனடியாக, நம் மைத்துனருக்கு நான் பெண் பார்க்கத் துவங்குகிறேன்.!" - பத்மாவதி சொல்ல, விதசோகன் வெட்கத்துடன் மறுபுறமாகத் தலையைத் திருப்பினான்.

"உன்னை மீண்டும் நரகத்திற்கு அனுப்பப் போகிறேன்!” - திடீரென்று அசோகன் கூற, அனைவருமே திகைத்து அவனைப் பார்த்தனர்.

"திருமணம் என்னும் நரக சிறையில் உன்னைத் தள்ளப் போகிறேன்.!” --- அசோகன் சிரித்தபடி கூற, விதசோகன் நிம்மதியுடன அண்ணனைப் பார்த்தான்.

"அப்படிப் பார்த்தால், உங்களுக்கு நான்கு நரகங்கள் கிட்டியிருக்கிறது.!” --- சிரித்தபடி கூறினான், விதசோகன். ஆனால் அவன் கூறியதை

https://telegram.me/aedahamlibrary

அசோகன் ரசிக்கவில்லை என்பதை அவன் முகமே காட்டிக்கொடுத்தது.

***

"மைத்துனரே! இந்தப் பெண்ணை பிடித்திருக்கிறதா. கலிங்க நாட்டு இளவரசி திஸ்ஸரக்கா. இன்றுதான் அவளது ஓவியத்தை தூதுவர்கள் கொண்டு வந்தனர்." ---- பத்மாவதி நீட்டிய ஓவியத்தை நிமிர்ந்து நோக்கிய விதசோகனின் கண்களின் முன்பாக மலர் மழை பெய்தது. இவனுக்கு இவ்வளவு பேரழகியா?

பேரழகின் மொத்த உருவமாகத் திகழ்ந்தாள் திஸ்ஸரக்கா. அசோகனின் மனைவிகளில் கூட யாரும் இவ்வளவு பேரழகு வாய்ந்தவள் அல்லவே. இது நிச்சயம் நிம்மதி இல்லாமல் அலையும் இவனது முன்னோர்களின் ஆசிதான். தலையில்லாத உடலுடன் இருந்தாலும், சுசிமாவின் ஆன்மாவை அல்லவா தரிசித்திருக்கிறான். அவனது ஆசிதான், வாழ்க்கையை வெறுத்திருந்த இவனுக்கு, திடீரென்று வாழ்க்கையில் பிடித்தம் ஏற்படும் அளவுக்கு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

"என்ன சொல்கிறீர்கள் மைத்துனரே?" - பத்மாவதி ஆவலுடன் கேட்டாள்.

"எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது, அண்ணியாரே! இவ்வளவு பேரழகு வாய்ந்த கலிங்கத்து இளவரசி என்னை திருமணம் செய்துகொள்ள சம்மதிப்பாளா?" --- விதசோகன் கேட்டான்.

"கலிங்க அரசரே சம்மதத்துடன்தான் ஓவியத்தை அனுப்பி இருக்கிறார். உமது சம்மதம் மட்டுமே தேவை. மற்றதை உமது தமையனாரும், நானும் பார்த்துக் கொள்கிறோம்.!" - பத்மாவதி கூறினாள்.

"நான் சம்மதிக்கிறேன், அண்ணியாரே!" - விதசோகன் சிரித்தபடி கூறினான்.

அப்போது ----

அசோகன் உள்ளே வந்தான். பத்மாவதி சிரித்தபடி திஸ்ஸரக்காவின் ஓவியத்தை அசோகனிடம் நீட்டினாள்.

"உங்கள் தம்பி திருமணம் செய்துகொள்ள இருக்கும் நங்கையைப்

https://telegram.me/aedahamlibrary

பாருங்கள். கலிங்கத்து இளவரசி திஸ்ஸரக்கா!" - பத்மாவதி நீட்டிய ஓவியத்தை வாங்கிப் பார்த்தான், அசோகன்.

பேரழகி திஸ்ஸரக்காவின் ஓவியத்தை வெறித்த அசோகன், தன்னை மறந்து விட்டான். இந்தப் பேரழகுப் பெட்டகத்தையா தம்பி மணக்க இருக்கிறான். அவனுள் பொறாமை பரவ, வெட்கத்துடன் நின்றிருந்த தம்பியைப் பார்த்தான்.

'அடேய்... விதசோகா! உன்னை ஏன் தான் சிறையினில் இருந்து விடுவித்தேனோ.? இந்த திஸ்ஸரக்கா இவ்வளவு நாட்களாக எனது கண்களில் ஏன் படவில்லை.'

"பத்மாவதி! நான் எனது சகோதரனோடு தனியாகப் பேச வேண்டும். நீ சற்று வெளியே நில்!" - அசோகன் கட்டளையிட, பத்மாவதி, சகோதரர்கள் பேசட்டும் என்று வெளியேறினாள்.

அன்று இரவு உணவு உண்பதற்காக, பத்மாவதி விதசோகனைத் தேடியபோது, அவன் கொடுத்ததாக பணியாளன் ஒருவன் பத்மாவதியிடம் ஓலையை நீட்டினான்.

"அண்ணியாரே! எனக்கு திருமணத்தில் நாட்டம் இல்லை. நான் புத்த கயை சென்று சந்நியாசம் பெற்று புத்த பிட்சுவாக மாற உள்ளேன். உங்கள் அன்புக்கு நன்றி.

விதசோகன்.

பத்மாவதி கலங்கிப் போய் கையில் ஓலையுடன் நின்றுகொண்டிருந்தாள். அரண்மனை நந்தவனத்தில் அவர்களுடைய நான்கு மாளிகைகளின் வரிசையில் ஐந்தாவதாக ஒரு மாளிகையை எழுப்ப தனது கணவன் அசோகன் திட்டமிட்டிருந்ததை அப்போது அவள் உணரவில்லை.

*** கி.மு. 268 கி.மு. 232 வரை ஆட்சி செய்த அசோகனின் மனைவியரும், குழந்தைகளும்:**

**1) விதிஷா தேவி (முதல் மனைவி) மகன், மகள்: மகிந்தா, சங்கமித்தா.**

**2) கார்வாகி (இரண்டாம் மனைவி) மகன்: திவாரா**

https://telegram.me/aedahamlibrary

**3)** அசந்தமித்ரா **(**பட்டத்து அரசி**)** மகன்**:** தசரதன்

**4)** பத்மாவதி **(**நான்காம் மனைவி**)** மகன்**:** குணாளன்

**5)** திஸ்ஸரக்கா **(**கலிங்கத்து இளவரசி**)** குழந்தை இல்லை

*****

https://telegram.me/aedahamlibrary

# 37. கலிங்கத்துப் பைங்கிளி

கலிங்க மன்னன் ஸ்ரீமகிமா தாமோதராவின் கண்களை சினம் மறைத்தது. அவனால் தொடர்ந்து அந்த ஓலையை வாசிக்க இயலாமல் போக, தனது தலைமை அமைச்சரிடம் அலட்சியமாக அதனை தூக்கி எறிந்தான்.

ஒரு சாதாரண மனிதனின் கண்களை சினம் மறைத்தால் அங்கே தர்க்கமோ, விவாதங்களோ சம்பவிக்கும். ஒரு மன்னனுக்கு சினத்தினால் கண்கள் சிவந்தால், தொடர்வது போர் தானே.? அந்த ஓலையினை மன்னன் ஸ்ரீமகி வீசி எறிந்த விதத்தினைக் கண்டதுமே, போர் நிச்சயம் என்பது தோன்றி விட்டது, தலைமை அமைச்சருக்கு. அந்த ஓலையினை மவுரிய மன்னன் அசோகன் தான் அனுப்பியிருந்தான். அதைக் கொணர்ந்த தூதன், ஒரு புறமாக நின்று கலிங்க மன்னனின் உக்கிரத்தை கவனித்துக் கொண்டிருந்தான்.

"அசோகன் அனுப்பிய ஓலையினில் உள்ள தகவலை அவையில் உள்ள அனைவரும் அறியட்டும், தலைமை அமைச்சரே. உரக்க வாசியுங்கள்!" --- ஸ்ரீ மகிமா கட்டளையிட, தலைமை அமைச்சரும் ஓலையினை வாசிக்கத் துவங்கினார்.

கலிங்க மன்னர் ஸ்ரீ மகிமா தாமோதராவுக்கு, மவுரிய மன்னனின் வந்தனங்கள்.

எனது சகோதரன் விதசோகனுக்கு தங்கள் மகள் திஸ்ஸரக்காவை திருமணம் செய்து தருவதாக வாக்களித்திருந்தீர்கள். எனது தம்பியோ, பௌத்த கயைக்குச் சென்று பிக்ஷுவாக சங்கத்தினில் சங்கமித்து விட்டான். இருப்பினும், தங்களுடன் செய்த ஒப்பந்தத்தின்படி, தங்கள் மகள் திஸ்ஸரக்காவை நானே திருமணம் செய்து கொள்ள நிச்சயித்திருக்கிறேன். இது தொடர்பாக தங்களது முடிவை எதிர்பார்க்கிறேன்.

மன்னன் அசோகன்.

“ஹா... ஹா...!” --- என்று ஆங்காங்கே கூக்குரல்கள் எழுந்தன.

இதென்ன அநியாயம்! ஏற்கனவே நான்கு மனைவிகளை

https://telegram.me/aedahamlibrary

வைத்திருப்பவன். அவன் மூத்த மகன் குணாளன் பதினேழு பிராயங்களையும், மகள் சங்கமித்தா பதினாறு பிராயங்களையும் எய்தி விட்டார்கள். அவன் மகள் சங்கமித்தாவின் வயது தானே நமது திஸ்ஸரக்கா தேவிக்கு ஆகின்றது. தந்தையின் நிலையில் இருக்கும் அசோகன் நம் இளவரசியாரை எப்படிப் பெண் கேட்கலாம்? - தலைமை அமைச்சர் கர்ஜித்தார்.

"தனது மைத்துனன் விதசோகனுக்குத்தான் அசோகனின் மனைவி பத்மாவதி என் மகளைக் கேட்டிருந்தாள். அவனுக்கு பெண்ணைத் தருவதற்கே நான் யோசித்தேன். அவனுக்கும் வயது அதிகம்தான். ஆனால், அதையும் கடந்து அவன் பிரம்மச்சாரி. மெத்த படித்த மேதாவி. பெண்களை மதிப்புடன் நடத்துபவன் என்பதாலேயே அவனுக்கு என் மகளைத் தர இசைந்தேன். ஆனால், பெண்களை சம்போகப் பதுமைகளாக நடத்தும் அசோகனுக்கு என் மகளை ஒரு போதும் பலி கொடுக்க இசைய மாட்டேன்!” - ஸ்ரீ மகிமா ஆவேசத்துடன் கூறினான்.

“மன்னரே! தாங்கள் கூறுவது நியாயமான சொற்கள். வியாபாரியின் மகள், விதிஷாதேவி, காட்டுவாசியின் மகள் கார்வாகி, நடனமாதின் மகள் அசிந்தமித்ரா, வேதியனின் மகள் பத்மாவதி என்பர்? இதுவரை மன்னர் மகளை மணக்காதவனுக்கு கலிங்கத்தின் தலைமகளை மணக்கும் எண்ணம் எப்படி வந்தது? அதுவும் தம்பிக்காக பேசி வைக்கப்பட்ட பெண்ணை தானே மணக்க ஆசைப்படுவது, அவனது கீழ்த்தரமான புத்தியைத்தான் புலப்படுத்துகிறது.

அவனது ஆசையை முளையிலே கிள்ளி ஏறிய வேண்டும்!” - தலைமை அமைச்சர் கூறினார்.

மன்னரின் ஆலோசகரும், அவரது சிற்றப்பனுமான, தருமசிந்தர் நிதானமாக தனது இருக்கையிலிருந்து எழுந்து நின்றார்.

"ஸ்ரீ மகிமா! அவசரப்படாதே. மவுரிய மயில் பாரத தேசத்தின் அனைத்து பகுதிகளிலும் பறந்து சென்று எச்சமிட்டு விட்டது. நமது கலிங்கம் தான் பாக்கி. காந்தார தேசத்தில் துவங்கி, தக்ஷிணத்தில் ஸ்வர்ணகிரி வரை மவுரியம் பரவி விட்டது. நாம் செய்த நல்லகாலம், நமது கலிங்கத்தை மட்டும்தான் விட்டு வைத்திருக்கிறது மவுரியம். நமது நாட்டின் மீது படையெடுத்து வராமல், பெண் கேட்டு தூதுரைத்திருக்கிறான், அசோகன். அந்த நல்லிணக்க வேண்டுகோளை, நமது ஆத்திரமான பேச்சுகளால் உக்கிரமாக மாற்றி, போர் மூளுவதற்கு நாம் காரணமாக

https://telegram.me/aedahamlibrary

இருக்க வேண்டாம்! இப்போது போரைத் துவங்கும் நிலையில் நமது கலிங்கம் உள்ளதா என்பதனை யோசிக்க வேண்டும்!" --- தருமசிந்தர் கூற,

அவரை யோசனையுடன் நோக்கினான், மன்னன்.

"பின் இந்த பிரச்னையை எப்படி அணுகலாம் என்று நினைக்கிறீர்கள்?" --- மன்னன் கேட்டான்.

"தம்பிக்கு பேசிய பெண்ணை அண்ணன் தனக்கு கேட்கிறான். நாம் அப்பன் கேட்ட பெண்ணை பிள்ளைக்குப் பேசுவோம். அவனுடைய மகன் குணாளனுக்கு திஸ்ஸரக்காவை தரச் சித்தமாக இருப்பதாக நாம் கூறுவோம்!" - தருமசிந்தர் கூறினார்.

தலைமை அமைச்சர் உற்சாகத்துடன் கூறினார். "நன்று கூறினீர், தருமசிந்தரே! அசோகனின் உக்கிரத்தைக் கிளப்பாமல், போரைத் தவிர்க்கவும் ஒரு நல்ல யோசனையைக் கூறியுள்ளீர். குணாளன், நமது திஸ்ஸரக்காவிற்கு மிகப் பொருத்தமானவர்.!"

மன்னன் மவுரியத் தூதனை நோக்கினான். "தூதரே இன்று மாலைக்குள் உங்கள் மன்னரது ஓலைக்கு பதில் தரப்படும். நீர் சற்று இளைப்பாறும்!" என்றவன் தலைமை அமைச்சரை நோக்கி தலையசைத்தான். தகுந்த பதிலை அசோகனுக்கு அனுப்புங்கள் - என்கிற சேதி அதில் தொக்கி இருந்தது. குணாளனின் ஓவியம் திஸ்ஸரக்காவுக்குக் காட்டப்பட்டது.

***

ஸ்ரீமகிமாவின் பதிலை தாங்கிக்கொண்டு ஓலையைச் சுமந்து வந்த தூதன், அரண்மனைத் தலைவரின் முன்பாக நின்றான். மன்னருக்கு ஓலை வந்திருக்கிறது. அதை அவரிடம் சேர்ப்பிக்க வேண்டும். மன்னர் எங்கே இருக்கிறார்? என்கிற கேள்விகளை தனது பார்வையில் கோர்த்து, அவரை தனது களைப்பு மிகுந்த கண்களால் ஏறிட்டான்.

அரண்மனைத் தலைவர் அவன் கண்களை ஆவலுடன் நோக்கினார். மன்னர் திஸ்ஸரக்காவை பெண் கேட்ட விவகாரம் இன்னும் அரண்மனையில் பலருக்குத் தெரியாது. குறிப்பாக மகாராணிகள் யாருமே இந்த விவகாரம் குறித்து இன்னும் அறிந்திருக்கவில்லை. அரண்மனைத் தலைவருக்கு மட்டும் அரசல் புரசலாக ஏதோ விவரம்

https://telegram.me/aedahamlibrary

புரியும். திஸ்ஸரக்காவை அசோகனுக்குக் கொடுக்க இசைந்தாரா கலிங்க மன்னன் என்கிற கேள்வி அவனது அந்தப் பார்வையில் பிரதிபலிக்க, தூதன் எவ்வித உணர்வையும் பிரதிபலிக்காமல், அமைதியாக நின்றான்.

"மன்னர் ராணி பத்மாவதியாரின் மாளிகையில் தான் இருக்கிறார்!" --- அரண்மனைத் தலைவன் கூற, தூதன் அந்த மாளிகைக்கு விரைந்தான்.

மன்னர் இருக்கையில் அமர்ந்திருக்க, பத்மாவதி அவனுக்கு வழக்கம் போல, விசிறிக்கொண்டிருந்தாள்.

தூதன் வந்து தலைவணங்கி, "மன்னா! கலிங்க மன்னர் பதில் ஓலை அனுப்பியிருக்கிறார்!" - தூதன் சொல்ல, ஆர்வத்துடன் அதனை வாங்கினான், அசோகன். மின்னல் வேகத்தில், தனது ஓரக்கண்ணால், பத்மாவதியின் பக்கமாக ஒரு பார்வை பார்த்தான்.

பத்மாவதி கூரிய அறிவு படைத்தவள். திடீரென்று, கணவனும் அவனது தம்பியும், ஏகாந்தத்தில் உரையாடிய அன்றே, மைத்துனர் மணம் வேண்டாம் என்று பௌத்த பிட்சுவாக புத்த சங்கத்தில் சங்கமித்து விட்டான், என்கிற சேதி செவியை வந்து அடைந்ததுமே, அவள் சிந்தையில் பளிச்சென்று ஒரு மின்னல் வெட்டியது. பேரழகி திஸ்ஸரக்காவின் ஓவியத்தைக் கண்டது முதல் அசோகன் பெரும் யோசனையில் இருப்பதை உணர்ந்திருந்தாள். அவனுக்கு அவளது ஓவியத்தைக் காட்டியது தவறோ!

சகக் களத்திகளுடன் நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்த போதுதான் திஸ்ஸரக்காவை விதசோகனுக்குப் பேசி முடித்ததாகவும், முதலில் திருமணத்துக்கு சம்மதித்த மைத்துனன், அசோகனைச் சந்தித்துப் பேசியவுடன் திருமணத்தை வெறுத்து விட்டு, பிட்சுவாக மாறி விட்டதைக் கூறி குறைபட்டுக்கொள்ள, விதிஷாதேவி, கார்வாகி மற்றும் அசிந்தமித்ரா மூவருமே உறைந்து போய் நின்றனர்.

“என்ன காரியம் செய்தாய், பத்மா! எங்களுக்கு மைத்துனருக்குத் திருமணம் செய்யத் தெரியாதா? நமது மன்னரைப் பற்றி தெரிந்துமா அவரிடம் அந்த அழகியின் ஓவியத்தைக் காட்டினாய்?” - விதிஷாதேவி கடிந்து கொண்டாள்.

அசிந்தமித்ரா அரண்மனையில் ஒரு பக்கமாக நின்ற மாமரம் பக்கமாக

https://telegram.me/aedahamlibrary

தனது விரலைச் சுட்டிக்காட்டினாள்.

"அதோ... அந்தப் பகுதியில்தான் திஸ்ஸராக்காவின் அந்தப்புரம் அமையக்கூடும்!" - நகைச்சுவையாகச் சொன்னாளோ, அல்லது மனக்குமுறல்தான் அப்படி வெளிப்பட்டதோ, இப்போது தூதன் கொணர்ந்த பட்டோலையைப் பிரிக்கும்போது, அசோகனின் கண்களில் தென்பட்ட அந்த வெளிச்சம், அநேகமாக திஸ்ஸரக்காவின் அந்தப்புரம் அமைய உள்ளதை ஊர்ஜிதப்படுத்தியது.

ஓலையினைப் பிரித்த அசோகன் வெகுண்டு, குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டான்.

"எவ்வளவு ஆணவம் அந்த கலிங்க மன்னனுக்கு!" குமுறியபடி அசோகன் நடக்க, பத்மாவதி அவன் முகத்தையே வெறித்தாள். பிறகு துணிவினை வரவழைத்துக்கொண்டு, "என்ன நடந்தது, அரசே?" என்றாள்.

“விதசோகனுக்கு மாற்றாக உன் மகன் குணாளனுக்கு, தனது மகள் திஸ்ஸரக்காவை மணமுடிக்கத் தயாராக இருப்பதாகச் சேதி அனுப்பியுள்ளான், கலிங்க மன்னன்!” - அசோகனின் குரலில் காழ்ப்புணர்ச்சி மிகுந்திருந்தது.

“இது என்ன நியாயம்? சிற்றப்பனுக்கு பேசியிருந்த பெண்ணை, மகன் மணப்பதா?” - பத்மாவதி கேட்டாள்.

தம்பிக்கு பேசப்பட்ட பெண்ணை, அண்ணன் கேட்டதால்தான் இத்தகைய விபரீதம் என்று அவளிடம் விளக்கும் துணிவு அசோகனுக்கு இல்லை.

என்ன செய்வது என்று யோசித்தபடி நின்றான், அசோகன்.

"வேண்டவே வேண்டாம், அரசே! திஸ்ஸரக்கா நமது மவுரியத்திற்கு வரவே வேண்டாம். விதசோகன் பிட்சுவாகி விட்ட நிலையில், இனி அவளுக்குப் பொருத்தமான கணவன் யாரும் இங்கே இல்லை!” பத்மாவதி தான் கிளப்பிய விவகாரத்திற்கு தானே ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட எண்ணி இவ்வாறாகக் கூறினாள். ஆனால் தான் ஏற்கனவே புலி வாலைப் பிடித்து விட்டிருந்தாள், என்பதை அவள் அப்போது அறிந்திருக்கவில்லை.

https://telegram.me/aedahamlibrary

* அங்கா, வங்கா, கலிங்கா, புண்டரா, சுகுமா என்கிற ஐந்து சகோதரர்கள் உருவாக்கிய நாடுகளில் கலிங்கன் என்பவனால் உருவாக்கப்பட்ட நாடு என்று மகாபாரதம் கூறுகிறது. மகேந்திரகிரி மலை (தற்போது கஞ்ஜிம் மாவட்டம்) யை மையமாகக் கொண்டிருந்தது, கலிங்க நாடு இதன் தலைநகரம் தந்தபுரம்!

It is described as "Calingae" in Megasthenes' Indica (3rd century BCE).

திஸ்ஸரக்கா திசை ரஷிதா என்கிற பெயரின் மருவு. சிரிமகிந்தா என்னும் இலங்கை வேந்தனின் மகள் என்று தவறாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீமகா தாமோ என்கிற கலிங்க மன்னனின் மகளாகவே இவள் இருந்திருக்கக் கூடும். காரணம், கலிங்கத்தின் மீது அசோகன் படை எடுத்ததற்கே திஸ்ஸரக்கா தான் காரணம். சிங்களர்களே கலிங்கத்திலிருந்து சென்று குடியேறியவர்கள் என்பதால், திஸ்ஸரக்கா கலிங்க இளவரசி தான் என்பது ஊர்ஜிதம் ஆகிறது. அவள் மீது கொண்ட காதலினால்தான் கலிங்கத்தின் மீது அசோகன் படையெடுத்தான் என்றும் கூறலாம்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 38. அசோகன் இனி சோகன்

திஸ்ஸரக்கா எனக்கே!

இதுவே அசோகனின் மனத்தினுள் எதிரொலித்துக் கொண்டிருந்த போர் முழக்கம். காந்தார தேசம் தொடங்கி தட்சிணத்தில் உள்ள சுவர்ணகிரி வரை தனது ஆதிக்கத்தை செலுத்திக்கொண்டிருந்த மவுரியர்கள், கலிங்கத்தை நோக்கி நகரத்துவங்கினர். கலிங்கத்தின் ஒரு பகுதியாக விளங்கிய உத்கலத்தின் மீது அசோகனுக்கு என்றுமே தனி மதிப்பு உண்டு. உன்னதமான கலைகள் தோன்றிய இடம் உத்கலை தேசம். அதனாலேயே இதுவரை அவன் கலிங்கத்தின் மீது படையெடுப்பதை தவிர்த்திருந்தான். மகாபாரதம், மற்றும் கல்கி புராணத்தில் போற்றப்பட்ட கலிங்கத்தின் தொன்மையையும், பெருமைகளையும் குலைக்கக் கூடாது என்று பாலியத்தில் சாணக்கியர் அவனுக்கு போதித்திருந்தார். திஸ்ஸரக்காவின் பேரழகிற்கு முன்பாக கலைகளாவது தொன்மையாவது, பெருமைகளாவது? அவள் எனது மஞ்சத்தில் கிடக்க வேண்டும், என்கிற வெறியை மவுரியப் போர் வெறியாக மாற்றி விட்டிருந்தான், அசோகன்.

அசோகன் தான் அனுப்பிய ஓலையினால் கோபப்படுவான் என்றாலும், படை எடுத்து வருவான், அதுவும் லட்சக்கணக்கான படையாட்களோடு வருவான் என்று ஸ்ரீ மகிமா சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கடல் கோள் நிலத்தின் மீது பாய்ந்து மூடுவது போன்று, அசோகனின் படைகள் கலிங்கத்தின் மீது பரவித் தாக்கின. வாளை உயர்த்தக் கூட திராணி இல்லாமல், விரிந்து பரவிய அசோகனின் படைகளைக் கண்டு, ஆற்றில் குதித்து தற்கொலை செய்துகொள்ளும் விரக்தர்களைப் போன்று கலிங்கத்து வீரர்கள், மவுரிய வீரர்களின் தாக்குதல்களை ஏற்றபடி விழுந்தனர்.

அசோகன் தளபதிக்கு கட்டளையிட்டான். சிறுவர், பெரியவர், பெண்கள் என்று கருணை காட்டாதீர்கள். எதிர்பட்டவரை எல்லாம் வெட்டிச் சாயுங்கள். எனக்கு கலிங்கத்தைச் சேர்ந்த இருவர் மட்டுமே தேவை. ஒன்று ஸ்ரீ மகிமா தாமோ. மற்றவர் அவன் மகள் திஸ்ஸரக்கா.

மன்னனே கட்டளையிட்ட பிறகு, படைவீரர்கள் தயை காட்டுவார்களா என்ன. கலிங்கம் முழுவதும் குருதி ஆறு பொங்கிப் பெருகியது. எங்கு

https://telegram.me/aedahamlibrary

நோக்கினும் சடலங்கள். கலியின் கோர தாண்டவம் கலிங்கத்தில்தான் துவங்கியது.

அசோகனின் மவுரியம் கலிங்கத்தைக் கைப்பற்றியது. வெற்றி வீரனாக, கலிங்க அரண்மனையை நோக்கிப் புரவியில் சென்று கொண்டிருந்தான், அசோகன். வழியெங்கும் சடலங்கள் தோரணங்களாகத் தொங்கிக் கொண்டிருந்தன. கலிங்க மக்களின் குருதியினால் அவன் வரும் பாதை கழுவப்பட்டு, செம்மையாக்கப்பட்டிருந்தது.

காந்தாரம் முதல் கலிங்கம் வரை, இமய கிரி முதல் ஸ்வர்ண கிரி வரை எனது ராஜ்யம்! -

பெருமிதத்துடனும், பேருவகையுடனும் ஸ்ரீமகிமாவின் அரண்மனைக்குள் நுழைந்தான். தளபதி மன்னரை ஏற்கனவே கைது செய்து சங்கிலியால் பிணைத்திருந்தான். தந்தையின் பின்பாக மருண்ட விழிகளுடன், எட்டிப் பார்த்தபடி நின்றிருந்தாள் திஸ்ஸரக்கா.

ஸ்ரீமகிமாவின் முன்பாக நின்றான், அசோகன்.

"மகிமா! உன் மகளை நான் கேட்டபோது எனக்கு அளித்திருந்தால், அவளை வரவேற்க உமது அரண்மனை வாயிலில் இருந்து எனது மவுரிய அரண்மனையின் வாயில் வரை, மலர்களாலேயே நடைபாவாடை விரித்திருப்பேன். திஸ்ஸரக்காவை எனக்குத் தர மறுத்து, கலிங்க மக்களின் சடலங்களின் மீது என்னை நடக்க வைத்து விட்டாயே.!" --- இறுமாப்புடன் கூறினான், அசோகன்.

அவனை கோபத்துடன் பார்த்தான், மன்னன், ஸ்ரீ மகிமா.

“உன்னைப் போன்ற காமுகர்களை, கொடுங்கோலர்களை நிறைய பார்த்துவிட்டது இந்த உலகம். நீதான் நிரந்தர மன்னன் என்கிற நினைப்பா உனக்கு? காட்டுவாசியின் வம்சம்தானே. பண்பான குணமும், அஹிம்சையும் நீ எங்கே அறிந்திருக்கப் போகிறாய். எனது மக்களை நான் இதுவரை துன்புறுத்தியதில்லை. எனது மக்களுக்கு நன்மையைச் செய்த திருப்தியுடன் நான் மரணதேவியை வரவேற்கத் தயாராக இருக்கிறேன். வெற்றியில் நீ தோல்வியை அடைந்து விட்டாய். தோல்வியில் நான் வெற்றி அடைந்து விட்டேன். எனது மக்களுக்கு நான் துரோகம் செய்யவில்லை. அவர்களின் மனதில் நான் இன்னும் உயர்ந்துதான் நிற்பேன். ஆனால் கலிங்கத்து மக்கள் மத்தியில்

https://telegram.me/aedahamlibrary

மட்டுமல்ல. உனது மவுரிய மக்களின் மனசாட்சி கூட, கலிங்கத்தில் நீ கட்டவிழ்த்து விட்ட வன்முறையை நிந்தனை செய்து கொண்டிருக்கும் என்பதை மறந்து விடாதே!” - ஸ்ரீ மகிமா ஆவேசத்துடன் கூறினான்.

“இவன் பேச்சைக் கேட்கத்தானா, என்னை இவன் முன்பாக நிறுத்தினாய், தளபதி?" - உக்கிரத்துடன் அசோகன் கேட்க, அதையே தனக்குக் கிடைத்த உத்தரவாக எண்ணிய தளபதி, ஸ்ரீ மகிமனின் தலையை வெட்டி வீசினான்.

துடித்துக் கொண்டிருந்த தந்தையின் உடலையே வெறித்துப் பார்த்தாள், திஸ்ஸரக்கா.

"தந்தையே... கவலைப்படாதீர்கள். இந்த நாளை எண்ணி அசோகன் வருந்துவான், துடிப்பான். மவுரியத்தை நாசம் செய்கிறேன். அசோகனின் குடும்பத்தை சிதைக்கிறேன். கலிங்கத்தில் பெருகிய குருதிக்கு மவுரியம் பதில் கூறியே ஆக வேண்டும்.!" தந்தையின் சடலத்தை வெறித்தபடி தனக்குள் சபதம் ஒன்றை செய்துகொண்டிருந்தாள், திஸ்ஸரக்கா.

அசோகனின் வலிமையான கரங்கள், திஸ்ஸரக்காவின் இடையைச் சுற்றி வளைத்தன. "பேரழகுப் பெட்டகமே. எனது அந்தப்புரத்தினை அலங்கரிக்க வா!” என்றபடி திஸ்ஸரக்காவை தூக்கி தனது அகன்ற தோளினில் சரித்துக்கொண்டு தனது இரதத்தை நோக்கி நடந்தான், அசோகன்.

***

திஸ்ஸாக்காவின் இயற்பெயர் திஷா ரக்ஷிதா! கலிங்கத்து மக்கள் தங்கள் இளவரசியைச் செல்லமாக திஸ்ஸரக்கா என்று அழைக்க அந்தப் பெயரே அவளுக்கு நிலைத்து விட்டது. ஆனால் அற்புத அழகியாக, தேவலோகத்து மங்கையைப் போன்று ஜொலித்த அவளுக்கு பெயர் இன்னும் சற்று கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும் என்று நினைத்த அசோகன், அவளது பெயரை ரக்ஷா என்று மாற்றியிருந்தான். அவளை அப்படித்தான் அழைக்க வேண்டும் என்று அனைவருக்கும் கட்டளையிட்டிருந்தான்.

மற்ற மனைவிகளைக் காட்டிலும் தனக்கு ரக்ஷா உகப்பானவள் என்பதைத் தெரியப்படுத்த, அரண்மனை நந்தவனத்தில் அவளுக்கு

https://telegram.me/aedahamlibrary

பளிங்கு மாளிகை ஒன்றை கட்டினான். கலிங்கத்துச் செல்வங்களை கொள்ளையடித்து வந்த மவுரியர்கள், கலிங்கத்துச் செல்வத்திலேயே அவளது மாளிகையை நிர்மாணித்தனர். நீரூற்றுகளும், நந்தவனங்களும், தங்கத் தகடுகளால் அலங்கரிக்கப்பட்ட சுவர்கள் என்று மிகவும் பிரம்மாண்டமாகக் காணப்பட்டது, ரக்ஷாவின் மாளிகை. கலிங்கத்தில் இருந்து கடத்தி வரப்பட்ட சிறந்த பெண்களையே ரக்ஷாவுக்குத் தாதிகளாக நியமித்திருந்தான் அசோகன்.

அவர்கள் ரக்ஷாவுடன் தனித்து இருக்கையில் தங்கள் வேதனைகளைக் கூறிக் குமுற, ரக்ஷாவின் உக்கிரம் அதிகரிக்கும்.

"இளவரசி. எனது காதலனுடன் பேசிக்கொண்டிருந்த போதினில், மவுரியப் படைகள் எங்களை சூழ்ந்தன. எனது காதலனுக்காக நான் வைத்திருந்த பொக்கிஷத்தை அவர்கள் சுரண்டி எடுத்துக்கொண்டார்கள்!" - கண்ணீருடன் புலம்பினாள் ஒருத்தி.

"இளவரசி.! ஒரு பெரிய குடியில் பிறந்த நான், மவுரிய வெறியர்களின் அடிமையாக மாற்றப்பட்டேன்.!" இன்னொரு பெண் புலம்பினாள்.

"நான் பெற்ற குழந்தைக்கு பாலுட்டிக் கொண்டிருந்த வேளையில், குழந்தையை வீசி எறிந்துவிட்டு, என்னைக் கடத்தி வந்தார்கள்!" - ஒரு பெண் கதறினாள்.

இந்தக் கதைகளைக் கேட்டவுடன் ஏற்கனவே வஞ்சம் தீர்க்க வேண்டும் என்று உறுதி பூண்டிருந்த திஸ்ஸராக்காவின் இதயம் இரும்பாகக் கனத்தது.

"அசோகா! உனது பெயருக்கு சோகமற்றவன் என்கிற பொருளாமே. இனி உன் வாழ்க்கையில் சோகத்தைத் தவிர வேறு ஒன்றும் இருக்கப் போவதில்லை.!" - திஸ்ஸரக்கா மனதினுள் கூறிக்கொண்டாள்.

அன்றிரவே தனது கலிங்கத்து வெற்றியைக் கொண்டாட தீர்மானித்து விட்டான், அசோகன். தந்தை வயதில் இருப்பவன், தன்னோடு உறவாட வருகிறான் என்கிற எண்ணமே ரக்காவுக்கு அருவருப்பினை தந்தது. அவன் நாட்டில் நரகம் என்று ஒரு சிறைச்சாலை இருக்கிறதாமே. இவள் அவனது அந்தப்புரத்தையே அதைவிட கொடிய நரகமாக மாற்ற இருக்கிறாள். அவளது உள்ளத்தில் பொதிந்து கிடந்த வெறியை உணராமல், அசோகன், தன்னை மன்மதனாக அலங்கரித்துக்கொண்டு

https://telegram.me/aedahamlibrary

திஸ்ஸரக்கா இருந்த மாளிகையினுள் நுழைந்தான்.

சற்று அப்பால் நின்று, தன்னை அலங்கரித்துக் கொண்டு கையில் மலர்களுடன் செல்லும் தந்தையை விசித்திரமாகப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர், குணாளனும், சங்கமித்தாவும்.

“உன் வயதினை ஒத்தவள், ரக்கா! பாவம்!” - குணாளன் கூறினான்.

"என்ன செய்வது. வெற்றிதேவி நம் தந்தையின் பக்கம். தோல்வி அடைந்தவர்கள் வெற்றி பெற்றவனின் அடிமைதானே!” --- சங்கமித்தா கூறினாள்.

"இருந்தாலும், மனத்தால் நமது சிற்றப்பன் இவளோடு இணைந்து விட்டான். தம்பி நினைந்த பெண்ணை தந்தை அடைய நினைப்பது கேவலம் இல்லையா?” --- குணாளன் கேட்டான்.

"என்ன செய்வது! பெண்ணாகப் பிறந்தாலே மன்னர்களின் கைப்பாவைகளாகத் தானே திகழ வேண்டி உள்ளது. நீயாவது பெண்மையைப் போற்றக் கற்றுக்கொள் குணாளா!” பெருமூச்சுடன் கூறிவிட்டு அகன்றாள் சங்கமித்தா.

அசோகனின் மனைவிகளில், பத்மாவதிதான் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தாள். தான் மட்டும் திஸ்ஸரக்காவின் ஓவியத்தை அசோகனிடம் காட்டாமல் இருந்திருந்தால், அவளுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமா இல்லை கலிங்கத்தில்தான் லட்சக்கணக்கானோர் மடிந்திருப்பார்களா? விளக்கைக் கூட ஏற்றாமல் தனது அந்தப்புர அறையினில் அடைபட்டுக் கிடந்தாள், பத்மாவதி.

***

சாளரத்தின் அருகில் இருளை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த திஸ்ஸரக்காவை ஆசையுடன் பார்த்தான் அசோகன். நாற்பது வயதை நெருங்கி விட்டிருந்தான், அசோகன். பதினாறு வயது பளிங்கு சிலையாக நின்றிருந்த திஸ்ஸரக்காவைக் கண்டதும், தனது முதிர்ச்சியை மறந்தான். தனது வயதை மறந்தான். தனது குடும்பத்தை மறந்தான். ஏன்... மவுரியத்தையே மறந்து போனான், அசோகன். அவன் சிந்தனையில், திஸ்ஸரக்காவும், தானும் மட்டுமே இருந்தனர். மிகவும் ஆசைப்பட்ட ஒரு தின்பண்டம் கிடைத்தவுடன், அதை உடனேயே

https://telegram.me/aedahamlibrary

உண்டு விடத் தோன்றாமல், பார்த்துப் பார்த்து ரசிக்கும் குழந்தையைப் போன்று அவளது பேரழகை ரசித்தபடி அவளை அழைத்தான் அசோகன்.

"ரக்ஷா!" ---

தனது பெயரான திஸ்ஸரக்கா அவனது வாயில் சிக்கி சிதைந்து ரக்ஷா என்று சிதிலமாக வெளிப்படுவதைக் கேட்டதும், அவள் மேனி கோபத்தில் நடுங்கியது. அதை அச்சத்தின் பிரதிபலிப்பாக நினைத்துவிட்ட அசோகன், அவளை சமாதானப்படுத்தும் எண்ணத்துடன் அவளை நோக்கி நகர்ந்தான்.

"அப்படியே நில்லுங்கள்! கலிங்கத்தினுள் எளிதாக நுழைந்து விட்டீர். ஆனால் உங்களால் எனது இதயத்தில் நுழைந்து விட முடியுமா? சடலங்களைப் புசிக்கும் ராட்சதனாகவே நீங்கள் எனது கண்களில் தென்படுகிறீர்கள். சடலத்தை இதுவரை புசித்து வந்த நீங்கள், இப்போது ஒரு சடலத்தை புணர வந்திருக்கின்றீர் போலும். என்னைப் பொறுத்தவரை நானும் ஒரு சடலம் தான். எனது தந்தையின் தலை கொய்யப்பட்டபோது, போனது அவர் உயிரல்ல, எனது உயிர்தான். நீங்கள் எனது தலையைக் கொய்திருந்தால்தான் அவரது உயிர் நீங்கியிருக்கும்!" -

அசோகனின் இயற்கையிலேயே உள்ள பிடிவாதமும், அகம்பாவமும் மெல்லத் தலைதூக்கியது.

“உனக்கு பேசுவதற்கு யார் அனுமதி வழங்கினார்கள். கைப்பற்றப்பட்ட பொருள் நீ.! எனது தேவைக்காகவே உன்னைக் கொண்டு வந்திருக்கிறேன். உனது உணர்வுகளை வெளிக்காட்டுவதற்கு உனக்கு அனுமதி இல்லை. நீ சடலமோ, உயிர் உள்ள பொருளோ, நீ எனக்கு உரியவள்!" - என்று கூறியபடி திஸ்ஸரக்காவின் சிகையைப் பிடித்தான்.

“எங்கள் கலிங்கத்து தேவியின் மீது ஆணை. இன்று உங்களால் என்னை ஆக்ரமிக்க முடியாது. இன்று மட்டுமல்ல, என்றுமே எனது அனுமதி இன்றி உங்களால் என்னைக் கைப்பற்ற முடியாது!" - வீறிட்டு அலறினாள், திஸ்ஸரக்கா.

அவளது அலறலை பொருட்படுத்தாமல் மஞ்சத்தில் சரிந்த அசோகன் அவளை தன் பக்கமாக இழுத்த போது, திஸ்ஸரக்கா தனது முஷ்டியை

https://telegram.me/aedahamlibrary

ஓங்கி அவனது விலா பகுதியில் குத்த, விண் என்று அடிவயிற்றினில் ஒரு வலி. அதன்பின் இடைப்புறத்தில் இருந்து பாதம் வரையில் அவனுக்கு மரத்துப் போனது. அவனது கர்வத்திற்குக் காரணமான அவனது பௌருஷம் தனது மூலாதார பலத்தை இழந்து துவண்டு போனது.

"அசோகா! நீ என்னைக் கைப்பற்றுவதற்கு முன்னமே நான் என்னை மாய்த்துக்கொண்டு இருப்பேன். ஆனால், பெண்களை கேவலமாக நடத்தும், உனக்கு தக்க பாடம் புகட்டவே, நான், உன்னால் என்னைக் கடத்தப்படுவதற்கு அனுமதித்தேன். இனி உன் வாழ்க்கையில் பெரிய திருப்பம் நிகழப் போகிறது. இதுவரை பெண்களை உனது பள்ளியறை பாவையாக நடத்தி வந்தாய். இனி நான் உன்னை எனது பள்ளியறை பதுமையாக நடத்தப் போகிறேன். இனி நீ இந்த அந்தப்புரத்தைக் கடந்து வெளியே செல்லப் போவதில்லை. உனது மனைவிகள், குழந்தைகள் அனைவரையும் நீ மறந்துவிடப் போகிறாய். அது மட்டுமா. இனி மன்னனாக உன்னால் கொலு மண்டப அரியணையில் வீற்றிருக்க முடியாது. இப்படியே உனது செயல்படாத அங்கத்துடன் எனது அந்தபுரத்தில் தான் கிடப்பாய். உன் மூலம் நான் மவுரியத்தை ஆட்சி செய்யப் போகிறேன்!" - கடகடவென்று சிரித்தாள், திஸ்ஸரக்கா.

செயலற்றுப் போய் கிடந்த அசோகன் முதன்முறையாக ஒரு பெண்ணைக் கண்டு பயந்தான். இரண்டு லட்சம் பேரைக் கொன்று, தான் ஆபத்தினை விலைக்கு வாங்கி வந்துள்ளதை உணர்ந்தான். அவன் வாய் உலர்ந்து போனது.

* கலிங்கப் போர் நிகழ்ந்த ஆண்டு: கி.மு. - 262 - 261.

போர் புரிந்தவர்கள்: மவுரியத்து அசோகர், கலிங்கத்து ஸ்ரீமகிமா தாமோ. அசோகன் படைகளின் பலம்: 60,000 காலாட்படை 10,000 குதிரைப் படை. 700 யானைப் படை.

இழப்புகள்: (1,50,000): 2,00,000 (அசோகர் குறிப்பிட்டது)

* திர்கதமா என்னும் முனிவருக்கும், சுதேஷ்ணா என்கிற பெண்ணுக்கும், அங்கன், வங்கன், கலிங்கன், பவுண்டரன் மற்றும் சுஹ்மிதன் என்கிற ஐந்து மகன்கள் பிறந்தனர். அவர்கள் தங்கள் பெயரில் ஐந்து தேசங்களை உருவாக்கினர். பௌண்டர தேசம்தான்

https://telegram.me/aedahamlibrary

பின்பு உத்கலமாக மாறியது. பௌண்டரன் பிறகு ராஜ்யத்தை துறந்து பௌண்டர வர்மன் என்கிற ராஜரிஷியாக மாறினான். அவனது உத்கல பகுதி கலிங்கத்துடன் இணைக்கப்பட்டது. பௌண்டர வர்மன் நாடிச் சக்கரங்களைப் பற்றி கற்றறிந்து மூலாதாரச் சக்கரமாக மர்ம உறுப்பினை கட்டுப்படுத்தும் கலையினை போதித்தவன். குறிப்பாக பெண்கள் தங்களது பெண்மைக்கு ஆபத்து நிகழும்போது, வர்மக்கலையைப் பிரயோகித்து ஆண்களின் மூலாதாரப் பகுதியைச் செயல்படாமல் செய்து விட முடியும். அதைத்தான் செய்திருந்தாள், திஸ்ஸரக்கா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 39. முற்றுகையிட்ட அரசிகள்

ராணி பத்மாவதியின் மாளிகையில் அசோகனின் குடும்பமே குழுமியிருந்தது அசோகனைத் தவிர, பட்டத்து அரசி, அசிந்தமித்ரா, விதிஷாதேவி, கார்வாகி, பத்மாவதி, குழந்தைகள், குணாளன், சங்கமித்தா, ஜாலுகா திவ்ரா ஆகியோரும் இருந்தனர். இவர்களைத் தவிர, அசோகனின் பிரிய நாயகியாகத் திகழ்ந்த ராதாகுப்தனின் மகள் ராஜிவியும் அங்கே இருந்தாள்.

அசோகனின் மனைவிகளுக்கிடையே பல பிரச்சனைகள் இருந்தாலும், தற்போது அவர்கள் அனைவரையும் ஓரணியில் நிற்க வைத்திருந்தாள் திஸ்ஸரக்கா. தன்னை அலங்கரித்துக்கொண்டு மலர்க் கொத்துடன் திஸ்ஸரக்காவைக் காண்பதற்கு சென்று கொண்டிருந்த போது அவனை குணாளனும், சங்கமித்தாவும் பார்த்தனரே. அதன் பின்பாக, குடும்பத்தைச் சேர்ந்த யாரும் அசோகனைக் காணவில்லை. குடும்பத்தினர் மட்டுமா? மந்திரி பிரதானிகளும், அதிகாரிகளும் கூட அவனைக் காண்பது துர்லபமாகி விட்டது. எதாவது முக்கிய முடிவினை எடுக்க வேண்டுமென்றால், தலைமை அமைச்சர், திஸ்ஸராக்காவின் அனுமதி பெற்று அவளது அந்தப்புரத்தினுள் செல்வார். இடை வரை ஒரு சால்வையினை போர்த்திய படி அசோகன் அமர்ந்திருப்பான். பிரச்னையை தலைமை அமைச்சர் சொல்ல, இயந்திர கதியில் அதற்கு ஒரு முடிவினை அறிவித்துவிட்டு மீண்டும் மௌனமாக முடங்கி விடுவான். வழக்கமாக அசோகனிடம் இருக்கும், அந்த உத்வேகம் மன்னனிடம் காணப்படவில்லை என்பதை உணர்ந்தான்.

அரசியர் அனைவரும் பத்மாவதி மாளிகையில் குழுமி அசோகனின் விவகாரத்தை ஆலோசித்துக் கொண்டிருப்பதாக தகவல் வர, தலைமை அமைச்சர் தனக்கு அவர்களிடம் இருந்து அழைப்பு வரும் என்று எதிர்பார்த்திருந்தார். அவர் எதிர்பார்ப்பு சரியாக இருந்தது. ஒரு பணியாளன் வந்து அவரை பத்மாவதியின் மாளிகைக்கு அழைத்தான்.

தலைமை அமைச்சரைப் பார்த்ததுமே அத்தனை அரசியரும் சினத்துடன் அவர் மீது பாய்ந்தனர்.

"தலைமை அமைச்சரே! நாட்டில் என்ன நடக்கிறது! மன்னரை ஒரு திங்களாக காணவேயில்லை. அவருக்கு குடும்பங்கள் இருப்பதை மறந்துவிட்டாரா?" - கார்வாகி புலம்பினாள்.

https://telegram.me/aedahamlibrary

“திஸ்ஸரக்கா புது மனைவி. அவளது மயக்கத்தில் இருப்பது இயற்கைதான். ஆனால் பெற்ற பிள்ளைகளும், பெண்களும், அவரை எண்ணி ஏங்குகின்றனவே. அதைக் கூட புரிந்துகொள்ள இயலாமல் அப்படி என்ன மயக்கம்?" - விதிஷாதேவி வெகுண்டாள்.

தலைமை அமைச்சரால் அவர்கள் கேள்விகளுக்கு என்ன பதில் கூற முடியும்?

"நான் சந்தித்தபோது, அரசியாரே, மன்னன் நல்ல உடல்நிலையுடன் தான் இருந்தார். அவர் எவ்வித மயக்கத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர் அடுத்த முறை என்னை அழைக்கும் போது உங்களது ஆதங்கங்களை அவரிடம் தெரிவிக்கிறேன்...!" --- தலைமை அமைச்சர் கூறினார்.

"கணவன் மனைவிகளை, தந்தை --- குழந்தைகளைச் சந்திக்க வைப்பதற்குக் கூட ஒரு பிரதம அமைச்சர் தேவைப்படுகிறதே. இதெல்லாம் நமக்கு உதவப் போவதில்லை. இன்னும் ஒரு திங்களுக்கு மன்னர் தலைமை அமைச்சரைச் சந்திக்க மாட்டார். அதுவரை நமது தலைமை அமைச்சருக்கு நமது ஆதங்கங்கள் நினைவில் இருக்க வேண்டும். அப்படி அவர் மன்னனிடம் பேசினாலும், அவர் திஸ்ஸரக்காவை மீறி ஒரு முடிவினை எடுப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆகையால் நான் ஒரு யோசனை கூறுகிறேன்.!”

பட்டத்துமகிஷி என்கிற உரிமையில் அசிந்தமித்ரா தனது சகக் களத்திகளிடம் கூறினாள்.

"நாம் அனைவரும் குழந்தைகளுடன் அந்த திஸ்ஸரக்காவின் மாளிகையினுள் பிரவேசிப்போம். நமது கணவருடன் அளவளாவிவிட்டு வருவோம். யார் நம்மைத் தடுப்பது. பட்டத்து அரசியான என்னைத் தடுக்க யாருக்கு துணிவு இருக்கிறது?” - யோசனை கூறிய அசிந்தமித்ராவை, கவலையுடன் நோக்கினாள், பத்மாவதி.

“அக்கா! நாம் போவது பற்றி இல்லை. ஆனால் நமது மன்னர் மனம் புண்படும்படியாக சம்பவங்கள் எதுவும் அங்கே நிகழ்ந்து விடக்கூடாது.!” - பத்மாவதி கூறினாள்.

"உன்னால்தான் அத்தனை பிரச்சனைகளும் உருவாயின. திஸ்ஸரக்காவின் ஓவியத்தை மன்னனிடம் காட்டி நமது குடியைக்

https://telegram.me/aedahamlibrary

கெடுத்தவளே நீதான். எங்கள் மனதை நோகடித்து விட்டு, மன்னரின் மனது புண்படக் கூடாது என்று கூறுகிறாய். புறப்படுங்கள். அனைவரும் ஊர்வலமாகச் செல்வோம்!" விதிஷாதேவி கூறினாள்.

திஸ்ஸரக்காவின் மாளிகைக் காவலர்களும், பணியாளர்களும் திகைத்துப் போயினர். இப்படிப் பட்டாளமாக அரசியர் தங்கள் குழந்தைகளுடன் தங்கள் மாளிகையை நோக்கி வருவதைக் கண்டு அவர்களை தடுத்து நிறுத்துவதா அல்லது உள்ளே அனுமதிப்பதா என்கிற குழப்பத்தில் காவல் தலைவனின் முகத்தைப் பார்க்க, அவன் உள்ளே ஓடிச்சென்றான்.

அசோகன் மஞ்சத்தில் படுத்தபடி விட்டத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் தான் சொல்வதைக் கேட்காத வரையில் அவனது மூலாதார பந்தனத்தை அவிழ்க்க முடியாது என்று திஸ்ஸரக்கா பிடிவாதமாகத் தெரிவித்திருந்தாள். தனது அதிகாரத்தைக் கொண்டு, அவளை கைது செய்யலாம் என்று பார்த்தாலும், இவனது நாடி ரகசியம் அவளிடம் உள்ளது. அவள் இவனை பழையபடி நடமாட வைக்கும் வரை இவன், அவளது அடிமையாகத்தான் இருக்க வேண்டும்.

திஸ்ஸரக்கா, சாளரத்தின் அருகே நின்றுகொண்டு நந்தவனத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். தொலைவில் அரசியரும், குழந்தைகளும் தங்கள் மாளிகையை நோக்கி வருவதைக் கண்டதுமே, அவர்கள் அசோகனைக் காணத்தான் வருகின்றனர் என்பது புரிந்து போனது.

உடனே அசோகனை நெருங்கியவள், அவனை உறுத்துப்பார்த்தாள்.

"உங்களது மனைவிகளும், குழந்தைகளும் வருகின்றனர்.! அவர்களை நீங்கள் சந்திக்காத வரையில் உங்கள் குழந்தைகளுக்கு நல்லது. இல்லையேல், அவர்களது இள தேகங்கள் வர்மக்கலை பந்தனத்தைத் தாங்காது. மரணம் சம்பவித்து விடும்.!" - திஸ்ஸாவின் பார்வையில் தென்பட்ட குளிர்ச்சி அசோகனின் இதயத்தைச் சில்லிட வைத்தது.

காவல் தலைவனை மன்னன் அழைப்பதாக திஸ்ஸா கூற, அவன் உள்ளே ஓடி வந்தான்.

"யாராக இருந்தாலும், இப்போது நான் யாரையும் சந்திக்க விரும்பவில்லை. எனக்கு அமைதி தேவை.! அரசிகளிடம் சொல்லி விடு!"

https://telegram.me/aedahamlibrary

என்றவன், மீண்டும், விட்டத்தை நோக்கத் துவங்கினான்.

மவுரிய சக்கரவர்த்தியாகப் பெரும் ஆற்றலுடன் கலிங்கத்தை வென்றது கடைசியில் இந்த அரக்கியிடம் சிக்கி, இப்படி நடைபிணமாகக் கிடப்பதற்கா? ஒன்றரை இலட்ச மக்களை வெட்டிச் சாய்த்ததற்கு தண்டனையா இது? இல்லை, அண்ணன் என்று பாராமல் சுசிமாவை வெட்டி வீழ்த்தியதற்கு தண்டனையா? சுசிமாவின் மனைவி சித்ரசேனாவையும், அவளது மகளையும் நாட்டை விட்டு விரட்டியதுதான் இந்த நிலைக்குக் காரணமா, இல்லை இளம் நங்கையரைக் கடத்தி வந்து அவர்களை துன்புறுத்தி கலவியாடியதால் தான் ஒரு பெண்ணிடம் சிக்கிச் சீரழிகிறேனா?

தொடந்து தன்னைத்தானே கேள்விகளைக் கேட்டபடி, கண்களை மூடிக்கொண்டான்.

மன்னனே கட்டளையிட்ட பிறகு, சற்று துணிவுடன் வந்தவர்களை தடுத்து நிறுத்தினான், காவல் தலைவன்.

"மன்னர் தங்களைச் சந்திக்க விரும்பவில்லை. தனிமையை விரும்புகிறார்!” - காவல் தலைவன் கூற, அசிந்தமித்ரா வெகுண்டாள்.

"பட்டத்து அரசியை தடுக்க நீ யார்?" குறுக்கே நீட்டிய அவனது ஈட்டியைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைய முற்பட்டாள், அசிந்தமித்ரா.

“இங்கே என்ன கலவரம்?” - என்றபடி வெளியே வந்தாள் திஸ்ஸா.

"எங்கள் கணவரைக் காணவில்லை. அதுதான் தேடிக்கொண்டிருக்கிறோம்!” - கார்வாகி கூறினாள்.

"கணவனைக் காணோமா? ஒன்றுக்கு நான்கு பேர் இருக்கிறீர்கள். உங்களது கணவன் அநியாயமாக தனது மகள் வயதில் உள்ள ஒரு சிறுபெண்ணைச் சிறைப்படுத்தி இருக்கிறான்! அப்போதெல்லாம் உங்களுக்கு கணவன் நினைவு வரவில்லையா?” - குத்தலாக திஸ்ஸரக்கா கேட்க, வாயடைத்துப் போயினர், அரசியர்.

திஸ்ஸரக்கா அசோகனின் குடும்பத்தினர் மீது தனது பார்வையைப் படரவிட்டாள்!

https://telegram.me/aedahamlibrary

"உங்களுக்கெல்லாம், குழந்தைகள் இருக்கிறது. குடும்பம் இருக்கிறது. நான் எல்லாற்றையும் இழந்து விட்டேன். இன்னும் சிறிது காலம் உங்கள் கணவர் என்னுடன் இருக்கட்டும். பிறகு நானே அவரை உங்களிடம் அனுப்பி வைக்கிறேன். இப்போது அமைதியாகத் திரும்பிச் செல்லுங்கள்!" - திஸ்ஸரக்காவின் குரலில் ஒலித்தது எச்சரிக்கையா, இறைஞ்சலா? அவள் உள்ளக் கிடக்கையை அறியமுடியாமல் அரசியர் தவித்தனர்.

குணாளன் தனது தாயின் பக்கமாகத் திரும்பினான். "எனது சிற்றன்னைதான் கூறிவிட்டாரே, அவரே நம் தந்தையாரை அனுப்புகிறேன் என்று. வாருங்கள் போகலாம்!" -

ஆனால் ---

குணாளன் சிற்றன்னை என்று தன்னைக் கூறியிருந்தது அவளுள் சினத்தையும், அருவருப்பையும் தூண்டி விட்டிருந்தது. தனது வாழ்வைக் குலைத்த அசோகனை எப்படிப் பழிவாங்குவது என்று இப்போது தெரிந்து விட்டது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 40. குணவான் குணாளன்

நள்ளிரவு. ---

உறக்கம் வராமல் தனது மஞ்சத்தில் புரண்டு கொண்டிருந்த குணாளன் மெதுவாக எழுந்து சாளரத்தின் அருகே நின்றான். அரண்மனை வளாகத்தின் மையத்தில் மூல அரண்மனை கிழக்கு திக்கை நோக்கி நின்றது. அந்த மூல அரண்மனையைச் சுற்றி இருந்த நந்தவனங்களைக் கடந்து, தெற்குப்புறத்தில் அசிந்தமித்ராவின் மாளிகையும், தென்மேற்கில் கார்வாகியின் மாளிகையும் இருந்தன. மூல அரண்மனையின் நேர் பின்புறத்தில் விதிஷாதேவியின் அந்தப்புர மாளிகை இருந்தது.

குணாளனின் தாய் பத்மாவதியின் மாளிகை மேற்கிலும், புதிதாக எழுப்பப்பட்டிருந்த திஸ்ஸரக்காவின் மாளிகை வடக்கு திசையிலும் இருந்தது. சாளரத்தின் வழியாக தொலைவில் தெரிந்த திஸ்ஸரக்காவின் மாளிகையையே வெறித்துப் பார்த்தான். நந்தவனத்தில் ஆங்காங்கே எரிந்துகொண்டிருந்த தீப ஸ்தம்பங்கள் கடுமையான பனிப்பொழிவினாலும், காற்றின் ஈரப் பதத்தினாலும், அடங்கி விட்டிருந்தன. கருமையான வானில் வைரக் கற்களாக தாரகைகள் ஜொலித்துக் கொண்டிருந்தன.

தந்தை அசோகன் இம்மாதிரி குடும்பத்தினரைக் காணாமல் இருந்ததே கிடையாதே. குறிப்பாக குணாளனையும், சங்கமித்தாவையும், இவனது தாயான பத்மாவதியையும் காணாமல் அவரால் இருக்கவே முடியாதே. அப்படிப்பட்டவரா இம்மாதிரி பாராமுகமாக இருக்கிறார்! அவர் நம்மைப் பார்க்க வரவில்லை என்றால் என்ன? நாம் சென்று அவரைப் பார்த்து வரலாமே.!

நள்ளிரவின் போர்வையில் அவரை ரகசியமாகச் சந்தித்து வந்தால் என்ன? சிறிய தாய் திஸ்ஸரக்கா தவறாக நினைத்துக்கொண்டால்? புதுமணத் தம்பதிகளின் அந்தரங்க வேளையில், சென்று நிற்பது தவறு இல்லையா? தன்னையே கேட்டுக்கொண்டான், குணாளன்.

நடுநிசி கடந்து விட்டது. விடி வெள்ளி தோன்றுவதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. நடுநிசி கடந்து இரவின் கழிவிடை நேரம்தானே. இப்போது தம்பதிகள் அயர்ந்து தூங்கும் வேளைதான். தந்தையிடம்

https://telegram.me/aedahamlibrary

உரையாட முடியாவிட்டாலும், அவரைப் பார்க்கவாவது முடியும் அல்லவா?

யோசித்த குணாளன், ஒரு கருநீல சால்வையை எடுத்து தனது உடலைப் போர்த்திக்கொண்டு தனது மாளிகையை விட்டு வெளியேறினான். புஷ்பபுர அரண்மனையே அமைதியில் ஆழ்ந்திருந்தது. இரவுப் பட்சிகள் மெல்லிய குரலில் கூவிக்கொண்டிருந்தன. அவனது பாதுகைகளை மீறி, புல்தரையில் படர்ந்திருந்த பனித்துளிகள், அவனது தேகத்தினை சிலிர்க்கச் செய்தன.

பரந்து விரிந்திருந்த நந்தவனத்தில் நடக்கும்போது தற்செயலாக இருளில் மூழ்கி இருந்த பழைய அரண்மனையைக் கடக்க நேர்ந்தது. கவனிப்பாரற்று, இடிந்தும், பாழடைந்தும் கிடந்த பழைய அரண்மனையில் கோட்டான்களும், வௌவால்களும் குடியேறத் துவங்கியிருந்தன. கொள்ளுப்பாட்டன் சந்திரகுப்தன் வசித்த அரண்மனை. அவன் மனைவி துர்தராவும் அவள் அண்ணன் பிபத்தனும் பிறந்திருந்த அரண்மனை. பாட்டன் பிந்துசாரன், மற்றும் தந்தை அசோகன் பிறந்த அரண்மனை. ஏனோ அதை கவனிப்பதற்குத் தந்தைக்கு மனமில்லை...

பழைய அரண்மனையைக் கடந்து, திஸ்ஸரக்காவின் மாளிகையை நோக்கி நகர்ந்தான். வாயிலில் இரு காவலர்கள் மட்டுமே நின்றனர். ஆனால் அவர்களைக் கடந்து உள்ளே செல்ல முடியாது. தனது விஜயம் மிகவும் ரகசியமாக இருக்க வேண்டும். திஸ்ஸரக்காவின் மாளிகையின் பின்புறமாகச் சென்றான். நந்தவனக்காரர்கள் உப்பரிகை தோட்டத்தில் உள்ள செடி கொடிகளுக்கும், மல்லிகைப் பந்தலுக்கும் நீர் பாய்ச்சுவதற்கு என்று ஏணி ஒன்றை நிறுவியிருந்தார்கள். தோட்டக்காரர்கள் அரண்மனை உள்புறமாக உப்பரிகைக்குச் செல்லாமல், நந்தவனத்தில் இருந்தே மேலே சென்று நீர் பாய்ச்சிவிட்டு இறங்குவதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருந்த அந்த இரும்பு ஏணியின் மூலம் உப்பரிகையை நோக்கிச் சென்றான், குணாளன். உப்பரிகை தோட்டத்தில் இருந்து திஸ்ஸரக்காவின் அந்தப்புரத்திற்குச் செல்ல படிகள் இறங்கிச்சென்றன. உப்பரிகைக் கதவைத் திறந்துகொண்டு படிகளின் வழி உள்ளே இறங்கினான், குணாளன்.

திஸ்ஸரக்காவின் அந்தப்புரம் அமைதியாக இருந்தது. குளிரை விரட்டுவதற்காக தீ மூட்டப்பட்டிருக்க, சுள்ளிகள் வெடிக்கும் ஒலியினைத் தவிர மற்றபடி நிசப்தம்தான் நிலவியது. உப்பரிகைப்

https://telegram.me/aedahamlibrary

படிகளை விட்டு நீங்கியவன் அந்தப்புரத்தை பிரமிப்புடன் பார்த்தான். மற்ற அரசிகளின் அந்தப்புரங்களை விட, மிகவும் ஆடம்பரமாகவும், பகட்டாகவும் காணப்பட்டது.

வரிசையாக அறைகள் காணப்பட ஒவ்வொரு அறையாக எட்டிப்பார்த்தபடி வந்தான். ஒரு சிறிய அறையில் தாதியர் சிலர் உறங்கிக்கொண்டிருந்தனர். திடீரென்று மன்னருக்கு ஏதாவது தேவைப்பட்டால், அவர் அழைத்தவுடன் போக வேண்டும் என்பதற்காக மணி ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதில் பிணைக்கப்பட்டிருந்த தாம்பு, சுவற்றில் இருந்த சிறு துவாரத்தின் வழியாக அடுத்த அறைக்குச் செல்ல, அடுத்த அறையில் தான் மன்னர் படுத்திருக்க வேண்டும் என்பதை யூகித்தான் குணாளன்.

நெஞ்சு படபடக்க, அடுத்த அறையை நோக்கி நடந்தான். மெதுவாக கதவைத் தள்ள, அது திறந்து கொண்டது. கதவு திறந்ததும், குணாளனின் கண்களில் பட்டது ரக்காதான். ஒயிலாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள் திஸ்ஸரக்கா. தனியாக ஒரு வெள்ளி மஞ்சத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். சற்றுத் தள்ளி, பெரிய மஞ்சம் ஒன்றில் படுத்திருந்தான், இவன் தந்தை அசோகன்.

சத்தம் எழுப்பாமல், தனது தந்தையின் மஞ்சத்தை நோக்கி அடிமேல் அடி வைத்து நகர்ந்தான். தந்தையின் மஞ்சத்தின் மறுபுறம் சென்று அமர்ந்தவன், மெதுவாக தனது கையை உயர்த்தி அசோகனது கரத்தில் வைத்தான்.

முதலில் உறங்கிக்கொண்டிருந்த அசோகனின் முகத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. மீண்டும் தனது குளிர் கரத்தை தந்தையின் நெற்றியில் வைக்க, இப்போது அசோகனது புருவங்கள் நெரிந்து, அவன் கண்விழிக்கப் போவதை உணர்த்தின. தனது கரத்தை எடுக்காமல் தனது இடது கரத்தை எடுத்துச் சென்று தந்தையின் நெற்றியில் வைத்தான். சட்டென்று அசோகன் கண்களைத் திறந்தான். தன்னை நோக்கி குனிந்தபடி முழங்காலிட்டு அமர்ந்திருந்த குணாளனைக் கண்டு அவனது கண்கள் பரமானந்தத்தில் திளைத்தன. ஒரு கணம்தான். திடீரென்று ஒரு எச்சரிக்கை உணர்வு அவனது விழிகளில் புலப்பட சட்டென்று திரும்பி திஸ்ஸரக்காவைப் பார்த்தான்.

“கவலைப்படாதீர்கள் தந்தையே.! சிற்றன்னை ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறாள். நான் தங்களுடன் சந்தித்துப் பேசவே வந்தேன்.

https://telegram.me/aedahamlibrary

உங்களுக்கு என்ன நேர்ந்தது. ஏன் இந்த மாளிகையை விட்டு வெளியே வர மறுக்கிறீர்கள்?" - குணாளன் கேட்டதும், அந்த நள்ளிரவில் தன் மகனிடம் தனது வேதனைகளைக் கொட்டித் தீர்த்து விட வேண்டும் என்கிற உத்வேகம் பிறந்தது. திஸ்ஸரக்காவின் பேரழகில் மயங்கி பாலில் விழுந்த ஈயைப் போன்று ஆகிவிட்டது இவன் நிலை.

கிசுகிசுத்த குரலில் பேசினான், அசோகன்.

"குணாளா! இவள் பெண்ணல்ல மாய மோகினி. உத்கலத்தில் தோன்றிய வர்ம கலையை அறிந்தவள். எங்களது முதல் இரவிலேயே எனது மூலாதாரத்தை கட்டிப் போட்டு விட்டாள், இவள். அதனால் படுத்த படுக்கையாகக் கிடக்கிறேன். எனது இடைக்குக் கீழே செயலற்றுக் கிடக்கிறேன். தலைமை அமைச்சர் வரும் போது மட்டும் என்னை அமரவைத்துப் பேசச் செய்கிறாள். மற்ற நேரத்தில் எனக்கு இந்த மஞ்சத்தில்தான் வாசம். சந்திரகுப்த மௌரியனின் பெயரன், பிந்துசாரனின் மகன், சாம்ராட் அசோகன் என்று உலகமே போற்றி வருகிறது. ஆனால்... யாருக்கும் தெரியாது, அசோகன் இப்போது ஒரு நடைபிணம் என்பது. எனக்கு வெளியே சொல்லவும் அவமானமாக உள்ளது. மேலும், இந்த மூலாதார பந்தனத்தை கட்டியவர்தான் அதனை விடுவிக்க முடியும். அதனால் என்னால் அவளை ஒன்றும் செய்யமுடியவில்லை. அவளது அழகில் மயங்கி அதல பாதாளத்தில் விழுந்து விட்டேன்!"

முதன்முறையாக தந்தையின் கண்களில் கண்ணீரைக் கண்டான், குணாளன்.

"கவலைப்படாதீர்கள் தந்தையே! உங்களுக்கு நான் இருக்கிறேன். உங்களை விரைவில் இந்த வன் சிறையில் இருந்து விடுவிக்கிறேன். உங்களைக் காண முடியாமல், என் தாய், மற்ற தாய்மார்கள், சங்கமித்தா, மற்ற சகோதர, சகோதரிகள் அனைவருமே ஏங்கிப் போய் உள்ளனர்."

"எதற்காக கலிங்கத்தின் மீது படை எடுத்தேனோ? இந்த அரக்கியை இழுத்து வந்து, நானே அவளுக்கு என்னை பலி கொடுத்தேன். என்னால் நடக்க முடியவில்லை, மகனே. பழையபடி சர்வ வல்லமை பொருந்திய மன்னனாக நான் வளைய வர வேண்டும். எனது குடும்பத்துடன் சுகித்திருக்க வேண்டும்.!" அசோகன் புலம்ப, குணாளன் அவனைத் தேற்றினான்.

https://telegram.me/aedahamlibrary

"கவலைப்படாதீர்கள் தந்தையே.! விரைவில் நீங்கள் திஸ்ஸரக்காவின் பிடியில் இருந்து விடுபடுவீர்கள்.! பொழுது புலரப்போகின்றது, நான் வருகிறேன். நீங்கள் அமைதியாக உறங்குங்கள்.!" என்றபடி தந்தையின் கரத்தை ஆறுதலுடன் தட்டிக்கொடுத்து விட்டு, திஸ்ஸரக்காவின் உறக்கத்தை கெடுக்காமல், அறையை விட்டு வெளியேறினான்.

தனது மகனிடம் தனது ஆதங்கங்களைக் கொட்டி விட்டோம். இனி தனது குடும்பத்தினர் தனது நிலையைப் புரிந்து கொள்வார்கள். விரைவில் அவர்கள் ஏதாவது செய்து தன்னை திஸ்ஸரக்காவிடம் இருந்து மீட்பார்கள் என்கிற நிம்மதியுடன் உறக்கத்தில் ஆழ்ந்தான் அசோகன்.

***

புஷ்பபுரத்தை விட்டுப் புறப்பட்ட அந்த இரதம், புத்த கயையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இரதத்தில் குணாளனும், சங்கமித்தாவும் அமர்ந்திருக்க, அவர்களுக்கு நம்பிக்கைக்குரிய பிரககிரிதான் இரதத்தைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

சங்கமித்தா சோகத்துடன் ஒலித்தாள். "குணாளா! நீ கூறும் தகவல்கள் மிக பயங்கரமாக உள்ளன. ஒரு பெண்ணால் இப்படியெல்லாம் செய்ய முடியுமா.?"

"ஆண்களால்தான் பெண்களை சயன அறை அடிமைகளாக வைத்திருக்க முடியும் என்று எண்ணாதே. உத்கலத்தைச் சேர்ந்த பெண்கள் மிகவும் சாதுர்யமானவர்கள். வர்ம கலை இன்னும் அதிக புகழ் பெறவில்லை. இதை வெகு சிலரே அறிந்திருக்கிறார்கள். அவர்களில் திஸ்ஸரக்காவும் ஒருவள் என்பது நமது தந்தையின் போதாத காலம்!" - குணாளன் கூறினான்.

"கேட்கிறேன் என்று தவறாக நினைக்காதே.! தந்தையை செயலற்றுப் போகச் செய்வதால் அவளுக்கு என்ன லாபம்? அவளது இன்ப வாழ்க்கைக்குதானே அது பின்னடைவு!" - சங்கமித்தா கேட்டாள்.

பிரக்கிரி சட்டென்று திரும்பி நோக்கினான். மன்னிக்க வேண்டும், இளவரசே.! உங்கள் அனுமதியுடன் நான் சில தகவல்களைக் கூற விரும்புகிறேன்.!"

https://telegram.me/aedahamlibrary

"சொல் பிரக்கிரி!" --- குணாளன் கூறினான்.

"கலிங்க இளவரசியை கைது செய்து அவளது தோழிகளோடு எனது இரதத்தில்தான் அழைத்து வந்தார் மன்னர். அவர்கள் பயணித்த இரதத்தினை நான்தான் செலுத்தினேன். தனது தோழிகளோடு வழியெல்லாம் புலம்பிக்கொண்டு வந்தார், இளவரசி.! அப்போது, தனது தோழிகளிடம், எனது விருப்பம் இல்லாமல் எவனும் என் மீது கை வைக்க முடியாது!" என்று பொருமிக் கொண்டே வந்தார், கலிங்க இளவரசி.! அது மட்டுமல்ல, இளவரசே! வேறு ஒன்றையும் கூறினார், கலிங்க இளவரசி." - பிரக்கிரி கூறினான்.

"என்ன கூறினாள்?" - சங்கமித்தா கேட்டாள்.

"நமது மவுரிய நாட்டில் அவளுடைய காதலன் யாரோ இருக்கிறானாம். அந்தக் காதலன் மட்டுமே அவளை தீண்டும் அருகதை உள்ளவனாம். அதனால், மன்னரால் தன்னைத் தீண்ட முடியாது. - என்று சூளுரைத்தாள்."

பிரககிரி கூற, சங்கமித்தா அதிசயத்துடன் குணாளனை நோக்கினாள்.

"மவுரிய நாட்டில் அவளுக்குக் காதலனா? யாராக இருக்கும்?" - சங்கமித்தா கேட்டாள்.

"அவன் யாராக இருந்தால் நமக்கு என்ன! நமது தந்தையை நாம் மீட்க வேண்டும். அதற்காகத்தான் புத்த கயைக்கு போகிறோம். நமது சிற்றப்பா இப்போது திவ்ய பாதா என்கிற பெயருடன் புத்த பிக்குவாக மாறிவிட்டார் அல்லவா. அவரிடம் சென்று நமது தந்தையை மீட்பதற்கு வழியைத் தேடுவோம்!" - குணாளன் கூறினான்.

புத்தகயைக்குச் சென்றதும், திவ்ய பாதாவை தரிசிக்க வேண்டும் என்று குணாளன் சொல்ல, அவர்கள் இருவரையும் அவர் முன்பாக அழைத்துச் சென்றனர். பூர்வத்தில் தனது அண்ணன் குழந்தைகளான அவர்களை அன்புடன் நோக்கினார், விதசோகன், இப்போது திவ்ய பாதா.

குணாளன் அவரைப் பணிந்தான்.

"சுவாமி! தங்களின் உதவியை நாடி வந்திருக்கிறோம். மன்னர் அசோகர் ஒரு பெரிய பிரச்சனையில் சிக்கியுள்ளார். அவரை மீட்பதற்கு

https://telegram.me/aedahamlibrary

எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை. உங்களால்தான் மன்னர் அசோகரைக் காப்பாற்ற முடியும்!" - குணாளன் கூறியதும், திவ்ய பாதாவின் முகம் சுருங்கியது.

“என்ன நடந்தது, குணாளா?” ---

"எனது தந்தை கலிங்கத்து இளவரசி திஸ்ஸரக்காவின் மீது மையல் கொண்டார்!” - குணாளன் கூறியதும், விதசோகனின் கண்களின் முன்பாக அந்தக் காட்சி விரிந்தது.

“மைத்துனரே! கலிங்கத்து இளவரசியை திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கிறீர்களா?” --- அண்ணியார் பத்மாவதியின் குரல் ஒலித்தது.

“எனக்குப் பிடித்திருக்கிறது அண்ணியாரே! நான் சம்மதிக்கிறேன்!” --- விதசோகன் சொன்னதும், அங்கே மன்னன் அசோகன் வருகிறான். பத்மாவதி அவனிடம், விதசோகன் திஸ்ஸரக்காவை திருமணம் செய்து கொள்ள சம்மதித்து விட்டதாகக் கூறுகிறாள், பத்மாவதி. திஸ்ஸரக்காவின் ஓவியத்தை காண்கிறான். அதனைக் கண்டதும், அசோகனின் முகத்தினில் ஒரு சலனம், தனது தம்பியுடன் ஏகாந்தத்தில் பேசப் போவதாகக் கூறி, விதசோகனை உள்ளே அழைத்துச் செல்கிறான்.

“திஸ்ஸரக்காவின் பேரழகை நான் அடைய தீர்மானித்து விட்டேன். திஸ்ஸரக்காவை நீதான் மணந்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தால் நீ இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மீண்டும் நரக மாளிகைக்குச் செல்கிறாயா, இல்லை சுசிமாவைப் போன்று தலை துண்டிக்கப்பட்டு மரணத்தைத் தழுவப் போகிறாயா?" - அசோகன் தனது வாளை உருவி, விதசோகனின் கழுத்தில் வைத்தான்.

நரக மாளிகை குகைப்பாதையில் தலையில்லா முண்டங்களாக அலையும் பிபத்த நந்தன் மற்றும் சுசிமாவின் நிழலுருவங்கள் விதசோகனின் கண்களின் முன்பாகத் தோன்ற, அண்ணனை பரிதாபமாகப் பார்த்தான்.

"அண்ணா! எனக்கு எல்லாம் வெறுத்து விட்டது. திருமணம் வேண்டாம். குடும்பமும் வேண்டாம். பாசம், பந்தம் எதுவும் வேண்டாம். சிறைச்சாலையும் வேண்டாம். மரணமும் வேண்டாம். இயற்கை எனக்கு மரணத்தை எப்போது தருகிறதோ அப்போது வாங்கிக் கொள்கிறேன்.

https://telegram.me/aedahamlibrary

என் பொருட்டு நீங்கள் மேலும் பாவ சுமைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டாம். இன்றே நான் புத்த கயை சென்று பிட்சுவாக மாறி விடுகிறேன்.!" --- விதசோகன் சொல்லியிருந்தான்.

"மிக நல்ல முடிவு தம்பி! யாரையும் பாதிக்காத முடிவு!" - அசோகன் அவனைப் பாராட்டியிருந்தான்.

அசோகன் இப்போது திஸ்ஸரக்காவின் மாய வலையில் சிக்கியிருக்கிறான் என்று குணாளன் சொன்னதும், திவ்ய பாதாவினால் பழைய நிகழ்வுகளை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"வர்ம கலையின் மூலம் மன்னரின் மூலாதாரத்தை கட்டிப் போட்டு விட்டாள். இடை முதல் பாதம் வரை மன்னருக்கு செயல்படாமல் போய் விட்டது. அவள் யாரையோ காதலிக்கிறாளாம். அவனுடன் இணையும் வரை மன்னர் தன்னைத் தீண்டக்கூடாது என்பதற்காக அவரை இப்படி நடைபிணமாக மாற்றி இருக்கிறாள்!" --- குணாளன் கூறினான்.

“உன் தந்தையின் நிலையில் நான் இருந்திருப்பேன். உன் தந்தையின் பேராசை என்னைக் காப்பாற்றியது!" --- மனதினுள் கூறிக் கொண்டார், திவ்யபாதா.

சங்கமித்தா திவ்யா பாதாவை சோகத்துடன் நோக்கினாள்.

“எனது தந்தையைக் காப்பாற்றவே முடியாதா?" --- சங்கமித்தா கேட்டதும், அவளை ஆறுதலுடன் நோக்கினார், திவ்யபாதா.

"புத்த கயைக்கு வந்து காப்பாற்ற முடியாதா என்று கேட்டால் எப்படி? திஸ்ஸரக்காவின் பந்தனத்தை உடைக்க நல்ல மாற்று மருந்து இங்கே உள்ளது. சரியான இடத்திற்குத்தான், சரியான காலத்தில் வந்திருக்கிறீர்கள். அவளது பந்தனத்தை உடைத்து, மன்னரை பழைய முறையில் கம்பீரத்துடன் வளைய வர வைப்போம். என்னுடன் வாருங்கள்!" - என்று கூறிய திவ்யபாதா எழுந்து தனது குடிலை விட்டு வெளியேறி, புத்தர் ஞானம் பெற்ற போதி மரத்தினை நோக்கி நடந்தார். அவரை பின் தொடர்ந்தனர், குணாளனும், சங்கமித்தாவும்.

அந்திப் பொழுது சாய்ந்துகொண்டிருக்க, இருள் மெதுவாக பிரவேசித்துக் கொண்டிருந்தது. இருவரையும் அழைத்துக்கொண்டு புத்தர் ஞானம் பெற்ற போதிமரத்தின் அடியில் நின்றார், திவ்யபாதா.

https://telegram.me/aedahamlibrary

“குழந்தைகளே! மகாபாரத காலத்தில் இது மைத்ரேய மகரிஷியின் ஆஸ்ரமம். பாரதப் போர் முடிந்தவுடன் தீர்த்த யாத்திரை வந்த விதுரன், இங்கே மைத்ரேய மகரிஷியின் ஆஸ்ரமத்தில் தங்கினார். அவர் யோகநிஷ்டையில் இருக்கும்போது அவர் மடியில் ஒரு தேவ உடும்பர மரத்தின் விதை விழுந்தது. மைத்ரேய மகரிஷியின் ஆஸ்ரமத்திலேயே அந்த விதையை விதைத்தார். அந்த தெய்வாம்சம் பொருந்திய தேவ உடும்பர மரம்தான் இது. இதன் அடியில் அமர்ந்துதான் கௌதமன் புத்தராக ஞானம் பெற்றார். புத்தனுக்கு போதனை செய்ததால் இது போதி மரமே தவிர, இது இயற்கையிலேயே தேவ உடும்பர மரம். இதன் சக்தி வாய்ந்த மூலிகை, நாடி சக்கரங்களின் பந்தனத்தை அறுத்து, அவற்றின் ஓட்டத்தை சீராக்கும். அந்த மூலிகைதான் உங்கள் தந்தைக்கு நல்ல மருந்து. நான் தேவ உடும்பர மூலிகைக் கலவையை உங்களுக்குத் தருகிறேன். உங்கள் தந்தையின் பானத்தில் அதைக் கலந்து குடிக்க வையுங்கள். பந்தனம் உடைபடும். பந்தனம் உடைந்ததும், மன்னரிடம் சொல்லி திஸ்ஸரக்காவை நாடு கடத்தி விடுங்கள்!

தந்தை அசோகர் மீண்டதும் அவரை இங்கே புத்த கயைக்கு அழைத்து வாருங்கள். என்னைப் போலவே உங்கள் தந்தையும் புத்த சங்கத்தில் ஐக்கியம் ஆகும் காலம் வந்து விட்டது. என்ன... நான் சொல்வது புரிந்ததா?"

திவ்ய பாதா கேட்க, தலையசைத்தனர், குணாளனும், சங்கமித்தாவும்.

திவ்ய பாதா கொடுத்த தேவ உடும்பர மூலிகைக் கலவையுடன் மீண்டும் மவுரியம் திரும்பினர், குணாளனும், சங்கமித்தாவும்.

மறுநாள் மாலையே சங்கமித்தாவும், குணாளனும், தந்தை அருந்தும் பானத்தில் மூலிகைக் கலவையைச் சேர்க்கத் திட்டமிட்டனர். சங்கமித்தாவிடம் அந்தப் பொறுப்பினைத் தந்த குணாளன், அதுவரை தான் திஸ்ஸரக்காவை சமாளித்துக் கொள்வதாகக் கூறினான்.

மாலை நேரம். ---

குளிர் காற்று வீசிக்கொண்டிருக்க, திஸ்ஸரக்கா தனது அரண்மனை நந்தவனத்தில் அமர்ந்து கொண்டிருந்தாள். குளுமையான அந்தக் காற்று, அவளது மனதிற்கு இதமளித்தது. தொலைவில் நின்ற குணாளன் அவளை உற்று நோக்கினான். பாவம்! தனிமை அவளைக் கொல்கிறது போலும். அவள் மீது பச்சாதாபம் கொள்வதைப் போல் நடித்துதான்

https://telegram.me/aedahamlibrary

தந்தையை அவளிடம் இருந்து மீட்க வேண்டும்.

திஸ்ஸரக்கா அமர்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்தான். அவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் வியப்புடன் அவனை ஏறிட்டாள், திஸ்ஸரக்கா.

அவளைக் கனிவுடன் பார்த்தான், குணாளன்.

"ஏன் தனிமையில் உட்கார்ந்திருக்கிறீர்கள்.? எங்கள் மாளிகைக்கு வரக்கூடாதா.? வாருங்களேன்! நாம் பேசிக்கொண்டே நந்தவனத்தில் உலாவி வருவோம்.!" - குணாளன் அழைத்தான்.

உற்சாகத்துடன் எழுந்தாள் திஸ்ஸரக்கா.

"என்னுடன் நீங்கள் நட்பு பாராட்டுவீர்கள் என்று நான் சிறிதும் நினைத்துப் பார்க்கவில்லை." - திஸ்ஸரக்கா கூறினாள்.

"நான் எனது தாய்மார் அனைவரையும் எனது சொந்தத் தாயாகவே பாவிக்கிறேன்! உங்களையும் அங்ஙனமே தான் நினைத்திருக்கிறேன்.!" - குணாளன் இவ்வாறு சொன்னதும், திஸ்ஸரக்காவின் முகம் சூம்பியது.

"தயை கூர்ந்து என்னை தாய் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்காதீர்கள். நான் இப்போதுதான் பதினாறு பிராயங்களில் அடி எடுத்து வைத்திருக்கிறேன். தங்களை விட ஒரு வயது இளையவள்.!" - திஸ்ஸரக்கா கூறினாள்.

"எனது தந்தையின் மனதை வென்றவர். அந்த ஸ்தானத்திற்கு நான் மதிப்பு தருகிறேன்.!" - என்றவுடன், திஸ்ஸா சினத்துடன் அவனை நோக்கினாள்.

"உங்கள் தங்கை சங்கமித்தாவை ஒரு முதிய மன்னன் கடத்திச் சென்று வலுக்கட்டாயமாக தனது மனைவியாக ஆக்கினால், உங்கள் மனம் என்ன பாடுபடும்.?" - திஸ்ஸரக்கா கேட்க, குணாளன் வாயடைத்துப் போனான்.

சற்று நேரம் மௌனமாக உலவிக்கொண்டிருந்தனர் இருவரும்.

இந்நேரம் சங்கமித்தா தந்தையைக் காண உள்ளே சென்றிருப்பாள். அவளுக்குத் துணையாக ராதாகுப்தனின் மகள் ராஜிவியும்

https://telegram.me/aedahamlibrary

சென்றிருக்கிறாள். இருவரும் சேர்ந்து தந்தைக்கு மூலிகைக் கலவையினைத் தந்து அவரது தேகத்தை செயல்பட வைத்து, புத்த கயைக்கு அழைத்துச் சென்றிருப்பார்களோ!

இன்னும் சற்று கால அவகாசம் வாங்குவோம்! --- குணாளன் நினைத்தான்.

"கலிங்க இளவரசி! உங்கள் நிலையைக் கண்டு பரிதாபம் கொள்கிறேன். உங்கள் வயது ஆனந்தமாகப் பாடித் துள்ளி ஆடும் பருவமல்லவா?" - குணாளன் தனது குரலில் போலியாக பச்சாதாபம் காட்டினான்.

"நீங்கள் எனக்காக பரிதாபப்படுவது குறித்து மகிழ்கிறேன். ஆனால் உங்களால் தான் எனக்கு ஒரு விடிவு காலம் தோன்ற வேண்டும், இளவரசே!” திஸ்ஸரக்கா, நெகிழ்ந்த குரலில் பேசினாள்..

அதுவரை போலித்தனமாக பேசியபடி நடந்த குணாளன், அவள் தன்னை உணர்ச்சியுடன் நோக்குவதைக் கண்டு திகைத்தான்.

"என்னாலா... எப்படி...!” ---

“இளவரசே.! உங்கள் மவுரிய நாட்டின் ஒரு பிரஜையை நான் உளமார நேசிக்கிறேன். எனக்குத் திருமணம் நிச்சயிக்க நினைத்த எனது தந்தை எனக்கு ஒரு ஓவியத்தைக் காட்டி, இவரை உனக்குப் பிடித்திருக்கிறதா என்று கேட்டார். உண்மையிலேயே அந்த ஓவியத்தில் இருந்தவரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவரை நான் உடனடியாகக் காதலிக்கத் துவங்கிவிட்டேன். ஆனால் அதற்குள் நிலைமை தலைகீழாக மாறி, நான் உமது தந்தையால் கடத்தப்பட்டேன். அந்த ஓவியத்தில் இருப்பவரை நான் இன்னும் மானசீகமாகக் காதலித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அவருடன் சேர்ந்து வாழ விழைகிறேன். தாங்கள் உங்கள் தந்தையாரிடம் சொல்லி என்னை அந்தக் காதலருடன் சேர்த்து வைக்க வேண்டும்.!” --- தன்னை மறந்து, தனது நெஞ்சை குணாளனிடம் திறந்து காட்டினாள், திஸ்ஸரக்கா.

குணாளன் திகைத்து நின்றான். இப்படி ஒரு திருப்பத்தை அவன் எதிர்பார்க்கவில்லை. திஸ்ஸரக்காவே, தன்னை தனது காதலனுடன் இணைத்து வைக்குமாறு கேட்கிறாள். அவள் கேட்டபடியே அவளது காதலனுடன் அவளை அனுப்பி விட்டால், அரச குடும்பம் நிம்மதியாக இருக்குமல்லவா. தந்தையிடம் பேசி அவளை அவள் காதலனோடு

https://telegram.me/aedahamlibrary

அனுப்பி விட வேண்டியதுதான்.

"கலிங்கத்து இளவரசியே.! உங்கள் காதலன் யார் என்று கூறுங்கள்! அவரிடம் உங்களைச் சேர்த்து வைக்கும்படி தந்தையிடம் கூறுகிறேன்.!" - குணாளன் கூறினான்.

ஒருகணம், அவனையே வெறித்து நோக்கினாள் திஸ்ஸரக்கா.

"இளவரசே! எனது காதலன் தாங்கள் தான். உங்களது ஓவியத்தைத்தான் எனது தந்தை காட்டி எனது சம்மதத்தைக் கேட்டார். உங்கள் பெயர் விதசோகன் என்றும் கூறினார். நான் தங்கள் ஓவியத்தைக் கண்டதும் உங்கள் மீது மையல் கொண்டு விட்டேன். உங்களை அடையத்தான் நான் காத்திருக்கிறேன்!" - திஸ்ஸரக்கா கூறியதும் நாகத்தை மிதித்தவன் போன்று திடுக்கிட்டான், குணாளன்.

"என்ன பேசுகிறீர்கள், இளவரசி. நான் விதசோகன் அல்ல. எனது சிற்றப்பன் பெயர் விதசோகன் அல்லவா?" --- குணாளன் அலறினான்.

"ஏதோ குழப்பம் நடந்திருக்கிறது. எனக்கு தங்கள் ஓவியம்தான் காட்டப்பட்டது. மவுரிய மன்னனின் மகன் தான் எனக்கு பேசப்பட்ட மணமகன் என்பதில் சிறிதும் குழப்பம் இல்லை." --- திஸ்ஸரக்கா சோகமாக ஒலித்தாள்.

"நடந்தது நடந்து விட்டது. மனதைத் தேற்றிக்கொண்டு நிம்மதியாக வாழப் பழகிக்கொள்ளுங்கள். உங்களுக்கு எனது தந்தையுடன் வாழ விருப்பம் இல்லையென்றால், கலிங்கத்திற்கே திரும்பி விடுங்கள்!" குணாளன் கூற, அவனை சீற்றத்துடன் நோக்கினாள், திஸ்ஸரக்கா.

"நடந்தது நடந்து விட்டது என்று எப்படிக் கூறுகிறீர்கள். என்னைக் கடத்தி வந்த நாளில் இருந்து உமது தந்தையை என்னைத் தீண்ட விடவில்லை நான். எனது பெண்மை பத்திரமாக என்னிடமே உள்ளது. அதை தங்களுக்காகத் தான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன், இளவரசே. தங்கள் தந்தையிடம் கூறி, என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்." --- திஸ்ஸரக்கா இறைஞ்சினாள்.

"எனக்குத் தெரியும், இளவரசி! எனது தந்தை தங்களை தீண்டக்கூடாது என்பதற்காகத்தான் அவரது மூலாதாரத்தை பந்தனம் செய்தீர்கள் என்று நினைக்கிறேன்!" --- குணாளன் கூற, தீயை மிதித்தது போன்று

https://telegram.me/aedahamlibrary

திடுக்கிட்டு அவனை ஏறிட்டாள்.

“இந்த விவரம் உங்களுக்கு எப்படித் தெரியும்?” - அவனை சந்தேகத்துடன் நோக்கினாள்.

“கலிங்கத்து இளவரசியே. ஒரு இளவரசிக்கு இவ்வளவு நெஞ்சுரம் இருந்தால், மவுரிய பட்டத்து இளவரசனாகிய எனக்கு எவ்வளவு சாதுர்யம் இருக்கும். உங்களை திசை திருப்பி, இரக்கம் நிறைந்த சொற்களைப் பேசி, உங்கள் மாளிகையிலிருந்து வெகு தூரம் அழைத்துக்கொண்டு வந்து விட்டேன். எனது தந்தை தங்களது பந்தனத்தில் இருந்து மீண்டு, இப்போது புத்த கயைக்குச் சென்று கொண்டிருப்பார். இனி உங்களது கலிங்கத்து வேலைகள் எல்லாம் இங்கே செல்லுபடியாகாது. நீங்கள் என்னைக் காதலித்திருக்கலாம். எனது தந்தை மனதால் நினைத்தவளை நான் தாயாகத்தான் நினைப்பேன். துரதிர்ஷ்ட வசமாக, நீங்கள் எனது தாயின் ஸ்தானத்தில் இருந்தாலும், எனது தாயின் கால் தூசிக்குக் கூட ஒப்பாக மாட்டீர்கள்!” - என்றபடி சிரிக்கத் துவங்கினான்.

தன்னை ஏமாற்ற வந்தவனிடம் போய் காதல் வசனம் பேசிவிட்டோம் என்பதை நினைத்து கூனிக் குறுகிப் போனாள், திஸ்ஸரக்கா. மீண்டும் வஞ்சமும், குரோதமும் அவளது மனதை ஆக்ரமித்துக்கொள்ள, சினத்துடன், தனது இடக்கையினை விறைப்பாக்கி, அவனது அடிவயிற்றை நோக்கிக் கொண்டு போக, திஸ்ஸரக்கா வர்மக் கலையினை பிரயோகப்படுத்தி தனது மூலாதார சக்கரத்தை முடக்க நினைக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டு தனது இருகைகளால், அவளது இடக்கையைச் சிறைப்படுத்தினான், குணாளன்.

அப்போது ---

சற்றும் எதிர்பாராத வகையில் தனது வலது கையை விறைப்பாக்கிய திஸ்ஸரக்கா, அந்தக் கையை விரைவாக எடுத்துச் சென்று குணாளனின் நெற்றிப் பொட்டில் ஒரு வெட்டு வெட்டி, பிடரியில் மற்றொரு வெட்டு வெட்டினாள்.

துடித்துப் போனான், குணாளன். நெற்றியில் பளிச்சென்று ஒருவித வலி தோன்ற, கண்கள் சிதறி விழுவது போன்று ஒரு உணர்வு. வெகுநேரம் கண்களை மூடி இருந்தவன், சற்றே சமாளித்துக்கொண்டு தனது கண்களைத் திறந்தான்.

https://telegram.me/aedahamlibrary

கண்கள் திறந்தன. ஆனால் காட்சிகள் அவனுக்குத் தெரியவில்லை... எங்கும் இருள்தான்.

"ஐயோ... எனது கண்கள் தெரியவில்லையே.! கலிங்க இளவரசி... எங்கே இருக்கிறாய்.! எனக்கு கண்கள் தெரியவில்லை. உன்னை அவமதித்தது தவறு. என்னைக் காதலித்தேன் என்று கூறுகிறாய். அப்படிக் காதலித்தவள் செய்கிற காரியமா இது... தயை கூர்ந்து எனது கண்பார்வையைக் கொடுத்து விடு...!" இறைஞ்சிக் கொண்டிருந்தான், குணாளன்.

"என்று நீ என்னை ஏற்றுக்கொள்ள முன்வருகிறாயோ, அன்று உனது கண்களைத் திறக்கிறேன்.!" - தனக்குள் கூறியபடி அரண்மனையை நோக்கி நடந்தாள்.

"என்னை அனாதையாகத் திரிய வைத்து, எனது ஆருயிர் கலிங்கத்தை நாசம் செய்த உங்கள் மவுரிய குடும்பத்தை வேரோடு சாய்த்து விட்டுதான் மறுவேலை!" - திஸ்ஸரக்கா வன்மத்துடன் கூறினாள்.

கண்ணிருந்தும் குருடனாக வன்முறையைக் கையாண்டு கொண்டிருந்த அசோகனின் கண்களைத் திறப்பதற்காக, அவனது பூர்வாஸ்ரம தம்பியும், புத்த பிக்குவுமான திவ்ய பாதாவும், பௌத்த சங்கத்தின் தலைமை குரு போதி மந்தாவும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். குணாளனின் கண்கள் பார்வையை இழந்த மறுநாள், அசோகனின் கண்கள் போதி மரத்தை தரிசித்தன.

*****

https://telegram.me/aedahamlibrary

# 41. போதியின் நிழலில்

விதசோகா! என்னை மன்னித்துவிடு.! அரியணையை அலங்கரித்த மமதையில், உடன் பிறந்த உன்னை வாட்டி வதைத்தேன். எனக்கு மூத்தவனை வெட்டி வீழ்த்தினேன். உன்னைச் சிறையினில் தள்ளி கொடுமைகள் புரிந்தேன். மேலும், உனக்காக திருமணம் பேசப்பட்ட திஸ்ஸரக்காவை அடைவதற்காக, உன்னை அச்சுறுத்தி, துறவியாகச் செய்தேன். எல்லாவற்றிற்கும் தண்டனையாக கடந்த இரு திங்கள்களாக திஸ்ஸரக்காவின் சிறையில் வேண்டிய கொடுமைகளை அனுபவித்து விட்டேன். நீதான், என்னை மீண்டும் நடமாட வைத்திருக்கிறாய்!" உணர்வுடன், திவ்ய பாதாவின் கைகளைப் பற்றினான்.

திவ்ய பாதா அசோகனைப் புன்னகையுடன் நோக்கினார்.

"மன்னா! என்னையே திருத்தி பணிகொண்டவர், நமது பௌத்த சங்கத்தின் தலைமை குரு, புத்த மந்தா. அவரைத் தஞ்சம் அடையுங்கள்!" - திவ்ய பாதா கூறினான்.

"கலிங்கத்தில் கோரத் தாண்டவமாடி, இரண்டு லட்சம் பேரைக் கொன்ற என்னை உனது குரு மன்னிப்பாரா? எனக்கு நல்ல கதி கிடைக்குமா?" --- அசோகனின் குரல் தழுதழுத்தது.

"நிச்சயம் கிடைக்கும், மன்னரே! தன்னை உணரத் துவங்கிவிட்டால், எந்த பாவமும் நம்மை பற்றாது. வாருங்கள்! எனது குருவிடம் உங்களை அழைத்துச் செல்கிறேன்!" - திவ்ய பாதா அசோகனை அழைத்துச் சென்று குரு புத்த மந்தாவின் முன்பாக நிறுத்தினார்.

ஒரு மனிதனின் முகம் இவ்வளவு நிச்சலனமாக இருக்க இயலுமா? ஒரு மன்னனின் முகம் ராஜாங்க பிரச்சனைகளால் இறுகி இருக்கும். ஒரு குருவின் முகத்தில், தான் போதிக்கும் கல்வி சீடர்களின் செவி வழி சென்று, அவர்தம் மனதில் பதிய வேண்டுமே என்கிற ஆதங்கம் இருக்கும். ஒரு போர்வீரனின் முகத்தில், வெற்றிதேவி நம் வசம் வர வேண்டுமே என்கிற துடிப்பு இருக்கும்... ஒரு பெண்ணின் முகம் தனது காதலனை எண்ணிப் பரிதவித்துக்கொண்டிருக்கும். ஆனால் இதுவரை எந்த முகத்திலுமே இப்படி ஒரு அமைதி தவழுவதை அவன் கண்டதில்லை.

https://telegram.me/aedahamlibrary

"குருவே! எனக்கு நல்வழி காட்டுங்கள்!” --- புத்த மந்தாவின் முன்பாகப் பணிந்தான்.

“நன்றாக யோசித்து பிறகு என்னை நாடு, அசோகா! உன் மனதில் இன்னும் கசமலங்கள் இருக்கின்றனவா என்பதனை முடிவு செய்ய வேண்டியவன் நீதான். ஒருவரை மற்றொருவரால் பக்குவப்படுத்த இயலாது. சுய பக்குவம் தான் ஒருவனை நல்வழிப்படுத்தும். சற்று நேரம், தனியாக அமர்ந்து, உனது அரியணையை நினை.! உனது பகட்டான அரண்மனை வாழ்க்கையை நினை!.... நீ பெற்ற கலிங்கத்து வெற்றியை நினை.! நீ கடத்தி வந்த திஸ்ஸரக்காவையும் நினை.! அவை உனக்கு சுகமான நினைவுகளைத் தந்தால், நீ என்னை நாடுவதில் அர்த்தம் இல்லை. வந்த வழியே திரும்பிச் செல். அவை வேண்டாம், உனக்கு அமைதிதான் தேவை என்று தோன்றினால் எனது குடிலுக்குள் வா. நான் உன்னை சீடனாக ஏற்றுக் கொள்கிறேன்.!” என்ற புத்த மந்தா, அசோகனை போதி மரத்தினை நோக்கி அழைத்துச் சென்றார்.

பிரம்மாண்ட போதி மரத்தினை வியப்புடன் அண்ணாந்து பார்த்தான், அசோகன்.

"அசோகா! உன்னைப் போன்ற மன்னன் கௌதமன் தன்னை உணர்ந்த இடம் இந்த போதி மரத்தின் நிழல்தான். இங்குதான் அவன் ஞானம் பெற்று புத்தனாக மாறினான். இந்த மரத்தின் சிறப்புகளை நீ தெரிந்து கொண்டால்தான் இதன் அடியில் நீ அமர முடியும், அசோகா!

"குருக்ஷேத்திரப் போரினால் குவலயமே நடுங்கியது. ரத்த ஆறு கங்கை நதியில் பெருகி ஓடியது. துவாபரம் அழிந்து கலி நுழைந்தது. இன்று கலிங்கத்து போரினை நினைத்து நீ மனம் கலங்குவது போன்று விதுரனும் பாரதப் போரின் முடிவுகளை எண்ணிக் கலங்கி, கண்ணனைப் பற்றினான். கண்ணனின் அறிவுரைப்படி தீர்த்த யாத்திரையை மேற்கொண்டான். இதோ.... நீ நிற்கும் இடம்தான் அப்போது மைத்ரேய மகரிஷியின் ஆஸ்ரமம். ஆத்ம நிஷ்டையில் விதுரன் இருந்தபோது, அவனது மடியில் விழுந்தது ஒரு அற்புத விதை. பாரதப் போரினால் நிலைகுலைந்த பூமியில் மீண்டும், வளங்களையும், அமைதியையும் நிலைநாட்டுவதற்காக விழுந்த விதை.

"தனது மடியில் விழுந்த விதையினை, தான் தவம் செய்த இடத்திலேயே விதைத்தான். அதுதான், இந்த தேவ உடும்பர மரம். அமைதி தேடி வந்த கௌதமன் இதன் அடியில் அமர்ந்துதான் ஞானத்தையும்,

https://telegram.me/aedahamlibrary

அமைதியையும் பெற்றான். நீயும் இதன் அடியில் அமர்ந்து உன்னை உணர்ந்து கொள், அசோகா! தேவ உடும்பரம் என்கிற இந்த கற்பகத் தரு உலகில் இரண்டு இடங்களில் தான் உண்டு என்று புத்த இலக்கியமான தாமரை சூத்ரம் கூறுகிறது. அவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த மரத்தின் அடியில் சென்று அமர்ந்து கொள், அசோகா.

“மீண்டும் அரச போகம் வேண்டும் என்று தோன்றினால் அப்படியே கிளம்பிச் செல். ஞானம் வேண்டும் என்றால் மட்டுமே, நீ என் குடிலுக்கு வர வேண்டும்!” --- என்று கூறிய புத்த மந்தா, அவனை திரும்பிப் பாராமல், தனது குடிலினை நோக்கி நடந்தார்.

திவ்ய பாதாவை ஒருகணம் ஏறிட்டு நோக்கிய அசோகன், மெதுவாக அந்த மரத்தினை அண்ணாந்து பார்த்தபடி அதனை ஒரு முறை வலம் வந்தான். பிறகு, அமைதியாக, மரத்தின் கீழ் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு தனது கண்களை மூடினான்.

அவன் திரும்பி கண்களைத் திறக்கும்போது அவற்றில் அமைதியும் ஞானமும் தவழட்டும் என்று பிரார்த்தித்தபடி, திவ்ய பாதா தனது குடிலுக்குள் சென்று மறைந்தார்.

மறுநாள் காலை. ---

தனது அன்றாட நியமங்களை முடித்துக்கொண்டு போதி மரத்தினை நாடிச் சென்றார், திவ்ய பாதா. நடுநிசியிலேயே அசோகன் கிளம்பிச் சென்றிருக்கக் கூடும். அவனால் சுக போக வாழ்வினை விட்டொழிக்க முடியாது. பெண்களை நினைத்த மறுகணம், அசோகன் வில்லில் இருந்து புறப்பட்ட கணையாகக் கிளம்பியிருப்பான் - என்று எண்ணிய திவ்யா பாதா, மரத்தடியில் இன்னும் கண் மூடி அமர்ந்திருந்த அசோகனைக் கண்டு திகைத்தார்.

இதுவரை உறுதியுடன் இருக்கிறான். அவனது உறுதி எதுவரை என்பதைப் பார்த்துவிடுவோம்! - திவ்ய பாதா நினைத்துகொண்டார்.

ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல! ஒரு மண்டலம் (நாற்பத்து எட்டு நாட்கள்) அசோகன் அப்படியே போதி மரத்தின் கீழ் அமர்ந்திருந்தான். திவ்யபாதாவுக்கு இன்ப அதிர்ச்சி. சுகத்தையும், புகழையும், ஆடம்பரத்தையும் அனுபவித்து விட்டு ஒரு மன்னனால் இங்ஙனம் எல்லாவற்றையும் துறந்து ஒரு மண்டலம் அமைதியாக அமர முடியுமா.?

https://telegram.me/aedahamlibrary

காலம்காலமாக சிறையில் கிடந்த இவன் துறவறம் மேற்கொண்டது பெரியதல்ல. தேகத்தாலும், மனதாலும் இவனைப் பக்குவப்படுத்தியது சிறைவாசம். ஆனால் சுகவாசியான அசோகனுக்கு இந்த உறுதி எப்படித் தோன்றியது? மலைத்துப் போனார், திவ்யபாதா.

ஒரு மண்டலம் கழித்து, -- திடீரென்று கண்விழித்த அசோகன், திவ்யபாதாவைத் தேடி வந்தான்.

அவன் முகத்தில் தவழ்ந்த அமைதியைக் கண்டு பூரித்துப் போனார், திவ்யபாதா.

"சுவாமி! எனது ஆணவ மலத்தை நான் துறக்க விரும்புகிறேன். எனது தலை முடியை நீக்கி விடுங்கள்.!" - அசோகன் வேண்ட, திவ்ய பாதா திகைத்தார்.

"அசோகரே! நீங்கள் இன்னும் மன்னர் பதவியைத் துறக்கவில்லை. மகுடம் தரிக்க தலைமுடி தேவை. நீங்கள் அமைதியை நாடித்தானே வந்தீர்கள். துறவறத்தை நாடி அல்லவே. தங்கள் முடி இருக்கட்டும்.!" --- திவ்ய பாதா கூறினார்.

"மனத்தால் நான் மன்னன் அல்ல. துறவறத்தை ஏற்று விட்டேன். மக்களின் மகுடத்தை அடுத்த மன்னனின் சிரசில் வைத்துவிட்டு நான் வந்து இங்கே ஜோதியில் கலக்கப்போகிறேன். மன்னனாக இருக்கப் போகும் கடைசி சில நாட்களில் மீண்டும் ஆணவமும், அகந்தையும் என்னைப் பற்றக்கூடாது என்பதற்காகத் தான் ஆணவ மலமாகிய எனது முடியை மழிக்கச் சொல்கிறேன்." - அசோகன் இவ்வாறு கூறியதும், திவ்யபாதாவின் மனதின் ஓரத்தில் குடியிருந்த தனது அண்ணனைப் பற்றிய கவலைகள் வற்றிப் போயின.

*****

https://telegram.me/aedahamlibrary

# 42. மீண்டும் விஷ்ணுகுப்தன்

தியானத்தில் இருந்த சாணக்கியர் திடீரெனக் கண்விழித்தார்.

சாணக்கியரின் தேகமெங்கும் புல்லரித்தது. அவரது தேகத்தில் ஏற்பட்டிருந்த தீக் காயங்கள் இப்போது ஆறிக்கொண்டு வரும் நிலையில், இவரால் பழையபடி நடமாட முடிந்தது. அத்திமலைத்தேவனின் கருணையினால் தான் சித்ரசேனா இவரை நாடி வந்திருந்தாள். அவளது அன்பான பணிவிடையிலும், குழந்தை சவ்ஷீலாவின் பாசமான பேச்சுகளிலும், தனது வேதனைகளைச் சற்றே மறந்திருந்தார். தேக நிலையும், மன நிலையும் முன்னேற, பழையபடி தியானங்களில் ஈடுபடத் துவங்கியிருந்தார். இன்று விடிந்ததுமே, தியானத்தில் ஆழ்ந்த அவருக்கு, ஒரு பரவசமான காட்சி தோன்றியிருந்தது.

அவர் மீண்டும் வேகவதி நதிக்கரையில் நிற்கிறார். எங்கும் இருள். திடீரென்று அவருக்குப் பின்பாக ஒரு ஒளி வெள்ளம். வியப்புடன் திரும்பிப் பார்க்கிறார்.

அத்திமலையின் உச்சியில் அத்திமலைத்தேவன் நிற்கிறான். அவனது தேகம் தீபத்தின் சுடர்போன்று ஜொலிக்கிறது... தனது அபய வரத ஹஸ்தத்தினை உயர்த்தி இவனை "வா வா" என்று அழைக்கிறான். “உன் காலம் முடிந்து விட்டது வந்து என்னுடன் கலந்து விடு!” என்று தனது திருவாயைத் திறந்து இவனிடம் சொல்வது போன்று ஒரு உணர்வு.

மீண்டும் காஞ்சி வனத்திற்குக் கிளம்ப வேண்டிய தருணம் வந்து விட்டது. இறுதி சுவாசத்தை காஞ்சி வனத்தின் அத்தியூரில்தான் விட வேண்டும் என்கிற வைராக்கியம் ஏற்கனவே சாணக்கியனிடம் தோன்றி விட்டிருந்தது.

அர்த்த சாத்திரம் இயற்றிய சாணக்கியனாக அவன் தனது பிறப்பிடம் செல்லப் போவதில்லை.

மவுரிய வம்சத்தினை உருவாக்கி, சந்திரகுப்தனை மன்னனாக அமரச்செய்த கவுடில்யனாக அவன் மீண்டும் அத்தியூர் செல்லப் போவதில்லை.

https://telegram.me/aedahamlibrary

விஷ்ணுகுப்தனாக, காஞ்சனகுப்தர் - சானேஷ்வரியின் மகனாகத்தான் அவன் மீண்டும் தனது பிறப்பிடத்திற்குப் போகப் போகிறான். அவனது பெற்றோர்களிடம் மீண்டும் சேரப் போகிறான்.

சாணக்கியனின் கண்கள் சித்ரசேனாவைத் தேடின.

குகையின் வெளியே சித்ரசேனா உணவு தயாரித்துக் கொண்டிருக்க, குழந்தை சவ்ஷீலா விளையாடிக் கொண்டிருந்தாள். சாணக்கியன் முகத்தில் உற்சாகம் கொப்பளிக்க அவளை அழைத்தார்.

"சித்ர சேனா!" ---

குகையின் வெளியே அமர்ந்திருந்த சித்ரா, சாணக்கியனின் குரல் கேட்டு உள்ளே வந்தாள்.

"அழைத்தீர்களா தந்தையே!" --- தந்தை என்றுதான் சித்ராவும், பாட்டன் என்று சவ்ஷீலாவும் அவரை அழைத்தனர்.

“சித்ரா! எனது காலம் முடியப் போகிறது. நான் மீண்டும் எனது பிறப்பிடமான அத்தியூருக்குச் செல்கிறேன். நான் ஆராதிக்கும் அத்திமலைத்தேவன் என்னை அழைத்து விட்டான். நான் உன்னை பத்திரமாக மீண்டும் புஷ்ப புரத்தில் விட்டுவிட்டு, என் வழியே போகிறேன்!" சாணக்கியன் சொன்னார்.

“தந்தையே! அங்கே இப்போது என்ன அரசியல் சூழ்நிலை நிலவுகிறதோ? எனது வருகையை அவர்கள் விரும்புவார்களோ இல்லையோ? எனது மகளுக்கு அங்கே பாதுகாப்பு கிடைக்குமா?" --- அவளது குரலில் பயம் தொனித்தது.

"கவலைப்படாதே சித்ரா! எனது முடிவு எனக்கு ஒரு தகவலை உணர்த்துகிறது. நமது உலகம் புதிய திருப்பங்களைச் சந்திக்கப் போகிறது. பாரதப் போர் முடிந்து கலிச்சக்கரவர்த்தியின் வசம் இந்த பூமி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இனி கலியின் அராஜக ஓட்டம் தொடங்கும். நல்லவர்களால் தீயவற்றை எதிர்க்க இயலாது. ஆனால் தீயவை பெருக வேண்டும் என்கிற ஆர்வத்தில், ஒரு தீயவனை இன்னொரு தீயவனே அழிப்பான். அவ்வகையில், இனி ஒரு கேடு நினைப்பவனை இன்னொரு கேடு நினைப்பவன் அழிப்பான். நல்லது நினைப்பவனின் அருகில் எவனும் வர மாட்டான். நீ நல்லதையே நினை. நல்லதே நடக்கும்.

https://telegram.me/aedahamlibrary

உணவு அருந்திய பின், நாம் கிளம்புவோம்!" --- சாணக்கியன் கூறினான்.

"தந்தையே! நான் இந்தக் குகையிலேயே தங்கி விடுகிறேன். எனக்கு மீண்டும் புஷ்பபுர வாசம் வேண்டாம்!" --- சித்ரா கூறினாள்.

"அதை உன்னால் தீர்மானிக்க இயலாது, சித்ரசேனா! உனது மகள் சவ்ஷீலாவின் ஜாதகத்தை நான் கணித்து விட்டேன். ஒரு பெரிய சாம்ராஜ்யம் அமைவதற்கு இவள்தான் காரணமாக இருக்கப் போகிறாள். பாரத தேசத்தில் புதிய திருப்பத்தை உண்டு பண்ணப் போகிறாள். இவளது வழியில் உதிக்கும் இரத்தம் உலகையே ஆளும். கவலைப்படாமல், என்னுடன் புறப்படு!" --- சாணக்கியனின் குரலில் தொனித்த உறுதி, சித்ரசேனாவினுள் புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

சாணக்கியர் தனது தந்தை ஆராதித்த அத்திமலைத் தேவனின் பஞ்சலோக விக்கிரகத்தை எடுத்துக்கொண்டார். உணவு அருந்தி முடிந்ததும், சித்ரசேனாவையும், சவ்ஷீலாவையும் அழைத்துக்கொண்டு புஷ்பபுரம் புறப்பட்டார். புஷ்பபுர எல்லை வந்ததும், எல்லையிலேயே நின்றார்.

"மகளே சித்ரா! அதோ புஷ்பபுரம். நேராக அரண்மனைக்கு போ. காலம் உன்வசம் பல பணிகளை ஒப்படைக்கப் போகிறது. உன் மகள் மூலம் பெரிய சாம்ராஜ்யத்தையே உருவாக்கி, பாரதத்தின் பெருமையை நிலைநாட்டச் செய்வாய். சமுத்திரத்தைப் போன்று ஒருவன் உன் குலத்தில் தோன்றுவான். மவுரியத்திற்குப் பிறகு அவனது குலம்தான் உலகை ஆளும்.! எனது ஆசிகள் உனக்கு எப்போதும் உண்டு.!" --- சாணக்கியர் கூறினார்.

“தந்தையே! வாருங்கள்! இன்று இளைப்பாறி நாளை புறப்படலாம்!” - சித்ரா சொன்னாள்.

“வேண்டாம், மகளே! இப்போது நான் வெறும் விஷ்ணுகுப்தன்தான். கவுடில்யனோ, சாணக்கியனோ அல்ல. நான் எல்லையை தாண்டி உள்ளே வந்தால், பழைய நினைவுகள் தோன்றும். துர்தரா என்னை அவமானம் செய்த சம்பவங்கள், பிபத்த நந்தனின் மரணம், சந்திரகுப்தன் எனக்கு நஞ்சினை கொடுக்க நினைத்தது, பிந்துசாரன் என்னை நாடு கடத்தியது! --- என்று சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஊர்வலம்

https://telegram.me/aedahamlibrary

வந்து எனது மனதை குழப்பும். விஷ்ணுகுப்தனாக ஒரு சிறு துணி மூட்டையுடன் காஞ்சியில் இருந்து புறப்பட்டேன். அதே ஒற்றைத் துணி மூட்டையுடன் திரும்பிப் போகிறேன். சரித்திரம் என்னைப் பற்றி பேச வேண்டும் என்கிற ஆர்வம் எல்லாம் வற்றி, ஒரு சாதாரணமான அத்திமலைத்தேவனின் தொண்டனாகத் திரும்பிப் போகிறேன்! நீ பத்திரமாக சென்று வா!"

அவர் பார்வையில் இருந்து மறையும் வரை அவரையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள், சித்ரசேனா. அவளது கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

சாணக்கியர் என்கிற கவுடில்யர் என்கிற விஷ்ணுகுப்தரை இனி காணப்போவதில்லை என்பதை உணர்ந்த அவள், தனது பெண்ணுடன் அரண்மனையை நோக்கி நடந்தாள்.

"விஷ்ணுகுப்தரே! அப்படி ஒருகால், எனது மகளின் மூலம் பெரிய சாம்ராஜ்யம் ஒன்று உருவானால், அதற்கு உமது பெயரைத்தான் சூட்டுவேன். குப்த சாம்ராஜ்யம் என்று அதனை உலகம் அழைக்கும். சமுத்திரத்தைப் போன்ற ஒருவன் தோன்றுவான் என்று கூறினீர்கள் அல்லவா. நீர் வைத்த பெயரிலேயே அந்த மன்னன் தோன்றட்டும். சமுத்திரகுப்தன் என்கிற பெயரோடு அவன் இந்த உலகத்தை ஆளட்டும்!" என்று தனக்குள் கூறியபடி புஷ்பபுர அரண்மனையினுள் நுழைந்தாள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 43. ஜோதியில் கலந்தனர்

"மன்னரே! இதென்ன கோலம்?" - வீறிட்டு அலறினாள் பத்மாவதி. அசோகனின் மழித்த சிரசைக் கண்டு மற்ற தேவியரும் கலங்கினார்கள்.

"என்ன கோலம் இது?" - விதிஷாதேவி கலங்கினாள்.

“இதுதான் எனது ஆத்ம சொரூபம், தேவியரே! இளமை துள்ளாட்டத்தில் கலவியாடுவதையே உலகமாக எண்ணியிருந்தேன். இளமை, கல்வி, கலவி, குடும்பம், பாசம், வீரம், அரசாட்சி, எல்லாமே ஒரு சுழற்சியில் தோன்றியவைதான். தேகப்பயணமே பெரும் பயணம் என்றிருந்தேன். தேகம் ஒரு நாள் முற்றுப் பெறும். ஆத்மப் பயணமே தொடரும் என்பதனை உணர்ந்தேன். மனைவியின் கடமைகளை ஆற்ற வேண்டும் என்பதால் நீங்களும், கணவனின் கடமைகளை ஆற்ற வேண்டும் என்பதால் நானும் இணைந்தோமே தவிர, உங்கள் ஆத்மப் பயணத்திற்கும், எனது ஆத்மப் பயணத்திற்கும் தொடர்பில்லை. தேக ரீதியாக உண்டான இந்த உறவு தேகத்துடனேயே அழிந்து விடும். உங்களை கீழ்த்தரமாக நடத்தி உங்களைக் காயப்படுத்திய என்னை மன்னித்து விடுங்கள். எனது கண்களைத் திறந்தவன் மகன் குணாளன். எங்கே அவன்?”

"தந்தையே! இதோ இருக்கிறேன்! தங்கள் கண்களைத் திறந்தவன் கண்களை இழந்து இதோ நிற்கிறேன்!” தட்டுத்தடுமாறி நடந்து வந்த மகனைக் கண்டதும், அசோகனின் நிச்சலனமான மனதில் ஒரு சிறு கல்லை எறிந்தது போன்ற சலனம்.

குணாளனுக்கா இந்த கதி?

“என்ன நடந்தது குணாளா?” - பதறிப்போனான், அசோகன்.

"உங்களது மூலாதாரத்தை கட்டியது போன்று எனது விசுத்தி சக்கரத்தை வர்ம கலையால் பந்தனம் செய்து விட்டாள், திஸ்ஸரக்கா!” - குணாளன் கூறியதும், ஒரு மண்டலம் போதியின் கீழே அமர்ந்து உறுதியினை சேகரித்திருந்த அசோகன், அந்த உறுதியை இழக்கத் துணிந்தான்.

“திஸ்ஸரக்கா...! குடிகேடி!” --- என்று சொற்களை சினத்துடன் அவன்

https://telegram.me/aedahamlibrary

உதிர்க்கத் தொடங்க, குணாளன் பாய்ந்து வந்து அவனது வாயை மூடினான்.

"தந்தையே! மிகவும் உயர்ந்த நிலையில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டீர். மீண்டும் கீழே வரத் தேவை இல்லை. உங்களையே நீங்கள் புரிந்து கொண்டு, போதி மரத்தின் அடியில் ஒரு மண்டலம் ஆத்ம நிஷ்டையில் இருந்ததாக திவ்ய பாதா ஓலை அனுப்பியிருந்தார். அதை எண்ணி நான் பூரித்துப் போனேன். நானும் உங்கள் வழியே நடப்பதென்று தீர்மானித்து விட்டேன்.!" குணாளன் கூற சற்றே அதிர்ந்தான், அசோகன்.

"என்ன பேசுகிறாய் குணாளா? எனக்கு பாரமாக இருக்கும் இந்த மகுடத்தை உனது தலையில் சுமத்திவிட்டு, நான் ஜோதியில் ஐக்கியம் ஆகிவிடலாம் என்றல்லவா திட்டம் தீட்டியுள்ளேன்.?" --- திகைத்தான், அசோகன்.

"தந்தையே! அரியணையை சகோதரன் தசரதனுக்குத் தாருங்கள். எனக்கு உங்களுக்குத் தொண்டாற்றும் பாக்கியத்தை தாருங்கள்!" தந்தையை ஆதூரத்துடன் அணைத்துக் கொண்டான் குணாளன்.

"குணாளன்! நல்ல பெயரைத்தான் உனக்கு வைத்தேன். மவுரியத்தின் மாணிக்கம் நீ!" வாஞ்சையுடன் மகனை அணைத்தான்.

"நாம் மட்டுமல்ல, தந்தையே.! நம் குடும்பத்தில் உள்ள அனைவரையும் ஜோதியில் கலக்க வைப்போம்! பாவம் திஸ்ஸரக்கா! சிறு பெண்தானே. அதனால்தான் சதிகளில் ஈடுபடுகிறாள். அவளையும் நல்வழிப்படுத்துவோம். வாருங்கள்!" குணாளன் அழைத்தான்.

இனி திஸ்ஸரக்காவின் பேரழகு தன்னை பாதிக்காது என்கிற உறுதியுடன் அவளது மாளிகையை நோக்கி நடந்தான், அசோகன்.

ஆனால் ---

தந்தையும், மகனும் அங்கே சென்றபோது, திஸ்ஸரக்கா இல்லை. அவள் எங்கே போனாள் என்பது அவர்களுக்குப் புரியாத மர்மமாக இருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 44. வன்மத்தால் வர்மம்

திவ்ய பாதா தனது குடிலில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். சீடன் ஒருவன் வந்து அவரது நிஷ்டையைக் கலைக்க, அவனை கேள்வியுடன் பார்த்தார், திவ்ய பாதா.

"சுவாமி! மன்னர் அசோகரின் மனைவி திஸ்ஸரக்கா தனது தோழியருடன் வந்திருக்கிறார். தங்களை தரிசிக்க வேண்டுமாம்.!" --- சீடன் கூறியதும், வியந்தார், திவ்ய பாதா.

"மன்னன் அசோகனை விட்டு விடுங்கள். அவரை புத்தத் துறவியாக மாற்றாதீர்கள் - என்று இறைஞ்ச வந்திருக்கிறாள், போலும்!" - மனதிற்குள் நினைத்தபடி திஸ்ஸரக்காவைக் காணச் சென்றார், திவ்ய பாதா.

தனக்காக நிச்சயிக்கப்பட்ட பேரழகி என்கிற எண்ணம் மனதில் எழுந்தது. சிதையில் வெப்பம் தாங்காமல் எழும் பிணத்தின் தலையில் கம்பினால் வெட்டியான் அடி போடுவது போன்று, தன்னுள் எழுந்த எண்ணத்தினை துறவறம் என்கிற தண்டத்தினால் ஓங்கி ஒரு அடிகொடுத்தார், திவ்ய பாதா.

பதற்றத்துடன் இப்படியும் அப்படியுமாக உலவிக் கொண்டிருந்தாள், திஸ்ஸரக்கா.

திவ்ய பாதாவைக் கண்டதும் குனிந்து வணங்கினாள்.

“சுவாமி! எனது தவறுகளைப் புரிந்து கொண்டேன். எனது கணவரின் முகத்தில் தாண்டவமாடும் அந்த அமைதியை நானும் எனது தோழியரும் பெற விரும்புகிறோம். எங்களுக்கும் அமைதி வேண்டும். எங்களையும், புத்தன் மோன நிலையில் தவம் புரிந்த அந்த போதி மரத்தின் அடியில் அமைதியாக யோகநிலையில் அமருவதற்கு அனுமதி தாருங்கள்.!" - திஸ்ஸரக்கா இறைஞ்சினாள்.

அமைதி தேடி வந்தவளா.? ஆனால் உடற்கூறின் மொழியைக் கவனித்தால் மிகவும் பதற்றத்துடன் அல்லவா காணப்படுகிறாள். ஆனால் பேதை பெண்கள் பாவம். தேகத்திலும், மனதிலும் அமைதி இல்லை.! இவர்களை போதி மரத்தின் அடியில் அமர வைப்பதால்,

https://telegram.me/aedahamlibrary

அவர்கள் மனநிலை ஸ்திரப்படும். தேவ உடும்பர மரத்தின் காற்றின் அலைகள் நல்ல எண்ணங்களை உண்டு பண்ணும். கண்மூடி தியானம்தானே செய்யப் போகிறார்கள். செய்யட்டுமே.

“தாயே! அமைதி என்பது பொதுச்சொத்து. இந்த உலகமே அமைதியில் இருந்துதான் பிறந்தது. அமைதியினுள்தான் நுழைந்து முடியப்போகிறது. உங்கள் குழம்பிய மனநிலைக்கு அமைதி தேவை என்பதை உணர்ந்த போதே, நீங்கள் நல்ல பாதையில் பயணிக்கிறீர்கள் என்பது புலப்பட்டு விட்டது. மரத்தின் அடியில் அமர்ந்து எவ்வளவு காலம் வேண்டுமானாலும் மன அமைதியை பெறுங்கள்!” திவ்ய பாதா கூறிவிட்டு, தனது குடிலை நோக்கி நடந்தார். விட்ட இடத்திலிருந்து தனது நிஷ்டையை தொடர்ந்தார்.

திஸ்ஸரக்காவும், சுமார் இருபது பெண்களும் அந்த போதி மரத்தடியில் அமர்ந்தனர். கண்களை மூடி தியானத்தில் இறங்கினர்.

அந்த இருபது பெண்களும் திஸ்ஸரக்காவுடன் கலிங்கத்தில் இருந்து வந்தவர்கள். மவுரிய வீரர்களால் கடத்தப்பட்டு, சீரழிக்கப்பட்டு, இப்போது மவுரியத்தில் எவ்வித பற்றும் இன்றி வாழ்பவர்கள். அனைவரும் திஸ்ஸரக்காவின் மாளிகையில் அன்றாடம் அவளால் வஞ்சம் என்னும் விஷ ஊசி ஏற்றப்பட்டு வருபவர்கள். அவர்களை எல்லாம் திரட்டிக்கொண்டு திஸ்ஸரக்கா ஒரு திட்டத்தோடுதான் புத்த கயை வந்து, போதி மரத்தின் கீழே அமர்ந்திருந்தாள்.

திஸ்ஸரக்காவின் மூடிய கண்களில் பல காட்சிகள் ஓடிக்கொண்டிருந்தன. தனது தந்தை ஸ்ரீமகிமா பிரத்யோகிஷ ஆதிபதியின் உருண்டோடிய சிரம் தெரிந்தது. கலிங்க வீரர்களைக் கொன்று குவித்த மவுரிய வீரர்களின் அராஜக செயல்கள் தெரிந்தன. தங்கள் குடும்பங்களில் இருந்து வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்பட்டு, அபலைகள் மவுரிய காமுகர்களால் கடத்திச் செல்லப்படுவதும் தெரிந்தது. குழந்தைகளும், முதியவர்களும், பெண்களும் கொன்று குவிக்கப்படுவது தெரிந்தது. காட்சிகள் தெரிய, அவளது ஆவேசமும் அதிகரித்தது.

திடீரென்று ---

திஸ்ஸரக்காவின் கண்கள் திறந்தன. அதில் குரோதமும், வெறியும் தாண்டவமாடின.

https://telegram.me/aedahamlibrary

“தோழியரே! தயாராகுங்கள். நமது கலிங்கத்தை அழித்த மவுரியர்களுக்கு, வளமும், ஆற்றலும், நல்வாழ்வும் அளிப்பது இந்த தேவ உடும்பரம்தானாம். இந்த மரம் அவர்கள் வசம் இருக்கும்வரை மவுரியர்களை அழிக்க முடியாது... எனவே, முதலில் இந்த மரத்தை அழிக்க வேண்டும். ம்ம்... தயாராகுங்கள்.

"வர்மக் கலையின்படி மனித தேகங்களை ஆட்டிவைப்பது நாடிச்சக்கரங்கள்... சகஸ்ரதளம், விசுத்தி, அனாகதம், மணிபூரகம், சுவாதிட்டானம், மூலாதாரம் என்பது போன்று மரங்களுக்கும் நாடிச் சக்கரங்கள் உண்டு. மனித தேகத்தைக் கட்டி அவன் கதையை முடிப்பது போன்று, மரங்களின் தேகத்தையும் கட்டி, அவற்றின் கதையை முடிக்க முடியும். தேவ உடும்பர அத்திக்கு ஒவ்வாதது, வீர்யவாசுகி சர்ப்பத்தின் நஞ்சு. ஓராயிரம் மண்டுக முட்களை, அந்த வீர்யவாசுகியின் நஞ்சினில் ஊற வைத்து, அந்த முட்களின் ஊசிகளில் விஷத்தினை ஏற்றியிருக்கிறேன். அந்த முட்களால் மரத்தின் வேரில் துவங்கி, உச்சாணிக் கிளை வரை பாய்ச்சுவோம். முட்களால் மரத்தைத் துளைக்க மரம் உயிரை விடும்!” என்றவள் சட்டென்று எழுந்து தனது இடையில் பதுக்கி வைத்திருந்த பட்டுத் துணியின் முடிச்சினை அவிழ்த்தாள். உள்ளே, ஆயிரம் மண்டுக முட்கள் குவிக்கப்பட்டிருந்தன.

திஸ்ஸரக்காவே முதல் மண்டுக முள் ஊசியினை தேவ உடும்பரத்தின் வேர் ஒன்றில் பாய்ச்சினாள். தொடர்ந்து இரு கைகளாலும் ஊசிகளை எடுத்து மரம் முழுவதும் துளைக்கத் துவங்கினர், பெண்கள். பெண்கள் பலர் மரத்தடியில் தியானம் செய்வதால், அவர்களைக் கண்டு தங்களது கட்டுப்பாடு நிலைகுலையக் கூடாது என்று புத்த கயையினைச் சேர்ந்த துறவிகள் போதி மரத்தின் பக்கமாக வராமல் இருக்க, அது அந்தப் பெண்களுக்கு இன்னும் வசதியாகப் போனது. தங்கள் குரூர எண்ணத்தை தொடர்ந்து செயல்படுத்தினார்கள். இனி அந்த மரம் பிழைக்காது என்கிற நிலை வரும் வரை, திஸ்ஸரக்காவும் தோழிகளும், அந்த மரத்தினை முட்களால் துளைத்துக்கொண்டே இருந்தனர். மரத்தில் விஷம் பூரணமாக இறங்கியதும், “அழியட்டும் மவுரியம்!” என்கிற கோஷத்துடன் புத்த கயையை விட்டுக் கிளம்பினர், திஸ்ஸரக்காவும், தோழிகளும்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 45. இரகசியப் படை

புத்தர் தவம் செய்த போதி மரம், திஸ்ஸரக்கா மற்றும் அவளது தோழிகளினால் விஷ ஊசிகளால் துளைக்கப்பட்டு, இறந்து போய் விட்டது. இனி மரம் வளராது!" --- என்கிற கொடிய செய்தி அசோகனை நிலைகுலையச் செய்து விட்டது.

"எனக்கு ஞானம் வழங்கிய குருவுக்கு துரோகம் இழைத்து விட்டாயே, திஸ்ஸரக்கா. கணவனின் ஆசானைக் கொல்வது முறையா?" - தன்னை மறந்து புலம்பிக்கொண்டிருந்தான், அசோகன்.

"குரு மந்தாவின் முகத்தில் எப்படி விழிப்பேன்?" -- என்று கதறிய அசோகனைத் தேற்றி, புத்த கயைக்கு அழைத்து வந்திருந்தான், குணாளன்.

"குருவே! என்னை மன்னித்து விடுங்கள்!" --- கதறி அழுத அசோகனைத் தேற்றினார், புத்த மந்தா.

"தேவ உடும்பர மரத்தின் மகாத்மியம் புரியாமல், நடந்து கொண்டு விட்டாள், திஸ்ஸரக்கா. உலகிலேயே, இரண்டு தேவ உடும்பர மரங்கள் தான் உண்டு. மற்றொன்று எங்கு உள்ளது என்பது தெரியாத நிலையில், நமது புத்த தர்மத்திற்கு பொக்கிஷமாக, வாராது போல் வந்த மாமணியாகக் கிடைத்த தேவ உடும்பர வ்ருட்சத்தை கொன்று விட்டாளே திஸ்ஸரக்கா!" - புத்த மந்தா மனம் வருந்தினார்.

"எல்லாம் என்னால் வந்தது. நான் அவர்களை போதி மரத்தின் அடியில் அமரச்சொன்னது எனது தவறு!" - திவ்ய பாதா கண்ணீர் சிந்தினார்.

"அவளுக்கு மரணதண்டனையை அளிக்கிறேன்!" - அசோகன் வெகுண்டு போய்க் கூறினான்.

"அவளுக்கு மரண தண்டனை அளிப்பதால், நமது தர்மம் நிலைத்து விடுமா? நமது புத்த தத்துவத்தின் மூலமே தேவ உடும்பர மரம்தான். நமது சூத்திரங்கள் அனைத்துமே, தேவ உடும்பரத்தைச் சுற்றியே உள்ளது. தேவ உடும்பரக் கனியின் உள்ளே அதன் மலர் ஒளிந்திருக்கும். மூவாயிரம் வருடத்திற்கு ஒரு முறை பூக்கும். புத்தன் அதன் அடியில் அமர்ந்தபோது அந்த மரத்தில் பூ தோன்றியது. எனவேதான்

https://telegram.me/aedahamlibrary

கூறுகிறேன். தேவ உடும்பரம் மரம் நமது தத்துவத்திற்கு மிகவும் தேவை. அதனை நாம் இழந்திருக்கக் கூடாது.!" புத்த மந்தா, பட்டுப் போகத் தொடங்கி இருந்த தேவ உடும்பர மரத்தை வேதனையுடன் பார்த்தபடி கூறினார்.

"இதற்கு ஒரு வகையில் நீதான் காரணம் அசோகா, கலிங்கத்து மக்களின் நெஞ்சங்களை வாளால் நீ துளைத்தாய். கலிங்கத்து இளவரசி முட்களால் இந்த மரத்தினை துளைத்து விட்டாள். மன்னன் என்பவன் அதிகாரத்தையும், ஆற்றலையும் கொண்டு ஜெயித்து விடலாம். ஆனால் பிரபஞ்சத்தின் நீதிமன்றத்தில் அவனுக்கு தோல்விதான் கிட்டும். போர் வெற்றிகள் எல்லாம் ஆன்மாவின் தோல்விகள் என்பதை மன்னர்கள் புரிந்து கொள்ள வேண்டும்" - விரக்தியுடன் கூறினார்.

“இப்போது என்ன செய்வது, குருவே?” - கண்கலங்கக் கேட்டான், அசோகன்.

"தற்காலிகமாக ஒரு வழி உண்டு. இந்த தேவ உடும்பர மரத்திற்கு காம மரம் என்று பெயர். ஒரு மனிதன் தனது காதலியைப் புணருவது போன்று, இந்த தேவ உடும்பர மரம், இன்னொரு மரத்தைப் புணர்ந்து அதன் ஆற்றலை தன்னுள் எடுத்துக் கொள்ளும். ஆனால், அதனால் அந்த மரம் தனது இறப்பினை தள்ளிப் போடலாமே தவிர, இழந்த தனது சக்திகளைப் பெற முடியாது. புத்தர் தவமிருந்த போதி மரம் இறந்து விட்டது என்கிற சேதியை ரகசியமாக வைப்போம். இந்த மரத்திலிருந்து விதை... அணுக்களை எடுத்து அரச மரம் ஒன்றில் விதைப்போம். அந்த அரச மரத்தின் ஆற்றலை உறிஞ்சிக்கொண்டு இந்த மரம் பிழைக்கட்டும். அதற்குள்..." என்று கூறியவர், தொடர்ந்து பேசாமல் மௌனம் சாதித்தார்.

“அதற்குள்…?” குரு பாதியில் நிறுத்திவிட்டு, அமைதி காத்ததால், குழப்பத்துடன் அவரைப் பார்த்தான் அசோகன். திவ்ய பாதாவும் வியப்புடன் போதி மந்தாவை நோக்கினார்.

"அதற்குள் நாம் மற்றொரு தேவ உடும்பர மரத்தினைக் கண்டுபிடித்து அதனை நம் வசம் கொண்டு வர வேண்டும். உலகில் இரண்டு தேவ உடும்பரங்களை உருவாக்கினான் இறைவன். ஒன்று விதுரனால் விதைக்கப்பட்டு, இதோ இப்போது பட்டுப் போய்விட்டது. மற்றொன்று விச்வ கர்மாவினால் தட்சிணப் பகுதியில் விதைக்கப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

"தட்சிணப் பகுதியிலா?" வியந்தான் அசோகன்.

"ஆம்! சாணக்கியனை நினைவிருக்கிறதா.? மவுரிய சாம்ராஜ்யத்தை நிறுவியவன். அந்த தட்சிணத்தில் உள்ள தேவ உடும்பரத்தின் சக்தியைக் கொண்டுதான், மவுரிய சாம்ராஜ்யத்தையே நிறுவினான். மவுரியத்தின் மூல விதையே தேவ உடும்பரம்தான். அத்தகைய தேவ உடும்பரத்தைத்தான் நாசம் செய்து விட்டாள், திஸ்ஸரக்கா. நீ கலிங்கத்தை அழிக்க, அவள் பதிலுக்கு இந்த தேவ உடும்பர வ்ருட்சத்தினை அழித்து, மவுரியத்தின் மூல விதியினையே அழித்து விட்டாள். அவள் நோக்கம் ஜெயித்தது. ஆனால், நமது நோக்கம் ஜெயித்தால்தான் இனி மவுரியமும் தழைக்கும், புத்த தர்மமும் தழைக்கும்.!" புத்த மந்தா எச்சரிக்கையுடன் அவனது கண்களினுள் ஆழமாகப் பார்த்தார்.

"நான் என்ன செய்ய வேண்டும் குருவே?" - அசோகன் கேட்டான்.

"தெற்கில் உள்ள அந்த தேவ உடும்பர மரத்தை நாம் தேடிக் கண்டுபிடித்து அதனை நமது மூல விதையாக மீண்டும் மாற்ற வேண்டும். உனது படை பலம், ஆள் பலத்தைக் கொண்டு நீ உடனடியாக அதனைத் தேடிக் கண்டுபிடி. சாணக்கியன் வழிபட்ட அத்திமலைத்தேவன் கோயிலுள்ள அத்தியூர் என்கிற ஊரில்தான் அந்த தேவ உடும்பர மரம் இருப்பதாக அறிகிறேன். தமிழ் மொழியில் தேவ உடும்பரத்தினை பூவரச அத்தி என்கிறார்கள். காஞ்சி வனம் என்றாலே அத்தி வனம் என்று ஒரு பெயர் அத்தியூர். காஞ்சி வனத்தில் உள்ள அத்தியூரைக் கண்டுப்பிடி, அங்கே தான் அந்த தேவ உடும்பர மரம் இருக்க வேண்டும்!" - புத்த மந்தா கூற, அசோகன் பரபரப்புடன் எழுந்தான்.

"என் மனைவியால் புத்தனின் போதி மரம் அழிந்தது என்கிற குற்றச்சாட்டு நீங்க வேண்டும். நான் உடனே, அந்த தேவ உடும்பர மரத்தைக் கண்டுபிடித்து நமது புத்த கயையினில் நடுகிறேன். அது தொடர்ந்து நமது தர்மத்தையும் மவுரியத்தையும் காக்கட்டும்.!" - அசோகன் கூறினான்.

"உடனடியாகச் செய், அசோகா. புத்தபிரானின் அருட்கருணை உன் மீது பாயட்டும்.! ஆனால் ஒன்றை நீ புரிந்து கொள்ள வேண்டும். வைதீகம் வடபுலத்தை விட தெற்கில் மிகவும் வலிமை வாய்ந்தது. ஆகம வழிகளை பின்பற்றும் மிகவும் ஆற்றல் வாய்ந்த பகுதி தட்சிணம். வடபுலத்தில்

https://telegram.me/aedahamlibrary

வெறும் நாம ஜபமும், பஜனைகளும்தான் வழிபாட்டு முறை. தட்சிணத்தில் மந்திர ஆகமங்களையும், யந்திரங்களையும், சக்தி வாய்ந்த சூக்தங்களையும் கொண்டு ஆராதனை செய்கிறார்கள். அவர்களிடம் ஆற்றல் அதிகம். நம்மவர்களைப் போன்று அவர்களை லேசாக எண்ணி விடாதே. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போன்று, தட்சிணத்தில் உள்ள அனைவருமே சாணக்கியனைப் போன்ற புத்திக்கூர்மை படைத்தவர்கள். அவர்களை படைபலம் கொண்டு வெல்ல முடியாது. அறிவாளிகளை அறிவால்தான் வெல்ல வேண்டும். - புத்த மந்தா கூறினார்.

"கவலைப்படாதீர்கள் குருவே! கத்தியின்றி, ரத்தமின்றி, புத்தியுடன், சக்தியுடன் செயல்பட்டு தேவ உடும்பரத்தை கொண்டு வருகிறேன்!”

“அப்படி உன்னால் கண்டுபிடிக்க இயலவில்லை என்றால்?” - புத்த மந்தா கேட்டார்.

சஞ்சீவி மூலிகையைத் தேடச்சென்ற ஹனுமான், அதைக் காணாமல் மலையையே கொண்டு வந்தது போல், தேவ உடும்பர மூலிகை கிடைக்காவிட்டால், அந்த காஞ்சி வனத்தையே நமது மவுரியத்தோடு இணைக்கிறேன்.!” அசோகன் சூளுரைத்தான்.

புத்த மந்தா, அவனை உவகையுடன நோக்கித் தலையசைத்தார்.

“திவ்ய பாதா!” பூர்வாச்ரம தம்பியை அழைத்தான் அசோகன்.

“உன் தலைமையில் நான் ஒரு குழுவினை அமைக்கிறேன். நீ தெற்கே சென்று எப்படியாவது அந்த தேவ உடும்பர மரம் இருக்கும் இடத்தை எனக்குத் தெரியப்படுத்து. நான் எனது படைகளுடன் வந்து அந்த மரத்தினை கைப்பற்றி புத்த கயைக்கு கொண்டு வருகிறேன்! மீண்டும், தேவ உடும்பர மரத்தை போதி மரமாக நிறுவுகிறேன். இதைச் செய்து முடித்த பிறகே, துறவறம் மேற்கொள்வேன்!” - அசோகன் சபதம் செய்தான்.

புத்த மந்தா அவனை மகிழ்ச்சியுடன் நோக்க, திவ்ய பாதா, “உத்தரவு மன்னா!” என்றார்.

ஒரு நல்ல நாளில், பட்டுப் போன போதி மரத்தின் விதை ஒன்றை எடுத்து பலம் வாய்ந்த அரச மரம் ஒன்றில் அதனை விதைக்க, விரைவில் அந்த

https://telegram.me/aedahamlibrary

மரத்தைத் துளைத்துகொண்டு, தேவ உடும்பரம் வேரிடத் துவங்கியது.

மரம் வேரிடத் துவங்கியதே தவிர, அதன் ஆற்றல் மீண்டும் தோன்றுமா என்பதை காலம்தான் கூறவேண்டும், தனக்குள் நினைத்துக்கொண்டார், திவ்ய பாதா.

அன்றிரவே ---

திவ்ய பாதாவின் தலைமையில் தேவ உடும்பர மரத்தினைத் தேடிச்செல்வதற்கு ஒரு குழுவினை அறிவித்தான். அசோகன்.

“தேவ உடும்பர மரத்தைத் தேடி வந்ததாக யாரிடமும் கூறாதீர்கள். இலங்கை வேந்தன் ஸ்ரீ மகிந்தா புத்த தர்மத்தை தங்கள் தேசத்தில் பரப்புவதற்கு வாருங்கள் என்று புத்த மந்தாவிற்கு அழைப்பு விடுத்திருக்கிறான். அதையே காரணமாகக் கூறிக்கொண்டு செல்லுங்கள். காஞ்சி வனத்தில் ஒரு இடத்தையும் விடாமல், அந்த தேவ உடும்பர மரத்தைத் தேடுங்கள்!" அசோகன் கூறினான்.

திவ்ய பாதாவின் தலைமையில் புறப்பட்ட குழுவில், அசோகனின் மகன் மகிந்தா (விதிஷாதேவிக்குப் பிறந்தவன்), சங்கமித்தா, அவளது கணவன் அக்ரி பிரம்மா, மகன் சுமனா, ஆம்ரபாலி, பத்ரா, விஷ்வாங்கன், வினோதன், தேவசேனன் உள்பட பதினாறு பேர் சென்றனர்.

பத்ரா என்பவள் தான் அசோகனுக்கும் அவனது அமைச்சர் ராதாகுப்தனின் மகள் ராஜிவிக்கும் பிறந்த மகள்.

தேவ உடும்பரத்தைத் தேடி தெற்கே கிளம்பியது அசோகனின் ரகசியப் படை.

*****

https://telegram.me/aedahamlibrary

# 46. முக்கூடல் கடிகை

காஞ்சி வனம்! மன்னன் திருலோச்சனன் [1] தனது புதிய மனைவி அணிமாகோதையைக் காதலுடன் பார்த்தான். அவளுக்கு இப்போது லோச்சனாதேவி என்கிற பட்டப்பெயரை வழங்கியிருந்தான். கடந்த ஆனித்திங்கள் சஷ்டியில் கடக லக்கினத்தில் மங்கல நாணினை அணிவித்து அவளைப் பல்லவப் பட்டத்தரசியாக அரியாசனத்தில் அமர்த்தியிருந்தான்.

கரிகாலனின் சிற்றன்னை.! தனது மாமன் இளஞ்சேட்சென்னி, இருங்கோவேள் என்பவனால் கொல்லப்பட, கர்ப்பிணியான தமக்கைக்கு உதவியாக அழுந்தூர் வேளிர் நாட்டிலிருந்து வந்திருந்தாள். தமக்கையோடு தங்கிவிட்டாள். திருலோச்சனனுக்கு தனது தங்கையை மணமுடித்துத் தந்திருந்தாள், கரிகாலனின் தாய்.

லோச்சனா தேவி பிரமிப்புடன் தான் நின்று கொண்டிருந்த முக்கூடல் குன்றத்திலிருந்து சுற்றிப் பார்த்தாள். கடல் போன்று எங்கும் நீர் சூழ்ந்திருந்தது. வண்ண வண்ணப் பறவைகள் இங்கும் அங்கும் பறந்தபடி விளையாடிக்கொண்டிருக்க, அந்த ரம்மியமான காட்சி லோச்சனாவை மயங்கச் செய்தது.

“இந்த இடத்தின் பெயர்?” --- காவிரியின் பாய்ச்சலை மட்டுமே இதுவரை கண்டிருந்த லோச்சனாவுக்கு, இது ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

“இந்த இடத்தின் பெயர் மாலிருஞ்சோலை. இந்த குன்றத்தின் மீது உள்ள சிங்கபிரான் கோவிலும், அடுத்து உள்ள கரிவரதன் கோவிலும் மிகவும் சக்தி வாய்ந்தவை.!” --- மனைவியிடம் கூறினான், திருலோச்சனன்.

“அதோ... தொலைவில் கடல் போன்று காட்சி தருகிறதே. அதுதான் முக்கூடல். திரிவேணி சங்கமம் என்பார்கள். பாலாறு, செய்யாறு, வேகவதி என்கிற மூன்று ஆறுகள் சங்கமிக்கும் இடம். பாற்கடலில் கிடப்பது போன்று, யாகத்தைத் தடுக்க பாய்ந்த சரஸ்வதியை கிடந்து தடுத்ததால், அங்கே பாலாறு உண்டானது. பிரும்மன் யாகத்தை செய்வதற்கு காவலாக நின்றபோது உருவானது செய்யாறு. ஆற்றின் உருவில் பாய்ந்த கலைமகள் கோபம் நீங்கி மாலவனை சரண் புகுந்த

https://telegram.me/aedahamlibrary

இடம் இது. மூன்று ஆறுகளும் இணையும் இடம் என்பதால் முக்கூடல்!" --- திருலோச்சனன் விளக்க, ஆர்வத்துடன் அவன் கூறுவதைக் கேட்டாள், லோச்சனா.

“மிகவும் தொன்மை வாய்ந்த இடம் இது, லோச்சனா. வேமுலத்திலிருந்து எனது அரண்மனையை இங்கே மாற்றியதற்குக் காரணமே இந்தப் பகுதியின் பெருமைகள் தான்!” திருலோச்சன பல்லவன் கூறினான்.

“பக்கலில் உள்ளது சோழநாடுதான்! இருப்பினும் நான் இங்கே இதுவரை வந்ததில்லை!” - லோச்சனாதேவி கூறினாள்.

“இளஞ்சேட்சென்னியின் கொலை வருத்தமளிக்கிறது!” - பல்லவன் கூறினான்.

"பிஞ்சு குழந்தையுடன் கரிகாலனை வைத்துக்கொண்டு எனது தமக்கை என்ன துன்பப்படுகிறாளோ?!” --- லோச்சனா வருந்தினாள்.

"கலங்காதே அரசி! நம்மால் ஆன உதவியைச் செய்வோம். துன்பத்தோடு சல்லாபிக்க வேண்டிய தருணமா இது? வா... இயற்கை அழகை கண்களால் பருகிக்கொண்டே மாலிருஞ்சோலையை வலம் வருவோம்!” - மன்னன் மனைவியுடன் குன்றத்தில் ஏறிக்கொண்டிருந்தான்.

அப்போது ---

ஒத்தாடை அரண்மனையிலிருந்து அதிகாரி எவரிவன் சிலையன் தனது புரவியை குன்றத்தின் அடிவாரத்தில் நிறுத்தி விட்டு, விடுவிடுவென்று குன்றம் ஏறத் துவங்கினான். மிகவும் அவசரமான செய்தி ஒன்றை மன்னருக்குக் கொண்டு வந்திருக்கிறான்.

திருமணத் தம்பதிகளான அரசனும், அரசியும், அன்றைய பொழுதை ஏகாந்தத்தில் கழிக்கத் தீர்மானித்து, தலைமை அமைச்சர், நீலலோகிதரிடம் அதற்கான அறிவிப்பை செய்துவிட்டே, மாலிருஞ்சோலை மலைக்கு வந்திருந்தனர்.

ஆனால், கடற்காவல் தலைவன், சக்கரபாணி, நீலலோகிதரிடம் ஒரு பரபரப்பான தகவலைத் தெரிவிக்க, வேறு வழியின்றி மன்னரிடம் சிலையனை அனுப்பியிருந்தார், தலைமை அமைச்சர்.

https://telegram.me/aedahamlibrary

தன் முன்னால் சுவாசத்தை இழுத்துப் பிடித்தபடி நின்ற சிலையனை, எரிச்சலுடன் நோக்கினான், பல்லவன். புதுமணத் தம்பதியின் ஏகாந்தத்தைக் குலைக்குமளவுக்கு அப்படி என்ன அரசியல் பிரச்சனை இப்போது எழுந்திருக்கிறது?

“என்ன விஷயம், சிலையா?” - பல்லவன் கேட்டான்.

“புத்த கயையினில் இருந்து பதினாறு பேர் கொண்ட குழு ஒன்று நமது மாவிலக்கை [2] துறைக்கு வந்திருக்கிறது!” --- சிலையன் கூறி விட்டு, சற்றே சுவாசத்தை வாங்கினான்.

பல்லவனின் உள்ளத்தில் தலைமை அமைச்சரின் மீது சினம் பெருகியது.

“வரட்டுமே! இலங்கைக்குப் போவதற்காக இங்கே வந்திருக்கின்றனர் போலும். இலங்கை மன்னன் சிரிதிஸ்ஸா புத்த மதத்தை பரப்புவதற்காக அவர்களை வரச்சொல்லியிருப்பான்!” பல்லவன் கூறினான்.

"மன்னவா! அந்தக் குழுவில் அசோக மவுரியரின் மகன் மகேந்திரன், மகள் சங்கமித்தா, அவள் கணவன் அக்ரி பிரம்மா மற்றும் மகன் சுமனா மற்றும் இன்னும் பன்னிரண்டு பேர் வந்திருக்கின்றனர்." - சிலையன் கூறினான்.

"அப்படியா!” --- யோசனையில் ஆழ்ந்தான், பல்லவன்.

“இளவரசி சங்கமித்தா, நமது முக்கூடல் கடிகைக்குச் செல்வதற்கு வழியை விசாரித்துக் கொண்டிருந்ததாக தகவல் வந்திருக்கிறது!?"

"முக்கூடல் கடிகைக்கா.? அங்கே அவளுக்கு என்ன வேலை?”

“அது மட்டுமல்ல, அரசே.! இனிமேல்தான் தலைமை அமைச்சர் கூறிய முக்கியமான தகவலை அடியேன் தெரிவிக்கவுள்ளேன்!”

அரசி லோச்சனா தேவியை தயக்கத்துடன் நோக்கிய சிலையன், மன்னரின் செவிகளை நெருங்கி அவனுக்கு மட்டும் புரியும் வண்ணம் ஏதோ முணுமுணுக்க, திருலோச்சனப் பல்லவனின் முகம் இருண்டது.

"தேவி! முக்கிய பணி ஒன்று காத்திருக்கிறது. நாம் அரண்மனைக்குத் திரும்புவோம். பின்னர் ஒரு சமயம், மாலிருஞ்சோலை மலைக்கு

https://telegram.me/aedahamlibrary

வருவோம்!" என்று மன்னன் கூற, அரசி வியப்புடன் எழுந்தாள். அதன் பின், மன்னரின் முகம் ஏனோ, பதட்டத்துடன் இருந்ததாகத் தோன்றியது அரசி லோச்சனா தேவிக்கு!

**[1]** புலி சோமன், புலி வேமு, புலி வர்மன் வழியில் ஆட்சிக்கு வந்திருந்த திருலோச்சன பல்லவன், தனது சாம்ராஜ்ய மன்னர்கள் தொடர்ந்து வைத்துக்கொண்டிருந்த புலி என்கிற பெயரை நீக்கி, பல்லவன் என்கிற பெயரைச் சேர்த்திருந்தான். அச்வத்தாமாவின் மகன் புலி சோமா பல்லவம் என்கிற தொண்டை கொடியினை மாலையாக அணிந்து வேமுலத்தில் ஒரு ராஜ்ஜியத்தை தொடங்கியதால், தொண்டை செடியையே தங்களது அடையாளமாகக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து, பல்லவம் என்கிற பட்டப்பெயரை வைத்துக் கொண்டான். தொண்டை நாடு என்கிற பெயரும் பல்லவத்திற்கு உண்டு. முதன்முதலில் பிரபல்யம் அடைந்த பல்லவன், பல்லவன் இளந்திரையன். இவன் பெயர் உதயலோச்சன பல்லவன்... இவன் கரிகாலனின் சம காலத்தவன். அவனுடன் பகைமை பாராட்டி, பிறகு நண்பனாக மாறியவன். அசோகர் காலத்தில் திருலோச்சன பல்லவன் என்பான், இருந்திருப்பதால், பல்லவ இளந்திரையனின் தந்தையாக இந்த திருலோச்சன பல்லவன் இருந்திருக்க வேண்டும். பல்லவ இளந்திரையனும், கரிகாலனும், அக்கா - தங்கை பெற்றவர்கள் என்பதால், திருலோச்சன பல்லவன், கரிகாலனின் தந்தை இளஞ்சேட் சென்னியின் மைத்துனியை மணந்திருக்க வேண்டும். இளஞ்சேட் சென்னியின் மனைவியும் அவளது தங்கையும் அழுந்தூர் வேளிர் குல இளவரசிகள். கரிகாலன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே, இளஞ்சேட் சென்னி இருங்கோவேள் என்பவனால் கொல்லப்பட்டான். கரிகாலனும், இளந்திரையனும், சகோதர உறவைத்தான் கடைப்பிடிக்கின்றனர்.

* இப்போதைய காஞ்சிபுரம் திரிலோச்சன பல்லவன் காலத்தில் ஐந்து தனித் தனி கிராமங்களாக இருந்தது. காஞ்சி வனம் அல்லது அத்திகாடு என்பதுதான் அப்போதைய காஞ்சிபுரத்தின் பெயர். அத்திகாட்டின் ஊடே ஐந்து கிராமங்கள் இருந்ததாக, காஞ்சி வரதர் கோவில் ஒழுகு தெரிவிக்கிறது.

* அத்தியூர் (சின்ன காஞ்சிபுரம்),

* ஒத்தாடை (ஒற்றை ஆடை என்பது ஒரே ஆடையினை தரித்த ஏகாம்பரர் கோவிலை ஒட்டியுள்ள பகுதி),

https://telegram.me/aedahamlibrary

* மாலிருஞ்சோலை (இப்போதைய பழைய சீவரம்),

* முக்கூடல் (இங்கே முக்கூடல் கடிகை என்கிற பல்கலைக் கழகம் இருந்தது),

* தருமநகரம் (பெரிய காஞ்சிபுரம்).

* இவை தவிர, தும்புரு வனம் என்கிற காடு தரும நகரத்தையும், அத்தியூரையும் இணைத்தது. இதனை இப்போது தும்ப வனம் என்று அழைக்கிறார்கள். காஞ்சி ரங்கசாமி குளத்தின் அருகே உள்ளது.

* தரும நகரத்தில் எழுமால் கோவில் என்றொரு வரிசைக் கோவில்கள் இருந்தன. உண்மையில், எழுமால் கோவில் அல்ல.! ஏழு திருமால் கோவில்கள் என்று பொருள். அந்த ஏழு கோவில்களின் பெருமாள்கள் வருமாறு:

* கள்வரெம்பெருமான் (தற்போது காமாட்சி அம்மன் கோவிலில் உள்ளார்)

* நாகதெம்பெருமான் (உலகளந்தார் கோவிலில் உள்ள ஊரகத்தார்)

* பள்ளிகொண்டான் (வேலூர் பள்ளிகொண்டாவில் உள்ள பெருமான்)

* உருகுவாருள்ளத்து பெருமாள் (உலகளந்தாரில் உள்ள நீரகத்தார்)

* கரிய மாணிக்கர் (வந்தவாசி அருகே அத்தி என்கிற ஊரில் உள்ளார்.)

* நிலாத்திங்கள் துண்டத்தான் (ஏகாம்பரர் கோவிலில் உள்ளவர்)

* திருவிருத்த பெருமாள் (கார்வான பெருமாள், உலகளந்தார்).

இந்தக் கோவில்களிடையே ஆதி சரஸ்வதி கோவில் ஒன்று இருந்தது. தரும நகரம் தங்கள் வசம் வந்ததும் களப்பிரர் ஆதி சரஸ்வதி கோவிலை தாரா தேவி கோவிலாக மாற்றினர். பெருமாள் கோவில்களை தரும் நகரத்தில் இருந்து வெளியேற்றினர். கரிய மாணிக்கப் பெருமாள் வரதர் கோவிலிலும், இதர ஆறு பெருமாள்களும் அருகில் உள்ள கோவில்களிலும் அடைக்கலம் புகுந்தனர். இந்த எழுமால் கோவில்களை மனதில் கொண்டே, இரண்டாம் நரசிம்மவர்மன் என்கிற இராஜசிம்மனால் மகாபலிபுரத்தில் Seven Pakodas கட்டப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

[2] மாவிலக்கை! Ptolemyயின் குறிப்புகளில் மாவிலக்கை என்கிற துறைமுகத்தினை பற்றி காணப்படுகிறது. மாமல்லபுரத்திற்கும், மரக்காணத்திற்கும் இடையே மாவிலக்கை துறைமுகம் இருந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# 47. உளவு காத்த துறவுக் கிளி

தாங்கள் பயணித்திருந்த மவுரியமணி என்கிற கலத்திலிருந்து சங்கமித்தா, மகிந்தா மற்றும் அவர்களது குழாம் மாவிலக்கை துறைமுகத்தில் இறங்கினர். தனது கையில் ஏந்தியிருந்த வெள்ளிக்கலயத்தை பயபக்தியுடன் திவ்யபாதாவிடம் ஒப்படைத்தாள், சங்கமித்தா. அந்தக் கலயத்தில்தான், புத்த கயையினில் திஸ்ஸரக்காவினால் நாசமாக்கப்பட்டு, அரச மரம் ஒன்றில் வளர்க்கப்பட்ட தேவ உடும்பரத்தின் துளிர் விட்ட விதை ஒன்று இருந்தது. இதனை இலங்கை மன்னன் சிரி திஸ்ஸாவுக்கு தனது பரிசாக வழங்கும்படி பணித்திருந்தார், தலைமை பிக்கு, புத்த மந்தா.

துறைமுகத்தில் நின்றிருந்த மாட்டு வண்டியினை நோக்கினான், மகிந்தா.

"குருவே! பெண்களை வண்டியில் வரச் செய்து, நாம் அவர்களின் பின்பாக நடப்போம்!” - மகிந்தா கூறியபடி, அங்கிருந்த மாட்டு வண்டிக்காரனிடம் சென்றான்.

“அருகே பெரிய நகரம் ஏதாவது உள்ளதா? நாங்கள் பதினாறு பேர் தங்க வேண்டும்.?” ---

மகிந்தா கேட்டான்.

சாம்ராட் அசோகனின் மகன் தன்னிடம் பேசுவதை அறியாமல், நகரம் என்கிற சொல்லை மட்டும் தெரிந்து கொண்டு, அவர்கள் தர்ம நகரம் செல்ல வேண்டும் என்று கேட்பதாக நினைத்தான், வண்டிக்காரன்.

"அமருங்கள்.! தரும நகரம்தானே. நான் கொண்டு விடுகிறேன்!” - என்றவன் தனது சகாக்கள் மூவரையும் அழைத்தான்.

"இவர்கள் தரும நகரம் செல்ல வேண்டுமாம். நீங்களும் வாருங்கள். ஒரு வண்டியில் நால்வர் வீதம் என்று அனைவரையும் ஏற்றிச் செல்லலாம்!” என்ற வண்டிக்காரன் அவர்களை வண்டியில் ஏறச் சொன்னான்.

“நாங்கள் நடந்து வருகிறோம்!” - திவ்ய பாதா கூறினார்.

"தொலைதூரப் பயணம், சுவாமி! கால்கள் களைத்துப் போனால், கண்களும் மூடிவிடும். பிறகு எங்கள் காஞ்சி வனத்தின் பேரழகை

https://telegram.me/aedahamlibrary

எப்படிக் காண்பீர்கள். வண்டியில் அமர்ந்தபடி, புராண சிறப்பு மிக்க எங்கள் நகரின் அழகைக் கண்டுகளித்தபடி பயணிக்கலாம் அல்லவா?" - வண்டிக்காரன், தனது வண்டியில் பரப்பியிருந்த வைக்கோலின் மீது ஒரு சணல் சாக்கினை பரப்பியபடி, அதனை மூன்று முறை தட்டினான்.

வண்டிக்காரனின் பேச்சை ரசித்தபடி அவர்கள் பதினாறு பேரும் வண்டிகளில் ஏறினார்கள்.

திவ்ய பாதா, மகிந்தா, சங்கமித்தா, அக்ரி பிரம்மா மற்றும் குழந்தை சுமனா ஆகியோர் ஒரே வண்டியில் பயணிக்க, சங்கமித்தா அவனிடம் கேள்விகளைக் கேட்டபடி வந்தாள்.

"நாங்கள் அனைவரும் தங்குமளவுக்கு உங்கள் தரும நகரில் சத்திரம் சாவடிகள் உண்டா?" - சங்கமித்தா கேட்க, வண்டிக்காரன், சிரித்தான்.

“என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள் தாயே? நீங்கள் எங்கள் நகரைப் பற்றி கேள்விப்பட்டதில்லையா? உலகிலேயே மிகப்பெரிய கல்வி கடிகை எங்கள் முக்கூடலில் தான் உள்ளது! எங்கள் தரும நகரில் எவ்வளவு பெரிய கட்டடங்கள் எல்லாம் உள்ளன தெரியுமா? தேவனேரி என்கிற அந்தணர் ஒருவர் இருக்கிறார். உங்களைப் போன்ற யாத்ரீகர்களுக்காகவே பெரிய பர்ணசாலை ஒன்றை நிறுவியுள்ளார். இயற்கை சூழலுடன், நடுவில் வேகவதி ஆற்றில் இருந்து வாய்க்கால் ஒன்றை அமைத்து, அதன் இருபுறமும் வசதியான குடில்களைக் கட்டியுள்ளார். அதனை தேவனேரி ஆஸ்ரமம் என்று நாங்கள் அழைப்போம். தங்களை அங்கேதான் அழைத்துச் செல்கிறேன்!” என்றதும் சங்கமித்தா நிம்மதிப் பெருமூச்சுடன் கணவனின் தோளினில் தலையைச் சரித்தாள்.

முதன்முறையாக தட்சிணப் பகுதிகளுக்கு வருகிறாள். பெண்களான தங்களுக்கு வசதிகள் கிட்டுமோ என்கிற கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள். வண்டிக்காரன் கூறுவதைப் பார்த்தால், தேவனேரி ஆசிரமம் பாதுகாப்புடன் இருக்கும் போலும்.

நீண்ட தூரம் கடலில் பிரயாணம் செய்ததால் வண்டியின் அசைவு தாலாட்டாகத் திகழ, அசோகனின் குழாத்தினர் தங்களையும் மறந்து கண்ணயர்ந்து விட்டனர்.

“சுவாமி! தேவனேரி ஆஸ்ரமம் வந்து விட்டது.!' - வண்டிக்காரன்

https://telegram.me/aedahamlibrary

கூறினான்.

தங்களது ஆஸ்ரமத்தின் வாயிலில் நாலைந்து மாட்டு வண்டிகள் வந்து நிற்பதைக் கண்டதும், கோமயத்தை உருண்டைகளாக உருட்டிக்கொண்டிருந்த, தேவனேரியின் மனைவி, பங்கையை, பரபரவென்று எழுந்து தக்கிளியில் வெண்புரி நூலை நூற்றுக் கொண்டிருந்த கணவனிடம் ஓடினாள்.

"யாத்ரீகர்கள் நிறைய பேர் வந்திருக்கிறார்கள். நான் அவர்களது காலை உணவுக்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் அவர்களை வரவேற்று நீராடி வரும்படி வாய்க்காலுக்கு அனுப்புங்கள்!” - பங்கையை கொல்லைப்புறத்திற்கு ஓடிச்சென்றாள்.

“வாருங்கள்... வாருங்கள்.!" தனது கரங்களைக் குவித்தபடி பணிவுடன் தேவனேரி வரவேற்க, அனைவரும் அவரை நோக்கித் தலைகுனிந்தனர்.

ஆஸ்ரமத்தின் வாயிலில், ஓலையில் எழுதப்பட்டிருந்த வாசகம் அவர்கள் அனைவரையும் கவர்ந்தது.

“சர்வே ஜனாஹ சுகினோ பவந்துஹு!" - என்று தேவநாகரியில் எழுதப்படிருந்த அந்த வாசகத்தை பார்த்தபடி உள்ளே வந்தனர்.

"எனது பெயர் தேவனேரி! அடியார்கள், யாத்ரீகர்கள் ஆகியோரை உபசரிக்க இந்த ஆச்ரமத்தினை நிறுவினேன். எனக்குக் குழந்தை குட்டிகள் இல்லை. அகதிகளாக வருபவர்களே எனது குடும்பம். அனைவரும் சிரம பரிகாரம் செய்து கொண்டு, அங்கே ஓடும் வாய்க்கால் அருகே உங்கள் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, நீராடி வாருங்கள். எனது மனைவி உங்களுக்கு உணவு தயார் செய்து கொண்டு இருக்கிறாள்!” தேவனேரி கூற, அவர்கள் வாய்க்காலை நோக்கிச் சென்றனர்.

நீராடி விட்டு வந்த அனைவரும், கூப்பிய கையுடன் தேவனேரி முன் வந்து நிற்க, "நாங்கள் தியானம் செய்ய வேண்டுமே” - என்றார், திவ்ய பாதா.

அவர்களை ஒரு புளிய மரத்தடியில் அமர வைத்தார், தேவனேரி.

“உங்கள் தியானத்தை முடித்துக்கொண்டு வாருங்கள். அதற்குள் உணவு

https://telegram.me/aedahamlibrary

தயாராகி விடும்!" - தேவனேரி கூறினார்.

அந்த புளிய மரத்தை அண்ணாந்து நோக்கினாள், சங்கமித்தா. அம்மாதிரியான மரத்தை அவள் கண்டதில்லை.

"இது என்ன மரம்?" - சங்கமித்தா கேட்டாள். வடபுலத்தில் புளிய மரம் அரிது. புளிய மரம் தமிழ் மண்ணின் அரிய தாவரம். பஞ்ச பூத சக்தியையும் தன்னுள் கொண்டது. ஆன்மீகத்தின் விதை, புளிய மரம்.

“இது புளிய மரம். மிகவும் சக்தி வாய்ந்த மரம். புளிப்பு சுவை மனிதனின் ஞானத்தை கூர்படுத்தும். இம்மாதிரி அரியவகை மரங்களுக்கு பெயர் போனது, எங்கள் காஞ்சி!" - பெருமையுடன் கூறினார், தேவனேரி.

அனைவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். "தேவ உடும்பரம் பற்றி இவரிடம் கேட்போமா?" சங்கேதமாக சங்கமித்தா கேட்க, திவ்ய பாதா தலையசைத்து மறுத்தார்.

“வந்தவுடன் தேவ உடும்பரத்தைப் பற்றி கேட்டால், அவர்கள் சந்தேகம் கொள்வார்கள். தற்செயலாக பேசுவது போன்று, தகவலை அறிய வேண்டும்!” கண்ணாலேயே சங்கமித்தாவிடம் கூறினார்.

அவர்களது தியானம் முடிந்தது.

தேவனேரி அவர்களை உண்பதற்கு அழைத்தார்.

"கொல்லைப்புறம் வாருங்கள். உங்களுக்கு உணவு பரிமாறப்படும்!”

அனைவரும் கொல்லைப்புறம் சென்று அங்கு வரிசையாக அமர்ந்தனர். வெட்டவெளியில், நான்கைந்து அடுப்புகள் எரிந்துகொண்டிருந்தன.

பங்கையை அவர்களை நோக்கி கரம் கூப்பினாள். “இதோ உணவு தயாராகிக்கொண்டு இருக்கிறது. விரைவில் இலை போட்டுவிடுகிறேன்!" என்றபடி ஒவ்வொரு அடுப்பை நோக்கியும் சென்று விறகுகளை அசைத்து இன்னும் கொழுந்து விட்டெரியச் செய்தாள்.

ஆமருபாலி திகைப்புடன் சங்கமித்தாவின் செவிகளை நோக்கிக் குனிந்தாள்.

https://telegram.me/aedahamlibrary

"என்ன இது விந்தை! இந்த அந்தணப் பெண்மணி உணவு தயாராகிக்கொண்டு இருக்கிறது என்கிறாள். ஆனால் நாம் இங்கு காண்பது என்ன! வெறும் நான்கைந்து விறகு அடுப்புகள் மட்டுமே எரிகின்றன. அவற்றின் மீது கலயங்கள் காணவில்லையே? உணவு எங்கே தயாராகிக்கொண்டு இருக்கிறது?" - சந்தேகத்துடன் கேட்டாள்.

"ஒருவேளை, உள்ளே அடுக்களையில் சமைத்துக் கொண்டு இருக்கிறாளோ என்னவோ!" - சங்கமித்தா கூறினாள்.

"அப்படியென்றால், இங்கே எதற்கு அடுப்புகள் மூட்டப்பட்டன?" - பத்ரா கேட்டாள்.

பணியாள் ஒருவன் அதற்குள் வரிசையாக இலைகளைப் போட்டு, மரத் தொன்னைகளில் நீர் வார்த்தான்.

பங்கையை ஒவ்வொரு அடுப்பாகச் சென்று எரியும் விறகுகளை எடுத்து அப்பால் வீசினாள். பிறகு வேல் போன்ற ஒரு கூரான கம்பியை எடுத்து எரிந்து கொண்டிருந்த அடுப்பு பகுதியைத் தோண்ட ஆரம்பித்தாள். சிறிது தோண்டியதுமே, மூங்கில் குடலை ஒன்று வெளிப்பட்டது. இம்மாதிரி எல்லா அடுப்புகளையும் தோண்டி, மூங்கில் குடலைகளைச் சேகரித்த பங்கையை, பிறகு ஒரு தாம்பாளத்தில் குடலைகளை வைத்து அதன் மேற்புறத்தை உரித்தாள். எரிந்துகொண்டிருந்த நெருப்பின் வெப்பத்தில் பூமியினுள் புதைக்கப்பட்டிருந்த குடலையில் வார்க்கப்பட்டிருந்த இட்டிலி மாவு வெந்திருந்தது.

குடலை இட்டிலியை வந்தவர்களுக்கு பரிமாறினாள், பங்கையை.

இஞ்சி, மிளகு, சுக்கு, கொத்துமல்லி தழை, போன்றவை சேர்க்கப்பட்டு மிகவும் உறைப்பாக இருந்த அந்த இட்டிலியை ரசித்து உண்டனர், வந்தவர்கள்.

"இந்த தின்பண்டத்தின் பெயர்!" - திவ்ய பாதா கேட்டார்.

"இதனை நாங்கள் குடலை இட்டிலி என்போம். குடலையில் மாவு கலவையை இட்டு, ஆவியில் அவித்து உண்பதால் இட்டிலி என்று பெயர்! தேகம் என்னும் குடலையில் ஆன்ம மாவினை வார்த்து, உலகம் என்னும் பூமியில் புதைத்து, ஆன்மாவை வேக வைத்து உண்கிறான், எங்கள் அத்திமலைத்தேவன்.!" தேவனேரி கூற, திவ்ய பாதா

https://telegram.me/aedahamlibrary

திடுக்கிட்டார்.

சாணக்கியன் பிரார்த்தனை செய்யும் தெய்வத்தின் பெயர் அத்திமலைத்தேவன் என்று அவனது தந்தை பிந்துசாரன் கூறியிருக்கிறார்.

“அத்திமலைத்தேவனா? இங்கேயா அவன் இருக்கிறான்?” - இட்டிலியை ருசித்தபடி கேட்டார், திவ்ய பாதா.

"ஆம்…! அத்தியூரில் தான் கோவில் கொண்டிருக்கிறான்!” - தேவனேரி கூற, பங்கையை, மாங்காயும், இஞ்சியையும் சேர்த்து உரைத்த ஊறுகாயை பரிமாறினாள். இட்டிலியும், ஊறுகாயும் அவர்களின் பசிக்கு அமிர்தமாக இருந்தன.

அதற்குமேல் சங்கமித்தாவால் தனது ஆர்வத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

“சுவாமி! உங்கள் பகுதியில் சக்தி வாய்ந்த மிகவும் அரிய விருட்சம் ஏதாவது உள்ளதா?” - சங்கமித்தா கேட்டதும், சற்றே அசந்து போனார், தேவனேரி.

"அதுதான் கூறினேனே! காஞ்சியில் உள்ள வ்ருட்சங்கள் அனைத்துமே விசேடம் வாய்ந்தவைதான். ஏன்…? ஒத்தாடை ஆலயத்தில் ஒரு மாமரம் உள்ளது. குழந்தை வரம் அருளும் மரம்!” - தேவனேரி கூறினார்.

“துறவிகளுக்கு எதற்கு குழந்தை வரம் அருளும் மரம் வேண்டும்? நான் கேட்பது தேவ உடும்பர மரம்.?” -- சங்கமித்தா கேட்டதும், தேவனேரியின் முகம் மாறியது.

“எனக்குத் தெரியாது! முக்கூடல் கடிகையில் கேட்டால் ஒருவேளை தெரிந்திருக்கலாம்! இன்னும் கொஞ்சம் இட்டிலி வேண்டுமா?” - அவசரமாக பேச்சை மாற்றி, அந்த அந்தணர் எதையோ மறைக்கின்றார் என்பது அவர்களுக்குத் தெள்ளதெளிவாகப் புரிந்தது. அதற்குப்பின் அவர்கள் அவரிடம் ஒன்றும் கேட்கவில்லை. கொல்லைப்புறத்திலேயே, உண்ட களைப்பினால் உறங்கத் துவங்கிவிட்டனர்.

திவ்ய பாதா, மகிந்தா மற்றும் சங்கமித்தா மட்டும், அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த குடிலில் தங்கி ஏதோ திட்டமிடத் துவங்கினர்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் தேவனேரி எச்சரிக்கை அடைந்துவிட்டார். தனது ஆஸ்ரமத்தில் தங்குபவர்கள் சந்தேகத்திற்கு உரியவர்களாக இருந்தால் உடனே, தலைமை அமைச்சர், நீலலோகிதருக்கு, அவர்களைப் பற்றி தகவல் தெரிவிப்பது வழக்கம்.

தானும் இட்டிலியை உண்டுவிட்டு, வெளியே சென்று வருகிறேன் என்று பாரியையிடம் கூறிவிட்டு, வாய்க்காலில் குதித்தார். வாய்க்காலில் நீந்தியபடியே சென்றவர், அப்படியே வேகவதி ஆற்றினுள் நுழைந்தார் சற்றுநேரம் ஆற்றில் நீந்திச் சென்றவர், ஒரு குறிப்பிட்ட இடத்தில் கரையேறினார். தலைமை அமைச்சரின் மாளிகை வேதவதி நதிக்கரையில்தான் அமைந்திருந்தது. தலைமை அமைச்சரின் செவிகளில். புத்த கயையில் இருந்து வந்தவர்கள் தேவ உடும்பரத்தைப் பற்றி விசாரிப்பதாக, நீலலோகிதரிடம் கூறிவிட்டு, வந்த வழியே தனது ஆஸ்ரமத்திற்குத் திரும்பியிருந்தார்.

***

பரிசில்காரன் பாமாலை தனது பரிசலை நிதானமாகத்தான் செலுத்தினான். ஆனால், வேகவதியின் ஆவேச பாய்ச்சலினால், பரிசல் வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. முக்கூடல் கடிகைக்குப் போக வேண்டும் என்று பரிசல்காரனிடம் கூறியிருந்தார்கள், மகிந்தாவும், சங்கமித்தாவும்.

பாமாலை மிகவும் பலசாலியாக இருந்தான். தனது வலுவான கரங்களால், கழியை ஆற்றினுள் அசைத்து அதன் வேகத்தையும் மீறின பரிசலைத் தனது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தான். அவனது தூண் போன்ற கால்களை விரித்துப் பரிசலுக்கு அழுத்தம் கொடுத்து, அதனை இயக்கிக் கொண்டிருந்ததை மகிந்தாவும், சங்கமித்தாவும் பார்த்தார்கள்.

நீண்ட பயணத்திற்குப் பிறகு முக்கூடல் கடிகை அவர்களது கண்களில் தென்பட்டது. அசோகனின் வாரிசுகள் அந்தக் கட்டடத்தைக் கண்டு திகைத்தார்கள். இவர்களது புஷ்பபுர அரண்மனையைக் காட்டிலும் பன்மடங்கு பிரம்மாண்டமாக இருந்தது, முக்கூடல் கடிகை.

பரிசல் ஒரு உயர்ந்த மேடையின் அருகே நிற்க, மகிந்தா அதன் மீது தாவி இறங்கி, தனது சகோதரிக்கும் கை கொடுத்தான்.

"நீங்கள் சென்று வாருங்கள்! நான் அதோ அந்த மரத்தின் கீழ் உறங்கிக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருக்கிறேன்." பாமாலை கூறினான்.

மகிந்தாவும், சங்காவும் அந்தக் கட்டடத்தினுள் பிரவேசித்தனர். வாயில் அருகே ஒரு அதிகாரி அமர்ந்திருந்தார். மகிந்தா அவரிடம் சென்று வணங்கினான்.

“சுவாமி! புத்தனின் தத்துவத்தை விளக்கும் கல்வியை இங்கே போதிப்பவர் யார்?” மகிந்தா கேட்டான்.

"அமர ஜோதி என்கிற புத்த பிக்கு. உப்பரிகையில் உள்ள அறைகளில் நான்காவது அறை!” அந்த அதிகாரி கூற, இருவரும் உப்பரிகைக்குச் செல்லும் படிகளில் ஏறினர்.

"மகிந்தா! நமது மவுரியத்தைப் பற்றி நாம் பெருமை பேசிக் கொண்டிருக்கிறோம். இங்கே பார். கல்வி போதிக்கும் கடிகையே நமது அரண்மனையை விட பிரம்மாண்டமாக உள்ளது!" - மலைப்புடன் கூறினாள்.

கடிகையில் தான் எத்தனை பேர்.? எத்தனை தேசத்தவர்? எத்தனை வித கல்விச் சாலைகள்? இது போதாதென்று, மற்போர் பயிற்சி, வாட்போர் பயிற்சி, வில் வித்தை பயிற்சி என்று ஆங்காங்கே களரிகளைக் கண்டபடி சென்றனர்.

உப்பரிகையை அடைந்து நான்காவது அறையினை நோக்கி நடந்தனர்.

அறையின் வாயிலில் கதவின் மீது, “புத்த தேவன் மிகப் பெரியவன்!” என்கிற வாசகம் சம்ஸ்க்ருதம், பாலி மற்றும் தமிழ் மொழிகளில் எழுதப்பட்டிருந்தது. அண்ணனும், தங்கையும் அதனை வாசித்தனர்.

“எதற்காக இப்படி எழுதப்பட்டிருக்கிறது?” - சங்கா கேட்டாள்.

“இங்கே பல தர்மங்களைப் பற்றி போதிக்கின்றனர். இப்படியெல்லாம் தங்கள் தர்மத்தை பெரிதாகக் கூறி, மாணாக்கர்களை ஈர்ப்பது கடிகைகளில் வழக்கம்தான்!” -- என்று கூறியபடி மகிந்தா தனது கைவிரல்களால் அறைக் கதவினைத் தட்டினான்.

“உள்ளே வாருங்கள்!” - கனமான குரல் ஒன்று ஒலிக்க, இருவரும் உள்ளே நுழைந்தனர்.

https://telegram.me/aedahamlibrary

உயர்ந்தும், பருமனாகவும் காட்சி தந்தார், பிக்கு அமரஜோதி.! அவரது கூரிய கண்கள் அவர்கள் இருவரையும் துளைத்தன.

"மவுரிய மன்னர் அசோகரின் மகன் மகிந்தா நான். இவள் எனது தங்கை சங்கமித்தா!" - மகிந்தா கூறியதும்தான் தாமதம். அமர ஜோதி, பரபரப்புடன் எழுந்து அவர்களைப் பணிந்தார்.

"மன்னர் அசோகரின் செல்வங்களா? தாங்கள் இங்கு எப்படி? எப்போது வந்தீர்கள்? எங்கு தங்கியிருக்கிறீர்கள்? பல்லவ மன்னன் திரிலோச்சனனுக்கு தங்களின் வருகையைப் பற்றி தெரியுமா?" பரபரப்புடன் கேட்டார், அமர ஜோதி.

"எங்களது வருகை மிகவும் ரகசியமானது. இங்கு ஆளும் மன்னருக்குத் தெரியாது. தெரியவும் கூடாது. இலங்கைக்குப் போகும் வழியில் இங்கே தங்கியிருக்கிறோம் அவ்வளவே. ஆனால் ஒரு முக்கியமான விவரத்தைத் தேடி தங்களை நாடி வந்திருக்கிறோம்!" - சங்கமித்தா கூறினாள்.

அமர ஜோதி இருவரையும் அமரச்செய்தார்.

"என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்!" - அமர ஜோதி கூறினார்.

"சுவாமி! உங்கள் உதவி மிக அவசியம். புத்த சங்கத்திற்கு, தலைமை குருவுக்கு, புத்த மந்தாவுக்கு, நமது புத்த பிரானுக்கு உங்களது உதவி மிகவும் தேவைப்படுகிறது!" - மகிந்தா கூற, அமரஜோதியின் நெற்றி சுருங்கியது.

"நமது புத்த கயாவில் உள்ள, புத்தபிரான் அமர்ந்து தவம் செய்த புனித மரம், எங்களது சிற்றன்னை திஸ்ஸரக்காவினால் நாசம் செய்யப்பட்டது. போதி மரம் பட்டுப் போன காரணத்தினால், அதனை அரச மரம் ஒன்றில் வைத்து வளர்த்து வருகின்றனர், நமது துறவிகள்! எனவேதான், தட்சிணத்தில் உள்ள தேவ உடும்பர மரத்தைப் பற்றி தகவல்களைத் தேடி வந்திருக்கிறோம்!"

அமர ஜோதி உறைந்து போய் அவர்களையே வெறித்தார். "என்ன கொடுமை? நமது புத்த பிரான் அமர்ந்த போதிமரம் நாசமாக்கப்பட்டதா?" - அமர ஜோதியின் குரல் நடுங்கியது...

"மன்னரும், தலைமை குருவும் எப்படி இதனை அனுமதித்தனர். எல்லாம்

https://telegram.me/aedahamlibrary

தெரிந்திருந்தும், அவர்கள் பெண்களை ஏன் போதி மரத்தின் அருகே அனுமதித்தனர்?" - அமர ஜோதியின் கண்கள் சிவந்தன. சினத்தினால் அவ்வாறு அவரது கண்கள் சிவக்கின்றன என்றுதான், சங்கமித்தா நினைத்தாள். ஆனால் தொடர்ந்து அமர ஜோதியின் கண்களில் இருந்து கண்ணீர் உருண்டோடுவதைக் கண்டு அண்ணனும், தங்கையும் திகைத்தனர்.

"ஸ்வாமி! தங்களின் கலக்கத்துக்குக் காரணம்!" மகிந்தா வினவினான்.

"உங்கள் தந்தை மன்னராகப் பதவி ஏற்ற பிறகு ஒரு முறை உஜ்ஜயினியில் புத்த பிக்குகளின் மாநாடு ஒன்று நடந்தது. அப்போது கோனகாமா என்கிற வயது முதிர்ந்த மந்திரவாதி, திடீரென எழுந்து, புனித போதி மரத்திற்கு ஒரு பெண்ணால் ஆபத்து உண்டாகும்!" என்று ஆருடம் கூறினான். அந்த மாநாட்டில் புத்த மந்தாவும் அமர்ந்திருந்தார். ஆபத்து உள்ளது என்று கோனகாமா கூறிய பிறகு எச்சரிக்கையுடன் இருந்திருக்க வேண்டாமா?" - அமர ஜோதி கேட்டார்.

மகிந்தாவும், சங்கமித்தாவும் அமைதி காக்க, பிறகு அமர ஜோதியே பெருமூச்சு ஒன்றை உதிர்த்தார். "அரசனின் பிரிய மனைவியே மரத்தை நாசம் செய்வாள் என்று அவர்களால் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?"

நமது தந்தை மட்டும் திஸ்ஸரக்காவின் ஓவியத்தை காணாமல் இருந்திருந்தால் போதி மரம் பிழைத்திருக்கும் அல்லவா?

தங்களுக்குள் நினைத்த மகிந்தாவும், சங்கமித்தாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

அமர ஜோதி, அவர்கள் இருவரையும் யோசனையுடன் நோக்கினார்.

"செல்வங்களே! நமது புத்த மார்க்கத்திற்கு மூல விதை தேவ உடும்பரம் என்பது மட்டும்தான் உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நமது அடையாளமாக ஏன் அந்த மரம் விளங்குகிறது தெரியுமா?" - என்று கேட்டவர் தனது கண்களை காஷாய துண்டினால் துடைத்துக்கொண்டு அருகே இருந்த ஒரு மரப் பெட்டியை நோக்கிச் சென்றார். அந்தப் பெட்டியைத் திறந்ததும் அதில் பல சுவடிகள் அழகாக அடுக்கப்பட்டிருந்தன. அந்தப் பெட்டியில் இருந்து ஒரு சுவடிக் கட்டினை எடுத்து வந்தவர், அதனைப் பிரித்து, ஒவ்வொரு சுவடியாகத் தேடி, ஒரு குறிப்பிட்ட சுவடியை எடுத்தார்.

https://telegram.me/aedahamlibrary

“செல்வங்களே! பௌத்த நூலான உரக ஸூத்ரத்திலிருந்து ஒரு பகுதி இது. அதனை உங்களுக்கு வாசித்துக் காட்டுகிறேன்!” என்றவர் அந்தக் குறிப்பினைப் படித்தார்.

“உடும்பர அத்தி மரம்தான் பௌத்தர்களின் அடையாளம்! அத்திப்பழத்தின் உள்ளே அதன் பூ ஒளிந்துள்ளது. மூவாயிரம் வருடங்களுக்கு ஒரு முறைதான் அத்திப்பூ பூக்கும்! அது போன்று தேவ உடும்பரத்தின் அடியில் மூவாயிரம் வருடத்திற்கு ஒரு முறை ஒரு புத்தன் அவதரிப்பான். ஆக, புத்தனின் அவதாரத்திற்கு தேவ உடும்பரம் அவசியம் தேவை! எனவேதான், திஸ்ஸரக்கா அந்த போதி மரத்தை நாசம் செய்து விட்டாள் என்று அறிந்ததும் பதறிப் போனேன்!” - அமர ஜோதி கூறினார்.

“நீங்கள் கூறுவதைப் பார்த்தால், புத்தர்கள் அவதாரம் செய்ய தேவ உடும்பர மரம் மிகவும் அவசியம் போல் உள்ளதே!” - சங்கமித்தா கேட்டாள்.

"ஆம் இளவரசி! ஒவ்வொரு கல்பத்திலும் ஆயிரம் புத்தர்கள் தோன்றுவார்கள். இப்போது பத்ர கல்பம் நடைபெறுகிறது. நமது கௌதம புத்தர், நான்காவது புத்தர். அவருக்கு முன்பாக காகசந்தர், கோணகர், கஸாபர், ஆகிய மூவர் புத்தர்களாக இருந்திருக்கின்றனர். இன்னும் பல புத்தர்கள் வரப் போகின்றனர். அவர்கள் ஞானம் பெற தியானம் செய்வதற்கு தேவ உடும்பர மரம் அவசியம் தேவை!" என்று நமது உரக சூத்திரம் கூறுகிறது! புத்த மந்தா உங்களை தட்சிணத்திற்கு அனுப்பிய காரணம் இப்போது உங்களுக்கு விளங்கியுள்ளதா?" - அமர ஜோதி கேட்டதும், தங்களது வருகையின் முக்கியத்துவத்தை உணர்ந்தார்கள், மகிந்தாவும், சங்கமித்தாவும்.

ஸ்வாமி! இந்தப் பகுதியில் மரம் இருப்பது ஊர்ஜிதம் என்றால், எமது தந்தையாரை படையெடுத்து வரச் சொல்லலாமா?" - சங்கா கேட்டாள்.

“இளவரசி! வடபுலத்தை ஆளும் மன்னர்களுக்கும், தென்புலத்தை ஆளும் மன்னர்களுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. நமது வடபுலத்தில் மன்னர்கள், தங்களது அரண்மனைகளை பிரம்மாண்டமாக எழுப்புவார்கள். தங்கள் பிரதாபங்களையே கல்லில் எழுதுவார்கள். தென்புலத்தில் அப்படியல்ல. தெய்வ ஆலயங்களை பிரம்மாண்டமாக எழுப்புவார்கள், இறைவன் வழிபாடுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவார்கள். தங்களைப் பற்றி பெருமை பேசமாட்டார்கள். இங்கே நாம்

https://telegram.me/aedahamlibrary

அமர்ந்து கொண்டிருக்கும் கடிகையின் பிரம்மாண்டத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? ஆனால் மன்னனின் அரண்மனை மிகவும் சிறியதாக இருக்கும். இதுதான் தெற்கிலும், வடக்கிலும் உள்ள மன்னர்களிடையே உள்ள வேறுபாடு."

"அப்படியென்றால்?" ---

"நமது உத்தர தேசத்தில் மன்னர்கள் அரியாசனத்தில் அமர்ந்ததும் தங்களை மறந்து விடுகின்றனர். உங்கள் தந்தையாரையே உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள்! கலிங்கத்து போருக்குப் பிறகு, இலட்சக்கணக்கான உயிர்ச் சேதங்களைக் கண்ட பிறகே அவருக்கு தெய்வ சிந்தனை வந்தது. ஆனால் இங்குள்ள மன்னர்களுக்கு எப்போதும் தெய்வ சிந்தனை இருக்கிறது. ஆலயங்களை எழுப்புவதிலும், கோவில்களுக்கு நிவந்தங்கள் அளிப்பதுமாகத்தான் அரசாட்சி செய்கிறார்கள். குறிப்பாக, இந்த அத்திவனம் மிகவும் தொன்மையான பகுதி. இங்கு அறிவாளிகளும், ஞானியரும் அதிகம். கலிங்கத்தைப் போன்று இரத்தம் சிந்தி இங்கு வெற்றி காண முடியாது. மேதாவிகள் வசிக்கும் நாடு. இந்தப் பகுதியில் ஒவ்வொருவருமே சாணக்கியர்கள். மேதா விலாசத்துடன் தான் இங்கே செயல்பட முடியும்! வைதீகம் இங்கே ஆகமங்கள் மற்றும், மந்திர தந்திரங்களுடன் கோலோச்சி வருகிறது. எனவே, நாம் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். தேவ உடும்பரம் இங்கே இருப்பது உண்மை. அதனை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு ஒரே வழி, நமது தர்மத்தை இங்கே காலூன்றச் செய்ய வேண்டும். சாம, தான, பேத, தண்டம் என்று தானே சாணக்கியனே போதனை செய்திருக்கிறான். அவன் போதனைப்படியே நடந்து, தேவ உடும்பர மரம், எங்கிருந்தாலும், அதனை கைப்பற்றுவோம்!" - அமர ஜோதியின் கனத்த குரல், மகிந்தா, மற்றும் சங்கமித்தாவிடம் புதிய உத்வேகத்தைத் தந்தது.

"சுவாமி! சாணக்கியன் பிறந்த ஊர் எது?" - சங்கா கேட்டாள்.

"வேகவதி நதி பாயும் அத்தியூர் கிராமம். அவன் அடிக்கடி உச்சரிக்கும் அத்திமலைத்தேவன் அவதரித்த ஊர். உங்களுக்குத் தெரியுமா தேவ உடும்பரத்தை தமிழ் மொழியில் அத்தி என்று கூறுவார்கள். தேவ உடும்பரத்தைக் கொண்டு பிரம்மன் இங்கு அஸ்வமேத யாகத்தைச் செய்ததால், அந்த யாகத்தில் தோன்றிய திருமாலை அவர்கள் அத்தித் தேவராஜன் என்றே அழைக்கின்றனர்.

https://telegram.me/aedahamlibrary

நானும் ஆராய்ச்சிகளை செய்து பார்த்தேன். சாணக்கியன் பிறந்த அந்த அத்தியூரில்தான் எங்கோ தேவ உடும்பர மரம் இருக்க வேண்டும். நான் அதனை தேடிக்கொண்டுதான் இருக்கிறேன். இப்போது நீங்கள் வந்து, புத்தர் பிரானின் போதி மரம் அழிந்து விட்டது என்று கூறுவதால், தேவ உடும்பரத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது மிக மிக அவசியமாகிறது.!" - அமர ஜோதி கூறினார்.

"எனது தந்தைக்கும், தலைமை குரு புத்த மந்தாவுக்கும், நாங்கள் என்ன பதிலை அனுப்புவது!" - மகிந்தா கேட்டான்.

"தேவ உடும்பரம் என்றால் காஞ்சி என்று பெயர். இங்கே ஒரு பெரிய வனமே காஞ்சி மரங்களால் நிறைந்திருக்கிறது. அத்திக்காடு என்று பல்லவ நாட்டவர் அதனை அழைக்கின்றனர். காஞ்சி உடும்பர மரம் வைதீக தர்மத்தினருக்கு மிகவும் புனிதமான வருட்சம்! ஊரின் பெயரையே அத்தி என்று வைத்து, ஆராதிக்கும் இறைவனையே அத்திமலைத்தேவன் என்று அழைக்கின்றனர் என்றால் அது அவர்களுக்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்ததாக இருக்கும்! அத்திமலை மர்மத்தை அவர்கள் இன்றுவரை ரகசியமாகவே வைத்திருக்கிறார்கள். காஞ்சி வனத்தின் அத்தியூரில்தான் அந்த ரகசியம் இருக்கிறது. அதனைத் தேடிக் கண்டுபிடித்து தகவல்களை அனுப்புகிறோம். உடனே வந்து அதனைக் கைப்பற்றுங்கள்! --- என்று ஓலை அனுப்புங்கள்." --- அமர ஜோதி கூறினார்.

"தங்களது சந்திப்பு எங்களை உற்சாகப்படுத்தி விட்டது. உங்களது தேடுதல் பணிகளில் நாங்களும் எங்களை ஈடுபடுத்திக் கொள்கிறோம்!" மகிந்தா கூறினான்.

"நல்லது செல்வங்களே. நமது அடுத்த புத்தரை தேவ உடும்பர மரத்தின் அடியில் வரவேற்கத் தயாராக இருப்போம்! சென்று வாருங்கள்!" --- உற்சாகத்துடன் கூறினார், அமர ஜோதி.

மகிந்தாவும், சங்கமித்தாவும் வெளியே வந்து, அறையின் கதவைச் சாற்றினர்.

தற்செயலாக, கதவின் மீது சங்கமித்தாவின் பார்வை பதிய, அவள் திகைப்புடன் அண்ணனின் கையைப் பிடித்து இழுத்தாள்.

"மகிந்தா இதைப் பாரேன்!" --- கதவின் மீது எழுதப்பட்டிருந்த "புத்தன்

https://telegram.me/aedahamlibrary

மிகப் பெரியவன்!” என்கிற வாசகத்தைச் சுட்டிக்காட்டினாள்.

அதில், புத்தன் என்கிற பெயரினை அடித்து அதன் மீது “வாசு” என்று யாரோ எழுதியிருக்க, புத்த தேவன் மிகப் பெரியவன் என்கிற வாசகம் இப்போது "வாசு தேவன் மிகப் பெரியவன்” என்னும் விதமாகக் காணப்பட்டது.

“இதற்கு என்ன பொருள்?” --- சங்கா தனது அண்ணனைக் கேட்டாள்.

"பல்லவ நாட்டின் உளவாளிகள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்கிறார்கள் என்று பொருள். நாம் உள்ளே பேசியதை யாரோ ஒட்டுக்கேட்டுக்கொண்டு இருந்திருக்கிறார்கள் என்பதுதான் மூலக் கருத்து!” --- மகிந்தா கூற, அவனைத் திகைப்புடன் நோக்கினாள், சங்கமித்தா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 48. இறுதி தந்திரம்

தேவனேரியின் ஆஸ்ரமம்!

மாலை கடிகையிலிருந்து திரும்பி வரும் பொழுதே பாமாலையிடம் கூறிவிட்டனர், இரவு இரண்டு பேர் மாவிலக்கை கடற்கரைக்குப் போக வேண்டும் என்று. அவனும் ஒரு படகை கொண்டு வருவதாகக் கூறி விட்டான். வாய்க்காலின் வழியாக முக்கூடல் சென்று அங்கிருந்து மாவிலக்கைக்கு மாட்டு வண்டியில் செல்லலாம். அனைத்து ஏற்பாடுகளையும் தான் செய்து விடுவதாகக் கூறியிருந்தான்.

மன்னர் அசோகருக்கு ஒரு ஓலையும், புத்த மந்தாவுக்கு ஒரு ஓலையுமாக இரு ஓலைகளை தயார் செய்தனர், இருவரும்.

"தட்சிணத்தில் சாணக்கியன் பிறந்த ஊரான அத்தியூர் என்கிற காஞ்சிவனத்தில்தான் தேவ உடும்பரம் உள்ளது. அதனை மிகவும் ரகசியமாக வைத்திருக்கிறார்கள், வைதீகர்கள். அந்த மரம் இருக்கும் இடம் தெரிந்தவுடன் ஓலை அனுப்புகிறேன். படையுடன் வந்து கைப்பற்றவும். - மகிந்தா, சங்கமித்தா." ---

என்கிற தகவலை ஓலையில் எழுதினர். புத்த மதத்தின் நூலான, தாமரை சூத்திரத்தின் சுவடிகளின் நடுவே, அந்தச் சுவடியைச் சொருகி மறைத்த சங்கமித்தா, அண்ணனை நோக்கினாள்.

“நமது குழுவினரில் யாரை திருப்பி அனுப்புவது?” ---

"விஷ்வாங்கனை அனுப்புவோம். வழியில் பிரச்சனை ஏதாவது வந்தாலும், அவன் சமாளிப்பான். ஒரே நபரிடம் இரண்டு ஓலைகளைத் தராமல் இருவரை அனுப்புவோம். பத்ராவை விஷ்வாங்கனுடன் அனுப்புவோம். பத்ரா நம் தலைமை குரு புத்த மந்தாவுக்கு ஓலை எடுத்துச் செல்லட்டும். விஷ்வாங்கன் நமது மன்னருக்கு ஓலை எடுத்துச் செல்லட்டும். இருவர் செல்வது பலவிதத்திலும் நன்மை பயக்கும்!" - என்று திவ்ய பாதா சொன்னவுடன், விஷ்வாங்கனும், பத்ராவும் எழுந்து நின்றனர்.

"பத்திரம்! நமது புத்த தர்மத்திற்காக பெரிய பணிகளைச் செய்யப் போகின்றீர். எச்சரிக்கை உணர்வு தேவை. பரிசல்காரனிடம் பேச்சினை

https://telegram.me/aedahamlibrary

தவிருங்கள். நடுநிசியில் ஒலிகள் எட்டுத்திக்கும் பாயும்!" - சங்கமித்தா கூறினாள்.

அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நடுநிசியும் வந்தது. தேவனேரியும், அவர் மனைவி பங்கையமும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். பத்ராவையும், விஷ்வாங்கனையும் வழியனுப்புவதற்காக, அனைவருமே வாய்க்கால் கரையில் குழுமியிருந்தனர்.

இன்னும் பாமாலை வரவில்லை. அதுவரை பொழுதை போக்க, கண்டிகா என்கிற பிக்குணி கௌதம் புத்தர் துறவறம் மேற்கொண்ட கதையை பாடலாகப் பாட, அதற்கு ஆம்ருபாலி அபிநயம் பிடித்துக் கொண்டிருந்தாள்.

தொலைதூரத்தில் தீப்பந்தம் ஒன்று எரிய, தனது படகை பாமாலை செலுத்திக்கொண்டு வந்தான். அதனை முதலில் பார்த்தது சுமனாதான். தனது தந்தை அக்ரிபிரம்மாவிடம் அதனைச் சுட்டிக்காட்ட, அவர் திவ்ய பாதாவிடம் பாமாலை வருவதை அறிவித்தார்.

பாமாலையின் படகு வந்து நின்றதும், விஷ்வாங்கனும், பத்ராவும் அதில் ஏறிக்கொண்டனர். ஆயிரம் ஜாக்கிரதைகளையும், எச்சரிக்கைகளையும் தந்தபடி அனைவரும் அவர்களுக்கு விடை கொடுத்தனர்.

வாய்க்காலின் வழியாகச் சென்று வேகவதி ஆற்றில் நுழைந்து முக்கூடலில் இறங்கிவிட வேண்டும். அங்கிருந்து மாட்டு வண்டியினில் மாவிலக்கைக்கு பயணம் செய்து விட்டால், விடியற்காலை, கலிங்கத்திற்கு கலங்கள் செல்லும். கலிங்கம் சென்று விட்டால், அங்கிருந்து பத்ரா புத்த கயைக்கும், விஷ்வாங்கன் புஷ்பபுரத்திற்கும் சென்று விடலாம்.

அந்த நடுநிசியில், பாமாலை இயக்கிக்கொண்டிருந்த துடுப்பு நீரில் ஏற்படுத்தும் சலசல ஒலியினைத் தவிர, சுற்றிலும் அமைதி நிலவியது. முக்கூடலைக் கடந்து, மாலிருஞ்சோலை சிங்கப்பிரான் கோவிலின் தீபக் ஸ்தம்பத்தில் ஏற்றப்பட்டிருந்த தகளி மட்டும், ஒளிர்ந்து கொண்டிருந்தது. மற்றபடி எங்கும் இயற்கை அன்னை தனது எழில் மேனியை கரும் போர்வையினால் மறைத்துக்கொண்டு உறங்கிக்கொண்டிருந்தாள். இலட்சக்கணக்கான விண்மீன்கள் ஜொலித்துக்கொண்டு ஆசைநாயகிகளாக வான புருஷனைக் கவர முயற்சித்துக் கொண்டிருந்தாலும், தனது பட்டமகிஷி நிலவினை காணாமல் அவன்

https://telegram.me/aedahamlibrary

அயர்ச்சியுடன் அமைதி காத்தான்.

நல்லவேளையாக, பாமாலை ஒன்றும் பேசவில்லை. மௌனமாகவே படகினை செலுத்திக்கொண்டிருந்தான். திடீரென்று அவன் வாய் திறந்து பேசினான்.

"ஐயா.! வாய்க்காலை விட்டு, நாம் வேகவதி ஆற்றினுள் நுழையப் போகிறோம். இன்று அமாவாசை என்பதால் ஆற்றில் வேகமும், சீற்றமும் அதிகமாக இருக்கும். பத்திரம்!" - என்று எச்சரித்துவிட்டு, படகை ஆற்றினுள் திருப்பினான்.

கடல் போன்று பொங்கிக்கொண்டிருந்தது வேகவதியாறு. ஒரு கட்டத்தில், துடுப்பினால் படகை செலுத்த வேண்டிய தேவையே இருக்கவில்லை. ஆற்றின் வேகமே, படகை உந்தித் தள்ளிச் செலுத்திக் கொண்டிருந்தது.

ஏனோ பத்ராவுக்கு அடிமனதில் ஒருவித கலக்கம். பாமாலை அடிக்கடி குறிப்பிட்ட திக்கினை நோக்கித் திரும்பிப் பார்ப்பதாக அவளுக்குத் தோன்றியது. விஷ்வாங்கனின் பக்கமாக சாய்ந்தவள், தனது ஐயத்தை அவனிடமே கூறினாள்.

"எதற்காக இந்த பாமாலை அடிக்கடி திரும்பிப் பார்த்து எதையோ உன்னிப்பாக கவனிக்கிறான்?" - பத்ரா கேட்டாள்.

"இரவு நேரப் பயணம். வழி தவறாமல் இருக்க, இப்படித்தான், படகோட்டிகள் நோக்குவார்கள். நமது விரிஞ்சி ஆற்றிலும் படகோட்டிகள் இப்படிச் செய்வதைப் பார்த்திருக்கிறேன்!" - விஷ்வாங்கன் கூறினான்.

முக்கூடல் இன்னும் வரவில்லை. அத்தி வனத்தின் ஊடே பாய்ந்த ஆற்றின் வழியே வந்தவர்கள், காட்டுப் பகுதியைக் கடந்து ஒரு சமவெளி பகுதிக்கு வந்தனர். தொலைவில் கரை தெரிந்தது. அங்கே ஒரு குடில் அமைந்திருக்க, அதன் உள்ளே இருந்து ஒரு தளர்ந்த உருவம் வந்தது. உடன் ஒரு வாலிபன்.

"அதோ... பாருங்கள்! அங்கே போகிறார்கள்!" - அந்த வாலிபன் கூறினான்.

https://telegram.me/aedahamlibrary

“நான் செய்த தவறு! இனியும் இது தொடரக்கூடாது. ‘எடு வில்லை,’ ‘தொடு கணையை’!" - அந்த முதிய உருவம் கட்டளையிட, அந்த வாலிபன் தனது வில்லினில் நாணேற்றி முதலில் ஆகாயத்தை குறி வைத்தான், பிறகு தொலைவில் செல்லும் அந்தப் படகினை நோக்கி குறி வைத்தான். அந்த முதியவர், ஏதோ மந்திரத்தை முணுமுணுத்தபடி அவனை நோக்கி கையசைக்க, அந்த வாலிபன் அம்பினை எய்தான். விண்ணில் பறந்த அந்த அம்பு, அனுமன் கடலைக் கடப்பது போன்று, வேகவதி ஆற்றின் நீரைக் கடந்து அந்தப் படகினை நோக்கிச் சென்றது.

அந்த அம்பு விஷ்வாங்கனின் இதயத்தைத் துளைத்தது. அலறியபடி அவன் படகில் விழ, அவனது இடையில் இருந்த தாமரை சூத்திர சுவடிகள் கீழே சிதறின. பாமாலை அதனை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டான். உடனடியாக, பாமாலை ஒற்றர்களில் ஒருவன் என்பதைப் புரிந்து கொண்ட பத்ரா, அவனது கவனம் தன் மீது விழுவதற்குள் நீரினுள் பாய்ந்து மறைந்தாள்.

தாமரை சூத்ர சுவடிகளுடன் படகினைக் கரையை நோக்கிச் செலுத்தினான், பாமாலை. கரை ஏறியதும், விரைவாகச் சென்று அந்த வாலிபனையும், முதியவரையும் வணங்கி, ஓலையினை அந்த முதியவரிடம் கொடுத்தான்.

குறிப்பிட்ட சுவடியைத் தேடிக் கண்டுபிடித்த அந்த முதியவர், அதனை நடுங்கும் குரலால் உரக்க வாசித்தார்.

“தட்சிணத்தில் சாணக்கியன் பிறந்த ஊரான அத்தியூர் என்கிற காஞ்சிவனத்தில்தான் தேவ உடும்பரம் உள்ளது. அதனை மிகவும் ரகசியமாக வைத்திருக்கிறார்கள், வைதீகர்கள். அந்த மரம் இருக்கும் இடம் தெரிந்தவுடன் ஓலை அனுப்புகிறேன். படையுடன் வந்து கைப்பற்றவும். - மகிந்தா, சங்கமித்தா.

முதியவர் அந்த வாலிபனைக் கண்கள் பனிக்க நோக்கினார்.

“சிறு வயதில் சாதிக்க வேண்டும் என்கிற எனது எண்ணத்தை வஞ்சமாக மாற்றினார்கள், பரப்பசுவாமியும், புலிவேமுவும். துர்தராவும், தானநந்தாவும், பிபத்தனும், என்னுள் இருந்த மிருகத்தைத் தூண்டி விட்டார்கள். ஆனால் சந்திரகுப்தன் தனது உண்மையான பக்தியினால் என்னை பண்படுத்தினான். வாலிபம் மறைந்து முதுமை வந்ததும், நான் செய்த பெரிய தவறை உணர்கிறேன். அத்திமலை ரகசியத்தைக் காக்க

https://telegram.me/aedahamlibrary

வேண்டிய நான், அதனை பிரயோகப்படுத்தி, இப்போது அந்த ரகசியத்தை வெளிப்படுத்திவிட்டேன். இதற்காக எனது தந்தை என்னை மன்னிக்கவே மாட்டார். நான் செய்த தவறுக்கு பிராயச்சித்தமாக, நானே அந்த ரகசியத்தைக் காக்கும் பணிக்கு அங்குரார்ப்பணம் செய்து விட்டேன். இனி அது உன் பொறுப்பு! எப்போதும், எந்த சமயத்திலும், அத்திமலை ரகசியத்தைக் களவாடப்பட விடாதே!" என்றபடி அந்தச் சுவடிகளை அந்த வாலிபனிடம் கொடுத்தார்.

“இன்றுடன் எனது ஸ்தூல தேகத்துக்கு வரையறுக்கப்பட்ட காலம் முடிவடைகிறது. நான் சென்றுகொண்டே இருக்கிறேன். நான் சொன்னதை நினைவுப்படுத்திக்கொள். இந்த ரகசியத்தைக் காக்கும் பொருட்டுதான் நான் உன்னைத் தேடி வந்து சந்தித்தேன். உனது கொள்ளுப் பாட்டன் புலிவேமு காலத்தில் காஞ்சியை விட்டு வெளியேறியவன், உனது காலத்தில் திரும்பி வந்திருக்கிறேன். அத்திமலை ரகசியம் பத்திரம்!” என்ற அந்த முதியவர் பாமாலை பக்கம் திரும்பினார்.

"நன்று செய்து முடித்தாய்!” என்று அவனது தோளினில் தட்டிக்கொடுத்து விட்டு, அந்த முதியவர் பொங்கிப் பாயும் வேகவதி ஆற்றை நோக்கி நடந்தார்.

தாய் சானேஷ்வரி குடத்துடன் வேகவதியில் நின்றபடி இவனை அழைப்பது போன்ற பிரமை. அத்திமலைத் தேவனை ஆராதித்த விஷ்ணுகுப்தன் என்கிற சிறுவன், கவுடில்யன் என்கிற மவுரியத்தை நிறுவிய வாலிபனாக மாறி, அர்த்தசாத்திரம் என்கிற நூலை இயற்றிய சாணக்கியனாகத் திகழ்ந்து, இப்போது முதிய உருவில், மீண்டும் தனது தாயின் மடி நோக்கிச் சென்று பாய்ந்து அமரும் சேயினைப் போன்று ஆற்றில் பாய்ந்தார். அவரை கட்டி அணைக்கும் சானேஷ்வரியாக, வேகவதி ஆறு அவரை தன்னுள் ஐக்கியப்படுத்திக்கொண்டது.

அதை கவனித்துக்கொண்டிருந்த அம்பு செலுத்திய அந்த வாலிபனும், பாமாலையும் கனத்த இதயத்துடன் திரும்பினர். அந்த வாலிபன், திருலோச்சன பல்லவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

*****

https://telegram.me/aedahamlibrary

# 49. பிட்சு மறைத்த சுவடி

தான் எப்படி முக்கூடல் வரை நீந்தினோம்? எப்படி மாவிலக்கை துறையை அடைந்தோம்? எப்போது கலிங்கத்திற்குச் செல்லும் கலத்தில் ஏறினோம்? எப்போது புத்த கயையை அடைந்தோம்? - என்கிற கேள்விகளுக்கெல்லாம் பதில் தெரியாமல், காய்ச்சலுடன் பயணித்திருந்தாள் பத்ரா. விஷ்வாங்கனைக் கொன்று அவனது சுவடியை பறித்தவர்களின் கவனம் தன் மீது பதிவதற்குள், சட்டென முடிவு செய்து, வேகவதியினுள் குதித்திருந்தாள். தன்னிடம் புத்த மந்தாவுக்காக இன்னொரு ஓலை தரப்பட்டுள்ளதை ஒற்றர்கள் அறியவில்லை என்பதைப் புரிந்துகொண்டு, விட்ட இடத்திலிருந்து தனது பணியைச் செய்வதற்காக நீந்திக்கொண்டிருந்தாள். தண்ணீரில் நீண்ட தூரம் நீந்தியதாலும், சூழ்நிலை ஏற்படுத்திய பதற்றத்தாலும், பத்ரா காய்ச்சலுடன் தான் கலிங்கம் செல்ல கலத்தில் ஏறினாள்.

தன் முன்பாக புத்த மந்தா நிற்பதைக் கண்டதும்தான், அவள் பட்ட சிரமங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவளை நிலைகுலையச் செய்தன.

"குருவே! இளவரசரும், இளவரசியும் தங்களுக்கு அனுப்பிய ஓலை!" - என்று தனது இடையினில் பதுக்கியிருந்த தாமரை சூத்திர சுவடிகளை அவரது கரத்தில் அளித்தவள், அப்படியே சுருண்டு விழுந்தாள்.

"பத்ராவை வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லுங்கள்!" - புத்த மந்தா கூற, சில சீடர்கள் வந்து அவளை சுமந்து சென்றனர். வழியிலேயே அவர்களுக்குத் தெரிந்து விட்டது. அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல இனி தேவையிருக்கவில்லை. அவளை பள்ளிப்படுத்தும் பகுதிக்குத்தான் அழைத்துச் செல்ல வேண்டும்.!

புத்த மந்தா ஆவலுடன் தாமரை சூத்திர சுவடிகளைப் பிரித்தார். நடுவே, அசோகனின் குழந்தைகள் அனுப்பிய ஓலை வைக்கப்பட்டிருந்தது. பரபரப்புடன் அதனை எடுத்து வாசித்தார், புத்த மந்தா.

"தட்சிணத்தில் சாணக்கியன் பிறந்த ஊரான அத்தியூர் என்கிற காஞ்சிவனத்தில் தான் தேவ உடும்பரம் உள்ளது. அதனை மிகவும் ரகசியமாக வைத்திருக்கிறார்கள், வைதீகர்கள்! அந்த மரம் இருக்கும் இடம் தெரிந்தவுடன் ஓலை அனுப்புகிறேன். படையுடன் வந்து

https://telegram.me/aedahamlibrary

கைப்பற்றவும்".

- மகிந்தா, சங்கமித்தா.

"பலே! நாம் எண்ணிய காரியம் இவ்வளவு எளிதாகவும், விரைவாகவும் கைகூடி விட்டதே. சாணக்கியரே! உமக்குத்தான் நன்றி!" தன்னுள் கூறிக்கொண்டார், புத்த மந்தா.

"போதி மரத்தைத்தான் சூழ்ச்சிக்காரி திஸ்ஸரக்காவினால் கோட்டை விட்டு விட்டோம். அசோகனின் மனைவி செய்த கொடுமைக்கு, அவரது செல்வங்களே பிராயச்சித்தம் செய்து விட்டனர்!" அந்தச் சுவடியை தனது அங்கிக்குள் பத்திரப்படுத்தியவர், தாமரை சூத்திர சுவடிகளை தனது மேஜையின் மீது வைத்தார்.

"குருவே! பத்ரா இறந்து விட்டாள்!" - சீடன் ஒருவன் ஓடிவந்து கூற, சற்றே திகைத்தார்.

"அவளது தேகத்தை இரவே பள்ளிப்படுத்தி விடுங்கள். நாளை காலை அவள் ஆத்மாவுக்கு பூசனைகளைச் செய்து ஷாந்தி படுத்துவோம்!" - சீடனிடம் கூற, அனைத்து சீடர்களும், பத்ராவை பள்ளிப்படுத்துவதற்காக எடுத்துச் சென்றனர்.

புத்த கயை சங்கத்தின் ஆஸ்ரமம் நிரஞ்சன நதிக்கரையினில்தான் அமைந்திருந்தது. நிரஞ்சன நதியைக் கடந்து சென்றால் சமாதி அடைந்த துறவிகளை பள்ளிப்படுத்த ஷாந்தி வனம் என்கிற பகுதியை அமைத்திருந்தனர். பத்ராவை பள்ளிப்படுத்த வேண்டி, பத்ராவின் உடலை படகில் வைத்து சீடர்கள் ஷாந்தி வனத்திற்குச் சென்றனர்.

ஆஸ்ரமத்தில் புத்த மந்தா மட்டும் தனியாக இருந்தார்.

தனது அங்கியினுள் பத்ரா கொண்டு வந்த ஓலை படபடக்க, மன்னர் அசோகனிடம் அந்த ஓலையைக் காட்டி, தொடர்ந்து இந்த விவகாரத்தில் எத்தகைய முடிவுகளை எடுப்பது என்று மறுநாள் காலை விவாதிக்க வேண்டும் என்கிற தீர்மானத்துடன், தனது தியான குடிலில் இருந்து வெளியேறி, தனது அந்தரங்க குடிலினை நோக்கி நடந்தார்.

"பரவாயில்லை! போதி மரம் பட்டு விட்டதே.! புத்த மார்க்கத்திற்கு தான் பதில் கூற வேண்டிய நிலை உருவாகிவிட்டதே - என்று மனதினுள்

https://telegram.me/aedahamlibrary

புலம்பிக் கொண்டிருந்த அவருக்கு, மீண்டும் தேவ உடும்பரத்தைப் பெறுவதற்கு ஒரு வழி புலப்பட்டு விட்டதே என்கிற நிம்மதி மனதில் பரவியது.

துறவிகளின் சதஸ் ஒன்றில், மந்திரவாதி கோனகாமா ஒரு பெண்ணினால் போதி மரம் நாசமாக்கப்படும் என்றபோது, இவர் எழுந்து அதனை மறுத்திருந்தார்.

“தெய்வீகத் தன்மை வாய்ந்த போதி மரத்திற்கு ஒரு பெண்ணால் ஆபத்து நேரும் என்பது, மந்திரவாதியின் வழக்கமான கட்டுக்கதை. மரமும் தழைத்திருக்கும். நமது மார்க்கமும் நிலைத்திருக்கும்!” என்று அவர் அப்போது கூறியிருந்தார்.

ஆனால் திஸ்ஸரக்காவின் சதி அவனது அந்தக் கூற்றை மெய்ப்பித்திருந்தது. கோனகாமாவின் கூற்று உண்மையானதே என்று இவரது சீடர்களே இவர் காதுபடப் பேசியபோது, "போதி மரத்தினைக் காப்பாற்ற நீங்கள் தவறிவிட்டீர்கள்” என்று மண்டுக முட்களால் இவரையே அவர்கள் துளைப்பது போன்று உணர்ந்தார், புத்த மந்தா.

“நாளைய சரித்திரம், மன்னர் அசோகனையும், இவரையும், போதி மரத்தைப் பாதுகாக்கத் தவறி விட்டனர் என்று பழிக்கும். தங்கள் காலம் முடிவதற்குள்ளாக, புதிய தேவ உடும்பர மரத்தை போதி மரமாக நிறுத்த வேண்டும்.!” என்கிற உத்வேகத்தில்தான் ஒரு குழாமை தெற்கே அனுப்பியிருந்தார். உடனடியாக, மகிந்தாவும், சங்கமித்தாவும் அனுகூலமான பதிலை அனுப்ப, சற்றே உற்சாகத்துடன் தனது குடிலினை நோக்கி நடந்து கொண்டிருந்தார். ஆஸ்ரமத்தில் யாருமே இல்லை. சீடர்கள் அனைவருமே, பத்ராவினை வழியனுப்பச் சென்று இருந்தனர் போலும். எஞ்சிய பணியாளர்களும், உறங்கச்சென்றிருந்தனர்.

அப்போது ---

ஆஸ்ரமத்தின் வாயிலில், முக்காடிட்ட சிலர் உள்ளே நுழைவதைக் கண்டார், புத்த மந்தா. வாயிலில் தீப்பந்தங்கள் எதுவும் வைக்கப்படாததால், இருளில் தெளிவில்லாமல் சில முக்காடிட்ட உருவங்களை மட்டுமே அவரால் காண முடிந்தது. சீடர்கள் யாரும் இல்லையே என்பதை உணர்ந்ததும், அவரது மனதை அச்சம் கவ்வியது.

https://telegram.me/aedahamlibrary

“வருவது யார்?” ---

சட்டென்று ஒருவித எச்சரிக்கை உணர்வு அவரை பற்றியது. ஒருவேளை, யாத்ரீகர்கள் யாராவது போதி மரத்தை தரிசிக்க நினைக்கிறார்களோ? எப்படி இருந்தாலும், உனது தேகத்தில் இருக்கும் ரகசிய சுவடியை பத்திரப்படுத்து. 'உனது தேகத்தில் வைத்திருந்தால் ஆபத்து!

ஒரு சன்னமான குரலில் அவரது மனம் எச்சரிக்க, சட்டென்று தனது அந்தரங்க குடிலினை நோக்கிச் செல்லாமல், போதி மரத்தை நோக்கிச் சென்றார்.

தனது அங்கியினுள் மறைக்கப்பட்டிருந்த அந்த நீளமான சுவடியை கையில் எடுத்தார். திஸ்ஸரக்காவினால் கொலை செய்யப்பட்டிருந்த போதி மரத்தின் ஒரு பகுதியை, அரச மரம் ஒன்றில் விதைக்க, அந்த தேவ உடும்பர மரம், அரச மரத்தினை பிளந்து அதனுள் ஊடுருவி இருந்தது. அந்த அரச மரத்திற்கும், தேவ உடும்பர மரத்திற்கும் இடையே ஏற்பட்டிருந்த பிளவினுள், பத்ரா கொண்டு வந்திருந்த ஓலையினை சொருகினார்.

"தேவ உடும்பர மரமே! உனது இணையான மற்றொரு தேவ உடும்பர மரம் காஞ்சி வனத்தில் உள்ளதாம். அந்த ரகசியத்தை தாங்கிய இந்தச் சுவடியை உன்னுள் பத்திரப்படுத்துகிறேன். நாளை காலை வந்து எடுத்துக் கொள்கிறேன். அதுவரை அதை பத்திரமாகப் பார்த்துக் கொள்!” என்று மரத்துடன் பேசியவர், மீண்டும் ஆஸ்ரம வாயிலுக்குச் செல்லும் பாதையை நோக்கி நடந்தார்.

அந்த நீண்ட பாதையில் வாயிலின் அருகே நின்ற அந்த முக்காடிட்ட உருவங்கள் மந்தாவைக் கண்டதும் அவரை நோக்கி நகரத் துவங்கின.

புத்த மந்தாவும் அருகில் இருந்த சுளுந்து ஒன்றை எடுத்துக்கொண்டு, அந்த உருவங்களை நோக்கி நகர்ந்தார். இப்போது சுளுந்தின் ஒளியில், தன்னை நோக்கி வரும் அந்த உருவங்களை, அவரால் சற்று தெளிவாகக் காண முடிந்தது.

சுமார் ஐந்து பேர்கள் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்களில் நடுநாயகமாக, கருப்பு சால்வையினால் முக்காடிட்டு வந்து கொண்டிருந்த உருவம், ஒரு பெண் என்பதை, அதன் நளினமான நடையினால் அவரால் உணர முடிந்தது.

https://telegram.me/aedahamlibrary

"போதி மரத்திற்கு ஒரு பெண்ணினால் நாசம் நேரும்!" -- கோனகாமாவின் அச்சுறுத்தும் குரல், புத்த மந்தாவின் செவியில் ஒலித்தது.

சத்வ போதிக்கு ஏற்கெனவே நாசம் விளைவிக்கப்பட்டது. இனி எந்தப் பெண்ணால்தான் என்ன செய்ய முடியும்? - என்று எண்ணியபடி அந்த உருவங்களை நோக்கி நடந்தார்.

உறுதியான நடையுடன் புத்த மந்தா தங்களை நோக்கி நடந்து வருவதைக் கண்டதும், அந்த உருவங்களும் தங்களது நடையில் சற்றே வேகத்தைக் கூட்டின.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடந்து வந்த உருவங்களும், புத்த மந்தாவும் நின்றனர். அந்த இடத்தில் தீப்பந்தம் எதுவும் ஒளிர்ந்துகொண்டிருக்கவில்லை.

அவர் முன் நின்ற அந்த ஐந்து உருவங்களும், முழந்தாளிட்டு மண்டியிட, புத்த மந்தாவின் மனதினுள் படர்ந்திருந்த அச்சம் விலகியது. புத்தபிரானின் பக்தர்கள் தான் தன்னை தரிசிக்க வந்திருக்கின்றனர்.

புத்தம் சரணம் கச்சாமி

தர்மம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி

என்று, தான் உதிர்க்கும் வழக்கமான புத்த கோஷத்தை அவர் உச்சரிக்க, வந்திருந்த ஐந்து பேரும், ஒரே குரலில் சீராக அதை திருப்பிச் சொன்னார்கள்.

கணீரென்ற அந்தப் பெண்ணின் இளமையான குரல், புத்த மந்தாவுக்கு ஏதோ உணர்வை தோற்றுவிக்க, தன்னிடம் இருந்த சுளுந்தினை இறக்கி, மண்டியிட்ட பெண்ணின் முகத்தின் அருகே நீட்டினார்.

அவர் தன்னைக் காணுவதற்கு வசதியாக அந்தப் பெண்ணும், தனது சிரசின் மீது கருமை வண்ணச் சால்வையினால் போர்த்தியிருந்த முக்காடினை விலக்கினாள்.

https://telegram.me/aedahamlibrary

திஸ்ஸரக்கா...!

எந்த திஸ்ஸரக்காவை அதுவரை எண்ணிக் கொண்டிருந்தாரோ, அவளே இகழ்ச்சியான புன்னகையுடன் தனது முன்பாக மண்டியிட்டு அமர்ந்திருப்பதைக் கண்டு திகைத்தார்.

"வந்தனங்கள், சங்கத் தலைமை குருவே.! உங்களிடம் ஒரு ஆலோசனை கேட்கவே வந்தேன்.?" - திஸ்ஸரக்கா கூறினாள்.

“என்ன ஆலோசனை?” - புத்த மந்தாவின் குரலில் சந்தேகமும், பயமும் ஒருங்கே ஒலித்தன.

"ஒரு கலிங்க பருந்து ஒரு மவுரிய முயலினை பாய்ந்து உண்பதற்கு நினைக்கிறது. அப்போது, ஒரு காலசர்ப்பம் அந்த முயலினை தான் கவ்விச் செல்ல நினைக்கிறது. அப்போது அந்த பருந்து என்ன செய்ய வேண்டும்?” - திஸ்ஸரக்கா கேட்டாள்.

“இரவு வேளை அசுர வேளை என்பார்கள். அசுர வேளையில் புத்தி அசுரத்தனமாக யோசிக்கக் கூடாது என்பதால்தான், இரவு வேளைகளில் சிந்தனைக்கு ஓய்வு கொடுத்து, நம்மை மறந்து உறங்கி விடுகிறோம். எனவே இந்த மாதிரியான அசுர எண்ணங்களுக்கு ஓய்வு கொடுத்து விட்டு, நிம்மதியாகச் சென்று உறங்கு, திஸ்ஸரக்கா! காலை கதிரவன் உதித்தவுடன், இத்தகைய வன்கொடுமை சிந்தனைகள் உனக்குத் தோன்றாது!” - புத்த மந்தா கூறினார்.

"அசுர வேளையில் தாங்கள் விழித்துக்கொண்டு எதைப் பற்றி யோசிக்கிறீர்கள்? பூமியில்தான் அசுர வேளை உண்டாகும். நமது தர்மலோகத்தில் எப்போதும் மங்கலமான ஒளிதானே நிறைந்திருக்கும்?” - திஸ்ஸரக்கா கேட்டாள்.

“ஆம்! அதில் என்ன சந்தேகம்?” - புத்த மந்தா கூறினார்.

“அப்போது நீங்கள் ஏன் இங்கே இருக்கிறீர்கள்? அந்த தர்ம லோகத்திற்குச் செல்லுங்கள்!” - என்ற திஸ்ஸரக்கா விருட்டென்று எழுந்தாள்.

"ம்ம்... அவரே கூறிவிட்டார்.! இனியும் ஏன் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? வெட்டிச் சாயுங்கள்!" - திஸ்ஸரக்கா கூற, மற்ற நால்வரும்

https://telegram.me/aedahamlibrary

தங்கள் கருமை போர்வைகளை நழுவ விட்டு, கையில் கூர்மையான வாட்களோடு நின்றனர்.

"கலிங்கத்தை உருக்குலைத்து, எங்கள் மக்களை சின்னாபின்னம் செய்து, சுடுகாடாக மாற்றி, எங்கள் பெண்களின் தேகங்களைத் தின்று கொழுத்து, எங்கள் நாட்டையே தரைமட்டமாக்கிய அசோகனுக்கு ஒரு நாடு இல்லை. அவனுக்கு ஆசான் தான் இருக்கலாமா? கலிங்கத்தில் பரணி பாடிய மவுரியனின் ஆசானே! அசோகனை நீர் நல்வழிப்படுத்தி துறவறம் மேற்கொள்ள முயற்சி செய்கிறீராமே. அவனை நல்வழிப்படுத்தினால், எனது வஞ்சத்தை நான் எப்படி தீர்ப்பது? எனவே, நீர் இருக்கும்வரை அவனிடம் என்னால் அணுக முடியாது. முதலில் நீர் புறப்பட்டுச் செல்லுங்கள்!”

திஸ்ஸரக்கா வெறியுடன் கூற,

மற்ற நால்வரும் வாட்களுடன் அவர் மீது பாய்ந்தனர்.

ஆஸ்ரம நடைபாதை, புத்த மந்தாவின் குருதியால் கழுவி விடப்பட்டது.

புத்த மந்தாவின் செவியினில் கடைசியாக ஒலித்தது கனக முனி என்கிற அவரது ஆசானின் வாக்குத்தான். - புத்த சங்கத்தின் ஒவ்வொரு தலைமை குருவும் ஒரு போதி மரம்தான்! அதனால்தான், திஸ்ஸரக்கா தலைமை குருவான தன்னையும் வெட்டிச் சாய்த்து விட்டாளோ?

திஸ்ஸரக்கா வந்த வழியே நடந்தவள், தன்னை பின்தொடர்ந்த அந்த நால்வரையும் பார்த்தாள்

“நீங்கள் மீண்டும் கலிங்கம் சென்று விடுங்கள். இங்கே இருக்க வேண்டாம். நான் இனி அரண்மனைக்குத் திரும்பப் போவதில்லை. எனக்கென்று ஒரு ராஜ்யத்தை அமைத்துக் கொள்ளப் போகிறேன். என்னைத் தேடாதீர்கள்!” - என்று கால் போன போக்கில் நடந்தாள் திஸ்ஸரக்கா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 50. பிரியா விடை

புத்த மந்தா திஸ்ஸரக்காவினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்! தகவல் அறிந்ததும் பதறிய மன்னன் அசோகன், புத்த கயை உப்பரிகை படிகளில் இறங்கி வேகமாகச் செல்ல, அவனது பாதரட்சையின் கட்டை விரல் குமிழ் உடைந்து விழ, அதனால் கால் இடற, தலைக்குப்புற படிகளில் உருண்டான் அசோகன்.

முதுகெலும்பு நொறுங்க, அவசரமாக மஞ்சத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

“மகனே! மவுரியத்தைக் காப்பாற்று!” - மகன் தசரதனின் கரங்களில் தனது கரத்தை வைத்தான்.

"அவன் நாட்டை காக்கட்டும். நீர் அவனைக் காக்க வேண்டும்!” - தலைமை அமைச்சரிடம் வேண்டினான். கலிங்கத்து போரில் தனக்கு வலக்கரமாகச் செயல்பட்ட தளபதி அருணமித்ராவை நோக்கினான். "எல்லைகள் பத்திரம். அந்த திஸ்ஸரக்காவை கண்ட இடத்தில் வெட்டிப் போடு!” - குழறிய குரலில் கூறினான் அசோகன்.

“உத்தரவு மன்னா!” --- அருணமித்ரா கூறினான். அவனுக்குத் தெரியும்! திஸ்ஸரக்கா மவுரியத்தின் எல்லையைக் கடந்து விரிஞ்சி காட்டின் வழியாக தெற்கே தப்பிச் சென்று விட்டாள். அவளைத் தேடி அவனது வீரர்கள் அலுத்து விட்டனர். அதனை அசோகனுக்கு அவன் தெரிவிக்காமல் மறைத்தான்.

திங்கள்கள் உருண்டோடின. அசோகனின் உடல் நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. ஆனால் அவனது வலிகளுக்கு, மனக்குமுறல்களுக்கு அருமருந்தாய் திகழ்ந்தாள் ஒரு பெண். சவ்ஷீலா என்பது அவள் பெயர்.

“பத்மாவதி! இந்தப் பெண் யார்? என்னை தாய் போன்று ரட்சிக்கின்றாளே!” - அசோகன் கேட்டான்.

பத்மாவதியின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது.

“இந்தப் பெண் சவ்ஷீலா யார் என்பதை இவ்வளவு நாட்கள் உங்களிடம்

https://telegram.me/aedahamlibrary

கூறாமல் மறைத்தேன். உங்களிடம் உண்மையைக் கூறக்கூடாது என்று அவளது தாய் சத்தியம் பெற்றிருந்தாள். இவள் யார் தெரியுமா? உங்கள் தமையன் சுசிமாவின் மகள். குழந்தையுடன் தப்பிச் சென்ற சித்ரசேனா நம்மிடம் நலமாக வந்து சேர்ந்தாள். எனது அந்தப்புரத்தில்தான் தங்களுக்குத் தெரியாமல் அஞ்ஞாத வாசம் செய்கிறாள்!" - பத்மாவதி சொன்னதும் துடித்துப் போனான், அசோகன்.

"நான் செய்த மன்னிக்கமுடியாத குற்றம். நல்ல சமயத்தில்தான் உண்மையைக் கூறினாய். நான் சித்ரசேனாவிடம் மன்னிப்புக் கோர வேண்டும். குடும்பமாக அவர்கள் குதூகலித்துக் கொண்டிருந்த வேளையிலே, இந்த பிஞ்சு குழந்தையின் கண் முன்பாக அதன் தந்தையை வெட்டிக்கொன்றேன்!" --- கோ என்று கதறியபடி தனது கைகளால் சவ்ஷீலாவின் தலையை வருடிக்கொடுத்தான்

தனது முன்பாக வந்து நின்ற சித்ரசேனாவை நோக்கி கைகளைக் கூப்பினான், அசோகன்.

"அண்ணியாரே! அண்ணன் சுசிமனைக் கொன்று, ஆட்சியை அபகரித்தேன். உங்களது குடும்பத்தை அபகரித்தேன். சவ்ஷீலாவின் சந்தோஷத்தை அபகரித்தேன். இளரத்தப் பாய்ச்சலில் அக்கிரமங்களைச் செய்தேன். இப்போது எனது தவறுகளை எண்ணி வருந்துகிறேன். நான் செய்தது மன்னிக்கமுடியாத குற்றம். உங்களால் என்னை மன்னிக்க முடியாது. இருப்பினும், இப்போது நான் எடுக்கும் முடிவிற்கு நீங்கள் இசைவு தெரிவித்தால், அதனையே எனது மன்னிப்பாக நான் கருதுவேன்!” --- என்றான்.

அங்கே நின்றிருந்த அருண மித்ராவை நோக்கினான். "உன் மகன் அக்னிமித்ராவை அழைத்து வா!” என்றதும், அவன் தனது கட்டழகுமகன் அக்னி மித்ராவை அழைத்து வந்து அசோகனின் முன்பாக நிறுத்தினான்.

“அருண மித்ரா! நீ இந்த நாட்டின் தளபதி. அடுத்த தளபதியாக உன் மகன் தான் திகழ்வான். அவனது மனைவியாக எனது அண்ணன் மகள் சவ்ஷீலா இருப்பாள்," என்றவன், அக்னிமித்ராவின் கரத்தில் சவ்ஷீலாவின் கரத்தினை வைத்தான்.

"சமுத்திரத்தை போன்று ஒருவன் தோன்றுவான். அவன் பாரதத்தை செழிக்க வைப்பான்! அவன் உன் குலத்தில்தான் தோன்றுவான்! ---

https://telegram.me/aedahamlibrary

சாணக்கியனின் ஆருடம் சித்ரசேனாவின் செவிகளில் ஒலிக்க, அவள் நம்பிக்கையுடன் அருணமித்ராவை நோக்கினாள்.

*****

https://telegram.me/aedahamlibrary

# 51. மௌரியம் மறையும்

கி.மு. 232 ---

தனது எல்லா செல்வங்களையும் தானம் கொடுத்துவிட்டு, துறவறம் மேற்கொண்டு தக்ஷ சீலம் சென்று அங்கேயே மறைந்தான், அசோகன். அவனது அமைச்சர்கள் குணாளனின் மகன் சம்ப்ரதியை மன்னன் ஆக அறிவிக்க முயல, தசரதனின் ஆதரவாளர்களுக்கும், சம்ப்ரதியின் ஆதரவாளர்களுக்கும் கடும் யுத்தம் நடந்து, தசரதன் இரத்தக்களரியில் தான் மவுரிய மன்னனாகப் பதவி ஏற்றான். நாற்பது வருடங்கள் ஆட்சி செய்த அசோகனுக்குப் பிறகு மவுரியத்திற்கு வலுவான மன்னன் கிடைக்கவில்லை. அவனது மகன், பெயரன், கொள்ளுப்பெயரன், எள்ளுப் பெயரன் என்று அனைவருமே ஒற்றைப்படை எண்களிலேயே ஆட்சி புரிந்தனர். அசோகனின் மீது வன்மம் கொண்டிருந்த காலம், அந்த கோபத்தை அவனது வாரிசுகளின் மீது காட்டியது போலும். அசோகனின் மகன் தசரதனுக்குப் பிறகு, குணாளனின் மகன் சம்ப்ரதி ஆட்சிக்கு வந்தான். அதன் பின் ஷாலிசுகன், தேவவர்மன் மற்றும் சத்தானவன் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர்.

சம்ப்ரதி ஆட்சிக்கு வந்ததும், பத்மாவதி இறந்து போனாள். அதுவரை பத்மாவதியின் அந்தப்புரத்தில் தங்கியிருந்த சித்ரசேனா, தனது மகள் சவ்ஷீலாவின் மகள் விதபாலாவுக்கு மகன் பிறந்திருக்கும் செய்தி வர, தனது பேத்தியை காண்பதற்காக சவ்ஷீலாவின் மாளிகைக்குச் சென்றவள் அங்கேயே தங்கிவிட்டாள்.

புஷ்பபுர அரண்மனையை விட்டு கிளம்பும்போது ஒரு முறை நின்று அதனை வெறித்துப் பார்த்தாள். தனது கணவன் தலையை அசோகன் வெட்டியெறிந்த அந்த நந்தவனத்தை வெறித்தபடி தனக்குள் பேசினாள்.

"நான் மீண்டும் உன்னிடம் வருவேனா எனக்குத் தெரியாது. ஆனால் எனது உதிரத்தில் தோன்றியவன் சமுத்திரமாகப் பொங்கி உன்னைக் கைப்பற்றி மவுரியத்தை அழித்து, எனது வளர்ப்பு தந்தை சாணக்கியரின் ஆசியுடன், குப்த மன்னனாகக் கோலோச்சுவான். அதை நான் காணாவிட்டாலும், அரண்மனையே, நீ காண்பாய்!" - தனக்குள் கூறியபடி அரண்மனையை விட்டு அகன்றாள், சுசிமாவின் மனைவி சித்ரசேனா.

https://telegram.me/aedahamlibrary

*****

https://telegram.me/aedahamlibrary

# 52. மன்னனைக் கொன்ற தளபதி

தனது மாமியாரை அக்னிமித்ரா அன்புடன் வரவேற்றான். மன்னன் சம்ப்ரதியின் தளபதி அக்னிமித்ரா. நாற்பது வயதில் அவனே பாட்டனாகி விட்டிருந்தான் அவனது ஒரே மகள் விதபாலா, தனது அத்தை மகன் தானமித்ராவை மணந்திருந்தாள். அவள் ஆண்குழந்தையைப் பெற்றதை எண்ணி குடும்பமே குதூகலித்தது.

"அக்னிமித்ரா! உனது பெயரன் புஷ்ய நட்சத்திரத்தில் பிறந்திருக்கிறான். இவன் நிச்சயம் மன்னனாகத் திகழ்வான்! அவனுக்கு புஷ்ய மித்ரா என்று பெயர் வை!" --- தனது கொள்ளுப் பேரனை உச்சி முகர்ந்தபடி கூறினாள் சித்ரசேனா! சித்ரசேனா வேண்டிக் கொண்டபடியே அந்த குழந்தைக்கு புஷ்யமித்ரா என்று பெயர் வைத்தனர்.

புஷ்யமித்ரா மாபெரும் வீரனாக வளர்ந்தான். மவுரிய மன்னன், சததன்வன், புஷ்யமித்ராவைத் தனது தளபதியாக அறிவித்தான். சததன்வன் திடீரென்று இறக்க, அவன் மகன் பிருகதத்தன் மன்னனாகப் பதவி ஏற்றான். அப்போதுதான் சித்ரசேனா மரணப் படுக்கையில் விழுந்தாள்…

சித்ரசேனா தனது கொள்ளுப்பெயரனை அருகே அழைத்தாள்.

"நீ தளபதியாகிவிட்டது குறித்து சந்தோஷம். தீர்க்கப்படாத ஒரு கணக்கு வெகு காலமாக உள்ளது. மகுடாபிஷேகத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக எனது கணவர் சுசிமா, அசோகனால் கொல்லப்பட்டார். அப்போது நின்று போன மகுடாபிஷேகம் இப்போது எனது கொள்ளுப்பெயரனுக்கு நடக்க வேண்டும். இன்றோ நாளையோ நான் இறந்து விடுவேன். அதற்குள் உனக்கு மகுடாபிஷேகம் நடந்தது, என்கிற சேதி என் செவியில் விழ வேண்டும்!" என்று சொன்னாள்.

இரண்டு தினங்களில், புஷ்யமித்ரா, மன்னன் பிருகதத்தனைக் கொன்று, தன்னை மன்னனாக அறிவித்துக்கொண்டான். சாணக்கியன் நிறுவிய சந்திரகுப்தனை முதல் மன்னனாகக் கொண்ட மவுரியம் பிருகதத்தனோடு நிறைவு பெற்றது.

புஷ்யமித்ரா மகுடாபிஷேகம் செய்து கொண்டான் என்பதனைச் செவியுற்று நிம்மதியுடன் கண் மூடினாள் சித்ரசேனா. "சமுத்திரத்தைப்

https://telegram.me/aedahamlibrary

போன்ற ஒருவன் வந்து ஆசான் குப்தனின் பெயரில் ஆட்சி செய்வான்!"
- முணுமுணுத்தபடியே தனது கண்களை இறுதியாக மூடியிருந்தாள் சித்ரசேனா.

*****

https://telegram.me/aedahamlibrary

# 53. சமுத்திரம் இனி பொங்கும்

கி.மு. 180 --- இல் சுங்க சாம்ராஜ்யத்தை நிறுவினான், புஷ்யமித்ரா.. வைதீக தர்மத்தை ஆதரித்த புஷ்யமித்ரா மவுரியம் மீண்டும் தலை தூக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக மவுரியர்களை ஆதரித்த, புத்த தர்மத்தை புறக்கணிக்கத் தொடங்கினான். புத்த துறவிகளைச் சிறையில் அடைத்தான்.

புத்த தர்மத்தின் மீது கோபம் உச்சகட்டத்தை அடைய, படைகளுடன் புத்த கயைக்குச் சென்று அரசமரத்தில் துளிர்த்திருந்த எஞ்சியுள்ள போதி மரத்தை வெட்டிச் சாய்த்து, தீயில் இட்டான். விதுரனால் விதைக்கப்பட்ட தேவ உடும்பரம் முற்றிலுமாக எரிந்து போனது. மரத்தின் ஒரே ஒரு பகுதி மட்டும் பிளந்து விழுந்து கருகாமல் கிடந்தது.

புஷ்யமித்ரா புத்த கயையினைக் கைப்பற்றி, எஞ்சியிருந்த போதி மரத்தை சின்னாபின்னம் செய்து இடித்து, புத்த தர்மத்தையே அழித்து விட்டது போன்ற உணர்வுடன், அங்கே உலாவிக்கொண்டிருந்தான். அவனது பாட்டி சவ்ஷீலாவை அழைத்து வந்து, போதி மரத்தைக் காட்டினான்.

"பாட்டி! மவுரியத்திற்குக் காரணமான போதி மரம் அழிந்தது. இனி அது துளிர்க்காது!” பெருமிதத்துடன் கூறினான், புஷ்யமித்ரா.

புஷ்யமித்ராவின் மனைவி தாராதேவி கையில் குழந்தை அக்னிமித்ராவுடன் அங்கே வந்தாள்.

சவ்ஷீலாவிடம் மகனை ஒப்படைத்தாள். “நானும் என் கணவரும், இங்கே உள்ள பல்குனி நதியில் நீராடிவிட்டு வருகிறோம். உங்கள் கொள்ளுப்பெயரனை சற்று பார்த்துக் கொள்ளுங்கள்!” என்றபடி அக்னிமித்ராவை சவ்ஷீலாவின் வசம் ஒப்புவித்தாள்.

புஷ்யமித்ராவும், தாராதேவியும் ஆற்றை நோக்கி நடக்க, அக்னிமித்ராவை இடையினில் வைத்துக் கொண்டு உலாவிக் கொண்டிருந்தாள், சவ்ஷீலா.

இம்மாதிரி, தன்னை தனது தாய் இடையினில் வைத்துக்கொண்டு உணவு ஊட்டிக்கொண்டிருந்தபோது தானே தனது தந்தை சுசிமா

https://telegram.me/aedahamlibrary

வெட்டிச் சாய்க்கப்பட்டான்?

தொடர்ந்து குழந்தையை சுமந்திருந்ததால், கைகள் மரத்துப் போக, குழந்தையை நிலத்தில் விட்டு விட்டு, அங்கிருந்த உடைந்த மரத்துண்டின் மீது அமர்ந்தாள். பழைய நினைவுகளில் மூழ்கியவள், சாணக்கியரைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தாள். பிறகு சிற்றப்பன்கள் அசோகன், விதசோகனைப் பற்றி எண்ண ஆரம்பித்தாள். வரிசையாக, பத்மாவதி, விதிஷாதேவி, கார்வாகி, அசிந்தமித்ரா, திஸ்ஸரக்கா, சங்கமித்தா, குணாளன் என்று அனைவரையும் நினைத்தபடி அமர்ந்திருந்தாள்.

திடீரென்று ---

தன்னிலையை உணர்ந்தவள், சுற்றுமுற்றும் நோக்கினாள். குழந்தை அக்னிமித்ராவை காணவில்லை. பரபரப்புடன் எழுந்தாள். ஐயோ! குழந்தையைக் காணோமே. பதற்றத்துடன் சுற்றி தேடினாள். குழந்தை எங்குமே காணப்படவில்லை.

ஐயோ. ஆற்றங்கரையில் இருந்து புஷ்யமித்ராவும், தாராவும் வந்தால் அவர்களுக்கு என்ன பதில் கூறுவது. பதற்றத்துடன் நின்றவள், தற்செயலாக தான் அமர்ந்திருந்த மரத்தின் துண்டு அசைந்தாடுவதை கவனித்தாள். ஓடிச்சென்று அதன் பக்கவாட்டில் பார்த்தாள். ஒரு குழந்தை ஊர்ந்து செல்லும்படியாக அந்த மரத்தின் பாகத்தில் ஒரு துளை. அதன் உள்ளே அக்னிமித்ரா தவழ்ந்து கொண்டிருந்தான்.

சவ்ஷீலாவின் வயிற்றில் பால் வார்க்கப்பட்ட உணர்ச்சி.

“அக்னி மித்ரா! வெளியே வா. உள்ளே விஷ ஜந்துக்கள் ஏதாவது இருக்கப் போகிறது!” - கொள்ளுப் பெயரனை கடிந்தபடி, சவ்ஷீலா மர பாகத்தின் மறுபுறம் சென்று அவனை அழைக்க, அக்னிமித்ரா தவழ்ந்தபடி வெளியே வந்தான்.

"செல்லமே.! அங்கே எல்லாம் போகக்கூடாது!” என்ற பாட்டியிடம் ஒரு ஓலையை நீட்டினான், பெயரன்.

திகைப்புடன் ஓலையை வாங்கியவள், அதனை வாசித்தாள்.

“தட்சிணத்தில் சாணக்கியன் பிறந்த ஊரான அத்தியூர் என்கிற

https://telegram.me/aedahamlibrary

காஞ்சிவனத்தில்தான் தேவ உடும்பரம் உள்ளது. அதனை மிகவும் ரகசியமாக வைத்திருக்கிறார்கள், வைதீகர்கள்! அந்த மரம் இருக்கும் இடம் தெரிந்தவுடன் ஓலை அனுப்புகிறேன். படையுடன் வந்து கைப்பற்றவும்.

- மகிந்தா, சங்கமித்தா.

உறைந்து போய் நின்றாள், சவ்ஷீலா.

இவளுடைய சகோதரன் மகிந்தாவும், சகோதரி சங்கமித்தாவும் புத்த மந்தாவுக்கு அனுப்பிய சேதி. புத்த மந்தாவினால் போதி மரத்தினில் பதுக்கப்பட்ட ஓலை. இவளது கொள்ளுப்பேரன் அக்னிமித்ராவின் கையினால் வெளிவந்து ரகசியம் இவளிடம் வந்துள்ளது.

புஷ்யமித்ராவும், தாராவும் வந்தவுடன், ஒப்படைத்து விட்டாள், ரகசிய ஓலையை அல்ல, அக்னிமித்ராவை! மகிந்தனும், சங்கமித்தாவும் அனுப்பிய அந்த ஓலையை யாரிடம் கொடுப்பது என்கிற குழப்பத்துடன், நீண்ட நேரம் யோசித்தவண்ணம் இருந்தாள்.

இப்போதைக்கு அது ரகசியமாகவே இருக்கட்டும் என்று தீர்மானித்த சவ்ஷீலா, அதனைத் தனது வீணையினுள் பதுக்கி வைத்தாள்.

காலங்கள் உருண்டோடின.

கி.பி.319 ---

புஷ்யமித்ரா, அக்னிமித்ரா ஆகியோர்களின் ஆட்சி தொடர்ந்தது. அக்னிமித்ரா ஆட்சி புரிகையில் சுஷாந்தா என்கிற இளவரசியை மணந்து, ஒரு பெண்ணை ஈன்றான். ரத்னஹாரா என்று அவளுக்கு பெயரிட்டான். ஸ்ரீகுப்தா என்கிற ஒரு பணக்கார இளைஞன் மகத தேசத்தில் நிலங்களை வளைத்துப் போட்டு, அரண்மனை ஒன்றை எழுப்பி, அரச குடும்பத்திற்கு அதை பரிசளித்தான்.

அவனது மகன் சந்திரகுப்தனை காதலித்து மணந்தாள் ரத்னஹாரா.

இரண்டாம் சந்திரகுப்தனாக பதவி ஏற்றான், சந்திரன்.

சந்திரகுப்தனுக்கும் - ரத்ன ஹாராவுக்கும் ஒரு ஆண்குழந்தை பிறந்தது.

https://telegram.me/aedahamlibrary

அதற்கு சமுத்திரகுப்தன் என்று பெயரிட்டனர் தம்பதிகள்.

சித்ரசேனாவின் கனவு உண்மையானது. சித்ரசேனா மகள் சவ்ஷீலாவிடம் சொல்ல, அவள் தனது மகள் விதபாலாவிடம் சொல்ல, விதபாலா, மருமகள் தாராதேவிக்குச் சொல்ல, தாராதேவி, சுஷாந்தாவுக்குச் சொல்ல, சுஷாந்தா ரத்னஹாராவுக்குச் சொல்ல, ரத்னஹாரா தனது காதல் கணவன் சந்திரகுப்தனிடம் சொல்லி, தனது குழந்தைக்கு சமுத்திரகுப்தன் என்று பெயரிடச் சொன்னாள். சாணக்கியன் உயிரோடு இல்லைதான். ஆனால் அவனது கூற்றுப்படிதான் எல்லாம் நடக்கிறது. அவனது கூற்றினை மெய்ப்பிப்பது போன்று, சமுத்திரமாகப் பொங்குவதற்கு ஒரு குப்தன் தயாராகி வருகிறான்.

அந்த சமுத்திரம் பொங்கி காஞ்சிக்கு வரப் போகிறது!

அத்திமலைத்தேவன் முதல் பாகம் முடிந்தது.

*****

https://telegram.me/aedahamlibrary

# முடிவுரை

உலகத்தில் இரண்டு தேவ உடும்பர விருட்சங்களை படைத்தான் இறைவன். வடக்கே நிரஞ்சன நதிக்கரையில் ஒன்றும் தெற்கே காஞ்சி வனத்திலுமாக இரண்டு தேவ உடும்பரங்கள். வடக்கே நின்ற உடும்பரத்தின் அடியில் கௌதம புத்தன் ஞானம் பெற்றதால் அது போதிமரமாகத் திகழ்ந்து, பின்னர் அரசியல் புயலில் சிக்கிச் சீரழிந்தது.

எனவே ---

வடபுலத்தின் கவனம் தெற்கேயுள்ள தேவ உடும்பர மரத்தினை நோக்கித் திரும்பியது. தெற்கே உள்ள தேவ உடும்பர மரத்தினில்தான் அத்தி மலைத்தேவனின் உருவச்சிலையை விஸ்வகர்மா உருவாக்கினான். அந்த உண்மையை அறிந்தால் பல சாம்ராஜ்யங்களால் அத்திமலைத்தேவனுக்கு சிக்கல்கள் உருவாகலாம்.

அதை அறிந்துதானோ என்னவோ ----

அத்திமலைத்தேவன் வழக்கமாக தான் உதிர்த்துக் கொண்டிருக்கும் புன்னகையை சற்றே குறைத்துக் கொண்டு யோசனையுடன் நின்று கொண்டிருந்தான்.

இரண்டாம் பாகம் விரைவில்

## நந்த - மௌரிய - குப்த சாம்ராஜ்யங்கள்

மஹாபத்ம நந்தா

தானநந்தா - பத்மாங்கி

பிபத்த நந்தா

துர்தரா-சந்திரகுப்தா (மௌரியம்)

பிந்துசாரன்-சுபத்ராங்கி

https://telegram.me/aedahamlibrary

சுசிமா-சித்ரசேனா

அசோகன்

விதசோகன்

(துறவி)

சவ்ஷீலா-அக்னிமித்ரா விதிஷாதேவி கார்வாகி

சுசிந்த பத்மாவதி திஸ்ஸ

விதபாலா-தானமித்ரா

மித்ரா

ரக்கா

மஹிந்தா திவ்ரா-ஜாலுகா

குணாளன்

புஷ்யமித்ரா-தாராதேவி சங்கமித்தா

தசரதன்

ஸ்ரீகுப்தா-ரத்னஹாரா

சமுத்ரகுப்தன்

https://telegram.me/aedahamlibrary

(முற்றும்)